திருவிளையாடல் வசனம்

ஆசிரியர்:

திரு புலவர் 'அரசு'

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

1976

அரசு (1900)

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௬௭௦

முதற் பதிப்பு: சனவரி 1951
மறுபதிப்புகள்: அக். 1960; பிப். 1972; ஆக. 1976

THIRUVILAIYADAL VASANAM

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (I/-2)

பதிப்புரை

தமிழ்நாடு பழைமையானது; சைவமும் தமிழ்நாட்டோடு ஒன்றித்துப் பழைமை பெற்றது; சிவபெருமானை வழிபடுவது தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு. சிவபெருமானர் எங்கும் நிறைந்தவராயினும் 'தென்னுடைய சிவன்' என்றே மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்தல் காண்க.

அத்தகைய பரம்பொருள், 'ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்' ஆயினும், வழிபடும் அடியவர் விரும்பியவாறு உருவும் பெயருந் தொழிலும் புரிந்து, அடியவரிடுக்கண் களைவாரென்பது பெரியோர்களின் கருத்தாகும். அவ்வாறே, மதுரையில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை இயற்றியருளி அடியவ ரிடுக்கண் களைந்தருளினர் சொக்கப்பெருமானர். அவற்றைத் தமிழிற் பல புலவர் பெருமக்கள், மொழிபெயர்த்துப் பாடியுள்ளனர். அவற்றுள் மிகச் சிறந்ததும், இனிய விழுமிய நடையினையுடையதும், அன்புச் சுவை கனிந்துள்ளதும் பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடலேயாகும்.

ஏறக்குறைய முந்நூறுண்டுகட்கு முன்னர், சோழநாட்டில் திருமறைக்காட்டில், அபிடேகத்தர் எனப்பெறும் சைவமரபில் தோன்றிய பெரியார் பரஞ்சோதி முனிவர். தந்தையார் மீனுட்சி சுந்தர தேசிகர் எனப் பெறுவார். பரஞ்சோதி முனிவர் தந்தையாரிடமே முறைப்படி தீக்கைபெற்றுத் துறவு பூண்டவர்; தமிழினும் வடமொழியினுங் கற்றுத் துறைபோய பெரும் புலவர்; சிவபெருமானரிடமும், சைவ அடியாரிடமும், அங்கயற்கண்ணம்மையாரிடமும் அளவிலாப் பேரன்பு பூண்டவர்; சைவப் பேரன்பு மணங் கமழும் தெள்ளிய செய்யுளியற்றும் ஆற்றலுடைய இனிய கவிஞர்.

இத்தகைய பெரியார் அங்கயற்கண்ணம்மையார் தம் கனவில் எழுந்தருளிய வழியே திருவிளையாடலை இயற்றினர் என்று கூறுவர். இவர் இயற்றிய வேறு நூல்கள்: வேதாரணிய புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி என்பவையாம்.

பிறர் பாடிய நூல்கள் :

1. செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியவர்களால் இயற்றப்பெற்ற திருவாலவாயுடையார் திருவிளையாடல். இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும் வழங்கும்.

2. தொண்டை நாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாத பண்டிதரால் இயற்றப் பெற்ற கடம்பவன புராணம்.

3. தொண்டை நாட்டிலுள்ள வாயற்பதியிலிருந்த அனதாரியப்பன் என்னும் புலவரால் இயற்றப் பெற்ற சுந்தரபாண்டியம்.

இனி, இவ்வுரைநடை நூல் பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் செய்யுளின் இனிமையும் பொருளும் வழுவாமற் பொழிப்புப்போல எழுதப் பெற்றதாகும்; திருவிளையாடலில் வரும் சிறந்த செய்யுட்களை இடையிடையே தொடுத்துப் படிப்பவர்களின் கருத்தைக் கவருஞ் சிறப்புடையதாகும்.

இவ்வுரைநடை நூலைப் பயில்வோர் விழுமிய உரைநடை எழுதும் ஆற்றலையும் சிறந்த கருத்துகளையும் பெறுவார்களென்பது திண்ணம்.

மற்றும் சைவப்பெருமக்களால், திருத்தொண்டர் வரலாற்றைக் கூறும் பெரிய புராணமும், முருகப் பெருமானர் திருவிளையாடலைக் கூறும் கந்தபுராணமும் பாராட்டி வழிபடும் முறையிற் பயில்வது போலவே இத் திருவிளையாடற் புராணமும் வழிபட்டுவரப்பெறுந் தகையதாகும்.

எங்கள் விருப்பத்திற்கிணங்கச் செவ்விய முறையில் இவ்வரிய உரைநடைநூலை ஆக்கித்தந்த திரு. புலவர் அரசு அவர்களுக்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக. சைவப் பெருமக்களேயன்றித் தமிழ் உரைநடை பயிலுவோரும் மகிழ்வுடன் இந்நூலை வரவேற்றுப் பயின்று பயனெய்துவார்களென நம்புகின்ரேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்



 சிவபெருமான்

உ
திருச்சிற்றம்பலம்

திருவிளையாடல் வசனம்

—:o:—

1. மதுரைக் காண்டம்

காப்பு

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே. (௧)

சோக்கலிங்கர்

வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி! ஏற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி!
மன்றுளே மாறி யாடும் மறைச்சிலம் படிகள் போற்றி! (வாழ். ௬)

அங்கயற்கண்ணம்மை

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி! உத்தரியத்
தொடித்தோள் போற்றி!
கரும்புருவச் சிலைபோற்றி! கவுணியர்க்குப் பால்சுரந்த
கலசம் போற்றி!
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட அங்கயற்கண்
எம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி! ஆரணநூ புரஞ்சிலம்பும்
அடிகள் போற்றி! (௨)

சபாபதி

உண்மையறி வானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு
முயிராய் நீரின்
தண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா
சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னுனந்தக் கொடிமகிழ்ச்சி
பெருக யார்க்கும்
அண்மையதாய் அம்பலத்து ளாடியருள் பேரொளியை
யகத்துள் வைப்பாம். (க)

சோமசுந்தரர்

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார்
தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச்
சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி
மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை
வணக்கஞ் செய்வாம். (க0)

தடாதகைப் பிராட்டியார்

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து
செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு நந்திகண
முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித் தன்மகுடம்
சூட்டிச் செல்வம்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கமலந்
தலைமேல் வைப்பாம். (கக)

புராண வரலாறு

திருச்சிற்றம்பலம்

"வாயானை மனத்தானை மனத்து ணின்ற
 கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்ரான் தன்னைச்
 சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்ற
தாயானைத் தவமாய தன்மை யானைத்
 தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
 சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே."

—ஆளுடைய அரசு - அ

சீர்மிகுந்த வானவர் தலைவரும் முனிவரும் தம் தலை மீது கைகளைக் குவித்து மெய்சிலிர்க்க வாழ்த்தி வரமருள்க என வேண்ட அவர்கட்கருளி, அறிவைக் கடந்து, மொழியைக் கடந்து, உணர்வையுங் கடந்து மறைமுடிவையுங் கடந்த பரம் பொருளாகிய சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருக்கயிலைமலை. அங்குறையும் முனிவர்கள் வெள்ளொளி தவழும் வெண்ணீறணிந்து, இறைவரைத் தம்மகத் தெழுந்தருள்வித்து, இறைவரை நோக்கி நோக்கிக் கரைந்து கரைந்து அருவியென விழிநீர் வார இருத்தலால் அவர்களுந் திருக்கயிலையெனத் திகழ்வார்கள். சார்ந்தோரைத் தன்வண்ணமாக்கும் அழகினையுடையதன்றோ அத் திருக்கயிலை?

அரம்பையராடலின் அரவமும் பாட்டினொலியும் முழவினோசையும் களிறுகளின் முழக்கமும் வானிலுந் திசைகளிலும் எப்போதும் நிறைந்திருக்கும் மரக் கொம்பிலே மலர்ந்த மலர்களையும் கொடிமலர்களையும் நீர் மலர்களையும் புதர் மலர்களையும் செய்யுள் மலர்களையுங் கொண்டு, பரஞ்சுடரடிமலர்களிலே யிட்டு வணங்கும் மாதவர் கூட்டங்கள் மிகுந்திருக்கும் அங்கே. அங்குள்ள அன்பின் அமைதியை

யென்னென்று எடுத்துக் கூறுவது? கொடிய புலி சிங்கம் யானை முதலான விலங்குகளுந் தம் இயற்கையை மாற்றி அன்புருவாய் முனிவரர் இருக்கைகளிலே உலாவும்! அருளொளியாகிய சிவபரம்பொருளின் இருக்கையாய், அவரை வழிபடும்—உள்ளத்தினுள்ளே அவரைக் கண்டு இன்ப விழியருவி பொழியும்—துறவிகளின் சூழலை யுடையதாய் வெள்ளொளி வீசிநிற்கும் அத் திருமலையிலே அன்பையன்றி வேறெதனைக் காணமுடியும்? அழகிய அன்புநெறி உலகெங்கும் பரவி ஒளி செய்வதாக!

கண்களிக்குங் காட்சிநிறைந்த அக் கயிலையின்கண் கண்ணுதலார் திருமுன்னே சிவம் பெருகும் பொய்கையின் கரையிலே ஆயிரக்கால் மண்டபம் ஒன்றுள்ளது. முழுமதி விண்மீன்களுடன் வந்து தங்கியதைப்போன்ற அம் மண்டபம் சந்திரகாந்தக் கற்களால் நவமணிகள் அழுத்தித் தெய்வத் தச்சனுற் பலகாலஞ் செய்த தவத்தினுலே சமைக்கப் பெற்றது.

அம் மண்டபத்திலே வேங்கைத் தோலின்மேற் சூத முனிவன் அமர்ந்திருந்தான். அவனைச் சூழ்ந்து பல முனிவர்கள் இருந்தனர். அவர்கள் அவனை வணங்கி வினவுகின்றனர் :

பரம்பொருளெழுந்தருளிய பல திருப்பதிகளையும் அவற்றின் சிறப்பையுங் காரணங்களோடு விளக்கினீர்கள். அவற்றிலே, மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் இவற்றிலே சிறப்புற்ற இடம் எது? மயக்கமற வகுத்தருள வேண்டும்.

சூதன் சொல்கிருன் :

கேட்ட அளவிலே வீட்டையளிக்குந் திருப்பதி ஒன்றுள்ளது. அதுவே மூர்த்தியாலுந் தீர்த்தத்தாலும் தலத்தாலும் எல்லாவற்றினும் மேன்மையுடையது. அதன் சிறப்பை வரன்முறையாகக் கூறுகிறேன்.

புராணங்கள் பதினெட்டு. அவற்றுட், கந்தபுராணம் ஆறு சங்கிதைகளை யுடையது. அவற்றைக் கூறினோர் சனற்குமாரன், சூதனாகிய நான், சங்கரன், திருமால், பிரமன், கதிரவன் என்னும் அறுவருமாவோம். அவற்றுட் சங்கர சங்கிதையை இறைவர் உமையம்மையார்க்குரைத்தபோது கேட்டிருந்த முருகவேள் அகத்தியர்க்குக் கூறியருளினார். அகத்தியர் அதனை வெளியிட்டார். அன்று முதல் அஃது அகத்திய சங்கிதை யெனவும்படும். அந்த அகத்திய சங்கிதையிலே அத் தலத்தின் பெருமை கூறப்பெற்றுள்ளது. அத்தலமே திருவாலவாய் என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்றுள்ளது.

முன்னொரு காலத்திலே நான்முகன் காசியிலே செய்த வேள்விக்கு அகத்தியர், வியாதன், நாரதன் முதலான முனிவர்களெல்லோரும் வந்திருந்தனர். வேள்வி முடிந்து நான்முகன் சென்றபின், அம் முனிவர்கள் தம்மோடு வீற்றிருக்கும் நாரதமுனிவரை வணங்கிச், 'சிறந்த சிவதலம் எது?' என வினவினர். நாரதமுனிவர் வியாசரை வினவ ஏவினார். வியாசர் அகத்தியரை வினவ ஏவினார். அகத்தியர் சிவபரம்பொருளையும் முருகவேளையும் வழிபட்டு, "மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகையாலும் எவற்றினும் மேம்பட்ட தலம் திருவாலவாய் என்னும் மதுரையே. இறைவனார் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் இயற்றிய சிறப்புடைய அப் பதி பூவுலகிற் சிவனுலகென்னும் புகழ் பெற்றது. அதன் சிறப்பைக் கூறுகிறேன்," என்று கூறியருளினார்.

அவர் கூறியவாறே யானும் உங்களுக் குரைப்பேன்.

1. பாண்டித் திருநாடு

சிறப்பு

"கறைநி றுத்திய கந்தர சுந்தரக் கடவுள்
உறைநி றுத்திய வாளினுற் பகையிரு ளொதுக்கி
மறைநி றுத்திய வழியினுல் வழுதியாய்ச் செங்கோல்
முறை நிறுத்திய து" (௯)

'பாண்டியநாடு' எனில் அதன் உயர்வை யாவரே அணி செய்துரைக்க வல்லார்? ஆலவாய் அண்ணல் மட்டுமோ, அங்கயற்கண்ணம்மை தடாதகைப் பிராட்டியாகவும், குன்றெறிந்த கூர்வேல் முருகன் உக்கிர குமாரனுகவும் குலவி யரசுபுரிந்தது அந்தத் தெய்வத் திருநாடேயன்ருே? மேலும், 'இறைவ! நீ இதுவல்லே! இதுவல்லே!' என மறைகளும் அன்மை மொழியினுலேயே வாழ்த்தும் இறைவர் தென்திசை நோக்கி அடுக்க வந்துவந்து ஆடுவது, ஆடலின் இளைப்பு நீங்கும்வண்ணம் பொதியிலிருந்து வரும் இனிய சந்தன மணங்கமழ் காற்றுவீசி உட்கொள்ளவும், தமிழைத் திருச் செவியிலே கேட்டு மகிழவுமே யன்ருே? சோமசுந்தரக் கடவுள் இறையனுரென்னும் புலவராய்ச் சங்கத்தாருடன் கலந்திருந்து ஆய்ந்த தமிழ்—தொண்டர் நாதனைத் தூது விட்ட தமிழ்—முதலையுண்ட சிறுவனை அழைத்த தமிழ்—எலும்பைப் பெண்ணுருவாகக் கண்ட தமிழ்—மறைக் கதவைத் திறந்த தமிழ்—அகத்தியனுல் இலக்கணம் விரித்த தமிழ்—பாண்டியர்களாலே வளர்ந்தது. அத்தகைய திருவினையுடைய பாண்டியராண்ட பாண்டி நாட்டின் சிறப்பைச் செப்புவ தெங்ஙனம்?

பொதியமலை—பொருநை

"அவமி கும்புலப் பகைகடந் துயிர்க்கெலாம் அன்பாம்
நவமி குங்குடை நிழற்றியெய்ச் செய்யகோல் நடாத்திச்
சிவமி கும்பர ஞானமெய்த் திருவொடும் பொலிந்து
தவமி ருந்தர சாள்வது தண்டமிழ்ப் பொதியம்." (௬௧)

சொக்கலிங்கப்பெருமான் முடியின்மேல் தூய நீரை வார்க்கும் இந்திரன்போற் கார்முகில் பொதியமலையின் மேல் மழை பெய்தது. நிலமடந்தை தன் கொங்கைகளி

விருந்து தன் மக்களுக் கிரங்கிப் பொழியும் பாலெனப் பொதியமலையின் உச்சியிலிருந்து அருவிகள் தொடர்ச்சியாகத் துள்ளி ஒல்லென விழுந்தன. அந்த அருவிகளெல்லாம் பொருநை யாருக மாறின. பொதியமலையாகிய நங்கை பொருநை என்னும் பெண்மகவைப் பெற்ருள்.

பொருநைப் பெண்குழந்தை காடுகளின் வழியே ஒல்லெனத் தவழ்ந்தாள். இனிய பாலைப் (பாலையை) பருகினுள்! மருதநில மக்களின் பம்பை யென்னும் இசைக் கருவியின் ஒலியைக் கேட்டு உள்ளங் களித்தாள்! மெதுவாகப் பொழில்களில் உலவினுள்! கழனிகளில் விளையாடினுள்! இங்ஙனம் வளர்ந்து வாழை மரங்களாகிய துடைகளையும் மாந்தளிர்களாகிய மேனியையும், வஞ்சிக்கொடிகளாகிய இடையையும், கூந்தற்பனையாகிய குழலையும், மதி முகத்தையும் உடையவளாய் நெய்தல் நிலத்திலும் விளையாடிச் சென்று, பல மலர் மாலைகளையும் நுரைப் போர்வையையும் அணிந்து, சந்தனங் கத்தூரி முதலிய குழம்புகளைத் திமிர்ந்து, பொன் மணிகளையும் முத்துகளையும் மாலையாகத் தரித்துக் கடலாகிய கணவனைக் கலந்தாள்!

அப் பொருநை மருதமென்னுங் கன்னியை வளர்க்கும் அழகுதான் என்னே! மலைகளிற் கிடைக்கும் மணியாலும் பொன்னுலும் வைரத்தாலும் குழைகளாலும் அணிந்தழகு பார்க்கும். சாந்தையும் அகிலையும் அரைத்துப் பூசும். இனிய உணவை ஊட்டும். அது மருதக் கன்னியின் செவிலியாகியது! பொருநையின் வெள்ளம் முதலில் மறை முதலான நூல்கள் மணிமிடற்றண்ணலே எங்கும் நிறை பரம் பொருளென்றும் திருவெண்ணீற்று நெறியே வீடென்றும் பலவாறு விளம்பியுந் தெளியாத பாமரர் உள்ளமெனக் கலங்கியிருந்து முறைப்படி அறிவு பெற்ருர்போலத் தெளியும்.

"மறைவழி கிளைத்த எண்ணெண் கலைகள்போல் வருநீர் வெள்ளந்
துறைவழி யொழுகும் பல்கால் சோலைதண் பழனம் செய்தேன்
உறைவழி யோடை யெங்கும் ஓடிமன் றுடையோர்க் கன்பர்
நிறைவழி யாத வுள்ளத் தன்புபோல் நிரம்பிற் றன்றே." (கஉ)

இழிந்த மக்களின் கைப்பொருள்களும் பற்றற்ற துறவிகளின் கைப்படின் தூயனவாகிக் களங்கம் நீங்குவது போலக் கடலில் உள்ள உவர்நீர் கதிரவன் கதிர்க்கைகளிற் பட்டு, எழிலியாகி மழையாய்ப் பெய்து புவியிலுள்ள மக்களுக் கினிய அமுதாய்ப் பயன்பெற்றது.

அழிவில்லாத இறைவரருட் சத்தியே பராசத்தி, ஞான சத்தி, இச்சாசத்தி, இலக்குமி, சரசுவதி யென வெவ்வேறு பேர் பெற்று ஐந்தொழி லியற்றுவது போலக் கடல் நீரொன்றே ஆறு, கால், குளம், கிணறு, அகழி, எனப் பல பேர்பெற்றுப் பயிர்களை வளர்க்கும்.

உழவர்

உழவர்கள் ஏர்பூட்டி மருதம்பாடி யோட்டுவார்கள். ஏரிலே பூட்டப்பெற்ற கடாக்கள் அவர்கள் பாட்டிலே மகிழ்ந்து, அன்னையரின் அன்பு கனிந்த பாட்டுக்களினால் மகிழும் அம் குதலைச் சிறுவர் போல வசப்பட்டுச் செல்வது மனவலி கடந் தோரின் ஐம்பொறிகளும் அவர் வழிப்பட்டுச் செல்வது போலிருக்கும். இங்ஙனம் உழவர்கள் உழுபடைதேய நீர் பாய்ச்சி உழுது சேறு செய்து நெல் நாற்றுவிட்டு நடுவார்கள். உழத்தியர் அல்லி, குவளை, தாமரையாகிய களைகளைத் தம் வாய், கண், முகம் ஆகிய உறுப்புகளின் பகையெனக் கொண்டு எடுத்து விடுவார்கள்.

இங்ஙனங் களையெடுக்கப் பெற்ற நெற்பயிர், குற்றமற வுணர்ந்தவர்களின் நூற்பொருள் போல முதலிலே தன்னிட முள்ள கருவை வெளியிடாமல் அடக்கிவைத்திருந்து, பிறகு அந்நூலின் கருத்தைப்போலச் சிறிது கரு வெளிப்பட நின்றது. பின்னர், கல்வி நிறையாத கவிஞரைப் போலத் தருக்கிநின்றது. நூலின் உரைபோல விரிந்த கதிர் கற்புடைய மகளிர் போலத் தலை வணங்கியது.

அன்பை விதைத்து ஆர்வநீர் பாய்ச்சும் தொண் டர்க்குப் பரமனாருள் விளைதல்போல, உழவர் நாள் தோறும் பக்குவம் நோக்கி முயற்சியுடன் நீர்பாய்ச்சிக் காப்பாற்ற நல்ல நெல் விளைந்தது. விளைந்த நெல்லை அறுத்துக் களத்திற் கொணர்ந்து அடித்துத் தூற்றினர்.

ஊர்க்காணிக்குந் தெய்வத்திற்கும் வறியவர்க்கும் உவந்து கொடுத்தனர். அரசன் இறைக்கு அளந்தனர். வீட்டிற்குக் கொண்டுவந்து உறவினரையும் விருந்தினரையும் ஆதரித்துத் தாமும் உண்டனர். மேலும் துறவிகளுக்கும் பரமனடியார்க்கும் பசிக்கு உணவும், பிணிக்கு மருந்தும் உடுத்த ஆடையும் உறை விடமும் பிறவும் அளித்து அவரவர் தொண்டு தடையுறாமற் காப்பாற்றினர்.

"நிச்சலும் ஈசன் அன்பர் நெறிப்படின் சிறூர்மேல் வைத்த
பொச்சமில் அன்பும் மன்னர் புதல்வரைக் கண்டா லன்ன
அச்சமுங் கொண்டு கூசி அடிபணிந் தினிய கூறி
இச்சையா ளுமுகி யுள்ளக் குறிப்பறிந் தேவல் செய்வார்."

(கக)

வேறு கூறுவதெதற்கு? "பாண்டி நாடாகிய மங்கைக்கு ஊர்களே உறுப்புகள், அவ்வுறுப்புகளில் அணியும் அணிகலன்களே கோயில், மடம், அறநிலையம், தண்ணீர்ப் பந்தல்கள் என உருவம் பெற்றன," என்று கூறல் மிகையாகாது!

நிலமயக்கச் சிறப்பு

முல்லை நிலத்திலே ஆனிரைகளை மேய்க்கும் ஆயர்கள் குருந்த மரத்திலே படர்ந்திருக்கும் மிளகுக் கொடியைக் கைப்பற்றுவார்கள். வேட்டுவச் சிறுமிகள் முல்லையரும்புகளைப் பறித்துத் தேனைக் கலந்து சோறென்று வைத்துக்கொண்டு விளையாடுவார்கள். களிறுகள் தினைப்புனத்திலே மேய்ந்து விட்டு மருதமர நிழலிலே உறங்கும். முல்லை வண்டு முல்லைப் பண்ணைத் தாமரை மலரிலிருக்கும் மருதநில வண்டுக்குப் பயிற்சி செய்வித்துத் தானும் மருதப் பண்ணைக் கற்கும்.

உப்பங்கழிகளிலுள்ள தாழைகள் மீனின் புலால் நாற்றத்தைப் பொறாமற் சோற்றைக் கக்கும். அவை உமிழ்ந்த சோற்றை அல்லிமலர்கள் வாய்திறந்து ஏற்கும். அதைக்கண்ட குவளை முல்லைக்குக் கண்ணூற் காட்டும். முல்லையும் பலரறியத் தூற்றி நகைக்கும். இத்தகைய இயற்கையழகுடையது பாண்டித்திருநாடு.

———

2. மதுரைத் திருநகர்

அமைப்பு

பாண்டி நாடாகிய மகளுக்குத் திருப்பரங்குன்றமும் கொடுங்குன்றும் கொங்கைகள், திருச்சுழியல் கொப்பூழ், குற்ருலம் வயிறு, திருவேடகம் செங்கை, திருப்பூவணம் மேனி, திருநெல்வேலி திரண்டதோள், திருமுகம் மதுரைமா நகர். மற்றும் மாநில மகளின் மார்பில் ஒளிவிடும் ஆரம் பாண்டி நாடாகவும், ஆரத்தின் மருங்கெலாம் விளங்கும் மணி பிற்நகரங்களாகவும், நடுவில் மின்னும் தலைமை மணி மதுரை நகராகவும் உரைப்பது பொருத்தமாகும்.

அத்தகைய சிறந்த மதுரை திருமகளின் செந்தாமரை மலர்—கலைமகளின் வெள்ளைத் தாமரைமலர்—வீரமகளின் யோக இருக்கை—நிலமகளின் நெற்றித் திலகம்—என விளங்கியது. அந்நகரின் அழகிய மாடங்களின் வெண் சுதை யொளி விசுவது கலைமகளின் இருப்பிடமென்ப தல்லது புகழ்மக ளிருக்கை யெனப் புகல்வதற்கும் ஏற்ற தாயிற்று.

நகரின் புறம்

பொழில்

அங்கயற்கண்ணம்மையார் இந்திரனை வென்று கவர்ந்த வான்மலர்க் காவேபோல், அந்நகரைச் சூழ்ந்த பொழில்கள் நறுமணத்தைப் பரப்பி மலருங் கனியும் பிறவும், மக்களுக்கு நல்கி விளங்கிடுங் காட்சியை வரைவதெப்படி?

"சீத வேரியுண் டளிமுரல் கமலமேற் செருந்தி
போத வேர்யும் மலர்களுஞ் சொரிவன புத்தேள்
வேத வேதியர் செங்கரம் விரித்துவாய் மனுக்கள்
ஓத வேமமும் உதகமும் உதவுவா ரனைய." (க)

குளிர்ந்த தேனைப் பருகித் தாமரை மலர்மேல் வண்டுகள் இசைபாடிக் கொண்டிருக்கின்றன. அம் மலர்களின்

மற் செருந்திமரம் மலர்களுடன் தேனைப் பொழிகிறது. அத் தோற்றம் அந்தணர்கள் மறையை யோத, அவர் களுக்குப் பொன்னை நீர் வார்த்துக் கொடுப்பதை நினை வூட்டுகிறது.)

அரசவன்னம் அழகிய தாமரைமலர்மேற் பெடையோடு மணமக்கள்போல அமர்ந்திருக்கும் அப்போது அப் பொய்கை மகள் தன் அலையாகிய வளைக்கையாலே தாமரையிலையில் முத்துமுத்தாக உள்ள நீரைக் கொண்டு நீராஞ்சனம் எடுப்பாள்.

ஆலைப் பொறிகள்

இரும்பைப் போன்ற தோள்களையுடைய ஏவலர்கள் கொடுக்குங் கரும்பைத் தின்று இடியொலி யெழுப்பி யினிய சாற்றை வண்டுகள் மொய்க்கச் சொரிந்து கொடுஞ் சீற்றத் தீயெழக் களிறுகளைப் போல விளங்கின ஆலைப் பொறிகள்.

அகழி

ஆலவா யண்ணலின் அருளினாலே அலைகளையுடைய எழுகடலும் தூய நீர்நிலையாக வந்திருக்குந் தோற்றத்தைப் பெரும்புறக்கடல் கண்டு அகழியாக வந்துள்ளதைப் போல் அகழியின் தோற்றம் அமைந்துள்ளது. அந்த அகழி தன்னிடமிருந்து எறியும் வாளையாலும் அடிக்கடி யெழுந்து உடலைப் பரப்பிப் பரப்பி மறையும் ஆமையாலும் வாளுங் கேடகமும் பற்றி மதிலோடு பொருவதைப் போன்று காணப்பட்டது. அவ்வாறு அகழி பொருவதல்லது பகைவர் வந்து பொருதற்கியலாத அரணுடையது அந் நகர மதில்.

மதில்

மதுரைமா நகரின் அழகிய அந்த மதிலுக்குக் காவலர் வேண்டுமென்பதில்லை. மதிலில் அமைந்த பொறிகளே காவலாகவுள்ளன. அவை மழுக்களை வீசும்; நஞ்சூட்டிய வாட்களை வீசும்; முத்தலைப் படைகளை வீசும்; குந்தங்களை—ஆழிகளை—எழுக்களை—வீசும்; கப்பணங்களைப் பொழியும்

கொழுக்களைக் கொழிக்கும்; கற்களைக் கவணிற் கோத்தெறியும்; நஞ்சைப் பொழியும் பற்களையுடைய அரவப்பொறிகள் காத்திருக்கும். மலைப்பாம்புப் பொறிகள் வாயைத் திறந்து கொண்டிருக்கும். யானைப் பொறிகள் உலக்கைகளைச் சுமந்துகொண்டு வீசக் காத்திருக்கும். புலிப்பொறிகள் அமுக்கும்.

இவற்றை மதியாமல் ஏறுகின்றவர்களைக் குதிரைப்பொறி தள்ளும்; சங்கிலிகளைச் சில பொறிகள் வீசிப் பகைவரை யிழுக்கும். ஐயவித்துலா மென்னும் பொறி தலைகளைத் திருகும்; சில பொறிகள் அனலை யள்ளி வீசும்; கல்மழை பொழியும்; ஈயமழை, இருப்புமழை, செம்புமழை—இவை போன்றவற்றையும் பெய்யும். எதிரிகள் விடும் படைகளைச் சில பொறிகள் பற்றித் திரும்பவும் அவர்கள்மேல் வீசும். நடை மாடங்கள் துடி முரசுகளை முழக்கித் திரியும். நடைவண்டிகள் வாளிமழை பெய்து செல்லும்.

வெறிகொளும் ஐம்பொறிகளையும் வெல்லலாம். வெலற்கரிய காலனையும் வெல்லலாம். அம் மதிலிலுள்ள பொறிகளை வெல்வதற்கு இயலாது!

அகநகர்

தெருக்கள் - போது

அடியார்வாழ, ஆறு சூடிய அண்ணலார் மாணிக்கங்களையும் விறகுகளையும் வளையல்களையுஞ் சுமந்து தம் திருவடி பெயர்த்துச் செல்லத் தவம்புரிந்த மதுரைமா நகரின் தெருக்களின் பெருமையை எங்ஙனம் இயம்புவது?

> "ஐய வென்னுரை வரம்பின வாகுமோ அடியர்
> உய்ய மாமணி வரிவளை விறகுவிற் றுழன்றோன்
> பொய்யில் வேதமுஞ் சுமந்திடப் பொருநகன் றாற்றுஞ்
> செய்ய தாண்மலர் சுமந்திடத் தவஞ்செய்த தெருக்கள்." (சஉ)

மாதர்களின் செம்பஞ்சுக் குழம்பு தோய்ந்த அடிகள் மாளிகைகளிலும் மேடைகளிலும் கன்னிமாடங்களிலும்

கூத்தரங்குகளிலும் பதிந்திருப்பதுடன் முருகனைப் போன்ற இளைஞர்களின் முடிகளிலும் மார்புகளிலும் பெரிய தோள் களிலும் பதிந்திருக்கும். அவர்கள் முகங்களிலும் பொய்கை களிலும் குழைகள் (காதணி, தளிர்) காணப்படும். அவர்கள் மைதீட்டிய கண்களிலும் மாடங்களிலுங் கொடிகள் (செவ் வரிகள், நாட்டுக் கொடிகள்) காணப்பெறும். அவர்கள் கூந்தலும் மலர்ப்பொழிலும் தெருக்களும் "நீளறநெறி" யொடு காணப்பெறும். (அறல் நெறி, அறன் நெறி).

வானளாவிய மாளிகைகளிலும் மலர்களிலும் மணந்தவழும் தண்ணிய நீர்த்துறைகளிலும் மலர்களிலும் தும்பிகள் (யானை கள், வண்டுகள்) குடைந்து ஆடும். பொழில்களும் மாதர்களின் வாய்களும் அலர் (மலர், மறை வெளியிடல்) தூற்றும். பொய்கைகளும் வீடுகளும் அன்னம் (அன்னப் பறவை, சோறு) குறைபடாமற் காணப்பெறும்.

திங்களைப் பொடியாக்கிச் சேற்றிற் குழைத் தூட்டினாற் போன்ற வெண்மையான மாடங்கள் புண்ணிய நீறு பூசிய தொண்டர்கள் சொக்கலிங்கப் பெருமானார் திருவிழாவைக் காண வந்தாற் போன்று நெருங்கியுள்ளன. தேரொலியும் குதிரைக் கனைப்பும் குதிரைகளின் கழுத்திலுள்ள மாலைகளின் ஓசையும், ஐவகை இசைக்கருவிகளின் ஒலியும், களிறுகள் பிளிறும் ஆரவாரமும் எல்லாம் ஒன்ருகிப் பேரொலியாகி இடியோசையையும் அடக்கி ஒலிக்கும்.

வேளாளர் தெரு

மேழிச் செல்வராகிய வேளாளர் தெருவிலே வரு விருந்தை யெதிர்கொண்டு முகமனுரைக்கும் ஒலியும், அருகி லிருந்து நயமுற வுரையாடி உண்பிக்கும் ஒலியும், சீரிய செந்தமிழைப் பாராட்டுஞ் சிறந்த வொலியும், உவகை மிக இருநிதி அளிக்கும் ஒலியும் கடலொலி போற் சிறப்பாகக் கேட்கும்.

அங்குள்ள வேளாளர்கள் தம் இல்லத்திலே விருந்தினரையே ஓம்புஞ் சிறப்பை யென்னென்பது! உண்டு செல்லும் விருந்தினரும், உண்ணும் விருந்தினரும் இடையறாதிருக்கவும், வித்தைக் கழனியிலே விதைத்துவிட்டு வானத்தை மழைக்காக நோக்கும் ஓரேருழவர் போல வருவிருந்தை நோக்கி நிற்கும் மாண்புறு மனத்தினர் அவர்கள்.* அவர்கள் வானமுந் திசையும் பொங்கும் புகழினர்; வீட்டை நோக்கிய அறிவினர்! பொறையினர்! குன்றா நன்றியினர்! ஊக்கத்தினர்! கொடையினர்! அன்பினர்! வரிசையினர்! நண்பினர்! மனத்தினர்! இப் பண்புகளெல்லாம் அவர்களிடம் ஈன்ற மகவென இனிதே வளர்ந்தன.

வணிகர் தெரு

அலைகடலளிக்கும் பொருள்களும், மலைகள் வழங்கும் பொருள்களும், மருதந் தரும் பொருள்களும், ஆனிரை பயிலுங் கானங் கொடுக்கும் பொருள்களும் வந்து வந்து குவியக் குவிய அவற்றை வாங்கி வாங்கி விழுங்கும் மாடங்கள் நிறைந்தவை வணிகர் தெருக்கள்.

அங்குள்ள வணிகர் சிறந்த நுண்ணறிவினர். தம்மிடம் வந்தோர் வினவிய பொருள் இல்லையெனின் இனமாக இருக்கும் பொருள்களைக் கூறுவர். அப் பொருளிருந்தால், இவ்வளவு உள்ளது; இத்தகை விலையினது எனக் கூறுவர்.† இவ்வாறு சொல்லினும் ஊதியம் பெறுவர்.

பழைமையான பழுமரந் தேடிவரும் பறவைகள் போலப் பலநாட்டு மக்களும் அங்கே கூடியிருப்பர்.

---

*"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு." திருக்குறள், அசு.

†"தம்பால் இல்லது இல்லெனின் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும், உள்ளது
சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே." நன்னூல், சOசு.

அவர்கள் பேசிக்கொள்ளும் பல்வேறு மொழிகளின் திரட்சி வானவொலி போலப் பொருள் விளங்காமற் கேட்கும். எழுவகை யுலோகங்களும் பலவேறு கலைகளும் வேறு பல பொருள்களும் ஒழுங்காக மரபு கெடாமல் வகுத்துவைக்கப் பட்டு, வேண்டுவோர் கொள்ளும் அளவிற்குப் பகரப்படுவதால் அவ் வணிகர் தெருவை மறைகளுக்கு ஒப்பிடலாம்.

"ஒழிவில் வேறுபல் பொருளுமே ழுலோகமும் பிறவும்
வழுவில் வேறுபல் கலைகளும் மரபுளி வகுத்துத்
தழுவி வேண்டினர் தாங்கொளத் தக்கவா பகரா
அழிவி லாமறை போன்றன ஆவண வீதி.'' (௬அ)

மன்னவர் மறுகு

கதிரவன் உலகின் புறவிருளை யொதுக்குவது போலத் தங்கள் முறைமையினாலே உலகின் வறுமையிருளை யோட்டிப் பகைவரை வென்று செங்கோல் செலுத்தும் அரசர்களின் அழகிய தெருவின் அணியை இயம்புவதெங்ஙனம்?

கடலின் அலைகளைப் பரிகளாக்கிப் பிணித்து வைத்தாற் போன்ற குதிரைக் கூடங்களும், மலைகளையே பெயர்த்து வைத்தாற் போன்ற யானைக் கூட்டங்களும், அளவில்லாமற் காணப்படும். அங்கே மழு, வச்சிரம், வில், அம்பு, முத்தலைவேல், சக்கரம், வேல், கப்பணம், கலப்பை, எழு, வாள், கேடகம், கதை முதலான படைக்கலக் கோயில்கள் பார்க்குந்தோறும் வீரத்தை யூட்டும்.

துளையையுடைய கல்லை, வரையேந்திய திருமால் போல, ஏந்திச் சுழற்றியும் யானைமேற் பாய்ந்து மற்போர் புரிந்தும், வாளுங் கேடகமும் பற்றிப் போர்புரிந்தும் இளைஞர்கள் போர்ப்பயிற்சி செய்யுங் கூடங்கள் எண்ணி லாதன காணப்படும்.

கரிய முகில்கள் மின்னை வாளென வீசிப் போர் புரிதல் போல, மருப்பை நீட்டி யெதிரெதிர் புதையக்குத்தியும்,

இடிபோலப் பிளிறியும், மழைபோலச் செந்நீர் சிந்தியும் போர் புரியும்படி யானைகளைப் பயிற்றுமிடங்கள் பல. தூண்டுவார் உளமும் பின்னிடத் தேர்கள் உலாவும் இடங்கள் எண்ணில. பரியை நடாத்தும் இடங்கள் பலப்பல.

தம் உயிருக்கு வருந்தாமல் மானத்தைக் காப்பதற்காகப் போர்க்களத்திலே வீரர்கள் செய்யும் போரைப் போலக் கோழிகளும், ஆட்டுக் கடாக்களும் போர் செய்யும்படி விட்டு வேடிக்கை பார்க்கும் இடங்கள் அங்கங்கே காணப்படும்.

பெண்களிலே முத்துப்போன்ற பேதைப் பருவச் சிறுமியர் முத்துகளினாலிழைத்த சிற்றில் சிதையும்படி, செல்வச்சிறுர் தேருருட்டுவார்கள். அப்போது அப் பேதையர்கள் கண்களிலிருந்து முத்துமுத்தாக நீர்கசிய அழுவார்கள். அதைக் கண்ட சிறுர்கள் முத்துப்போல நகைத்தவாறே தாங்களணிந்திருக்கும் முத்துமாலை தடுக்கச் செல்வார்கள்! 'தென்னாடு முத்துடைத்' தன்றே?

"பெண்முத்த மனைய பேதைச் சிறுமியர் பெருநீர் வைகை
வெண்முத்த மிழைத்த சிற்றில் சிதைபட வெகுண்டு நோக்கிக்
கண்முத்தஞ் சிதறச் சிந்துங் கதிர்முத்த மாலை தட்பத்
தெண் முத்தின் நகைத்துச் செல்வச் சிறுர்கள்தே ருருட்டு வார்கள்!"

பாண்டியர் அரண்மனை வடகீழ்த்திசையிலே அழகுறக் காணப்படும்.

மறையவர் மறுகு

மறையவர் மறுகிலே, முஞ்சி நாணுடைய இடையும் பொற்றாமரை வேய்ந்த குடுமியும், மான் தோல் முடிந்த முப்புரிநூன் மார்பும், பலாசக் கோலுமுடையராய் மறைச் சிறுவர் மறைபயிலும் பள்ளிகள் எங்கும் விளங்கின. பொழில்களிலே பூவையுங் கிளியுங்கூட மறைமொழி பேசின. கழகங்களிலே சொற்போர் வல்ல மறையோர் விளங்கினர். உறியிலே கரகமும், செங்காவி யாடையும், எறும்பு முதலான

சிற்றுயிர்க்குங் கெடுதியுண்டாகுமோ என அஞ்சும்நடையும், அறியாமையைப் போக்கும் ஒளி வீசும் மழுவைப் போலக் கோவணங்கட்டிய கோலும் உடைய மாதவர் மடங்கள் எங்கும் இலங்கின.

சைவர் தெரு

தெய்வத் திருநீறும் திருஅஞ்செழுத்துமே பாய் மரமும் மரக்கலமுமாகக் கொண்டு, பிறவிக் கடலைக் கடந்து, சிவபிரான் அடிமலர்க் கரையை அடையும் சைவத்தவத் தினர் உறையும் ஒப்பற்ற தெருவின் சிறப்பையுஞ் செப்ப வியலுமோ?

எங்கும் சிவபிரானைப் பூசைசெய்வார்! எங்கும் சிவ னடியாரை வழிபடுவார்! எங்கும் சைவாகமங்களை யினிதிற் கேட்பார்! எங்கும் இறைவனுரை உளத்தே பதித்து மலமறுப்பார்! எங்கும் தொண்டர், மைந்தர், சாதகர், போதகக்காட்சியரெனப்படும் நால்வகை நெறியினர்! எங்கும் சிவயோகியர்!

திருக்கோயில்

வானமளாவிய சொக்கலிங்கர் கோயிலிற் குழலோசை யும் யாழோசையும் ஆடலோசையும் தேவாரப் பண்ணோசையும் திருவிழவோசையும் மறையோசையும் முழ வோசையும் மாருமல் ஒலித்துக் கொண்டிருக்கும். இறைவ ரருகிலே நிற்குங் கடம்பு தேனைத் துளித்து, மலரிட்டு, வண்டரற்றக் காணப்படுங் காட்சி இன்பக் கண்ணீர் சிந்தி, மலரிட்டு, வாழ்த்தி வரம்வேண்டி நிற்கும் இந்திரனை நினைவூட்டும். கோயிலைச் சுற்றியும் அகழியும் மதிலும் அரண்செய்ய, வானளாவிய கோபுரங்களும் இந்திர விமானமும் அழகு செய் தொளிர்ந்தன.

நகரச் சிறப்பு

அந்நகர் ‘நாத அந்தமுங் கடந்ததோர் நடுநிலைப் பொருளின்’ திருவடியன்பிலே ஈடுபட்டோர் மாதவத்தின் பயன்போலப் பல வளங்களும் தழைத்தது. அந்நகர

மக்கள் பிறைமுடிப் பெருமானார் திருவடியிலே சிந்தையைச் செலுத்திய அடியார்போல ஐம்பொறிகளினாலும் அடையக் கூடிய பல இன்பங்களையும் மிதப்ப நுகர்ந்து தேக்கெடுத்தனர். முக்கட் பெருமானார் அரசிருக்கை யாகையினாலே அந்நகர் திருமகளை யீன்றது. அவள் பல பொருள்களும் நிறைந்த செல்வத்தைப் படைத்தாள். அச் சீரிய செல்வம் பலவகை யறங்களையும் வளர்த்தது. இந்த அறங்கள் புகழைப் படைத்தன.

வேம்பணிந்த மீனவர்கள் தம் வாகைவேலை விடுத்துக் கடலை வென்றதும், இந்திரன் செருக்கைச் சிதைத்ததும், காரைச் சிறைபிட்டதும், பொன்மலையைச் செண்டாலடித்து வீறு பெற்றதும் இந்த விழுமிய மதுரைநகரின் மாண்பினா லன்றோ?

மேலும், புண்ணியம் புரியும் இடம் மண்ணுலகமும், அதன் பயனை நுகரும் இடம் விண்ணுலகமும் ஆமென ஆன்றோர் புகல்வர். ஆனால், இந்தப் பாண்டியநாட்டின் தலைநகரான மதுரையோ புண்ணியம் புரியும் இடமும் அதன் பயனை நுகரும் இடமும் தானேயாகித் தழைத்தது!

தன்னிகரில்லாதவனைக் காப்பியத்தலைவனாக அமைத்துக் கூறவேண்டுமென்பது பெரும்பாலும் முகமனாக முடிவதைக் காண்கின்றோம். ஏனெனில், மக்களில் ஒப்புயர் விலராகக் காணப்படுவோர் அரியராவர். ஆனால், இந் நூலின் தலைவரும், இந் நகரின் தலைவரும் எல்லாம்வல்ல இறைவரே யாகையால்—பாண்டிவேந்தாய் அரசு புரிய அண்ணலார் எழுந்தருளினராகையால்—இந்நகரின் சிறப்பை யெடுத்தியம்ப வொண்ணுமோ?

"தன்னிக ருயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவ னாக
முன்னவர் மொழிந்த தேனோர் சுமக்கெலாம் முகம னன்றோ?
அன்னது தனதே யாகும் அண்ணலே பாண்டி வேந்தாய்
இந்நகர்க் கிறைவ னவான்! இக்கவிக் கிறைவ னவான்!" (௬௦அ)

———

3. தலச் சிறப்பு

நாட்டமொரு மூன்றுடைய நாயனுர்க் கன்புடையீர்! திருவாலவாய்க் கிணையான தலமொன்றும், அத் தலத்திலே இதழ்விரிந்து மணங்கமழும் பொற்ருமரை மலர்ந்த பொய்கைக் கிணையான பொய்கை யொன்றும், அழகிய செவ்வொளி மலர்ந்த உண்மையறிவின் பிழம்பாகத் தோன்றிய சிவலிங்கத் திற் கிணையான சிவலிங்கமொன்றும் மூவுலகத்தினுமே யில்லை.

அளவிலாத சைவத் திருப்பதிகளிலே அறுபத்தெட்டுத் தலங்கள் சிறந்தவை. அவற்றினுஞ் சிறந்தவை பதினறு; அவற்றினுஞ் சிறந்தவை சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை என்னும் நான்குமே. இவற்றுட் சிதம்பரம் காண்போர்க்கு வீடுதரும். காசிநகர் உறைந்து இறப்போர்க்கு வீடுதரும். சிறந்த காளத்தி அன்போடு வழிபடுவோர்க்கு வீடுதரும். ஆனல், மதுரையோ நினைத்த அளவிலே வீடளிக்குஞ் சிறப் புடையது. பரம்பொருள் திருத்தலங்களைப் படைக்குமுன் முதலிலே இதனையே படைத்தருளினர்.

இந்நகரின் திருப்பெயர்கள், சிவநகரம், கடம்பவனம், சீவன்முத்திபுரம், கன்னிபுரம், திருவாலவாய், மதுரை, சிவலோகம், சமட்டி விச்சாபுரம், கூடல், துவாதசாந்தத் தலம்.

"திருவால வாயென்று கேட்டவரே யறம்பெறுவர்
செல்வ மோங்குந்
திருவால வாயென்று நினைத்தவரே பொருளடைவர்
தேவ தேவன்
திருவால வாயதனைக் கண்டவரே யின்பகலஞ்
சேர்வ ரென்றுந்
திருவால வாயிடத்து வதிந்தவரே பரவீடு
சேர்வ ரன்றே" (௮)

———

4. தீர்த்தச் சிறப்பு

சோமசுந்தரக்கடவுள் தம்மை நீராட்டுவதற்காக—நந்தி முதலான அடியவர்கள் வேண்ட—முத்தலை வேலினால் அகழ்ந் தெடுத்தருளியது சிவலிங்கத்தின் தென்கீழ்த் திசையிலுள்ள தீர்த்தம். அதன் பல பெயர்கள்: ஆதி தீர்த்தம், பரமதீர்த்தம், அருட்சிவதீர்த்தம், ஞான தீர்த்தம், முத்தி தீர்த்தம், சிவ கங்கை, தீர்த்தவுத்தமம், பொற்றாமரைப் பொய்கை, தரும தீர்த்தம், அருத்த தீர்த்தம், காம தீர்த்தம்.

"இன்னமா தீர்த்தந் தன்னை யெனைப்பல தீர்த்தங்கட்கு
முன்னம்யா மிங்குக் கண்ட முதன்மையா லாதிதீர்த்தம்
என்னலா மினியுண் டாக்குந் தீர்த்தங்கள் எவைக்கு மேலாய்
மன்னலாற் பரம தீர்த்தம் எனப்பெயர் வழங்க லாகும்" (கக)

"தெய்வஇத் தீர்த்தந் தன்னை நினைவின்றித் தீண்டி னாலும்
அவ்விய வினையி னீந்தி அரும்பெறல் வீடு சேர்வர்
இவ்வுரை மெய்யே யாகு மென்னெனின் மனத்தா னன்றி
வெவ்வழல் தீண்டி னாலுஞ் சுடுமன்றி விடுமோ வம்மா" (கசு)

"உம்மையிற் பிறவி தோறு நியமநல் லொழுக்கம் பூண்டு
பொய்ம்மையில் விரதந் தானந் தவஞ்செய்து புனித ராகிச்
செம்மைநன் னெறியி னின்ற சித்தருக் கலதித் தீர்த்தம்
இம்மையி லடைந்து நித்த மாடுதற் கெய்தா தன்றே." (உஅ)

———

5. மூர்த்திச் சிறப்பு

காசி முதலான சிறந்த திருப்பதிகளிலே தோன்றிய இலிங்கங்களுக்கு முன்னரே மதுரையிலிருக்கும் சிவலிங்கம் தோன்றியது. இந்தச் சிவலிங்கத்திலே உமையம்மையாருடன் இறைவனுர் காட்சிகொடுத்த அழகை நோக்கிச் சான்றோர்கள் சோமசுந்தரன் (உமையொடு கூடிய அழகன்) எனத் திருப் பெயர் சாத்தி வணங்கினர். வேரிலூற்றிய நீர் மரத்தின் கிளைகளையெல்லாந் தழைவிக்குந் தன்மை போலச் சேர்க்கை யான சோமசுந்தரரை வணங்கினோர் பிற திருப்பதிகளின் மூர்த்தியை வணங்கின பேறு பெற்றவராவர்.

எந்தத் திருப்பதியிலே சிவபெருமானுர் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தாரோ, அந்தத் திருப்பதியிலே எழுந்தருளிய இறைவருக் கொப்பான இறைவர் எந்தத் திருப்பதியிலுமிருக்க வியலுமோ? ஆகையால், தோற்றமும் முடிவுமில்லாத பெருமானுர்—எங்கும் நிறை பொருளாகி யாவருக்கும் பற்றையும் வீட்டையும் நல்கும் சீரிய ஒளிப் பிழம்பு—தாமே தம்மை வணங்குவோர்க்கு இம்மை மறுமை வீடுகளை யளிப்பதற்காக இந்த அழகிய இலிங்கத்திலே மறைகள் வாழ்த்த அமர்ந்தருளியுள்ளார்.

இப் பெருமானுரை வணங்கினோர் பாவமெல்லாம் பெரு நெருப்பிற் பட்ட பஞ்சுபோல—சீற்றத்தாலே சிதையுந் தவம் போல—மருந்தினுல் மாறும் நோய்போல—உலோபத்தாலே அழியும் நற்பண்புகள் போல—ஞாயிறு தோன்ற நலியும் இருள்போல—பெருங் காற்ருலே விலகும் கருமுகில் போல—அரிமா முழக்கத்தினுற் சிதறியோடும் யானைகள் போல—இந்திரன் வச்சிரத்தாலே பொடியாகும் மலைபோல—மயக்கந் தரும் காமநோயாற் கெடும் அறிவுபோல—சிவஞான நோக்கத்தாலே திறல் கெடும் அறியாமைபோல—கருடனுலே தருக்குக்கெடும் அரவுபோல—செருக்கினுலே அழியுங் கல்வி போல—அழியும்

இங்கெழுந்தருளிய இறைவனார் திருப்பெயர்கள்,

"கருப்பூர சுந்தரன்பூங் கடம்பவன சுந்தரன்,உட்
கரவாத் தொண்டர்
விருப்பூருங் கலியாண சுந்தரன்,நல் லறவடிவாய்
விளங்கு மேற்றுப்
பொருப்பூரும் அபிராம சுந்தரன்,தேன் புடைகவிழப்
பொன்விற் பூத்த
மருப்பூரு சண்பகசுந்தரன், மகுட சுந்தரன்தான்
வாழி மன்னோ!"

"மான்மதசுந் தரன், கொடிய பழியஞ்சு சுந்தரன், ஓர்
மருங்கின் ஞானத்
தேன்மருவி புறைசோம சுந்தரன்,தேன் செவ்வழியாழ்
செய்யப் பூத்த
கான்மருவு தடம்பொழில்சூழ் ஆலவாய்ச் சுந்தரன்,மீன்
கணங்கள் சூழப்
பான்மதிசூழ் நான்மாடக் கூடல்நா யகன், மதுரா
பதிக்கு வேந்தன்"

"சிரநாலோன் பரவரிய சமட்டிவிச்சா புரநாதன்
சீவன் முத்தி
புரநாதன், பூவுலக சிவலோகா திபன்கன்னி
புரேசன், யார்க்கும்
வரநாளுந் தருமூல இலிங்கம் என இவைமுதலா
மாடக் கூடல்
அரன்நாமம் இன்னுமளப் பிலவாகும் உலகுய்ய
அவ்வி லிங்கம்"

என்னும் பாக்களால் அறியலாகும்.

———

திருவிளையாடல்கள்

க. இந்திரன் பழிதீர்த்தது

இந்திரன் தவறு

முன்னொரு காலத்திலே, வண்டு முரலும் மந்தார நீழலிலே, அரிமா சுமந்த அணையிலே, கதிர்விடும் அணிகள் இமைக்க அமர்ந்திருந்தான் இந்திரன். அவனெதிரிலே தாமரையுங் குவளையுங் குமிழும் மலர்ந்து வண்டு பாட அலர்ந்த கொடி அசைவதுபோல ஆடினர் அரம்பையர். அவர்களுடைய ஆடலிலும் அவர்கள் நாவிலே அலர்ந்த பாடலிலும் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து மதுவினால் மயங்கியவன் போலானான் புருகூதன்.

அந் நிலையிலே, அவனுக்கு ஆசிரியனான வியாழன் அங்குப் போந்தான். சிறிதுநேரம் நின்றான். அவன் வந்ததையும் நின்றதையும் அறியாமல் மயங்கிக் கிடந்தான் மகவான். ஆசிரியனுந் தன்னை ஆயிரங்கண்ணன் வரவேற்காமையாற் புழுங்கி விரைந்து வெளியேறினான்.

'தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ?'

ஆசிரியனை யிகழ்ந்ததால் ஆகண்டலன் செல்வஞ் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. அதனை யுணர்ந்தான் இந்திரன். வியாழனை யிகழ்ந்ததால் வந்த வினையென மெல்ல வாராய்ந்துணர்ந்தான்; திகைத்தான்; குரவனைத் தேடிச் சென்றான்; இருப்பிடத்திலும் பிறவிடத்திலும் எங்குங் கண்டிலன்; குழம்பிய உள்ளத்தோடு குறுகினான் நான்முகனை. வணங்கி வாட்டத்துடன் புகன்றான் நிகழ்ந்ததை.

நான்முகன் நவின்றது

நான்முகன் சிந்தித்தான். 'குரவனை யிகழ்ந்த தீவினை கொழுந்து விட்டு வளர்ந்துளது. அதனை அருந்தும் செவ்வியுங் கிட்டியது' என வுணர்ந்து அதற்கேற்றவாறு சூழ்ந்து சொல்கிறான்:

"உன் அருமை ஆசான் வருமளவும் இடைக்காலத்திற்கு ஓராசான் வேண்டும் தானவனான துவட்டாவை அறிவாய், அவன் மகன்—முத்தலையன்—சீரிய ஒழுக்கத்தான்—விச்சுவவுருவன் என்பான் உளன். அவன் அறிவிற் சிறந்தவன். அவனைக் குருவாகக் கொள்."

விச்சுவ உருவன்—பிரம பாவம்—கழிவு

இந்திரன் அந்த அறிவுரையை ஏற்றான். விச்சுவ வுருவனை வழிபட்டுக் குருவாகக்கொண்டான்.

வேள்வித் தலைவனான இந்திரன் வேள்வியொன்று செய்ய விரும்பினான். புதிய ஆசானிடம் புகன்றான். வேள்வி தொடங்கப்பெற்றது. வஞ்சகனான தானவன் அந்த வேள்வியிலே தானவர்களுக்கு ஆக்கம் கூறி மறைகளை மொழிந்தான். அவன் கரவுச் செயலைக் கண்டான் இந்திரன்! கொதித்தான். வச்சிரப் படையாலே விச்சுவவுருவனுடைய முத் தலையையுந் துணித்தான்! அந்தோ! வாக்கும் உளமும் மாறுபட்ட வஞ்சகன் ஒழிந்தான். அவனுடைய தவ வலிமையினாலே (சோமபானஞ்செய்யுந் தலை காடையாயிற்றும்: சுரா பானஞ் செய்யுந் தலை ஊர்க் குருவியாயிற்றும்; அன்னபானஞ் செய்யுந் தலை சிச்சிலிப் பறவையாயிற்றும்!

விச்சுவ வுருவன் தானவனெனினும் ஆசானாகையாற், பிரமபாவம் விண்ணவர் தலைவனைப் பற்றியது. விண்ணவர் அதற்கும் ஒரு வழி செய்தனர். பெண்களையும், மரவகைகளையும், மண்ணையும் நீரையும் வேண்டிப் பங்கிட்டுக் கொடுத்தனர்! அவர்கள், 'இதனைப் போக்கும் வழி யாது?' என வினவினர்.

''நீரிலே நுரையாய்க் கழியும்! மண்ணிலே உவராக ஒழியும்! பெண்களுக்குப் பூப்பாகப் போகும்! மரத்திலே பயினாக வடிந்துவிடும்!''

'பழிசுமக்கும் எங்களுக்குப் பயனுண்டோ?'

'பெண்கள் கருவுயிர்க்கும் வரையிற் கணவரை மருவிக் களிக்கலாம்! மண்ணகழ்ந்த குழி தானே அடைந்து நிறையும்! நீர் இறைக்க இறைக்க ஊறும்! மரம் வெட்ட வெட்டத் தளிர்க்கும்!''

இவ்வாறு இந்திரனைப்பற்றிய பிரமபாவம் இறங்கியது!

துவட்டாவின் சேற்றம்—விருத்திரன்

மாசு நீங்கிய மணியானன் வானவர் தலைவன். விச்சுவன் மடிந்ததை அவன் தந்தை அறிந்தான். அழலென அகங் கொதித்தான். பழிவாங்கும் எண்ணத்தாற் பதைத்தான். கொடிய வேள்வி யொன்றை இயற்றினன். அவ் வேள்வியிலே செந்நிற—அழல் போன்ற—தலை மயிரும் கரும் புகையொ வடிவமும் அழல் கக்குஞ் செங்கண்களும் ஒளிபொருந்திய பிறைப்பல்லும் வாளேந்திய கையும் உடைய ஓரரக்கன் வெளிவந்தான்; திசைகள் செவிடுபட நகைத்து நின்றான்! எதனை அவன் வளர்ச்சிக் கீடாக வுரைப்பது? நன்னெறி நில்லார் வினை வளர்வது போல் வளர்ந்தான் எனலாம். துவட்டா அவனை, 'இந்திரனுயிரை வாங்குக!' என ஏவினன்.

இந்திரன் விருத்திரன் போர்—பழைய வச்சிரம் பயனற்றது

வடவை யனலென வாளரக்கன் சினந்தான். இந்திரனை அணுகினன். முகிலூர்தியும் வெள்ளானையின் மேல்—இமயத் துச்சியிலே கருஞாயிறெழுந்தாலொப்ப—அமர்ந்து எதிர்த்தான். அறமும் மறமும்போல இருவரும் பொருதனர். இந்திரன் குலிசத்தா லடித்தான்; பயன் பெற்றிலன். விருத்திரன் இருப்புலக்கையால் இந்திரன் மார்பிலே யிடித்தான். அதனல் இந்திரன் உணர்விழந்தான்! பிறகு தெளிந்தான்.

புதிய வச்சிரம்—ததீசியின் கொடை

மறுமுறையும் மலரவன் மலரடியை வணங்கி வரலாற்றை வகுத்துரைத்தான் இந்திரன். மலரவனும் இந்திரனெடு திருமாலை அடைந்து வணங்கி விளம்பி வழி வேண்டினன்.

திருமால் செப்புவார்:

"உன் வச்சிரம் மிகவும் பழையது, பகைவருயிரை வாங்கும் வலியற்றது. வேறொரு புதிய வச்சிரம் வேண்டும். அதற்கு வழி கூறுவோம். முற்காலத்திலே—நாம் பாற்கடல் கடைந்தபோது—நீங்கள் வைத்திருந்த படைகளையும் அசுரர் வைத்திருந்த படைகளையும்—நீங்கள் போரிட்டுக்கொள்ளா வண்ணம் வாங்கித் ததீசி முனிவரிடம் வைத்துச் சென்றோம்.

பலவாண்டுகள் கழிந்தன. ஒருவரும் ததீசியிடஞ் சென்று படைகளை வாங்கிச் செல்லவில்லை. அருந்தவ முனிவரான ததீசியார் தம் தவவலியால் அவற்றையெல்லாம் விழுங்கிவிட்டார். அவையெல்லாந் திரண்டு ஒன்ருகி முதுகெலும்பிலே சேர்ந்துவிட்டன. அம் முனிவர் முதுகெலும்பை வச்சிரமாகப்பெற்ருல் உன் பகைவனை ஒழிக்கலாம். அவர் அருள் வடிவினர். மருமல் வழங்குவார்."

இந்திரன் இருவரையும் வணங்கி வானவரோடு ததீசி முனிவரை யடைந்தான். வணங்கி வழிபட்டு நின்ருன். மாதவ முனிவர் மகிழ்வுடன் வரவேற்று அமரச்செய்தார்.

"உங்கள் வரவுக்கு மகிழ்கிறேன். உள்ளமும் உடலும் மெலிந்திருக்கிறீர்கள்! என்ன விளைந்தது?"

"அடிகளே! தங்களால் மறுக்கமுடியாத ஒன்றை விரும்பியே உம்பரோடு வந்தேன். அது கொடிய அவுணரைக் குலைத்து, வானவர் குடியை வாழ்விக்குந்தகையது! அது தங்கள் யாக்கையிலே சார்ந்த முதுகெலும்பே!"

என்று சிறிதுங் கூசாமற் கூறினன் குலிசபாணி. மாதவரான ததீசியின் உயிரை வாங்கி வானவரையுந் தன்னை

யும் வாழ்விக்க விரும்பிய இந்திரன் மனத்தை என்னென்பது! அம் மொழிகேட்ட முனிவரர் ஞாயிறு கண்டு மலர்ந்த தாமரை யென முகமலர்ந்தார்.

"இவ்வுடலை அன்னையுந் தந்தையும் தமது என்பர். நாயும் நரியும் தமது என்னும்; பேயும் பிணியும் தமதென்னும்; காலனே தன்னுடையதென்று காத்திருப்பான்! ஆகையால், இதனை நான் என்னுடையதென்று எண்ணுவேன்? நஞ்சைக் கக்கும் அரவின் தோலும் பறவை தங்கும் கூடும் எவ்வாறு அவற்றுக்கு வேறாகிவிடுமோ அதேபோல் ஐம்புலக்கூத்தர் ஆடும் இவ்வுடலும் நமக்கு வேறானதே! இந்தப் புன்புலா லுடம்பு உங்களுக்குத் திருவளித்து அறமும் புகழும் அடையும் எனின் அந்த நிலையையா விடுவேன்?"

இவ்வாறு கூறித் தம் யோகப் பயிற்சியாலே உயிரை உடலினின்று பிரித்து வானொளி யெய்தினர்! என்னே அவர்தம் பெருங்கொடை!

அவர் முதுகெலும்பைக் குலிசமாகச்செய்து அமரர் தச்சன் அளிக்க இந்திரன் பெற்று மகிழ்ந்தான். அதை அவன் கையிலேந்தி நின்ற தோற்றம் மின்னல் ஒளிவிடும் கருமுகில் என்னுமபடி இனிதாயிருந்தது.

வானவர் தானவர் போர் - விருத்திரன் கரவு

புதிய வச்சிரப்படை பெற்று மகிழ்வுடன் விளங்கும் இந்திரனை வானவர் சூழ்ந்து ஆரவாரித்தனர். தெய்வப் படைகளையேந்தி, அஞ்சாமல் அவுணர் படையை வளைத்தனர். விருத்திரன் படைவீரரும் வடவை யனலெனச் சீறியெதிர்த் தனர்; இடியென முழங்கினர்; சூள் கூறி வில்லையேந்தினர்; நாணொலிசெய்து, வாளி மழைபெய்து வானவரை மறைத்தனர்; குந்தங்களை, ஆழிகளை எறிந்தனர்.

வானவர் புலிக்கூட்டம்போலத் தோள் புடைத்தெழுந் தனர் வலமிடமாகச் சுழன்று குதித்தனர்; கேடகத்தையும் வாளையும் எடுத்துப் பாய்ந்தனர்; அவுணர் படையை வெட்டி வீழ்த்தினர்.

அவுணர் படையினர் செந்நீர் வெள்ளத்திலே முழுகினர்; மார்பம் பிளந்தனர். தலைகளற்றுப் புரண்டனர். கூற்றுவன் நகரடைந்து குடியாயினர். அவர்கள் தாளுங்கழலும் அற்றார்! தலையும் முடியுந் தறிந்தார்! தோளும் வீரமுந் துணிந்தார்! தும்பைத்தாரும் போரும் இழந்தார்! மார்பும் கவசமும் பிளந்தார்! உறவும் வீரமும் ஒழிந்தார்!

இங்ஙனம் அவுணர் படை அழிந்தது கண்ட விருத்திரன் காலனெனக் கனன்றெழுந்தான். இந்திரனும் எதிர்த்தான்; நெருப்புக்கணையை விடுத்தான். அவுணன் அதனைப் புனற் படையாலே மாற்றினான். காற்றுப்படையை இந்திரன் ஏவினான். விருத்திரன் அரவப்படையாலதனை அழித்தான். இவ்வாறு வலாரி விடுத்த படைகளையெல்லாம் அவுணன் மாற்றிக்கொண்டே வந்தான். தேவர் தலைவன் சினங் கொண்டு புதிய குலிசப்படையைக் கையிலேந்தினன். அதன் ஆற்றலையறிந்த அவுணன் விரைந்து கடலிலே முழுகி மறைந் தான். இந்திரனும் முழுகித் தேடித்தேடிக் காணாமல் திகைத்து வெளிவந்தான்.

நடுக்கத்துடன் நான்முகனை யடைந்து நடந்ததை நவின்றான் இந்திரன். நான்முகன் சிந்தித்துக், 'குறுமுனிவ னான அகத்தியனை அணுகிக் கூறுக!' என்றான். அவ்வாறே பொதியமலையை அடைந்து தமிழ்முனிவன் மலரடியைத் தாழ்ந்தான்.

அகத்தியர் சிறப்பு - கடல்நீர் வற்றல் - விருத்திரன் முடிவு

விந்தத்தின் மிடுக்கையடக்கிய குறுமுனிவன் அன்புடன் வரவேற்றான். 'வந்ததென்?' என்றான். இந்திரன் எல்லா வற்றையும் எடுத்துக்கூறி ஆதரிக்க வேண்டினான். செந் தமிழ்த் தந்தை சிந்தித்தான். அறிவு வடிவான சிவனாரடியை வழுத்தி, அப் பெருமானார் அழல் வடிவை அகத்திலே அமைத் தான். கடலருகிற்சென்று தன் தவவலிமையாலே கடல்நீர் சுருண்டு உளுந்தளவாகக் கையிலே வர ஏந்திப் பருகிவிட்டான். இறைவரருளைப் பெற்றார்க்கு எதுதான் இயலாது?

அலையெறிந்து பரவிநின்ற ஆழ்கடல் நீர் முற்றும், தீயவழியிற் சேர்ந்த செல்வம்போல வற்றியது. வடவையி னுடைய கண் புலப்பட்டதைப்போலச் சிவந்த மாணிக்கங்கள் ஒளிவீசின! வடவைத் தீயின் சிகைபோலப் பவளக் கொடிகள் நீண்டு இருளை விழுங்கிநின்றன! பாம்புகளின் மணிமுடிப் பரப்போ, பலவகை அணிகலப் பேழையோ என்னும்படி நவமணி களுங் குவிந்து கிடந்த கடலின் அடிப்பாகம் மகவான் செய்த வேள்விக்களம்போல இருந்தது. நீர்வற்றிய அந்த வெற்றிடத்திலே வாள் விதிர்த்தாலென மீன்கள் துள்ளின! அரவங்கள் நெளிந்தன! சங்கும் முத்தும் ஒளிவீசின! ஆமைகள் ஐந்துறுப்படக்கிக்கிடந்தன! கடலிலே சென்றுகொண்டிருந்த மரக்கலங்கள் ஒடிந்தன.

விருத்திரன் அங்கொரு மலைமுடியிலே, வானவர் செய்த தீவினையின் வடிவம்போல அமர்ந்து தவம் புரிந்திருந்தான். ஆகண்டலன் அவனைக் கண்டு தன் புதிய வச்சிரப்படையாலே தலையை வீசினன். பழம் படையாலே சிறிதும் ஊறுபடாத விருத்திரன் மெய்யைப் புதிய படை தளிரைக் கொய்வது போற் பிளந்தது. வாளவுணன் மடிந்து வீழ்ந்தான். ஆனல், இந்திரனைப் பிரமச்சாயை பற்றியது!

இந்திரன் மறைதல்—நகுடன் அற்ப வாழ்வு

அந்தப் பிரம பாவம் உம் எனும், மார்பைத் தட்டும், சினந்து எழும், அதிர்க்கும், போர்க்கும், வருக என்னும், வாய் மடிக்கும், பல்லைக் கடிக்கும், வீழும், விரைந்து ஓடும், திரும்பும், வெதும்பி அலறும், நகைக்கும், சீறும்!—இவ்வாறு ஒருநொடியும் விடாமல் அலைத்தது! என் செய்வான்? அச்சத் துடன் ஈசானன் திக்கிலே ஒரு பொய்கையிலே தாமரைத் தண்டிலே மறைந்து கொண்டான்!

வானநாடு தலைவனின்றித் தளர்ந்தது.

அக்காலத்திலே சந்திரன்மரபிலே தோன்றிய நகுடன் என்பவன் நூறு பரிவேள்வி செய்து இந்திர பதவிக்குத் தகுதி பெற்றிருந்தான். அவனை வானவ ரழைத்துவந்து முடிசூட்டி இந்திரனுக ஏற்றனர். நகுடன் இந்திராணியின் அழகிலே

மயங்கி அவளையழைத்துவர வானவரை ஏவினுன். அவர்களும் அவளிடஞ்சென்று நவின்றனர்.

கற்பிற்சிறந்த சசிதேவி அதைக்கேட்டு நடுங்கினுள். தன் குருவான வியாழனை அடைந்து கலங்கி நின்ருள். அருள் வடிவான ஆசானும், 'ஏழு முனிவரும் சுமக்கும் மாணிக்கச் சிவிகையிலே எவன் வருகின்ருனே, அவனே இந்திரன். அவனே உன் காதலன்' என்று இயம்பினர். இந்திராணியும் ஆசான் உரைத்ததை அமைவரக்கொண்டு மீண்டாள். வானவரிடம், 'எழுமுனிவருஞ் சுமக்கும் சிவிகையிலே அவரை எழுந்தருளக் கூறுக!' என்ருள்.

நகுடன் கேட்டு மகிழ்ந்தான். வழக்கம்போலத் தவத் திற் சிறந்த எழுமுனிவரும் சுமக்கும் சிவிகையிலே புறப்பட்டான். காமம் மிகுந்ததினுலே அம் முனிவர்களைச், 'சர்ப்ப! சர்ப்ப!' என்று முடுக்கினுன். 'சர்ப்ப' என்ருல் விரைந்து செல்க என்று பொருள்படும். அவன் முடுக்கலைக் கேட்ட முனிவர்களிலே முன் செல்லும் அகத்தியர் வெகுண்டு, 'சர்ப்ப! என்ற நீ சர்ப்பமாகுக!' எனச் சபித்தனர். அந்தோ! நகுடன் பாம்பாகப் போய் விட்டான்!

'அற்பரானவர்க்குச் செல்வம் அல்லது பகை வேறுண்டோ?'

பழைய இந்திரனும் ஆசானும் — பிரமபாவ நீக்கம்

புதிய இந்திரனும் போயொழிந்ததைக் கண்ட வானவர் தங்கள் ஆசானுன வியாழனை யடைந்து வேண்டினர். அவனும் அருள்கூர்ந்து பழைய மகவான் பதிவிருக்குந் தாமரைப் பொய்கையை அடைந்து கூப்பிட்டான். ஆசான் குரல் கேட்ட ஆகண்டலன் ஆவின் குரல்கேட்ட கன்றெனக் களித்து வெளிவந்து மென்மலரடியில் வீழ்ந்து வணங்கினுன். 'என்னைச் சுடும் பழி தொலைவதெவ்வாறு?' என மனவருத்தத்துடன் வினவினுன்.

'இப் பழி மண்ணுலகிலன்றி மாளாது. ஆகையால், என்னுடன் வருக!' என்ருன் வியாழன்.

> "ஈசனுக் கிழைத்த குற்றம் தேசிகன் எண்ணித் தீர்க்கும்
> தேசிகற் கிழைத்த குற்றம் குரவனே தீர்ப்ப தன்றிப்
> பேசுவ தென்ன?"

ஆகையால், வியாழனுரைப்படி விண்ணவர் சூழ ஆசானுடன் கைலைமால்வரையை அடைந்தான். அதனை வணங்கித் தெற்கு நோக்கிச் செல்லத் தொடங்கினான். கங்கை முதலான அளவற்ற தீர்த்தங்களில் முழுகினான். காசி, காஞ்சி முதலான திருப்பதிகளைச் சேவித்தான். எனினும் பழி விடவில்லை. பாம்பினால் விழுங்கப்பெற்ற திங்களைப் போல அழகு குன்றிய இந்திரன் மேலுஞ் செல்லும்பொழுது கடம்பவனம் நெருங்கியது. அப்பொழுதுதான் அவனைப் பற்றிய பிரமச் சாயை விலகியது. சுமை நீங்கியவன் போல மகிழ்ந்தான். உடன்வந்த ஆசானிடம் உரைத்தான். ஆசானும், 'இங்கு உன் பாரத்தைப் போக்கிய தூய தலமும், தீர்த்தமும் இருத்தல்வேண்டும், ஆராய்க!' என்றான். இந்திரனுந் தன்னுடன் வந்த வானவரிற் சிலரைக் கண்டு வருகவெனக் கடிதிற் செலுத்தினான்.

கடம்பவனக் காட்சி

அவர்களைச் செலுத்திய பிறகு, அக் கடம்பவனத்தின் அருகிலே சென்றுகொண்டிருந்தான். அவன் கண்ட காட்சியை யென்னென்பது? கல்லா மந்திகள் அருவியிலே படிந்து, அருவியிலே கிடைத்த மணிகளை யெடுத்துவைத்துத் தங்கள் கரிய விரல்களாலே அருவிநீர் வார்த்து, மலர் தூவிப் பழங்களை வைத்து வழிபட்டன! நீர்த்துறை யொன்றிலே யாளியும் யானையும் ஒன்றற்கொன்று நீரூட்டின! மான்கன்றுக்குப் புலி தன் பாலை யருத்தியது! பாம்புக்குட்டி வெயிலிலே கிடந்து வருந்துவதைக் கண்ட கருடன் தன் சிறகாலே நிழல் பரப்பியது! அதைக் கண்ட குரங்கொன்று, 'இப் பறவைக்கு நோய் வந்துவிட்டதோ? ஐயோ!' என்று இரங்கிச் சங்கு கொண்டு அருவிநீரை முகந்து வந்து பறவையின்மேலே தெளித்தது!

நொச்சியிலைபோன்ற தாள்களையுடைய மயில் பெடையொடு மணப்புரியும் மணவறையிலே பாம்புகள் தங்கள் முடி மாணிக்கத்தாலே விளக்கிட்டன! குயில்கள் 'ஓம்' என்று ஒலித்தன! பைங்கிளிகள் ஐந்தெழுத்தை அழகுற ஓதின! பூவைகள் மாணவரைப்போல அருகிருந்து பயின்றன!

கடம்பவனச் சிவக்கொழுந்து—இந்திரன் வழிபாடு—இறையருள்

இவ்வாறு விலங்குகளும் பறவைகளும் பகையின்றி வாழும் இயற்கையையும், அவற்றின் இறைவழிபாட்டுப் பயிற்சியையும் கண்ட இந்திரன் மெய்சிலிர்ப்ப உள்ளங் குதூகலிக்கச் செல்லும் போது, செலுத்தப்பெற்ற வானவர் வந்து வணங்கினர்.

"எவ்வுலகினும் இதுவரையிற் காணாத வியத்தகு காட்சியைக் கண்டோம். அங்கே புதையல்போல வொரு பொய்கையும் அருகிலே கடம்பின் நிழலிலே உவமையில்லாத—ஒளிவீசும்—சிவலிங்கமொன்றும் உள்ளன."

பால் பருகுவானுக்குத் தேனும் வார்த்தாற்போல வானவர் மொழிந்தது கேட்டுத் தலைமேற் குவிந்த கைகளுடன் மன மொழி மெய்கள் ஒன்றித் தன் கொடிய தீவினையைப் போக்கிய அருட்குறியின்பால் அன்பிருக்க அங்குள்ள பூம் பொய்கை யொன்றிலே நீராடி, அவர்களுடன் கடம்ப வனத்திலே நுழைந்தான். சிவக்கொழுந்தைக் கண்டான், ஆயிரங் கண்களுங் களிக்க!

"அருவாகி யுருவாகி அருவுருவங் கடந்துண்மை
யறிவா னந்த
உருவாகி அளவிறந்த வுயிராகி அவ்வுயிர்க்கோ
ருணர்வாய்ப் பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்தன் னிடையுதித்து
மடங்க நின்ற
கருவாகி மூலத்தசிவக் கொழுந்தையா யிரங்கண்ணுங்
களிப்பக் கண்டான்."

கண்டவன் விழுந்தான்; எழுந்தான்; விழிநீர் துளிக்கக் களிப்புக் கடலிலே முழுகினான். மொழி குழற உடல் குளிர அன்புருவாய் நின்றான். அருகிருந்தோரை இறைவரை வழிபட வேண்டும் பொருள்களைக் கொண்டுவர அமராவதிக்குப் போக்கினான்.

பின்னர், தெய்வத்தச்சனை யழைத்துக் கடிதிலே விமான மொன்றை அமைக்க ஏவினான். பொய்கையிலே நறுமலர்கள் உளவோ என ஓடி நோக்கினான். இலாமை கண்டு சோர்வடைந்தான். அப்போது இறையருளாலே பொற்றாமரை மலர்கள், கடலிலே காணுங் கதிரவன்போல ஒளி பரப்பிப் பூத்ததைக் கண்டான். அன்பூர ஆடினான். பொற்றாமரைப் பொய்கை யெனப் பெயரிட்டுப் போற்றினான். அப் பொய்கையிலே முழுகி, அழகிய அம் மலர்களைக் கொய்து கரையேறினான். தானே தோன்றிய சிவக் கொழுந்தினை யடைந்தான்.

அதற்கு முன்னரே, சூழவுள்ள காட்டை வெட்டி நிலந் திருத்திக் கொண்டிருந்தனர் வானவர். சிவலிங்கத்தின் மேலே கதிரவனொளி சிறிது படுவதைக் கண்டான் வச்சிரவேந்தன். பதைபதைத்துத் தன் வெண்குடையாலே நிழல்செய்ய நெஞ்சத்திலெண்ணினன். அப்போது, ஞாயிறு போல ஒரு விமானம் விண்ணிலிருந்திழிந்தது. அதனை எட்டுத் திக்கினும் எட்டுக் களிறுகளும், முப்பத்திரண்டு சிங்கங்களும், அறுபத்துநான்கு கணங்களுஞ் சுமந்தன. அவ் விமானத்தை மயன் படைத்துக் கொடுத்தான். வானவர்கோன் அதனை அணிந்தான் அரனார்க்கு.

வானுலகிற் சென்ற வானவர் ஐவகைத் தருக்களும் அளித்த பொன்னாடையும், மின்விடும் மாணிக்கப் பூண்களும், நறுமணச் சந்தனமும், கங்கை நீரும், மெனபுகையும், திருப்பள்ளித் தாமமும், விளக்கும், நறுங்கனிகளும், தேனும் திருவமுதும், ஆனைந்துங் கொண்டுவந்தனர்.

தெய்வத் தாமரைப் பொய்கையிலே நீராடித் தீவினை களைத் தீய்க்குந் திருநீறு பூசி, சைவமணியாகிய சிவகண்மணியை அணிந்துவந்த முகிலூர்தி, அன்பிலே முழுகி, அருளுருவான - பாம்பணிந்த பண்ணவரான - பசுபதியை, அவருரைத்த நூல்முறைப்படி, உண்மைக்காதல் பெருக வழிபட்டுப் பேரின்பத்திலே திளைத்தான். நிலத்திலே எட்டுறுப்பும், ஐந்துறுப்பும் படியப் பன்முறை விழுந்து, உள்ளமும் மொழியும் மெய்யும் ஒன்றுபட மெய்ம்மறந்து வணங்கினான். இன்பக்

கூத்தாடினான். ஆராத காதல் மிக, இன்பக் கண்ணீர் வடிய, அஞ்சலிசெய்து போற்றுகின்றான்:

"அங்கணரே! உண்மை மறைப்பொருளே! பாம்புக்காப் பணிந்தவரே! முழுமுதல்வரே! நெற்றிக்கண்ணரே! சிவ பரஞ்சுடரே! எங்கள் தலைவரே! ஈறில்லாதவரே! யாவற்றை யும் படைப்பவரே! யாவற்றையும் அழிப்பவரே! எப் பொருள்களுமானவரே! எப்பொருளினுந் தொடர்பிலாத வரே! எல்லாவற்றையும் அறிந்தவரே! எல்லாவற்றையும் மறந்தவரே! எவற்றினுங் கலந்தவரே! எவற்றினும் பிரிந்த வரே! இடருண்டாகப் பிணித்த இப் பழியிலிருந்து என்னை விலக்கித் தங்கள் திருவடிக்கன்பனாக்கிய அருட்கடலே! அங்கயற் கண்ணம்மை மணவாளரே! கடம்பவனத்தவரே! விண்ணிழி விமானத்தெழுந்தருளிய சுந்தர விடங்கரே! வாழ்க! வாழ்க!! வழிபாடும், வழிபாட்டுப் பொருள்களும் வழிபடும் அன்பனும், வழிபாட்டைப் பெற்று ஒழுங்கான பேற்றை அளிக்குந் தலைவரும்' யான் வழிபாடு செய்தேன் என்னும் என் நினைவின் மணமுமாக நின்ற மறைமுதலடிகளே! வாழ்க! வாழ்க!!"

இவ்வாறு வாழ்த்திய இந்திரனை அடியாரெண்ணத்தை முற்றுவிக்கும் முக்கட்பெருமானார் புன்முறுவலுடன் நோக்கி, 'நின் விருப்பம் என்ன?' என்று வினவியருளினார்.

அமரர் தலைவன் நிலமிசைவிழுந்து வணங்கி விண்ணப் பிக்கிறான்:

"இறைவரே! தங்கள் இருக்கையான கடம்பவனத் தெல்லையிலேயே, என்னைவிட்டு நீங்காது வருத்திய பழி நீங்கியது; முற்காலத்திலே அடியேன் செய்த தீவினையும் சிதறியது; அடிகளை வழிபடத் தக்கவனுமாகினேன். இதைவிடச் சிறந்த பேறும் வேண்டுமோ? ஆகவே, வேறு வேண்டிலேன். எப்போதும் இவ்வாறே தங்களை வணங்கி வழிபட்டு, அடியாருள் ஒருவனாக இருக்க விரும்புகிறேன்,"

இங்ஙனம் வேண்டி மறுமுறையும் விழுந்து வணங்கினான். முன்னவரும் அருள்கூர்ந்து செப்புகிறார்:

"வேனிற்காலத்திலே சித்திரைத் திங்களிலே முழுத்திங்கள் கூடிய சித்திரைநாளிலே ஒவ்வோராண்டும் வந்து வழிபடுவாயாக! அவ்வாறு வழிபட்டால் ஆண்டு முழுதும்—முந்நூற்றறுபத்தைந்து நாளும்—வழிபட்ட பயன் கிடைக்கும். இனி, நீ வானுலகடைந்து தூய நல்ல இன்பங்களைத் துய்த்து, மலபரிபாகம் உண்டானவுடன் நான்முகன் மால் முதலான வானவர் பெருநிலைக்காதலும் மறக்கும்படி, பேரின்பவீட்டை வழங்குவோம்."

மெய்சிலிர்க்க விண்ணவர்கோன் பன்முறை விழுந்து வணங்கினான். பன்முறை வாழ்த்தினான். இறைவரடியிணை பிரிய இயலாமல் நின்றான். ஆண்டவராணை மறுக்க அஞ்சிப் பிரியா விடைகொண்டு அமராவதியை அடைந்தான். அங்கே, தேவமங்கையர் இருமருங்குங் கவரிவீச, மந்தாரமலரையுங் கற்பகமலரையும் வானவர் வாரிவீச, இந்திராணியுடன் அரசு வீற்றிருந்து, அளவிலா இன்பத்தி லாழ்ந்து வாழ்ந்தான்.

"மூடினன் புளகப் போர்வையால் யாக்கை
முடிமிசை யஞ்சலிக் கமலஞ்
சூடினன் விழ்ந்தா னெழுந்துகண் ணருவி
துளும்பினன் பன்முறை துதிசெய்
தாடினை னைய னடிபிரி வாற்றா
தஞ்சின னவனரு ளாணை
நாடினன் பிரியா விடைகொடு துறக்க
நண்ணினன் விண்ணவர் நாதன்." (கசு)

உ, வெள்ளையானையின் வினை நீங்கியது

காசி—துருவாசர் வழிபாடு—தாமரைமலர்

கருவின் தொடர்பைப் போக்குங் காசி நகரிலே, துருவாசமுனிவர் பழைய சைவாகம முறைப்படி தம் பெயராலே சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அப்போது இறைவர் திருமுடியிலிருந்து தாமரைமலரொன்று விழுந்தது. அதைத் தம் அங்கைகளிலேந்திக் கண்களிலும் உச்சியிலும் மார்பிலும் ஒற்றி மகிழ்ந்தார். மெய்ம்முழுதும் பரவிய களிப்புடன் அங்கிருந்து கற்பகநாட்டை யடைந்தார்.

இந்திரன் உலா—துருவாசர் மகிழ்ச்சி—இந்திரன் செருக்கு —வெள்ளையானையின் மெய்ம்மறந்த பிழை

அப்போது, வெற்றிச் சங்கொலிக்க அசுரரை வென்று, வெற்றிமாலையணிந்து வெள்ளையானையின் மீதமர்ந்து இந்திரன் உலா வந்துகொண்டிருந்தான். அமரர் ஆரவாரித்தனர். மங்கலமுரசு முழங்கியது. மறையொலி மிகுந்தது. ஏந்திழை மகளிர் பல்லாண்டு பாடினர். இன்னிசை இசைத்தனர். இந்திரன் இருமருங்கினும் இளமகளிர் கவரி வீசினர். கடலலையென அமரர் வர, இடையிலே வெள்ளையானை மரக்கலமெனச் செல்ல, அதன்மீது இந்திரன் மாலுமியெனத், திங்கள் வெண்குடைநிழலிலே வருங்கோலத்தை எவ்வாறு புகழ்வது? அப்போது விண்ணாட்டவர்கள் கையுறை கொடுத்து மகவானை வாழ்த்தினர்.

இக் காட்சியைக் கண்டார் இணையற்ற துருவாசர். மகிழ்வுடன் வாழ்த்தித் தம் அங்கையிலிருந்த தாமரை மலரை அன்புடன் நீட்டினார். அந்தோ! இந்திரன் அறிவு மயங்கித் தன் செல்வச் செருக்கினாலே ஒரு கையாலே வாங்கி வெள்ளையானையின்மேல் வைத்தான். வெள்ளை யானை தன் உச்சியிலே மணங்கமழ்ந்து கிடந்த அம் மலரைத் துதிக்கையாலெடுத்து, உரலனைய காலடியில் இட்டுச் சிதைத்தது!

துருவாசர் சீற்றம் – காட்டானை யாகுக!

சீற்றமே உருவான துருவாசரோ இதனைப் பொறுப்பார்? இறைவருடைய நெற்றிக்கண்ணைப்போல அழல் சிதற நோக்கினர்! அமரர் அஞ்சி விலகினர்.

"புள்ளியையுடைய புலித்தோலாடையைப் புனைந்த—அரவை அணிந்த—வெள்ளை விடையூரும் இறைவரின் அடி மலரைச் சிந்திக்கும் மெய்யன்பர் அருவருத்துத் தள்ளிய செல்வத்தருக்குடைய இந்திரனே! என் செய்தாய்! அமரர் கையுறையை மதித்தாய்! அரவணிந்த அண்ணலார் முடி மலரை இகழ்ந்தாய்! யானை யெடுத்து மிதிக்குமாறு அதன் முடிமேல் வைத்தாய்! பேதையே!

வண்டு முரலுந் திருத்துழாயணிந்த மாலின் செருக்கும், தாமரைத் தவிசில் வீற்றிருக்கும் நான்முகன் இறுமாப்பும், வானவர் வணங்க வாழும் உன் தருக்கும்—யாவும் ஆலமுண்ட அண்ணலா ரடிமலரை வழிபட்ட பேறு என்று அறிகிலாய்!

"வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்." (கஎ)

"வணக்கமிலாத பெரும் படையையுடைய வானவனே! உன் முடி பாண்டியரிலொருவன் வளையினலே சிதறுக! நான்கு தந்தங்களும் மதமும் உடைய இந்த வெள்ளையானையும் காட்டானை யாகுக!" என்று சபித்தார். கேட்ட வானவர் நடுநடுங்கி அவர் திருவடிகளிலே விழுந்து வணங்கி, "ஐம் பொறிகளையும் வென்ற ஐயரே! எம் அரசரும் இந்த யானையுந் தீவினையாலே தவறுசெய்தனர். அடிகள் மனமிரங்கி இந்தச் சாபத்தை எம்முகம் நோக்கி மாற்றியருள வேண்டும்," என வேண்டிக் கைகுவித்து நின்றனர்.

முனிவர் சிறிது முனிவு மாறினர். "சிவபிரானுரை யிகழ்ந்த இது கழுவாயினுற் கழியாது. உங்கள் அரசனுக்குத்

தலைக்கு வந்தது முடியோடு நிற்கும். வெள்ளையானை கரிய காட்டானையாகி நூருண்டு கழித்தபின் வெள்ளையானை யாகும்!'' என்ருர்.

இவ்வாறு மாற்றித் துருவாசர் சென்ருர். தெய்வயானை தன் தெய்வத்தன்மை யிழந்து கரிய யானையாகி விண்ணி லிருந்து மண்ணுக்கு வந்து காட்டானைகளோடு கலந்து திரிந்துகொண்டிருந்தது.

கடம்பவனம் அடைதல்—வெள்ளை யானை யாகுதல்—வழிபாடு

அது, விலங்குணர்வுடன் மலைகளிலும், காடுகளிலும் அலைந்து நூருண்டுகளுங் கழித்தது. பிறகு, கடம்பவனத்தை யடைந்தது. அங்குச் சென்றவுடன் தெய்வத்தன்மையிலிருந்து விலகிய அதற்கு, முக்கட்பெருமானருள் கிடைக்குங் காலம் வந்து கூடியதாற் குளிர்ந்த பொற்ருமரைப் பொய்கையைக் கண்டது. கண்டவுடன் முன்னைய அறிவு தோன்றியது. பொற்ருமரைப் பொய்கையிலே இறங்கி நீராடியதும் முன்னைய வடிவு பெற்றது! இறைவரருளும் வந்து கூடிப் பேரின்பக் குறிப்பும் விளங்கியது. அந்திவண்ணரை வணங்கவேண்டு மென்னும் ஆர்வமும் வந்தது.

உடனே, அது துதிக்கையினுலே பொற்ருமரைப் பொய்கை நீரை முகந்து, கடம்படிப் பெருமானுரை நீராட்டியது. திருப்பள்ளித் தாமத்தைத் தெரிந்தெடுத்துச் சாத்தியது. அரவணிசடை யண்ணலாரை இவ்வாறு அது வழிபட்டது. இறைவர் மகிழ்ந்து, 'எங்கு வந்தாய்? என்னவேண்டும்?' என வினவியருளினுர்.

தெய்வ வேழம் வணங்கித் தன் செயலைச் செப்பியது. பிறகு, 'அடிகளை யடைந்த அடியேற்குக் குறையேதுமில்லை. என்பணிந்த இறைவரே! இந்த விண்ணிழி விமானத்தைச் சுமக்கும் எட்டுக்களிறுகளுடன் நானுங் கூடிச் சுமக்க விரும்புகிறேன். தங்களைப் பிரியாதிருக்க அஃதொன்றே வழி. ஆகையால், அதனை யருளல் வேண்டும்' என வேண்டியது.

இறைவர், 'விண்ணவர் தலைவன் நம் அன்பன். நீ அவனைச் சுமப்பதே எம்பால் மகிழ்வை யளிக்குஞ் செயலாகும்' என்று திருவாய்மலர்ந்தருளி, வேண்டும் பிற வரங்களும் நல்கினார்.

"இடையறு வன்பின் வேழ மிங்ஙனங் கூற விண்ணு
டுடையவ னப்பான் மெய்யன் புடையவ னவனைத் தாங்கி
அடைவதே நமக்கு வேண்டு மகமகிழ் வென்னாப் பின்னும்
விடையவன் வரங்கள் நல்கி விடைகொடுத் தருளினானே."

(உ௬)

அருள் பெற்றுச் சென்ற அயிராவதம் மேலைத்திசையிலே தன் பெயரா லொரு பொய்கையும், சிவலிங்கமும் மூத்த பிள்ளையாரும் அமைத்து வழிபட்டுக்கொண்டிருந்தது.

தானுந் தன்னன்புமாக இவ்வாறு வழிபட்டுக்கொண் டிருக்குங்கால், இந்திரன் விடுத்த தூதுவர் அதனை அழைக்க வந்தனர். வருவதாகக் கூறி அவர்களைப் போக்கிவிட்டுக் கீழ்த்திசையிலே சென்று தன் பெயரா லோரூரையும், இந்திரன் பெயராலொரு சிவலிங்கத்தையும் அமைத்து வழிபட்டுக்கொண்டிருந்தது. வெள்ளையானையின் பிரிவைப் பொருத இந்திரன் திரும்பவுந் தூதரை விடுத்தான். தன் தலைவன் அன்பை மறுக்க முடியாத வானவேழம் அமராவதியை யடைந்து இந்திரனை வணங்கித் தான் அடைந்த துன்பங்களை யும் கடம்பவனக் கண்ணுதலார் அருளையும் விளம்பி வாழ்ந்து வந்தது.

வெள்ளானையா லேற்படுத்தப்பெற்ற தீர்த்தத்தை அயிராவத தீர்த்தமென்றும், இறைவரை அயிராவதேச்சுரரென்றும், கணேசரை அயிராவதக் கணேசரென்றும், நகரை அயிராவதேச்சுர மென்றும், இந்திரன் பெயராலமையப் பெற்ற இறைவரை இந்திரேச்சுரரென்றும் உலகோர் வழங்குகின்றனர்.

———

௯. திருநகரங் கண்டது

தனஞ்சேயன்—கடம்பவன லிங்கம்

ஏழிசை பயிலும் மிடற்றினையுடைய வண்டுகளின் ரீங்காரம் நீங்காத கடம்பவனத்தின் கீழ்த்திசையிலே தென்னவர் மரபிலே குலசேகரன் என்னும் மன்னர்மன்னன் அரசு செய்திருப்பது மணவூர். அந் நகரிலே வணிகர் குடியிலே தனஞ்சேயன் என்பான் சிவனார் திருவடியன்பிலே நீங்காத நினைவினனாக இருந்தான்.

அவன் ஒருமுறை மேற்றிசைப் புலங்களுக்குச் சென்று வணிகம் புரிந்து திரும்பும்போது, கடம்பவனத்திலே வருகையிற் கதிரவன் மறைந்தான். ஆகையால் அன்றிரவு அங்கே யிருக்க இடங்காணாமல் மெலிந்தான். அப்போது, நான்கு மருப்புகளையுடைய எட்டுக் களிறுகளாலே சுமக்கப் பெற்ற இந்திரவிமானம் ஒளிவீசி விளங்குவதைக் கண்டு மகிழவுடன் அங்குச் சென்றான். கடுவடைந்த மிடற்றினரான கண்ணுதலாரைக் கண்டு மெய்சிலிர்க்க வீழ்ந்து வணங்கினான். களிப்புடன் அங்கேயே இருந்தான்.

அன்றிரவு திங்கள் கிழமையாகையால், அமரர்கள் வந்து, மலைமகள் மணாளர் மலரடி வணங்கிச் சிவராத்திரியே போல நான்கியாமங்களிலும் வழிபட்டனர். அவர்கள் வரவையும் வழிபடுவதையும், அடியார்க் கெளியரான அந்திவண்ண ரருளாலே அறிந்தான் தனஞ்செயன். களிப்புடன் இறைவர் வழிபாட்டுக்குரிய நறுமணப் பொருள்களையும் பனிநீரையும் பிறவற்றையும் அமரரிடங் கொடுத்தான். தானும் ஒரு பக்கத்திலே சிவலிங்க வழிபாடு செய்தான். நான்கு சாமங்களும் இரவும் கழிந்தன.

கதிரவன் கீழ்த்திசையிலே கதிர்வீசி யெழுந்தான். அப்போது வணிகன் அமரரைக் காணாமல் அந்திவண்ணரை மட்டும் கடம்பின் நீழலிலே இந்திர விமானத்தின் கீழ்க் கண்டான். வியப்புடன் விமலர் திருவடியிலே விழுந்து வணங்கித் தலைமிசைக் கூப்பிய கைகளுடன் வலம் வந்து அரிதிற் பிரிந்து தன் நகரைச் சார்ந்தான்.

அரசன் கனவு—காடு திருத்திக் கடிநக ரமைத்தல்

சார்ந்த வணிகன் ஓடினன் பாண்டியனிடம். "அரசே! வியப்பொன்று கண்டேன். வணிகம் புரிந்து திரும்பும்போது இரவு கடம்ப வனத்திலே தங்கினேன். கடப்பமர நீழலிலே கதிரவனென ஒளிவிடும் விமானத்தின் கீழ்ச் சிவலிங்கப் பெருமானாரை இரவும் என் பிறப்பும் விடியும் வண்ணங் கண்டு வணங்கினேன். கடவுளர் வந்து கண்ணுதலாரை இரவெலாம் வழிபட்டனர்," என்று இயம்பினன்.

பொங்குமன்பினன் புகன்றதைக் கேட்ட புரவலனுடைய தலைமிசை முக்கட்பெருமான் திருவடிகளும் கூப்பிய கைகளும் அமர்ந்தன; உள்ளத்திலே அன்பும் வியப்பும் நிரம்பின. வேறொரு செயலுமற்று விம்மிதனாயிருந்தான் மீனவன். ஞாயிறு மேலைத் திசையிலே மறைந்தது.

அன்றைய இரவிலே, அடியருடைய இருவினை யொத்த போது, மலத்தை வீட்டித் தம் மலரடியை அவர் முடிமேற் சூட்டித் தம்முருவைக் காட்டியருளுந் தொல்லைப் பரம்பொருள் சித்தர்போலக் கவுரியன் கனவிலே எழுந்தருளினர்.

"கூரியவேற் பாண்டியனே! கடம்பவனக் காட்டைத் திருத்தமாக வெட்டிச் சமப்படுத்தி அழகிய நகரொன்றைக் காண்க!" என்று கூறி மறைந்தருளினர்.

கங்குல் கழிந்தது. கவுரியனும் விழித்தான்; கதிரவனும் விழித்தான். கண்ணுதலருளைக் கருத்திருத்திய பாண்டியன் காலைக்கடன் முடித்துக் கருத்துக்கிசைந்த அமைச்சரையும் பெரியோர்களையும் வரவழைத்துக் கனவையும் வணிகனுரை யையுங் கூறி அவர்கள் அறிவுரை பெற்றுக் கடம்ப வனத்தை யடைந்தான். அமைச்சரும் படைவீரரும் அவன் பின்னே சென்றனர்.

பாண்டியன் பொற்றாமரை வாவியிலே படிந்தான். விண்ணிழி விமானத் தமர்ந்தவரை நிலமுற வணங்கியெழுந்து கைகள் தலைமிசைக்குவிய அன்புருவனாகி வாழ்த்தினன்:

"மங்கைபங்கரே! மங்கலமாகிய தனிமுதல்வரே! சங்கரரே! மறைவடிவினரே! சதாசிவமே! வானவர் தலைவரே! பசுபதியே! சரணம்! கடல்சூழ்ந்த உலகக் காதலையும், வானவர் பதவிக் காதலையும், வெறுத்தவர்க்கல்லாமல், உலகை ஆண்டு பிழையிலே படிந்து வானத்திலும் நிரயத்திலும் பிணி பட்டுச் சுழலும் பேதையராகிய எங்களுக்கு அடிகளின் அருள் கிடைக்குமோ சூள் கூறித் தொடவரும் மறையின் முடிக்கும் எட்டாது விலகி நிற்கும் திருவடிகள்? அன்பிலேமாயினும், அடியேங்களுக்கு அன்புதந்து குடிமுழுதும் பணி கொண்டு ஆளவோ இக் காட்டில் அமர்ந்தீர்கள்!"

ஊறும் அன்பு இரு கண்களினும் வழிவதைப்போல நீர் சொரியச், சிவஅன்புக் கடலிலே முழுகிக், கெடாதமெய்யன் புடன் வலம்வந்து புறத்தே வந்தான். ஒரு பக்கத்திலே அமைச்சரோடு அமர்ந்தான்.

அப்போது மாறன் ஆணையின்படி, அமைச்சராலேவப் பட்ட பணியாளர், பலதிறப்பட்ட தொழில் புரியும் தொழி லாளிகளை அழைக்கச் சென்றனர். திங்களைப் பிளந்தாற் போன்ற, கூரிய வாயையுடைய கோடரிகளைச் சுமந்த தோளினர், இறுகக்கட்டிய கச்சினர், இரும்பெனக் கரிய ஒளிவிடும் மெய்யினர், செருப்பணிந்த காலினர்—ஆகக் காடு வெட்டிகள் வந்தனர். வந்து மரங்களையும் புதர்களையும் வெட்டி ஒழுங்கு செய்தனர். இருள் கவிந்திருந்த வனத்தை எறிந்து, மெய்யுணர்ந்தோர் சிந்தையென வெளிசெய்தனர். பல வுயிர்களிடத்தும் அருளுடையராகிப் பற்றற்றுப் பரனுரடி நிழலிலே தங்கிய உண்மையடியார் பிறப்பென மரங்களின் வேரைக் களைந்தனர். மிக விரைவிலே காடு திருந்திச் சமமாகியது.

கண்ட பாண்டியன் களிப்பொடு அமைச்சரைக் கூட்டி நகரெடுக்கும் முறை யெப்படியெனச் சிந்தை செய்துகொண் டிருந்தான். அவன் சிந்தை களிக்க முன்னர்க் கனவிலே வந்தவாறே கண்ணுதலார்—மெய்யடியாரின் அன்பு தழுவிய

சேவடி நிலந்தழுவ, வெண்ணீறணி மெய்யராய், வெண்ணீற்றுப் பையுடன் விரைந்து வந்தார். கனவிலுங் காணற்கரிய பெருமானார் நனவிலும் எழுந்தருளும் பேறுபெற்ற பாண்டியன் எதிர்சென்று வணங்கி, நல்வரவு கூறி, இருக்கையி லெழுந்தருள வேண்டினன்.

வந்த சித்தர் நூல் முறைப்படி கோயிலும் மண்டபமும் கோபுரமும் நகரமும் இவ்வாறமைக்க வேண்டுமென விளக்கிக் கூறி மறைந்தார். எவ்வுயிரினும் மறைந்திருந்தே நிறைந்திருக்கும் பரமனாரடிமலர்க் கன்புபுரிந்த தென்னவன், சிவபரஞ்சுடர் செப்பியவாறு சிற்பநூலுணர்ந்தோரைக் கொண்டு திருநகர் கண்டான்.

மறைகளையோதும் தாமரை மண்டபம், பொருள் மண்டபம், மா மண்டபம், அறுகாற் பீடிகை, கூத்து மண்டபம், திருவிழா மண்டபம், வேள்விச்சாலை, மடைப்பள்ளி, சுற்றுத் தேவர் கோயில், அங்கயற்கண்ணம்மை கோயில், இறைவர் கோயில், மதில், வானில் உயர்ந்த திருக்கோபுரம், அகழி முதலானவற்றைச் சிற்பநூல் விதிப்படி யமைத்தான்.

பிறகு, ஓவியம் வனைந்த கடைத் தெருக்களும், திருவிழா மறுகுகளும், பெரிய மாடவீதிகளும், சந்திகளும், சதுக்கங்களும், பொதுமன்றங்களும், செய்குன்றுகளும், ஆடரங்குகளும், அருந்தவ ரிருக்கைகளும், அந்தணர் உறையுள்களும், அரசர் மறுகுகளும், வணிகர் தெருக்களும், வேளாளர் மனைகளும், யானைக்கூடம் குதிரைப்பந்தி தேர்ச்சாலை முதலானவையும், கழகங்களும், அறுசுவையுணவிடும் அறச்சாலைகளும் அமைத்தான்.

கிணறுகள், குளங்கள், குட்டைகள், பொய்கைகள், பூங்காக்கள், உய்யான வனங்கள், தோட்டங்கள் முதலாக நகருக்கழகுசெய்யும் எல்லாவற்றையும் இயற்றினன். தான் இருக்க வடகீழ்த் திசையிலே அரண்மனை அமைத்தான். யாவும் முடிந்த பின்னர் நகருக்குச் சாந்திசெய்ய நினைத்தான்.

சோமசுந்தரர் இதனையறிந்து, தமது பொன்மயமான சடையிலிருக்கும் வெள்ளிப்பிறையின் கலையிலிருந்து சிறிது புத்தமுதைச் சிந்தினர். அது சிவத்தின் அடியடைந்தார் சிவமயமாவது போல, நகர் முழுதும் பரவித் தன்மயமாக்கிச் சாந்தி செய்தது. அதனுல்—நகர்முழுதும் மதுரமானதனுல் —மதுராநகரெனப் பெயரிட்டனர்.

"பொன்மய மான சடைமதிக் கலையின்
புத்தமு துகுர்தன ரதுபோய்ச்
சின்மய மான தம்மடி யடைந்தார்ச்
சிவமய மாக்கிய செயல்போல்
தன்மய மாக்கி யங்நகர் முழுதுஞ்
சாந்திசெய் தது; அது மதுர
நன்மய மான தன்மையால் மதுரா
நகரென வுரைத்தனர் நாமம்.

நகரின் கீழ்திசையிலே ஐயனுர்—தென்திசையிலே ஏழு கன்னியர்—மேற்கிலே திருமால்—வடக்கே பத்திர காளி—ஆகக் காவல் நிறுவினுன்.

பின்னர், ஆகம முறைப்படி நடக்கும் முனிவர்களையும் ஆதிசைவர்களையுங் காசிப்பதியிலிருந்து குடியேற்றினுன். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைக் குடிகளையும் பலவகைத் தொழிலாளரையும் குடிவரச் செய்தான். இவ்வாறு உலகத்தின் திலகமென உரைக்கும் வகையிலே நகரை வளப்படுத்தினுன். தானும் அந்நகரையே தலைநகராக அமைத்துக்கொண்டு, சோமசுந்தரர் கோயிலிலே நித்திய—நைமித்திக—காமிய வழிபாடுகள் தவருமல் நடைபெற ஏற்பாடு செய்து, திருமாலைப்போலப் பாண்டிநாட்டைப் பண்புடன் ஆண்டுவந்தான். அவனுக்கு மலையத்துவசனென மகன்பிறந்து, கலையுணர்ந்து, அரசுக்குரியவனுன பிறகு, அவனிடம் ஆட்சியை ஒப்பித்துக் குலசேகர பாண்டியன் கொன்றைத்தார்ப் பெருமானுர் திருவடிநிழலைக் குறுகினுன்.

௪. தடாதகைப் பிராட்டியார் திரு அவதாரம்

மலயத்துவசன்—மகவு வேள்வி

மனுவின் அறத்தை விரும்பித் தன் வழியிலே அதனை நடத்தும் மலயத்துவசன் வெற்றியாகிய மணிப்பூணணிந்தவன்; அருளின் இருப்பிடம்; காட்சிக்கினியன்; வடமொழியையுந் தென்மொழியையும் மனவயலிலே வித்தி விளைத்தவன்; வேனிற் வேளெனும் மெய்யழகன்.

அவன் கதிரவன் மரபிலே சூரசேனன் மகள் காஞ்சனையென்னுங் கற்பகப் பூங்கொம்பனைய காரிகையை மணந்தான். கற்பிற்சிறந்த அவளொடு பல ஆண்டுகள் கண்ணுதலடிமலர் மறவாது அரசு புரிந்தான். நீண்டநாள்வரை மகப்பேறில்லாமையால் நெஞ்சங்குழைந்து நீடிய அறம்பல செய்தான். பயன் பெற்றானில்லை. இறுதியிலே பரிவேள்வி புரியும் நினைவுடன் வேண்டும் பொருள்களெல்லாம் அமைத்துக் கொண்டு தொடங்கினான். தொண்ணூற்றொன்பது வேள்விகளைத் தூய நிலையிலிருந்து செய்து முடித்தான்.

நூறுவேள்வி முற்றினால் இந்திரன் வாழ்வு கிடைக்கும். இதனையுணர்ந்த இந்திரன் தன் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளத்தக்க நெறி யாதெனச் சிந்தித்தான். மலயத்துவசனையடைந்து நூறாவது பரிவேள்வி செய்யாவண்ணந் தடுத்து, 'நற்பொருளை விரும்பினால் மகவேள்வியைப் புரிக' எனவுரைத்துத் தன் நாட்டைச் சார்ந்தான்.

மலயத்துவசனும் மகவினை யளிக்கும் வேள்வியொன்றை இயற்ற முடிவுசெய்தான். வேண்டும் பொருள்களை விரைவிலே அமைத்தான். தானும் தன் மனைவியுமாகத் தூயநிலையிலிருந்துகொண்டு வேள்வியை நடத்தினான். வானத்தையும் திக்குகளையும் வெள்ளாடைபோல வேள்விப்புகை மறைப்பக் குடங் குடமாக நெய்வார்த்துப் பொரி சமித்துக் களையிட்டு வானவர்க்கு இனிய அமுதை ஆகுதியாக இட்டான்.

தடாதகையார் திருத்தோற்றம்

இவ்வாறு, இறைவர் கூறிய முறைப்படி வேள்வி புரிந்து வரும்போது,

படவரவணிந்த பரமனுர் தனிக்க—இமவான் மனேவி நாணமுற — மலயத்துவசனுக்கு வலத்தோள் துடிக்க — காஞ்சனேயின் கொங்கைகள் பூரித்துப் பால் பிலிற்றி இடக் கண் ஆட—இவ்வுலகேயன்றி யேழுலகும் இன்பமடைய — சைவ முதலான தவநெறி யோங்க—அவநெறி யழுங்க— வான துந்துபியும் மறையும் முழங்க—அரமங்கையர் நடிக்க —மனமொழி மெய்களிலே வேறுபாடின்றித் தம்மையு மறியாமல் மதுரைமாநகர மக்களுக்கு மகிழ்ச்சி பொங்க— பதினெண்மொழி வழங்கும் நாடுகளிலே தமிழ்த் திருநாடு சிறக்க—அத் தமிழ் நாட்டு மூவரசருள்ளும் பாண்டியரே சிறப்புடைய—அழற்கடவுள் தான் நோற்றதன் பயனே அடைய—கொய்யுந் தளிர்போலக் கொழுந்துவிடும் தீக் குண்டத்திலே அழகிய இதழையுடைய தாமரை மலர் அப் போது மலர்ந்து மணப்பூங் கொம்பொன்று அதிலே முளைத்தது போல அன்னேயார் வெளிவந்தார். ஒளிவிடும் உச்சியை மறைத்த சிறு கொண்டை முழுத்திங்களின் களங்கம்போல விளங்க—அக் கொண்டையில் கட்டித் தொங்கவிட்ட முத்துமாலே அத் திங்களில் வழிகின்ற நிலவு போலக் காணப்பெற—இனிய குதலே யமுது மார்பிலே சிந்தியதைப்போல இளநிலவு வீசும் முத்துமாலே ஒளிவிட —இளஞாயிற்றின் ஒளியை விழுங்கிப் பவளவடம் ஒளிவீச —மெல்லிய இடையிலே சூழ்ந்த சிறு மெல்லிய ஆடையின் மேல் மேகலே ஒலிக்க—மாணிக்கக் குதம்பை காதிலே தோளேத்தொட்டு ஆட—தெள்ளிய அமுதம் போன்ற மென் மழலே மொழியுடன்—முளே யெயிறு தோன்ற—மும்முலேயுடைய மூன்று வயதுடைய பெண்ணாக—எல்லாவுயிர்களேயும் எல்லா வுலகினேயும் ஈன்ற அன்னேயார் நின்ருர்.

சிறிய தளிரடியிலே கிடந்த சிறு சிலம்புஞ் சதங்கை யும் ஒலமிட, மெலலிய நறிய தளிர்போ லசைந்து தளர் நடை நடந்து, மழலே மொழிந்து, இளநகை நகைத்துச்

சென்று, தான் பிறந்த பயனைப்பெற்ற காஞ்சனமாலையின் மடியிலே, அறநெறி நின்றோர்க்கு இம்மை மறுமைப் பயன்களை யளித்தருளும் அம்மையார் பெண்குழந்தை யானார்!

"குறுந்தளிர்மெல் லடிக்கிடந்த சிறுமணிநூ
 புரஞ்சதங்கை குழறி யேங்க
நறுந்தளிர்போ லசைந்துதளர் நடையொதுங்கி
 மழலையிள நகையுந் தோன்றப்
பிறந்தபெரும் பயன்பெறுபொன் மாலைமடி
 யிருந்தொருபெண் பிள்ளை யானாள்
அறந்தழுவு நெறிநின்றோர்க் கிகபோகம்
 வீடளிக்கு மம்மை யம்மா."

கருவுயிர்த்து வருந்தாது பெற்ற அருமை மகவைக் காஞ்சனை எடுத்தணைத்தாள்; உச்சிமோந்தாள்; சிறு கனி வாயிலே முத்தங்கொடுத்து மகிழ்ந்தாள்.

ஆதிமுதல்வருடைய விருப்பும் அறிவும் தொழிலு மாகி, உலகைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளி, அவற்றிலே கலந்திருந்துந் தம் வடிவு வேறாகி, மறையையும் உரையையுங் கடந்துநின்ற முதல்வியார் தனக்குத் திருமகளாராகித் தோன்ற மன்னவன் செய்த தவந் தான் எதுவோ? அல்லது பாண்டிநாடு செய்த தவ மென்னவோ?

பாண்டியன் வருத்தம்—வான்மொழி—திருமகவு விழா

வஞ்ச நெறியிற் செல்லும் பொறிகளுக் கெட்டாமல்—கரணங்களைக் கடந்து—இன்பவெள்ளப் பரஞான வடிவம் பெற்ற இறைவியார் தன் அன்பிற்காக வெளிவந்து பெண் மகவாகத் தோன்றிய அருளையும் தன் மனையாட்டி செய்த தவப்பயனையும் அறியாமற் பாண்டியன் வருந்தினான்! என்னே பேதைமை!

"நான் மகவின்றிப் பலநாள்கள் வருந்தினேன். அருந் தவம் புரிந்தேன். மைந்தன் கிடைப்பானென இந்த வேள்வியும் இயற்றினேன். அந்தோ! அந்த வேள்வி

ஒரு பெண்ணைத் தந்தது! அப் பெண்ணும் மும்முலையுடன் பகைவர் நகைக்கத் தோன்றியுள்ளது! என்னே இது?''

மன்னவன் வருத்தத்தைப் போக்க வான்மொழி யெழுந்தது:

''பாண்டிய! உன் திருமகளுக்கு மைந்தர்க்குச் செய்யுஞ் சடங்குபோன்ற சடங்கே செய்க! தடாதகையெனப் பெய ரிடுக! இப் பெண்ணுக்குக் கணவன் வரும்போது இயற்கைக்கு மாருன மூன்ருவது கொங்கை மறையும்! மனம் வருந் தாதே!''

அந்த இனிய வான்மொழி பாண்டியன் செவி நிரம்பியது! அன்பும் உவகையும் உள்ளம் நிரம்பின! மனமொழி மெய்கள் ஒன்றி விழியிலே நீர் நிரம்பியது! கண்ணுதலைப் போற்றினன். எழுந்து மனைவியோடு வேள்விச்சாலையை விட்டு, மங்கல மொலிக்க அரண்மனை சேர்ந்தான்.

அவ்வாறு வரும்வேந்தனையும் அரசியையும் தடா தகைப்பிராட்டியாராகிய மகவையும் மங்கலப் பொருள்க ளோடு மங்கையர்கள் மகிழ்வுடன் எதிர் கொண்டனர். அரசன் அவையை அடைந்தான். யாவருக்கும் பொன்னை மழைபோல வழங்கினன். பிறைமுடியார் திருக்கோயிலுக்குப் பலவகைச் சிறப்பும் பண்புற அளித்தான்.

பிறகு, முரசறையும் வள்ளுவனைக் கூப்பிட்டுச், ''சிறை விடுக! சிறைக்கோட்டத்தைத் திறந்திடுக! ஏழாண்டு வரை யில் இறைவிடுக! சிற்றரசர் திறைவிடுக! சுங்க வரிகளை நீக்குக! அறச்சாலைகளையும் ஆலயங்களையும் மேலும் பல நிறுவுக!'' என்று முரசறைய ஆணையிட்டான்.

சிறையிலிருந்த வேந்தர்களைத் தளைநீக்கி யழைத்துக் களிறும் புரியுந் தேருங் காலாளும் முறைப்படி யளித்து, உரிமையும் நல்கிப் போக்கினன்; பண்டாரத்தைத் திறந்து விட்டு, பொன்னுடையும் மணிப்பூண்களும் எல் லோரையும் வந்து வாரிக்கொண்டு செல்கவெனக் கட்டளை யிட்டான். தூய மரபிலே வந்த பெருமங்கலக் கவிகளுக்குப்

பெருநிதியும் ஆடையும் அணிகலன்களும் களிறும் பரியுந் தேரும் நல்கினன். அரசர்தெருக் களிதூங்க நறுமணப் பொடியும் எண்ணெயும் குளிப்பதற்களித்தான்.

இவ்வாறு நகரங் களிக்க, வான்மொழி யுரைத்தவாறே பிறப்புவிழாவைச் சிறப்பாக நடத்தித் தடாதகை யெனத் திருப்பெயரிட்டழைத்தான் காஞ்சனை, மறையாலும் உணர முடியாத முதல்வியாரை மேனைபோலத் தழுவி வளர்த்தாள். மலயத்துவசனும் மலையரசன்போல மகிழ்ந்தான்.

பிராட்டியார் பேதைப் பருவம்

தடாதகையம்மையார் தம்மையொத்த திருந்தா மழலைச் சிறுமியரொடு கூடிச் சிற்றிலிழைத்தார்! மணற்சோறு சமைத்தார்! வரையமர்ந்த இளஞ்சேயும் வாய்வைத் தருந்தாத மார்பிலே பாவை வாய்பொருந்தப் பாலூட்டினர்! தோழியர் மகிழக் கழங்கும் அம்மனையும் பந்தும் விளையாடினர்! நம்முடைய பாசத்தைப் போக்க, வினைக்கயிற்றால் மேலும் கீழுமாக ஊசலாட்டும் அன்னையார்தாமும் ஊசலாடினர்!

இவ்வாறு ஐவகைத் தாயருக்கும் தோழிகட்கும் மகிழ்ச்சி யூட்டி விளையாடித், தந்தை மகிழ, நான்மறைகளையும் அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுத் தெளிந்தார். அந்த மறைகளையுங் கலைகளையும் மேகலையாக அணிந்த அன்னையார் அவற்றைக் கற்றதனோடு அமையாமல், அரசர்க் குரிய களிறு பரி தேர் நடாத்து திறமையும் வில் வாள் வேல் முதலாம் படைக்கலையும் பெற்றார்.

திருமுடிசூட்டுவிழா

இளமையை விழுங்கிய முதுமையாலே தளர்ந்த மலயத் துவசன் தன் திருமகளார் திறமையையும் ஆட்சிக்குரிய பருவத்தையுங் கண்டு மகிழ்ந்து திருமுடிசூட்ட விழைந் தான்.

திருமுடிசூட்டும் நன்னாளைக் குறிப்பித்துத் திக்கெலாந் திருமுகஞ் செலுத்தினன். பல நாட்டரசரும் வந்தனர்.

சுமதி யெனும் அமைச்சன் மதுரைமாநகரை அணிசெய்து, மற்றும் வேண்டும் பொருள்களையெல்லாம் வளம்பெற அமைத்தான்.

சான்றோர்கள் மங்கல இயங்களுடன் சென்று களிற்றின் முதுகிலே கொண்டுவந்த கங்கை முதலாம் நன்னீர்களைப் பொற்குடங்களிலே நிரப்பி வணங்கி, வானவர்களுக்கு வேள்வியிலே அவியளித்துப், பொன்னாலமைத்த அரியணையைக் கும்பிட்டுத் தெய்வதத்தை ஏத்தினர். திருமுடியை யானையின்மீது வைத்து நகர்வலஞ் செய்து கொணர்ந்து பூசித்தனர்.

தடாதகைப்பிராட்டியாரை, மாணிக்கத்தாற் சுடிகை யிழைத்து, உயர்ந்த பொன்னாற் செய்யப்பெற்ற ஐந்துதலைப் பாம்பு படம்பரப்பி மேலே கவிழ்ந்திருக்கும் அரியணையின் மீது அமர்த்திப் பொற்குட நன்னீராட்டினார்கள். பிறகு, வானவர் மந்தாரமலரை மழையெனப் பொழிய, உயர்ந்த முனிவர்கள் ஆக்கங் கூற, தெய்வப்பெண்கள் ஆட, முனிவர் மனைவியர் பல்லாண்டு கூற, மறை முழங்க, மங்கல இயங்கள் முழங்க மாணிக்கத்தாலான திருமுடியை மலயத்துவசன் சூட்டினான்; அரசர் பணியுந் தன் உரிமையை அளித்தான். அம்மையார் அழலிலே தோன்றியகாலத்தில் வான்மொழி கேட்டபோதுண்டான மகிழ்ச்சியினும் அம்மையாரின் அரசுக் கோலத்தைக் கண்டு அளவிலா மகிழ்வடைந்தான்.

பாண்டியன் வான்நாடு பூண்டதும், தடாதகைப்பிராட்டியார் மண்ணாடு ஆண்டதும்

சிலநாள்கள் கழித்துக் கொற்றவை மகிழத் தன் தோளிற் சுமந்த மண்ணாட்டைத் தன் மகளார் தோளிற் சுமத்தி வானாடு புகுந்தான் பாண்டியன். அம்மையார் தம் தந்தைக்குச் செய்யவேண்டிய ஈற்றுக் கடன்களை முறைப்படி முடித்தார். தம் ஒற்றைக் குடையின் கீழே நாடெல்லாம் வறுமையின்றி வாழ ஆண்டார். உண்மை மறையாய், மறையின் பொருளாய், அப்பொருளின் முடிவாய்த், தேனின்

சுவைபோலவும் பூவின் மணம்போலவும் பரமனாரைப் பிரியா திருக்கும் எம்பிராட்டியார் ஆட்சியைப்பற்றி கூறுவதெப்படி?

வைகறையிலே இனிய மங்கலப் பாடல்கள் அம்மை யாரைத் துயிலுணர்த்தும். கதிரவன் விழிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழுவார். நறுமண நீராடுவார்; அரச மரபுக்குத் தக்கவாறு காலைக்கடன், கொடை, கடவுள்வழி பாடு முதலானவற்றை முடிப்பார். அறிஞர் சூழ்ந்துவரச் சிவபிரானார் திருக்கோயிலைச் சேர்ந்து கடம்படியிலே முளைத்த முக்கட்கரும்பை—மறைவண்டிசைக்கும் கறை மிடற்றுததேனை —முறைப்படி வணங்குவார். தம் அரண்மனையை அடைந்து, பேரவையைப் பொருந்தி, ஆறு அரிமாக்கள் சுமந்த—மலர் பரப்பிய—மாணிக்க இருக்கையிலே அமுதினாலாக்கிய அழகிய ஓவியம்போல் அமர்வார்.

கயிலையிலே தமக்குத் தொண்டுபுரிந்த அனிந்திதை, கமலினி யென்னு மிருவரும் பார்மடந்தையராக வந்து அடைப்பையும் பொற்காளாஞ்சியும் ஏந்துவர். தாமரைத் தவிசிலிருக்கும் திருமகளும் கலைமகளும் இருபுறமும் நின்று கவரி வீசுவர். காவிரிநாட்டுக் காவலனும், மலைநாட்டு மன்னனும், பிற அரசரும்—வேடர் தலைவரான கண்ணப்ப நாயனார் தம் முடியிலே சுமந்துவந்து காளத்தியப்பருக்குச் சாத்தும் மலர்போல—முடியிலே அணிந்த மாலை அம்மையாரின் திருவடியிலேபட வணங்கிப் பணிகேட்பார். கூரிய வாளும் மார்புறக்கட்டிய கைகளுமாகப் பணிசெய்வோர் அருகிருப்பர். அம்மையார் திருநோக்கம் படுமேல் அங்கை குவித்து உய்ந் தோம் என்று பணிசெய்வர். கஞ்சுகமணிந்த பணியாளர், அவையில் வந்திருக்கும் அரசரை, ‘இவன் மராடர் மன்னன், அவன் கருநாடர் காவலன், இவன் விராடர் வேந்தன், இவன் குருநாடர் கோ, அவன் சேரன், இவன் சோழன்’, எனக் கோலாற் சுட்டிக் காட்டுவர்.

செந்தமிழ்ப் புலவர், வட.மொழி வாணர், மறை யுணர்ந்த மாதவர், அறுபத்துநான்கு கலைகளையுங் கற்றவர், அறுவகைச் சமயத்தையும் அறிந்தோர், துறவிகள், சைவ முனிவர்,

மாயையை வென்ற வீரர்கள், தெளிந்த முதியவர், காலக்கணிகர், சூழ்ச்சியிற் சிறந்த - சுமதியைத் தலைமை யாகக்கொண்ட அமைச்சர்கள் ஆகியோர் சூழ்ந்திருப்பர்.

கற்றறிந்தோர்க்கு முற்றூட்டும், கடவுட்கோயிலுக்கு வழிபாட்டுப் பொருளும், பிற அறங்களும், குடிகள் நிலையும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என அமைச்சராலும் ஒற்றராலும் உணர்ந்து, குறையிருந்தால் ஒறுத்து அடக்குவார்.

பெயரளவாலும் இலக்கண அமைதியாலும் ஆராய்ச்சி யாலும் உள்ள நூற்பொருள்களை வாதிக்கும் வாதிகளின் திறமையான மறுப்புகளைக் கேட்டு மகிழ்வார். திருமால் முதலான வானவர்கள் வருந்திக் கைவலியாற் கடைந் தெடுத்த கடலமுதின் சுவையனைத்தையும் எடுத்துப் பொய்ம்மையின்றியாராய்ந்த புலவர்கள் தம் நாவினால் விளை வித்த செய்யுள்களிலே பெய்து ஊட்டத் தம் திருச்செவி தெவிட்டப் பருகுவார்.

நான்மறையாளர், துறவிகள், சைவர்கள் முதலானோர்க்கு இனிய வானமுதும் வெறுக்கும்படி பாகநூற் புலவர்கள் சமைத்த அறுசுவை கலந்த - முல்லையரும்பனைய - முனைமுறி யாத அடிசிலை உண்பித்து நாவிருந்து செய்வார்.

உச்சிப்போது கடக்கும் அளவிலே மறைநூல் வல்லோர் பதினெண் புராணங்களைக் கூறக்கேட்டும், மனுநெறி முதலான நூல்களைக் கேட்டும் மகிழ்வார். பிறகு, வறுமையிலே கல்வி போலப் புலப்படாத மெல்லிய இடையையுடைய நாட்டிய மகளிர்—கலைகளுக்கு உரை விரிப்பவர் போல—பொறி நூல் வல்லோன் ஆட்டும் பாவைபோல—ஆடும் ஆட்டத்திலும், இனிய பாடலிலும் கருத்தைச் செலுத்துவார். முன்னோ ரியற்றிய அறங்களையும் பிறவற்றையும் வேள்விகளையும் ஒழுங்குற நடத்தப் பொருள் வழங்குவார். கல்வியுஞ் செல்வ மும் இரு கண்களாக நாட்டில் வளர வளர்ப்பார்.

இவ்வாறு தடாதகைப் பிராட்டியார் அரசியல் நடத்தினர். ஒப்பற்ற—முதலும் முடிவுமில்லாத—தனித்தலைவியார் தம் சக்தி பெற்ற மூவராலே முத்தொழில் நடாத்துவாரென்பதும் பெரும் புகழ் அன்றெனின், அவ்வம்மையார் பாண்டியன் மகளாகி மனுமுறைப்படி பாண்டிநாட்டைக் காப்பார் என்று கூறவுன்னுதல் பேதைமையினும் பேதைமை யன்றோ ?

தடாதகைப் பிராட்டியார் கன்னிப் பருவத்திலே முடி சூட்டிக்கொண்டு ஆண்டதனாலே பாண்டிநாடு கன்னிநாடெனப் பெயர்பெற்றது.

இவ்வாறு உமையம்மையார் அவதரித்துப் புவியாண்டார் என்று அகத்தியர் கூறியதைக் கேட்ட முனிவர்கள், "நான்மறையு முடியுந் தீண்டுதற்கரிய பொருளான அன்னையார் அன்பிற் சிறந்த தக்கனும் இமயத்தரசனுஞ் செய்த தவத்திற் கிரங்கி மதலையாக வந்தார். அவர்கள் அமரர்கள். பாண்டியனோ மண்ணுலக மன்னன். அவனுக்கு அம்மையார் மகளாக வந்த வரலாறென்னவோ ?" என்று பணிவுடன் வினவினர். குறு முனிவர் கூறுகிறார் :

காஞ்சனையின் தவம்

விச்சுவாவசு வென்னும் விஞ்சைய னொருவனுக்கு விச்சாவதி யென்னும் மகளொருத்தி யிருந்தாள். அவள் உள்ளம் அம்பிகையை வழிபட்டு வந்தது. ஒருநாள் அவள் தன் தந்தையை வணங்கி, 'நான் அம்பிகையை அன்பொடு வழிபட்டு வாழ்வடையவேண்டும்.' என்றாள். அவன் அம்பிகையை வழிபடும் முறையைக் கற்பித்தான். அவள் மகிழ்ந்து, 'இறைவியை வழிபடச் சிறந்த இடம் எது ?' என்று வினவினாள்.

"துவாதச முடிவானது—வேள்வித்துறையிற் சிறந்தோர் வாழ்வது—உலகிற் சிவபுரமானது—அறுபத்து நான்கு சத்தி பீடங்களின் முதன்மையானது—மாடங்கள் நிறைந்த மதுரைமா நகராகும். அந்நகரிலே இரவும் பகலுங் கதவடைப்பின்றித் தேவர்கள் வழிபடுவார்கள். என் தந்தையாகிய பஞ்சசுவரனும்,

இயக்கன், வித்தியாதரன், வசுபூரணன், சுவச்சவித்திரன் என்போரும் வழிபட்டுப் பல நன்மைகள் பெற்றனர். எம்மையும் எல்லோரையும் ஈன்ற அங்கயற்கண்ணம்மையார் அன்புடன் வழிபடுவோர்க்கெல்லாம் இம்மை மறுமைகளை யெண்ணியவாறு பெற நல்லருள் புரிந்து வீற்றிருக்கின்றார்.''

இவ்வாறு இயம்பிய தந்தையை வணங்கி விடைபெற்று மலர்க்கொடிபோல மதுரையை யடைந்தாள். இளம்பிடியெனப் பொற்றாமரைப் பொய்கையிலே முழுகினாள். பொன்மலையிற் படர்ந்த கொடியை வணங்கினாள். தைத்திங்களை முதலாகக் கொண்டு நோன்பிழைக்கத் தொடங்கினாள்.

"அண்டக் குவைவெண் மணற்சிறுசோ
றாக்கித் தனியே விளையாடும்
கொண்டற் கோதாய்! படியெழுத
லாகா வுருவக் கோகிலமே!
கோண்டற் குடுமி யிமயவரை
அருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும்
விளையாட் டயரும் வனப்பென்னே!"

"வேத முடிமே லானந்த
வுருவாய் நிறைந்து விளையாடும்
மாத ரரசே! முத்தநகை
மானே! இமய மடமயிலே!
மாத ரிமவான் தேவி மணி
வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து
விளையாட் டயரும் பரிசென்னே!''

யாழ் போன்ற இனிய மொழியாலே இவ்வாறு பாடி யேத்தினாள். அன்பு நிறைந்த உண்மையுள்ளத்திலே அகப்படும் அங்கயற்கண் அம்மையார் சுட்டியணிந்த மெல்லிய குழலுடன் மூன்றாண்டு நிறைந்த இளங்குதலைக் குழவியாகி விச்சாவதியின்முன் வந்து நின்றார். விச்சாவதி வணங்கிக்

கைகுவித்து நின்ருள். அம்மையார், 'யாது வேண்டினை?' என்ருர்.

"எப்போதும் தங்கள் திருவடிமலரிலே நீங்காத பேரன்பு வேண்டும்."

"நன்று! வேறு வேண்டுவதில்லையா?"

விச்சாவதியின் மெய்சிலிர்க்க நாக்குழற, "இந்த இளந் திருக்கோலத்துடன் எளியேற்கு மகவாக வந்து அருள் சுரந் திருக்கவேண்டும்," என்று வேண்டினுள். என்னே அவள் செய்த பேறு!

அம்மையார் முறுவலுடன், "நல்லது! பாண்டியமன்னரிலே மலயத்துவச னென்ெருருவன் பிறப்பான். நீ அவன் மனைவி யாக வருவாய். அப்போது உன் தவமகவாக வருவோம்," என்றருளினுர்.

இதுவே காஞ்சனை முற்பிறப்பிலே இயற்றிய நோன்பு.

"ஒப்புரு முதலீ றில்லா வொருத்திதன் சத்தி பெற்ற
முப்பெருந் தேவ ராலே முத்தொழில் நடாத்து மென்று
செப்பலும் புகழன் றென்னிற் றென்னவன் கன்னி யாகி
இப்புவி மனுவிற் காக்கு மென்பதென் பேதை மைத்தே. (சுo)

இறைஞ்சியஞ் சலித்தாள் தன்னையெம் அன்னை
யாதுவேண் டினையென என்றும்
நிறைந்தபே ரன்பு நின்னடிப் போதில்
நீங்கலா நிலைமைதந் தருளென்
றறைந்தன ளின்னும் வேண்டுவ தேதென்
றருளவிம் மகவுரு வாகிச்
சிறந்துவந் தென்பா லருள்சுரந் திருக்கத்
திருவுளஞ் செய்யெனப் பணிந்தாள்." (அo)

௫. திருமணம்

திக்கு வெற்றி

ஞாயிறு தன் கதிராலே உலகிருளை யொதுக்கக், குடையாகிய வெண்மதி தன் குளிர்ந்த நிலவாலே நிழலைச் செய்யப் பெரிய நிலவுலகையெல்லாம் மனுமுறை தவருமல் தடாதகைப் பிராட்டியார் அரசாட்சி செய்து வருகையில், அம்மையாருக்குத் திருமணப்பருவம் வந்தடுத்தது. அப்போது காஞ்சனமாலையாகிய அன்னை தன் திருமகளாரைப் பார்த்து, ''வளையும் வண்ணம் பூத்த பூங்கொம்பு போன்ற நீ இன்னுந் திருமணமின்றி யிருப்பது வருத்தமாயிருக்கிறது,'' என்ருள்.

தம் அன்னையின் கவலைகண்டு, ''அன்னையே! நீ நினைந்தவாறு ஆம் பொழுது ஆகும். ஆகவே, கவலை கொள்ளாதே! நான் திக்குகளையெல்லாம் வென்று வருவேன்,'' என்று கூறினுர் இமயப்பூங்கொம்பார்.

அரசியாரின் திருவுளக் கருத்தை யுணர்ந்த சுமதி முதலாகிய அமைச்சரும் பிற அரசரும் போர்க்கோலம் பூண்டெழுந்தனர். நால்வகைப் படைகளும் திரண்டன. தேர் வலவன் தேரைக் கொணர்ந்தான். உலகின் துன்பமகல வந்த அம்மையார் தேரிலேறினர். அவரைச் சூழத் தளிர்க்கைகளிலே வேலும் வாளும் வில்லுமேந்தி அரிவையர் படை மொய்த்தது.

தடாரி, பேரி, முருடு, மொந்தை, உடுக்கை, தக்கை, படகம், பம்பை, முழவம், தட்டை, சின்னம், தாரை, எக்காளம், தாளம் முதலானவை முழங்கின. வானளாவிய தேர்களும், குருதிக் கொம்பினையுடைய களிறுகளும், கடலலைபோன்று வரிசையாகிய பரிகளும், காலினுங் கடிது செல்லும் காலாட்களும் அளவின்றி யாரவாரித்தன.

எண்ணைப்புதைத்த நால்வகைப் படையும் மண்ணைப் புதைத்தன. பதாகையும், மாலையும், பீலியும், கவிகையும் விண்ணைப் புதைத்தன! எழுந்த புழுதி கதிரவன் கண்ணைப் புதைத்தது! ஆரவாரமோ கடலொலியைப் புதைத்தது.

தேர்கள் மரக்கலமாகச் செல்லவும், குதிரைத்திரள் அலை யாகத் துள்ளவும், முரசுகள் ஒலியாக ஒலிக்கவும், வாட்படைகள் மீன்களாகப் பிறழவும், கவரிகள் நுரைகளாக மிதக்கவும், யானைகள் முகில்களாகப் படியவும் அம்மையாருடைய படைக் கடல் சென்றது.

அம்மையாருடைய தேர் மருங்கிலே பெண்கள் வீசுங் கவரிகள் புரண்டன. பெரியாருடைய வாழ்த்துகள் நிறைந்தன. அமுதம்போன்ற இசைகள் எழுந்து இயங்கின. அம்பிகையின் தேரிலே மீனக்கொடி பறந்தது. அதைச்சார்ந்து புலிக் கொடியும் விற்கொடியும் பறந்தன. திங்கள், "அம்மையே! மறைகள் பல முகமாகவும் ஏத்தி இயலாமல் தடுமாறிச் சோர் வடையும் பரம்பரையாகிய தாங்கள் எங்கள் மரபிலுதித்த அரசன் மகளாய்ப் பிறந்து, உலகின் குறையை யொழிக்கத் துணிந்தீர்கள். அவ்வாறே, அடியனேன் களங்கமாகிய குறையையுந் தீர்த்தருளல் வேண்டும்" என்று வேண்டிக் கொள்ள வந்ததுபோல வெண்கவிகை நிழற்றியது.

சுமதி, அம்மையார் தேருக்கருகிலே, மற்றொரு பெரிய தேரிலே அமர்ந்து, அவர் குறிப்பறிந்து பிரம்பினாலே நாற் பெரும் படைகளையுஞ் செலுத்திக்கொண்டு சென்றான். நால் வகைப் படைகளும் அளவிலடங்காமல் மண்ணுலகமேயன்றி வானவருலகங்களும் இடங்கொண்டு செல்லும் கெடாத வலிமையுடன் மன்னர் செல்வங்களையெல்லாம் கவரச் சென்றன.

கயபதி, துரகபதி, நரபதி முதலான வடநாட்டரசர்களை வென்று களிறு, புரவி, தேர், மாதர் கூட்டத்துடன் திறையை யும் பெற்றுத் திக்குகளின் மேலே நோக்கத்தைச் செலுத்தினார் தடாதகை அம்மையார். இந்திரன் எதிர்த்துத் தோல்வி யடைந்தான். அங்கும் மாதர் கூட்டத்தையும் வெள்ளை யானை யையும் வெள்ளைப் புரவியையும் காமதேனுவையும் சிந்தா மணியையும் தெய்வத்தருக்களையும் திறையாகப் பெற்றார். இவ்வாறே பிற திசைக் காவலரையும் வென்று திறைகொண்டு கயிலையை நோக்கிச் சென்றார்.

கயிலையிற் கண்ணுதல் காட்சி

ஊழிதோறும் ஓங்கும் ஓங்கலான திருக்கயிலை, "மலை மகளார் நம்மை நீத்துச் சென்றார்; திரும்பவும் வந்தார்," என்று அருவியாகிய கண்ணீரை வடித்து, அந்த அருவி யொலியாலே 'அன்னையே, வருக!' என அழைத்து வெள் ளொளியாகிய நகைப்பினாலே வரவேற்றது.

"வானார் கயிலை மலையான்மகள் தன்னை நீத்துப்
போனாள்வந் தாளென் றருவிக்கட் புனலுக் கண்ணீர்
ஆனா வொலியால், 'அன்னைவா' என் றழைஇத்தன் நேசு
தானும் நகையால் தழீஇயெதி ரேற்பச் சென்றாள்."

அம்மையாருடைய படை கயிலை மலையை வளைத்துக் கொண்டது. திருமலைக்காவலர் ஓடி நந்தியெம்பெருமானை வணங்கிக் கூறினர். அவர் சிவபெருமானார் திருவுளக் கருத்தை யுணர்ந்து சிவகணங்களைச் செலுத்தினார்.

இருபடைகளும் எதிர்த்தன. சூலம், மழு, தோமரம், சக்கரம், பிண்டி, பாலம், கழுக்கடை, வாள், தண்டம், நாஞ்சில், வேல் ஆதிய படைகளை வீசிக் கடல்போல ஆரவாரித்தனர் வீரர்கள். எறியும் படைகளும் வீசும் படைகளும் எய்யும் படைகளும் முதலான பலவகைப் படைகளிற் சில செந்நீரிலே மூழ்கிப் பறிந்து போயின! சில தவறிப் போயின! சில தாக்கி முறிந்தன. இவை மூடருக்கு அவர்களின் வினைப்பயனைப் போன்றன!

இருதிறத்தாரும் திங்கட் படையும், கதிரவன்படையும் தீப்படையும், வருணன் படையும், நரமடங்கற் படையும், சிம்புள் படையும், வாயுப் படையும் அரவப்படையும் ஆக மாறி மாறி விட்டனர்.

அப்பொழுது. நந்தியின் படைவீரர்கள் கையிலேந்திய படைகளைத் தடாதகைப் பிராட்டியார் தம் கணைகளாலே தடுத்து நின்றார். நந்திப்படைஞர் தம் கைப்படைகள் கெட்டதினாலே கற்களை யெடுத்து எறிந்தனர். எம்பிராட்டியார் அவற்றைப் பொய்ம்மனத்தார் தவம்போல மாயும்படி வச்சிர வேலினாலே

தடுத்தார். பிறகு கதையினாலே அவர்களை அடித்தார். கணத்தலைவர்கள் சோர்ந்து நின்றனர். உலகங்களையும் உலகங்களிலுள்ள அசையும் பொருள்களையும் அசையாப் பொருள்களையும் தாமே ஆக்கிக்கொண்டு, எங்கும் பரவிய அம்மையார் வலிமை நம் சொல்லுக்கடங்குமோ ?

அவர்கள் நிலையை உணர்ந்த நந்தியண்ணலார் சிவனாரடியிற் சென்று வணங்கி நடந்தவற்றை நவின்றார். நீர் தாங்கிய நெடுஞ்சடையண்ணலார்—அறமாகிய விடையூர்தியார்—மாமேருவில்லார் - தெய்வப்படையார் - புன்னகை செய்து போர் புரியப் பாருக்கெழுந்தருளினர்.

அங்கே சிவகணத்தலைவரை யெல்லாம் வென்று இனி யெவரெதிர்ப்பினும் இமைப்பில் வெல்வேனென்று பெண் சிங்கம் போல நின்ற அம்மையார் திருவுருவத்தையும் அவர் சேவகத்தையும் அண்ணலார் கண்டார். அம்மையாரும் இறைவருடைய ஒற்றை வீரக்கழலணிந்த திருவடியையும், பாம்பினாலே கட்டப்பட்ட புலித்தோலையும், வெற்றி மழுவணிந்த திருக்கையையும், திருவெண்ணீறணிந்த திருமேனியையும், நூலணி மார்பையும், கற்றைச் சடையையும், தம்மையே நோக்கிய அருள் நோக்கையும் பெற்ற தம் வலப்பாதியைக் கண்டார்.

"ஒற்றை வார்கழற் சரணமும் பாம்பசைத்
   துடுத்தவெம் புலித்தோலும்
கொற்ற வாண்மழுக் கரமும்வெண் ணீறணி
   கோலமுந் நூன்மார்பும்
கற்றை வேணியும் தன்னையே நோக்கிய
   கருணைசெய் திருநோக்கும்
பெற்ற தன்வலப் பாதியைத் தடாதகைப்
   பிராட்டியு மெதிர்கண்டார்."

கண்ட அளவிலே அன்னையாரின் ஒரு முலை மறைந்தது. கருத்திலே நாணம் மடம் அச்சம் பூத்தன. வளைய மலர்ந்த பூங்கொடிபோல இடை நுடங்கத் தலை சாய்த்து நின்றார். பழைய காதல் வந்து உள்ளத்திலே குடிகொண்டது. கருங்

குழல் பிடரிலே தாழ்ந்தது. கண்கள் புறவடியை நோக்கின. கால் விரல் மண்ணைக் கிளறியது.

அப்போது அன்பு—அம்மையார் அழலிலே தோன்றிய போது—வான்மொழி வழங்கியதை உணர்ந்திருந்த சுமதி மகிழ்ந்து, "அன்னையே! இந்தக் கொன்றைச் சடைக்குழகரே தங்கள் திருமணவாளர்," என்று வணங்கிக் கூறினன்.

சிவபரஞ்சுடர், "நீ எப்போது திக்குவெற்றிக்குப் புறப் பட்டனையோ அப்போதே யாமும் நம் பழைமையான மதுரையை விட்டு உன்னைத் தொடர்ந்து வந்தோம். வருகின்ற சோம வாரத்திலே நல்லோரையிலே மறைவழியிலே திருமணம் புரிய வருவோம். நீ உன் நகர்க்குச் செல்க," என்றருளினர். அம்மையார், இவ்வாறு கூறியருளிய தலைவர்மேல் அன்பையும் உயிரையும் அமர்த்தித் தோழியர் சூழத் தேர்மேலேறி முரசொலிக்க மலைகளையும், யாறுகளையும் கடந்து சென்று மதுரையை நெருங்கினர். அவரை நகரமாந்தர் மங்கலத்துடன் எதிர்கொண்டனர். அன்னையார் தம் அரண்மனையை அடைந்தார்.

அமைச்சர்கள் திருமணத்தைக் குறித்து எங்கும் திருமண வோலையை விடுத்தனர். நகரணிசெய்யும்படி வள்ளுவனை யானைமீதமர்ந்து திருமண முரசறையச் செய்தனர்.

திருமண முயற்சி - நகரணி

தடாதகையார் திருமண முரசொலி கேட்ட நகர மக்களின் மகிழ்ச்சியை எவ்வாறு விளக்குவது! கரையற்ற மகிழ்ச்சியிலே முழுகிக் கடவுளைத் தொழுதனர். மெய்சிலிர்க்க வாழ்த்தினர். மகளிரை அழகு செய்வார்போல மதுரையை அழகு செய்யத் தொடங்கினர். உடம்பின் சோர்வு நோக்காமல் மகளிரெல்லாம் ஓடியோடித் தம் மனையை அழகு செய்தனர்.

என்று திருமணம் என்பார். திங்களன்று திருமண மென்பர். உடனே உவகையோடு தழுவிக்கொள்வர். திங்கட்கிழமை எல்லையான ஆறுநாளும் ஆறு ஆண்டுக

ளென ஏங்குவார். 'நம் அரசியார் திருமணங் காணவோ நமக்குத் தோள்கள் துடித்தன!' என்று மகிழ்வர். சுவர்களுக்கு வெள்ளையடிப்பர். ஓவியக்காரரும் விருப்பும் வண்ணம் ஓவியந் தீட்டுவார். திண்ணைகளிலே குங்குமந் தடவுவார். முளைப் பாலிகைகளையும் மாவிலை செருகிய நீர் நிறை குடத்தையும் அத் திண்ணைகளிலே பரப்புவார்கள். வாயிலிலே தோரணங் கட்டுவார்.

அழகிய நீண்ட தெருவெல்லாம் வெயில் விழாமற் பந்தலமைப்பார்கள். பாளையுடன் கமுகும் குலையுடன் வாழையும், கரும்பும் கட்டுவார். கண்ணடிகளை அங்கங்கே கோத்துக் கட்டுவர். மீனக்கொடியைப் பறக்க விடுவார். பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புவார். பூவையும் பனிநீரையும் தெளிப்பார். நறுமணப் பொடிகளைத் தூவுவார். பாவை விளக்கை அங்கங்கே நிறுத்துவார். பந்தல்களிலே புதிய மாலைகளை அழகாகத் தொங்கவிடுவார். நவமணிகளும் விற்கும் கடைத்தெருவோ என ஐயமுறப் பந்தல்களிலே மணிமாலைகளையும், முத்துமாலைகளையும் மரகத மாலைகளையும் மலர் மாலைகளினிடையிடையே தூக்குவார்.

வீரர்கள் யானைகளின் நெற்றியிலே சிந்தூரந் தீட்டுவார். ஒளிவிடும் மாணிக்க ஓடையை அணிவார். விரைந்து செல்லும் பரிகளின் கழுத்தணிகளையும் காலணிகளையும் புதுப்பிப்பார். தேர்களிலே மாலைகளையும் கவரிகளையுந் தூக்குவார்கள்.

வீடுகள்தோறும் பெண்கள் மங்கல விளக்கிடுவார்கள். பழைய கலன்களை நீக்கிப் புதிய கலன்களை அணிவார்கள். பனிநீர் கலந்த குங்குமத்தை மார்பிலே மெழுகுவார்கள். அது புலர்ந்தபின் கலவைச் சந்தனம் அப்புவார்கள். கண்ணடியிலே நோக்குவார்கள். விழிகளுக்கு மைதீட்டுவர். அடிகளுக்குச் செம்பஞ் சூட்டுவார். பரிபுர மணிவார்.

தடாதகைப் பிராட்டியாரை அரண்மனைக்குச் சென்று பாணரும் விறலியரும் வணங்குவார்கள். அவர் அளித்த

பரிசுகளை யேந்திச் செல்வார்கள் அந்தணமகளிரும் அரச மகளிரும் சென்று பொன்மாலையை (காஞ்சன மாலையை) வணங்கித் திருமண நிகழ்ச்சியை வினவுவார்கள். தடாதகை யம்மையாரின் திருமணக்கோலத்தை நோக்கி மகிழ்வார்கள். ஏவல் செய்யும் பெண்கள் அளித்த பொன்னணிகளையும் நறு மணக் கலவைகளையும் பெற்று அணிவார்கள்.

மதுரை நகர மக்களின் மகிழ்ச்சியை அளவிட லெங்ஙனம்? ஒவ்வொரு மனையிலும் திருமண நிகழ்ச்சியாக மேற்கொண் டனர். துறவிகளையும் விருந்தினரையும் வரவேற்று, 'அடிசில் இங்கே தங்களுக்கு, அடிசில் இங்கே தங்களுக்கு,' என முகமன் மொழிந்து உண்பிப்பர். அரனடியவரை வரவேற்று முறைப்படி யுண்பித்து வேண்டுவன நல்குவர்.

மணமகனர் இணையற்றவர்! மணமகளாரும் அங்ஙனமே. ஆகையால், நகர மாந்தரின் செயலையும் மகிழ்ச்சியையும் நம்மால் அளவிடலொவ்வுமோ!

திருமணக்கோயில்

பிராட்டியார் இந்திரனை வென்றபோது கொணர்ந்த விமான மாலைகளைப் போலவும், மலைமகளார் மணத்திற்கு வந்த மலைகளைப்போலவும் நீண்ட தேர்களை நட்டனர். பளிங்கினுலே யானைகளமைத்த பொற்படிகளும், பச்சொளி வீசும் நீலத்தினுலே யாளிகளமைத்த மாணிக்கத்திண்ணைகளும் உள்ளே வந்தோர்களின் உருவத்தை ஓவியப்பாவை போலத் தம்மிடங் காண்பிக்கும் வெண்சுதைச் சுவர்களும், மரகதச் சாளரங்களும் உடையது அங் கோயில்; வேள்வி மண்டபம் பவளக்கால் ஆயிரங்கொண்டது. அவற்றின் முடியிலே இந்திர நீலக் கற்களாலான போதிகைகளை யுடையது; பொன்னுலான உத்திரங்களையுடையது; இரவை மாற்றும் செம்மணித் துலாங் களையுடையது; அமுதைப் பொழியும் நிலவினையுடைய அந்த மண்டபத்தின் சிறபபைச் செப்புதலெங்ஙனம்?

முத்தினற் பாளையும் மரகதத்தால் இலையும் பவளத் தாற் பழங்களும் வெள்ளியால் வழுவழுப்பன அரையும் உடைய கமுகுகளையும், பவளத்தாற் பூவும், செம்பொன்னற் குலையும் பொன்னல் தண்டும் மரகதத்தால் இலையுமாக வாழைகளையும் வரிசையாக அமைத்தார்.

திருமணக்கோயிலைச் சூழப் பித்தி, மாதவி, சண்பகம், பாதிரி முதலான மலர் மரங்களையும் செடிகளையும் புதர் களையும் வளர்த்து உய்யானம் அமைத்தனர். ஆகையால், வண்டுகள் முரல மலர் மணம் நிறைந்த தென்றல் தவழ்ந்து சாளரங்களின் வழியே திருமணக்கோயிலெங்கும் பரவிக் குளர்ச்சியையும் மணத்தையும் நல்கித் தேன் துளித்திடச் செய்தது.

வேள்விச்சாலையையும், திண்ணையையும், குண்டத்தை யும் வேள்விக்குண்டத்தின் வரம்பையும் பழைய நூல் களிற் கூறியவாறு அமைத்தனர். பிறகு, கண்ணடி, விடை, விளக்கு, குழந்தையை இடையில் வைத்திருக்கும் பாவை, சாமரம், வலம்புரி, சுவத்திகம் (மண்டபம் அல்லது மேழி வடிவம்), நிறைகுடம் என்னுந் தெய்வ மங்கலங்கள் எட்டையும் பொறிகளாலமைத்தனர்.

சந்தனமுங் குங்குமப் பூவும் கத்தூரியும் பனிநீருங் கலந்து குழம்பாக்கித் தரையை மெழுகினர். கதிரவனும் நாணும் வண்ணம் மாணிக்க விளக்குகளை யிருகைகளிலு மேந்திய பாவைகளை அணியாக நிறுத்தினர். தாரகை களைப்போல நவமணிகளைப் பதித்த கம்பளத்தாலே விதானமிட்டனர்.

திருமணக்கோயிலின் முன் வானமளாவிய பந்தரைத் திசைகள் மறைய அமைத்தனர். பாலிகைப் பொன்னகல் களிலே முளை தெளித்தனர். நான்முகன் முதலான வான வர்க்குப் பொற்கம்பளம் மேலிட்ட இருக்கைக ளமைத்தனர். சிவனடியவர்க்கெல்லாம் கட்டில்களைச் சூழ இட்டனர்.

திருமண மண்டபத்தின் நடுவே வயிரத்தாலான சிங்கங்களின் பிடரிலே பொற்பலகையிட்டனர். மேலே பவளக்குடமும் சதுரமாக அமைத்த கழுத்தையுமுடைய தூண்களும் பளிங்கினாலான உத்தரமும் பவளக் கொடுங்கையும் மூன்று நிலைகளையும் பலவகை மணிகளாலான விமானமும் அழகுற அமைத்தனர். அந்த விமானத்தினுள்ளே, மறைகளின் அங்கம் ஆறுங் கால்களாகவும் முதலெழுத்தே பீடமாகவும் நான்மறை நூல்களே முத்துத் தொடுத்து அசையுங்கயிருகவும் உருவம் கொண்டு (எம்பெருமானும் பிராட்டியும் எழுந்தருள) வந்தாற் போன்று நவமணிகளிழைத்த பொற்பீடத்தை அமைத்தனர்.

கற்பகம், பொன்னுடை, அணி முதலியன அளிக்கவும், அமுதத்தையும் அறுசுவையுணவையும் காமதேனு பொழியவும், சிந்தாமணி வேண்டுவன நல்கவும், இந்திரன் நகரும் நாணும்படி அமைத்தனர்.

அரசர் முதலோர் வருகை

பாண்டியன் திருமகளார் திருமணத் திருமுகம் வரவேற்று பல நாட்டு மன்னர்களும் அதனைத் தொழுது வாங்கி மணிமுடி மேலேற்றிப் படிப்பித்துக் கேட்டு மகிழ்ந்தனர். கொண்டுவந்த தூதுவர்க்குக் குறைவிலாச் செல்வங் கொடுத்தனர். பிறகு, தத்தம் ஊர்திகளிலே மனத்தினும் முந்தி விரைந்து மதுரை மாநகரை அடைந்தனர். நால்வகைப் படையுடனும் வந்த மன்னவர்களெல்லோரும் தங்கள் நாட்டு வளங்களுடன் அரண்மனை வாயிலையடைந்து காவலர்க்குணர்த்தினர். காவலர் சென்று கற்பகப் பூங்கொம்பெனப் பொற்றவிசின்மீது வீற்றிருக்கும் அரசியார்க்குரைத்தனர். அரசியார் அவர்களை வரவிடும்படி ஆணையிட, அவ்வாறே உட்சென்ற மன்னவர்கள் அம்மையார் திருவடிகளை வணங்கி, அருள் பெற்றுத் தங்களுக்கென அமைத்த இடங்களிலே சென்று தங்கினர்.

திருமணமகனுர் வருகை

தடாதகைப் பிராட்டியார் கயிலையிலிருந்து திரும்பிய பிறகு தனிமுதலாகிய சிவபிரானுர்—உயிர்க்கெலாம் இன்பமூட்டும்

இறைவனர்—வானவர் முதல்வர் சங்கு கன்னன் முதலான கணத்தலைவர்களை விடுத்து உருத்திரர், மால், நான்முகன் முதலாந் தேவர்களை அழைத்துவரப் பணித்தார். அவ்வாறே அவர்கள் சென்று அழைத்தவுடன் காலாக்கினி புத்தியட்டகர் கூர்மாண்டர் முதலான உருத்திரர்களும், எட்டு வயிரவர்களும், திருமாலும், நான்முகனும் இந்திரன் முதலாம் எட்டுத் திக்குத் தலைவரும், எட்டு வசுக்களும், பன்னிரு கதிரவர்களும், இரு மருத்துவர்களும், ஒரு திங்களும், பதஞ்சலி, புலிக்காலர், அகத்தியர், சனகாதி நால்வர், வாமதேவர், சுகர், வியாசர், நாரதர் முதலாம் முனிவர்களும், ஏழுகன்னியரும், சித்தர் வித்தியாதரர் முதலானேரும், நாகர்களும், நிருதர்களும், அசுரர்களும், பூதவேதாளர்களும், அரம்பையரும் கயிலையை அடைந்தனர். காலங்களும், ஐம்பெரும் பூதங்களும், மந்திரங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் வன்னங்கள் சொற்கள் மறைகள் பலவகைச் சமயநூல்கள் சமயப்புற நூல்கள் நால்வகை நிலைகள் எண்சித்திகள் ஆகியவையும் வந்தன.

யாவரும் கயிலையை அடைந்தபின், நந்தியம்பெருமானருள்பெற்றுக் கண்ணுதலாரை வணங்கினர். அந்தி வண்ணனர் அவரவர்க்கேற்றவாறு இன்மொழி இயம்பியும், புன்முறுவல் செய்தும் திருமுடியசைத்தும் அருள்புரிந்த பின்னர் ஒரு மண்டபத்திற்குத் திருமணக்கோலங்கொள்ள எழுந்தருளினர்.

அறிந்தான் வடதிசைத் தலைவன் குபேரன். சிவபிரானர் திருவடிகளிலே பதிந்த அன்பும் தன் தவமும் அழைத்துச்செல்லச் சென்ருன் அங்கே. தூய செவ்விய பரம்பொருளின் திருவுருவைத் தன் கைகளினலே தீண்டித் - திருமணக்கோலம் புனையத் தொடங்கினன். இடையிலே கோவணம் அணிந்து, அதன்மேல் இரட்டை நாண் பட்டிகை யிறுக்கினன் மலர்ச் சிகழிகையைச் சிகையிலே புனைந்தான். மெய்யிலே மான்மதமும் பனிநீரும் விரவித் தடவினன். திருச்செவியிலே இருசுடர்போல மணிக்

குண்டலம் அணிந்தான். கரிய மிடற்றிலே முழுமதியைக் கோத்தாற்போலத் திருக்கண்டிகை பூட்டினான். அகன்ற திருமார்பிலே திருமுடியிலுள்ள திங்கள் அமுதைப் பொழி வதுபோல முத்துவடத்தை யொளிபெற அணிந்தான். தோள்களிலே கதிர்விடும் அங்கதமென்னுந் தோளணி யைப் புனைந்தான். களிற்றுரிவையை நீக்கி அழகிய மேலாடையை அணிந்தான். மந்திர ஆழியை விரல்களிலே செறித்தான். கோவணத்தின்மேற் பொன்னுடை புனைந் தான். ஐந்தலையரவு நால்வதைப்போல அழகிய மாணிக்கக் கொய்சகத்தை இருபுறமுந் தூக்கினான். நூபுரத்தையும் வீரக்கழலையும் மென்மலரடிகளிலே சேர்த்துக் களித்தான். குபேரன் செய்த தவத்தின் பெருமை குறிப்பிலடங்குமோ?

வானவர்க்கும் மண்ணவர்க்கும் யாவருக்கும் மங்கலத் தைத் தரும் அண்ணலார் தாமும் மங்கலம் புனைந்தார் போல நடித்தார். பிறகு, குண்டோதரன் முதுகிலே திருவடி வைத்தேறி வெளிப்போந்தார். அங்கே எதிர் நோக்கி வந்த காளையின்மீது ஏறினார். வானவர் மலர் மழை சொரிய விடையைச் செலுத்திச் சென்றார்.

வானதுந்துபி ஐந்தும் ஆர்த்தன. அரக்கரும், இயக் கரும், பூதரும் மங்கல இயங்களை இயக்கினர். விஞ்சையர் தாளமிடக் கரிய குழலையுடைய அரம்பையர் மலர்க்கொடி யென அசைந்து ஆடிக்கொண்டு சென்றனர். பானு கம்பன் சங்கம் ஊதினான் வாணன் குடமுழா முழக் கினான். முனிவர்கள் அஞ்சலிசெய்த கைகளுடன்—வாழ்த் தும் மொழிகளுடன்—கனிந்த அன்புடன்—பரவிச் சென்றனர். கணநாதர்கள் மழையெனப் பனித்து நீர்வாருங் கண்ணினர்—பாடும் நாவினர்—இன்பக் கூத்தாடும் தாளினராகிச் சென்றனர்.

ஒரு மருங்கிலே இந்திரன் மணிக்காளாஞ்சி கொண்டு சென்றனன். ஈசானன் மெல்லிய வெற்றிலையும் மணமிக்க பொன் அடைப்பையும் ஏந்தி ஒரு மருங்கிலே சென்றனன். காற்று ஆலவட்டம் பணிமாறி வந்தான். தீக்கடவுள் மணப் புகை யேந்தினன். நீர்க்கடவுள் புதிய பொன்னுடை

சுமந்து சென்றனன். நிருதி கண்ணாடிகொண்டு எதிரே சென்ருன். குபேரன் பொன் வழங்கிக்கொண்டு போந்தான். கூற்றுவன் கஞ்சுகனாகத் தொழில் புரிந்து சென்ருன்.

நாகர்கள் மணிவிளக் கேந்தினர். மறை இறைவர் திருவடி சுமந்து வந்தது

கங்கை முதலிய ஆற்றுப் பெண்கள் குளிர்ந்த கவரி வீசினர். குண்டோதரன் திங்கள் வெண்குடை சுமந்தான். இடிக்கொடி, அன்னக்கொடி, கருடக்கொடி முதலான கொடிகள் சூழ விடைக்கொடி வானிலே அசைந்தாடியது. பதினெட்டுப் படைக்கலங்களுஞ் சூழ, முத்தலைச்சூலப்படை ஒரு பெரும்பூதத்தின் கையிலே மலைமிசை முச்சுடர் போல மிளிர்ந்தது.

புட்பதந்தன் நான்மறைப்பொருள் பொதிந்த வடமொழிப் பாடல்களாலே வாழ்த்திக்கொண்டு வந்தான். ஆலாலசுந்தரன் திருவெண்ணீறும், மலர்மாலையும் எடுத்து வந்தான். அன்னத்தின்மேல் நான்முகன் வலப்பக்கத்திலே வந்தான். திருமால் கருடன்மேல் இடப்பக்கத்திலே ஏகினன். இவ்வகைச் சிறப்புடன் வெள்ளிப் பொருப்பின்மேல் வருவதுபோல இறைவர் எருதின்மீ தமர்ந்து வளமிக்க மதுரையம்பதியை அடைந்தனர்.

அப்போது,

"தேவர்கள் தேவன் வந்தான்!
செங்கண்மால் விடையான் வந்தான்!
மூவர்கள் முதல்வன் வந்தான்!
முக்கணெம் பெருமான் வந்தான்!
பூவலர் அயன்மால் காணாப்
பூரண புராணன் வந்தான்!
யாவையும் படைப்பான் வந்தான்!
என்றுபொற் சின்னம் ஆர்ப்ப."

பெண்களுக்கரசியார் அமைச்சர்களும் பிறருங்கூடி நகர மதில் வாயிலிலே கண்ணுக்கினிய கண்ணுதலாரைக் கண்டு திருவடி தொழுது எதிர்கொண்டனர்.

வரவேற்பு—திருமணக் கோயிலைச் சேர்தல்

முகில் தவழும் மதிலையுடைய பழம்பெருநகரின் வாயிலைக் கடந்து மாடத்தெருவிலே மதிமுடித்த சடையினர் உலா வரும்போது கண்ட மக்களின் மகிழ்ச்சியை யென்னென்பது! தமிழ்நாடு முதலான பதினெட்டு நாட்டுப் பெண்களும் முல்லை, தாமரை, அல்லி, நீலம், குமிழ், கோங்கு, காந்தள், அசோகு முதலான மலர்கள் மொய்த்த நந்தவனம்போல நெருங்கி அண்ணலாரைக் கண்டனர்.

மணம் விரியும் தாமரைக்காடு மலர்ந்தாற்போன்ற அருட்பெருங்கடலின் திருவடி முதல் திருமுடி வரையில் தங்கள் விழிக் குவளையைச் சாத்தினர். அவருடைய திருவடிச் செந்தாமரை மலரைத் தங்கள் குழலிலே சூடுவார் போலத் தங்கள் வளைக்கை கூப்பி மகிழ்ந்தனர்.

'நம்பியை மணம்புரிய நங்கைபுரிந்த தவமென்னவோ?' 'தடாதகையை மணக்க வள்ளல் என்ன நோற்றானோ?' 'மதுரைநோற்ற நோன்புதானென்னவோ?' 'இவர்கள் திருமணங்காண நாமியற்றிய தவமென்னவோ?'

'மலயத்துவசன் தன் முன்னைய நல்வினையாலே மகளாய்ப் பெற்ற மகளின் திருமணத்தைக் காணத் தவஞ் செய்திலனே!'

'கன்னியின் அழகுக்கு ஏற்ற காளை யிவன்!'

'இவனே இந்நாட்டு மன்னன் இனி!'

'நம் அரசிக்கேற்ற மணவாளனைக் கண்டுபிடித்தது சுமதியின் சூழ்ச்சியே!'

'காஞ்சனை இவனை மருகனாகப்பெற மட்டற்ற தவஞ் செய்திருத்தல் வேண்டும்.'

இவ்வாறு மங்கையர் பலரும் மகிழ்வொடு கூறிக் கொண்டனர்.

ஒருத்தி வலப்பக்கத்திலே மலரயனையுங் காணாள்— இடப்பக்கத்திலே திருமாலையுங் காணாள்—வானவர் கூட்

டத்தையும் காணுள்—மண்ணவர் குழுவையுங் காணுள்—அறிவரைப்போலக் கண்ட பொருளெல்லாம் மழுவையும் மானையும் ஏந்திய அண்ணலின் வடிவாகவே கண்டாள்.

புதிய அழகு வீசும் மாடங்களின் மேலே நின்று காணும் மங்கையர், கூப்பிய கையுடனும் நோக்கிய கண்களுடனும் குடிபோன உள்ளத்துடனும் சொல்லுஞ்செயலும் அற்று, அவ்விடத்திலே நிறுத்திய பதுமைபோல நின்றுவிட்டனர்.

இந்நிலையிலே சென்று அரண்மனை வாயிலை அடைந்தனர் அண்ணல். அப்போது அந்தணர்கள் தருப்பையையும் அரசிலையையுங்கொண்டு துழாவிப் பொற்கலச நீரைத் தெளித்தனர். அந்தணர் மனைவியர் வட்டமாக வானவில்லைப் பதித்தாற்போல நின்று மாணிக்க நீராஞ்சனக் கலமேந்தி முறையாகச் சுற்றினர். தாமரைக்கொடிபோன்ற நங்கையர் கொடி, முரசு, ஆடி, நிறைகுடம், மணி, விளக்கு, அங்குசம், கவரி என்னும் எட்டு மங்கலப்பொருளையும் ஏந்தினர். அரம்பையர் கருப்பூர விளக்கமேந்தி மும்முறை வலம் வந்தனர்.

இறைவர் புன்முறுவலுடன் காளையின்மீதிருந்து நந்தியின் மலர்க்கை பற்றி யிறங்கினர். எதிரே பணிவுடன் மாலும் நான்முகனும் மலர்க்கை நீட்ட அவற்றைப் பற்றியவாறு மறைகளுங் காணுது இளைத்த மலரடிகளை—சத்திபதிந்த அடியவர்கள் தம் தலைமேற்கொண்டு வெவ்வினை தீர்த்துப் பேரின்பம்பெற அருளும் மலரடிகளை—வைத்தார். அரவின் தோலைப்போன்ற ஆடைகளை நடைப்படமாகப் பரப்பி அவற்றின் மேல் தூவிய மலர்த்தொகுதிகள் தம் கழலடிகளை நனைப்ப—வானவர் பெய்த மந்தார மலர்மழை திருமுடியை நனைப்ப—அரண்மனையினுள் எழுந்தருளினர்.

அப்பொழுது காஞ்சனமாலை மங்கலப் பெண்களோடு வந்து, அவர்கள் கங்கை நீரைக் கரகத்திலிருந்து வார்க்க, அழகிய திங்களணிந்த அண்ணலார் மலரடியைக் கழுவி,

அந்நீரைத் தலைமீது தெளித்துப் பருகினாள். பிறகு, திருவடியிலிருந்த ஈரத்தை வெண்பட்டாலே துடைத்தாள். பனிநீர் கலந்த கத்தூரியைப் பூசினாள். புதிய—தேன் விரியும்—மந்தாரமலரைச் சாத்தினாள். தன் தலைமீது செங்கைகளைக் குவித்தாள்.

"அடியேன் அருமையாகப் பெற்ற தடாதகையைத் திருமணஞ் செய்தருளி, மதுரைச் செல்வத்தையும் கன்னி நாட்டையும் ஏற்றுக்கொள்க!"

இவ்வாறு காஞ்சனை வேண்டச் சிவபரஞ்சுடரும் அதனையேற்று. இயங்கள் இயம்பத் திருமணக்கோயிலைச் சேர்ந்தார். மறையொலி முழங்க மாணிக்க அரியணையிலே அமர்ந்தார். சூழநின்ற திருமாலையும் நான்முகனையும் உருத்திரர்களையும் மற்றைய வானவரையும் அவரவர்க்குரிய இருக்கைகளிலே அமரக் கடைக்கணோக்கம் புரிந்தனர். பின்னர், நல்லோரை வருமளவும் அரம்பையர் கூத்து நோக்கியிருந்தனர்.

தடாதகையார் திருமணக்கோலம்

அப்போது, நம்மைக் குற்றம் நீக்கி இன்ப வெள்ளத்திலே ஆட்டிப் பண்டைய ஒளியுருவை விளக்கும் ஆற்றல் மிகுந்த சிவபரம்பரையைத் தெரிவையர்கள் பொன்னணையிலே யிருத்தி நறுமண நீராட்டினார்கள். முரசும் சங்கும் ஒலித்தன. அம்மையார் நுண்ணிய ஆடையை அணிந்து அந்தணர்க்கும் அறவோர்க்கும் வேண்டும் பொருளை வாரிவாரி அளித்தார். பிறகு, திருமணக்கோலங்கொள்ளத் தொடங்கினார்.

திருமகளும் கலைமகளும் மலைமகளார்க்குந் தங்கள் மலர்க்கைத் திறனைக்காட்ட விரும்பினர். அம்மையாரின் அனிச்சத்தினும் மெல்லிய திருவடிகளிலே செம்பஞ்சுக் குழம்பூட்டினர். மலர்க்குழலிலே மயிர்ச்சாந்தைப் பெய்தனர். மார்பிலே பனிநீர் கலந்த சந்தனத்தை அப்பினர். முத்துப் பரல் பெய்த சிலம்பையும் கிண்கிணியையும் திருவடிகளிற் பூட்டினர். முப்பத்திரண்டு வடமான விரிசிகையையும், இருபத்

தொருவடமான கலாவத்தையும், பதினுன்குவடமான பருமத்தையும், எண்வடமான மேகலையையும், இரண்டுவடமான காஞ்சியையும் புண்ணியக்கொடி வண்டுகள் முரலப் பூத்ததைப்போல ஒலிக்கும்படி யிடையிலே பூட்டினர். காந்தளம் போது போன்ற விரல்களிலே பொன்மணி வண்டு சேர்ந்தாற்போல மாணிக்க ஆழிகளை யிட்டனர். வைரக்காப்பையும் வளையலையும் கடகத்தையும், வானக் கதிர்கள் கைகுவிக்க முன்கையிலும் தோளிலும் அணிந்தனர். மரகதமாலை, அழகிய பொன்மாலை, பவளமாலை, முத்துமாலை ஆகிய மாலைகளை நிழல்விட மார்பிலே அணிந்தார்கள். குழையையும் மகரத்தோட்டையும் மீனினமான சுருவும் வெண்மதியும் தங்கள் குலவிளக்கான பிராட்டியாரின் காதிலே மறை கூற வந்தனபோலக் காதுகளிற் கவின்செய அணிந்தனர். இலம்பகம் என்னும் நெற்றியணியை முகிலுக்கும் திங்களுக்கும் இடையே வானவில் கிடப்பதைப்போல நெற்றியிலணிந்தார்கள். கூட்டமான முகிலைப் பிராட்டியார் திருமகனுர் பிற்காலத்திலே தளையிடுவதைக் காட்டுவதைப்போல நெய்யணிந்த கூந்தலிலே மலர்மாலையை அணிந்தனர்.

இவ்வாறு கற்பகங் கொடுத்த இந்த அணிகலன்களை முக்கட்பெருமானுர் வியப்படைந்து மகிழும்படி பிராட்டியாருக் கணிவித்துத் தொழுது, 'வாழ்க!' என்று வாழ்த்தினர், மலர் மகளிர் இருவரும்.

திருமண நிகழ்ச்சி

திருமணத்துக்குரிய நல்லோரை வந்தது. திருமகளும் கலைமகளும், நீட்டிய மலர்க்கைகளை மலைமகளார் தம் திருக்கைகளாற் பற்றி யெழுந்தனர். அப்போது மங்கல முரசுகளொலித்தன. சங்குகள் முழங்கின. வானவர் மலர்மாரி நிறைந்தது. மங்கையர் சாமரை வீசினர். மங்கலவாழ்த்து எங்கும் இசைத்தது. இந்திராணி அடைப்பை யேந்தினள். திலோத்தமை கண்ணுடி யேந்தினள். துர்க்கை பொற்கோல் பிடித்து முன்னே வழிசெய்தனள். அரம்பை காளாஞ்சி யெடுத்தனள். ஊர்வசி ஆலவட்ட மசைத்தனள். மேனகை

அணிகலச் செப்பேந்தினள். தோகையர் சிலர் மலரும் பனிநீரும் சிந்தினர்; பொன்வண்ணப்பொடியைத் தூவினர்; நறுமணப்புகை யேந்தினர்; மங்கல வாழ்த்துப் பாடினர். பிராட்டியார் பனிநீரும் சந்தனமும் மலருந் தெளித்த நடைப் பாவாடையிலே பாடகமணிந்த மென்மலரடிகளைப் பையப்பைய வைத்து நடந்தார். 'கல்வியையும் செல்வத்தையும் இருமலர்க் கைகளிலும் பிராட்டியார் ஏந்தி வருகிறார். இம்மையிலே அவரை வணங்கிப் பெறுவார்க்கு இதுவே ஏற்ற காலமாகும்' என்பது போல நூபுரம் ஒலித்தது. அம்மையார் மெல்ல அசைந்து ஒதுங்கிச் சென்று பிரானுர் அருகிலே அமர்ந்தார்.

இருள்கெட ஒளிவிடுஞ் செம்பொன் மாணிக்க இருக்கை யிலே இறைவரோடிருந்த இறைவியார் எரிகதிர் தோன்றும் வரையின்மீது கற்பகத்தின் அருகிலே மலர்ந்த அழகிய கொடி போன்றுர். பண்ணுடன் இசையும், நீருடன் தண்மையும், பாலுடன் சுவையும், பூவுடன் மணமும், அணியுடன் அழகும் வெவ்வேறு வடிவுடன் வீற்றிருப்பதுபோல அண்ணலாரும் அம்மையாரும் இருந்த காட்சியை என்னென்பது!

யாவரும் அங்குக் கூடியிருந்தது முக்கண்ணர் மலரடியின் கீழ்க் கலந்திருந்தது போன்றிருந்தது!

"விண்ணுளார் திசையி னுள்ளார் வேறுளார் பிலத்தி னுள்ளார்
மண்ணுளார் பிறரும் வேள்வி மண்டபத் தடங்கி யென்றும்
பண்ணுளா ரோசை போலப் பரந்தெங்கும் நிறைந்த மூன்று
கண்ணுளா ரடியி னீழல் கலந்துளார் தம்மை யொத்தார்."

அப்போது, திருமால் பொற்கையிலுள்ள நீரினாலே சிவபரம் பொருளின் கூத்தாடுஞ் சேவடியை விளக்கிச் சந்தனமும் நறுமணமலரும் சாத்தினுர். நறுமணப் புகையும் விளக்குங்கொண்டு வழிபட்டுக் கைகுவித்துக் கண்ணுத லருள்பெற்று நின்றுர். விடையவரின் மலரடி கழுவிய நறுநீரை மலரவன், மால், முனிவர், இந்திரன் முதலாம் இமையவர் அடியவர், நந்தி, சிவகணத்தவர் எல்லோரும் உள்ளும் புறமுந் தூய்மையடைய நனைத்தனர்.

இது முற்றிய பின்னர்த் திருமால் பரஞ்சுடரின் செங் கையிலே தடாதகையார் செங்கைகளைத் தாமரையிலே காந்தள் மலர்ந்தாலெனச் சேர்த்து மறைமுழங்கத் தாரைவார்த்துக் கொடுத்தார்.

அது போழ்து வானவர் மலர்மாரி பெய்தனர். அரம்பையர் ஆடினர். முனிவர்களும், வானவர்களும் 'சிவசிவ' வென்ருர்த்து வாழ்த்தினர். சிவகணத்தவர் மெய்சிலிர்த்துக் கைகூப்பினர். எல்லோரும் இன்பக்கடலிலே முழுகினர். சாக்கியனுர் எறிந்த கல்லையும் மலரென வேற்ற கண்ணுதலார் திருவடியிலே விழும்படி விண்ணவரும் முனிவரும் மற்ருேரும் தூய நாவினலே வாழ்த்திக் குங்குமக் குழம்பு கலந்த முத்துப்போன்ற அரிசியை வீசி இன்பவெள்ளத்திலே முழுகினர்.

'அம்மையும் அப்பனுமாக மலரும் மணமும்போல நீங்காத இருவரும், தங்கள் அருள் விளையாட்டினுலே நீண்ட நாளாகத் தனித்திருந்தவர்போல, நாமெல்லாங் காண வெளிவந்தருளித் திருமணம் புரிந்துகொண்டனர். ஆகையால், மூவுலகும் வாழ்வுற்றன,' என்று தங்களுக்குள் அறிஞரெல்லாரும் மொழிந்து மகிழ்ந்தனர்.

பிறகு, அழகிய பசுவின்பால், வாழைக்கனி, நெய், சர்க்கரை முதலான நல்ல இனிய பொருள்களைச் செம் பொன்னுலான—வட்டமான—தட்டிலே வைத்துக் சிவபெருமா ஞரைத் 'திருக்கை தொட்டருள்க!' என்று பெரியோர்கள் வேண்டினர். அண்ணலாரும் புன்முறுவலுடன் அவற்றைத் தொட்டு உண்டவர்போல மகிழ்ந்தார்.

பின்னர், முனிவர்மனைவியரும் மலர்மகளிரிருவரும் மங்கலம் பாடினர். நான்முகனும் அவன்மக்களும், ஒருங்கேயிருந்து துடுப்பினுலே நறுநெய்யைத் தீயிலே வார்த்தனர். தீயும் தன் நடுநா நிறையப் பருகி வலஞ் சுழித்து ஒலிமிகுந்து நிமிர்ந்தது. சுற்றிலும் நான்கு மறைகளும் முழங்க, முரசுஞ் சங்கும் ஒலிக்க, நான்முகன் வேள்வியை முறைப்படி வளர்க்க, இறைவர்

இறைவியார்க்கு மங்கலநாண் சாத்தினர்; இறைவியார் மலர்க்கை பற்றினர்.

செந்தீக்கடவுளும் அவரே! எரியை வளர்ப்பவரும் அவரே! உணவு கொள்வாரும் அவரே! இத்தகைய ஒருவர் உலகம் இன்பமடையக் கணவனும் மனைவியுமாகித் திருமணம் முடித்தாரென்னில் அவர் கருத்தை அறிய வல்லார் யார்?

பிறகு, பொரியை யெடுத்து அம்மையாருடன் தாமும் செந்தீயிலே இட்டனர். முனிவரர்க்குப் பொருள் வழங்கினர். செந்தீயை முறையாக வலம் வந்தனர். அம்மி மிதிப்பித்தனர். அருந்ததியை அழைப்பித்தனர். இவ்வாறு முறைதவருமற் சடங்கெலாம் முடித்த பின்னர் அம்மையாருடன் திருமண அறையிடம் சென்றூர்.

இறைவர் மங்கலக் கோலத்தை நோக்கிய மண்ணவர் இமையவரானூர்! இமையவரானூரென்பதேன்? இறைவர் அருளுக்கம் பெற்றதனுல் வானவரும் வணங்கும்பேறு பெற்றனரெனலாம்! மண்ணவரும் விண்ணவரும் வேற்றுமை யின்றிக் கலந்துநின்றனர். அந்த நிலையிலே உயர்வேது? இழிவேது?

மணவறையிலிருந்து மங்கைபங்கர் திருமணக் கோயிலிலே மாணிக்க அணையிலே அமர்ந்தருளினர். நெடுமாலுக்கும் கலைமகள்கொழுநன் முதலோர்க்கும் சிவகணத்தவர்க்கும் எப்பொழுதுஞ் செல்வமும் சிறப்பும் நல்கும் இறைவர் இப்பொழுதும் முறைப்படி வரிசை நல்கினர். எல்லோரும் வணங்கிப் பிரியா விடைபெற்றுத் தத்தம் நிலைகளைச் சார்ந்தனர்.

அரசியற்றியருளினர் அம்மையப்பர்

உலகெலாம் இன்பம் அடைய ஒப்பற்ற திருமணஞ் செய்து காட்டிய உமைபங்கர், 'ஆட்டுவான் ஆடிக்காட்டுந்தன்மைபோல' அரசு செய்து காட்டவும் எண்ணங்கொண்டார்.

விடையெழுதிய கொடி மீனெழுதிய கொடியாக மேவியது. பாம்பணியெல்லாம் பொன்னணியாகப் பூத்தன. கொன்றை மாலை வேப்பமாலையாகக் குலவியது. புலித்தோல் பொன்னுடையாகப் பொலிவுற்றது. பிறைமுடி வைரமணிமுடியாக ஒளி வீசியது. திங்கள் முடித்த சிவபரம் பொருள்—மதுரைப்பதி சோமசுந்தரர் – திங்கள் குல மன்னராகப்—பாண்டியராக—வீற்றிருந்தருளினர்! வலிமைமிக்க சங்குகன்னன் முதலான சிவகணத்தலைவரெல்லாம் சோமசுந்தர பாண்டியர் பணியாட்களாக வடிவம் மாறித் தமக்குரிய பணியிலே தலையிட்டனர்.

சோமசுந்தர பாண்டியருஞ்—சோமசுந்தரக் கடவுளும்

பாண்டியர் வடிவங்கொண்ட பரம்பொருள், பார்காக்கும் மன்னர் சிவவழிபாடு செய்வது செம்மை நூல் வழியாகும் என்பதைத் தெளிவிக்கத் திருநகர் நடுவே 'நடுவூர்' எனவொரு நகரமைத்தார். நூல்வழியே கோயில் நிறுவி அருட்குறியான சிவலிங்கத்தை அமைத்தார். முக்காலத்தினும் சிவ வழிபாடு செய்துகொண்டு செங்கோல் நடத்தினர். திருமால் முதலாந் தேவரெல்லாம் வழிபட்டு இம்மை மறுமை அடையநின்ற மூவர் முதல்வர் - முக்கட்பெருமானர் தாமே வழிபடநின்ற மூலலிங்கத்தின் பெருமையை எங்ஙனம் மொழிவது? இவ்வாறு, மக்களுக்கு மன்னராய்—எதிரிகட்குச் சிங்கமாய்—நிலமகட்குத் திருமாலாய்—முற்றுந்துறந்த முனிவரர்க்கு மூவாமுழுமுதலாய்—உண்மையறிவாய்—இன்பமாய் எம்பெருமான் நின்றருளினர்.

கூ. வெள்ளியம்பலத் திருக்கூத்து

புலியும் பாம்பும் புகன்றது

புண்ணியப் பூங்கொடியாகிய தடாதகையாரைத் திருமணம் புரிந்த பின்னர், நெற்றிக் கண்ணராகிய பாண்டியர் திருமணத்திற்கு வந்திருந்தோரை உண்பதற்கழைத்தார். அப்பொழுது புலிக்கால் முனிவரும் அரவ முனிவரும் சோம சுந்தரரை வணங்கி, 'அடியேம் தாங்கள் மன்றுளாடும் கூத்தை வணங்கியுண்ணும் ஒழுக்கமுடையேம்,' என்றனர்.

தென்னவர், 'அந்தக் கூத்தை யிங்குக் காட்டுகின்றோம். உலகமெல்லாம் உருவமாகக்கொண்ட இறைவனுக்குத் தில்லை உள்ளமாகும். இந்த மதுரை துவாத சாந்தத்தலமாகும்' என்றார்.

வணக்கத்துடன் மாமுனிவர்கள், 'ஏனைய உறுப்புகள் எவை?' என வினவினர்.

"திருவாரூர் மூலம்—திருவானைக்கா குய்யம்—திருவண்ணாமலை மணிபூரம்—தில்லை உள்ளம்—திருக்காளத்தி கழுத்து—காசி புருவத்தின் நடு—திருக்கயிலை பிரமரந்திரம்—மதுரை துவாதச அந்தம். மதுரை முதலிலே தோன்றியதால் அத்தகைய சிறப்படைந்தது.

தென்னவர் திருக்கோயிலைச் சேர்ந்தார்.

வெள்ளிமன்று—கூத்து

தன்னை விட்டுவந்த சிவக்கொழுந்தைத் தேடி வந்த கயிலையோ, வெள்ளிய விடையோ—திங்கள் மண்டிலமோ—உருவம் மாறி மன்றாக நின்றதென்னுமாறு இந்திர விமானத்தின் கிழக்கிலே வெள்ளி மன்றம் ஒன்று தோன்றியது. அந்த மன்றிலே—பாற்கடலிலே ஞாயிறு தோன்றியதுபோல—மாணிக்கப் பீடிகை தோன்றிற்று. அதனை அன்பர் உளமெனலாம். அல்லது மறைமுடி யெனலாம். வேறு உவமை கூறல் ஒவ்வாது. அந்த மாணிக்கப் பீடிகையின்மேல் ஆயிரங்

கதிர்களையுடைய கோடி ஞாயிறுகள் ஒரே காலத்துப் பொருந்தினாற்போல, மனத்தையும் மொழியையும் பக்கங்களை யும் முதலையும் முடிவையும் கீழையும் மேலையுங் கடந்த பேரொளி யாகப் பெருமானார் தோன்றி முயலகன்மீது வலத்தாளூன்றி நடித்தார்.

சிவகணங்கள் மொந்தையையும் தண்ணுமையையும் முழக்கின. நந்தி முழவு முழக்கினார். திருமால் இடக்கை ஒலித்தார். தும்புருவும் நாரதரும் பாடினர். ஐவகை வான துந்துபிகள் அதிர்ந்தன. கலைமகள் இசை கூட்டினாள். நான்முகன் சாமகீதத்தை யாழிசைத்துப் பாடினான். திங்களின் அருகே செறிந்த விண்மீனென அமரர் தூவிய மலர்மாரி விளங்கியது.

செந்தாமரை மலர் குவிந்தாற்போலத் தூக்கிக் கூத்தாடுந் திருவடியும், திக்கெலாம் பரவிய பத்து மலர்க் கைகளும், படை யும், கறைமிடறும், சங்கக்குழை தவழுங் காதுகளும், செஞ் சடையும், ஒளிபரவிய வெண்ணீறும், முக்கண்களும், அரவக் கச்சும், அங்கயற்கண்ணம்மையின் இடப்பக்கமும், அந்த அம்மையார் மேலமைந்த திருநோக்கும் நகையும் தோன்ற ஆடும் அண்ணலார் திருக்கூத்தினை அளந்துரைப்பதெவ்வாறு?

கங்கையாறு மோதும் ஒலியும், கொன்றையிலே வண்டுகள் முரலும் ஒலியும், மங்கல முழவுகளின் ஒலியும், மறையொலியும், செங்கையிலே ஒளிவிடுகின்ற அழலின் ஒலியும், திருவடியிலே சிலம்பின் ஒலியும் எங்கும் பரவி அன்பர்களின் இரு செவிகளி லும் அமுதைப் பெய்தன.

அடியவர்களின் கைம்மலர்கள் குவிந்தன; தலைமேலேறின. எல்லோரும் கூத்தாடுஞ் சேவடியிலே விழுந்து வணங்கினர். எழுந்து வாய்நிறைய மறைமொழிகளால் வாழ்த்தினர். பேரின்ப வெள்ளத்திலே மூழ்கி நிலைத்தனர். அந்த இரு முனிவராலும், முனிவர், கந்தருவர், வானவர், தானவர், யோகிகள், கிம்புருடர் முதலான யாவரும் மண்ணுலக மக்களுங் கண்டு களித்தனர்.

அரவ வுருவான அருந்தவ முனிவர் அளவிலா இன்பம் ஊறி உள்ளத்திலே நிரம்பி வழிவதுபோல, வெண்ணீறணிந்த மார்பிலே கண்ணீர் வழியக் கைம்மலர் கூப்பிக் கனிந்து கனிந்து பரவுகிறார் :

"பராபர முதலே! போற்றி! பத்தியில் விளைவாய்! போற்றி!
சராசர மாகி வேறாய் நின்றதற் பரனே! போற்றி!
கராசல வுரியாய்! போற்றி! கனக அம் பலத்து ளாடும்
நிராமய பரமா னந்த நிருத்தனே! போற்றி போற்றி!!"

"ஒன்றாகி ஐந்தாய் ஐயைந் துருவா கி வருவாய்! போற்றி!
இன்றாகிச் சென்ற நாளாய் எதிர்நாளாய் எழுவாய்! போற்றி!
நன்றாகித் தீய தாகி நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமா னந்த நிருத்தனே! போற்றி! போற்றி!

"அடியரேம் பொருட்டு வெள்ளி அம்பலத் தாடல் போற்றி!
பொடியணி தடந்தோள் போற்றி! புரிசடை மகுடம் போற்றி!
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி!
நெடியநற் பரமானந்த நிருத்தனே! போற்றி போற்றி!"

வெள்ளியம்பலவாணர் அரவ முனிவரையும் புலிக்கால் முனிவரையும் அருளுடன் நோக்கினார்.

"நீங்கள் விரும்பியதென்ன ?

முனிவரிருவரும் பன்முறை வணங்கி வேண்டினர்.

"எந்தையே! இந்தத் திருக்கூத்தை எப்போதும் இந் நிலையிலேயே எல்லோருடைய துன்பச்சுழலும் அற நடத்தி யருள்க!"

அரவமுனிவர் மேலும் வேண்டினர்.

"முதல்வரே! எங்கும் நிறைந்த இந்தத் தூய பேரின்பக் கூத்தைக் கண்டோர் மறுமுறையும் பிறவியினில் மயங்காத வீடுபெற அருளல் வேண்டும்!"

கூத்தப்பெருமானார் 'நன்று' என நவின்றருளினார்.

சிவகணத்தவர் ஆரவாரித்தனர்; கைகோத்தாடினர். வானவர் மலர்மாரி பெய்தனர். முனிவர் இன்பக் கண்ணீர் வடித்தனர்; அந்த முனிவரர் இருவரையும் விழுங்குவார் போல் நோக்கித் தழுவிக்கொண்டனர்.

யாவற்றினுங் கலந்தும் வேருகிபும் யோகிகளின் உள்ளத்திலே இன்பம் வழிய ஆடுந் தனிப்பெருங் கூத்து அன்றுமுதல் நடைபெற்றது. மார்கழித் திருவாதிரை முதல் அடுத்த மார்கழித் திருவாதிரை வரையிலே பொற்ருமரையில் முழுகி, வெள்ளியம்பலக்கூத்தை வணங்கி இனிதமர்ந்து, ஐந்தெழுத்தை நூற்றெட்டு முறை நவின்றுவர்கள் எண்ணிய வற்றை எண்ணியவாறு பெறுவர்.

"திருவள ராரூர் மூலந் திருவானைக் காவே குய்யம்
மருவளர் பொழில்சூ ழண்ணு மலைமணி பூர கீவிர்
இருவருங் கண்ட மன்ற மிதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமாங் காசி" (சு)

"பிறைதவழ் கயிலைக் குன்றம் பிரமரந் திரமாம் வேதம்
அறைதரு துவாத சாந்த மதுரையீ ததிக மெந்த
முறையினு லென்னின் முன்னர்த் தோன்றிய முறையா லென்றக்
கறையறு தவத்த ரோடு கவுரியன் கோயில் புக்கான்" (எ)

"என்றுமின் றேத்தி னுன்பின் னிருவரை நோக்கி வெள்ளி
மன்றுணின் ருடா னின்ற மறைமுதல் கருணை கூர்ந்து
நன்றுநீர் வேட்ட தென்னென் றருள்செய நாதன் பாதந்
துன்றுமெய் யன்பிற் ருழ்ந்து தொழுதுமின் றிதனைச்சொல்வார்"

"அராமுனி யீது வேண்டு மாதியெம் பெரும விந்த
விராமய பரமா னந்த விருத்தநேர் கண்டோ ரெல்லாந்
தராதல மிசைவந் தெய்தாத் தனிக்கதி பெறுதல் வேண்டும்
பராபர வென்று தாழ்ந்தான் பகவனு மதற்கு நேர்ந்தான்." (உ௰)

எ. குண்டோதரனுக்கு அன்னமிட்டது

அம்மையார் குறை—அண்ணலார் விடை

வெள்ளியம்பலத் திருக்கூத்து முடிந்த பின்னர், யாவரும் விருந்து மண்டபத்தை யடைந்தனர். தடாதகைப் பிராட்டியார் விருந்துக்கு வந்தவர்களெல்லோரையும் அறு சுவை யுண்டியைப் பொற்கலங்களிலிட்டுப் பேரன்புடன் உண்பித்தார்; நறுமணக் கலவைச் சந்தனம் நல்கினர். நவமணி மாலைகளையும் பொன்னுடைகளையும் அவரவர் விரும்பியாங்கு வெறுக்க அளித்தார். பழுக்காயும் மெல் லிலையும் தந்தார். எல்லோரும் அம்மையப்பர்களை வணங் கித் தத்தம் இருப்பிடம் ஏகினர்.

அப்பொழுது, மடைத்தொழில் வல்லோர் வந்து பிராட்டியாரை வணங்கி, ''அடியேம் சமைத்த உணவிலே ஆயிரத்திலொருபங்கேனுஞ் செலவழிந்திலது. என் செய் வோம்?'' என்றனர்.

அம்மையார் அந்திவண்ணர் முன்சென்று, வணங்கி, ஒருபுறமாக நின்று, ''அடிகளே! தாங்கள் முப்பத்து முக்கோடி கணங்களோடு இங்கு எழுந்தருள்வதை நினைத்து, அளவில்லா உணவினைச் சமைத்தோம். சிறிதே செலவாயிற்று. ஆயிரமடங்கு அப்படியே உள்ளது,'' என்று நவின்றார்:

முக்கட்பெருமான் முறுவல் புரிந்தார்.

''பொற்கொடியே! நீ மூவேந்தரினுஞ் சிறந்த தென்ன வன் திருமகள். பிற மன்னர் செல்வமெல்லாம் உன்னு டையதே. வான் தருவும் வணங்கி நின் பணியைச் செய்யும். எனவே, உன்னால் இயலாததும் உண்டோ? அளவில்லாத உன் செல்வப்பெருக்கை அறிய இவ்வாறு செய்திருக்கிறாய் போலும்! உன் விருந்தை உண்ண நம் சிவகணங்களில் ஒருவரையுங் களைப்புடன் காண்கிலோம்.''

குண்டோதரன் பசி

இறைவர் இவ்வாறு கூறினும், அருகிலிருந்த—தம் குடையெடுக்கும்—குண்டோதரன் வயிற்றிலே பசித் தீயை வடவைத் தீயாக மாற்றினர். அவன் நஞ்சுண்டவன்போல, உடல் மெலிந்து, உயிரொடுங்கிவந்து, 'ஐய! பசியினால் வருந்தினேன்' என்று பணிந்தான்.

'குடையெடுக்கும் இந்தக் குறுங்காற் பூதத்துக்கொருபிடி சோறு கொடு. பிறகு, வழி கூறுகிறேன்.''

உலகுடைய அம்மையார் அண்ணலை வணங்கி நடந்தார். உடனே குண்டோதரனும் ஒய்ந்து நடந்தான். சமையற் கூடத்தைச் சார்ந்தனர். அம்மையார் பணியை யேற்றுப் பணியாளர் குண்டோதரனைச் சோற்றுமலையின் எதிரே கொண்டுவிட்டனர்.

உணவு எங்கே?

அவன் அங்கே சென்று நின்றதை மட்டுங் கண்டனர். அடுத்த நொடியிலே உணவைக் கண்டிலர். அங்கிருந்த பணிப்பெண்களிற் சிலர் கைநெரித்து வியந்தனர். சிலர் அஞ்சித் திடுக்கிட்டனர். சிலர் கண்புதைத் தோடினர்.

வரியின்றித் திட்டப்பெற்ற முனைமுரியாத வெண்மையான சோறு, பால்சேர்த்துச் சமைத்த கறி, பொரிக்கறி, துவையல், பலவகைக் கறிகள், இனிமைமிக்க பால், தயிர், நெய், தேன் ஆகிய - எல்லையற்ற மிடாக்களிலிருந்த—பொருள்களெல்லாம் இமைப்பில் மறைந்தன! பலவகைப் பழக்குவியல்கள், வெவ்வேறு வகையான பண்ணியங்கள், சருக்கரை, கரும்பு, தேங்காய், அரிசி, வேகாத காய்கள் ஆகியவற்றையெல்லாம் அடைத்தும் அவன்பசி நெய் சொரிந்த தழலெனப் பொங்கியது. ஒன்பது வாயிலிலும் பசித் தீ அனல் கக்கியது. உணவு எங்கே? எங்கே? என உழன்றான் குண்டோதரன்.

கோதையணிந்த கோதையார் அவ் வியத்தகு காட்சியைக் கண்டு, நாணத்துடன் நம்பர் முன் சென்று

நின்ருர். பெருமாஞர் புன்முறுவலுடன், 'குடவயிற்றவன் உண்டனஞ? இன்னும் பூதங்களை யேவலாமா?' என்றனர்.

"இறைவரே! இன்னுங் குறிய குண்டோதரன் பசி யடங்கிலது. மேலும் கொடிய பூதங்களையும் விடுத்தீர்களாஞல் உலகமெல்லாவற்றையும் எடுத்து விழுங்கிவிடுவர். அப்பொழுது தாங்களும் 'காலருத்திரன்' என்னும் பெயரை உண்மைப்படுத்திவிடுவீர்கள். இப்பொழுது குறிய குண்டோதரனே வந்து கூறுவான் நிகழ்ந்ததை!"

அப்பொழுது அந்தக் குறளனும் பசியனல் கொளுத்திட அங்கே வந்தான். இருவரையும் வணங்கினன்.

"சோமசுந்தர வள்ளலே! எம்பெருமாட்டியார் சமைத்து வைத்திருந்த உணவெலாம்—மலைபோலக் கிடந்தவை முழுதும்—உண்டேன். அந்தோ! என்னென்பேன்! 'இட்டு உண்ணுதவர் வயிறுபோல்' என் வயிறு இன்னும் எரிகிறதே! அடிகள் முன்னுளில் முப்புரத்தையும் எரித்த தீ கொடும்பசி உருவாய் என் வயிற்றிலே புகுந்ததோ?"

குண்டோதரன் இவ்வாறு கூறிக் கைகளை யெற்றினன்! அண்டம் வெடிபடக் கதறினன்! 'ஐயகோ!' என்ருன்! பெருமூச்செறிந்தான்! உயிர் சோர்ந்து அயர்ந்தான்.

அ. அன்னக் குழியும் வைகையும் அழைத்தல்

உணவு இதோ!

அந்தக் குறளன் நிலையையும் தடாதகையார் நிலையையும் அண்ணலார் கண்டு நகைத்தார். தம் ஆற்றல்களில் (சத்திகளில்) ஒருவராகிய அன்னபூரணியை நினைத்தார். அப்போது நான்கு திக்குகளிலும் நிலத்தின் நடுவே தயிர்க் கடல் தோன்றியதைப்போல நான்கு குழிகளில் வெண்மையான தயிர்ச்சோறு பொங்கியெழுந்தது. திங்கள் குல மன்னவரான சுந்தரர் தம் குடைதாங்கியை நோக்கி, 'உன்பசியைத் தணித்துக்கொள்' என்றார். அவனும் அங்குச்சென்று மந்தர மலைய தன் கையை அத் தயிர்க்கிடங்கிலே யிட்டுப் புதைத் தெடுத்த சோற்றுத்திரளை வாய்மடுத்தான். அன்னக்குழிகள் முற்றும் வெறுமையாயின. அவன் பசியும், 'இறைவராகிய சிவபரஞ்சுடரின் தாளிணைகளிலே அன்பு வைத்தவர் பழவினைத் தொடர்பைப் போல' அகன்றது.

வாங்கி வாங்கி வாயிலிட்டுப் பசிதணிந்த குண்டோதரன் வயிறெலாம் உடம்பானுன்; பருத்தான், மலையென நிலங்கிழிய வீழ்ந்தான்! மூச்சுவிட ஒண்ணுமற் புரண்டான். நீர்வேட்கை மிகுந்தது.

தண்ணீர்! தண்ணீர்!

வாவியும், ஓடையும், குளங்களும் 'உயிர்போன்ற கணவரைப் பிரிந்து வாடும் பெண்களைப்போல' வறண்டு போகுமாறு அவற்றிலுள்ள நீரையெல்லாம் பசையறக் குடித்தான் குண்டோதரன். எனினும், நீர்வேட்கை தணிந்திலது. எனவே, விரைமலர்க் கொன்றைச் சடையரைப் பணிந்தான்; வருந்தினுன். அப் பெருமானுர் தம் திருச்சடையிலிருக்கும் கங்கையை நோக்கினுர்.

"ஆற்றுச் செல்வியே! நீ இந்தத் தடவயல் சூழ்ந்த மதுரையின் அருகிலே ஆருக வருதி," என்று ஆணையிட்டார்.

கங்கை நவில்வாள் :

"முன்னொரு காலத்திலே பகீரதனுக்காகத் தூயநதியாகச் செல்க என்றீர்கள். இன்றும் அவ்வாறே ஓர் ஆருகுக என்றீர்கள். கண்டோர், முழுகினோர், கையினாலே தொட்டோர் யாவராயினும் முற்பிறப்புத் தொடர்ச்சி விட்டு, உள்ளத்திலே இனிய அன்பும் அறிவும் அவற்றால் வரும் வீடும் பெறும்படி யருள்விராக!"

என்று தொழுது விடைபெற்று, அளப்பரிய விரைவோடு வந்தனள். அவள் ஆருகப் பெருகிய அழகை எவ்வாறு இயம்புவது?

வைகை யழகு

அந்த ஆருகிய அணங்கு திரையாகிய கைகளிலே வளையலும், நல்ல முத்துகளாகிய நகையும், நுரையாகிய வளைந்த துகிலும், கொடிகளாகிய நுண்ணிடையும், அறலாகிய (கருமணல்) கூந்தலும், கயல்களாகிய விழிகளும் உடையவளாக இருந்தாள். அந்த ஆறு மணங்கமழும் அகில், வேங்கை, மூங்கில்களெல்லாம் நொறுங்க அடியோடு புரட்டிக்கொண்டு வந்தது; வேடர் குடிசைகளைத் தரை மட்டமாக்கியது. பிணையுடன் கலை, பிடியுடன் களிறு—பிரிவில்லாமலும், மரங்களி லிருக்குங் குரங்குகள் தழுவிய குட்டியுடனும் துணைக்கடுவன்களுடனும், வேடர்களின் கணை சேர்ந்த வில்லுடனும், பரணிலே கவணுடனும் அந்த ஆற்றிலே மிதந்து வந்தன.

அலைகள் குன்றுகளின் அடியை மோதின! அகழ்ந்தன! ஆழமான படுக்கைகளை மேடாக்கின! மரங்களைத் தலை கீழாக இடி கரைகளிலே நட்டன.

அந்த ஆறு பிளிறிக்கொண்டு, மரங்களை யகழ்ந்து, கட்டுத் தறிகளைப் பிடுங்கி, முத்துகளைச் சிந்தி வண்டுகள் மொய்க்க, நுரையாகிய முகபடத்துடன் விரைந்து வருதலாற் களிறு போன்றது.

நீண்ட பிலத்திலே சென்று நிற்பதாலும், இறைவர் பிறைமுடிமே லாடியதாலும், ஒளிவிடும் மாணிக்கங்களைத்

தலைக்கொண்டதாலும், வளைந்து வளைந்து செல்வதாலும், வரிசையாகப் பல கால்களிலே ஓடுவதாலும் வளைந்த உடலுடைய அரவமுமாகியது அவ் யாறு.

நிலத்தை அகழ்வதால் ஆதிவராகத்தையும், வானையளாவ அலைமோதி யெழுவதால் நெடிய திருமாலையும், இனிய வெண்ணெயை அளைவதனாற் கண்ணனையும போன்று கடுகிச் சென்றது அந்த ஆறு.

விளங்கும் கரி, பரி, கவரி மாணிக்கங்களோடு வருவதனால் மேனாட்டரசர்களை வெற்றிகொண்டு திறையோடு வரும் பாண்டியனைப் போன்றது; அல்லது, திறையொடு பாண்டியனைக் காணவரும் மேனாட்டரசனையும் போன்றது.

ஆத்தி, பனை, வேம்பு ஆகிய தாரணிந்து, புலி, வில், கயலாகிய கொடிதழுவி வரலால் தமிழ்நாட்டரசர் மூவரும் பல சிறப்புடனும் வருவது போன்றது அதன் வருகை.

கல்லாருடைய கவிபோலக் கலங்கியிருந்தது. எனினும், பல கலைகளையுங் கேட்ட நூல்வல்லார் கவிபோலப் பல துறைகளினுஞ் சென்று, செல்லும் நெறிதோறும் பொருள்களை ஆழ்ந்து தெளிய, நாட்டிலுள்ள எல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ளவும் அமைந்தது அந்த ஆறு.

குண்டோதரன் நீர்வேட்கை தணிந்தது

வண்டின் ஒலி மாறுத தம் கொன்றைச் சடையிலிருந்து வந்த வெள்ளத்தை, ஆலமுண்ட கண்டரான அண்ணல் கண்டு குண்டோதரனை அதன் அருகே விடுத்தார். அவன் ஆற்றை யடைந்து இருகைகளையுங்கொண்டு அணையிட்டுத் தடுத்து, மலைபோல் நிமிர்ந்து வந்த குளிர்நீரை வாய் திறந்து குடித்தான். தணியாத வேட்கை தணிந்தான். இறைவர்முன் சென்று பணிந்து இன்னிசையாலே வாழ்த்தினான். அவன் பண்கலந்த பாடலைக்கேட்டுப் பரமனார் மகிழ்ந்து, கணங்களுடன் இருக்கக் கட்டளையிட்டார். பிறகு அங்கயற்கண் அம்மையாருடன் அரசாண்டு வந்தார்.

க. எழுகடல் அழைத்தல்

பொன்மாலையின் வினா

அக்காலத்தில் பல முனிவரர்கள் வந்து பரமனாராகிய பாண்டியரைக் கண்டு செல்வது வழக்கம். ஒருநாள் கௌதமர் என்னும் முனிவர் வந்து செல்லும்போது, பொன் மாலை (காஞ்சன மாலை)யின் அரண்மனையை அடைந்தார். அவள் அவரை வரவேற்று வணங்கிப் பொன்னாசனத்திலே யிருத்தித் தவத்தின் சிறப்பை வினவினாள்.

"அடிகளே! நீங்காத பிறவி நோயை நீக்கும் நல்ல தவத்தை நவின்றருள்க!''

முனிவரர் விடை

முனிவரர் மொழிவார்:

உலகைப்பெற்ற தடாதகை யம்மைக்குத் தாயாகினை! சிவபரஞ்சுடரை மருமகனாகப் பெற்றனை! நீ அறியாத நோன்புண்டோ? எனினும் கேள்.

தவம் மூவகைப்படும்: மனத்தாற் செய்வது, மொழியாற் செய்வது, மெய்யாற் செய்வது என விளம்புவர் அவற்றை. அவற்றுள்,

உள்ளத்தாற் செய்தல்: சிவபரம்பொருளைப் பேச்சின்றிச் சிந்தித்தல், தான தருமங்களிலே நினைவுகொள்ளுதல், அருள், பொறுமை முதலாம் பண்புகொளல், ஐம்பொறி யடக்கல், என்பனபோல அளவற்றன.

மொழியாற் செய்தல்: ஐந்தெழுத்தோதல், உருத்திர மறையை மொழிதல், நல்லறங்களை நவிலுதல் முதலாம் பலவுள்ளன.

மெய்யாற் செய்தல்: இறைவராம் பரசிவத்தை மலரிட்டு வணங்கல், கோயில் வலம் வருதல், திருமுன் வணங்குதல், முக்கட்பெருமானார் உறையும் திருப்பதிகளைச் சேவித்தல், திருப்பணி புரிதல், கங்கை முதலான தூய ஆறுபடிதல்

முதலாக முடிவில்லாதன. இவற்றுள் மெய்யாற் செய்யப் பெறுந் தவங்கள் சிறந்தவை. அவற்றுள்ளுந் தூய நீராடலே சிறந்தது. அந்த ஆறுகளிலே தேடிச்சென்று ஆடுவது அருமை. ஆகையால், அந்த ஆறுகள் சென்று கலக்குங் கடலில் ஆடுவது எல்லாவற்றினுஞ் சிறந்ததாகும்.

இவ்வாறு கோதமன் கூறக்கேட்ட பொன்மாலை கடலாடும் விருப்புடையளாய்த் தன் மகளாரான தடாதகையாரிடம் உரைத்தனள். தாய் விருப்பத்தைத் தடாதகையார் சிறிது தளர்ச்சியடைந்து தம் கணவரிடஞ் சாற்றினார்: "அன்று குறள் வீரனுக்கு அன்னக்குழிகளையும் ஆற்றையும் அழைத்த அருட் கடலே! இன்று என் அன்னையார் கடலாடக் கருத்துக் கொண்டார்," என வேண்டினார்.

எழுகடலும் வந்தன

"கடலொன்றோ, எழுகடலும் வரவழைப்போம்," என்று கண்ணுதலார் கனிவுடன் கூறினார்; எழுகடலும் வருகவென எண்ணினார். அப்போது மதுரையின் கீழ்த்திசையிலே எழு கடலும் எழுவகை நிறமொடு வந்து ஒரு வாவியிலே ததும்பி நின்றன. பிறைமதி போன்ற இப்பிகள் வாய்விட அலை வீசி, வெண்மையான நுரை ததும்ப, சுருமீன் உலாவ, வானளாவி யாரவாரித்தன. நகரம் நடுங்க, இறுதிககாலத்திலே பொங்கியது போன்ற கடல் ஒலி, விடையூர்தியார் ஆணையினாலே, 'அவர் அடியை அடைந்தார் போல்' அடங்கி நின்றது.

"தன்வண்ண மெழுகடலின் தனிவண்ண மொடுகலந்து
பொன்வண்ண நறும்பொகுட்டுப் பூம்பொய்கை பொலிவெய்தி
மின்வண்ணச் சடைதாழ வெள்ளிமணி மன்றுடும்
மன்வண்ண மெனவெட்டு வண்ணமொடும் வயங்கியதால்."

௧௦. மலயத்துவசனை அழைத்தல்

மலயத்துவசன் வருகை

எழுகடலும் வந்து நிறைந்த அளவிலே சோமசுந்தர பாண்டியர் அரசியாருடன் சென்று, அந்தப் பொய்கையின் அருகிலிருந்த நந்தவனத்திலே அரியணையிலே அமர்ந்தனர். அப்போது பணியாளரும் பணிப்பெண்களும் தேன் துளிக்கும் மல்லிகை, முல்லை, சண்பகம் முதலான மலர்களைக் கொய்து கொணர்ந்து இருவரிடமும் கொடுத்தனர். அவற்றை வாங்கி மோந்து மகிழ்ந்தனர். பாண்டியர் பாண்டிமாதேவியாரை நோக்கி, "உன்பொருட்டு எழுகடலும் வந்தன. உன் அன்னையை அழைத்திடுக!" என்றனர்.

அவ்வாறே, அம்மையார் தம் அன்னையை வரவழைத்தார். பொன்மாலை ஆண்டுப் போந்து, நூல்வல்லாரை நோக்கிக், 'கடலாடும் முறையென்?' என வினவினள்.

"கணவன் கை, மகன் கை, பசுவின் கன்றினுடைய வால் இவற்றுள் ஒன்றினைப் பற்றிக் கடலாடவேண்டும்," என்றனர் கலைவல்லார்கள்.

கணவனும் மகனும் இல்லாமைக்கு வருந்திய காஞ்சன மாலை கன்றின் வாலைப் பற்றிக் கடலாட வேண்டுமென்று தன் மகளாரிடஞ் சாற்றினள். இரக்கமுற்ற அம்மையார் அண்ணலாரிடம் அன்னையின் குறையை விளம்பினர். எல்லாம்வல்ல இறைவரும் இந்திரனுடன் வீற்றிருக்கும் தம் மாமனை மலயத்துவசனை மனத்தில் நினைத்தார்.

அவர் திருவுள்ளக் குறிப்புணர்ந்து, இந்திரனுடன் வீற்றிருந்தலைவிட்டு, இந்திர விமானத்திலே வந்து எழுகடலுக்கு அருகில் இறங்கினன். பெண்ணைப் பெற்றதனாற் கண்ணுதலை மருகராக அடைந்தோமென்று களிப்பொடுங் கனிவொடுஞ் சென்று மருகர் திருவடி வணங்கப் புகுந்தான். கண்ட பிறை முடியார் அவனைத் தடுத்துத் தழுவினர்.

மலயத்துவசனும் பொன்மாலையுங் கடலாடுதல்

பிறகு, அருளுடன் நோக்கி, 'நின் மனைவியொடும் தூநீராடிச்செல்க!' என்று இயம்பியருளினார். மலயத்துவசன் அண்ணலாரருள் பெற்று மலையரசன்போல மகளாரைத் தழுவி மகிழ்ச்சித் தேனுண்டு திருமணக்கோலங் காணாத குறையைத் தவிர்ந்தான். தன் கணவனைக் கண்ட காஞ்சனமாலை, சிலநாள் பிரிந்திருந்தவனைக் கண்டவள் போலப் பூணுடைய பொற்கொடியென்ன மங்கலவணிகளுடன் சென்று நாணத்துடன் வணங்கினாள். இருவரும் ஐந்தெழுத்தையும் அன்புடன் நவின்று கைகோத்தவண்ணம் கடலாடினர்.

தெய்வவுருவடைதல்—சிவபுரமடைதல்

நீராடிக் கரையேறியவுடன் கண்டார் வியப்படையக் கொன்றைமுடியார் திருக்கண் பார்வையினாலே—மலம் நீங்கி—உமையொருபங்கர் அருள்வடிவைப் பெற்றனர். ஒளிபொருந்திய கறைமிடறும், நான்கு திருத்தோள்களும் நெற்றிக்கண்ணழகும் மண்ணவர் கண்டு வியப்பப்பெற்று விளங்கினர். அப்பொழுது, வானத்தினின்றும் தவறி விழும் ஞாயிறுபோலச் சிவத்திருநாட்டிலிருந்து, தெய்வ விமானமொன்று மண்மிசை வந்து நின்றது.

முத்தேவராய் நிற்கும் முக்கண்ணனார் பணியை மேற்கொண்டு, காஞ்சனமாலையுடன் சிறப்புற்ற தெய்வத் தருவனைய கைகளையுடைய மலயத்துவசன் எல்லாத் தெய்வங்களுந் தொழ அவ் விமானத்தில் அமர்ந்தனன்.

தேன்மழையெனப் பூமழையை வானுலகம் பெய்தது. தூயமறையும் வானமுரசும் 'ஆம்ஆம்' என எங்குங் கேட்கும்படி ஒலித்தன.

விமானம் வானிலெழுந்தது. 'சிவ சிவ' வென்னும் ஒலி வானமுரசும் நாண எங்கும் எழுந்தது. தொழத்தக்க முனிவர்கள் போற்றினர். வானவர்கள் வணங்கினர். இவ்வகைச் சிறப்புடன் சிவநகர் நாடிச் சென்றனர், மலயத்

துவசனும் பொன்மாலையும். முதலில் தங்கள் உருவைக் கொண்டு அரசாட்சியை யேற்றுப் பிறகு, தங்களுருவை யருளிய மருகரும் அன்புமிக்க தடாதகைப் பிராட்டி யாரும், பொன்னுலான விமானத்தையுடைய திருக்கோயி லிலே வீற்றிருப்பதை இருவரும் கண்டனர். கண்டு, களிந்து, பழவினையினாலே யாக்கை முறைமாறித் தோன்றும் மக்களைப்போலப் பண்டைய அருளுருவம் மாறி, "உலகீன்ற அன்னையார் மகளாகவும், தந்தையாரே மருகராகவும் கிடைக்க நாம் செய்த தவம் என்னவோ?" என்று நெகிழ்ந்தனர்.

கன்றைவிட்டுச் செல்லும் ஆவைப்போலத் திருக்கழ லணிந்த அடிகளை விடாமற் பற்றி ஒன்றுபட்ட அன்பு பின்னாலிருந்து இழுக்க, இருகண்களும் உள்ளத்துடன் சென்று அம்மையப்பரின் அருளுருவைக் கண்டுகண்டு திரும்ப, மலையென வுயர்ந்த இந்திர விமானத்தை வணங்கிக் கைகுவித்தவாறே சென்றனர்.

அவர்கள் புவலோகம், சுவலோகம், மகலோகம், சன லோகம், தவலோகம், சத்தியலோகம் என்னும் உலகங் களைக் கடந்து, வைகுந்தத்தையுங் கடந்து சிவலோகம் அடைந்தனர்.

தடாதகையார் மகிழ்ச்சி

அறத்தின் கொடியான அம்மையார், பாண்டியர்க் கரசைப் பன்முறை பணிந்து, தம்மைப் பெற்றோர்க்குத் தம் வடிவை அருளிய அருளை யெண்ணிய மகிழ்ச்சி வாய் கொள்ளாமற் புறப்படுவதைப்போல—அண்ணலாரின் இரு திருச்செவிகளிலும், செங்குமுதத்திலே நிறைந்த இனிய தேனை நிறைப்பதைப்போல—நவில்கின்றார்:

"அளவற்ற அமரர்க்கும் யாவருக்கும் பயனளிக்கும் இமையவருலகக் காமதேனுவின் கன்றினுக்குக் குறையு முண்டோ? எனக்காக—என் அன்னை ஒரு கடலை விரும்பிய தற்கு—எழுகடலையும் அழைத்தருளினீர்கள், கடலில் ஆடக்

கணவனையும் விண்ணிலிருந்தழைத்து, என் அன்னைக்கு வழங்கினீர்கள். தங்கள் திருவடிவையும் அளித்தீர்கள். சிவலோகமுஞ் சிறக்க அருளினீர்கள். பாண்டியர்மரபு இறந்துவிடு மென்னும் பழிபடாமற் பொன்முடி புனைந்து செங்கோல் செலுத்தி வருகிறீர்கள் போலும்! மேலும் இந்த நிலைக்கு இடையூறென்றும் நேராதே?''

இவ்வாறு மிழற்றிய அம்மையார் கருத்தை அண்ணலார் உணர்ந்து புன்முறுவல் செய்தார்.

''கோதறு கற்பினுய் கொழுநன் கைத்தலங்
காதலன் கைத்தல மன்றிக் கன்றின்வால்
ஆதலிம் மூன்றிலொன் றங்கை பற்றியே
ஓதநீ ராடுதன் மரபென் றோதினர்.'' (சு)

''ஆத்தன் றிருவுள் ளமகிழ்ந் தருளான்
பார்த்தன் புவிரம் பியபன் னியொடுந்
தீர்த்தம் புகுந்தா டியசெல் கவெனப்
பூத்தண் பொருநைப் புனலா டவனும்.'' (கரு)

''குடைந்தார் கரையே றினர்கோன் றைமுடி
மிடைந்தார் கருணைக் கண்விழிக் கமலம்
உடைந்தா ரனைமா ருதரங் குறுகா
தடைந்தா ருமைபா கரருட் படிவம்.'' (கக)

''முன்புதம் முருவாய் வைய முறைபுரி கோல்கைக் கொண்டு
பின்புதன் னுருவந் தந்த மாநகனும் பெருகு கேண்மை
அன்புதந் தருகு நின்ற தடாதகை யணங்கு மீண்டு
பொன்புனை குடுமிக் கோயில் புகுந்துநன் கிருப்பக் கண்டார்.'' (உரு)

''முன்னைவல் வினையால் யாக்கை முறைதடு மாறித் தோற்றம்
மன்னிய மனிதர் போலப் பண்டைய வடிவ மாறி
அன்னையே மகளா வீன்ற வப்பனே மருக னாக
என்னையாம் நோற்றே மியார்க்கு மியற்றருந் தவந்தா னென்னா.'' (உசு)

கக. உக்கிரபாண்டியர் திரு அவதாரம்

தோற்றம்

தண்ணிய பிறை முடித்த சோமசுந்தரத் தென்னவர் நீண்டகாலம் தம்முடைய திருவடி நிழல்போல, யாவருக்கும் தம் திங்கள் வெண்குடை நிழல் செய்ய, உலகம் உடலாகவும் தாம் உயிராகவும் அரசாட்சி செய்தருளினர். என்னே தென்னாடு செய்த தவம்! மலரவனும் மாலும் மறைமுதலான கலைகளுங் காண்பதற்கரிய முதல்வர் அடியார்க் கெளியராம் இயல்பை விளக்கப் பாண்டியனுக்கும் கற்புடைய காஞ்சனைக் கும் திருமகளாராக உமையை யருளினர். அம்மட்டோ, தாமும் மருகராகி உலகெலாம் தம் குடை நிழல் வாழ முறையுஞ் செயதார். ஆகலால், தமிழ் மூவேந்தரிலே தென்னவர் குடியே சிறப்பெய்தியது! மேலும், உள்ள ஒரு குறையையும் போக்கத் திருவுளங்கொண்டார்.

"ஒன்றினைச் செய்கை, செய்யா தொழிகைவே றென்று செய்கை
என்றிவை யுடையோ னுதி யீறிலாப் பரமயோகி
நன்றுறீ நிகழ்ச்சி வேட்கை நட்பிகல் வினைக்கு மாயை
வென்றவன் செய்யும் மாயை விருத்தியா ரளக்க வல்லார்?"

எல்லாம் வல்ல இறைவரின் திருவிளையாடல் யாவ ராலே அளக்கவியலும்? இந்திரசால விச்சைபைக் காட்டு வான்போலத் தம் நெற்றிக்கண்ணிலே தோன்றிய முருகப் பெருமானை—உலகமுழுவதையும் கருப்பம் இன்றிப் பெற்ற அன்னையராம் தடாதகையாரிடத்திலே—தோன்றவேண்டும் எனத் திருவுளத்திலே எண்ணினர்.

அதற்கேற்ப, அன்னையரின் தோழிகளும் பிறரும் வணங்கி, 'அம்மையே! தங்கள் உருவுக்கேற்றவாறு கருவுறும் அழகும் சிறப்பும் திங்கள்தோறும் செய்யும் மங்கலக் கோலமும் காண ஆவல் பொங்கி நிற்கிறோம்,' என்றனர். தடாதகையாரும் அவ்வாறே கருப்பக்குறி பெற்றனர். எல்லாப் பெண்களையும் போலவே திங்கள் தோறும் மெய்வேறுபாடும் பெற்றார். நாவிற்குச் சுவை

யான பொருள்களை விரும்பினர். எளிய பொருள்களும் அரிய பொருள்களும் வந்து குவிந்தன. பல நாட்டுச் சுவைப் பொருள்களும், வானவர் அமுதமும், திங்களின் அமுதமும் ஏவலர் கொணர்ந்தளித்தனர். புண்ணிய முனிவரும் மறைநூல் வல்லாரும் வந்து, அரச மரபுக்குரிய சடங்குகளை மதுரைமாநகரே மங்கல வேள்வியிலே முழுகி நிற்க, ஒவ்வொரு திங்களிலும் இயற்றினர். பத்துத் திங்களும் பயன்பெற்றன.

பத்தாந் திங்களின் முடிவிலே கன்னிநாடு செய்த நல்லறப் பயன் தலைப்பட—மாசறத் துறந்தவர்களின் உள்ளம் போல வானமானது களங்கமின்றி விளங்க—திங்கட்கிழமையும் திருவாதிரை நாளும் செய்த பூசையின் பயன்பெற—வியாழன் கேந்திரத்திலே விளங்க—நான்மறை முழங்க—மந்தார மலர் மழைபெய்ய—மலர்கள் மலர்ந்து ஆடும் மின்னற்கொடிபோல எங்கும் அரம்பையர் ஆட—வான துந்துபி ஐந்தும் முழங்க—கொற்றவையும் கலைமகளும் திருமகளும் சிறப்படைய—அந்தணர் களிக்க—வேள்வி வலஞ் சுழித்து வளர—இந்திரன் வருணன் மேருமலைத் தலைவன் ஆகியோர்க்கு இடந்துடிக்க—நஞ்சை அமுதமாக்கிய நம்பரும் அங்கயற்கண் அம்மையாருங் கொண்ட கோலத்திற்குத் தக்கவாறு காலை இளஞாயிறு போல—அப்பொழுது தோன்றிய குழந்தைபோல—அம்மையார் திருவயிற்றிலே—வேப்பந்தார் முடித்த மீனவராக முருகப் பெருமானர் பிறந்தருளினர்.

மதுரைமாநகரின் மகிழ்ச்சி விழா

மதலையைக் கண்ட பிராட்டியார் மகிழ்ச்சியுடன் எழுந்து, உச்சிமோந்து, தழுவி, மணாளரிடங் கொடுத்தனர். அப்பர் கனிவுடன் மோந்து திரும்பத்தரப்பெற்றுத் தம் கொங்கைகளிலிருந்து வடியும் பால வெள்ளத்தை வெண்ணிலா வெள்ளம் குமுத மலரிலே பெய்வதைப்போலத் தம் மதலையார்க்கு ஊட்டினர்.

திருமாலும், நான்முகனும் கற்பகத்தருவின் நீழலோனும் முதலான வானவர்களும், புலமையிற் சிறந்த முனிவர்களும்,

தத்தம் வாழ்க்கைத் துணைவியரோடு பாண்டியர் அரண்மனையை அடைந்தனர். சேரனும், சோழனும், வடநாட்டு மன்னரும், குறுநிலத் தலைவரும், அவர்களிற் சிறந்த தொண்டை நாட்டரசனும் கடல்பொங்கி வருவதுபோல அளப்பிலாப் படைகளுடன் வந்து குழுமினர்.

வந்தவர்கள் யாவரும் பாண்டியரையும் தடாதகையம்மையாரையும் முறைப்படி வணங்கி வாழ்த்தித் தம் மகிழ்வை விளம்பி, அவர்களின் அருள்பெற்றுத் திரும்பினுர்கள். அப்போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சி அளப்பரிது.

"பாண்டிய மன்னருக்கு முருகனே திருமகவானுர்!"

"குற்றமற்ற கற்புடைய கோமாட்டியார் செய்த புண்ணியம்!"

"அழகினுலே காமனும் பெண்மையை விரும்பும் இவன் ஆட்சி எழுகடல் சூழ்ந்த உலகிற்கு மட்டுமோ? ஏழுலகையும் காக்கும்!"

"மக்கள் செய்த தவமோ? தென்னுட்டார் புண்ணியமோ? பெருமைமிக்க வானவர் தவமோ? அந்தணர் நோன்போ? முனிவர்கள் தவமோ? தோற்றமும் முடிவு மில்லாத முதல்வரின் உள்ளத்திலூறிய அருள்போல இக்குழவி தோன்றியது!"

"அறஞ்செய்த புண்ணியமோ? பொருள் செய்த புண்ணியமோ? காமம் நோற்ற நோன்போ? வீடு செய்த விழுமிய தவமோ? இத்தத் திருமகன் பிறந்தான்!"

இவ்வாறு வந்தவரெல்லோரும் மகிழ்வுடன் உரையாடிக் கொண்டு சென்றனர்.

மதுரை மக்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மனைகளிலே மங்கல ஆரவாரம் எழத் திருவிழா நிகழ்த்தினர். நகரமெங்கும் தெருக்களிலே நறுமணப்பொடியும் பொரி

யும் அரிசியும் ஆகி நிரம்பின. குளிர்ந்த சிவிறிகளினுலே வீசப்படும் தண்ணிய பனிநீரும் சந்தனமும் எண்ணெயுங் கத்தூரிக்குழம்பும் கலந்தன.

செம்பொன்னுற் செய்யப்பெற்ற சிறுதுருத்தி, துளைகளை யுடைய குழல், வட்டமான சிவிறி, வெண்பொனனுல் (வெள்ளி) ஆன அண்டை என்னும் நீர்வீசுங் கருவிகளைக் கொண்டு மகளிரும் மைந்தரும் மாறிமாறி ஒருவர்மேல் ஒருவர் நீரைப் பெய்துகொண்டு - காமன் அம்பைந்துங் கொண்டு மாறி மாறித் தாக்க ஆடினுர்கள்.

பெயரிடல் முதலாம் நற்செயல்கள்—கலைப்பயிற்சி

இவ்வாறு மதுரைப் பழம்பதி மகிழ்ச்சியிலே முழுகியது. தென்னவர் தலைவர் தம் மகவுக்குச் சாதகம் முதலானவற்றை அரசர்க்குரிய முறைப்படி மறையில் வகுத்தவாறு நிகழ்த்தினுர். கடலரசன், கற்பகத்தரசன், மேருவரசன் முதலாகிய பகை வீரர்கள் அஞ்சுதற்குரிய நிலையராயிருப்பதனுல் அத் திருமக ஞர்க்கு 'உக்கிரவர்மர்' எனத் திருப்பெயரிட்டார்.

நான்காந் திங்களிலே சந்திமிதித்தல், (கோவிலுக்குக் கொண்டுபோதல்) ஆருந் திங்களிலே உணவு ஊட்டல், பதின் மூன்ருந் திங்களிலே சிகையெடுத்தல், ஐந்தாம் ஆண்டிலே நூல்களிற் கூறியவாறு பூணூல் தரித்தல் —என்னும் விழாக் களைச் சிறப்புற நடத்தினா.

பிறகு, வியாழனைக்கொண்டு பதம், நிரை, சாகை, ஆரணம் என்னும் உறுப்புகளால் நிரம்பிய மறைமுதலாங் கலைகளையும், வெற்றிக்குரிய சிறந்த விற்கலை, வாட்பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம், தேரூர்தல் முதலான படைப்பயிற்சிகளையும் சோமசுந்தரபாண்டியர் கற்பித்தார். ஆசிரியன் வாயிலாகக் கற்கவேண்டும் என்னும் முறையினுலே கற்கத்தொடங்கிய உக்கிரவழுதியார் ஒருமுறை கேட்ட அளவிலே அறுபத்துநான்கு கலைகளையும் நன்ருக வுணர்ந்தார். வேறு ஒருவராலுங் கற்பிக்க இயலாததாலே சோமசுந்தர

பாண்டியரிடத்திலேயே பாசுபதம் என்னும் தெய்வக்கணையைக் கையாளும் மறையைக் கற்றார். இவ்வாறு எல்லாக் கலைகளையும் எட்டாண்டு நிரம்பின வளவிலே எளிதின் உணர்ந்தார். சிறு பருவததிலே பேரறிவுடன் திகழும் செல்வரைக் கண்டு பெற்றோர் மகிழ்ந்தனர்.

திருவிளையாடல்

உக்கிரபாண்டியர் கலை முற்றிய பிறகு தம்முடனொத்த அரசிளங்குமரரொடு கூடி, களிறுகளுடன் களிறுகளையும் தகருடன் தகரையும், கோழியொடு கோழியையும் போர் செய்யச் செய்வார். ஒளிவீசும் மணிப்பலகையிலே நான்குறுப்பு (சதுரங்கம்) ஆடுவார். காற்றினும் விரைந்து செல்லும் பரிமீது காதம் பல கடந்து மீள்வார். சீற்றம் மிகுந்த களிற்றினை யூர்ந்துசென்று வருவார். வைகையாற்றினும், நந்தவனத்திலே பொய்கைகளினும் நீர் விளையாடுவார். வீரரொடு மற்போர் விளைப்பார். மலையமலைக்குச் சென்று வேட்டையாடுவார். அங்குள்ள துறவிகளின் வாழ்த்தைப் பெறுவார். அவர்கள் செய்யும் நறுஞ் சுவைக்கனி விருந்தேற்பார். இவ்வாறு பதினைந்தாண்டுகள் கடந்தன. பதினாறாம் ஆண்டிலே மயிலும் வேலும் தங்கள் தலைவர் தங்களைவிட்டு வந்ததை யுணர்ந்து, முன்போல் அவரிடம் வந்தடைந்ததைப்போல மங்கைப்பருவ மின்னனார் தங்கள் சாயலுங் கண்களுமாகக் காதலித்துச் சூழ்ந்தனர்.

அரசிளங்குமரர்—முப்பத்திரண்டிலக்கணம்

தாமரை மலர்போலக் கண்களையும் உள்ளத்தையும் கவரும் கழலணிந்த திருவடி—நூல்களிற் கூறிய இலக்கணத்தின்படி, திரண்டு நீண்ட, சங்கினையும் திரட்சியிலே வென்ற முழங்கால்—யானைத் துதிக்கையனைய தொடை—சிறுகிய வயிறு—தாழ்ந்த கொப்பூழ்—கண்ணாடிபோன்ற அகன்ற கல்லென உரம்பெற்ற மாாபு—வீணைத்தண்டைப் போல இணைந்து நீண்ட கை—பொருப்பினையொத்த தார்

தவழுந் தோள்—வலம்புரிச்சங்கனைய கழுத்து—திருமகள் இருக்கையான தாமரை மலரனைய திருமுகம்—பெற்ற தம் திருமகனாரைத் தென்னவர் பெருமானார் சீர்கொள நோக்கினார்.

வயிறு, தோள், நெற்றி, மூக்கு, மார்பு, கையடி—இந்த ஆறும் உயரின் செல்வனாவான். கண், கதுப்பு, கை, மூக்கு, மார்பு—இவ்வைந்தும் நீண்டிருந்தால் நலம் பெறுவான். குடுமி, தோல், விரற்கணு, நகம், பல்—இந்த ஐந்தும் சிறுத்திருந்தால் நீண்டநாள் வாழ்வான். கோசம், கணைக்கால், நா, முதுகு—இந்த நான்கும் குறுகியிருந்தால் திருப்பெறுவான். தலை, நெற்றி—இந்த இரண்டும் அகன்றிருந்தால் நன்மை பெறுவான். உள்ளங்கால், உள்ளங்கை, கண்ணின்கடை, இதழ், அண்ணம் (மேல்வாய்), நா, நகம்—இந்த ஏழும் சிவந்திருந்தாற் சிறந்த இன்பம் பெறுவான். மார்பு, கழுத்து கொப்பூழ்—இவை மூன்றும் ஆழ்ந்திருந்தால் நலஞ்சிறந்த பெரியோனாவான்.

இவ்வாறு கூறப்பெற்ற முப்பத்திரண் டிலக்கணமும் உக்கிரபாண்டியரிடம் நிறைந்திருப்பதைப் பெருமானார் நோக்கிக் களித்தார். இவற்றுடன் புகழ், நெறி, அறிவு, நன்மனம், உண்மை, சிறப்பு, கடவுளன்பு, பண்பு, அமைதி யுள்ளம், அருள், ஈகை, கல்வி, வெல்லுதற்கரியாரை வெல்லுதல், செல்லுதற்கரிய இடத்துச் செல்லுதல், மலர்மாலை சுமத்தல்போல உலகாட்சியைச் சுமத்தல் என்பன போன்ற இயற்கைப்பண்பும் பெற்றிருப்பதால் உலகெலாம் ஒருகுடையி லாளும் ஒப்பற்ற அரசு ஆவர் என உளம் மகிழ்ந்தார்.

பிறகு, அமைச்சரோடு ஆராய்ந்து முதலிலே திருமணஞ் செய்வித்துப் பிறகு திருமுடி புனைவோமென்று துணிந்தார்.

கஉ. உக்கிர பாண்டியருக்கு வேல் வளை செண்டு கொடுத்தல்

திருமணம்: மணவூரரசன் கனவு—பெண் பேசல்

சுந்தரத் தென்னவர் தம் திருமகனுர்க்குத் திருமணம் புரிய விரும்புவதை யறிந்த அமைச்சர்கள் அறிஞரொடு வந்து அமர்ந்து, நிலத்திருவும், மரபும், குடியும், புகழும் உக்கிர குமரனுர்க் கேற்றவாறு உடைய அரச மரபை ஆராய்ந்தனர். ஆராய்ச்சி முடிவிலே வடநாட்டிலே, நீர் வளமிக்க மணவூர் என்னும் நகராளும் சோமசேகரன் பெற்ற காந்திமதி யென்னுங் கன்னியைத் தேர்ந்தெடுத்தனர். ஆகவே, சான்ருேரைக் கொண்டு மணம் பேச விருந்தனர்.

அன்றைய இரவிலே இரவிகுல மணவூரரசன் கனவிலே திங்கள் முடித்த சடைப்பெருமான் எழுந்தருளினுர்.

"யாம் மதுரைச் சோமசுந்தரக் கடவுள். நீ பெற்ற திருமகளாய செல்வியை மதுரைக்குக் கொண்டுசென்று, சுந்தரத் தென்னவன் மகனுக்குக் கொடுப்பாயாக!"

மணவூரரசன் உள்ளக்கமலமும், முகக்கமலமும் மலர்ந்தன. உடனே கண் விழித்தான். கைம்மலர் குவித்தான். கொன்றை வேணியர் திருவருளை நினைந்துருகிக் கனிந்தான். அன்பு வெள்ளத்திலே அழுந்தினுன். கீழ்த்திசை வெளுத்துக் கதிரவனும் விழித்தான். காலைக்கடன்களை முடித்த காவலன் அமைச்சருடன் கலந்து நால்வகைப் படை சூழத் தன் திருமகளைப் பைந்தொடியார் சூழத் தேர்மீது ஏற்றிக்கொண்டு மதுரைநோக்கி வந்துகொண் டிருந்தான்.

நேற்று மணம்பேசப் பாண்டியமன்னர் கூறியவாறு, மந்திரிகள் அரசர் உறவினருடன் மணவூர் நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஆகையால் இருவரும் எதிர்ப்பட்டனர். இரவிகுல மன்னனைப் பெண் கேட்டனர் தென்னவர் உறவினர். அவன் தன் குலமுங் குடியுங் கூறிக் கனவிலே கண்ணுதலார் அருளியதையும் மொழிந்து திருமணம்

நேர்ந்தான். இதனைப் பணியாளர் வாயிலாகப் பாண்டிய ருக்குத் தெரிவித்து மணவூர் மன்னனுடு மதுரை வந்தடைந்தனர்.

திங்கள்குலச் சீரியர் கதிரவன்குலக் காவலனை எதிர் கொண்டார். அவன் பணியத் தழுவி, முகமன் கூறினுர்; அழகிய அரண்மனை யொன்றிலே அமர விடை கொடுத்தார்.

திருமணத் திருமுகம்—எல்லோரும் வருதல்

பின்னர், அமைச்சர் எல்லா அரசர்களுக்கும் திருமண நாள் குறித்துத் திருமுகம் விடுத்தனர். மதுரையை அணிசெய்ய வள்ளுவன் யானைமீது அமர்ந்து மண முரசறைந்தான்.

மதுரைமாநகர மக்கள் தம் வீடுகளைப் புதுப்பித்தனர். தெருவெங்கும் பந்தரிட்டுக் கமுகும் வாழையுமாகக் கட்டினர். பாலிகையும் நிறைகுடமுமாக நிறுத்தினர். கொடியுந் தோரண முங் கட்டினர். மதுரை நகர் மண நகராக விரைவிலே மாறியது. தடாதகையார் திருமணத்தின்போது மதுரை நகர் தானே தனக்குவமையாக அணி செய்யப் பெற்றிருந்தது. இன்றே தனக்குத்தானே அதிகமாகக் கவின் பெற்றிருந்தது.

இவ்வாறு நகர் நலம்பெற அணி செய்துகொண் டிருக்கும்போது சோழன், சேரன் ஆகிய முடிமன்னரும் குறுநிலமன்னரும் வந்தனர். சீனர், சோனகர், சிங்களர், கொங்கணர், மாளவர், சாளுவர், சாவகர் முதலான அயல் நாட்டு வேந்தரும் வந்து சேர்ந்தனர்.

முப்புரிநூலொடு பிணிப்புற்ற மான்தோலுடனும், சுருக்கப்பெற்ற தாழும் ஆடையுடனும், அழகிய தருப்பை யுடனும், பலாசக் கோலுடனும் நூலுணர் மாணவர் (பிரமசாரிகள்) வந்தனர். வட்டநீர்க் கலமும், குண்டலக் காதும், தீயைத்தொட்ட கோலும், நீறு விளங்கும் நெற்றியுமாக வாழ்க்கைத் துணைவியரொடு இல்லற வாழ்வினர் வந்தனர். முண்டித்த தலையுடனும், வெள்ளொளிவிடும் பற்களுடனும்

குண்டிகைக் கையுடனும், கோவணம் முடித்த தண்டேந்திய கையுடனும், செங்காவி யாடையுடனும் உண்மை யுணர்ந்த துறவிகள் வந்தனர். பாற்கடல் பவளக்காட்டுடன் வந்தாற் போல வெண்ணீறு விளங்கும் மெய்யராய்ச், செஞ்சடையராய் மறைமுடிவை யுணர்ந்த மாதவர்கள் வந்தனர். சைவத்தின் அகச் சமயத்தவரும் புறச் சமயத்தவரும் திருநீறணிந்து, ஐந்தெழுத்து நவிலும் நாவுடன் வந்து சேர்ந்தனர்.

வெள்ளையானை யூர்தியும், திருமகள் பொருந்திய மார்பனும், தாமரைக் கோயிலவனும் மற்றுமுள்ள வானவரும் பதினெண்கணத்தவரும் வந்து கூடினர்.

வந்தவர்கள் யாவரும் அரண்மனையடைந்து, அரியணை மீது வீற்றிருக்கும் தடாதகைத் தாயாரையும் சோமசுந்தரத் தென்னவரையும் வணங்கினர். பாண்டியரும் அவரவர்கட் கேற்ற வரவேற்பு நல்கி இருப்பிடமும் அமைத்துக் கொடுத்தார்.

திருமணப்பெண்ணின் இலக்கணம்—வியாழன் விளம்பியது

வியாழன் திருமணப் பெண்ணாகிய காந்திமதியின் மெய்யிலக்கணங்களை நூன்முறைப்படி ஆராய்ந்து கூறினான்.

குறுகாமல் நீண்டு, நுனி பிளவாமல் குழைந்து, நன்றாகத் தழைத்து முகிலைப்போலவும் வண்டைப்போலவுங் கறுத்து, இயற்கையான நறுமணத்துடன், நெருங்கி, மெல் லென்று, தெளிந்த குழலாளின் கணவனுக்கு வளமிக்க செல்வமுண்டாகும். யானையின் மத்தகம்போன்ற—திரண்டு உயர்ந்த—தலையினாளின் கணவன் நீண்ட வாழ்வுடன் அரசனாகவுமிருப்பான். எட்டாந் திங்கள்போல—மயிரில்லாமல் —நரம்பு தோன்றாமல்—மூவிரல் அகன்ற—செழித்த—நெற்றி யாளின் கணவன் செல்வமும் நோயற்ற வாழ்வும் பெறுவான். கடை சிவந்து—ஆவின் பாலைப் போல வெளுத்து—நடுவிழி நன்கு கறுத்து—அழகுடன்—தண்ணிய நோக்குடன்—கருமயி ரடர்ந்த இமையுடன்—உள்ள கண்களையுடையவளின் கணவன்

இனிமை பெறுவான். வளைந்த வில்போலத் தங்களுக்குள் ஒத்த கரிய புருவங்களும், இருதுளையும் அழகாக வுருண்டு—எள்மலர் தாமரைமலர்போல் மலர்ந்தாற்போல உள்ள மூக்கும், வள்ளைக்கொடிபோலத் தாழ்ந்து, நல்ல சுழியுடன் முன்னர்த் தள்ளிய காதுகளும் அழகும் நன்மையுமுடையன. வட்டமாகத் தசைபொருந்தி உயர்ந்து கண்ணுடி போலத் தெள்ளிய இனிய ஊற்றமுடைய கன்னங்கள் நல்லவை. கொவ்வைக் கனிபோலத் திரண்டு இரு பக்கமுங் குவிந்து சிறந்த இதழ்களையுடையவள் தன் கணவனுக்கு நட்புடையாள். இடைவெளியின்றி நெருங்கி மேலும் கீழும் ஒழுங்காக ஆவின் பாலைப்போல வெண்மையான முப்பத்திரண்டு பற்களும் அமைந்திருந்தால் நன்று. மென்மையாய்ச் சிவந்த அழகிய நாவினுள் விரும்பியவை யெல்லாம் பெறுவாள். தசைபெற்று வட்டமாக இரண்டங்குல அளவிலே அழகாக இருக்கும் மோவாய் நல்லது. அக விதழையுடைய தாமரை மலர்போல, ஒளிபெற்றுத் திங்கள்போல முகம் இருத்தல் வேண்டும்.

சங்குபோலத் தசையுடன் நால்விரலளவாகத் திரண்டு மூன்று இரேகைகளுடன் விளங்குங் கழுத்துடையாள் கணவன் உலகாள்வான். தசைப்பற்றுடன் மயிரின்றி, நரம்பு தெரியாமல், பதினெண்விரலகன்று, மிதப்பாயிருக்கும் மார்பு மிகவுஞ் சிறப்பாகும். குற்றமறத் தசைபெற்று, மயிரின்றி, என்பும் நரம்புமுடிச்சும் புலப்படாமல் இருக்கும் வேயனைய தோட்கள் அழகியவை. நீண்டு உருண்டு கணுக்களுடன் முறையே சிறுத்திருக்கும் செங்கைகள் செல்வமும் இன்பமும் நல்கும். சிவந்து உருண்டு கண்களையும் உள்ளத்தையுங் கவருந் தன்மையுடன் சர சரப்பில்லாத நகங்கள் நல்லவை. மென்மையாய்ச் சிவந்து, இடைவெளி அகன்று, இடை உயர்ந்து, அழகுடன் சில வரைகளுடன் உள்ள உள்ளங்கைகள் நல்லிலக்கண முடையவை. வன்மையாய்த், தசைப்பற்றுடன், வட்டமாய்க் குடம்போன்று, நிமிர்ந்து, ஈர்க்கும் இடைபுகாமல் நெருங்கியுள்ள கொங்கைகள் சிறந்தன. மெலிந்து, மயிரொழுங்குடன், அயலில் மயிரின்றி, நரம்பு தோன்றாத

வயிறு உணவு விரும்பியவாறு பெறும். வலஞ் சுழித்து, ஆழ்ந்த கொப்பூழ் அளவிலா வளந்தரும். மயிரகன்று யானைத் துதிக்கைபோலவும், வாழைத்தண்டு போலவும் இருக்கும் தொடை அழகியது. எலும்பு மறைந்து வட்டமாய்த் தசைபெற்றிருக்கும் முழங்கால் அழகியது. மயிரகன்று நரம்பு தெரியாமல் உருட்சியாய்ச் சிறுத்துச் சமவடிவமாய் இருக்கும் கணைக்கால் அழகியது. என்பும் நரம்புந் தெரியாமல் தசைபெற்றுள்ள—ஆமை முதுகைப் போன்ற—புறவடியுடைய மங்கையின் கணவன் மன்னவன். உயர்ந்து தூயவாய் அழகுடன் கழுநீர் மலர்களின் இதழ்களை வரிசையாய்ப் பதித்தாற்போன்று ஒழுங்காகத் திரண்டு—அரைத்திங்களைப் பொருத்தினாற்போன்ற நகங்களுடன்—மென்மையாய் உள்ள கால் விரல்கள் நல்லவை. தசையும் மென்மையும் சமமும் குற்றமின்றியுள்ள உள்ளங் கால்கள் நல்லவை. அழகிய மாந்தளிர்போலச் சிவந்து, பொன்போன்ற நிறத்துடன் எப்போதும் வியர்வையின்றி வெப்பமாய் இருக்கும் மெய் செல்வந்தரும். பாதிரி, குவளை, தாமரை, மல்லிகை, சண்பகம் என்னும் மலர்களின் மணம்போன்ற உடலின் மணமும், குயில், கிளி, யாழ்போன்ற சொற்களும் பேறுடையவை.

இவ்வாறு கூறப்பெற்ற—கூந்தல் முதலாகத் தாமரை மலரனைய அடிவரையிலுள்ள—இயல்களெல்லாம் காந்திமதிக்கு நிரம்பியிருப்பதாக நூலுணர்வினாலே ஆராய்ந்து இவ்வுலகிலன்றி வானவருலகினும் இத்தகைய இலக்கணமுடைய தோகையர் இல்லையென்றான்.

அதனைக் கேட்டவர் யாவரும் பொங்கும் மகிழ்ச்சியரானார்கள்.

திருமணம் :

இனி, உக்கிரகுமரனார் யானையின்மீது பொற்குடங்களிற் கொணர்ந்த—சங்கு தவழும் துறைகளையுடைய—வைகை நீரிலே குளித்தார். பொன்மயமான ஆடைகளையணிந்தார். இதழ்விரிந்த கண்ணியைப் புனைந்தார். புழுகு

கலந்த சந்தனத்தைத் திமிர்ந்தார். சிறந்த அணிகலன்களை அணிந்தார். ஒளிவிடுங் கலைநிறைந்த திங்கள்போல வந்து திருமண மண்டபத்திலே பூந்தவிசிலே அமர்ந்தார். அப்பொழுது மணப்பெண்ணும் நறுமண நீராடிப் பொன்னுடையும் நவமணிக்கலன்களும் பூண்டு நம்பியின் வலப் பக்கத்திலே அமர்ந்தாள்.

சோமசேகரன் தன் மனைவியுடன் வந்து, உக்கிர குமரரைப் பரமசிவனாராகவும்,. காந்திமதியை உமையாகவும் மதித்து, நறுநீராலே நம்பியின் திருவடிவிளக்கி, நறுமணமாலை யணிந்து, இனிய உணவு வகைகளை (மதுவருக்கங்களை) ஊட்டி, நங்கையின் கையைப்பற்றி நம்பியின் கையிலே வைத்தான். உயர்ந்தோ ரறிய நல்ல மறைகளைப் புகன்று, 'நான் ஞாயிறு மரபினன். என் பெயர் சோமசேகரன். திங்கள் மரபிலே வந்த சோமசுந்தரனார் திருமகனார்—உலகைக் காக்கும் உக்கிரகுமரனார்க்கு இன்று என் மலர்க்கோதையை மனமுவந்து கொடுத்தேன்,' என்று நறுநீர் வார்த்துக் கொடுத்தான்.

பிறகு, மணிவடங்களையுடைய வயிரவூசல்—ஐவகைப் பதஞ்செய்த பஞ்சணை—அன்னத்தூவியணை—பாவை விளக்கு—உணவு சமைக்கும் உயர்கலன்கள்—பொற் காளாஞ்சி—உண்கலன்கள்—முத்துமாலைப் பேழை—நுண்ணிய துகில் பேழை—பட்டாடைப்பேழை—என அளவிலாப் பொருள்களையும் பணிப்பெண்களையும் கணக்கிலாப் பொன்னையும், மூன்று மூதூர்களையும் பெண்பேருக (சீதனமாக) அளித்தான்.

இசைக்கருவிகள் இசைத்தன. மங்கல முரசுகள் முழங்கின. மந்தார மலர்மாரியை வானவர் பொழிந்தனர். வேள்வியிலே செந்தீ வலமாகச் சுழித்து ஓங்கியது. மங்கையர் வாழ்த்துப் பாட்டுப் பாடினர். திருமணத்தை நோக்கியவர் கண்கள் பேறுபெற்றன.

இவ்வாருக, முதியர் வேள்வி புரிய—இனிய மங்கலம் ஒலிக்கக்—காந்திமதியைக்—கடப்பந்தாரணிந்த காளையார்—

மங்கலநாண் பூட்டி—வளையணிந்த மலர்க்கை பற்றிச் சடங்குகளையெல்லாந் தகைபெற முடித்தார். பிறகு, மண மகளுடன் பொற்றேரிலே மதுரை மறுகிலே வலமாய் வந்தார். ஆடவரும் பெண்டிரும் அழகிய இக்காட்சியைக் கண்டு களித்தனர். மணமக்க ளிருவரும் பரமனார் திருக் கோயிலுக்குச்சென்று பணிந்து, அரண்மனை யடைந்து பெற்றோரை வணங்கினர்.

திருமணத்திற்கு வந்தவர்கட்கெல்லாம் ஆறுசுவை யுண்டி அளித்து, முறைப்படி வரிசை நல்கி, விடையும் அளித்தனர் சோமசுந்தர பாண்டியர்.

வேல் வளை சேண்டு கோடுத்தல்

ஒருநாள், சோமசுந்தரர் தம் திருமகனாரை நோக்கிச் செப்புகிறார்: "இந்திரனும் கடலரசனும் உனக்குப் பகைவர். அழகிய மேருவோ செருக்கி நிற்கும். இந்திரன் முடி சிதற இந்த வளையினாலே எறிக! கடலிலே இந்த வேலை விடுக! இந்தச் செண்டினாலே மேருவைத் தாக்குக!"

மூன்று படைகளையும் உக்கிரப்பெருவழுதியார் தந்தை யைத் தொழுது பெற்றார். தந்தையார் மறையும் மங்கலமும் முழங்க முடிபுனைவித்துக் கன்னிநாட்டரசுரிமையையும் நல்கினார். சுமதி முதலிய அமைச்சர்களை நோக்கி, "இனி ஆட்சி இவனுடையது. கண்ணிமைபோ லிவனைக் காத்திடுக!" என ஓம்படை செய்தார். "ஐய! இவ்வுலகை நெடுநாள் சுமந்து காத்தேன். இந்தக் குற்றமற்ற வுளத்தினர் கூறும் உண்மை நெறியிலே ஒழுகி, நீயும் என்னைப்போலவே செங்கோல் செலுத்திச் செல்வத்தோடு வாழ்க!" என்று வேலேந்திய தம் காளையன்னாரிடமும் கட்டுரைத்தார்.

உடனே, பழைய சிவகணங்களாயினர் பல ஏவலாள ரெல்லோரும். தடாதகையும் தாமும் தென்னவர் கோலம் நீக்கிச் சிவபரஞ்சுடராகத் திருக்கோயிலடைந்தருளினர். பிறகு, உக்கிரவழுதியார் நல்லறம் வளரத் தம் ஆணைப்படி உலகை நடத்தி யாண்டருளினார்.

———

இந்திரன் பொருமைத்தீ—கடல் பொங்கியது.

உக்கிரப் பெருவழுதியார் உலகாண்டு வருங்காலத்திலே தொண்ணூற்ருறு பரிவேள்வி செய்தார். அதைக் கண்ட வச்சிரமேந்திய வானவன் புழுங்கினன். பொருமையினுலே புலன்கெட்ட புருகூதன், "இந்தத் தென்னவனுடைய நாடு நமது பொன்னுடுபோல வளம் பொழிகிறது. அதனுலே, அவன் பரிவேள்வி புரிந்தான்," என்று ஏங்கினன். கடலரசனைக் கூவினன். "உலகெலாம் அழிக்கும் ஊழிவெள்ளம் போலச் சீறிச்சென்று காவல்மிக்க மதுரையை அழித்திடுக!" எனக் கழறினன். கடலரசனே தனக்கு வருங் கெடுதியை யெண்ணுமற் பேயு முறங்குங் குருட்டுக் காரிரவிலே பொங்கி மதுரையைச் சூழ்ந்தான்.

பொங்கிய கடலின் அலைக்கைகள் வானத்தை யலைத்தெழுந்தன. ஊழிவெள்ளம்போல—சந்திர மண்டலத்தை மோதவெழுந்த கருமலைபோல—மண்ணும் விண்ணும் நடுங்கக் கடல் கொந்தளித்து வந்தது. அது திங்களை விழுங்க வரும் கரிய அரவைப்போன்றும், திங்களை மறைக்க வரும் கருமுகிலைப் போன்றும் மதுரை மீது தாவியது. ஆமையாகிய பலகையையும், வாளையாகிய வாளையும், மகர மீனுகிய களிற்றையும், அலைகளாகிய பரிகளையும், தோணிகளாகிய தேர்களையும் கொண்டு—நால்வகைப் படையுடன் போர்செய்யப் பாண்டியர் மேல் வந்த பகைவர்போன் றிருந்தது அக்கடல்.

"வட்ட யாமை பலகை; வீசு வாளை வாள்கள்; மகரமே
பட்ட யானை; பாய்திரைப்ப ரப்பு வாம்ப ரித்திரள்;
விட்ட தோணி யிரதமின்ன விரவு தானை யொடுகடல்
அட்ட மாக வழுதிமேல மர்க்கெ ழுந்த தொக்குமே!"

கனவிலே சித்தர்

இவ்வாறெழுந்து வந்த கடல் முகில் உறங்கும் மதில் சூழ்ந்த நகரின் கிழக்கில் நெருங்கியபோது நள்ளிரவு! உக்கிரவழுதியார் உறங்கிக்கொண்டிருந்தார். வெள்ளியம்பலவாணர் அவர் கனவிலே சித்தராக வந்தார். புன் முறுவல் செய்தார். "வழுதியே! எழுதி! நகரை யழிக்கக்

கடல் நண்ணிவிட்டது! வெற்றிவேலை விட்டுப் பொங்கி வரும் அதனை வறளச்செய்க!'' என்றருளினர்.

வழுதியார் விழித்துத் தொழுத கையுடன்—வாழ்த்தும் நாவுடன்—அணையைவிட்டிறங்கி, வாயில் பல கடந்து அமைச்சருடன் விரைவாக நகரின் புறத்தே நணுகினர். மண்முழுதும் விழுங்கி வருவதைப்போல ஆரவாரித்து வரும் அலைகடலைக் கண்டு வியப்படைந்து நின்றார்.

அவருடைய அமைதி பொருத அரவணிந்த அண்ணலார் கனவில் வந்த சித்தர்போலவே நனவிலும் வந்து, "காலந்தாழ்த்து நிற்பது என்? கடலாக வரும் பகைவன் வலிமைகெடக் கூர்வேலெறிந்து, நாட்டைக் காக்க!'' என்று தூண்டினர்.

வேலை சுவற வேலை யெறிந்தார்

அவ்வாறே வழுதியார் அயில்வேலைச் சுழற்றி யெறிந்தனர். வேலின்முனை வேலையைத் தொட்ட அளவிலே செருக்கழிந்து, வலிமையொழிந்து வழுதியாரின் கணைக்கால் அளவிலே நின்றது கனைத்து வந்த கடல்! மறைவழியியற்றிய வேள்வியைத் தடுப்பதுடன், நாட்டையும் அழிக்கச் சூழ்ச்சிசெய்த வானவர் தலைவன் ஏவலையேற்ற வேலையின் நிலை வெட்கத்திற்கிடமாயது! வஞ்சகர்க்கு நலம்புரியச் சென்று வலிமை யிழப்பதே இக்கடலின் பழம்பெருமை!

சித்தர் வானத்திலே

வழுதியொடு நின்ற சித்தர், வானிலே அருள் வடிவமாக—விடையின்மேல் உமை பாகராக—ஒளிவடிவாக—நின்றார். முக்கண்களும் நான்கு தோள்களும் பிறைமுடித்த செஞ்சடையும் கறைமிடறுமாகக் காட்சியளித்த பேரருளாளரைத் திக்கு நோக்கி வணங்கிய தென்னவர் கூப்பிய கையுடன் நடந்துசென்றார். ஆறணிந்த அண்ணலும் வான் நெறியிலேயே சென்று திருக்கோயிலை யடைந்தார். தென்னவரும் கோயிலை யடைந்து வணங்கித் தம் அரண்மனை சார்ந்தார். மங்கல மடந்தையர் எட்டு மங்கலங்களையும் ஏந்தி வரவேற்றனர்.

———

கசு. இந்திரன் முடிமேல் வளையெறிதல்

மழையில்லை!

உக்கிரப்பெருவழுதியார் ஆட்சியிலே ஒருமுறைகோள் நிலை திரிந்து கோடை நீடும்படி முகில்கள் பெயலை மறந்தன. விசும்பிலிருந்து துளி வீழாமையால் மாநிலத்தே பசும்புல் தலையினையுங் காணவியலாது போயிற்று. தமிழ் நாடு மூன்றும் அமிழ்தமிழந்து அல்லலுறுவதைப் பொருத அரசர் மூவரும் பொதியமலை யடைந்து தமிழ்முனிவரை வணங்கித் தங்கள் நிலையைச் சாற்றினர்.

அகத்தியர் அரசர்களை அன்புடன் இருக்கச்செய்து கோள்களின் நிலையை ஆராய்ந்தார். "கதிரவனுஞ் செவ்வாயும் முன்செல, வெள்ளி அவர்களின் பின் செல்வதனாலே கடல்சூழ்ந்த உலகிலே பன்னீராண்டு வறுமை வரும். இக் கொடுமை தவிர மழைபெய்விக்கும் வானவர் தலைவனைச் சார்ந்து வினவுங்கள்," என்றார்.

'வானுலகிற்குச் செல்லும் வழி எங்ஙனம்?"

"திங்கட்கிழமை நோன்பாற்றித் திங்கள்முடித்த வெள்ளிக் குன்றவர் அருளைப்பெற்றுச் செல்லுங்கள்."

"நோன்பியற்றும் முறை யெவ்வாறு?"

திங்கள் வார நோன்பு—அ. சிறப்பு

"வானவரிற் சிறந்தவர் மதிமுடித்த வள்ளல். சக்திகளிற் சிறந்தவர் உருத்திராணி. நோன்புகளிற் சிறந்தது திங்கள்வார நோன்பு," என மறை மொழிந்துள்ளது. மந்தரம், காசி முதலான தலங்களில் இருந்து இந்த நோன்பியற்றும் பயனைக் காட்டிலும் கோடிப்பயன் மதுரையில் நோற்பது கொடுக்கும். சிவபெருமான் உமையுடன் கூடுதலாற் சோமனெனப்பெறுவர். அத்தகைய சோமருக் குரிய வார மாதலாலே திங்கள்வாரஞ் சிறப்புடையது. சோமசுந்தரர் மதுரையிலே இருப்பதால் மதுரையிலே நோற்பது சிறந்ததாயிற்று. மேலும் ஞாயிறுந் திங்களும் ஒன்றுகூடும்

அமாவாசையோடு வரும் சோமவார நோன்பு மிக மிகச சிறந்துள்ளது. நன்னெறியிலே யீட்டிய பொருளைக்கொண்டு அன்று நோற்கும் நோன்பு மேலும் பெரும் பயன் தருவதாகும்.

ஆ. நோன்பிருக்கும் முறை

கார்த்திகை, மார்கழித் திங்கள்களிலாவது இரட்டை அமாவாசை வரும் மலத்திங்கள் நீங்கலாக மற்றைய திங்கள் களிலேனும் முதல் கிழமையிலே தொடங்கவேண்டும். ஞாயிறன்று இரவு உண்டி நீக்கித் தரையிலே துயில வேண்டும். காலையிலெழுந்து, சோமசுந்தரரை நினைந்து, அன்ருடப் பணியை முடித்துக் காமம் முதலான குற்றங்களற்ற சிந்தையுடன் பொற்ருமரையிலே, கையிலே தருப்பை புனைந்து, மனமொழி மெய்யொன்றிச் சங்கற்பம் தெளிவாய்க் கூறிக், கடம்படியிலே வெளிவந்த கண்ணுதலை வழிபட்டு நீராடல் வேண்டும். நீராடும்பொழுது, ''உலகிலே எங்குமுள்ள தீர்த்தங் களிலே ஆடிய பயனை அளித்தருள்க!'' என இறைவரை வேண்டல் வேண்டும். நீராடி வெள்ளிய திருநீறணிந்து, சிவகண்மணி பூண்டு மலர்ப் பொழிலுக்குச் செல்லுதல் வேண்டும். வெள்ளைமந்தாரை, முல்லை, மல்லிகை, சாதி, மயிலை முதலான வெண்மலர்களைக் கொய்து திருக்கோயிலை அடைதல் வேண்டும்.

முதலிலே மூத்த பிள்ளையாரை வழிபடுக! பிறகு, சிவனர் திருக்கோயிலிற் சென்று, துவாதசாந்தத்திலே சோமசுந்தரரை நினைந்து, தன்னைச் சிவமாக (தூய்மையாக) ஆக்கிக்கொண்டு, மண் முதலாகச் சிவம் ஈருகவுள்ள அத் துவ லிங்கத்தை ஆசனமூர்த்தி மூலத்திறலே பூசனைபுரிக! சருக்கரை, தேன், பால், நெய், தயிர் என்னும் ஐந்து அமுதுகளினலும் ஆவின் ஐந்து பொருள்களாலும், எலு மிச்சை, நார[illegible]த, தமரத்தை, குளஞ்சி, மாதுளை யென் னும் ஐங்கனிகளாலும் தேன், சந்தனநீர், மலர்நீர், மணி நீர்களாலும் இறைவரை ஆட்டுக! பிறகு, அழகிய வெண் பட்டாடை உடுத்தி, நறுமணச் சுண்ணமும் சந்தனமும் அணிந்து, மல்லிகை முதலிய வெண்மண மலர்களாலான

கண்ணியைச் சூடுக! ஒளிவிடும் பொற்பணிகளைப் பூட்டுக! கழலணிந்த திருவடி முதலாக அங்க வழிபா டியற்றுக! அவ்வாறே, அங்கயற்கண்ணம்பிகையாரை ஐந்தெழுத்தையும் பெண்பாலுக்கேற்ப ஓதிப் பூசனை புரிக! பிறகு குற்றமற்ற ஆவின்பால் கலந்து சமைத்த இனிய சோற்றையும் பண்ணிய வகைகளையும், பான வகைகளையும் படைத்து, மணங்கமழும் அடைக்காய் அளித்து, நல்ல மணப்புகையையும் விளக்கையுங் காட்டிக் கண்ணாடி சாமரை முதலானவற்றையுங் காட்டுக! பிறகு, வில்வமிட்டு வழிபடுக!

பரம்பொருளின் இச்சாஞானக் கிரியையாகவுள்ள வில்வ மரத்தினடியிலே மூன்றுநாள் ஊணுறக்கமில்லாமல் 'சிவ சிவ' வென்று ஓதியவர் செய்த ஐம்பெரும் தீவினைகளும், வஞ்சனை யாற் புரிந்த கொலைகளும் நீங்கும். ஆதலால் வில்வத்தளம் சிறந்தது. வில்வ இலையிலே மடங்கியுஞ், சுருங்கியும், வாடியும், புலர்ந்தும், மயிர் சிக்கியும், சிலம்பி கூடுகட்டியும், புழு அரித்தும் இருத்தல் ஒவ்வாது. வேறு கிடையாவிட்டால் இக் குற்றமுடைய வில்வத்தளங்களாலும் வழிபாடியற்றலாம். ஏனெனில், வில்வஞ் சிறந்தது. ஆகவே, வில்வத்தைக் கொண்டு பரம் பொருளின் ஆயிரந் திருப்பெயர்களையும் ஓதி யிடுக!

பின்னர், "அடியேன் செய்பிழைகள் ஒவ்வொரு நாளினும் அளவற்றவை. கொடிய நஞ்சை அமுதமாகக் கொண்ட அடிகள் அவற்றைக் குணமாகக்கொண்டு காத் தருள்க!" என்று நிலமிசை விழுந்து வணங்கி மும்முறை வலம் வருக! வலம் வந்து நின்று, கல்லுங் கரையும் வகையிலே விரும்பிய நலங்களை வேண்டினால், நல்ல மணப்பேறு, மக்கட் பேறு, இனிய வாக்கு, கல்வி, உளமினிக்கும் நுகர்ச்சிகள், பகைவரை வெல்லுதல், இப் பிறப்பிலேயே அரசு, மேலும் வேண்டிய எல்லாவற்றையும் அருள்வார்.

இந்த நோன்பு ஐவகைப்படும்: உச்சி வேளையிலே உணவு, இரவிலே உணவு, இருபோதிலும் உணவை நீக்கல், உறங்கா திருத்தல், இரவிலே நான்குயாமத்தினும் மலரிட்டு வழிபடல்.

இவ்வைந்தும் ஒன்றுக்கொன் றுயர்ந்தவை. நோற்கும் ஆண்டுகள் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, பன்னிரண்டு, வாழ்நாளளவு எனப்படும்.

வாழ்நாளளவும் நோற்பவர்க்கு நோன்பு முடிப்புச் சடங்கில்லை. எனினும், தொடக்கத்திலேயே அதனைச் செயவதும் உண்டு. மற்றவர்கள் முடிப்புச்சடங்கு செய்தல் வேண்டும். அச் சடங்கின் முறையாவது:

மண்டபம், வேள்விக்குண்டம், மண்டலம் இவற்றை முறைப்படி இயற்றி உமைபங்கரை அமைத்தல்வேண்டும். முப்பது கழஞ்சி வெள்ளியிலே உருவம் அமைக்க வேண்டும். காலையிலே ஆசிரியர் சொற்படி அன்றுடக் கடன்களை முடித்து, நண்பகல் முதல் மாலை வரையிற் சிவபுராண நூல்களைக் கேட்டல் வேண்டும். மாலை முதல் நான்கு யாமங்களினும் பரசிவ வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாட்டு முடிவிலே நூற்றெட்டு மூலமறையோதி வேள்வியை முடித்தல் வேண்டும். நான்கு யாமங்களினும் ஆயிரம் வில்வங்களிட்டு ஆயிரம் திருப் பெயரோதிச் சிவ பரம்பொருளை வழிபடல் வேண்டும்.

ஐந்தெழுத்தினாலேயே ஐந்தெழுத்தின் வடிவான அண்ணலுக்கு அருக்கியம் அளித்தல் வேண்டும். மூலமறை யாலும் பிற மறையாலும் வேள்வி யாகுதி செய்து வேள்வியை முடித்தல்வேண்டும். விடிந்த பிறகு, அன்றுடக் கடனை முடித்து, வாழையிலைகள் பதின்மூன்றைப் பரப்பித் தூய வெள்ளிய அரிசியையும், கறிகாய் வகைகளையும் வைத்து, ஆவின்பால் ஒவ்வொரு குடம் வைத்துச் சைவ அந்தணர்களை வரவழைத்துச் சிவபெருமானாக நினைத்துக் கொடுத்தல் வேண்டும். மேலும் அவர்களுக்குக் காதணி கையணிகளும் அழகுற அளித்துத் தவிசிலிருத்தி வழிபாடு செய்து, காணிக்கை, திருவடிக்காப்பு (செருப்பு), விசிறி, குடை, அழகிய துணி முதலானவையும் அளித்தல் வேண்டும்.

அவர்களை விடைகொடுத்து விடுத்த பிறகு, ஆசிரியரை அவர் மனைவியுடன் இருக்கையிலே அமர்த்திப் பொன்

ஞடையும் பொற்பணிகளும் அணிவித்து, மணமிகு மலர்களைத் திருவடியில் இட்டுப் பணிந்து, உமையொருபங்கரை வழிபட்ட வெள்ளி வடிவையும், பொன்னையும், புவியையும் ஆட்களையும் புனைவுசெய்த ஆவையும் கொடுத்தல் வேண்டும்.

இவ்வாறு நோன்பை முடித்த பிறகு, ஆசிரியர் ஆணைப்படி சிவனுரடியரொடும், மக்களுடனும், உறவினரொடும் உணவு உட்கொள்ளல் வேண்டும்.

இந்தத் திங்கட்கிழமை நோன்பை முன்பு கண்ணன், நான்முகன், இந்திரன் முதலான வானவர்களும், பதினெண் கணத்தவரும் மானிடரும் இயற்றி அரிய பேறும் வீடும் பெற்றனர். இதனை நோற்பவர் பகைவரை வெல்வர்; துயர் தீர்வர்; ஆயிரம் பிறவியி லியற்றும் தீய வினைகளழிந்து, இப் பிறவியிலேயே சிவகதி சேர்வர்.

இ. தமிழரசர் மூவரும்

தமிழ் முனிவரைத் தமிழரசர் வணங்கி விடைபெற்று மதுரை வந்தடைந்தனர். பொற்றாமரைப் பொய்கையிலே நீராடிச் சோமசுந்தரரையும் அங்கயற்கண்ணம்மையையும் வழிபட்டு நோன்பியற்றினர். அண்ணலாரும் அருள் புரிந்தார். ஆகவே வானவழியே செல்லும் வலிபெற்றனர். சென்று இந்திரன் அவையை அடைந்தனர்.

'தேவர்கோன் பூணாரம்'

இந்திரன் அவர்களை வரவேற்றான். சேரனுஞ் சோழனும் அவன் காட்டிய அணையிலே அமர்ந்தனர். உக்கிர வழுதியார் மட்டும் வானவன் இறுமாப்பை யெண்ணி, அதனை மாய்க்கவேண்டி, அவன் வீற்றிருக்கும் அணையிலே அவனருகிலே சென்றமர்ந்தார். ''மண்ணரசன் வானரசனுடன் அமர்வது தகுமா? உயர்வுதாழ்வில்லையா?'' என்று புழுங்கினான் இந்திரன். எனவே, அவர் முகம் நோக்காமல் மற்றவரை நோக்கி முகமன் கூறி, 'வந்ததென்? மொழிமின்!' என்றான்.

''முகிலூர்தியே! எங்கள் நாட்டில் மழை மறுத்ததும் அதனால்....''

“கவலை வேண்டாம். இனி நன்மழை பெய்யும். செல்க!”

உயர்ந்த அணிமணிப் பொன்னுடை அளித்து அவர்களை விடுத்தான். ‘நன்று! நன்று!’ என மகிழ்ந்து வணங்கிச் சென்றனர் இருவரும். வழுதியார்மட்டும் மழைவளஞ் சுரக்க வேண்டவும் இல்லை; அவன் தருக்குக்குத் தாழவும் இல்லை.

அமரர் தலைவன் அவரை அடக்க நினைத்தான். இதுவரை எவரும் பூணாத—பூண இயலாதவாறு ஆற்றவுந் திண்ணிய—ஆரம் ஒன்றை அவர் கழுத்திலிட்டான். பல மல்லர் கூடியுஞ் சுமக்க வியலாத அதனை அவர் மலர் மாலையென எளிதிலே சுமந்திருந்தார். கண்டான் இந்திரன். கறுத்தான் உள்ளம். மலர்ந்தான் முகம். “பாண்டிய! நீ ஆற்றவும் வலியன். இன்று தொட்டு ‘ஆரந்தாங்கும் பாண்டியன்’ என்ற பெயர் வழங்குக!” என்று கூறி விடுத்தான்.

அவன் உள்ள நிலையையும் புறஞ்சுவர் போலப் புகழ்ச்சியையும் உள்ளவாறறிந்த உக்கிரனார் மகிழாமல் வறிதே திரும்பினார்.

கோண்டலைத் தளையிடுதல்—இந்திரன் போர்—முடி சிதறல்

சேர நாடுஞ் சோழநாடுஞ் செழிப்படைய மழை பெய்தது. ஆனால், பாண்டி நாடோ பண்டுபோலப் பசையற்று உலர்ந்தது. ஒருநாள், மீனவர் தலைவர் வேட்டையாடப் பொதியமலைச்சாரலை யடைந்தார். ஆங்கே, புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி என்னும் (பொன், பூ, மண், கல்சொரிவன) நால்வகை முகில்களும் சூழ்ந்திருந்தன. அவற்றைத் தம் வலிமையாலே, களிறுகளைப் பிணிப்பது போலக், கடுந்தளையிட்டுக் கொணர்ந்து சிறைப்படுத்தினார்.

இதனைக் கேள்வியுற்றான் இந்திரன். சீற்றங் கொண்டான். கடல் சுவற அடல் வேலைவிட்டதும், வலிய ஆரந் தாங்கியதும், காரைத் தளையிட்டதும் எண்ணியெண்ணி

யெரியெனக் கனன்ருன். ''மண்ணவன் ஒருவனுக்கு இவ்வளவு வலிமையா ?'' என்று மனமழிந்தான். வான் படை திரட்டி மதுரையைச் சூழ்ந்தான்.

ஒற்றர் ஓடி உரைத்தனர். உக்கிரர் உருத்தெழுந்தார். 'தேரையும் பரியையுங் களிற்றையும் பண்ணுக! வீரரெல்லோரும் நண்ணுக!' என்று கட்டளையிட்டார். தாமும் மலைபோன்ற களிற்றிலே படையேந்திப் புறம் போந்தார்.

மீனவர் படைவீரரும் வானவர் படைவீரரும் கை கலந்தனர். அமரர் மெய்யெலாம் அம்பினல் புதையுண்டன. தாளுந் தலையுந் தறியுண்டன ! தோளும் கையுந் துணிபட்டன ! இரத்தம் பெருகியது. கழுகுகளும், நரிகளும், பேய்களும் கூடின. வானவர்படை வலியழிந்தோடியது.

இந்திரன் திடுக்கிட்டான். மண்ணவர் வானவரை வாய்ப்பதா ? குலிசப்படையேந்திப் போர்க்களங் குறுகினன். பஞ்சின்முன் எரியைப்போலப் படபடத்தான். தெய்வப் படைகளை வீசினன். தென்னவருஞ் சீறியெதிர்த்தார்.

இந்திரன் விட்ட கதிரவன் படையை உக்கிரவழுதியார் திங்களின் படையாலேயே தணித்தார். அதுகண்டு சினந்த வானவர் தலைவன் விட்ட சிங்கக் கணைக்குச் சிம்புட் படையை யும், மோகக்கணைக்கு ஞானக்கணையையும் விட்டுத் தடுத்தார் பாண்டியரேறு. பின்னர் இருவரும் மற்போர் புரிந்தனர். எவ் வகையினும் இளையாமற் போர்செய்யும் வழுதியாரின் ஆற்றலை அழிக்க வச்சிரப்படையை விட்டான் இந்திரன். கவுரியர் தோன்றல் அதனைத் தடுக்கத் தம் கையிலிருந்த வளையை (ஆழியை)எறிந்தார். அதுவச்சிரப்படையை வீழ்த்தி வானவன் திருமுடியையுஞ் சிதைத்தது. அவன் செய்த சோமவார நோன்பே தலையைக் காத்தது. தலைக்கு வந்தது தலையிலிருந்த முடியுடன் முடிந்ததைக் கண்ட முகிலூர்தி நாணத்துடன் வானுலகம் புக்கான்,

இந்திரன் வேண்டுகோள்

வானுடு புக்க வானவன் சிந்தித்தான். எவ்வகையினும் வழுதியை வெல்வது இயலாதெனத் தேர்ந்தான். நட்புக் கொள்ள நாடினான். ஒரு தூதனை விடுத்தான். அவன் வந்து உக்கிரரை வணங்கி, "மழைவளம் உண்டாகச் செய்கிறேன். கொண்டல்களை விடுவிக்க வேண்டும்," என்று எழுதப்பெற்ற திருமுகம் ஒன்றைக் கொடுத்தான். அதிலுள்ள வாசகத்தை நம்பாமல் இருந்த வழுதியாரை இந்திரனுக்கு நண்பனான ஒரு வேளாளன் (ஏகவீரன் என்பவன்) வணங்கித் தான் பிணை யிருப்பதாக வேண்டினான். வேளாளர் சொல் தவறாரென்னும் விழுமிய உண்மையை உணர்ந்த வழுதியார் கொண்டல்களை விடுத்தார்.

அவை இந்திரன் ஆணையாலே திங்கள் மும்மாரி பெய்து கன்னிநாட்டைக் கவினுறச் செய்தன. வாவியும், குளமும், ஆறும், மடுவும், கிணறும் நீர் நிரம்பின. செந்நெலும் கரும்பும் வளமுறச் செழித்தன. நறுமலர்ப் பொழில்கள் மணங் கமழ்ந்து மலர்ந்தன.

"இட்டவன் சிறையை நீக்கி எழிலியை விடாது மாறு
பட்டசிந் தையனே யாகப் பாகசா தனனுக் கென்றும்
நட்டவன் ஒருவே ளாளன் நான்பிணை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ்ந் தொழுகு நிம்ப மாலிகை மார்பி னானும்." (௩௭)

"இடுக்கண்வந் துயிர்க்கும் ஊற்றம் எய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகு நாலாம் மரபினன் உரையை ஆத்தன்
எடுத்துரை மறைபோல் சூழ்ந்து சிறைக்களத் திட்ட யாப்பு
விடுத்தனன் பகடு போல மீண்டன மேக மெல்லாம்." (௩௮)

———

கடு. மேருவைச் *செண்டினுல் அடித்தல்

வீரபாண்டியன் பிறந்தான்

மலய முனிவர் வகுத்துரைத்த திங்கட்கிழமை நோன்பை உக்கிர வழுதியார் நோற்று வந்ததனுல், அரசி காந்திமதி வயிற்றிலே சிறந்த மகனெருவன் பிறந்தான். காமனனைய அக்குழந்தை பிறந்தவுடன் நகர மாந்தர் மகிழ்ச்சியினுலே வளர்ந்தனர். திருவிழாக் கொண்டாடினர். இந்திரன் சயந்தனைப் பெற்று மகிழ்ந்ததைப் போல உக்கிரவழுதியாரும் உளங் களித்தார்.

பிறந்தநாள் விழா முதலிய சடங்குகளைப் பெருமகிழ்வுடன் முடித்து வீரபாண்டியனென விழுமிய பெயரிட்டனர். அவ்வக் காலத்தே யியற்றவேண்டியவற்றை அழகுற இயற்றி, அருங் கலைகளையும், படைப் பயிற்சியையும் அணிபெறக் கற்பித்தனர்.

முறை மழை மறுத்தது

அக்காலத்திலேயே ஒருமுறை கோள்நிலை திரிந்து கோடை நீடியது. உயிர்களெல்லாம் உணவிழந்து மெலிந்தன. அரசருள்ளம் அலமந்தது. நீண்டகாலப் பயிற்சியையுடைய உழவர்கள்,'கதிரவனைப் பிறகோள்கள் நோக்கியதால் இந்நிலை வந்தது. ஓராண்டு வரை மழையிராது,'' என உரைத்தனர்.

கேட்ட வழுதியார் வாட்டமடைந்தார். குழந்தையுற்ற நோயைக் கண்ட அன்னைபோற் குழம்பினுர். சோமசுந்தரர் திருக்கோயிலை யடைந்து வணங்கிக் கண்ணீர் வார, "வையம் பசியால் வாடுகிறதே!' என விம்மினுர்.

மதுரையின் நிலையையும் மன்னவர் வருத்தத்தையும் உணர்ந்தும், காலத்தின் நிலையைக் கணித்தறிந்த கண்ணுதலார் இரக்கமிலார் போல வாளா விருந்தனர். வேம்பு முடித்த மீனவர் கவலையோடு தம் அரண்மனை புகுந்தார். கதிரவனும் மேலைக்கடலிலே புகுந்தான்.

---

* செண்டு—வளைதடி.

தம் குடைநீழற் குடிகளின் வருத்தம் தம் உள்ளம் நிறைந்ததனாலே, மலர்முகம் வாடி வனப்புக்குறைந்து துயருடன் தரையிலே துயின்றார் செழியர். அவர் கனவிலே அந்திவண்ணர் வழக்கம்போலச் சித்தராக வந்தார்.

''வெற்றி வேலனே! இப்போது மழை பெய்யாது. அதை நினைந்து வருந்தாதே. மலைகளின் அரசாகிய மேருமலையிலே, ஒரு குகையிலே, எல்லையில்லா வளவிலே சேமப்பொன் வைக்கப் பெற்றுள்ளது. அங்குச் சென்று, அம் மலையின் செருக்கடங்கச் செண்டால் அடித்து, அடக்கிப் பொன்னடைத்து குகையைத் திறந்து, வேண்டுமளவு கொண்டு, மீளவும் அடைத்து, நின் இலச்சினையிட்டு வருக!''

விழித்தனர் வழுதியார். கதிரவன் விழிக்குமுன் காலைக் கடன்களை முடித்தார். திருக்கோயிலைச் சார்ந்தார். வலம் வந்து வணங்கினார். அலைபோற் பெருகிவரும் படை சூழக் கீழ்த்திசை வாயிலை நோக்கிச் சென்றார்.

வடதிசைச் சேலவு

முரசுகள் முழங்கின. சங்குகள் ஊதின. திசைகள் அதிர்ந்தன! வெண்கவரிகள் துள்ளின! மறைகள் ஒலித்தன! புலவர் பாடினர்! அரசர் தேரேறினார்! பாகன் விரைந்து செலுத்தினான். கொடிக்காடும், அருவியென மதம்பொழியும் யானைகளாகிய மலைகளும், குதிரைகளாகிய கடலும் காலாளுஞ் சுமந்து மண் மகள் ஆகம் மெலிந்தாள். வளைந்த நகமும் புலவுநாறும் பெரிய வாயும் நீங்காத சிற்றமுமுடைய புலியெழுதிய கொடியும், வளைந்த வில்லெழுதிய கொடியும் இருபுறமும் வர, நிலத்தைத் துழவுந் துதிக்கையையுடைய, யானையின் மேலே மீனக் கொடி விசும்பிலே வீறுடன் பறந்தது!

இவ்வாறு தென்கடல் வடதிசை நோக்கிச் சென்றது! கன்னிநாடு கடந்தனர். சோழன் வரவேற்றான். தண்டக நாடு (தொண்டைநாடு), தெலுங்குநாடு, கருநடநாடு, மாளவ

நாடு இவைகளைக் கடந்து, தீயைக் கக்கும் பாலையைக் கடந்து, விராடநாடு கண்டனர். தேன்பொழியும் மலர் நிறைந்த காடுகளையும் குன்றுகளையும் நீங்கிச் சிந்து நாடடைந்தனர், அதனைக் கடந்து, காசியை வணங்கினர். கங்கையிலே நீராடினர். அதனை நீந்திப் பன்னெடுங்காவதங் கடந்து, சிங்கமும் யானையும் உலாவுவதாலே மக்கள் செலற்கரிதான காடுகளைக் கடந்தனர். இமயத்தைக் கண்டு வியந்து மேலுஞ் சென்றனர். இன்பவளங் கொழிக்குங் கிம்புருட கண்டத்தைச் சேர்ந்தனர். அதனைவிட்டு ஏம வெற்பைக் கடந்தனர். அரிவருடத்தை அடைந்தனர். அங்கிருந்து சென்று நிடத வெற்பை நீங்கினர். சம்புநதி (நாவல்யாறு) பாயும் இளாவிருதகண்டத்தைக் கண்டனர். அந்த ஆற்றையும் அதன் அருகே பொன்மயமாய் நிற்கும் காட்டையும் நோக்கி வியந்து மேருமலையருகு சென்றனர்.

மேருவின் செருக்கழிவு—பொற்குவை யெடுத்தல்—திரும்புதல்

"மலைகளுக்கரசே! எம் தந்தையார் கைவில்லே! உலகுக் குறுதுணையே! வானத்திலுள்ள பல்வகைக் கோள்களுஞ் சூழும் தெய்வப் பொருப்பே! வானவர் கோயிலே!"

என்று விளித்தார் மீனவர். மேருமலை வரவு தாழ்த்தது. உக்கிரபாண்டியர் வெட்கமுற்றுர். உடனே, தம் சினமும் மேருவின் செருக்கும் மாறுமாறு செண்டினுலே அம்மலையை மோதினுர்! அதனுல், அசையா மேரு அசைந்தது! பொற்பந்துபோலத் துடித்தது! அதன் முடிகளும் வானவர் வசிக்கும் கோயில்களும் வெடித்தன. கதிரவன் மண்டலம் வெடித்துப் பிதிர்வதுபோலப் பல மணிகளும் உதிர்ந்தன! சூழ்ந்துள்ள எட்டு மலைகளும் நான்கு பொற்பட்டடைகளும் நான்கு மலர்ப்பொழில்களும் நான்கு தருக்களும் சலித்தன! நலைவனுக்கு இடுக்கண் நேர்ந்தால் சார்ந்தவர்க்கு மகிழ்ச்சியேது!

இவ்வாறு அடியுற்ற மேருத்தலைவன் எட்டுத்தோளும் நான்குமுகமும் வெண்குடையுமாக வெளிப்பட்டு நாணி நின்ருன். தென்னவர் சினந்தீர்ந்தது.

'இவ்வளவு காலம் வரவு தாழ்த்தது ஏன் ?'

"அறிவுடைய நம்பியே! அங்கயற்கண்ணம்மையையும் சோமசுந்தரரையும் இவ்வடிவுடன் சென்று அன்றுடம் வழிபடுவேன். இன்று மங்கையொருத்தியின் மேல் வைத்த காமத்தால் வழிபாடு மறந்து காலம் நீட்டித்துக் கெட்டேன். அத் தீங்கினாலே அடியும் பட்டேன். சிவனார் திருவடி பிழைத்த தீங்கைத் தவிர்த்தனை. இதற்குத்தக்க நன்மையான கைம்மாறும் என்னாற் கிடைக்குமோ? அஃது இருக்கட்டும். நீ என்னை நாடி வந்தது என்ன?"

"செல்வம் வேண்டி வந்தேன்."

"நன்று! உன் நாட்டினர்க்கேற்ப உரைபெற்ற பொன் அதோ அந்தத் தேமாவின் நீழலிலே புதைபட்டுக் கிடக்கின்றது!"

மேருத்தெய்வம் கையினாற் சுட்டிக்காட்டியது அந்த இடத்தை. ஒளியுமிழும் மேலார்—கடலை வணக்கங்கொண்ட காலார்—பொற்குகையை அடைந்தார். மூடியபாறையை விலக்கினார். வேண்டும் பொன்னை முகந்தார். திரும்பவும் பாறையை மூடினார். தம் பெயர் பொறித்தார். படையொடுந் தென்றிசை நோக்கி வந்தார். பொன்மலை கடந்தார். போகபூமியை நீங்கினார். மக்கள் வாழும் நிலப்பகுதி வந்தடைந்தார். மாத்திமரும், விராடரும், மாளவரும், தெலுங்கருமான மன்னர்கள் திறையொடும் வந்து வணங்கினார்கள். அவர்களைத் தலையளிசெய்து கன்னித் தமிழ்நாட்டைக் கண்டார் தென்னவர்.

மதுரையை நெருங்கினார். வான் தடவும் கோபுரத்தைக் கைகுவித்து வணங்கினார். தேரினின்றும் இறங்கினார். எட்டுறுப்பும் நிலம்பெற இறைஞ்சினார். அறநெறியந்தணரும் துறவியரும் அரனார் திருவடியே தஞ்சமாகப் புறநெறி விலக்கிய தூயரும், திருக்கோயில் வழிபடுஞ் செல்வரும் எதிர்கொள்ள நெடுமதில் வாயிலை அடைந்தார். தேன்விரியும் மலர்மாலை யணிந்த மங்கையர் குங்குமக் குழம்பைக் குளிரத்தெளித்த மங்கல அணிநிறைந்த மதுரையம்

பதியின் தெருவினிலே சென்று கோயிலையடைந்து நிலமுறத் தாழ்ந்து கும்பிட்டு வாழ்த்திச் செல்வ மாளிகையை அடைந்தார்.

பொன்மலைக்கடவுள் அளித்த பொற்குவையை அந்தப் பொன்மலையைப் போலவே குவித்து வைத்தார். பல குடிகளுக்கும் பகிர்ந்தளித்தார். 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்' என்ற ஐம்புலத்தாரையும் ஓம்பினார்.

பின்னர், இறைவரருளாலே கோள்கள் திரிவு நீங்கி நன்னிலை யெய்தின. எய்தவே, மாரி வளம்பெற்று, மங்கலப் பாண்டிநாடு வறுமை நீங்கியது; மன்னுயிர் தழைத்தது. உக்கிர குமரனார் தம் மகன் வீரபாண்டியரிடம் அரசை நல்கி, உலவாத பேரின்பமுற்றார்.

"பொன்மலைக் கடவுள் ஈந்த புண்ணிய நிதியை அந்த
நன்மலை மானக் கூப்பி நல்கிப்பல் குடியும் ஓம்பித்
தென்மலைக் கிழவன் தெய்வம் தென்புல வாணர் ஒக்கல்
தன்மனை விருந்து காத்துத் தருக்கினான் இருக்கும் நாளில்." (கக)

"ஐவினை நடாத்தும் ஈசன் ஆணையால் நடக்கும் கோளும்
செய்வினைத் திரிவு மாறத் தென்னனா டெங்கும் மாரி
பெய்வினை உடைய தாகிப் பெருவளம் பகிர்ந்து நல்க
உய்வினை உடைய வாகி உயிரெலாம் தழைத்த அன்றே." (௪0)

"புவனியிம் முறையால் புரந்தளித் தாரம்
பூண்டபாண் டியன்திரு மகனுக்
கவனியேழ் அறிய வீரபாண் டியனென்
றணிமுடி கவித்தர சளித்து
நவநிர திசய பூரண இன்ப
ஞானநோக் கருளிய மதுரைச்
சிவனடி நிழலில் பிளப்பறப் பழைய
தேசொடு நிறைந்துவீற் றிருந்தான்." (௪க)

கசு. வேதத்திற்குப் பொருளருளிச் செய்தல்

ஊழி முடிவுந் தோற்றமும்

ஒரு காலத்திலே ஐம்பெரும் பூதங்களின் நிலைமாறிப் பதினான் குலகமும் அயன், மால் முதலாம் அமரர் நிலையும் தோன்றியவாறே ஒடுங்கின. பிறகு, கதிரவன்முன் மலருந் தாமரைபோலச் சிவபரஞ்சுடரின் திருமுன்னே அவை முன் போல மலர்ந்தன.

பரம்பொருள் முன்போல முத்தொழில் நடத்தத் திருவுளங் கொண்டு, ஆழியேந்திய திருமாலைப் படைத்தார். திருமாலின் உந்தியிலே பூத்த தாமரை மலரிலே முன் போல நான்முகன் தோன்றினான். பிறகு, முத்தொழிலும் நடைபெறத் தொடங்கின.

அந்திவண்ணத் தண்ணலார் திருவாக்கிலே பிரணவந் தோன்றியது. அதனிடத்திலே மறைகள் வந்தன. நைமிசக் கானத்திலே உறைந்த கண்ணுவர் முதலான முனிவரர்கள், அந்த மறையின் பொருளை யறியாமல் உள்ளமும் முகமும் வாடினர். அந் நிலையிலே இருண்ட மலங்களின் வலிமையை வென்ற அரபத்தர் என்னும் முனிவரர் வந்தனர். வந்தமுனிவரை அங்கிருந்த முனிவர்கள் முறைப்படி வரவேற்றனர்; இருக்கை யிந்தனர்.

முனிவரர் ஐயமும் அரபத்தர் விளக்கமும்

அரபத்தர் அங்குள்ள முனிவரை நோக்கினார்.

''கவலையைத் தரும் அவாவை - வெறுப்பை - நீக்கிய பண்புடைய உங்கட்கு வாட்டமுண்டாக்கிய செய்தியென்ன?''

''இறைவனாருளிய மறைகளைப் பயின்றோம். எனினும், பொருளறியோம். பொருளை யறிவிக்கும் ஆசிரியனையும் அறியோம். இதுவே கவலை. இதனை எப்படிப் போக்குவது?'

“மறைமொழிந்த வள்ளலே பொருள் மொழியத் தக்கவர். அவரையே வேண்டுவோம். வேறு சூழ்ச்சியென்? தவத்தினாற் கிடைக்காத பொருளில்லை. அந்தத் தவமும் புண்ணிய தலத்திலேயே பலிக்கும். புண்ணிய தலமும் சைவம் பொருந்திய தலமாதல் வேண்டும். சிவ தலங்களினும் சிறப்புடைய சைவத் தலங்களிலே நாம் எண்ணியவை எளிதிற் கிடைக்கும். அத்தலம் யாதெனில் மதுரையே.

அந்த மதுரையில், வானிலிருந்திறங்கிய விமானத்தின் தெற்கில், முதிர்ந்த பெரிய ஆலமர நிழலிலே பிரியாத முழுமுதல்வர் தம்மை வழிபடும் அறவோர்க்கு முக மலர்ந்து. அளவற்ற அருளுடன் அரிய கலைகளையெல்லாந் தெளிவுபடுத்தி விளங்குகிறார். அந்த அருள் வடிவினரே உங்களுக்கு மறைப்பொருளை உணர்த்துவார். எனவே, அவர் திருமுன் சென்று நோன்பியற்றச் செல்லுங்கள்!”

முனிவர்கள் மதுரை செல்லுதல்—வழிபடுதல்

அரபத்தர் மொழிந்ததைக் கேட்ட அருந்தவமுனிவர்கள் அவருடனே மதுரையை அடைந்தனர். திருக்கோயிலுட் புகுந்தனர். பொற்றாமரை வாவியிலே நீராடினர். எல்லையற்ற உள்ளன்பு தூண்ட விரைந்து சென்று, எட்டு வெள்ளி மலைகளின் பிடரியிலே பொன்மலைபோற் காணப் பெறும் இந்திர விமானத்தைக் கண்டனர். மறைப்பொருளைக் கண்களாற் கண்டாற்போல வானவர் இறைவரைக் கண்டனர். அலைததும்பும் பேரின்பக் கடலிலும் நிலத்திலும் விழுந்து வணங்கியெழுந்தனர்.

கைகள் தலைமீது குவிந்தன. கைகால்கள் செயலற்றன. கண்ணருவி பெய்தது. இன்ப வெள்ளத்திலே ஆழ்ந்தனர். வாய் குழறியது.

“நான்முகனும் திருமாலுமே இன்னும் அறியாத கறை மிடற்றண்ணலே! வெள்ளி மன்றில் ஆடும் வானவர் தலைவரே! வானவர் வாழ நஞ்சுண்டருள் புரிந்த உத்தமரே! போற்றி!” என வாழ்த்தினர்.

"மறையின் பொருளை யுணராமல் உள்ளம் மயங்கி வாடிய எங்களுக்குத் தாங்களே அதன் முழுப்பொருளு மாகி நின்றீர்கள்! தங்களையன்றி அதற்கு வேறு பொருள் உண்டோ?"

என்று சொக்கரைப் போற்றினர். சொக்கர் பங்கி லுள்ள அங்கயற்கண்ணம்மையை அவ்வாறே வாழ்த்தினர். முறையாக வலம் வந்து, ஆலநிழலமர்ந்த அண்ணலை யடைந்தனர்.

குளிர்ந்த பளிங்கு மேனியும், பளிங்கு மலையிலே பதித்த பவளம்போன்ற திருவடிகளும் செவ்வாயும் முக் கண்களும் தாமரைமலர்போன்ற நான்கு திருக்கைகளும் சிவஞானபோத நூலும் அமுத கும்பமும் சிவமணிக் கண்டிகை யும் சின்முத்திரையும் விளங்கும் முதல்வரை நிலமிசை விழுந்து வணங்கினர்.

பின்னர், ஆலநிழற் பெருமானுரை வழிபடும் இருபத் திரண்டெழுத்தாகிய மறையை அரபத்தராலுணர்ந்து கார்த் திகைத் திங்கட் பூரணை முதல் அடுத்த கார்த்திகைத் திங்கட் பூரணை வரையில் தருப்பணம், வேள்வி, மறையவருக் குணவு விடாமல் இயற்றி நோற்றனர்.

ஆலமர்கடவுள் வேளிப்படல்

அக்காலை, பெருமை மிக்க முனிவர்கள் வியப்ப, ஆல நிழலிலே மோன வுருவாக வீற்றிருக்கும் முதல்வர் - முதலா சிரியர் - முப்பத்திரண்டிலக்கணமும் அமைந்த - பதினாறு ஆண்டு நிரம்பிய காளையராய் - ஆசிரியராக - வெளி வந்தார்.

அவர் நெற்றியிலே நீண்ட முப்பிரிவாக இடப்பட்ட திருவெண்ணீறு நெற்றிவிழியை மறைத்தது. திருச் செவி களிலே சிவமணிக் கண்டிகையும் பொற்குழையும் விளங்கின. பொற்குழையின் ஒளி இருளை நகைத்துச் சிதைத்தது. மார் பினிலே வெள்ளிய ஆடை வலப்பக்கத்திலே ஒதுங்கியது.

முப்புரி நூல் விளங்கியது. முத்துகளை யிடையிட்ட சிவமணிக் கண்டிகை அடியரை மறைக்கும் மலவிருளைச் சிந்தி ஒளி வீசியது. கைகளிலும் தோள்களிலும் சிவமணிக் கண்டிகையும் தோளணிகளும் விளங்கின. இடையிலணிந்த ஆடையின்மேற் பட்டிகை சூழ்ந்திலங்கியது. வண்டுகள் இசை பாடுவது போலத் திருவடிகளிலே சிலம்புகளொலித்தன; வீரக்கழல்கள் முழங்கின. குற்றமற்ற மோதிரம் வலக்கையிலே ஒளிர்ந்தது. சிவஞானபோத மெழுதிய நூல் இடக் கையில் அழகிட்டது. மறைகள் திருவடிகளிலே பாதுகைகளாக விளங்கின. தாமரை மலரிலமர்ந்து தேனைப்பருகும் வண்டு முரல்வதுபோல, நாவும் இதழும் புடைபெயர்ந்து மறையை நவின்று, தொண்டருடைய செவி வழியாகச் சென்று, உள்ள வயலிலே புகுந்து களிப்பாகிய பயிரை வளர்த்தன. திருவாயிலே புன்முறுவல் சிறிது காணப் பெற்றது. நாதத்தின் முடிவாய்—நான்மறையின் முடிவிலே ஞானவடிவாய்—விளங்கும் பழம்பொருள் இவ்வாறு வெளிவந்து நின்றருளினர்.

முனிவர் வேண்டுகோள்—மறைப்பொருள் விளக்கம்

அப்போது, வட்டமாகிய ஒளிபொருந்திய முழு மதியைக் கண்டு ஆரவாரிக்குங் கடல்போல, பெருமைமிக்க முனிவர்கள் அண்ணலின் உருவை நோக்கிக் களிப்புக் கடலிலே முழுகினர். கூற்றுதைத்த சேவடியைக் கும்பிட்டனர்.

“எல்லையற்ற கலைகட்கெல்லாம் இருப்பிடமே! மறையில் விளைந்த வான்பொருளே! வணக்கம்!”

ஆசிரியர் அன்புடன், “உங்கள் விழைவு யாது?” என்றார்.

“நாங்கள் வாழவும் உலகம் வாழவும் அளவில்லாத பெருமைமிக்க மறையின் பொருளை அருள்புரிக!”

எல்லா முனிவரும் வணங்கினர்.

அடியவர்களின் கொடுவினையைப் போக்குங் குருபரன் அந்த முனிவர்களுடன் முடிவற்ற இலிங்கத்தின் முன் சென்று நின்று திருவாய்மலர்ந்தார் :

''அந்தணரே! கேளுங்கள். அரிய மறைப்பொருள்களெல்லாம் மறைவானவையே. அத்தகைய பொருளை யறிதலே கெடுதலில்லாத இம்மையின்பப் பயனுக்கும் வருத்துகின்ற பாசத்தடையைப் போக்கும் வீட்டின் பயனுக்கும் கருவியாகும். உயர்ந்த—தான்றோன்றியான (சுயம்புவான) இலிங்கங்களிலே உயர்ந்த தன்மையாய், உயர்ந்த உண்மைப் பொருளாகிய—அழகிய—தானே முளைத்த—இந்த இலிங்கம் அழிவற்றதாய் மறை முதற் பொருளாய், உண்மையாய்ச் சுத்த அத்துவிதமான தன் னொளியுடையதாகும் (சுயம்பிரகாசமாகும்).

'பராற்பரம்' 'விஞ்ஞான நிராமயம்' என்று நூல்கள் கூறுகின்ற பரப்பிரமம் இதனுருவமாகும். தனிமறையின் பொருளே இந்த அழகிய சிவலிங்கமாகும் என்று நூலுணர்ந்தோர் கூறுவர்.

ஆகையால், மறையும் ஒன்றே; மறையின் பொருளும் ஒன்றே. எனினும் மறையானது பல கிளைகளாலாகியது. அக் கிளைகளெல்லாம் களிப்புடன் இவனையே வழிபடும். நான்முகனுக்கு இந்த மறைகளை இவனே அளித்தான். இவனே மூன்று தலைவர்களாயிருந்தான்.

மலரவனாகி மூவுலகையும் படைத்தான். திருமாலாகி அவ்வுலகை நிலை பெறுவித்தான். முக்கட் பெருமானாகி அழித்தான். இம் மூவருக்குந் தலைவனாகிப் பரமாகாச உருவினனாகித் தோற்றமும் முடிவுமின்றி அழிவற்ற பேரொளியாக இந்தச் சுந்தர இலிங்கத்திலே யிருப்பான். இந்த இலிங்கத்தின் அடிப்பாகம் ஆன்ம தத்துவமான மலரவன் பாகமாகும். இடைப்பாகம் வித்தியா தத்துவமான திருமாலின் பாகமாகும். முடிப்பாகம் சிவ தத்துவமான உருத்திரன் பங்காகும். இந்த மூன்று தத்துவங்களினும் அளவில்லாத தத்துவங்களெலாந் தோன்றும்.

ஆன்ம தத்துவத்தில் அகாரமும் வித்தியா தத்துவத்தில் உகாரமும், சிவ தத்துவத்தில் மகாரமும் எல்லாத் தத்துவங் களினும் விந்துவும் நாதமும் தோன்றின. இவ்வாறு பிரணவம் உண்டாகிறது. தாரகத்திலே காயத்திரி மூவகையாகப் பிறக் கும். அந்தக் காயத்திரி சமட்டி வியட்டியென இருவகையாகும். இவை விரும்பியவற்றுக் கெல்லாம் ஆதரவாகும்.

இந்த இரண்டும் நான்மறைகளை யீன்றன. அந்த நான்கு மறைகளும் அளவில்வாயின. பிரணவம் முதலான மந்திரங் களும் அளவிலவாயின. பிரணவத்திலே அகரம் முதலான எழுத்துகளுந் தோன்றின. அந்த எழுத்திலே சிவாகம நூல்கள் தோன்றின.

அத்தச் சிவாகம நூல்கள் சிவபெருமானுடைய நடு முகத்திலே தோன்றின. கீழ்த்திசை முகத்திலே இருக்கு மறையும், தென்றிசை முகத்தில் யசுரும், வடதிசை முகத்திற் சாமமும், மேற்றிசை முகத்திலே அதர்வணமும் தோன்றின. மறைகள் நான்காகையால் வருணங்களும் நான்காயின. வேள்வி முதலான தொழில்களும் மறையிலே தோன்றின. மறை கருமநூல், ஞானநூலென இரண்டாகும். கருமநூல் இவன் வழிபாட்டு முறையை உணர்த்தும். ஞானநூல் இவன் 'வடிவிலா வடிவினை' உணர்த்தும்.

வேர்பருகும் நீரினலே கிளை தழைப்பதுபோல இந்த முழு முதல்வனுக்கு ஊட்டும் நல்ல அவியுணவினலே, இவன் வடிவான மற்றைய அமரர்களும் உண்டவராவார். முத் தொழிலுக்குஞ் சிவார்ச்சனைக்கும் இந்தச் சிவலிங்கமே ஆதாரம்.

மறைகள் பலவகையினும் கூறிக்கூறி மயங்கும்படி எங்கும் நிறைபொருளான—பரப்பிரமமான—இந்த இலிங்கத்தை நன் னெறி தவருமல் வழிபடுவதாலும், ஞான நெறியினலே இப் பொருளை அறியும் அறிவினலும் தெளிவதான இந்த அருமறைப் பொருள் மற்றவர்க் கறிய இயலாதது.

கருமத்தாலே ஞானமுண்டாகும். கருமத்தைச் சித்த சுத்தி தரும். அந்தச் சித்த சுத்தியைத் தருமம் கொடுக்கும். அந்தத் தருமத்தாலே சாந்தி யுண்டாகும். சாந்தியாலே அட்டாங்க யோகம் உண்டாகும். கிரியையாலும் ஞானத்தாலும் சிவபக்தி, வழிபாடு, தரிசனம், சிவலிங்கமமைத்தல், சிவனடியார் வழிபாடு, சிவசின்னந் தாங்குதல், குருவழிபாடு முதலான அனைத்தையும் அறியலாம். மறைவழி நடக்கும் மதங்கட்கு மறையே ஆதாரம். மறைவழியே மிருதி சென்று அதற்குத் துணையாயிருக்கும். ஆகையினால் மறைவழியான இதனை மிருதிவழியென்பர். மிருதி வழியெல்லாம் மறைவழியே. ஆகவே இந்தச் சுத்த சைவம் மறையை மேலாகக் கூறும்.

இம்மை மறுமைப் பயன்பெறச் சிவமயமான மறைப் பொருளைத் தெளிவாகக் கூறினோம். இதனைவிடச் சிறந்த பொருளில்லை. இப்பொருளெல்லாம் உங்களுக்கு மயக்கமின்றித் தெளிவதாக!''

இவ்வாறு கூறிய ஆசிரியர் அந்த முனிவர்களின் முதுகைத் தடவியருளி இலிங்கத்திலேயே மறைந்தார்.

"தெருட்பெறு போகம் வீடுகா ரணமாய்ச்
சிவமய மாமறைப் பொருளை
இருட்கெட உரைத்தேம் இப்பொருட் கதிகம்
இல்லையிப் பொருளெலாம் உமக்கு
மருட்கெடத் தெளிவ தாகென இனைய
வழிவழா மாதவர் புறத்தை
அருட்கையால் தடவி இலிங்கத்துட் புகுந்தான்
அருள்பழுத் தன்னதே சிகனே." (சஉ)

கஎ. மாணிக்கம் விற்றல்

வீரபாண்டியன் காமக்கிழத்தியரின் மக்கள் செயல்

வீரபாண்டியனுக்கு ஐம்புலவின்பத்தையும் விளைவிக்கும் நிலம்போன்ற காமக்கிழத்தியர் பலரிருந்தனர். அவர்களுக்குக் காமனேயனைய பல மக்கள் 'நல்லபயிருக்குக் களை போல' வீறு பெறப் பிறந்தனர். எனினும் பட்டத் தரசிக்குக் குழந்தை பிறக்கவில்லை. அரசனும் அரசியும் அரும்பெறற் புதல்வனைக் கருதி, அங்கயற் கண்ணம்மை பங்கரான சொக்கநாதரை வழிபட்டு, அட்டமி, சதுர்த்தசி, சோமவாரம் ஆகிய நோன் புகளையு மியற்றினர். இறுதியில் வடமீன் போன்ற கற்பினை யுடைய அரசி வயிற்றிலே ஆலவிதையின் முளைபோல நீர்சூழ்ந்த உலகிலே அருளாட்சியை அமைக்க ஒரு மகன் பிறந்தான்.

அந்த ஒப்பற்ற திருமகனுக்கு மகிழ்ச்சிமிக மறை விதிப்படி பிறந்தநாட் குறிப்புவினை முதலானவற்றைச் சிறப்புறச் செய்து, அவன் அரசிளங்குமரனாக அழகுபெறும் நாளிலே வீரபாண்டியன் வேட்டைக்குச் சென்ற இடத்திலே,புலியாற் கொல்லப்பட்டான். அரசியும் அரசகுடும்பமும் நகர மாந்தரும் தம் உயிரிழந்தார் போலத் துடித்து வாய் விட்டரற்றினர். அந்நிலையிலே காமக் கிழத்தியரின் மக்கள் யானை குதிரை முதலானவற்றையும் பல் வகைப் பொருள்களையும் அணிமணிகளையும் மணிமுடியையுங் கவர்ந்து மறைந்தனர்.

இதனையுணராத அமைச்சர்கள் கோமகனைக் கொண்டு, இறந்த மன்னனுக் கியற்ற வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தனர். பிறகு இளவரசனுக்கு முடிசூட்டுவதற்கு வேண்டிய மங்கல வினை தொடங்கினர். பொன்னறையிலே நவமணி மகுடமும் நாடிக் கண்டிலர்; பொற்குவையையுங் கண் டிலர்; திகைப்புற்று வாடிச் சிந்தை கலங்கி, இது பகைவரின் கொள்ளையெனத் தேர்ந்தனர்.

''வேறு மணிமுடி செய்வோமெனில் மாணிக்கங்கள் இல்லை. அரசனில்லையேல் அம்புவி அல்லலுறும். என் செய்வது! ஆறுமுடித்த அண்ணலாரை வேண்டுவோம்.''

அளவிடற்கரிய கவலையுடன், அரண்மனை விட்டு, அரசிளங் கொழுந்தையும் அழைத்துக்கொண்டு, திருக்கோயிலின் வாயிலை அடைந்தனர்.

சோமசுந்தர வணிகர்—நவமணிகள்

இடையிலே அழகிய ஆடையும் தோளிலே விலையற்ற கதிர்போல ஒளிவிடும் மேலாடையும், மறைவிதிப்படி யணிந்த முப்புரிநூலும் இந்திர தனுசைப்போல அழகிய ஆரமும் விளங்கும் மார்பும், தோளிலே புரளும் அணிமிக்க காதணியான குழையுங் குண்டலமும் விளங்க ஒளிவிடும் மணிப் பொதி சுமந்தவராய்த் தமது மறை மலர்த்தாளைத் தரைமீது பதித்துச் சோமசுந்தரக்கடவுள் வணிகராய்அவர்கள் எதிரிலே நின்றனர்; அமைச்சர்களையும் அரசிளங்கோவையும் நோக்கினர். 'மயக்கத் துடன் வருகிறீர்களே! என்ன வேண்டும்?' என்று வினவினர். அவர்கள் தம் குறையைக் கூறினர்.

"ஏன் வருந்துகிறீர்கள்? என்னிடம் ஒன்பது வகை மணிகளும் உள்ளன. அவை பதினுயிரங் கோடி பொன் பெறும். இவற்றைப் பாருங்கள்!"

வணிகர் கீழ்த்திசை நோக்கி அமர்ந்தார். ஒரு கரிய துகிலைத் தரைமிசை விரித்தார். துகில் நடுவிலேயும் கீழ்த்திசை முதலான எட்டுத் திசைகளிலேயும் மாணிக்கம் முத்து முதலான நவமணிகளையும் முறையாக வைத்தார்.

'இம்மணிகள் வலன் என்பவனுடைய உடற் கூறுகள்.' அமைச்சர்கள் வியந்து, 'அவன் யார்? அவன் உடல் மணியான காரணம் என்ன?' என்று வினவினர்.

"வலன் என்பவன் ஓரவுணன். அவன் முற்காலத்திலே முக்கட் பெருமானுர் திருவடியை வணங்கித் தவஞ் செய்தான். இறைவனுர் வெளிவந்து, 'என்ன வேண்டும்?' என்று வினவி யருளினுர்.

அவுணன் வணங்கிப் போரில் எவராலும் இறவா வரம் அருள்வீராக! ஊழ்வினை உற்று மடிந்தால் என் உடல்,

துறவிகளும் விழையும் வண்ணம் நவமணியாதல் வேண்டும் என்று வேண்டினுன்.

ஆலமுண்ட கண்டனுர் அவ்வாறே அருளினுர். வலன் மகிழ்வுடன் வானவர் தலைவன்மேற் போருக்குச் சென்றுன். மகபதியும் எதிர்த்து மண்டமர் புரிந்தான். எனினும், வலனுடன் போர்செய ஆற்ருது தோற்றுப் போயினுன். போன இந்திரன் புழுங்கினுன். அழிவிலா வரம்பெற்ற வலனை அழிப்பதற்கு வேறு சூழ்ந்தான். வானவர்களையெலாம் படையின்றி உடன் வரப் பணித்துச் சென்று மடங்கல் போன்ற வலனைக் கண்டான்.

"வெற்றி வீரனே! நின் தோள்வலியாலுண்டான வெற்றிப் பெருக்கம் எத்திசையினும் இசை பெற்றது. அது கண்டு எம்முள்ளம் அன்புமிக்கு மகிழ்ச்சி யடைந்தது. உனக்கு வேண்டிய வரம் என்ன?"

கற்பகநாட்டுக் காவலனுடைய நயவுரை காதில் நுழைந்தவுடன் அவுணன் தன் நீண்ட கைகளைத் தட்டிக் கரிய முகிலிடிப்பது போல நகைத்து இகழ்ந்தான்.

"நீ கூறியது மிகநன்று! எல்லோரும் நகைக்க நீ யெனை முதுகு கண்ட வெற்றியும் அதனுற் பெற்ற புகழும் நின் சிறப்பும் இப்போது உன் போரிலே காணப்பட்டன வல்லவோ? அப் புகழ் எவ்வாறு எங்கும் பரவியதோ அவ் வாறே நின் கொடையும் நிற்கும்! முடிவிலாத முக்கட் பெருமானுர் எனக்களித்த வரம் போதும். நின்பாற் பெறவேண்டுவ தொன்றுமின்று. உனக்கு வேண்டியதைக் கேள், அதனை இப்போதே கொடுப்பேன். இன்றேல் உன் போற் போர்க்களத்திலே தோற்ற பழியாகிய புகழைப் பெறுவேன்."

இந்திரன் கேட்டு மகிழ்ந்தான். வீரமென்பது சார மற்றதென்றும் இழிவழியினும் வெற்றியே ஏற்றதென்றும் எண்ணினுன் போலும்!

"மேருவை வில்லாக வளைத்த பெருமானார் உறையும் வெள்ளிமலைச் சாரலிலே வேள்வியொன்று புரியச் செல்கின்றேன். அந்த வேள்விக்கு வானவர்க் குண்பிக்க வேள்விப் பசுவாக நீ வருதல் வேண்டும்,"

என்று சிறிதுங் கூச்சமின்றிக் கூறினான்.

"முற்காலத்திலே ததீசியின் முதுகெலும்பை வச்சிரமாகப் பெற்றாய். அதனால்—அக் கொடையால்—அவர் பெற்ற புகழுடம்பு ஒன்றே. நான் வெற்றியினாலொரு புகழுடம்பும், அழியாத என் மெய்யெலாம் நவமணிகளாகப் பொன்றிய கொடையினாலொரு புகழுடம்பும் ஆக இரண்டுடம்பு பெற்றேன். நீ யென் பகைவனல்லை! நண்பனேயாகினை! பழம் பெரு வானவரெல்லாம் உண்ணுமாறு அறமும் புகழும் எனக்குக் கிடைக்க ஆவாக வருதி யென்றாய்! அவ்வாறே வருவேன்!" என்றான் வீரமிக்க வலன்.

"ஈவதே பெருமையன்றி இரக்கின்ற திழிபேயன்றோ?"

வெட்கமுறாமல் விண்ணவர்கோன் வேள்வி தொடங்கச் சென்றான். அவுணர் தலைவன் தன் மகனுக்கு முடிசூட்டினான். அமரர் புரியும் வேள்விச்சாலைப் புறத்தே சென்று நின்றான். வலன் பெருந்தன்மையையும் வானவன் இழி தன்மையையும் வரைவதெப்படி?

இந்திரன் வரவேற்றான். 'வாய்மையினாலே சிறப்புற்ற உன்னைப்போன்ற வள்ளல்களில்லை,' யென்று வாழ்த்தினான். அவுணன் புன்முறுவல் செய்து மேருமலையோடு மாறுகொண்ட விந்தமலைபோல நிமிர்ந்து 'வேள்வித்தூணிலே என்னைப் பிணிக்க!' என்று வேள்வித்தூணை அடுத்து நின்றான். தருப்பைக் கயிற்றாலே கட்டினர். சிலம்பி நூலாலே கட்டுண்ட சிங்கப் போத்தெனக் காணப்பட்டான் வலம்பெற்ற வலன். பின்னர், அவன் வாயைப் பொத்தி வெட்டி மாய்த்தனர். மந்தார மலர்மாரியினிடையிலே இந்திரவிமானத்திலூர்ந்து பழைய நான்முகனுலகை நண்ணினான் வலன்.

பின்னர், இந்திரன் வலனுடைய வபையை யெடுத்து வேள்வித்தீயிலே காட்டித் தான் குறித்த வானவர்க்கு உண்பித்து வேள்வியை முடித்தான்.

வேள்வி ஆவாகிய வலனுடைய இரத்தமே மாணிக்கம்! பற்களே முத்து! மயிரே வைடூரியம்! என்பே வச்சிரம்! பித்தமே பச்சை! நிணமே கோமேதகம்! தசையே பவளம்! கண்களே நீலம்! கோழையே புருடராகம்! இவையே நவமணியின் பிறப்பு வரலாறு!

இவ்வாறு வடிவமெடுத்து இருளை யோட்டிக் கதிர் விடும் நவமணிகளையும் அவை சார்புறும் இடம், நிறம், சாதி, தெய்வதம், ஒளி, குற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து சோதனை செய்து புகழ்பெற மெய்யிலணிவோர் அடையும் பயனையும் முறைப்படி கேளுங்கள்.

மாணிக்கம்—நால்வகை

மாணிக்கம் கிரேதம் முதலான நான்கு யுகங்களினும் முறையே மக்கம், காளபுரம், தும்புரம், சிங்களம் என்னும் நான்கிடங்களிலுங் கிடைக்கும். இதன் நிறம் ஒன்பது. அவை: தாமரைமலர், மாதுளம்பூ, மாதுளவிதை, நெருப்பு, செங்கழுநீர்ப்பூ, மின்மினி, நாரத்தம்பழம், விளக்கு, இந்திர கோபம் என்பனவாகும். இது நால்வகைப்படும்:

1. பதுமராகம் (சாதரங்கம்); 2. குருவிந்தம் (விந்தம்); குரு - இரத்தம்; 3. நீல கந்தி (சௌகந்தி): நீலம் எனவும் உரைப்பர். 4. படிதம் (கோவாங்கு).

சிறப்பு:—1. நிறம். பதுமராகம். இதன் நிறம் பத்து: தாமரைமலர், கருநெய்தல், கதிரொளி, நெருப்பு, மின்மினி, மாதுளம்பூ, மாதுளம் வித்து, மேகம், விளக்கு, இந்திர கோபம் —இவற்றின் நிறம்.

2. குருவிந்தம்: இதன் நிறம் எட்டு: குன்றி, முய லிரத்தம், வெள்ளலோத்தம் எனும் மரத்தின் மலர், பலாசமலர், திலகம், செவ்வரத்தம், முள்ளிலவு, பொன்—இவற்றின் நிறம்.

3. சௌகந்தி: இதன் நிறம் ஆறு: இலவம்போது, குயிலின்கண், அசோகந்தளிர், பொன், செம்பஞ்சி, மருதோன்றி—இவற்றின் நிறம்.

4. கோவாங்கம்: இதன் நிறம் நான்கு: குரவுமலர், குசும்பைமலர், செங்கல், கொவ்வைக்கனி—இவற்றின் நிறம்.

இவற்றுடனொத்த சிலப்பதிகார மேற்கோள். சிறிது வேறுபாடுமுண்டு:

"பதுமமும் நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்"
(சிலப்பதிகாரம்: ஊர்காண்காதை, ௧அ௬-௧அ௭)

1. பயன்: 1. பதுமராகம்: திண்ணியதாய், மேல் கீழ் பக்கம் என மூன்றிடங்களினும் ஒளி வீசினுல் முறையே உத்தமம், மத்திமம், அதமம் என்பர். இதனை அணிவோர் கல்வி, பசு, கன்னி, அறுசுவை அன்னம் முதலான தானங்களையும் பரிவேள்வி முதலான வேள்விகளையும் செய்தோர் எய்தும் பயன் எய்துவர். 2. குருவிந்தந் தரிப்பவர் உலகெலாம் ஒருகுடை நிழலிலாள்வர்: திருமகளும் வீரமகளும் நீங்கார். 3. சௌகந்திகந் தரிப்பவர் செல்வமும் புகழுஞ் சேரப் பெறுவர். 4. கோவாங்கந் தரிப்போர் இல்லத்திற் பால்வளமுந் நெல் முதலிய தானிய வளமும் உண்டாகும்.

குற்றமெலாம் நீங்கிக் குணமெலாம் நிறைந்த ஒளிவிடும் இந்தச் செம்பதுமராகத்தைப் புனைவோரிடம் மற்ற மணிகளெலாம் வந்து சேரும். திருமகளருளும் கலைமகளருளும் பாற்கடலெனப் பரவும்.

இதன் உரையில் அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோளும் விளக்கமும்:

"தாமரை கழுநீர் சாதகப் புட்கண்—கோபம் மின்மினி கொடுங்கதிர் விளக்கு மாதுளைப்பூ விதைவன்னியிரைந்தும்—ஒது சாதுரங்க வொளியாகும்மே.

"திலகமுலோத்திரஞ் செம்பருத்திப்பூக்—கவிர்மலர் குன்றி முயலுதிரம்மே—சிந்துரங் குக்கிற் கண்ணென வெட்டும்—எண்ணிய குருவிந்தம் மன்னிய நிறமே."

"கோகிலக்கண் செம்பஞ்சு கொய்ம்மலர்ப் பலாசம்—அசோகப் பல்லவம் அணிமலர்க் குவளை—இலவத் தலர்க ளென்ருறு குணமுஞ்—சௌகந் திக்குச் சாற்றிய நிறனே."

"கோவைநற் செங்கல் குராமலர் மஞ்சளெனக்—கூறிய நான்குங் கோவாங்கு நிறனே."

கல்லாடமும் இவ்வாறே கூறுகிறது.

2. குற்றம்: சரைமலம், கீற்று, சப்படி, பிளத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், மிருத்து, கோடியில்லன, கோடி முரிந்தன, தாரை மழுங்கல் என்னுங் குற்றம் பன்னிரண்டனுள் பிறநிறச்சார்பு, விந்து, காகபாதம், கீற்று, ஒளிசலித்தல் என்னும் ஐந்தும் மிக்க குற்றங்கள்.

இந்தக் குற்றங்கள் நீங்கிய மாணிக்கத்தை அணியும் வேந்தன் பகைவர் வாளூறு படாமல் வீரமகள் விரும்பத் தக்கவனுவான். குறுநிலமன்னன் அணிந்தால் அவன் குடை நீழலிலே உலகமெலாம் வாழும். அவனைப் பாம்பு, விலங்கு, பேய், பூதம், சிறுதெய்வம், வறுமை, நோய், தீ, கூற்றுவன் சீற்றம் என்பவை வருத்தமாட்டா.

3. முத்து: இரண்டுவகை: 1. நீரில் தோன்றுவன 2. நீரில்லாத இடங்களில் தோன்றுவன.

முத்துத் தோன்றும் இடங்கள் பதின்மூன்று, அவை: சங்கு, முகில், மூங்கில், அரவின் உச்சி, பன்றிக் கொம்பு, வெண்ணெல், இப்பி, மீனின் தலை, வேழக் கரும்பு, களிற்றின் கொம்பு, சிங்கத்தின் கை, கற்புடைய பெண்களின் மிடறு, கொக்கின் கழுத்து என்பனவாம்.

திங்கள், வாழை, முகில், பெண்களின் கழுத்து, ஆவின் பல், யானைக் கொம்பு, பன்றிக் கொம்பு, முதலை, உடும்பு, கொக்கு, பாம்பு, நந்து சலஞ்சலம், இப்பி, மீன், மூங்கில்,

கமுகு, செந்நெல், கரும்பு, தாமரை என இருபதிடங் கொள்வர் சிலர்.

முத்தின்நிறம் சிப்பியினிடத்தும் சங்கினிடத்தும் உண்டாகும் - மாடப்புறவின் முட்டை போன்று திரண்ட - முத்துகள் வெள்ளை நிறத்தன. முகிலிடைத் தோன்றும் முத்துகள் செஞ்ஞாயிறு போன்ற நிறத்தன. மூங்கிலில் விளைவன மழையொடு கலந்து விழும் ஆலங்கட்டி (பனிக் கட்டி) நிறத்தன. பாம்பினிடம் உண்டாம் முத்துகள் நீலநிறத்தன. பன்றிக் கொம்பின் முத்துகள் இரத்த நிறத்தன. நெல்லொடு விளைவன பசுமை நிறத்தன. மீனிடம் வருமுத்தங்கள் பாதிரி நிறத்தன. வேழக் கரும்பினும் களிற்றின் கோட்டினும் விளைவன பொன்னிறத்தன.

சிங்கத்தின் கை, பெண்கள் கழுத்து, கொக்கின் கழுத்து என்னும் இம்மூன்றிடத்தினும் இப்போது முத்துகள் கிடைத்தலரிது. ஆகையால் அவற்றின் நிறம் கூறப்படவில்லை.

முத்தின் தெய்வம்: பால்போன்ற வெண்மையான முத்துகளுக்கு வருணன் தெய்வம். ஞாயிறு நிற முத்துகளுக்கு ஞாயிறே தெய்வம். நீல நிற முத்துக்களுக்குத் திருமால். குற்றமற்ற இரத்த நிற முத்துகளுக்குக் காற்று. பசுமை நிற முத்துகளுக்குக் காலன். பொன்னிற முத்துகளுக்கு இந்திரன்.

முத்தின் பண்பும் பயனும்: விண்மீன் போன்ற காட்சியும் உருட்சியும் காற்றேறு, மண்ணேறு, கல்லேறு, நீர்நிலையென்னும் குற்றங்களின்மையும் கையாலெடுத்தால் திண்மையும் பார்வைக் கினிமையும் ஒளிவிடுதலும் ஆகிய ஆறு பண்புகளையுமுடைய முத்துகளை அணியின் வறுமை நீங்கும்; செல்வம் உண்டாகும்; வாழ்நாள் மிகும்.

வயிரம்

வயிரமே மணிகளுக்கு முதன்மையானது. ஏனெனில் மற்றை மணிகளைத் துளையிடுங் கருவி வயிரம். ஆனால்,

வயிரத்துக்கு வயிரமே துளையிடுங் கருவி. குற்றமற்ற தவத்தினையுடைய ததீசியின் என்பும் வலன் என்பும் வீழ்ந்த கோசலம் முதலான நாடுகளில் உண்டானதும் பண்பினால் மேம்பட்ட ஒளியினையுடையதும் நுண்மையானதும் தெளிவானதும் எல்லையற்ற விலையினையுடையதும் ஆகியது மேலான வயிரம். இதனைக் குறுநில மன்னன் அணியினும் குற்றமற்ற செல்வம் பெற்றுப் பகை வென்று, உலகெலாம் ஒருகுடை நிழலில் ஆள்வான். வறுமையும் நோயும் விலங்கும் சாரா. குறித்த நாளன்றிக் காலனும் பூதமும் பிற தீய கணங்களுந் துன்புறுத்தாவாம்.

மரகதம்

இது காடம் சுப்பிரம் காளம் என மூவகைப்படும். அறுகம் புல்லின் நிறத்தையுடைய காடம் இருவகைப்படும். அவை சகுணம் சதோடம் (இவை குணமும் குற்றமும்.)

சகுணம் ஆறு: காடம், உல்லசிதம், பேசலம், பித்தகம், முத்தம், பிதுகம் என்பவற்றுட் காட மென்பது புல்லின் நிறமுடையது. உல்லசிதம் மென்மையானது. பேசலம் என்பது செந்நெற்பயிரின் நுனிநிறத்தையும் அதன் முத்தின் நிறத்தையும் போன்ற நிறத்தது. இருளை ஓட்டும் பித்தகம் பச்சைக் கிளியின் சிறகு நிறத்தது. முத்தம் துளசியின் நிறத்தது. பிதுகம் தாமரையிலையின் நிறத்தது.

சதோடம் ஐவகை: தோடலே சாஞ்சிதம், துட்டம், தோட மூர்ச்சிதம், தோடலேசம், மந்த தோடம் என்னும் ஐந்தனுள் தோடலேசாஞ்சிதம் எலுமிச்சையிலையின் நிற முடையது. துட்டம் அரலியிலை நிறம். தோடமூர்ச்சிதம் நீலநிறமும் புல்லின் இதழ் நிறமும் உடையது. தோடலேசம் தாமரையின் நிறம். மந்த தோடம் கலவமயிலின் நிறத்தது.

பண்பு: மேலே கூறிய குற்றங்களின்றிக் குணமுடைய மரகத மணிவோர் நால்வகைப் படையும் வாழ்நாளும் பெற்று வாழ்வார்கள்.

நீலம்

இஃது இருவகைப்படும். அவை: இந்திர நீலம், மா நீலம். இவற்றை வானவரும் குற்றமற்ற மானவரும் விரும்பி யணிவர். இந்திர நீலம் மாநீலத்தை விடப் பதினுயிரம் பங்கு விலையுடையது. இஃது உலகில் அரியது. பாற்குடத்தில் இட்டால் அப் பாலின் நிறத்தைக் கீழ்ப்படுத்தி நூறுமடங்கு தன் நீல நிறம் மேற்பட்டுத் தோன்றும்.*

மாநீலம்

வெள்ளை, சிவப்பு, நெருப்பு, பொன் எனும் நால்வகை நிறமுங் கலந்திருப்பதாகும். வெண்மை கலந்த நீலம், சிவப்புக் கலந்த நீலம், நெருப்பு நிறங் கலந்த நீலம், பொன்னிறங் கலந்த நீலம், இதனை அணிவோர் நன்மைபெறுவர்.

கோமேதகம்

மணி, முத்து, வயிரம், மரகதம், நீலம் என்னும் ஐந்தும் சிறந்தவை. கோமேதகம், புருடராகம், வயிடூரியம், பவளம் என்னும் நான்கும் சிற்றொளியுடையவை. எனினும் மக்களுக்கு விருப்பந் தருவனவே.

இவற்றுட் கோமேதகம் உருக்கிய நல்ல நெய்த்துளி, தேன் துளி, கோமய நீர் போலச் சிவந்து, பசும் பொன் னின் நிறமும் பெற்று மென்மையாய்த் தெளிவானதாய்த் திண்மை பெற்று விளங்கும். இதை யணிந்தாற் பாவம் நீங்கித் தூய்மையுண்டாகும்.

புருடராகம்

வட்டமாய் மெலிதாய்ப் பொன்போ லொளி சூழ்ந்து நெருப்பெனத் தெளிவுகாட்டி மனங்கவருந் தோற்ற முடை யது புருடராகம். இந்த மணி பாரியாத்திர கிரியிலே கொடு முடியாக இலங்குகின்றது. மந்தரமாலையைச் சூழ மேகலை போலமைந்துளது. தேவதச்சன் இந்த மணியைக் கொண்டு வானவர் தலைவனுக்கு நகரும் (அரண்மனையும்) அரசிருக்கை மண்டபமும் அமைத்தான். இதை யணிவோர் பகைவரை வென்று வாகையணிவார்.

---

*சுவாமிநாத பண்டிதர் முதல் நூலில் 'மாநீலத்தைப் பாற்குடத் தில் இட்டால் நூறுமடங்கு மேற்பட்டுத் தோன்று' மென்பர்.

வயிடூரியம்

இஃது இளாவிருத கண்டத்திலே முதலிய தோன்றியது. இப்போது கோரக்கம், மகதம், சிங்களம், மலயம், பாரசீகம், திரிகூடம் முதலான இடங்களிலும் அலைகடலிலும் உண்டாகும். இஃது இடியிடிக்கும் போது தோன்றும். இது மூங்கிலிலை, மயில் கழுத்து, பூனையின் கண்போன்ற நிறமுடையது. திண்ணியதாய் மெலிதாய்த் தெள்ளியதாய் விளங்கும். வலம், இடம், மேல், கீழ் எனும் இடங்களிலே ஒளிவீசுவன, முறையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளரெனும் நால்வருக்கும் உரியன.

பவளம்

பவளம் முருக்கம்பூ, பச்சைக்கிளி மூக்கு, செவ்வரத்த மலர், கொவ்வைக்கனி ஆகியவற்றின் நிறமுடையது. திருகல், புழுவரித்தல், முகமொடிதல் என்பவை குற்றமாகும்; இது பெண்களுக்கே யுரியது. அவர்களணிந்தால் மகப்பேறுண்டாகும். கனலுமிழும் சூரியகாந்தக் கல்லும் சந்திரகாந்தக் கல்லும் இந்த நவமணிகளுள் ஒன்றன் உட்கிடையாகும்.

நவமணிகளின் சாதி !

வச்சிரமும் முத்தும் அந்தணர்சாதி ! பவளமும் மாணிக்கமும் மன்னவர்சாதி ! புருடராகமும் வயிடூரியமும் கோமேதகமும் வணிகர்சாதி ! நீலமும் மரகதமும் வேளாளர்சாதி.

மூக்குணம்

முத்தும் பச்சையும் (மரகதமும்) சாத்துவிகம். பவளம் மாணிக்கம் கோமேதகம் புருடராகம் வயிடூரியம் வயிரம் என்பவை இராசதம். நீலம் தாமதம்.

நாள்கள்

இவற்றை அளந்து பார்த்து மதிப்பிடும் நாள்கள் :— ஞாயிற்றிற் பதுமராகம் கோமேதகம்—திங்களில் முத்து வயிடூரியம்—செவ்வாயிற் பவளம்—புதனிற் பச்சை—வியாழனிற் புருடராகம்—வெள்ளியில் வயிரம்—சனியில் நீலம் ஆகும்.

வழிபடும் முறை

தாமரை, சாதி, செவ்வல்லி, கோடல் (வெண்காந்தள்), கொடிமுல்லை, நூற்றிதழ்த் தாமரை, மஞ்சள்மலர், செங்கழுநீர், வெள்ளைமந்தாரை ஆகிய மலர்களையணிந்து, ஓரிடத்தைத் தூய்மை செய்து, தவிசமைத்து, வெள்ளைத் துகில் விரித்து மாணிக்கத்தை நடுவிலும், முத்து முதலான எட்டு மணிகளையும் முறையே எட்டுத் திசைகளினும் வலப்பக்கமாகச் சூழவைத்து, ஒன்பது மணிகளினும் ஞாயிறு முதலாம் ஒன்பது கோளையும் திருத்தி, முன் கூறிய தாமரை முதலான ஒன்பது மலர்களையும் இட்டு வழிபடல் வேண்டும்.

அபிடேக பாண்டியன்

சோமசுந்தரராகிய வணிகர் இவ்வாறு ஒன்பது மணிகளின் மரபையும் விளக்கிக் கூறினார். பிறகு, வடக்கு நோக்கி மலரிட்டு வழிபட்டிருந்து மணிகளைக் கையிலெடுத்தார்; மதுரைப்பரனை நோக்கி அஞ்சலி செய்தார். உள்ளத்திலே இளவரசனுக்கு ஆயுளுஞ் செல்வமும் மிகுகவென வாழ்த்தி அளித்தார். இளவரசனும் விண்ணிழி விமானம் (இந்திர விமானம்) நோக்கிக் கும்பிட்டு இருகைகளையும் விரித்து ஏற்றான். வணிகர் அமைச்சரை நோக்கி 'இந்த மணிகளாலே இழைத்துப் புதிய முடி சூட்டி அபிடேக பாண்டியனென அழைப்பீராக,' என்றார். அமைச்சர்கள் வணிகருக்குச் செம்பொன் விலை கொடுக்க நோக்கும்போது மறைந்தருளினார் வந்த வள்ளல். அவர்கள் திகைத்து நோக்குமளவில் விடையின்மேல் உமையாளுடன், 'ஈருருவாய் முக்கண்ணும் நாற்கரமும் அஞ்சு அமரர் இறவாவாறு — காருருவா யெழுமிடறும்' காட்டித் தம் கோயில்புகும் கண்ணுதலாரைக் கண்டனர். வந்த வணிகர் இந்த வள்ளலேயெனத் தெளிந்து பின்பற்றிச் சென்றனர். என்னே இறையருள் !

தேன் மலர்ந்த கொன்றை விரியும் திருச்சடையாரின் திருமுன்னே அரசகுமரன் வீழ்ந்து சேவித்தான். செங்கை

கூப்பி நின்றான். யான் செய்யுங் கைம்மாருக எம்பிரானர்க்கேதுண்டு? யானும் என் ஊனுடலும் பொருளும் உயிரும் உளவெனில் அவையுந் தங்களுடையனவே யல்லவோ? மேலும், "வான் செய்யும் நன்றிக்கு வையகத்தோர் செய்யுங் கைம்மாறுண்டேயோ?" என்று நாக்குழற நவின்றான். அங்கிருந்த சான்றோர்கள், 'வீரமகள் விரும்பும் இந்த இளவரசனுக்கு மொழி கடந்த—எங்கும் நிறைந்த—மதுரைப்பிரானர் மணிமுடிக்கு நவமணிகளையும் அளித்தருளியதால் அளவற்ற நாள்கள் உலகை ஆள்வான்,' என வாழ்த்தினர்கள்.

பின்னர், இளவரசன் திருக்கோயிலை வலம் வந்து எட்டுக் களிறுகள் சுமந்த இந்திரவிமானத்திலெழுந்தருளிய பெருமானர் அருள் பெற்றுத் தன் அரண்மனை புகுந்தான். நவமணிக் கலைஞர்கள் மாணிக்கங்களை ஆராய்ந்து வியப்பும் ஐயமும் அடைந்தனர்.

"வந்த வணிகர் சுந்தரப்பெருமானரெனில் நாள்களையுங் கோள்களையும் நவமணியாக மாற்றினரோ? தாளிலுந் தோளிலும் புனைந்த நாகங்களளித்த மணிகளை நல்கினரோ? வானவருலகினும் இம் மணிகள் அரியன!"

மயனைவிடச் சிறந்த பொற்கொல்லர் திருமுடி செய்தனர். நன்னாளிலே முடிசூட்டி அபிடேக பாண்டியன் எனப் பெயரிட்டனர். நகரைச் சுற்றி உலா வந்து நம்பெருமானர் கோயிலை வணங்கி அரசனும் தன் அரண்மனை புகுந்தான். பகைவரை வென்று பயிரைக்காக்கும் மழையெனக் குடிகளுக்கருள் செய்து மாநிலத்தை ஆண்டு வந்தான்.

அந்நாள்களிலே இவனுக்கு முன்னவரான—தந்தையின் காமக்கிழத்தியரின் மக்களான—பகைவர் கொண்டு சென்ற பொருளையெலாம் அவர்களைச் சிறைப்படுத்தி வாங்கினான் மீனவன்.

———

கஶ. வருணன் விட்ட கடலை வற்றச்செய்தல்

பாண்டியன் வழிபாடு—இந்திரன் காலந்தாழ்த்தான்

அபிடேக பாண்டியன் கறைமிடற் றண்ணலார்க்குச் சித்திரைத் திங்களிலே சித்திரை நாளிலே அளவு கடந்த அன்பினாலே பற்பல சிறப்புகளமைந்த—அறிவும் பேரின் பமும் அளிக்கும்—வழிபாடு செய்வான்.

ஒருமுறை அவ்வாறு பாண்டிய மன்னன் நல்ல நெய் முதலாக மணமிக்க சந்தனக்குழம்பிறுதியாக வுள்ளவற்றாற் சொக்கரை நீராட்டிய பின்னர்க் கர்ப்பூர நீராட்டினான்; வியப்புடன் நோக்கினான்! தன்னை மறந்து கைகூப்பி நின்று 'எறிநீர் வைகைத்துறைவ! நீ யென் கர்ப்பூர சுந்தர னேயோ!' என்றான்? அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்?

இவன் வழிபாடு முடியும் வரையில், அச் சிறப்பு நோக்கி—அன்பை வியந்து—மற்றொரு பேரன்பன் காத் திருந்தான். அவன் அந்த நாளிலே பண்டு தொட்டு வழி பாடு செய்பவன். அவனே வானவர் தலைவன்; பொன்னக ரிறைவன்! தன் வழிபாட்டினுஞ் சிறந்ததொரு வழி பாட்டைக் கண்டான். காத்திருந்து பிறகே தன் வழி பாட்டைச் செய்து சென்றான்.

நீர்க்கடவுள் வினா—இந்திரன் விடை—வருணன்செயல்

அன்று நீர்க்கடவுளான வருணன் வேள்வித் தலைவ னான இந்திரன் அவைக்கு வந்திருந்தான். அவனுக்கு வயிற்றுநோயுண்டு. அது தீருங்காலம் வந்தது போலும்! ஆகையாற் சோர்வுடன் இருந்த இந்திரனை, 'இன்று நீ சிறிது சோர்வுடன் காணப்படுகிறாய்! ஏன்?' என்றான்.

'மயக்கமற்ற அன்பினாலே கட்டுறும் வார்சடை யண்ணலை —மதுரைச் சொக்கரை—மூல லிலிங்கத்தை—அன்பை முதலா கக்கொண்ட வழிபாடு செய்யச் சென்றேன். அங்குச் சிறிது காலந் தாழ்த்தது; அதனாலே உள்ளம் அலைப்பட்டது.

''அந்த இலிங்கந்தான் பெருமையுடைய இலிங்கமோ?'' வானவர் தலைவன் புன்முறுவல் செய்தான்.

''முன்னர் எனக்கு நேர்ந்த பழியையும் வெள்ளை யானையின் சாபத்தையுந் தொலைத்தது அந்த மூலவிலிங்கந் தானே? நீ அறியாயோ?''

''அங்ஙனமாயின் தெய்வ மருத்துவராலும் தீர்க்க வியலாத என் வயிற்று நோயை முற்றும் அந்த மூல இலிங்கம் போக்குமோ?''

இந்திரன் தனக்குள்ளேயே நகைத்துக்கொண்டான்.

'உனக்கு வந்த ஐயம் என்ன? அரியயனுர்களாலே தீர்க்கவியலாத பிறவிநோயைப் போக்கும் பெரியோர் அப் பெருமானுர். அவரால் இந்த யாக்கைப் பிணி ஏகாதென நினைப்பது பேதைமையன்ருே? அவர் திருவிளையாட்டை நீ இப்போதே சோதித்துப் பார்க்கலாமே!''

''மலைச் சிறகரிந்த வச்சிரனே! இங்கு நான் வந்த போது விரும்பினுர்க்கு விரும்பியன நல்குங் காமதேனுவை யும் அதனிடம் சோரும் பாலைப் பருகியவாறு நிற்கும் அதன் கன்றையும் வழியிலே கண்டேன். அந்த நற் சகுனமே இந்த நன்மொழியைக் கேட்பித்தது!''

நீர்க்கடவுள் விடைபெற்றுச் சென்ருன். வெள்ளி மன்றுளாடுங் கூத்தரின் ஆடலைக் காண அவாவினுன். கடலைக் கூப்பிட்டான். ''இன்னே சென்று பழம் பெரு மூதூரான மதுரையை அழிப்பாயாக!'' என்ருன்

கடல் வற்றல்

கடல் பொங்கி யெழுந்தது! மரங்களைக் கொத்தி யெடுத்தது! எங்கும் பரந்தது! மலைகளைப் பெயர்த்து மாற்றியது! நகரங்களை நாசமாக்கியது! விரிவாகக் கூறுவ தென்? ஊழி வெள்ளமென மதுரையை நெருங்கியது!

வானவர் கண்டு மருண்டனர்! ''நான்முகன் ஊழியி னும் மதுரை நலிந்ததில்லை! இப்போது எவ்வாறு நேர்ந்தது?

இவ் வெள்ளம் மதுரையை மட்டுமன்று, வானவர் நகரையும் மாய்த்துவிடும் போலும்!'' என்றேங்கினர். வருணன் செயலென அறிகிலர்.

மதுரை நகர் கொண்ட நடுக்கத்தை வரைவ தெவ்வாறு? "சூலமும் அழலும் ஏந்திய சொக்கர் திருவிளையாட்டின் கோலமோ? நாம் இழைத்த தீவினைப்பயனோ? ஆலகாலமோ? உலகு முடிவோ?'' என ஏங்கினர் மக்கள். தன் குடிகட்கு நேர்ந்த துன்பத்தைப் பாண்டியன் கண்டு பதறினன். மண் புதைக்கத் திசை புதைக்க இருள்போல் வரும் வெள்ளத்தைக் கண்டு — விண்புதைக்கு மாட மாளிகைகளை விழுங்க வருவதைக் கண்டு—கண் புதைத்தான்; கலங்கினன். பெண் பிரியா ஒரு பாகப் பிரானரடி மலரே புகலென ஓடினன். நஞ்சைக் கண்டஞ்சிய திருமால் போலவும் மறலியைக் கண்டு மலரடியே தஞ்சமென வந்த அந்தணச் சிறுவன் போலவும் பதை பதைத்தான். பசுபதியின் சேவடியில் விழுந்து 'ஓலம்! ஓலம்!!' என்றலறினன்.

''அஞ்சாதே! அஞ்சாதே!'' என்று கூறியவாறு சுந்தரக் கடவுள் அவனெதிர் வந்தார். தம் திருச்சடையிலுள்ள முகில்கள் நான்கையும் விடுத்தார். அவை எங்கும் பரவி நிமிர்ந்து கடலைச் சுவறும்படி உறிஞ்சின. அப்போது கடல்,

''சிவப் பெருங் கடவுள் யார்க்குந் தேவெனத் தெளிந்தா ரேழு
பவப் பெரும் பௌவம் போலப் பசையற வறந்த தன்றே.''

அதைக்கண்ட நகர மாந்தரும் வழுதியும் வானவரும் மகிழ்ச்சி பொங்கப் பன்முறை புகழ்ந்து பாடிப் பரவினர்; அளவிலா இன்பக் கடலிலே ஆழ்ந்தனர்.

———

II. கூடற் காண்டம்

கக. நான்மாடக் கூடலானது

சிவம்

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின்
பேதங்க ளல்ல அவையன்றி நின்ற பிறிதல்ல என்று பெருநூல்
வேதங்கி டந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடல் மறுகில்
பாதங்கள் நோவ வளையிந்த னுதி பகர்வாரை ஆயு மவரே." (க)

சத்தி

"திருமகள் வலக்கண், வாக்கின் சேயிழை யிடக்கண், ஞானப்
பெருமகள் நுதற்கண் ஆகப் பெற்றுவான் செல்வங் கல்வி
அருமைவி டளிப்பாள் யாவள் அவள்உயிர்த் துணைவன் காண
ஒருமுலை மறைந்து நாணி ஒசிந்தபூங் கொம்பின் னின்றுள்." (உ)

வருணன் சீற்றம் - எழுமுகில் மழை

நீர்க்கடவுள் கடல் வற்றியதைக் கண்டான். தன் செயல் தடையுற்றதற்கு நாணமுற்றான். இரு கண்களுஞ் சிவந்தான். சீற்றத்தாலே உடல் வெதும்பினன். கடலும் ஆறும் வற்றிட வெகுண்டான். மதுரைச் சொக்கர் திருவிளையாடலை அளக்க வியலாமல் அகம் புழுங்கினன். ஏழு முகில்களையுங் கூவி யழைத்தான்.

"இடித்துப் பெய்து, ஒளிமிகும் மதுரை மூதூரை ஒல்லெனக் களைமின்!"

ஏழு முகில்களும் எங்கும் பரவின! திக்குகளெல்லாம் இருண்டன! எங்கும் மின்னல்! எங்கும் செவிடுபடும் இடி! நிலம் பிளந்ததோ, வரை தகர்ந்ததோ என்னும் பேரிடி! உலகுண்ணப் புகுந்த திருமால் போற் கறுத்துத் திசைகள் தெரியாமல் - நோக்கிய கண் நுழையாமல் - இருளைப் பொழிந்தன. மழை பெய்தது. வெண்மையாய்

முழவு போற் பருத்த பூசனிக் காய்கள் போற் பனிக் கட்டிகள் விழுந்தன. பளிங்குத்தூண் போன்ற மழைத் தாரைகள்! விண்மீன்கள் விழுந்தனவோ என்னும்படி கடலின் அலையிலே தவழ்ந்த மீன்கள் துள்ளி வீழ்ந்தன. பசிய ஒளி பரப்பும் பச்சை (மரகதம்), கரிய ஒளி விடும் நீலம், வெண்மையான முத்து, பொன், சிவந்த கதிர் வீசும் மாணிக்கம், பவளம் ஆகியவற்றையெல்லாம் 'விஞ்சையர் மகளிருடி வெறுத்தெறி கலன்கள் போல' எங்குஞ் சிந்தின அம் முகில்கள்! கொடிய காற்றும் கூடியது! மதுரை முற்றுகை யாயது!

தென்னவனும் குடிகளுஞ் சிந்தை கலங்கல் - மழையைத் தடுக்கும் முகில்கள் – நான்மாடக் கூடல்.

மதுரை மக்களும் மன்னனும் வெருண்டனர். 'உலகழியும் நாளிதுவோ?' என ஒடுங்கினர். எனினும் மருத்துவனைப் பெற்றோர் நோய்க்கு மயங்குவரோ? 'கண்ணுதற் கடவுளே யின்னமுங் காப்பார்,' எனக் கடிதின் விண்ணிழி விமானத்துள்ளிருக்கும் விடையூரும் வள்ளலின் மலரடியே தஞ்சமென வந்து வீழ்ந்தனர்.

"விடையினை, ஆல முண்ட மிடற்றினை, கங்கை தாங்குஞ்
சடையினை, கூற்றை வென்ற தாளினை, மேரு சாபப்
படையினை, அடியேங் துன்பப் பாட்டினை நீக்கி யாளும்
நடையினை யாகி யெங்கள் நல்லுயிர் காத்தல் வேண்டும்."

தென்னவர் மரபைக் காக்குந் திருவாளர் முன் போலவே நான்கு முகில்களையும் நோக்கி, 'இந்நகரின் நான் கெல்லைகளையுஞ் சூழ்ந்து நான்மாடம் ஆகி, மாரி யேழையும் விலக்குக,' என்று பணித்தார்.

அவ்வாறே நான்கு முகில்களும் மதுரையை வளைந்து சூழ்ந்து, மாடம்போலச் சந்துவாய் தெரியாமற் சூழ்ந்தன. மாடங்களின் கோபுரங்களும் செய்குன்றுகளும் கால்கள் போல் அமைந்தன, அந்த முகில் மாடத்திற்கு. அந்த நான்மாடத்திற்குள் அரசனும் நகரமாந்தரும் நால்வகைப்

படையும் பிறபொருள்களும் அடங்கி முன்னை நாளினும் இன்பமடைந்திருந்தனர் அவர்கள்.

‘ஊழிற் – பொன்னனாள் பாகன் தாளிற் புக்கமர்ந்திருந்தா ரோத்தார்!’ அப்புறம் என்ன!

ஏழு முகில்களும் பெய்த மழையெல்லாம் மலையினுச்சியிலே பெய்து சிதறுந் துளிகள் போலச் சிதறின. எனவே முகில்களும் வெள்கின! வருணனும் வெள்கினான். அவன் தன் செயலை நினைக்க நினைக்க நாணத்துடன் நடுக்கமும் அச்சமும் கலந்தன. எனினும், தன் நோய் நீங்குமென்ற நம்பிக்கையும் உவகையும் உடன் தோன்றின. பொற்றாமரை வாவியை அடைந்தான். அடையுமுன்னரே வயிற்றுநோய் விலகக்கண்டு விம்மித மடைந்தான். அவனுள்ளத்திலே எல்லையற்ற அன்பு பெருகியது. தன் செருக்கைச் சாய்த்தான்.

அன்பிலும், தூய பொற்றாமரை வாவியிலும் மூழ்கினான். சிவகண்மணிமாலை யணிந்தான். சொக்கர் திருமுன் சென்று வணங்கினான். கங்கை முதலான நதிப் பெண்கள் பசும்பொற் குடத்திலே நிரப்பிய நறுமண நீராட்டினான். கற்பகம் நீட்டிய பனிமலர், சந்தனம் மணிக்கலன்கள், பசிய பொன்னுடை ஆகியவற்றை அணிவித்தான். காமதேனு கொடுத்த *ஐங்கனிகளையும் ஐந்து அமுதுகளையும் படைத்தான். நறும்புகை யூட்டி மணிவிளக்கேந்தினான். ஒளிவிடும் முத்தணிந்தான். அண்ணலாரின் ஆயிரந் திருப் பெயர்களையும் ஓதிப் பன்முறை வணங்கினான்.

மதுரைச் சுந்தரர் மகிழ்ந்தார். யாது வேண்டும் என வினவியருளினார். நீர்க்கடவுள் நெஞ்சம் நெகிழ்ந்து பணிந்தான்.

“எந்தையே! ஒன்றாலும் விலகாத என் வயிற்றுநோய் பொற்றாமரை வாவியைக் குறுகுமுன் போய்விட்டது.

---

* ஐங்கனிகள்: எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, குளஞ்சி, மாதுளை. ஐந்து அமுதங்கள்: சர்க்கரை, தேன், பால், நெய், தயிர்.

அத்தகைய தங்கள் பேரருளைத் தெளியாமற் சோதிக்கத் துணிந்தேன். மறையும் வானவரும் புரியுஞ் சோதனைகட் ககப்படாத தங்களையா சோதிப்பது? என் அறிவுக்குறை... என்னென்பேன்? அந்தோ! எளியேனுக்கருள என்ன பண் புடையேனாயிருந்தேன்? என்னால் அடிகள் பெற்ற தென்ன? குற்றமே குணமாகக் கொண்டீர்கள் போலும்!

"இந்திரன் காலந்தாழ்த்திருந்து தங்களை வழிபட்டதும் அவன் அயர்ச்சியை நோக்கி நான் வினவியதும், அவன் விடையும், என் சோதனையும், அடிகள் அருளாலே என் வயிற்று நோய்க்கு மருந்தாயின. இது வியப்பன்றோ? அருட் கடலே! என் வயிற்றுநோய் மட்டுமா? பழவினைகளான இரு வினைகளின் வலியும் மலவலியும் விலகின! வீட்டின் வழியும் பெற்றேன். இந்தப் பொற்றாமரைக் குளமே போதும். வேறு மணியும் மந்திரமும் மருந்தும் வேண்டா! அடியேன்செய்த பிழை பொறுத்தருள்க!"

பலமுறை பணிந்தெழுந்து வேறுசில வரங்களும் பெற்று விரிநீர்க்கடவுள் தன் இருப்பிடம் அடைந்தான்.

"ஆறுமதி முடியணிந்த அருட்கடலே
 வயிற்றுநோ யன்றி மேனாள்
மாறுபடும் இருவினையும் மலவலியும்
 கெடவீட்டின் வழியும் பெற்றேன்
வேறினிமந் திரமென்னை மணியென்னை
 மருந்தென்னை மெய்ம்மை யாகத்
தேறுமவர்க் கிப்புனித தீர்த்தமே
 பிணியனைத்துந் தீர்ப்ப தன்றோ." (உச)

உ௦. எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடல்

சித்தர் தோற்றம்

அணிபெற்ற மதுரையம் பதியும், அதன் அரசன் மணிமுடிச் செழியன் அபிடேக பாண்டியனும், இன்பப்பெருவீடெய்தக், குணங்குறி கடந்த கூடலிறைவர் சோமசுந்தரர் ஒருநாள் சித்தராக வெளிவந்து தெருவிலே செல்கின்றார். அவர் தோற்றத்தை எவ்வாறு எடுத்தியம்புவது?

வட்டமாக நீண்ட சடை—பூணூல் மார்பு—திருநீறணி நெற்றி—படிககுண்டலத்துடன் குழையாடுங் காதுகள்—தோலாலான அரை நாண்—திருநீற்றுப்பை தவழுந் தோள்கள்-திருநீறழிந்து மெய்சிவக்கப் புரளும் படிகமாலை—மழுவேந்திய செங்கை—கண்டவருளங் கவரும் வயிற்றுக்கச்சை—புலித்தோற் கோவணம்—இறுகக்கட்டிய புலித்தோலாடை—இடத்தோளிலே யோகபட்டிகை—பொற்பூண்களமைந்த பிரம்பு விளையாடுந் திருக்கை இத்தகைய திருக்கோலத்துடன் திருவடிகளிலே மறைச்சிலம்பொலிக்கவும் அருளாகிய தேன் பிலிற்றவும் இன்பத்தேன் பருகிய முகப்பொலிவுடன் உபநிடதப் பாதுகையின்மேல் மலரடி வைத்து நடந்தார்.

திருவிளையாடல்

அவர் திருமுகத்திலே வியர்வை துளித்தது. புன்முறுவல் படர்ந்தது. கடைத்தெரு, நாற்சந்தி, ஓவிய நிலையங்கள், அழகிய பிற தெருக்கள், சூளிகை, மாளிகை, மாடம், மேடை என எங்கும் அவர் காணப்பெற்றார். தெற்கிருப்பவர்போல வடக்கேயும் இருப்பார். கீழ்த்திக்கிலே காணப்படும் அதேபொழுதிலே, மேற்றிக்கிலும் விளங்குவார். திடீரென்று மறைவார்.

தொலைவிலுள்ள மலையை அண்மையிலே காட்டுவார்; அண்மையிலுள்ள மலையைச் சேய்மையிலே சேர்ப்பார். முதியவரை இளைஞராக்குவார்; பைங்குதலைச் சிறுவர்களை மிக

முதியவராகக் காட்டுவார்; ஆணைப் பெண்ணாக்குவார்; பெண்ணை ஆணாக்குவார்; மலடி மகவைப் பெறுவாள்; கூனருஞ் செவிடருங் குருடரும் ஊமையரும் அந்நிலை நீங்கி நலம் பெறுவர். வெள்ளியும் இரும்புஞ் செம்பும் பித்தளையும் பொன்னாகும். இம்மட்டோ? செல்வர்தம் செல்வ மாளிகைப் பொருளை யெல்லாம் வறியவர் புன்குடிலிலே நிறைப்பார்! நண்பர்களைப் பகைகொளச் செய்வார்! எட்டிமரம் நறுஞ்சுவைக் கனிதர நல்குவிப்பார்.

காலம் மாறிய காலத்திலே வைகையிலே நீர் பெருகிவரும்; பொள்ளென வடியும். இனிய நறு நீர்ப் பொய்கையும் ஓடையும் உவர் நீராக மாறும்; கடல் நீர் சுவை தரும். மாத்திரைக் கோலை வீசி விண்ணிலே நட்டு அதன்மேல் ஊசியை நாட்டி, ஊசியின் மேற் பெருவிரலூன்றி யாடுவார். அவ்வூசியின் மேலே தலை வைத்துத் திருவடியை வானில் நிமிர்த்துவார்; சுழலுவார். கொடிய அரவின் பகையான கருடனைப் போல வானிற் பறந்து சென்று முகிலைப் பிடித்திடிபட நீரைப் பிழிந்து காண்பவர் வியப்பக் காட்டுவார். அம் முகிலை முன்போலவே வானிற் பரவவிடுப்பார். இரவிற் காணப்பெறும் பொருள்களைப் பகலிலே காட்டுவார். பகலிற் படும் பொருள்களை யிரவிலே இசைவிப்பார். செந்தீ, விரிபுனல், கடுங் காற்று—இவற்றின் ஆற்றலை மாற்றுவார். மலரையுங் காய்கனிகளையும் நாளல்லா நாளிலே உண்டாக்குவார்.

பிளைபெருகும் விழிகளையுடைய முதியவரைப் பிரம்பினால் வருடிக் காளையராக்குவார். அவர்களுக்குத் தகுதியாக அவர்களின் முதிய மனைவியரை மங்கைப் பருவமுடையராக்கிக் கருவடையும் நிலைபெறப் பிரம்பினால் வருடுவார்.

*செய்மைப் பொருளை அண்மையிற் காட்டுவார். விழிகளுக்குப் புலப்படும் பொருளை மறைப்பார். மறைந்துள்ள

---

*இவை முறையே ஆகருடணம், அதிரிச்சியம், அஞ்சனம், வசியம், வாதம், வயத்தம்பம் எனப்படும்.

பொருள்களை வெளியே தோன்றச் செய்வார். பகைவரை வசப்படுத்துவார். இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கு வார். என்றும் இளமையாயிருக்கச் செய்வார்.

கல்லாருங் கலைநலம் பெறத் திருநீற்றை நாவிலிடுவார். தென்னவன் தன் காதலியரொடும் உலவும் மணமலர்ப் பொழிலிலே தென்னையைப் பனையாக்குவார். பலவகை மரங்களையும், பறவைகளையும், களிறு முதலான விலங்கு களையும், ஒன்றையொன்றாக மாறும்படி தந்திருநோக் கருள்வார். ஆடவரும் பெண்மையை விரும்பும் அழகராக அமர்ந்திருப்பார்.

மேலும்,

"நாக நாடுபொன் னாட்டுள பொருளுமந் நகருள்
ஆக வாக்கியும் இன்னணம் விச்சைக ளனந்தம்
மாக நாயகன் மலைமகள் நாயகன் மதுரை
ஏக நாயகன் திருவிளை யாடல்செய் திருந்தான்."

ஆகவே, அந்த முதுநகர் மக்களெல்லாரும் சித்தர் செய்யும் திருவிளையாடலிலே யீடுபட்டுத் தம் கண்களையும் உள்ளத்தையும் பறிகொடுத்துத் தொழிலையும் மறந்து நின் றனர். இதனை ஏவலரால் அறிந்த செழியன் 'அந்தச் சித்தரை அழைத்துவருக!' என ஏவினான். அழைக்க வந்த வரும் அரசனாணையையும் மறந்து சித்தர்பாலே சித்தம் வைத்து வியந்து நின்று விட்டனர். அமைச்சரை யேவினான் பாண்டியன். அவர்கள் சித்தரை வணங்கி அழைத்தனர்.

சித்தர், 'எமக்கு மன்னனா லென்பயன்?' என மறுத்திட்டார்.

அமைச்சர்கள் வணங்கிச் சென்று மன்னனிடம் உரைத் தனர். அரசன் சினவாமல், 'முதல்வரான முக்கணர் அருள் பெற்று இம்மை மறுமைகளை வெறுத்த யோகிகளால் வேந்தர் மட்டுமா, இந்திரனும் நான்முகனும் மாலுமே மதிக்கப்படார்,' என்று வாளாவிருந்தான்.

உக. கல்லானைக்குக் கரும்பருத்தியது

செழியன் சிந்தனை—சித்தர் குறிப்பு

அந்த அபிடேக பாண்டியனுக்குச் சித்தர்பால் அன்பும் அச்சமும் பெருகின.

"அந்தோ! அவரை எளியராக மதித்து இகழ்ந்தேன்; இங்கு வருக என்றேன். அவர்க்கு வேண்டுவன யானே அறிந்துதர அவரை யடைந்து வினவுதல் வேண்டும். ஆகவே, அப்பெரியாரைக் காண்பேன்."

செழியன் உள்ளத்தைச் சித்தரறிந்தார். தம் விமானத்தின் வடமேற்றிக்கிலே சென்று அமர்ந்தார். வளம்பெருகுஞ் செல்வனுன மாறன் அன்று தைத்திங்கள் முதல்நாளாகையால் மதுரைப்பிரானுர் மலரடியை வணங்கி, அன்புடன் வலம் வந்தான்.

செழியனுஞ் சித்தரும்—கல்லானைக்குக் கரும்பு

வரும்போது சுற்றுக் கோயிலிலே சீறும் வேங்கைத் தோலின்மேல்—ஐம்புலனை வென்ற தோற்றத்துடன்—யோக பட்டத்துடன்—மழுவையூன்றிய கையுடன்—இறுமாப்புடன் சித்தர்பிரான் வீற்றிருப்பதைக் கண்டனர் அரசன் மெய்க்காப்பாளர். கையிலிருந்த பிரம்பினுலே வழி விலக்கிவரும் அக்கொடியவர்கள் 'வழியே விட்டு எழுக' என்றனர்.

பின்னே வரும் பாண்டியன் சித்தரை நோக்கி, 'உம்நாடும் ஊரும் பெயரும் எவை? உமக்கென்ன தெரியும்? எது வேண்டும்?' என வினவினன்.

"நாம் எந்த நல்ல நாட்டினும் நகரினுந் திரிவோம். எனினும், காஸ்மிர நாட்டிலே காசி நகரிலே இருக்கிறோம். ஆதரவில்லாதவர்களாய் எப்போதும் பிச்சைப் பெருவாழ்வுடையோர் எம் உறவினர். என்றும் விச்சை நடத்தித் திரியும் சித்தரென்பர் எம்மை. காசி முதல் இங்குள்ள

சைவத்தலங்களெல்லாம் *'தொழுநற்பரமாகி' வந்தோம். அறிவை நல்கும் இந்த நகரம் இம்மையிலே சீவன் முத்தியையும் மறுமையிலே மாயைக் கெட்டாத பர முத்தியையும் அளிக்கும். இங்குள்ளவர்க்கு எம் திருவிளையாடலைக் காட்டி, அவர்கள் விரும்பும் சித்தியை யெல்லாம் அளிப்போம். மறை முதலாக அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லோம். மேலும் எட்டாத எல்லாப் பொருளும் வல்ல சித்தர் யாம். எமக்கு நீ அளிக்க வேண்டுவது யாதுமில்லை!''

இவ்வாறு கூறி, உள்நகை கொண்டார் சித்தர். அரசன் வியப்படைந்து, 'இவருடைய இறுமாப்பையும் செருக்கையும் சிறப்பையும் அளவிட்டறிவேன்,' என்று நினைத்தான். அப்போது, உழவனொருவன் கமுகெனச் செழித்த கரும் பொன்றைக் கையிலேந்தி வந்தான். அதனை அரசன் அங்கையில் வாங்கினான். நீரும் பிறையும் மறைத்து வந்த வரை நோக்கி, 'வல்லவர்களிலே வல்லவரென மதிப்புக் கொண்டவரே! நீர் இக் கல்லானைக் கிந்தக் கரும்பை யருத்தினால், எல்லாம் வல்லாரும் நீரே! அம்மட்டோ, மதுரைச் சொக்கரும் நீரே! மேலும், உம் உள்ளம் விரும்பியவற்றை யெல்லாம் அளிப்பேன்,' என்றான்.

சித்தர் புன்னகை புரிந்தார்.

''தென்னவனே! உன்னால் வரக்கூடியது எமக் கொன்றும் இல்லை. உன் அவாத் தணிய நாமே தருவோம். செல்லாத வுலகத்தினும் கலைஞர் எல்லாராலும் மதிக்கப் பெறுவர். முற்று முணர்ந்த எமக் கெப்பொருளினும் விருப்பமில்லை. நீ விரும் பியவாறு கல்லானை கரும்பைத் தின்பதைக் காண்பாயாக.''

கடைக்கண்ணாற் கல்லானையை நோக்கினார். என் னென்பது? கல்லானை கடைக்கண் திறந்து நோக்கியது! மும்மதத்தையும் பெருக்கியது! வாய் திறந்து வானம்

*தொழுதல் பரமாகி—தொழும் மேலான நோக்கம்; தொழு கின்ற தானே முதன்மை பெற்ற பரம்பொருள்.

பிளக்கப் பிளிறியது! துதிக்கையை நீட்டித் தென்னவன் கைக்கரும்பை மெல்லப் பறித்தது! வாயிலிட்டுக் கடை வாயிற் சாறுவடியத் தின்றது. துதிக்கை ஊசலாடக் கரும்பை நெறித்துவிட்டுத் தருக்கி நின்றது.

காவலன் முத்துமாலை—ஏவலர் ஓவியம்

அதனை மறுமுறையும் அந்திவண்ணச் சித்தர் கடைக் கண்ணால் நோக்கினர். அந்தப் பொல்லாத கல்லானையும் செழியன் கழுத்திலிருந்த முத்துமாலையை எட்டிப் பறித்தது! கண்டனர் காவலன் ஏவலர்! கொண்டனர் சீற்றம்! குறுகினர் களிற்றை! கோல்கொண்டு வீசினர். சித்தர் களிற்றைச் சீற்றக் குறிப்புடன் நோக்கினர். அஃது அம் மாலையை விழுங்கிவிட்டது.

அரசன் கண்சிவந்தான். அதனை அவன் ஆட்கள் கண்டு, வண்டு தவழுங் கொன்றையை மறைத்த வள்ளலை அடிக்க நெருங்கினர். சித்தசாமி இளநகை புரிந்து, 'நின்மின்,' என்றார். கரிய களிறு போன்ற அந்த ஏவலர்கள் வைத்த அடியைப் பெயர்க்க வியலாமல் நடுங்கி நின்றனர். அவர் நின்ற நிலை ஓவியம்போலக் காணப் பெற்றது.

அரசன் வேண்டுகோள்

வேப்பந்தாரான் அஞ்சிச் சீற்றத்தைக் கைவிட்டான். அன்பிலே முழுகினான். உள்ளத்திலே வியப்புப் பொங்கியது. மெய் நடுங்கிச் சோர்வுற்றான். சித்தப்பெருமானாரடியிலே தன் முடிதீண்ட விழுந்து வணங்கி, 'மயக்குடையேனை மன்னித்தருள்க!' என வேண்டினான்.

அன்புக்கிரங்கும் அண்ணலார் உளமிரங்கி, 'வேண்டும் வரங்கேள்,' என்றார். 'நற்புத்திரப்பேறு நல்குக!' என்று வணங்கினான் வழுதி. நன்றென்றருளினார். கல்லானைமீது கடைக்கண் செலுத்தினார். தழைத்த ஒளிமிகும் தண்ணிய முத்துமாலையை வேழம் வேந்தன் பக்கல் நீட்டியது. அதனைக் கைநீட்டி வாங்கினான் வேப்பந்தாரான். வாங்கிய

பின்னர்த் திரும்பி நோக்கினான். சித்தரைக் கண்டிலன்; மத களிறும் முன்போற் கல்லானையாகியது; செந்தமிழ் வேந்தன் திகைத்து வெருவினான்.

"எம் உயிருக்குயிரான கொன்றைவேணியரின் திருவிளையாடலே இஃது," எனவுணர்ந்த கோமகன் திரும்பவுந் திருமுன் சென்றான்; நிலமிசை பன்முறை விழுந்து வணங்கினான்.

"முழுதுணர்ந்த முதல்வரே! அறிவிலேன் நின் ஆடலை அறிகிலேன்" என்று அழுதான்; வேண்டுகிறான்:

"வேதியாய் வேத விளைபொருளாய் வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியாய் ஈறாய் நடுவாய் அவைகழிந்த
சோதியாய் நின்றாய்! என் சோதனைத்தோ நின்னியல்பே"

"நின்னால் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னாளருச்சித்தும் பாதந் தலைசுமந்து
உன்னாமம் வாசித்தும் உன்னையறியே னென்று
சொன்னாலடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே?"

"பெரிதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினும் அரியதுமாய் எளியதினும் எளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமா யவைகடந்த
துரியமுமாய் நின்றாய்! என் சோதனைத்தோ நின்னியல்பே?"

என்று பலமுறை வணங்கினான்.

அபிடேக மாறனுக்குச் சித்தசாமியின் அருளால் விக்கிரம பாண்டியன் பிறந்தான். அவனிடம் அரசை அளித்துச் சித்த சாமியின் திருவடிமலரிலுள்ள தேனைப் பருகும் வண்டாய்க் கலந்திருந்தான்.

உஉ. யானை யெய்தது

விக்கிரமனாட்சி - சித்தருக்குக் கோயில்

வெல்வதற்கரிய வீரனான விக்கிரமன் நிலம் நிறைந்த திறைப்பொருளும் வளமிகுந்த குடிகளின் அன்பும் கொடுமை நீங்கிய ஆட்சியும் பகையிலாமற் கொண்டு வாழ்ந்தான். அவன் ஆளுகையிலே சைவப் பயிர் தழைத்தது. அவன் தன் தந்தைக் கருளிய சித்தசாமிக்கு இந்திர விமானத்தின் வடதிசையிலே திருக்கோயிலெழுப்பி உருவமும் அமைத்தான். வழிபாட்டுக் குரிய பொருளெலாம் அமைத்தான்.

சோழன் தீயவேள்வி - கோல் களிறு

அவன் காலத்திலே, காஞ்சியிற் சோழனொருவன் ஆண்டு வந்தான். அவன் பாண்டியனுடன் மாறுபட்டவன்; சமண சமயத்தவன். வெல்ல வகையின்றி வெஞ்சினத்தினாலே குமுறினான். இறுதியிலே வஞ்சனையினாலே வெல்ல வுறுதி கொண்டான். உடனே சமண ஆசிரியர்களையெல்லாம் வர வழைத்தான். அஞ்சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரி கூடம், குஞ்சரம், சையம், ஏமகூடம், விந்தம் என்னும் எட்டு மலைச் சமணர்களும் விரைந்து வந்தனர்.

அரசன் அவர்களை வரவேற்றான். அவர்களும் அவன் முடி மேற் பீலியை வைத்து ஆக்கங் கூறினர்.

"வசியம் முதலான ஆறு சித்திகளும் வல்லவர்களே; தென்னவனைக் கொலைவேள்வி செய்து கொல்லவேண்டும்! அரசிற் பாதி தருவேன்."

தவம் புரிந்தும் அவம்புரிய அவர்கள் உடன்பட்டனர். பாலியாற்றின் கரையிலே முக் காத தொலைவிலே எண்கோண மாக வேள்விக் குழியமைத்தனர். எட்டி முதலான நச்சு விறகு களை யிட்டு வேப்பநெய் கலந்த அரவின் கொழுப்பையும் ஊனையும் மிளகுப்பொடி கலந்த எண்ணெயையும் அந்த எரிக் குழி நிறையப் பெய்தனர். அப்போது வேள்வித்தீயினால்

அண்மையிலுள்ள தோட்டம், மலர்ப்பொழில், சோலை, காடுகளி லுள்ள செடி கொடி மரங்களெல்லாம் தீய்ந்தன. கயல் விளையாடும் ஓடை, கரை தவழும் நீர்நிறைந்த பொய்கை, குளம் எல்லாம் நீர் வற்றின. அந்த வேள்வியிலே களிறொன்று வந்தது.

அது கூற்றுவனைப் போன்ற தோற்றமுடையது; கரிய மலைபோன்றது; காற்றெழு செவிகளையுடையது. ஊசலாடுந் துதிக்கையையும் மருப்புக்களையுமுடையது; நஞ்செனப் பிளிறுவது. அந்தத் தறுகண் வேழத்தை 'நீ சென்று வழுதியை மதுரையோடும் தொலைத்திடுக!' எனத் தென்றிசை செல்ல விடுத்தனர்.

அஃது அச்சமற்று, இடிபோன்ற குரலாலே உலகம் நடுங்கப் புறம் போந்தது. அதன் அழலக்குங் கண்களையும் இருளுடலையும் மும்மதத்தையும் உரலடியையும் கண்டோர் 'வடவையழலே களிற்றின் வடிவாக வருகிறதோ' என் றஞ்சினர்.

தென்னவன் கலக்கம் - இறையருள் - யானை வீழ்ச்சி

படைவீரர் பின் தொடரவருங் களிற்றின் மிடுக்கைக் கண்டோர், காவலனிடம் ஓடியுரைத்துக் கலங்கினர். தென்னவ னும் சுழிபட்டலை நீர்போல் உளஞ் சுழலச் சென்று, திருக் கோயிலை யடைந்தான். கரிய யானைகள் சுமந்த இந்திர விமானத்தி லெழுந்தருளிய, யானைத்தோல் போர்த்த திங்களழகர் திருவடி மலரிலே பன்முறை பணிந்தெழுந்து, 'இந்தக் கொல்களிற்றைத் தொலைத்தெங்களைக் காத்தருள்க,' என வேண்டினன். அப்போது வானொலியாக ஒரு வாக் கெழுந்தது.

''அக்களிற்றை வரவிட்டவர் வலிமை யழிய, நாம் ஒரு விற்சேவகனாகச் சென்று அதனுயிரைக் கவர்வோம். நீ முதலில் இந்நகரின் கீழ்த்திசையிலே அட்டாலை மண்டபம் (விலங்கு வேட்டைக்குரிய பெரிய பரண்) ஒன்றை விரைவில் அமைத்திடுக.''

இம் மொழிகளைக் கேட்ட ஏந்தல் களிபொங்கப் பன்முறை கண்ணுதலார் கழல்பணிந்து சென்று, பொன்மலை போலப் பதினறு பொற்றூண்களாலே ஒரு மண்டபம் அமைத்தான். விரிநீர்ச் சடையரும் விற்சேவகராக வந்தார்.

நீல நிற வெள்ளத்தில் நீந்துங் குளிர்மதிகளைப் போல இரு காதுகளிலும் சங்கக் குழைகள் தவழ்ந்தன. படர்சடை மயிற்பீலியாற் பண்புற மறைந்திருந்தது. கரிய கடலிலே முளைத்த செங்கதிர் போலச் செந்நிறக் கச்சை இடையிலே தொடுத்திருந்தார். அதனுடன் சேர்த்துக் குருதி தோய்ந்த வாளைக் கட்டியிருந்தார். நான்மறைகளும் புலம்பப் புவியிலே படிந்த தாள்களிலே கழலும், முதுகிலே அம்புப்புட்டிலும் அழகு பெற்றன. பருத்த தடந் தோளிலே நீண்ட வில் மாட்டப் பெற்றிருந்தது. இமயப் பூங்கொடியார் பாதியுடம்பே யன்றி முற்றிலும் பெற்றது போன்றும் அல்லது திருமால் மற்றொரு பங்கைப் பெற்றது போன்றும் மெய்யெலாங் கரிய நிறமா யிருந்தது.

இவ்வாறு காமவேகங் காமுறுங் காளைப்பருவமுடைய விற்சேவகராக வந்து அந்த மண்டபத்தின் மீதேறிப் பாண்டியன் கலக்கந் தீர்க்கவேண்டி, யானையின் வரவை நோக்கி நின்றூர்.

களிறு பிளிறுதல் சேய்மையிலே கேட்டது. வில் வீரரும் தாம் ஏந்திய வில்லை, 'அறவழியில் நில்லாதான் கோல் போலக்' குழையம்படி தம் தாளால் மிதித்து வளைத்தார். நெடுநாண் பூட்டினர். விரலாலே தெறித்தார். அப்போதெழுந்த நாணொசை எட்டுத் திக்குக் களிறுகளும் அஞ்சும்படி யெழுந்தது. பின்னர் வில்லை இடக்கையி லேந்தினர். நாசிங்கக்கணையை மெய் குழைய, இடத்தாள் முன்னே செல்ல நின்று இருவிரல்களாலே செவிவரை யிழுத்து விட்டார். அக் கணை சென்று புயலென முழங்கிவந்த யானையின் மத்தகத்தைப் பிளந்தது. யானையும் அலறி வீழ்ந்தது.

"புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்ற மொத்தது மத்த யானை
சுதைபடு மதிக்கோ வேந்தன் தொழுகுலச் சிறுவ னெய்த்தான்
பதைபடும் அமணர் கால படரெனப் படரிற் பட்டார்."

சோழன் விட்ட யானை, முக்கண்ணர் திருவடியால் உதை பெற்ற கூற்றுவனைப் போன்றது. தென்னவன், மார்க் கண்டனைப் போன்றான். சமணர்கள், கால தூதரைப்போற் கலங்கினர். யானை, இருள் கிடந்ததுபோற் கிடந்தது. அதன் நெற்றியிலிட்ட சிந்தூரம், கரிய மாலைக் காலத்திலே விலகிச் செல்லும் ஞாயிற்றின் செங்கதிர்கள் போன்றன. அண்ணலார் விட்ட அம்பினாலே பிளக்கப்பட்ட வாயிலே பெய்யுஞ் செந்நீர், இருளை விழுங்கி யெழுங் காலைஞாயிறு போன்றது. மேலும் சோழன் வரவிட்ட வெங்கலி, அவனுடைய கொடுங்கோலை வெண்மருப்பாகக் கொண்டு வந்தது போன்றது; அதனை அழித்த அந்தி வண்ணச் சேவகருடைய அம்பு, பாண்டிய னுடைய செங்கோல் போன்றது. மற்றும், அக் களிறு குன்று போன்றது. அதன் வாயினும் அம்புபட்ட வாயினும் பெருகும் குருதி, குகைகளிலிருந்து வீழும் அருவி போன்றது. பருந்து களுங் கழுகுகளும் மொய்த்தல் குன்றின்மீது முகில் தவழ்தல் போன்றது.

பாண்டியன் மகிழ்ந்தான். யானையை முன்னே போக்கிப் பின்னே வந்த சமணர்கள் வந்தவழி தெரியாமற் சிதறிப் போயினர்.

பாண்டியன் வேண்டுகோள்

களிற்றை வீழ்த்தி அட்டாலை மண்டபத்தமர்ந்த அண்ண லின் திருவடிகளிலே தென்னவன் பன்முறை பணிந் தெழுந்தான்.

"மக்களறிவிற் கெட்டாத வார்சடையண்ணலே! எப் பொழுதும் இக் கோலத்துடன் அழகுற எழுந்தருளல் வேண்டும்.

மறைக்குப் பொருள் விரித்த வள்ளலார் நன்றென அருளினார். மற்றுஞ் சில வரங்களைப்பெற்ற மாறன் கூடல் வள்ளலைக் கும்பிட்டுத் தன் கோயிலடைந்தான். அவனுக்கு இராசசேகரன் என்றொரு மகன் பிறந்தான்.

நரசிங்கம்

உலகை யழித்துத் திரும்பவும் படைக்கும் உருத்திரனாரின் வீரசத்தியிலே சிறிது பெற்று, இறவா அவுணனான இரணியன் மார்பைப் பிளந்த நரசிங்கப் பெருமானை அங்கு வந்து வணங்கித் தன் பெயரா லொரு பொய்கையும் எடுத்தான் உரோமசன்மனென்பவன். பிரகலாதனும் வழிபட்டு மாளாப் பெருவரம் பெற்றான்.

"மாதங்கம் தடிந்தட் டாலை மண்டபத் திருந்த வீரன்
பாதங்கள் கையாற் பற்றிப் பாண்டியன் இரந்து வேண்டிப்
போதங்கள் கடந்தா யென்றும் பொலியஇங் கிருத்தி யென்ன
வேதங்கட் கருத்தஞ் சொன்ன வேதியன் அதற்கு நேர்ந்தான்,"
(கூக)

"பின்னும்சில் வரங்கள் நல்கப் பெற்றுநான் மாடக் கூடல்
மன்னும்சின் மயனை வந்து வந்தித்து வருநாட் காமன்
என்னுஞ்சில் மலர்ப்பூந் தண்டார் இராசசே கரனைப் பெற்று
மின்னுஞ்சில் லியந்தேர் வேந்தன் மேதினி புரக்கு மன்னே".

"உலகெலாம் அழித்து மீளவுண் டாக்கும்
உருத்திரன் வீரசத் தியினிற்
சிலதரித் திறவா அவுணன்மார் பிடந்த
சிங்கநா யகனையங் கெய்தி
அலகில்மா தவஞ்செய் துரோமசன் தன்பேர்
அறியவோர் தீர்த்தமுண் டாக்கி
இலகுபே றடைந்தான் பிரகலா தனுநோற்
றிறிலாப் பெருவரம் அடைந்தான்.''
(சஉ)

உடு. விருத்த குமார பாலரானது

கௌரி

நிலமடந்தை விக்கிரமன் காவலிற் பொருந்தி வாழ்கின்ற காலத்தில் நடந்தது இது.

"மதுரையிலே ஒரு மறையவன். விருபாக்கன் என்றழைப்பர் அவனை. அவன் வாழ்க்கைத் துணைவி மின்னற்கொடிபோன்ற—கற்பிற் கணிகலமான—சுபவிருதை யெனப்படுவாள். இவ்விருவரும் நீண்டநாள் வரை மரபை விளக்கும் மகவின்றி வாடினர். நல்லறம் பலவியற்றினர். பலவகை நோன்புகள் நோற்றனர். அன்னைய ரெழுவரை (சத்தமாதரை) அடைந்து தவமிருந்தனர். அவர்கள் அருளாலே அரும் பெறற் பெண்மகவொன்றை அடைந்தனர். கௌரியென்று பெயரிட்டனர். அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர்.

கௌரிக்கு ஐந்தாண்டுகள் நிரம்பின. அவள் தன் தந்தையை வணங்கி 'இப் பிறவி நோய் தணிப்பதற்குரிய மறை யாது?' என வினவினள். மகள் வேட்கையைக் கண்ட தந்தை மட்டற்ற வியப்படைந்தான். மிகவுங்களிப்புடன், 'கௌரி மறை' யைக் கற்பித்தான். அந்த அழகின் கொழுந்து—'முந்தைநா ளருந்தவக் குறை முடித்திட வந்தவள்'—நாவழகுற நன்கு பயின்றாள்.

திருமாலடியவன்—கௌரி திருமணம்

அவளுக்குரிய அன்புடைக் கணவனை அவள் தந்தை நாடிக் கொண்டிருந்தான். சைவனாக—மறை பயினறவனாக—நன்மரபினனாக—எப்போது வருவானென வழிபார்த்திருந்தான். அவளுக்கு எட்டாண்டுகள் இனிதே கழிந்தன. அக்காலை வைணவனொருவன்—மாணவ நிலையன்—வீடுவீடாய் இரந்துண்பவன்—அயல் நகரினன்—வந்தான். வந்து உணவு வேண்டி நின்றான்.

அவனை நோக்கிய சைவ அந்தணனான விருபாக்கன் அவனழகிலே ஈடுபட்டுத் தன் மகளை—அருந்தவப்புதையலை—

அளிக்க விரும்பினான். சுற்றத்தாரோடுஞ் சூழாமல், அச்சமின்றி நீரையெடுத்து, இரக்க வந்தவன் கையிலே வார்த்தான். செஞ்சிலம்பணிந்த செல்வியின் ஊழ்வினையும் இரப்பாளியின் நல்வினையும் ஒன்றுபட்டதனாலே மறை முறைப்படி நீர்வார்த்து மருகனாக நேர்ந்தான் மறையவன். இவன் செயலைக் கேட்ட உறவினர் தளர்ந்தனர்.

"குலம் பார்த்தானா? கோத்திரமறிந்தானா? குடிப்பிறப்பையறிந்தானா? கல்வியைக் கண்டானா? ஊரையாவது உணர்ந்தானா! கன்னியைத் தத்தஞ் செய்தானே! இதுதான் விதிவழி மதியோ! விருபாக்கன் அறிவில்லாதவனா என்ன?"

என்று கலங்கினர். பிறகு குலங் கோத்திரங்களையுஞ் சூத்திரத்தையும் கேட்டறிந்தனர். இறுதியிலே, 'குலங் கோத்திரமெல்லாம் ஒக்கும்; ஆனால், வைணவன் எனினும், இனி மறுப்பதெங்கே?' என ஒப்பினர்.

பின்னர், யாவருமிருந்து, நுண்ணிடையாளைப் பொன்னால் புதைத்துத் தீமுன்னர் அக்காளையின் கையிலே சேர்த்தனர். வரிசைகள் யாவும் நல்கி மணமகனோடு கூட்டிப் போக்கி விட்டான் சைவமறையவன்.

கௌரியின் புக்கக வாழ்க்கை

'வறியவனுக்குக் கிடைத்த புதையல் போல' மாணவனாக இரந்துண்ணச் சென்ற மகன் மணமகளைத் திருவுடன் மனையிலே புகுவதை அவன் பெற்றோர் கண்டனர். அவளுடைய வைத்திருக்கோலத்தையும் உள்ளத்தையும் அறிந்து மனமும் மெய்யும் வெந்தனர். சினத்துடன் பழித்து வேருகவே இருத்தினர்.

கௌரியின் சிந்தனை—கண்ணுதலார் அருள்

ஒருநாள் அந்த வைணவர்கள் தங்கள் உறவினர் வீட்டுத் திருமணம் ஒன்றிற்கு வேற்றூர் சென்றனர். அப்போது கௌரியை வீட்டிற்குள் தனியே விட்டுப் பூட்டிக்

கொண்டு போய்விட்டனர். சமநோக்கற்ற—மாசுபடர்ந்த—அவர்கள் மனப்போக்கை யென்னென்பது!

“பிறவி மாசு போக்கும் பிறைமுடியார்தம் அடியவ ரொருவரையுங் காண்கிலேனே! சிவனடியார்க் கன்பிலாச் சிந்தை இரும்பு. அவரடியார்க்குப் பணிபுரியா யாக்கை மரம். அவரடியாரிடஞ் செல்லாத ஐம்பொறிகளுடைய வடிவம் பாவை. மறை பரவிடுஞ் சைவநெறியல்லாத நெறி வீணானது.

மற்றும் எல்லா வுயிர்க்கும் வேண்டியவை இம்மை மறுமைப் பயன்கள். அவற்றை யருள்வோர் எப்பொருளுந் தாமேயாகி அவற்றின் உயிர்க்குயிராயமைந்த சிவனாரேயாவர். அவரைச் சிந்திப்பவர்கட்கு மனமொழி மெய்பொருந்திய அன்புநெறி கிடைக்கும். அத்தகைய அன்புவழி நிற்பார்க்கு வினைத்துன்பம் நீக்க எடுத்த வடிவம் அடியார் வடிவமேயாம்.

இவ்வாறு நினைந்து நினைந்தேங்கினாள் கௌரி. அவள் கவலையைப் போக்கச் சிவனார் திருவுளங்கொண்டார்.

காது, கை, மார்பு, தலை, தோள், கழுத்து—இவற்றிலே சிவகண்மணிமாலை—கையிலே தம்மைப்போற் பன்னெடுங் காலம் பழகிய ஒப்பற்ற பெருமை மிக்க நூல்—நீண்ட கயலின் முள் போன்ற நரை—சுருங்கிய கவுள்—கனைக்கும் நெஞ்சு—சரிந்த கோவண வுடை—நடுக்குந்தலை—மேலாடை தவழுந் தோள்—முப்புரிநூல் தவழும் மார்பு—திருவெண்ணீற்றுப் பொலிவுடைய முதிய வடிவம்—இத் தோற்றத்துடன் தண்டூன்றி, வெயிலை மறைக்குங் குடையுடன்—கவிழ்ந்த நடையுடன்—அந்தணரொருவர் வந்தார்.

அவர்—தனித்தவர் போலும்—பலநாளுணவில்லாது பசித்தவர் போலும்—மிகுந்த சோர்வுடன் வந்து, கௌரியின் இல்லத்தை யடைந்தார். கௌரி கண்டாள்; அன்பு மீதூர எதிர்கொண்டு வணங்கினாள். தக்க இருக்கையிலே அமர்த்தினாள். ‘தங்களைக் காண என்ன மாதவஞ் செய்தேன்!’ என்று முகமன் மொழிந்தாள்.

"பசித்து வந்தேன்" என்றார் பரமனார்.

கௌரி கவலை கொண்டாள். 'அந்தோ! இல்லைப் பூட்டிக் கொண்டு போய்விட்டனரே!' என்று கசிந்தாள்.

"கலங்காதே. கையினாற் பூட்டைத் தொடு. தொடுமுன் பூட்டு நெகிழ்ந்துவிடும்! விரைவில் உணவு சமைத்திடு!"

மெல்லியல் வியப்புடன் பூட்டைத் தொட்டாள். கதவு திறந்தது. களிப்புடன் கடிதில் அடிசில் ஆக்கினாள். தளிரனைய கையிலே நீர் கொணர்ந்து ஐயருக்கருகில் வைத்தாள். 'அமுது செய எழுந்தருள்க!' என்று வேண்டினாள்! ஐயர் எழுந்தார். அவர் மலரடிகளைத் தன் புண்ணியக் கைகளாலே கழுவினாள். அந்நீரைத் தன் முடிமீது தெளித்துக்கொண்டு உள மாசு கழுவிக்கொண்டாள். அவரை உள்ளே அழைத்துச் சென்றாள். மணைமீ தமர்த்தினாள். மணமலராலே திருவடி களை அருச்சித்தாள். உண் கலங்களை ஒளிபெற அழகாகப் பரப்பினாள். முல்லை யரும்பனைய அடிசிலை வெள்ளிமலையென இட்டுப் பொன் மலையெனப் பருப்பும் நறுஞ்சுவைக் கறிகளும் அமைத்தாள். அருவிபோல நெய்யை வார்த்தாள். சிற்றுண்டி களையும் பெய்தாள்.

அவளுடைய சிவந்த வாய் இடையிடையே முகமனுரை செவியிலூட்டியது. அவளுடைய தளிர்க்கை அறுசுவையமுதை வாயிலூட்டியது. இருவகை யமுதையும் உண்ட ஐயருடைய பசிநோயுடன் முதுமைநோயும் அகன்றது. அமுதுண்ட அமரர்போலக் காளையராய்-காமன் போன்ற கட்டழகராய்- கண்ணுதலார் காணப் பெற்றார். அவர் பூசியிருந்த வெண் ணீறு புதுமணக் கலவைச் சந்தனமாயிற்று. சிவகண்மணி பொற்கலனாகப் பொலிந்தது.

காளையுருவைக் கண்ட காரிகை நடுங்கினாள். வளைக்கை நெரித்தாள்; திகைத்தாள்; வேர்த்தாள்; கூசினாள்; ஒருபுறம் ஒதுங்கிக் கற்பு மலர்க்கொம்பாக நின்றாள்.

திருமணத்திற்குச் சென்றிருந்த மாமன் மாமியார் வந்துவிட்டனர். நடுங்குங் கோதையின் நலிவைக் கண்ட நம்பர், காளை வடிவிலிருந்து கனிவாய் மழலைக் குழவி யானார். நெற்றியிலே திருநீற்றுத் காப்புத் திகழ, மறைச் சிலம்பொலிக்கும்—அன்பருள்ள வோடையிலே மலர்ந்து சிவானந்தத் தேன் துளிக்கும் தெய்வத் தாமரைச் சிற்றடியிலே, பெரிய விரலை வாய் வைத்துச் சுவைத்தவாறு—மைக்கண்களிலே நீர் துளும்ப அழுதவாறு—ஆடை அணியிலே கிடந்தார், உலகைப் படைத்துக் காத்தழிக்கும் அப்பர்!

"எழுதரிய மறைச் சிலம்பு கிடந்துபுறத் தலம்பவன்ப
ரிதய மென்னுஞ்
செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத் தேன்ததும்பு
தெய்வக் கஞ்சத்
தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர்
துளும்ப வாய்விட்டு
அழுதணையா டையிற்கிடந்தா னனைத்துயிரு மீன்றுகாத்
தழிக்கு மப்பன்!"

தாயைப் பிரிந்து தனித்த குழவிபோலக் கலங்கி மயங்கிய காட்சியராய், ஆராய்ந்தறிய முடியாமல் நான்முகனழ—நான்மறைகளழ—அன்புடைய கௌரியின் அன்பிலகப்பட்டு வாய்விட்டுக் கதறியழுதார். அக் குழவியை அறியாத, கௌரியின் மாமியான மிகக் கொடியவள், 'இக் குழவியேது?' என்றாள்.

"அருகிலுள்ள தேவதத்தன் தன் மனைவியுடன் வந்து இக் குழந்தையைக் கொடுத்துச் சிறுபோது பார்த்துக் கொள்ளச் சொன்னான்," என்றொரு பொய்யை யியம்பினாள் கௌரி. அவளுடல் நடுங்கியது; மனங் குழம்பியது. வேறென் செய்வாள்? இம் மொழி கேட்ட மாமி அழலெனக் கொதித்தாள்.

"எலும்பை யணிந்து சுடுகாட்டிலாடும் உருத்திரனுக்கு நீங்காத அன்புபூண்ட தேவதத்தன் மகவினிடம் அன்பு பூண்டனை! என்னே உன் இறுமாப்பு? இனி நீயும் எங்களுக் காகாதவளாயினை!"

சற்றும் இரக்கமின்றிக் கௌரியையுங் குழவியையும் வெளியே துரத்திவிட்டனர் அக் கொடியவர்.

தெருவிலே திகைத்தாள் கௌரி. தாயில்லாப் பிள்ளையின் முகம் நோக்கித் தளர்ந்தாள். கூடல் நாயகரை மனக் கோயிலிலே நிறுத்தினாள். கௌரி மறையை ஓதிக் கும்பிட்டாள். திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையன்றோ? குழவியாய்க் கிடந்த கொன்றை வேணியர், மழவிடையின் மேல் மங்கை பங்கராய் வானிடைத் தோன்றினார். என்னே வியப்பு! கௌரியாகிய அந்தணமங்கை பார்ப்பதியின் வடிவு பெற்றாள். பலருங் கண்டு தொழ அவளை விடைமீ தமர்த்தி விரிசடைப் பெருமானார் விண்வழிச் சென்றார். வானம் மலர் மாரி பெய்தது. வானவர் கைதொழுதேத்தினர். மண்ணவர் வியப்பிலே மயங்கினர்.

"தாயிலாப் பிள்ளைமுகம் தனைநோக்கித்
தெருவினிடைத் தளர்வாள் உள்ளம்
கோயிலாக் கொண்டுறையும் கூடல்நா
யகனைமனங் குறிப்பிற் கண்டு
வேயிலாக் கியதடந்தோள் கௌரிதிரு
மந்திரத்தை விளம்ப லோடும்
சேயிலாக் கிடந்தழுத குழவிவிசும்
பிடைவிடைமேல் தெரியக் கண்டாள்." (௯௨)

"மழவுருநீத் தடலேற்றின் வருவார்தம்
இடத்தணங்கின் மனுவை ஓதிப்
பழகியபார்ப் பனமகளைப் பார்ப்பதியின்
வடிவாக்கிப் பலருங் கண்டு
தொழவிடைமேல் ஏற்றிவிசும் பாருக
மலர்மாரி சுரர்கள் தூற்ற
அழகர்எழுந் தருளினார் களிதூங்கி
அதிசயத்தார் அவனி மாக்கள்." (௯௩)

———

உச. கால் மாறி யாடியது

இராசசேகரன்

விக்கிரம பாண்டியன் தன் ஆட்சியை மகனுன இராச சேகரன்பாற் சேர்த்து விண்ணவர்க்கும் எட்டாத விரிசடை யண்ணலார் சிவபுரத்தை யடைந்தான். இராசசேகரன் நிலமடந்தையைப் பொதுநீக்கி யாண்டான். அவன் எல்லாக் கலைகளையும் இனிதே பயின்ருன். எனினும், கூத்தப் பெருமானு ரிடமுள்ள வழிபாட்டன்பினுலே ஆடல் நூல் மட்டும் பயிலவில்லை. இறைவருடைய கூத்தை நாமும் பயில்வதா என்றெண்ணினுன் போலும்!

கரிகாலனைப் பற்றிய பேச்சு—ஆடல் நூல் பயிலல்

அவன் காலத்திலே காவிரி வளநாட்டைக் கரிகாற் பெரு வளத்தான் காவல் புரிந்தான். அவன் ஆனைக் காவிலே வைகும் அந்திவண்ணரின் அடிமலரிலே ஆழ்ந்த பேரன்புடை யவன். அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லவன். அவன் வாயிலிலிருந்து புலவனெருவன் வந்தான். தென்னவனைக் கண்டு வணங்கி அளவளாவினுன். அப்போது எங்க ளரசர்க்கு ஆடல் நூல் வரும்; தங்களுக்கு வராது, என்று புலவன் புகன்ருன். தன்னைப்போன்ற அரசன் எல்லாக் கலைகளையும் பயின்றிருக்கத் தான்மட்டும் ஆடல்நூல் பயிலாமல் இருப்பது நாணந்தருவதாக இருந்தது செழியனுக்கு. மேலும், அப் புலவன் அதனைச் சுட்டிக்காட்டித் தன்னைக் குறை கூறியது நெஞ்சைப் பிளந்தது. 'இதுவும் நம்பர் செயல்போலும்! நாம் இக்கலை கற்க இறைவர் இப் புலவன் வாயிலாக நம்மைத் தூண்டுகிருர் போலும்,' என்றெண்ணினுன். ஆகவே, புலவனைப் பரிசளித்துப் போகவிட்ட பிறகு பரதக்கலை பயில ஏற்பாடு செய்தான்.

கூத்துநூல் வல்லாரை வரவழைத்தான். குறைவின்றி வேண்டும் பொருள்களை யெல்லாங் கொடுத்தான். அவர்களிடம் அக் கலையை ஐயந்திரிபறப் பயிலத் தொடங்கினுன்.

கூத்துக்கலை அருமை—வெள்ளியம்பலக் கூத்தர் நினைவு

அவ்வாறு பயிலும்போது, தன் மெய்யிற் சாலவும் அயர்வு நோயுண்டாவதை யுணர்ந்தான். 'இந்த அயர்வு நான்மறையும் அறியாத பொருளாய் வெள்ளி மன்றிலே ஆடும் திருக்கூத்தனார்க்கும் உண்டாகுமே!' யென வுள்ளத்தி லுன்னினான்.

''கரியவனான திருமாலும் தாமரைமலரில் உறையும் நான்முகனுங் காண்பதற்கரிய திருவடி யொன்றே நோகுமாறு பலநாள் நிற்பதோ? அந்தோ! இக் கூத்தைக் கற்றேன்! நோவுணர்ந்தேன்! எனினும் வாளாவிருக்கின்றேன்! இதுவோ அறன்? குற்றமுடைய பிறவிக் கடலைக் கரைகாணும் நாள் வந்து, அடுத்தவர் யாவராயினும் அவர்கட்கெல்லாம் இன்பமும் வீடும் அருளும் அண்ணலார் செய்யும் இக் கூத்தை நாம் தடுப்பதுதான் எவ்வாறு? தடாதிருப்பினும் திருவடி வருந்துமே!''

அவன் துணிவு—அண்ணலாரருள்

இறுதியில் ஒருவாறு துணிந்தான். சிவனாரிரவு வந்தது. செழியன் சென்று நான்கியாமமும் இந்திரவிமானத் தெழுந்தருளிய யானைத்தோலுடுத்த அண்ணலார்க்குப் பூசனைபுரிந்து வழிபாடு முறைப்படி யியற்றினான். வெள்ளி யம்பலம் அடைந்தான். கூத்தனார் குரைகழலைக் கும்பிட்டான். கூத்தைக் கண்டு மகிழ்ந்தான். பன்முறை வணங்கினான். கண்ணீர் வாரக் கைகள் முடிமீதேறக் குவித்து நின்றான்.

''தூக்கிய திருவடியை நிலமீது வைத்துக் கீழே யூன்றிய திருவடியை யெடுத்து வீசி அடியேன் காண மாறியாடியருளி யென் வருத்தத்தைப் போக்குதல் வேண்டும். இன்றேல் அடியேன் உயிர்விடுவேன்.''

அன்பினிருப்பிடமான பாண்டியன் தன் வாளை நாட்டி அதன்மேற் குப்புறவிழக் குறித்தான். அவ்வாறு வீழத் தொடங்குமுன் இடத்தாளையூன்றி வலத்தாளை நிமிர்த்தி

இறைவனுர் ஆடிக் காட்டினுர்; கன்னித் தமிழ் நாட்டுக் காவல னுடைய மும்மலத்தையும் ஓட்டினுர்! பேரின்பக் கடலைக் கூட்டினுர்.

தென்னவன் தேனில் வீழ்ந்த வண்டுபோல அளவிலாத உண்மையறிவின்பமென்னுங் கடலிலே அழுந்தினுன்; தெளிந் தான்; தன் உள்ளமும் மொழியும் மெய்யும் ஆண்டவருடையன வாகக் குற்றமற்ற அன்பு வடிவமானுன்.

வழுதியின் வாழ்த்து

'பேருருவினரே! சிற்றுருவினரே! சான்ருய் நிற்கும் அங்கணரே! அரியவரே! எளியவரே! திருவடி மாற்றிய கூத்தினரே! தூயவரே! ஆறு சூடிய அழகிய சடையினரே! ஒளி தவழும் வெண்பிறையாரே! மதியாதவர் அறிவிற் பதியா தவரே! பதினெட்டுக் கணங்களும் வழிபடும் திருவடியினரே! ஒளியே! பழம்பொருளே! புதியபொருளே! அரவக்குழையினரே! மழுவும் மானுந் தழுவுந் திருக்கையரே! குற்றமற்றவரே! அன்பினுலுருகாரை யணுகாதவரே! இருளும் வெளியுமாகி யவரே! எளியேனையும் பொருளாக வெண்ணித் திருமாலும் நான்முகனுந் தேருத கூத்தைக் காட்டிய அருளாளரே! அழகரே! பிரமனையுந் திருமாலையும் அளித்தவரே! நான்மறைப் பொருளே! வானவர்க்கும் வானவரே! அங்கயற்கண்ணம்மை யார் மணுளரே! யானைத்தோல் அணிந்தவரே! தோற்றமும் முடிவுமிலாத் தோன்றலே! வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

"என்றும் இவ்வாறே இந்தத் திருக்கூத்தை யெவருங் காண நின்றருளவேண்டும்; தூய வெள்ளி மன்றவரே! அடியேன் வேண்டும் வரம் இதுவே!"

பாண்டியன் வேண்டுகோளுக்குப் பரமனுர் திருவுளம் ஒப்பினுர்.

———

அனந்த குணன் ஆட்சி

சிறிதுகாலஞ் சென்றது. இராசசேகர பாண்டியன் தன் காதல்மகன் குலோத்துங்கனிடம் அரசை அளித்து வினையை வென்று வெள்ளியம்பலக்கூத்தரின் மென்மலரடி நீழலிலே கலந்து பேரின்பம் பெற்றான். குலோத்துங்க வழுதியும் அவ் அரசைப் பெற்றுத் தண்ணிலவு பொழியுந் திருமுடியாரை— அரவணியாரை—நாளும் வழிபட்டு வந்தான்.

குலோத்துங்கன் மைந்தன் அனந்தகுணன். அவன் கலை கற்றான்; பரிநெடுந்தேர் களிறு கற்றான்; சிலை கற்றான்; அவன் திறம் நோக்கிய தந்தையும் அலைகடலாடையணிந்த நில மங்கையை அணிதோளிலே சேர்த்து மகிழ்ந்தான்.

திருப்புத்தூர் மறையவன்—பழியோரிடம் பாவமோரிடம்

கழனிகள் சூழ்ந்த திருப்புத்தூரிலே ஒரு மறையவன் இருந்தான். அவன் தன் மனைவியோடும் மழலைமொழிக் குழவியோடும் தன் மாமனகமான மதுரையை நோக்கி வந்தான். வருநெறியிலே, ஒரு காட்டிலே நீர்வேட்கை கொண்ட மனைவியைப் பெரிய ஆலமர நீழலிலே, கைக்குழவியுடன் இருத்தி விட்டு நீர்நிலை நாடிச் சென்றான். அவள் தன் குழவியை அருகி விட்டு அயர்ந்து படுத்தாள்.

இலை செறிந்த முதிய அந்த ஆலமரத்திலே, முன்னொரு நாள் எய்யப்பெற்றுக் கோப்புண்டு கிடந்த ஓரம்பு காற்றிலே அலையுற்று வீழ்ந்தது. அஃது, அந்தோ! அந்தப் பார்ப்பனி யின் வயிறுருவத் தைத்தது! முன்னை வினையின் முடிவினால் அவள் முடிவிலா இடத்தை யடைந்தாள்.

அப்போது, அம்பேறிய வில்லுடன் அச்சுறுத்துந் தோற்ற முடைய வேடனொருவன் அம்மரத்தினருகிலே மற்றொரு பாங்கர் வெயிலுக் கொதுங்கினான். அவன் அங்கே நிகழ்ந்ததை அறவே அறியான்.

நீர்நிலை நாடிச் சென்ற அந்தணன் நீர்முகந்து திரும்பினான். தன் உயிர்த்துணைவியை நாடி ஓடிவந்தான். அவளோ அருகிலிருந்த குழந்தையுடன் புண்ணீர் வெள்ளத் திலே புதையுண்டு, வெற்றுடலாய்க் கிடந்தாள். கண்

டான் பார்ப்பனன்! 'இஃது என்னே!' என்று கலங்கினன்; கைந்நெரித்தான்! மத்தாலலைப்புண்ட தயிர்போல மறுகினன்! உயிர் சோர்ந்தான்! தெளிந்தான். 'இப் பழியையேற்றவர் யார்? என் உயிர்போல்வாய்! உனக்குற்ற தென்ன?' எனப் புலம்பினன். சூழ நோக்கினன். மற்றொரு புறத்திலே அழல் சொரியுங் கணையுடனும், வளைத்திட்ட வில்லுடனும், வருவதை யறியாத வுள்ளத்துடனும், வனவேடன் நிற்பதைக் கண்டான்.

"கையில் அம்பு சேர்த்த வில்! இடையில் வாள் கட்டிய கச்சு! கொடுந் தோற்றம்! கொலையாளி இவனே!"

குழம்பிய மறையவன் உள்ளம் கொதித்தது! "ஏடா வேடனே! என் மனைவியை வதைத்தவன் நீயே!"

கூற்றுவனைப்போல வாய்விட்டுக் கூவினன். கண்கள் சிவந்தன. "பாண்டியன் ஆணை! என்னுடன் வருக!"

பாண்டியனிடம் முறை—பாண்டியன் கலக்கம்

மாண்ட மனைவியை முதுகிலே யிட்டான். மகவை இடுப்பிலே அணைத்தான். தாய்முலை விரும்பியழும் பச்சைக் குழவியைக் காணுந்தோறுங் கண்ணீர் பெருக விம்மினன். கடிது சென்று கூடல்மாநகரை யடைந்தான். வேடனும் மன்னவனாணையாற் கட்டுண்டு வறிதே பின் சென்றான். இரங்கத்தக்க அந்தணன் மாறன் அரண்மனை வாயிலை அடைந்தான்.

வேடனை முன்னே நிறுத்தினன். தன் காதல் மனைவியின் வெற்றுடலை எதிரே யிட்டான். கையேந்திப் பாண்டியன் உறவினர் (பணியாளர்) கேட்ப முறையிட்டான்.

"கோமுறை கோடாக் கொற்றவ ரேறே! முறையேயோ!
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா! முறையேயோ!
மாமதி வானோன் வழிவரு மைந்தா! முறையேயோ!
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ!"

*"புகழ்மிகுஞ் செங்கோலன்—பகையை வென்று வெற்றி கொண்ட மன்னவன்—உறங்குவானாயினும் அவன் ஆணை

---

*"உறங்கு மாயினு மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" —சிந்தாமணி

உலகெங்கும் அறம் வழாமற் காக்கும் என்பரே! அத்தகைய ஆணை இக் கொடியோன் செய்த கொலையைத் தடுத்துக் காவாத தென்ன?''

வாயிற்காவலர் மருண்டு ஓடி மன்னவனைக் கண்டு வணங்கி, 'அரசர் பெரும! நம் அரண்மனை வாயிலிலே அந்தண னொருவன் தன் மனைவியைக் கொலைசெய்தானென்று வேட னொருவனை முன்னே நிறுத்தி, இறந்தவளையும் எதிரேயிட்டுக் கூக்குரலிடுகின்றான்,' என்றார்கள்.

வேந்தன் மெய்சிலிர்த்தான்; உளம் நடுங்கினான். ''என் ஆட்சி நன்று! என் காவல் நன்று! *ஐவகையான அச்சமுந் தீர்த்தாளும் முறைமையும் நன்று! நாடு வறுமையி லாழாமல் முயன்று ஏந்தும் பொறுமையும் நன்று.''

வாடிய முகத்துடன் வந்தான் வாயிலுக்கு! அந்தணன் நிலையை நோக்கி அயர்ந்தான்!

''உனக்கென்ன நேர்ந்தது? தளர்ந்து நிற்கின்றனை?''

''இன்று இவளை ஓராலமரநீழலில் விட்டு நீர்கொணரச் சென்றேன். திரும்பி வருமுன்னர் இந்த வில்வேடன்கொன்று விட்டு அண்டையிலேயே நின்றான்.''

உலையிலிட்ட வேலையிட்டதுபோற் பாண்டியன் செவியிலே புகுந்தது அக் கொடுஞ் சொற்கள். கலக்கத்துடன்காண வேடனை நோக்கினான்.

அவன் வணங்கிக் கூறினான்:

''எந்தையே! அரசர் பெருமானே! அடியேன் இன்று இளைப்பாற அம் மரத்தின் அருகே வந்து நின்றேன். நான் கொல்லவில்லை. கொன்றவரையும் பார்த்ததில்லை.

---

* 'மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ?''
—பெரியபுராணம்.

எதிர்நின்றனர் வினவினர் :

"அவ்வாருயின் இவள் மெய்யிலே அம்பு பாய்ந்தது எங்ஙனம்?"

"நான் உண்மையாக அறியேன் இவ்விளைவை."

எதிர்நின்ற அமைச்சர்கள் இசைத்தனர் :

"இக் கொலை செய்தவன் யானென்று இவன் ஒப்புவானே? கொடிய வேடனும் உண்மை கூறுவானே? கடுமையாக ஒறுத்தாலல்லது உண்மையுரையான்."

அரசனும் அவ்வாறே செய்ய ஆணைதந்தான். வீரர்கள் அவன் உறுதியைத் தளர்க்குந் தண்டனை பலவுஞ் செய்து வினவினர். குற்றமற்ற வேடன் கூறியதையே கூறினான். மீனவன் வெருண்டான், 'இன்னும் நன்றாக ஆராய்ந்து பாருங்கள்,' என்றான்.

"இவ்வாறு மிகவும் கடுமையாக ஒறுப்பதற்கும் அஞ்சாமல் ஒன்றே உரைக்கின்றான் ! கொலைக்குறியுங் கொஞ்சமும் முகத்தி லில்லை! பகைவரோ விலங்கோ பறவையோ இப் பார்ப்பனி இவனுக்கு? இவளைக் கொன்று பயனென்பெறுவான்? வஞ்சக னென இவ் வேடனோ பிறரோ செய்தாரென்று செப்புதலெப்படி ! ஒருவிலங்கை யெய்த அம்பு இலக்குத் தப்பி இவள்மேற் பட்டு மாய்ந்தாளோ? அறியேன். இது நூல்களா லாராயத் தக்கது."

நூல் வல்லாரும் ஆராய்ந்து பார்த்தனர். ஒன்றும் அறிகிலர். தெய்வத்தா லாராயத்தக்கதுதானென்றனர்.

பாண்டியன் முறையீடு—மணமகன்—பிணமகன்

தென்னவன் மறையவனைப் பார்த்து, 'அஞ்சாதே! இதனைத் தீர ஆராய்ந்து தக்கது செய்வேன். இப்போது உன் மனைவியின் ஈமக் கடனை முடித்திடுக!', என்றேவினான் ; வேடனைச் சிறைப்படுத்தினான். ஈமக்கடன் முடித்துவந்த பார்ப்பனனைத் தன்னரண்மனை வாயிலிலே இருத்தினான்.

தங்கள் குலதெய்வமென வீற்றிருக்குஞ் சோமசுந்தரனார் திருமுன் சென்று பணிந்துநின்றான்.

"மன்றாடும் மாமணியே! இவ்வேடன்தான் பார்ப்பனியைக் கொன்றானோ? வேறு யாராவது வேறு காரணத்தாற் கொன்றனரோ? அறநூலாலும் அறிய முடியாமல் திகைக்கிறேன். அடிகளின் அருளொன்றே துணைபுரியும். அருளுடன் என் தாழ்வு தீரத் தெளிவிப்பீராக!"

இறையருளால் விண்மிசையொரு வாக்கு எழுந்தது:

"இந் நகரின் ஒரு சார்பிலே வணிகத்தெருவில் ஒரு மனையிலே திருமணமொன்று நடைபெறுகிறது. அந்தணனுடன் நீயும் அங்கு வருக. உன்னுளந் தெளிவிப்பேம்."

திருவாக்குச் செவியுற்ற செழியன், அன்றிரவிலே தன்னுருவை மாற்றி அந்தணனுடன் சென்று வணிகன் வீட்டிலே ஒருவருமறியாமல் ஒருமருங்கிலிருந்தான். அப்பொழுது அந்த வண்ணாரருளாலே அவ்விருவர்க்கு மட்டுந் தெரியும்படி ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது.

கருமலை போன்ற மறலியின் தூதரிருவர் தம்முள் உரையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் கையிலே பாசம் இருந்தது. கொடுஞ்சினத் தோற்றத்துடன் காணப்பட்ட அவர்களின் பேச்சிலே அரசனும் அந்தணனும் உளஞ் செலுத்தினர்.

ஒருவன், 'இப்போதே இம் மணமகனுயிரைக் கொணர்க என்றனர் நம் இறைவர். இவன் உடலிலே நோயொன்றுமில்லையே! எவ்வாறு பற்றுவது! ஒரு காரணமுமின்றி உயிர் கொள்வது முடியாதே!' என்றான்.

"ஆலமரத்திலே சிக்குண்டஅம்பை, அதன் நீழலிலே தங்கிய பார்ப்பனியின்மேற் காற்றாலே வீழ்த்தி எப்படிக் கவர்ந்தோம் அவளுயிரை? அவ்வாறே இந்தத் திருமண ஆரவாரத்தினாலே, புறத்திலே நிற்கும் இப் பசு தாம்பை

யறுத்துக்கொண்டு வெருண்டோடி யிவனுயிரைக் கொள விடுப்போம்.''

அம் மொழியை அரசன் கேட்டான். அந்தணனை நோக்கினன். அவனும், 'இவன் இவ்வாறு இறந்தால் என் மனைவி யிறந்ததும் இவ்வாறேயென மனக்கவலை விடுவேன். ஆகவே, இதனைக் காண்போம்,' என்றான். இருவரும் அதனை யெதிர்நோக்கி யிருந்தனர்.

மணமகனில்லத்திலே பல உறவினருங் கூடினர். ஒல்லென மங்கலவொலி யெழுந்தது. மணமுரசும் மற்றும் பல இசைக்கருவிகளும் எழுந்தன. அவ்வோசையினாலே வெருண்ட பசு கட்டிய கயிற்றை யறுத்துக்கொண்டு ஓடி மணமகனை முட்டியது. மணமகனுயிரும் பிரிந்தது!

" மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை.''

மறையவன் கண்டான். தன் காதலி மாண்டபோ தடைந்த வருத்தத்திலுங் கழிபெருந் துன்பமடைந்தான். அரசன் அவனை அழைத்துக்கொண்டு அரசவையடைந்து அமைச்சர்க்கெல்லாம் எடுத்துரைத்தான். பின்னர் மறைய வனுக்கு மற்றொரு மாதை மணமுடித்துப் பொருளளித் துப் போக்கினன். சிறையிலிருந்த வேடனை விடுவித்துக் 'தெளியாதே யாம் இழைத்த தீத்தண்டம் பொறுத்தி,' யெனத் தலையளி செய்து வேண்டுவன மிகவும் அளித்து விடை நல்கினன். அங்கயற்கண்ணம்மையார் பாகரை யடைந்து பன்முறை வணங்கினன்.

''எளியேன் பொருட்டுப் பேரருள் சுரந்தீர். 'அரும்பழி அஞ்சும் நாதரா யிருந்தீர்!' எந்தையே! அடிகளுக்கடியேன் செயத்தக்கதொன் றுண்டோ?'' என்று பரவினன். பல் வகைப் பூசனைகளும் இயற்றினன். உலகினைக் குற்றங் கெடுத்து நற்றம் நல்கிப் பலலாண்டாண்டான்.

உகூ. மாபாதகந் தீர்த்தது

அவந்திநகர் அந்தணன்—மனைவி மகன் தீய பண்புகள்

மணமிகும் மலர்மாலையணிந்த குலோத்துங்கன் அரசாட்சி செய்த நாளிலே நிகழ்ந்தது.

அவந்தி யென்றொரு நகரத்தில் மறையவ னொருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மனைவி யென்னும் பெயருக்கு வந்தவள் திருமகளும் இரதியும் மட்பாவையுங் காமங்கொள்ளும் அழகுடையவளா யிருந்தாள். அவளுக்கு மகனாக ஒரு கொடியவன் பிறந்தான். பாவக்கலனாக வளர்ந்தான். இளமை செழிக்க இலகினான்.

"கோடி கோடி யடுஞ்சில கோட்டியே
கோடி கோடி கொடுங்கலை பூட்டியே
கோடி கோடி விகாரமுங் கூட்டியே
கோடி கோடி யனங்கரெய் தார்கொலோ?"

இளமையின் சூழலிலே சிக்கினான்; காமத்தினாலே கண்கலங்கினான்; பழவினையும் பற்றியது போலும்! தன்னைச் சுமந்துபெற்ற அன்னையையே விரும்பினான். அன்னையாகிய அந்த அழி செயலாளும் தன் உயிர்த்துணையும் மனக்காவலு மாகவுள்ள நாணம், மடம், அச்சம் பயிர்ப்பென்னும் பண்புகளை நீங்கித் தகாத அச் செயலிலே மனம் ஒப்பினாள்!

'இன்பமோ சிற்றின்பம்! இதனில் வருந்துன்பமோ கரையற்ற கடல்' என்பதை யெவருமறியப் பரப்புவ தற்குப் போலும் இக் கொடியோன் கொடுவினையிலே ஈடு பட்டான்! மயக்கப் பாம்பு தன் மதியை விழுங்கியதால் அன்னையை அவன் கலந்து வாழ்வதைத் தந்தையுங் குறிப் பினாலறிந்தான். எனினும், அயலவர் செவியறியா வண்ணம் அடக்கினான்.

தந்தைக் கொலை—மறநிழல் (பிரமசாயை)

மற்றொருநாள் வெளிப்படையாகத் தந்தையறிந்தானென மகனுணர்ந்தான். எனினும் தந்தை ஒன்றும் கூறாமலே விட்டான். மகனே, தந்தையாற் கெடுதி நேரிடு முன்

தானே தந்தையைக் கொல்வேனென எழுந்தான். அன்னை கண்டாள்; அஞ்சினுள்.

"தாயினிடம் இன்பம் நுகர்ந்தாய்; தந்தையையுங் காய்ந்தாலென்ன கேடு பெறுவாயோ? வேண்டாம்," என அன்னை விலக்கினுள்.

"காமுகர்க்குத் தாயாலுந் தந்தையாலும் என்ன பயன்? அருளென்ன? அறமென்ன?"

அன்னையிடமுண்ட காமக்கள்ளா லறிவிழந்த கொடியவன் மண்வெட்டியாலே தந்தையைத் துண்டமாகத் துணித்தனன். மைக்கருங் கங்குலிலே கொல்லப்பட்ட தந்தையைத் தீயிலிட்டான். தாயொடும் கைக்கசுப்பட்ட பொருளொடும் வெளியேறினுன்.

வெளியேறிக் கற்கள் நிறைந்த காட்டு வழியே செல்லும் போது வேடர்கள் வளைந்துகொண்டனர். அம்பேற்றிய வில்லுடனும், இடியை நிகர்க்குஞ் சொல்லுடனும் இருவரையும் நிறுத்தினர். கையிலுள்ள பொருளையுங் காமம் நிறைந்த காரிகையையுங் கைக்கொண்டு சென்றனர்.

சேயநாட்டிலே சென்று தடையின்றி வாழலாம் என வந்தவன் தன் எண்ண மிழந்து பொருளையுமிழந்து புன்மையுற்றுன். 'நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைத்தல் இயல்பேயன்ருே?'

நிற்க, தாயை மறவர் கையிலே சிக்கவிட்ட தனயனுக்குத் துணையாக வருவான்போல, இவனுல் வெட்டுண்ட தந்தை மறநிழலாக வந்து பற்றினுன். அந்த மறநிழல், 'ஆ' வென்னும்; அழும்; 'சிவதா' வென்னும்; 'பாவம் பாவம் பழியிதுவோ ஐயோ' வென்னும்; ஆட்டியலைக்கும். நிழற்பாவை போல விடாது பின்பற்றும். தூயநீர்நிலை, சிவநகர், நல்லோர் அருகிலே செல்லவொட்டாது. சிவ நாமத்தைச் செவியிலே புகவொட்டாது; நாவினுலே சொல்லவும் ஒட்டாது; துயிலவும் ஒட்டாது.

அது சுற்றிவரும்; முன்னும் பின்னும் அருகினும் நின்று தன் கொடுக்கினாலே பற்றும்; இழுக்கும்.

இவ்வாறு துன்புறுத்துகின்ற பெரும்பாவ நிழலாலலையுண்ட கொடியோன் இனிச் செய்வதென்னென்று திகைத்தான்; இடர்ப்பட்டான்; உலகெலாம் அச்சத்துடன் அலைந்தான். ஆற்றவுந் துன்பமுற்று உழன்றுழன்று மயங்கித்திரியும் அறக் கொடியோன் வலி குறைந்து, சிவனாருளாலே மறந்தொலையும் நாள் வரவே கூடலைக் கூடினான்.

சோமசுந்தர வேடர் சூதாட்டம்—பாவநிழல் நீக்கம்

அந் நிலையிலே சோமசுந்தரரும் அங்கயற்கண்ணியும் வேடனும் வேடிச்சியுமாகத் திருக்கோபுரமருங்கிலே கவருடிக் கொண்டிருந்தனர். அங்கயற்கண்ணியாரின் இரு காதுகளினுங் குழைகள்—தந்தத்தாலானவை—ஊசலாடின. புலிப்பற்றாலியும் நுண்ணிய மயிர்ப்பின்னலும் பிடரிலலைந்தன. பழிக்கஞ்சுங் கூடல் வேடனார் கொன்றையணியும் வேணியிலே வேங்கைமலர் மிலைந்திருந்தார். கலைமானின் கொம்புபோலக் காதளவும் முறுக்கிவிடப்பெற்ற மீசையும், யானைத்தந்தத்தாற் செய்த வில்லும் உடையவரா யிருந்தார். அவர் வில் அருகே கிடந்தது. பனங்கருக்குப் போன்ற வாயையுடைய நாய் அருகிலே காவலிருந்தது.

வேழமுண்ட விளங்கனிபோல வெருவருந் தோற்றத்துடன் வறியனாகித் துன்பத்துடன் வருங் கொடியோன் வரவை நோக்கி உரைக்கின்றார் உமையொருபங்கர் :

''ஒருவரும் உள்ளத்தாலும் நினைக்கவொண்ணாத கொடிய தீயவன் வருவதைப் பார். யாவருக்குங் காம நோயையுண்டாக்குங் காமனால் வருத்தப்பட்டவருள்ளம் செல்லுமிடம் அறியாது. குணம் குலம் ஒழுக்கம் குறைவதையும் கொலைபழி பாவத்தையும் பாராது. உயிர்க்கும் உலைவைத்துக் கருத்தை யழிப்பவை கள்ளுண்டலுங் காமமுமே. எனினும் உண்டால் மட்டுமே கள் அழிவைச் செய்யும். காமமோ நினைப்பினுங்

காணினுங் கேட்கினும் நஞ்சு தலைக் கொண்டாற்போல உணர்வையழிக்கும். ஆகவே, காமமே கொலைகட்கெல்லாங் காரணம். கண்ணோட்டமில்லாத காமமே களவுகளுக்கெல்லாங் காரணம். அந்தக் காமமே கள்ளுக்கும் காரணம்! காமமே நரகத்திற்குக் காணியாகும்.''

இவர்கள் பேச்சு முடியுமுன் கொலையாளி குறுகி நின்றான்.

''ஏ பார்ப்பான்! துன்பத்தாலலைப்புண்டு வருந்துவதேன்?''

பிறைமுடியாரின் திருவருள் நோக்கம் பெற்றவுடன் சிறிது பழிதவிர்ந்து அறிவுபெற்றான் அவன். தன் குற்றங்களையெல்லாம் எடுத்தியம்பி யிரங்கி நின்றான். கொடிய வேட வடிவத்துடன் உள்ளத்திலே அருள் சுரந்து வீற்றிருக்கும் கொடையாளியார் அக் கொடியவன் கொடுவினை தீர வழி கூறுவார்.

''உன் பெயர் கூறினோர் குலமும் நரகில் வீழும்படி செய்த தீவினை கழிப்பவர் யார்? யாம் ஒருவழி கூறுதும். கையிலே ஐயமேற்று ஒருபோது மட்டும் உண்டு, பரமனாரடியவர்க்குக் குற்றேவல் செய்தல் வேண்டும். கதிரவன் வெளிவருமுன் எழுந்து, குளிர்ந்த பச்சையறுகு கொய்து பசுக்களுக் கூட்ட வேண்டும். கோயிலின்புறத்தொட்டி, முப்போதும் நீராடிச் சங்கரரை நூற்றெட்டுமுறை மெய்வலம் (அங்கப் பிரதட்சணம்) வருதல்வேண்டும். இவ்வாறு தவநெறியிலே நின்றால் இப் பழி கழியும்.''

கொடிச்சியாயிருந்த அம்மையார் வினவுகிறார்:

''இக் கொடியவன் செய்த பாவத்துக்கு அளவில்லாத காலம் கொடிய நாலேழு கோடி நரகிலே வீழ்ந்தாலும் உய்வகையிலையன்றோ! இவன் உய்யுமாறு செய்யும் வகையென்ன?''

விடையவர் விடுத்த விடை :

"அடுபழி யஞ்சா நீச ராயினும் வினைக்கின் அச்சம்
படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும்
விடுவகை யின்றி வேறு களைகணு மின்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி."

கருங்குவளை போன்ற கண்களையுடைய அம்மையார் மகிழ்ச்சி பொங்க, 'எத்தொழிலையும் செய்தற்கும் செய்யாமைக்கும் வேறொன்று செயற்கும் ஆற்றலுடையீர் தாங்கள்! தாங்கள் விரும்பினால் எவரையுங் காக்க முடியும்,' என்றார். உடனே, வெள்ளிமன்றிலே நிறைந்து மறைந்தார். வெள்ளி மலையார் மேகம் மறைந்தால் அதனுடன் மறையும் மின்னற் கொடிபோல அங்கயற் கண்ணியாரும் மறைந்தனர்.

கொடிய பாவியான அந்தப் பார்ப்பனன் கண்டு கண்ணுதலருளை வியந்தான். கூடலிறைவர் கூறியருளிய வாங்கே நன்னெறியிலே—தவ வொழுக்கத்திலே—நின்று மூன்று திங்களிலே மறநீக்கம் பெற்றுத் தெய்வ அந்தண வடிவும் பெற்றான். சொல்லளவையைக் கடந்து நின்ற தூய இறைவரைப் பற்பல வடசொல்மாலைகளைப் புனைந்தணிந்து வணங்கினான். அப் பெருமானார் திருவடியையும் பெற்றான்.

ஆற்ற வியலாத அறக்கொடிய தீவினையைப் போக்கிய அண்ணலாரருளை யென்னென்பது? 'முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ?'

"அழிந்தவே தியன்மா பாதகம் தீர்த்த
தறிந்துவேந் தமைச்சரூர் உள்ளார்
ஒழிந்தபா ருள்ளார் வானுளார் வியப்ப
முற்றுநல் உரையுணர் வெல்லாம்
கழிந்தபேர் அருளுக் கயவன்மேல் வைத்த
காரணம் யாதெனக் கண்ணீர்
வழிந்துநான் மாடக் கூடல்நா யகனை
வழுத்தினார் மகிழ்ச்சியுள் திளைத்தார்." (சக)

———

உஎ. அங்கம் வெட்டியது

வாளாசிரியன்—சித்தன்

குலோத்துங்கன் காலத்திலே மதுரை நகரிலே ஒரு வாளாசிரியன் இருந்தான். அவன் வேற்று நாட்டவன். வயது முதிர்ந்தவன்; வலிய அமணர் விடுத்த வேழத்தைக் கொன்ற சுந்தரவிடங்கரைத் தானுந் தன் தனியன்புமாக நாள்தோறும் வழிபட்டுக் கொடுவினையை வேரறுக்கும் கூர்த்த அறிவினன்.

வாட்கலையிலே சிறந்த அவனைச் சார்ந்து வணங்கி வழிபட்டுத் தளராமற் பகையை வெல்ல வாள்விஞ்சை கற்பார் பலர். அவர்களிலே சித்தனென்பவன் ஆக்கமுடையவனுகி மற்றவரைவிடச் சிறந்திருந்தான். கலைச்செருக்கிலே களித்த அக் கொடியவன் நன்றிமறந்து ஆசிரியனுக்கு மாருகத் தானுமொரு கலைக்கூடங் கண்டான். அவனிடத்திலேயும் பலர் சென்று கற்றனர். ஊதியமும் மிகுந்தது.

நன்றி கோன்றுன்—ஆசிரியன் மனைவியைக் காதலித்தல்

ஆசிரியனைவிட ஊதியம் மிகவே, அறிவிழந்தான். தான் ஒருவனே இருவர் வாள்வருவாயையும் ஒருங்கே பெற வுள்ளங் கொண்டான். அதற்குத் தன் முதிய ஆசிரியனை வெளியேற்றலே செய்யத்தக்கதெனத் துணிந்தான். ஆசிரியனிடங் கற்கும் வாளிளையரைத் தன்னிடம் வருமாறு மனத்திரிவு செய்தான்.

அதனெடும் அமையாமற் பொறுமையிலே புவியைப் போன்ற ஆசிரியனுடைய மனைவியையுங் கெடுக்கத் துணிந்தான்! தாயை விரும்பியவனுக்குத் தம்பியான அவன் ஒவ்வொரு நாளுஞ் சென்று 'இடனுண்டா? இடனுண்டா?' எனக் குரவன் மனைவியைக் குறுகி வினவிச் செல்வான். அவளோ, இவனுடைய அடாச் செயலைத் தன் கணவனிடங் கூருமலேயிருந்துவிட்டாள். கற்பரசியான அவள் தன் கணவனுக்கு ஏதாவது துன்பம் வருமோ எனக் கலங்கி வாளாவிருந்தாள் போலும்!

மற்றொருநாள் சென்று மங்கையர்க்கரசியான அவளுடைய மலர்க்கை பற்றி வலித்தான். நடுநடுங்கிய அவள், துணிவுடன் அவனைத் தள்ளிவிட்டுக் கதவைத் தாழிட்டுத் தன் கற்புக்குத் தானே காவல் செய்துகொண்டாள். அக் கொடியவனோ காமத்தீ வெதுப்பச் சென்றுவிட்டான். 'அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை, நின்றாரிற் பேதையா ரில்' என்றார் வள்ளுவர். இவனோ அவர்களினும் ஆற்றவுங் கொடியனாகி ஆசிரியன் கடையிலே—ஆசிரியன் மனைவியை விழைந்து—நின்றான் !

ஆசிரியன் மனைவியோ அறக்கொடியோன் செயலை இப்போதுங் கணவனிடம் உரைக்க அஞ்சினாள். எனினும் தன் உள்ளத்திலே இருக்கைகொண்டு உயிர்களெங்கும் நிறைந்த நான்மாடக்கூடல் நம்பரை நினைந்து வருந்தி முறையிட்டாள்.

அங்கம் வெட்டினார் அங்கம் இலாதார்

கொன்றைச் சடையவரான கூடலார்—தீவினையறுக்குந் திருவாளர்—எவ்வுயிர்க்கும் அறிவாக இலங்கும் இறைவர்—அந்தப் புலையன் செய்த தீதையுணர்ந்து ஒறுக்க வுன்னினார். ஆசிரியன் போலவே அந்தச் சித்தனை யடைந்தார்.

''சித்தா! காளையாகிய நீயும் மிகவும் மூப்படைந்த யாமும் வாளமர் செய்து வலிமையை அளந்து காண்போம்; நாளைக்கு நகர்ப்புறத்தே வருக! நாமும் வருவோம்'' என்றார். நன்றெனஅப் பாதகன் நயந்தான். அண்ணலுந் திரும்பினார்—வையம் இருள் வெள்ளத்திலே புதைந்து மூழ்கியது. ஞாயிறு கடலிலே முழுகினான்.

குற்றமற்ற குரவனுக்குத் தீமை செய்தோன் பாவம் போல இருண்ட இரவின் வலிமைகெட ஞாயிறு தோன்றினான். அத் தோற்றம் சித்தன் உடலைச் சிதைக்க ஆசிரியன் தீட்டிய வாளின் விளக்கம் போன்றது.

நன்றிகொன்ற சித்தன் நம்பராணைக் குட்பட்ட கொற்றவையை வாழ்த்தி வணங்கி, வாளைப் பரவிக் கச்சிறுக்கி வாளும் பலகையும் ஏந்தி, அண்ணலார் அறைந்த போர்க் களத்தைச் சேர்ந்தான். வளைந்த முதிய யாக்கையுடன் கழலணிந்து கச்சுக்கட்டி வெண்ணீறணிந்து வாளும் பலகையும் எடுத்து வந்துவிட்டார் வள்ளலாரும்!

ஆற்றல் மிக்க சிங்கமொன்றும் அச்சத்தினுலே நடுங்கிய சிங்கமொன்றும் எதிர்த்தாற்போல இருவரும் எதிர்த்தனர். வான்பிறையொன்றும் முக்கண்களும் நான்கு தோள்களும் மறைத்து வந்த முதிய வீரரும் அக் கொடியவனும் போர் செய்வதைக் காண அந்நகர வீரரெல்லோருங் குழுமினர்.

இருவரும் எதிர்ப்பர், பின்செல்வர், நேர்வர், இடியென ஆரவாரிப்பர், கேடகத்திலே மறைவர், தோன்றுவர், வாளை விதிர்ப்பர், சாரிகை வந்து வெட்டுவர், தடுத்துத் திரும்புவர், சீறுவர், நகைப்பர், வீரவாதம் புரிவர், திரும்பவும் எதிர்ப்பர், தோற்றவர்போற் பின்செல்வர், கூவியழைத்துத் திரும்புவர், வாளை மார்பிலேற்பர், குறிபிழைத்து நிற்பர். இவ்வாறு நாலைந்து நாழிகைவரை போர் செய்தனர்.

பின்னர் அங்குள்ளாரனைவருங் கேட்கவும் நோக்கவும் அண்ணலார், அவனை நெருங்கி 'ஆசிரியன் மனைவியை நினைத்த நெஞ்சையும் குறித்துரைசெய்த நாவையும் தொட்ட கையையும் நோக்கிய கண்ணையும் காத்துக்கொள்'' என்று கூறிக்கூறி அவற்றையெல்லாம் வெட்டி வெட்டி யெறிந்து முடிவிலே முடியையுந் துணித்துவிட்டு மறைந்து விட்டார்.

செருக்களத்தைக் காணவந்த வீரர்களெல்லோரும் கழற் கால் முதிய ஆசிரியனைக் காணுமல் வீட்டிற்குச் சென்று, ஆசிரியன் மனைவியை, 'உன் கணவர் எங்கே?'' என வினவினர். அவள், 'கோயிலுக்குப் போயினர்' என்ருள். அந்நிலையிலே கோயிலுக்குச் சென்ற ஆசிரியனுந் திரும்பி வந்தான்.

"சித்தனைப் போர்க்களத்திலே அங்கம் வெட்டி வென்ற பின் எப்படி யிங்குவந்தாய்? நாங்கள் தேடியலைந்து திகைத்து வந்தோம்!" என்றனர் வந்தவர்.

ஆசிரியன் திகைப்புற்றான்.

"நீங்கள் கூறுவதென்ன? யானா அங்கம் வெட்டினேன் சித்தனை? என்னைப்போல் வந்து சித்தனை யொறுத்தவர் யார்? வைகை வளம்பெற்ற மதுரைக் கடவுளின் செயலோ இது?"

மனைவியும் அப்போதுதான் சித்தன் பலகாலும் வந்து வினவியதும் நேற்றுக் கையைப் பற்றியீர்த்ததும் உளம் வெதும்பித் தள்ளிவிட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டதும் விளங்கவுரைத்தாள்.

வீரர்கள் வியந்தனர்.

'அன்னையார் கூறியவாறே அருளிச்செய்து சித்தனை அங்கம் வெட்டி மாய்த்தார் அந்த வீரர். நாங்கள் கண்ட மெய்ம்மையிதுவாகும்.''

ஆசிரியன் கூடலிறைவர் திருவிளையாடலே யெனத் தேர்ந்தான். வாள்வீரரோடும் கொடிபோன்ற இடையையுடைய மனைவியோடும் விரைந்து சொக்கலிங்கப் பெருமானார் திருமுன் சென்றான். பன்முறை விழுந்து வணங்கினான்.

''திருமாலுக்கும் நான்முகனுக்குங் காணவொண்ணா நெறி யானது எளிய ஏழையேன் அளவினதோ? அடிகளின் அருள் விளையாட்டை யென்னென்பேன்?"

குலோத்துங்கன் இதனைக் கேள்வியுற்றான். நகர மக்களும் அறிந்தனர். யாவரும் வந்து இன்பக் கண்ணீர் வடித்துப் பெருமானாருளைப் பாடி யாடி மகிழ்ந்தனர்.

"அடியவருக் கெளியவர்; பரதேசி காவலர்!'' என ஆர்வமொடு மதுரைப் பெருமானாரை வாழ்த்தி மகிழ்ந்த

பாண்டியன், ஆசிரியனையும் அவன் மனைவியையுங் களிற்றின்மீ தேற்றி நகர்வலஞ் செய்வித்துச் சிறப்புச் செய்தான்.

பின்னர்த் தன்மகன் அனந்த குணனுக்கு முடிசூட்டித் தன் இறைமையையும் அளித்தான்.

"தண்மதி வழிவந் தோனும் நகருளார் தாமும் பாதி
விண்மதி மிலைந்த வேணி விடையவன் ஆடல் நோக்கிக்
கண்மலர் வெள்ளத் தாழ்ந்து கனைகழல் அடியில் தாழ்ந்து
பண்மலர் கீதம் பாடி ஆடினார் பழிச்சி நின்றார்." (உசு)

"அடியவருக் கெளியர்இவர் பரதேசி
காவலரென் றடிவிழ்ந் தேத்தி
வடியயில்வேற் குலோத்துங்கன் மாணிக்க
மாலையெனும் மனையா ளோடும்
தொடியணிதோள் முதுமகனைக் களிறேற்றி
நகரைவலஞ் சூழ்வித் திப்பால்
முடியணிவித் தனந்தகுண பாண்டியற்குத்
தன் இறைமை முழுதும் ஈந்தான்." (உஎ)

"நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து
கரணமொரு நெறியே செல்லப்
புலனெறிநீத் தருள்வழி போய்ப்
போதமாந் தன்வலியைப் பொத்தி நின்ற
மலவலிவிட் டகலவரா வுமிழ்ந்தமதி
போல்விளங்கி மாறி யாடும்
தலைவனடி நிழல்பிரியாப் பேரின்பக்
கதியடைந்தான் தமிழர் கோமான்." (உஅ)

———

உஅ. நாகம் எய்தது

அனந்தகுணன் ஆட்சி—நாக அசுரன்

குற்றமற்ற பண்புடைய அனந்தகுணன் முதற் பரம் பொருளாகிய சிவனரது ஐந்தெழுத்தும் கண்டியும் திரு வெண்ணீறுமே பொருளென்று அன்புகொண்டு தன் முன் னேரைவிடச் சிறந்தவனுக அரசாண்டான். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' ஆதலாலே, பாண்டிநாடெங்கும் ஐந் தெழுத்தின் இனிய ஒலியும், திருவெண்ணீற்றெளியும் பரவி அறியாமையாகிய அகவிருளும் புறவிருளும் நீங்கிப் பரமனர் திருவுருவமாகவே காணப்பெற்றது.

அமணர் அறிந்தனர் இதனே. மனம் புழுங்கினர், மாறனேக் கொல்ல வகை தேடினர்; வஞ்ச வேள்வியிலே மனம் வைத்தனர்; காத எல்லேயளந்து சாலே கோலினர்; அழற்குழி தோண்டினர்; அழலேயும் மூட்டினர்; எட்டுத் திக்கினும் பரவி வானிலே வளர்ந்து வானவுடுக்களும் பொரிபோலப் பொரிந்து வேள்வியிலே விழுவதுபோல நெருப்பை வளர்த்தனர்.

அந்த வேள்வியிலிருந்து, பிலத்திலிருந் தெழுவதைப் போலப் படமுடைய இருண்ட வாயும் வாயினிருபக்கத்தி னும் பிறையென முளேத்த நச்சுப் பற்களும் ஊழியழல் போன்ற விழிகளும் உடையவனுக ஒரு பாம்பசுரன் வெளி வந்தான். அந்தச் செங்கணரக்கன் சினந்தெழுந்தெரிகிற வடவைத் தீயெனத்தக்க பசியுந் தாகமுங் கொடியவென்று கூறி, 'நீர் இடும் பணி யா'தென்ருன்.

"மீனவனே மதுரையுடன் எடுத்து விழுங்கி வருக!" என்றனர் சமணர். தானவனும் நன்றெனச் சென்றனன். அப் பாம்பசுரன் வானும் நிலனுந் தோயும் மெய்யுடனும், மெய்யிலுள்ள நஞ்சு ஊறிச் சொரிதுளே யெயிறுடனும், வடவை யனலென வெரி கண்களுடனும், மலேக்குகையென இருண்ட திறந்த வாயுடனும் மதுரை நாடி வந்தான். அவன் மெய்தோய்ந்த நிலம் குழிவிழுந்தது. அவன்

மூச்சுக்காற்றுப் பட்ட உயிர்கள் வெந்து சாம்பலாயின. விழியனல்பட்ட பயிர்கள் கரிந்தன. மரங்களின்மீதமர்ந் திருந்த கருடன் முதலான பறவைகளும் சுருண்டு விழுந் தின. மாநிலமக்கள் வெருண்டோடினர். ஞாயிறுந் திங்களும் நடுங்கின. எட்டுத் திக்கினுமுள்ள களிறுகள் கலங்கின. நாகாசுரன் வந்துவிட்டான் நகர மேல்வாயிலின் அருகே.

கண்ட மக்கள் கடிதோடிக் காவலனிடம் கூறினர்: "அரசே! நம் நகர மேலை வாயிலிலே முகிலுறங்கும் மதி லருகே ஒருபெரிய நச்சரவம் வந்துளது! அண்டங்களையும் அகிலத்தையும் ஒரே வாயிலிட வல்லது! நீண்ட வாயைத் திறந்துகொண்டு வருகிறது!"

மீனவன் அரவினைத் துணித்தான்—வெருவுமாறு நஞ்சு பரவியது

திங்கள் மரபிலே பிறந்த சீரிய வீரன் அஞ்சிலன். "முன்னர் யானையை வரவிட்ட கொடியவர் விட்டதே இதுவும்! இதனையும் அரவணிந்த செஞ்சடையண்ணலாரே ஒழித்தருளுவர்" என எண்ணித் திருவாலவாயார் திருமுன் சென்று சேவித்து வேண்டுகிறான்:

"எப்போதும்—வழிவழியாக—அடிமைபூண்டு மறவாமல் வழிபடும் அடியேன் நின் மொழிவழி அரசுபுரிவேன். இப் பழம்பெரும்பதியைச் சமணர் அழிக்கக் கருதினர். அவர்களால் விடப்பட்ட நாகம் வருகிறது. அதுவும் நின் அருள்வழியே அதன் உயிர் கழிவது கருதினேன் அருள்க!"

அண்ணலாரிடம் விடைபெற்று, அவர் மலரடியை அகத் திலே நிறுவி வெளிவந்தான் மீனவன். வில்லையும் அம்பையும் ஏந்தி விரைந்து மேலை மதில்வாயிலை அடைந்தான். மலையென வருகின்ற—அழல்பொழியும் விழியினையுடைய—அரவையுங் கண்டான்.

பல புள்ளிகளையுடைய பெரிய படத்தைப் பரப்பிப் பெரிய வாயைத் திறந்தது அப் பாம்பு. அப்போது கதிரவ

னொளி மறைந்தது; திசைகள் மறைந்தன; பிலம்போல இருண்டு காணப்பட்டது அதன் திறந்த வாய்; சீற்றத்துடன் நச்சுப்பல்லை அதுக்கிப் பெருமூச்சுவிட்டு நெருங்கியது அந்த அரவு.

கண்டான் அனந்தகுணன். இடியும் அஞ்ச ஆர்த்தான்; வில்லைவளைத்து நாணேறிட்டுக் கனலுமிழுங் கணைகள் பல விடுத்தான். அரவம் அவற்றையெலாந் துகள் படக் கறித்துமிழ்ந்தது; பாண்டியன் பொருமற் புர மெரித்த புண்ணியனார் திருவடியை வழிபட்டு, பிறைவாய்க் கணையொன்றைப் பேணி விடுத்தான். அக்கணை அரவின் உடலைத் துணித்தது. இடியெனக் கதறி வெள்ளம் போற் குருதியை உமிழ்ந்து, உடல் புரளத் துடித்து மடியும் அப் பாம்பு கொடிய ஆலகாலம்போலக் கரிய இருண்ட நஞ்சினை உமிழ்ந்தது.

அக்கொடிய நஞ்சு நகரெங்கும் இருளெனப் பரவியது. பூங்காவுங் கிணறுகளுங் குளங்களும் கூடங்களும் தெருக்களும் கடைத் தெருக்களும் அகழியும் மதிலும் அரண்மனையும்மாளிகைகளும் வீடுகளும் மேடைகளும் கோபுரங்களுமாகிய எங்கணும் பரந்தது. மக்களெல்லோரும் மயங்கி, நிலைதளர்ந்து, உடல் திமிர்ந்து, வியர்வை அரும்ப, பொறிபுலன்களுங் கரணங்களும் தடுமாறி, மொழி குழறி நாத்தழுதழுத்து, கோழை மேலோங்கி, உணர்வு கெட்டு, மயங்கி, மூச்சொடுங்கி, ஆவி அலைந்து ஊசலாடினார்கள்.

பாண்டியன் பதைபதைத்தான். திருக்கோயிலை யடைந்து இந்திரவிமானத்தின் முன்னர் விழுந்து பணிந்தெழுந்தான்.

"முன்னவரே! ஆதி முதல்வரே! வித்தின்றி முளைத்த மூலவிலிங்கரே! முடிவிலா முனிவரே! என்னவரே! அடியார்க்கெளியவரே! யார்க்கும் இறையவரே! இந்நகரின் தலைவரே! முக்கண்ணரே! அடிகளைச் சரணடைந்தேன். முன்னர் அலைதிமிர்ந்து பொங்கிவந்த கடலைத் தடுத்தீர்! ஏழு முகில்களையும் பொழியாமற் போக்கினீர்! துளைக்

கையால் விண்ணைத் துழாவி வெண்பிறைக் கோடுடன் வந்த களிற்றைக் கொன்றீர்! இவையெல்லாம் இந்நகரைக் காக்கவேயன்றோ? இப்பொழுதும் இக்கொடிய நஞ்சை மாற்றியருள்க!''

மதுரமாநகரம்

அருட்கடல், தமது திருச்சடையிலிருந்த அணிமதிக் கொழுந்தினிடமிருந்த அமுதிலிருந்து சிறிது தெளித்தருளினார். அது பாலில் பிறைபோல எங்கும் பரவிக் கலந்தது. நகருற்ற நஞ்சழிந்து மதுரமாநகராயது. இரவியின்முன் இருள்போலவும், இறையருள்முன் இருண்ட மலவலி போலவும் அக்கொடிய நஞ்சு வலியிழந்து போனதால் யாவரும் நினைவு பெற்றுக் களிப்படைந்தனர். பாண்டியனடைந்த மகிழ்ச்சி பகர்வதற்கெளிதோ?

"அருட்கடல் அனைய ஆதிநா யகன்றன் அவிர்சடை
அணிமதிக் கொழுந்தின்
பெருக்கடை அமுதத் தண்துளி சிறிது பிலிற்றினன்
பிலிற்றிட லோடும்
பொருக்கென எங்கும் பாலினில் பிரைபோல் புரையறக்
கலந்துபண் டுள்ள
திருக்கிளர் மதுரா நகரமாப் புனிதம் செய்ததச்
சிறுதுளி அம்மா.'' (உஉ)

"இரவிமுன் இருள தெனஇறை அருள்முன்
இருள்மல வலியென எங்கும்
பரவிய அமுதால் விடமகன் றவசப்
படிவொழிந்து யாவரும் இன்பம்
விரவிய களிப்பின் மேவினர் இருந்தார்
மீனவர் பெருந்தகை வேந்தன்
அரவணி சடையாற்கு அன்புருத் தானே
ஆகிமண் காவல்செய் திருந்தான்.'' (உங)

உகூ. மாயப்பசுவை வதைத்தல்

மாயப்பசு வந்தது

பெரிய படத்தையும் பிளந்த வாயையுமுடைய அரவினைப் பாண்டியன் துணித்தபின் சமணரெலாம் காற்றினாலே உந்தப்படும் முகிலெனக் கலைந்தோடினர். ஓடினவர் ஓரிடத்திலே கூடி, 'யானையும் பாம்பும் ஒழிந்தன. இனிச் செய்வதென்?' எனச் சூழ்ந்தனர். 'பழியஞ்சும் பாண்டியன் பசுவுக்குக் கேடு செய்யான். அதனை ஏவுவோம்,' என முடிவு செய்தனர்.

முன்போலவே பழிவேள்வி செய்தனர். அவர்கள் நினைத்தவாறே பசு வடிவுடன் வந்தான் ஓரவுணன். அவனை விடுத்தனர் ஆலவாயின்மேல்.

அந்த மாயப்பசு விடும் மூச்சுக் காற்றிலே எல்லா வுயிர்களும்—அசையாப்பொருள்களுங்கூட— பூளைப்பூப் போலச் சிதறியோடின. அதன் சீற்றக்கனலை நோக்க அழற்கடவுளின் அனல் குளிர்புனலையொப்பக் குளிர்ந்தது! புள்ளும் விலங்கும் அலறியோடின. செறிந்த காடுகளையும் குன்றுகளையும் மருப்பினாலே சிதற எறிந்து, எதிர்ப்பட்டோரைக் குத்தி வீழ்த்தி, இடியெனக் குமுறி மறலி யென வந்தது அப்பசு. வெற்றியுடன் அது மதுரையை நெருங்கி வருவதை மீனவன் அறிந்தான்.

மீனவன் வேண்டுகோள்

அரசனும் நகரப் பெரியோரும் ஆலவாயண்ணலின் திருமுன் சென்றனர்.

"இறைவரே! முறையோ! பொதுவிலே மாறியாடும் திருவடியாரே! முறையோ! எல்லா வுயிர்களுக்கும் அறிவூட்டும் அறிவே! முறையோ! தூய—நிறைவான—பழைய—மறைப்பொருளே! முறையோ!" என்று முறையிட்டனர்.

காளை யெதிர்ந்தது

அவர்களுக் கருளுக்கமளித்த அண்ணலார் தம் ஊர்தி யூன காளையை விளித்துப் 'பசுவை வென்று வருவாயாக,' என்றனர்.

இந்த அடலேறு கதையேந்திய காலனும் நடுங்கக் கண்ணுகிய வேள்விக் குண்டங் கனல, நாவானது நாசியைத் துழாவக், கடைவாய் நுரை சோர எழுந்தது. அதன் நெற்றி யிலே ஓடையொளிர்ந்தது. வளைந்த கொம்பிலே செம்மணிப் பூண் நாகஞ்சுற்றிக் கிடந்தாலெனத் தோற்றமளித்தது. முதுகிலே சிவந்த மணிப்போர்வை வெள்ளைக்கடலீன்ற கதிரவன்போலக் காணப்பெற்றது. மற்றும் கொம்பிலே கட்டப் பெற்ற குஞ்சம் பிறைமதி பொழியும் நிலவென விளங்கியது. நெற்றியிலே முத்து வடம் பொலிந்தது. பின்னற் சதங்கை கல்லென வொலித்தது. கழுத்திலே வீரமணி வீறிட்டது. முத்துத் தண்டை பிப்பலமாலை முதலியவைகளும் ஆர்த்தன.

மாயப் பசு மாய்ந்தது—இடபக்குன்று

அது தன் அடியிட்டு நிலத்தைக் கிளறிப் புழுதி யெழுப்பியது: கொம்பினுலே குத்திக் கிளறியது; இடியெனக் குமுறியது; மேகமென நிழலிட்டு வெள்ளிமலையென நடந்தது; ஆவை யணுகியது. வடக்கது தெற்காகவும், தெற்கது வடக் காகவும், கிழக்கது மேற்காகவும், மேற்கது கிழக்காகவும் நினைக்கும்படி– பொறி கலங்கும்படி—பசுவைக் குத்தியெடுத்துத் தள்ளியது! திக்குகளில் வீசியது! மலைச்சிகரங்களில் எற்றியது! மரச் செறிவுகளிலே—கடலிலே—எடுத்தெறிந்தது. எனினும் தாக்கிக் கொல்லவில்லை! இவ்வாறு விளையாடியது! அதனை முடிக்கவேண்டுமே! அக் காளை யொன்றைக் கருத்திற் கொண்டது. கறுத்து வந்த மாயப்பசு காமுறும் வண்ணங் கட்டழகைக் காட்டிநின்றது. பசுவுங் காமுற்றது! காமத்தினுலே கனிந்துருகி உயிரை விட்டது! அதனுடல் மலையுருவமாயிற்று.

பாண்டியனும் பாண்டிமக்களுங் களிப்புற்றனர். சமணர்கள் வருந்தித் தலைகவிழ்ந்து சென்றனர். இடபம் உலகறி சான்றாகத் தானும் ஒரு குன்றாகத் தன் மெய்யை நிறுத்தி நுண்ணுடலுடன் சென்று தண்ணிதழியாரை வணங்கியது. அண்ணலார் அதனைப் பண்டுபோலாக அருள்புரிந்தார். நகர மக்களும் அரசனும் இறைவரையும் நந்தியையும் வணங்கிச் சென்றனர்.

இராமன் வழிபாடு

இராமன் பகைவனை வெல்ல இலங்கைக் கேகும்போது அந்த விடைவரையின்மீது தங்கினான். அவன் வரவையறிந்த அகத்தியர் சென்று, வணங்கிய மன்னனுக்கு மதுரையின் பெருமையை வகுத்துரைத்தார். தசரதன் மைந்தன் விம்மித மடைந்து தலைமீது குவித்த கையுடன் திருக்கோயிலை யடைந்தான். பொற்றாமரை வாவியிற் படிந்து திருமுன் அடைந்து வணங்கிச் சைவாகம முறைப்படி வழிபட்டான்.

"புங்கவரே! சீவன்முத்தி புரத்தவரே! தூய இன்ப மங்கல மெவற்றினுக்கும் பற்றான வடிவமுடைய சங்கரரே! அடிகள் வீற்றிருந்தருளும் நகரங்களிலே வியத்தகும் இந்த மதுரையே சிறப்புடையதென்பது எதனால்? நின் திருவிளை யாடலால், இந்த இடபக்குன்றும் பசுமலையுந் தோன்றி விளங்குவ தனாலன்றோ? மேலும், கண்ட அளவிலே துன்பங்களைக் களைவதற்கும், அரும்பெருஞ் செல்வங்க ளளித்தற்கும், தாங்கள் உறைவதனாலே இந்த இலிங்கத்தினுக் கொப்பு முண்டோ! மற்றும், நீராடும்போது முன்னம் முடித்துவைத்த பழவினைத் தொகுதியைப் பற்றறுத்து, மங்கல வின்பம் நல்கும் இந்தப் பொற்றாமரை வாவியினும் மாண்புற்ற வாவிக ளுண்டோ? எந்தத் திருப்பதிகளினும் ஒவ்வொன்று சிறந் திருக்கும். இந்தத் தலத்திலே மூவகைச் சிறப்பும் உள்ளன. ஆதலால், இங்கடைந்தோர் உள்ளத் தூய்மையுடன் பல்வகைப் பேறும் பெறுகின்றனர். ஆகையால், அடியனேன் நினைத்துச் செல்லும் வேலையும் முடியும்படி அருள்புரிக!" என்று வேண்டினான்.

வானொலி வாயிலாக மங்கைபங்கர் திருவாய்மலர்ந்தார் :

"கதிரவன் மரபில் வந்த காகுத்தனே! இந்நகருக்குத் தென்கீழ்த் திசையிலே கடலிலே சேதுவைக் கட்டி இலங்கையை அடைக! கள்ளனான இராவணனைக் கொன்று, சீதையைச் சிறைமீட்டு வருக! அயோத்தியை அடைந்து நீண்டநாள் அரசுபுரிக! பிறகு பண்டுபோல் வைகுந்தம் அடைக! கவலை வேண்டாம்."

அவ்வாறே, இறைவரை வணங்கிச் சென்ற இராமன் அரக்கனை முடித்துத் தன் காதல் மனைவியுடன் திரும்பி வருகையில், இராமேச்சுரம் அமைத்து வழிபட்டு, வான் பிறை முடியாரருள்பெற்றுப் பழியை விட்டான். பின்னர், மதுரையடைந்து வணங்கிச் சென்று தன் வளநகரான அயோத்தியடைந்து அரசாண்டான்.

அனந்தகுணபாண்டியன் தன் மகன் குலபூடணனுக்கு முடிசூட்டி ஈறிலாத சிவனாடி நீழலைச் சேர்ந்தான்.

"கண்ட எல்லையில் துன்பங்கள் களைதற்கும் அளவைக்
கண்ட ரும்பெருஞ் செல்வங்கள் அளித்தற்குங் கருணை
கொண்டு நீயுறை சிறப்பினால் குளிர்மதிக் கண்ணி
அண்ட வாணஇவ் இலிங்கத்துக்கு ஒப்புவே றுமோ." (௯0)

"தோய்ந்தி டும்பொழுது திட்டிய தொல்வினைப் படலம்
மாய்ந் தியம்படி மாய்த்துநின் மங்கல போகம்
ஈந்தி டும்படிக் கிருந்தமா தீர்த்தத்தின் இயல்பை
ஆய்ந்திடும் பொழுது அதற்கொரு தீர்த்தம்ஒப் பாமோ," (௯௧)

"எத்த லத்தினும் ஒவ்வொன்று விழுமிதாம் இந்த
மெய்த்த லத்தில்இம் மூவகை விழுப்பமும் விளங்கும்
அத்த ஆதலால் இத்தலம் அடைந்தவர் எவர்க்கும்
சித்த சுத்தியும் பல்வகைச் சித்தியும் பயக்கும்." (௯௨)

"செங்கோல் அனந்த குணமீனவன் தேயம் காப்பக்
கொங்கோடு அவிழ்தார்க் குணபூடணன் தன்னை ஈன்று
பொங்கோத ஞாலப் பொறைமற்றவன் பாலி றக்கி
எங்கோன் அருளால் சிவமாநகர் ஏறி னானே." (௯௩)

---

௯௦. மெய்க்காட்டிட்டது

சவுந்தர சாமந்தன்

குலபூடணன் காலத்திலே அவனுக்குச் சவுந்தர சாமந்தன் எனும் படைத்தலைவ னொருவனிருந்தான். அவன் செஞ்சடை முடியண்ணலார் அடியவரே சிவமாக வழிபடுங் கடப்பாட்டினன்; பாண்டியனுக்குப் பண்புடைய நற்றுணைவன்.

அக்காலத்திலே விறல்மிக்க வேடர்தலைவனுகச் சேதிராய னென்பானிருந்தான். அவன் பலவகையினும் படையை வலிமைபெறச் செய்துகொண்டு தென்னவன் மேற் படை யெடுக்கச் சூழ்ந்து வந்தான். அதனைப் பாண்டிய னறிந்தான்.

தன் படைத்தலைவனுன சவுந்தரசாமந்தனை அழைத்துப் படையைப் பெருக்க ஏவினுன். பொன்னறை திறந்து பொருட் குவை ஆற்றவும் நல்கிப் புதிய படைவீரர்க் களிக்கக் கூறினுன்

பொருள் செல்லும் வழி

பொருளைக் கண்டான் சாமந்தன். புலித்தோலாடை யணிந்த பெருமானுர் அன்பு முன்னிழுக்க, பாண்டியன் பணி பின்னிருத்து தள்ள, தளராத பொருட்குவையைத் தன்னுளங் கொண்டமட்டும் வாரிச்சென்ருன். திருக்கோயிலைச் சார்ந்தான். பொற்ருமரைக் குளத்திலே முழுகினுன். தன் உள்ளத்திலே நிறைந்த உண்மையன்பு முளைத்தெழுந்ததைப் போன்றுள்ள மூல இலிங்கத்தைப்—பண்ணிறைந்த மறைப் பொருளைப்— பணிந்தான்.

"பண்ணியன்ற நான்மறை விரித்த பரம்பொருளே! எம் மன்னவன் எண்ணிய பணியை முடிக்க வேண்டுகிறேன். இப் பொருளெல்லாம் அடிகளுக்கும் அடிகளின் அடியவர்க்கும் ஆகத்தக்கவை.''

அப் பொருளையெலாம் சிவனுர்க்கும் அவரடியவர்க்குமே ஆக்கினுன். வானளாவிய கோபுரங் கட்டினுன். ஆயிரக்கால்

மண்டபம் அமைத்தான். வயிரமணித் தோளணியும் கண்டிகையும் குண்டலமும் முத்துக் குடைகளும் கொடிகளும் செய்தான். அந்தணர்க்கும் துறவிகட்கும் அறுசுவை யுண்டிக்காவன செய்தான்.

"எவரேனும் உருத்திரசா தனங்கண்டா லெதிர்வணங்கி
அவரேநம் பிறப்பறுக்க வடிவெடுத்த அரனென்று
கவராத அன்புள்ளங் கசிந்தொழுக வருச்சித்துச்
சுவையாறி னமுதருத்தி யெஞ்சியஇன் சுவைதெரிவான்."

இவ்வாறு இன்றைக்கு ஆயிரம், நாளைக்கு இருமடங்கு, வருநாட்கும், அன்றைக்கன் றிருமடங்காக அரசனது பொருளையெல்லாம் கொன்றைச் சடையார்க்கும் அடியார்க்குங் கொடுத்தான். அதனை ஒற்றர் அரசனுக்கறிவித்தனர். சாமந்தன் உணர்ந்து விரைந்து அரசவையடைந்தான். வினைஞரோடு கலந்து, வேற்றுப் புலத்துள்ள வீரர்கட்குப் பொருளளித்துச், சேவகம் பதிய ஓலை விடுத்தழைப்பான் போலப், பொய்யோலை செலவிடுத்தான்.

"ஓலைகளைத் தெலுங்கர்க் கெழுதுக! கலிங்கர்க் கெழுதுக! விராடர்க் கெழுதுக! மராடர்க் கெழுதுக! கொங்கர்க் கெழுதுக! வங்கர்க் கெழுதுக! துருக்கர்க் கெழுதுக!" என்றெல்லாம் எழுத்தாளர்க்குக் கட்டளை யிட்டான். ஆறுதிங்கள் கடந்தன. போர்வீரர்கள் வரவில்லை. தென்னவன் தன் படைத்தலைவனை யழைத்து, 'நாளை வெய்யவன் படுமுன் படை வீரர்களைக் கொணர்க!' என்று ஆணையிட்டான். சாமந்தன் இசைந்து சோம சுந்தரர் கோயிலையடைந்தான். பரமனுரடிமலரிலே பணிந்தான்.

"வள்ளலே! செழியன் பொருளையெலாம் ஏற்றுப் பணிகொண்டீர்கள். இனிப், படை திரட்டும் வகையெப்படி?"

அடியவர் குறைதீர்ப்பதே கடனெனக்கொண்ட கண்ணுதலார்—காமனைக் காய்ந்தவர்—அருளாலே தெய்வமொழி யொன்று வானிலே யெழுந்தது:

"நம்மைச் சூழப் படைகளோடும் நாளை நாம் வருவோம். நீயும் நன்குறங்கிப் பாண்டியனவைக்கு வருக!"

சாமந்தன் களிப்புவெள்ளத்திலே முழுகினன். கதிரவனும் முந்நீர் வெள்ளத்திலே முழுகினன். மீனவன் காணவேண்டி விரிசடையண்ணலார் தம் அடியவரை வேலேந்திய மறவராக்கித் தாமும் ஒரு வீரராகிக் கூத்தாடுவதற்கு விட்ட நீலநிறத் திரை போலக் கரிய இருள் எங்கும் பரவியது.

படைத்தலைவன் தன் இல்லமடைந்தான். எப்போது விடியுமென்று துயிலாதே நாழிகை யெண்ணி யெண்ணி—வானிலே மீன்களை நோக்கி நோக்கி—அண்ணல் குதிரை வீரனாக வருங் கோலங்காணக் காத்திருந்தான். இரவு வெள்ளம் மெல்ல வடிந்தது. பரஞ்சுடர் அடியவ னொருவனுக்காக ஒரு வடிவங் கொண்டுவரும் அருட்கோலத்தை—அருட்படை யெழுச்சியைக் காணவேண்டி வந்தான் போலக் கதிரவனும் வெளிவந்தான்.

அருட்படையெழுச்சி—குதிரைவீரன்

வீரர்தலைவன் எழுந்து திருக்கோயிலை யடைந்தான். சேவுகைத்த சேவகரை வணங்கினன். கைகூப்பி வேண்டினன். அரசவையை அடைந்தான்.

அந்நிலையிலே ஆலவாயரனு ரருளாலே சங்குகன்னன் முதலான சிவகணங்களும் குண்டோதரனை முன்னிட்ட பூதகணங்களுங் கூடி வீரராயினர், அவர்கள் கைகளிலே வேலும் வாளுங் குந்தமும் உலக்கையும் ஆழியும் மழுவும் வில்லும் முதலான பதினெண் படைகளும் ஒளிவீசின. அவர்கள் கால்களிலே வீரக் கழல்கள் விளங்கின.

நந்தி, மாகாளன், பிருங்கி, நிகும்பன், கும்போதரன் முதலானோர் கவசமணிந்து திருநீறணிந்து வடிவாளேந்திக் குதிரைவீரராய்க் குழுமினர். கற்றைச் சாமரைகளும் பிச்சங்களுங் கவிகைகளும் பூங்கொடிகளுமாக எங்கும் நிரம்பின. முரசுகளதிர்ந்தன. விடையைப் பரியாக்கி,

மாறியாடிய கூத்தனர், தாமுங் குதிரை வீரரானர். பல வகை இயங்கள் இயம்பின. புரவிகள் கலித்தன. இடியும் மழுங்க வீரர்கள் தெழித்தனர். இவ் வொலிகளெலாம் ஒன்றுகூடி முற்காலத்திலே மதுரைமீது கடல் சீறி வந்ததைப் போன்றிருந்தது!

படைவீரர் வருகையைப் பார்த்தான் சாமந்தன். பரபரப்புடன் சென்று பாண்டியனிடம் பகர்ந்தான். அவன் மகிழ்ச்சிபொங்க அவைக்களமடைந்து பொன்னும் மணியும் பொதிந்த அரியணைமீது அமர்ந்தான். வீரர்களை நோக்கி விம்மிதமடைந்தான். பகையை வென்றேமெனத் தெளிந்தான். அவர்களை எவ்வெந் நாட்டாரென விளக்கும்படி சாமந்தனை ஏவினன். சாமந்தன் அவர்களெதிரே நின்று பிரம்பினாலே மெய்யைச் சுட்டிக்காட்டிக் கூறினன்.

''ஐய! இவர் கொங்கர், இவர் குருநாடர், இவர் கங்கர், இவர் கருநாடர், இவர் அங்கர், இவர் ஆரியர், இவர் வங்கர். இவர் மாளவர், இவர் குலிங்கர், இவர் கொங்கணவர், இவர் தெலுங்கர், இவர் சிங்களவர், இவர் கலிங்கர், இவர் கவுடர், இவர் ஒட்டியர், இவர் கொல்லர், இவர் கூர்ச்சரர், இவர் பல்லர், இவர் பப்பரர், இவர் வில்லர், இவர் விதேகர், இவர் கடாரர், இவர் கேகயர், இவர் மாகதர், இவர் மராடர், இவர் காஞ்சியர், இவர் நம் நாட்டவர்.''

இவ்வாறு மெய்க்காட்டிட்டவுடன், 'இத்தகைய—தொலைவிலுள்ள—நாட்டினரை யெவ்வாறு கொணர்ந்தா யென்று வினவுதல் வேண்டாம். நின் அரும்பொருளனைத்தும் வரையாதளித்ததனால் வந்தவர்களிவர்கள்!' என்றான் சாமந்தன். அவன் மகிழ்ச்சிக்குமளவுண்டோ?

மகிழ்வினாலே தன்னைமறந்த மன்னன் அப் படை வீரர்களிலே தொலைவிலே பரிமீதமர்ந்து நிற்கும் ஒற்றைவீரரை நோக்கி, 'அவர் யார்?' என்று வினவினன். சாமந்தன் வணக்கத்துடன், 'அடியேன் இவ்வளவு வீரர்களில் யாரென்றறிவேன்?' என்றான்.

"அவரை யிங்கழைத்து வருக!"

அவரும் அங்கு வந்தார்.

காவலன் களிப்புடன் நவமணிக்கலன்களும் பொன்னுடைகளும் நல்கினான். சாமந்தன் அன்பிற்கட்டுண்ட பரமனார் அவற்றை யேற்றணிந்து மற்ற வீரர்க்கும் அளித்தார். பிறகு, தம் குதிரையைத் தூண்டி, ஐங்கதிகளையும் நடத்திக் காட்டித் தம் படைக்கடலுட் புகுந்தார்.

அந் நிலையிலே ஒற்றனொருவன் ஓடிவந்து தென்னவனை வணங்கிச், 'சேதிராயன் வேட்டைக்குச் சென்று புலி வாய்ப்பட்டிறந்தான்,' என்று இயம்பினான். செழியன் சிந்தை மகிழ்ந்து, சாமந்தனை நோக்கி, 'மெய்க்காட்டுத் தந்த இப் படை வீரரைத் தத்தம் நாடுபுக நவில்க!' என்றியம்பி அளவில்லாத பொருள்க ளளித்தான்.

சவுந்தரசாமந்தன் படைவீரர்களை நோக்கி நின்றான். பரமனார் நின்ற நிலையிலேயே தம் கணங்களுடன் மறைந்தார். பொருநைத் தலைவன் அக் காட்சியைக் கண்டு திகைத்தான். கருத்திலே ஐயங்கொண்டான். 'இச் செயல் நங்கூடலிறைவர் அருள்போலும்,' என்று எண்ணிக் கண்ணீர் ததும்ப மெய்ம்மயிர் சிலிர்க்க அன்புருவமாகினான். தன் படைத்தலைவனை நோக்கி 'உனக்கெளி வந்தார் கூடலுடைய நாயகரே யென்றால்—எனக்கவராவாய் நீயே', என்று தழுவிக்களித்தான். அவனுக்குப் பல்வகைச் சிறப்பும் பொருளும் நல்கி மனமொன்றி வாழ்ந்தான்.

கண்டனன் பொருநை நாடன் வியந்தனன் கருத்தா சங்கை
கொண்டனன் குறித்து நோக்கி ஈதுநம் கூடல் மேய
அண்டர்தம் பெருமான் செய்த ஆடலென் றெண்ணிக் கண்ணீர்
விண்டனன் புளகம் போர்ப்ப மெய்யன்பு வடிவம் ஆனான்." (சுO)

௫௧. உலவாக்கிழி அருளியது

குலபூடணன் தவறு —வறுமை—அவன் வேண்டுகோள்

வள்ளலாகிய குலபூடணன் திங்கள்கிழமை தொட்டுச் சிவபுண்ணியங்களைத் தவருது நோற்ருன். அச் செருக்கினுலே அறவோரை மறந்தான். சிவமறை பயிலுந் திருவினரைப் புறக்கணித்தான். ஆகவே, மழை மாறியது; நாடெங்கும் விளைவு குன்றியது; அறவோர் அறவே வறியராயினர்; மறை நூலு மிழந்தனர்; ஐம்புல வேள்வியும் அற்றன. அவர்களெல் லோரும் பசியால் மெலிந்து வெளி நாடு சென்றனர். குடிக ளெலாம் வயிறெட்டி வாடிமடியத் தொடங்கினர்.

கண்டான் கன்னிநாட்டுக் காவலன். காரணமறியாது கலங்கினுன். திங்கள்கிழமையிலே பொற்ருமரையிலே நீராடிப் புழைக்கையுடைய சித்திக்களிற்றை வழிபட்டுச்சென்று, அங்கயற் கண்ணியாரையும் அண்ணலாரையும் மலரிட்டு வணங்கி வாழ்த்தி நின்ருன்.

''தலைவரே! உலகுயிர்க்கெலாம் உயிராவீரல்லீரோ? அவ்வுயிர்களெலாம் பசியால் வாடுவது காணீரோ? அடி யேன் அவ்வுயிர்களின் அல்லல் காணவல்லேனே? யான் சேர்த்துவைத்த செல்வமெலாம் அறத்தின்வழியே சென்றது! இனி அடிகளின் திருவுள்ளந் திரும்பி இவ்விடுக்கணைப் போக்கியருளவேண்டும்!''

அரசன் வேண்டுகோளை யறிந்தும் அறியாதவர்போல வாளாவிருந்தனர் மங்கைபங்கர்.

கனவிற் சித்தர்—உலவாக்கிழி

வருத்தத்துடன் அரண்மனைக்குச் சென்ருன் தென்னவன். அங்கே வெள்ளியம்பலவரை உள்ளத்திருத்தித் தரைமீது—விரிப்பொன்றுமின்றித்—துயின்ருன். அப்போது, அவன் கனவிலே அங்கணவர் சித்தராயெழுந்தருளினர். அவருடைய சங்கக்குழையையுந் திருவெண்ணீற்றையுஞ் சரிகோவணத்தை

யும் சிங்கநாதமென்னும் வாச்சியம் ஏற்ற திருமார்பையுஞ் செழியன் கண்டு கைகுவித்தான். சித்தர் திருவாய்மலர்ந்து செப்புவார்:

"வேம்பணிந்த மீனவனே! எம்மிடம் எப்போதும் வாடாத அன்புடையாய்! உலகைத் தீமைநீக்கிக் கோடாத செங்கோலாற் காக்குங் கொற்றவனே! உன்னிடம் ஒரு குறையுளது- அறவோரைக் காவாதுவிட்டனை! மேலும், மறையை மறந்தனை. மறையே நமக்குத் தக்க இருக்கையும் பாதுகையும் ஊர்தியும் வீரக்கழலும் உடையும் விழியும் மொழியும் வடிவமுமாகும்! இம் மட்டுமோ? மறையே நம் ஆணையாகிய சத்தியின் வடிவம். விதிவிலக்கை விளக்கி, அறிவருளி, நிலைநிறுத்தி, இன்பமூட்டிப், பலவுயிர்களையும் வேறுபடுத்தி நோக்கும் பிணியை அவிழ்த்து, வீட்டையுந் தரவல்லது! வண்டு முரலும் மலர்மார்பனே! அதுவே நமக்குச் செங்கோல்.

ஆகவே, அந்த மறையை வளர்க்கும் மறையவரை—அறவோராகிய அந்தணரை—மறந்தாய். அதனாலே, வேள்வி குன்றியது; மழையும் மறுத்தது! அறவோரை வழிபடுவதே நம்மை வழிபடுவதாகும். அவரை நம்மைப்போலவே எண்ணி வேண்டுவ யாவும் மேன்மேலும் அளித்து வழிபடுக! அம் முறையிலே நின் ஆட்சியை வளர்த்து வருக!

இதோ இந்த உலவாக்கிழியைப் பார்! எவ்வளவு எடுத்தாலும்—எத்துணைமுறை யெடுத்தாலும்—நாம் அளித்த அளவிலிருந்து குறைவுருது. இதனைக்கொண்டு வற்கடத்தை மாற்றுக!"

சித்தர் உலவாக்கிழியையும் திருவெண்ணீற்றையும் நல்கி யருளி மறைந்தனர்.

காவலன் கனவிலிருந்து விழித்தெழுந்தான். கனவிற் கண்ட பொருள் தவருமலே நனவிலும் இருக்கக்கண்டு கைகுவித்துத் தொழுதான். கண்ணுதலார் திருவடியை, உலவாக்கிழியைத் திருமுடிமேல் வைத்துக்கொண்டு—மகிழ்ச்சி

பொங்க—மெய்ம்மறந்து—மூன்றரை நாழிகைப்போது கூத்தாடினுன். பிறகு, அமைச்சர் முதலானேரை யழைப்பித்துக் கங்கை முடியாரருளைக் காட்டினுன்; கூறினுன்.

விடிந்தவுடன், அக் கிழியை அரிசுமந்த அணையின்மீது வைத்தான். சங்கும் மறைகளும் முழங்கச் சந்தனந் தெளித்து, மலர்மாலை யணிவித்துப் *பத்துவகை வழிபாடு மியற்றி, †ஐவகை மணமும் ஆக்கி, நெய்விளக்கேந்திக் களிறுரி யணிந்த பரமனுராகவே கருதி வழிபாடு செய்தான்.

பிறகு, வணங்கி, வலம்வந்தான். கிழியை அவிழ்த்து எடுத்தான். அந்தணர்க்கும் வேள்விக்கும் யாவர்க்கும் வரையாது நாடொறும் வழங்கினுன். வழங்க வழங்கக் குறையாமல் மெய்யின்ப வீட்டைப்போலாயிற்று அந்தப் பொதி. அரசன் அப் பொதியிலே விளையும் பொன்னுலே அப் பாண்டிநாட்டுப் பசிப்பிணியை அறவே அகற்றினுன். அதனேடு அமையாமல், இந்திரவிமானத்தைப் பொன்னுலே அசும்பிடும்படி வேய்ந்தான். திருக்கோயிலெங்கும் அழகுற ஆக்கினுன். அறுகாற் பீடிகை, பெரியகோபுரவாயில் முதலியன அழகுற அணிந்தான்.

இவ்வாறு, அவன் தெய்வ அறப்பயிர் விளைத்துவர வானமும் பெருகிப் பெய்து கன்னிநாடு பலவளனும் பெற்றது. ஆகவே வியாகரணரும், நையாயிகரும், மறையவரும், மறைமுடிவாராய்வோரும், ஆகமநூல் வல்லோரும், சிவனுர் புகழைச் செப்புவோரும் குறைவின்றிப்பெருகி அளகைமாநகர் போலாகியது மதுரையம்பதி.

———

*பத்துவகை வழிபாடு: ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புட்பதானம் என்பவை.

†ஐவகை விரை (மணம்): சந்தனம், அகில், கருப்பூரம், கத்தூரி, குங்குமம் என்பவை.

ருஉ. வளையல் விற்றல்

தாருவன முனிவர் மனைவியர் நிறையளத்தல்

முன்னொரு காலத்திலே காமனைக் காய்ந்த கண்ணுதலார் கபாலமேந்திய கையராகத் தாருவனத்திலே முனிவர் மனைகளிலே உணவேற்பவர்போல எழுந்தருளினார். மறையாகிய கோவணம்—மெய்யிலே வெண்ணீறு—உள்ளாளப் பண்ணிசைக்குங் கனிவாய்—புன்முறுவல்—கிண்கிணி சூழ்ந்த மலரடி—மலரடியிலே பாதுகை—பலிகொள் கலம்—இவற்றுடன் காமவேளனைய கட்டழகு—இதுவே எம்பிரானார் கோலம்.

தாமரைமலரனைய சேவடிசூழ்ந்த கிண்கிணியினொலியுந் திருமிடற்றிலே யெழுந் தெய்வப்பண்ணினொலியுங் கைத்துடியினொலியும் ஒன்றுகூடிக், காற்றிலே தவழ்ந்து, காதுகளின் வழியே உள்ளத்திலே பரவித், தாருவனமுனிவர் மனைவியரைப் பரபரப்படையச் செய்தன. தம்மை மறந்து, அந்த இசையிலே யீடுபட்டுக், கையிலேந்திய வுணவுடன், யாவரும் வாயிலிலே வந்து நின்றனர்.

பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளம்போல வந்த பாவையர் ஐயருடைய கலத்திலே ஐயத்தையிடுவதோடு நில்லாமற் கைவளைகளையுஞ் சோரவிட்டு நிற்பர். கருத்தின் நாணன்றிப் பொற்காசுகளாலான இடைநாணையும் இழப்பர். காமவேளின் அம்பே (கணையே) அன்றித் தம் கண்ணம்பும் (கண்ணீரும்) தம் மார்பிலே சொரியச் சோர்வார்.

மங்கையர்: எங்கள் வளையினைத் தாரும்! ஐயரே!

இறைவர்: அது நும் கழுத்திலுள்ளது காண்பீர்! (வளை-சங்கு)

மங்கையர்: அந்தோ! எங்கள் கலையினை யளிப்பீர்! (ஆடை)

இறைவர் : கலை உங்கள் முகத்திலுளதே! (முழுமதி)

மங்கையர் : இடையறிந் தெம்மைச் சேரீரோ! (வேளை)

இறைவர் : உங்களுக் கிடையேது? (மருங்குல்)

மங்கையர் : அங்ஙனமேல், எங்களுடைய முன்னைய நிலையை அளித்து வீட்டிற் புக விடையளிமின்! (செலவு)

இறைவர் : எம் விடை பாற்கடலிலே பள்ளிகொண்டுளதே! (இடபம் - திருமால்)

மங்கையர் : இந்தக் கபாலிக்கு 'நடு' இலையோ? (சமநோக்கு)

இறைவர் : உங்களுக்கே 'நடு' இல்லை. (இடை)

மங்கையர் : நீர் கங்கை சுமந்தது ஏன்? (கங்கையாறு)

இறைவர் : உங்களிடம் உணவு ஏற்க. (கம் - தலை : கபாலம்; கையிலே கபாலமேந்தல்)

மங்கையர் : கந்தரம் கறுத்தது ஏன்? (கழுத்து)

இறைவர் : மழை பொழிய. (மேகம்)

மங்கையர் : உத்தரம் எது? (விடை)

இறைவர் : தெற்கிலிருந்து நோக்குதிர்! (வடக்கு)

மங்கையர் இறைவர் கண்களிலே தம் உருவை நோக்கி, 'இக் கொடியார்போற் கண்ணுள் எம்மையும் இருத்திர்', என்று வேண்டினர். பரமனுர் நகைத்து, 'உங்கள் கண்களிலே நீவிர் விரும்பிய ஆடவர் இருத்தலை நோக்குமின்!' என்றுர்.

முனிவர் மனைவியரெல்லோரும் கைகுவிப்பர்; காலில் வீழ்ந்து வணங்குவர்; தழுவ நெருங்குவர்; கைக் ககப் படாமையாற் கலங்குவர். 'ஐயரே! நீவிர் எம்மைத் தழுவ விரும்பீரேல் நெகிழ்ந்த ஆடையினை யுடுத்திவிடுமின்!

கழன்ற வளையல்களைக் கையிலிடுமின்! எங்கள் முனிவர் சீறி வருத்துவரே!' என வேண்டுவர். அவர்கட்கெல்லாம் அண்ணலார் 'நாளை யிடுதும்,' என்று விடையளித்து மறைந்தனர்.

பிள்ளைத் திங்களணிந்த பெம்மானுர் கொண்டுபோன நாணத்தையும் உள்ளத்தையும் மீட்கலாற்ருராக வருந்தினுர் அம் மாதரெல்லோரும். உடைசோர வளைகழல மெய் வெளுத்து நின்ற அரிவையரை அவர்தங் கணவர்கள் கண்டனர். கால மூன்றையுங் கணித்தறியும் அவர்கள் நிகழ்ந்ததை உள்ளவாறுணர்ந்தனர்.

''நீங்கள் கருத்திழந்தீர்கள். கூடன்மாநகரிலே வணிகப் பெண்களாய்ப் பிறப்பீர்களாக!''

முனிவர்கள் தம் மனைவியர்க்குச் சாபமிட்டனர். அவர்கள் கலங்கி, 'இச் சாபம் அகல்வதெப்போது?' என வினவினர்.

''அந்த ஆலவாயிலமர்ந்த சோமசுந்தரக்கடவுள் வந்து நும்மைக் கைதீண்டும்போது கழியும்.''

வணிக மகளிர்—வளையல் விற்றல்

முனிவர் மனைவியரெல்லோரும் நான்மாடக் கூடலிலே வணிக மங்கையராய்ப் பிறந்தனர்; மங்கைப் பருவமும் பெற்றனர்.

சோமசுந்தரர் கங்கையை மறைத்தார்; கறை மிடற்றை மறைத்தார்; நுதல்விழியை மறைத்தார்; மங்கைபங்கை மறைத்தார்; மானை மறைத்தார்; மழுவை மறைத்தார்—வளையல் வணிகராகித் திருமாலும் அறியாத சேவடி நீள்மாட மதுரைத் தெருவிலேபட நடந்து வந்தார்.

முன்னுளிலே முனிவர் மனைவியரிடமிருந்து கவர்ந்த வளையல்களையே அவர்கட்கு மீள இடுவார்போல—அடியார் தொடுத்தணிந்த ஐவகை நிற மலர்போல—வளை

யல்கள் சுமந்த தோளினராய் வருகின்றார். மறை பகர்ந்த மணிவாய் திறந்து, 'வளையலோ வளையல்!' என்று வளை பகர்ந்தார்.

முகிலின் இனிய இசை கேட்ட மயில்போல, மின்னும் மணிமேகலை மிழற்றத் தூய வணிக மங்கையரெல்லோரும் மாளிகைகளிலிருந்து வாயிலில் வந்து நின்றனர். வளையிடு வார் போலத் தங்களுள்ளத்தை யெல்லாந் தளையிடவருந் தாணுவைக் கண்டனர். அவருடைய பேரழகை வியப்பொடு நோக்கித் தேனிலே விழுந்த வண்டெனத் திகைத்தனர். காதல் கொண்டனர். நால்வகைப் பண்பும் ஒரு மருங்கு தடுக்கக் காதலொருபுற மிழுக்கக் கலங்கினர்.

மேகலையுஞ் சிலம்பும் குழையுந் தொடியுங் கண்டிகையும் அணிந்திருப்பினும் அவர்கட்கு வளையலில்லாமை அழகில்லாமை போன்றிருந்தது. ஆகவே, அவர்கள், 'வணிகரே! எங்கள் செங்கைக்கேற்ற நல்ல வளையலைத் தெரிந்து இடுமின்!' என வந்து சூழ்ந்து செங்கை நீட்டினர்.

வளையலிட்டார்—மையலிட்டார்

பண்ணென மிழற்றும் அங்கயற்கண் ணம்மையாரின் தளிர்க்கைபற்றிய திருக்கைகளாலே வணிகமகளிர் தஞ் செங்கைபற்றிப் பலநிற வளையல்களையும் இட்டார் இறை வனார்! வளையலுடன் மையலையும் ஏற்றனர் மங்கையர். அவர்கள் தமக்கிட்ட வளையலை யுடைத்துவிட்டு, மீளவும் வந்து, 'எங்களுக்கு வளையலிடவில்லையே! இடுமின்!' என்று கைகளையும் காதலையும் நீட்டுவார்கள். ஒவ்வொருவரும், 'எமக்கிடும்! எமக்கிடும்!' எனப் பின்பற்றிச் சென்றனர், அவர் களுடைய நாணம் முதலிய நான்கும் நீங்கின.

காதலால் மெலிந்த காரிகையர் தமக்கிட்ட வளையல்கள் கழன்று விழ ஓடிவந்து, 'வேறு வளையிடுமின்,' என்பர். அவ் வளையுங் கழன்றுவிழ மறுமுறையும் வருவர். இவ்வாறு பல முறையும் பலரும் வந்து பேதுறுவர்.

"என் இஃது! இட்ட வளையலுடன் கலையும் சரிகின்றதே!" வேலனைய கண்ணினர் மின்னென நுடங்கி நின்றனர்.

"இந்த வளைபோல வேறு வளை கண்டிலேம். வணிகரே! இவை எங்குள்ளவை? கையிலிட்ட அளவிலே இனிமையூட்டி மெய்புளகமெழச் செய்கின்றன இவை! நாளைக்கும் வருவீரா? இதோ விலையினைப் பெற்றுக் கொள்மின்."

"வாள் விழியினீர்! நாளை வாங்கிக் கொள்வோம்," என்று கூறி யிறைவர் சென்றார்.

வணிகமாதரேயன்றி மதுரையெலாம் மங்கைபங்கரைக் கண்டது

சென்றவர் மின்னல்போல வணிக மங்கையரும் மற்றவருங் காண விண்ணிழி விமானத்திலே கொண்ட திருவுருவுடன் காட்சியளித்தார். கண்டவர்களெல்லோரும், 'வணிகராக வந்தவர் கூடல் வள்ளலாரே!' என மகிழ்ந்தனர். அவர்களுடைய உள்ளத்திற் பெருகி மகிழ்ச்சி வெள்ளத்திலெழுந்த குமிழிபோலக் கண்களிலே நீர் ததும்பியது.

அண்ணலார் தம் திருக்கையாலே தொடப்பெற்றமையாலே வணிகமகளிரெல்லோருங் கருவடைந்து காளையரைப் பெற்றனர். அம்மாதரெல்லோரும் அண்ணலார் திருவடியைத் தொழுது வாழ்ந்து மாறுதலிலாத பேரின்ப வாழ்வு பெற்றனர்.

———

௩௩. அட்டமாசித்தி அருளல்

கார்த்திகை மாதர்—பாறையாதல்

முன்னொரு காலத்திலே கயிலைவரையின் அருகிலே, பெரியதான ஓராலமர நிழலிலே சிவபரம்பொருள் வீற்றிருந்தார். அவருக்கு இடப்பக்கத்திலே வெள்ளிமலையினருகே பச்சைமலை யிருப்பதுபோல மலையரையன் மகளார் எழுந்தருளித் தம் மலர்க்கைகளாலே வெள்ளிலைச் சுருளை யிறைவர்க் களித்துக்கொண்டிருந்தார். இவ்வாறு தம் காதலியாரோடு வீற்றிருந்தவாறே பிருங்கி நந்தி முதலான பெருங்கணத்தவர்க்கும் சனகன் முதலான நால்வர்க்கும் கேட்கக்கேட்க அமுதூறி யினிக்குஞ் சிவ கதைகளைச் செப்பியருளியிருந்தார்.

அந் நிலையிலே ஆறுமுகப் பெருமானுர்க்குப் பால் கொடுத்த கார்த்திகைப் பெண்களான இயக்கமாதர் அறுவரும் திருவெண்ணீ றணிந்த மெய்யராய்க் கண்டிகை யணிந்த கழுத்தினராய்ச் சைவக் கோலத்துடன் வந்து குன்றவில்லாரை வணங்கினுர்கள். வணங்கி நின்று, 'எந்தையே! எங்களுக்கு எட்டுச் சித்திகளும் வேண்டும்', என்று வேண்டினர்.

அந்திவண்ணர், தம் அருகிருக்கும் அம்மையாரைச் சுட்டிக் காட்டி, "மலர்ந்த பசும்பொன் கொம்புபோன்ற மங்கையாகிய இவளே எங்கும் நிறைந்து பராசத்தியாகி—மகேசையாகி யிருப்பவள். எட்டுச் சித்திகளும் இவட்குக் குற்றேவல் செய்யுஞ் சிலதியராம். நீங்கள் இவளை வழிபட்டால் முன்னைய வினைகள் நீங்கி எட்டுச் சித்தியும் பெறுவீர்கள் !" என்று கூறிச் சித்தி யெட்டையுந் தெளிவாகக் கூறியருளினுர்.

இயக்க மங்கையர் முன்னைய வினையினுலே அண்ணலாரருளிய சித்திகளை மறந்துவிட்டனர்! பிறைமுடித்த பேரருளார் அவர்களை முனிந்து நோக்கி, 'நீங்கள் பட்ட மங்கை யென்னுமிடத்திலே ஆலமர நீழலிலே மருட்பாறை யாய்க் கிடமின்" என்றனர்.

அப் பெண்கள் நடுங்கி வணங்கி, 'அடிகளே! இந்தச் சாபம் கழிவது எப்போது?' என வேண்டினர்.

''கருங்கல்லாக ஆயிரம் யாண்டு கிடந்தீர்களானால், யாம் மதுரையினின்று போந்து, உங்களைப் பற்றிய சாபத்தை நீக்கிப் பழைய வுருவை நல்கி அட்ட சித்தியையும் விளக்குவோம்' என்றார் எம்மிறைவர்.

மங்கையர் அறுவரும் பட்டமங்கையிலே ஆலின் அடியிலே பாறையாகினர். ஒளிமிக்க அணிகலன்களைப் போல ஆலம்பழங்கள் அப் பாறைகளின்மேல் உதிர்ந்து மூடிக்கிடந்தன. ஆயிரம் யாண்டுகள் கழிந்தன. எந்தையார் திருவுளந் திரும்பியது.

அருட்குரவர்—எட்டுச் சித்தி

தாம் விரும்பியவாறு அருட்குரவனாராகக் கற்பாறையாய்க் கிடக்குங் காரிகையர் முன் எழுந்தருளி, அம் மாதர் தம் வினைகெட அருட்கண்களால் நோக்கினார். அடிகளின் நோக்கத்தால் அப் பாறையிலே தாமரைமலரும் நெய்தலுங் காந்தளும் முல்லையுங் குமுதமும் பூத்தனபோலப் பாவையர் தோன்றினர். அவர்களைப் பற்றிய பழவினை—பரிசவேதியினாலே இரும்பு பொன்னாவதுபோல—நீங்கித் தூயராயினர் அம் மாதர்கள்.

அப்போது அன்புவெள்ளம் பொறையாகிய கரையைக் கடந்து இறைவரருட்கடலிலே பாய்ந்தது. அவர்கள் எழுந்து, அண்ணலா ரடியிலே பணிந்து நின்றனர். அவர்கள் முடிமீது இறைவர்தம் அங்கைமலர் சூட்டினார். எட்டுச்சித்தியும் இனிதாக அவர்களறிவிலேபட விளக்கியருளினார்.

எட்டுச் சித்தியாவன:—அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

(க) அணிமா:—மிக நுண்ணிய வுயிர்தொறும் அவ் வுயிரினுஞ் சிறிய அணுவாய்ச் சென்றுறைவது.

(உ) மகிமா :—கடல் சூழ்ந்த உலகமுதலாகச் சிவாந்த மீருகக் கூறப்படும் பன்னிரண்டினும் உள்ளும் புறமும் அகலாதே நிறையும் பெருமை.

(ங) இலகிமா :—மேருவைப்போல் திண்மையாயிருக்கக் கூடிய யோகியை யெடுத்தாற் பரமாணுவைப்போல மென்மையா யிருத்தல்.

(ச) கரிமா :—மென்மையாயிருக்கக்கூடிய பரமாணுவைப் போன்ற யோகி மேருவைப்போலத் திண்மையாயிருத்தல்.

(ரு) பிராத்தி :—பிலத்திலிருப்பேன் அயனுலகையடைந்து திரும்பவும் பிலத்தினையடைதல்.

(சா) பிராகாமியம் :—கூடுவிட்டுக் கூடு பாய்தல், வானிலே உலாவுதல், தான் விரும்பியவற்றை இருந்த இடத்திற்கே வரவழைத்தல் (வேறுசிலர் ஞாயிறு தன் ஒளியாலே உலகை விளக்குதல் போலத் தன் மெய்யின் ஒளியாலே மண்ணிலுள்ள பொருள்களையும், முக்காலத்தையும் வான் பொருள்களையும் அறிதல் பிராகாமியம் என்பர்.)

(எ) ஈசத்துவம் :—ஈசனென முத்தொழிலையுந் தன் விருப்பப்படியே செய்து, ஒன்பதுகோள்களும் பணி கேட்ப வீற்றிருத்தல்.

(அ) விசித்துவம் :—அவுணரும் புள்ளும் விலங்கும் பூதமும் மனிதரும் எட்டுத்திக்குக்காவலரும் தன்வசமாகச் செய்தல்.

எம்மை யுணர்ந்த சிவயோகியர் இவற்றை விரும்பார். எனினும், அவரை அந்தச் சித்திகள் நிழல்போலடைந்து தம்மை உணர்த்தும்.

சோமசுந்தரனுர் இவ்வாறு கூறியருளிய எட்டுச்சித் தியையும் மலையரையன் மகளாரிடம் வைத்த அன்பினுலே நன்குபயின்று வான்வழியே சென்று கயிலையடைந்தனர் அந்தக் காரிகைய ரறுவரும்.

---

௩௪. விடையிலச்சினை இடுதல்

காடு வெட்டிய சோழன்

ஒற்றைமாமர நீழலார் உவந்திருக்குங் கச்சியைத் தலை நகராகக்கொண்டு காடு வெட்டிய சோழனென்பவன் ஆண்டு வந்தான். கச்சியைச் சூழ்ந்த காட்டை வெட்டி நகராக்கிய தாற் காடுவெட்டிய சோழனெனப் பெற்றான். அவன் உண்மையான சைவ அடியார்களிலே சிறந்தவன்.

மணங்கமழுங் கலவையை நீக்கி, மாண்புறு திரு வெண்ணீ றணிந்தவன். பொற்கலன்களைப் போக்கிப் புண்ணிய சிவகண்மணி மாலையைப் பூண்டவன்; மறைகளும் புராணங் களும் நிகழ்த்திடும் பரம்பொருள் கண்ணுதலே யெனவறிந்த உண்மை யறிவினன். சைவ புராண நூல்களை நாடொறும் அமுதெனத் தன்செவிகளிலே பொழியுங் கேள்வியன். முக்கட்பெருமானார் முப்புரத்தை முனிந்த பெருமானார்— மங்கையொரு பங்குடைப் பெருமானார்—பெருவானவர் பரவும் பெருமானார்—பாம்பணிந்த சொக்கப் பெருமானாருடைய திருவிளையாடலை விடாமற் செவியாலே முகந்து தேனும் பாலு முண்பவனானான்.

அவனுக்கு மதுரையிலே அங்கயற்கண் மங்கைபங்கர் திருமலரடி தொழுங் காதல்பொங்கியது. ‘என்று தொழு வேன் எங்கள் சொக்கரின் இணைமலர்த்தாள்!’ என்று நினைந்து, நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தான் அவ்வரசர் பெருமான்.

சித்தர் துணை—விடைக்குறி

ஒருநாள் அந்த நினைவுடனே இரவிலே துயில் கொண் டான். கனவிலே வெள்ளியம்பலவாணர் சித்தராக வந்து ‘மன்ன! உளங் கலங்கேல்; நீமட்டுந் தனித்து, உருவ மாற்றி, இன்றே வந்து எம்மை வழிபட்டுச் செல்லலாம்!’ என்று கூறி மறைந்தனர்.

வேந்தன் துயிலுணர்ந் தெழுந்தான். விம்மிதமடைந் தான். படைவீரரோ அமைச்சரோ மெய்க்காவலரோ யாவருமில்லாமல் ஒருவனே புரவிமீதமர்ந்து ஐந்தெழுத்தாகிய வாளும் சொக்கநாதரருட்டுணையுமாக மதுரையை நோக்கி வழிக் கொண்டான். கல்லும் வெப்பமும் நிறைந்த பல ஓடைகளும் ஆறுகளும் கரும்பும் நெல்லும் கமுகுந் தென்னையும் நிறைந்த —வழியைக் கடந்து வைகைக்கரை வந்தான்.

வைகையிலே வெள்ளம் பொங்கிக் கரையைக் குத்தி, மரங்களின் வேரைப் பறித்துக் கிளைகளை முறித்துத் தள்ளிக் கொண்டு சென்றது. அவ் வெள்ளத்தின் பெருமிதம் நோக்கிய செம்பியன் பெரிதுங் கலங்கினான். சொக்கநாதரைத் தொழ இடையூறுயிருக்கிறதேயென ஏங்கினான்.

“நெய்கலந்த அறுசுவையுண்டியைப் பொற்கலத்திலே யிட்டுண்ணப்போகும் போது கண்கலங்கவந்து விலக்குவாரைப் போலச் செய்கிறதே இவ் வெள்ளம்! இரவு நீங்கிப் பகலவன் வந்துவிட்டால் என்செய்வது! பாண்டியனேயன்றி வைகையும் பகையாயிற்றே!’’

வெள்ளத்தைப் பார்த்து வருந்திய சோழனுடைய மெலிவை நோக்கிக் கனவிலே வந்த சித்தர்வடிவாய்க் கண்ணு தலார் அருகிலே வந்துநின்றார். அவன் கலக்கம் நீங்க வெள்ளத்தை வடித்தார். அவனை யழைத்துக்கொண்டு வடக்குவாயிலைத் திறந்து சென்று, பலகாவலையுங் கடந்து தெருக்களை நீந்தி, ஆலவாயிலையடைந்து, பொற்றாமரைப் பொய்கையிலே சோழனை நீராடச் செய்தார். நீராடித் தூயனான சோழனைச் சோமசுந்தரர் திருமுன் அழைத்துச் சென்று வணங்கச் செய்தார். வெள்ளியம்பலவாணரையும் அங்கயற் கண் நங்கையாரையும் பணியச் செய்தார். சோழன் இன்ப வெள்ளத் தழுந்தினான்.

‘‘எண்ணியவற்றை எண்ணியவாறே அடியேன் பெற முடித்தருளினீர்! மறைகளுமறியா அங்கயற்கண்ணம்மை மணாளரே! நல்லோர் தமக்கு நான்மறைப்பொருளை நவில்

வோரே! வானத்தினின்று மிழிந்த விமானத்தி லெழுந் தருளிய சுந்தர விடங்கரே! வாழ்க! வாழ்க!! அடியனேன் முன்னெலெடுத்த உடல்களெல்லாம் வினைகளின் பொருட்டே யாகையால் அவ்வினைகளின் விளைவு இவ் வுடலேயாகும். இவ் வுடலொன்றே அடிகளின் திருவடிக் கடிமைபூண்டதாகை யால் எனக்குற்ற உடலாகும்.''

இவ்வாறு பலவுங்கூறி யிறைஞ்சினன்.

கடம்பவனச் சொக்கச்சித்தர் கனிவுடன் 'அரசனே! நீ போந்ததை மீனவன் அறிந்தாற் கெடுதியாம்,' எனக் கூறி அழைத்துக்கொண்டு உத்தரவாயிலாகப் போந்தார். வைகையின் வடகரையளவும் வந்து, அவன் நெற்றியிலே திருவெண்ணீற்றுக் காப்பணிந்து, 'உன்னுள்ளத்திலே நிறைந்த கருத்துக்கேற்ப மிகு துணையுண்டாகி வருக,' என்று வழிவிடுத்துத் திரும்பினர்.

பிறகு, காவலான திருக்கதவத்திலே விடைக்குறி யமைத்துத் திருக்கோவிலை மேவினர்.

இரவின் கரிய கையைக் குறைக்கக் கதிரவன் தன் ஒளிக்கதிர்களை வீசிப் புறம் போந்தான். சோமசுந்தரர் திருக் கோயிலைத் திறக்கும் பணியாளர் விடைக்குறி கண்டு ஐயுற்றனர். மற்றைய மூன்று வாயிலிலும் நோக்கினர். நேற்றிட்ட மீனக் குறி பிழையாமை கண்டனர். 'ஈதென்ன!' வென வியந்து நடுங்கி மீனவன்பாலோடினர்.

மீனவன் கலக்கம்—கனவிலே கண்ணுதலார்

''மன்னவபோற்றி! நாமிடும் கயற்குறியை வடவாயிலிலே மாற்றி விடைக்குறியிட்டவர் யாவரென்றறிய முடியவில்லை!'' என்று பணிந்தனர்.

வைகைநாடனும் அவர்களுடன் போந்து நோக்கினன். இத்தகைய வியப்பைக் கண்டிலேமென்று கலக்கத்துடன் அரண்மனை மீண்டான். அவன் அன்று பகலெல்லாம் உணவை

நீக்கி யிரவினும் உணவின்றித் தரைமீதே துயின்ருன். கறைமிடற்றண்ணலார் கனவிலே எழுந்தருளினுர்.

"ஆத்தி மாலையணிந்த சோழன்—உள்ளம் நிறைந்து வழிந்த அன்புடையவன்—கச்சியிலே காடெறிந்து நந் திருக்கோயிலைச் சீர்செய்தவன்—இங்குவந்து நம்மை வழிபட விரும்பினுன். அவனை இந்த வாயிலைத் திறந் தழைத்து வந்தோம். நம்மை வழிபட்டபிறகு மீளவும் வெளியே விடுத்துக் கதவைத் தாழிட்டு விடைக்குறியையும் பொறித் தோம்."

குலபூடணன் கலக்கம் நீங்கி விழித்தான். சோழன் அன்புடைமைகண்டு வியந்து நடுங்கினுன்; வியர்த்தான்; விம்மினுன்; பலவாற்ருனும் பரம்பொருளை வாழ்த்தினுன். அன்புக் கெளியராந் தன்மையை நினைக்குந்தோறும் விளையும் வியப்பு வெள்ளமும் இன்ப வெள்ளமுங் கொள்ளை கொள்ள அரண்மனைவிட்டு வெளியே வந்தான். அடியார்க் கெல்லாம் அண்ணலார் திருவிளையாடலை அகங்குழையத் தெளிவித்தான். கேட்டவரெல்லோரும் அவனைப்போலவே வியப்பினுலும் அன்பினுலும் விழுங்கப் பெற்றனர்.

குலபூடணன் தன் மகன் இராசேந்திரனுக்குத் தன் கோடாத செங்கோலையும் வெண்குடையையும் வெற்றி முடியையும் அளித்துக் கொன்றைமுடியாரின் திருவடி மலரைச் சூட்டிக்கொண்டு வானுடரசுரிமை பெற்றனன்.

"வந்து நம்மை வழிபட வேண்டினுன்
இந்த வாயி றிறந்தழைத் தின்னருள்
தந்து மீள விடுத்துப்பின் ருட்கொளீஇ
நந்த மால்விடை நாம்பொறித் தேமெனு." (உசு)

"அருளி னுனையந் தேற்றி யகன்றபின்
மருளி னீங்கி மலர்க்கண் விழித்தெழீஇ
வெருளி னுன்வெயர்த் தான்விம்மி னுன்பல
பொருளி னுற்றுதித் தான்குல பூடணன்." (உஎ)

———

௩௫. தண்ணீர்ப்பந்தர் வைத்தல்

சோழன் நினைவு—அரசசிங்கம்

இராசேந்திர பாண்டியன் காலத்திலே காடுவெட்டிய சோழன் வெளிப்படையாக வந்து சோமசுந்தரரை வணங்கிச் செல்ல விரும்பினான். அதற்குப் பாண்டியனுடைய நட்பைப் பெறவேண்டிக் கையுறை விடுத்தான். காவிரிநாடன் விடுத்த அணிமணிக் கலன்களையும் பொன்னுடைகளையும் பெற்ற பாண்டியன் தானும் அவ்வாறே கையுறைகள் விடுத்தான். சோழன் மாறன் நட்பை மேலும் மிகுதிப்படுத்த வெண்ணித் தன் காதல் மகளைப் பாண்டியனுக்குக் கொடுக்க வொப்பினான்.

இந்தச் சூழ்நிலையைப் பாண்டியன் தம்பியான அரச சிங்கன் என்பவன் அறிந்தான். கரவான நினைவுடன் காஞ்சிநகரை யடைந்தான். அவனைச் சோழன் தமர்கள் எதிர்கொண்டழைத்துச் சென்றனர். அரசசிங்கன் சோழனை வசப்படுத்தித் தன் தமையனுக் கெதிராகத் தூண்டினான். அவனும் அரசசிங்கனுக்குத் தன் மகளைக் கொடுத்து மருமகன் கருத்தின் வழியே இராசேந்திரன்மீது போர் தொடுத்தான். அவன் படை மதுரைக் கிரண்டியோசனை யெல்லையிலே வந்து தங்கியது.

பாண்டியன் வேண்டுகோள்—பரமனார் அருள்

ஒற்றரால் இதனை யுணர்ந்த செழியன் ஆலவா யண்ணல் திருமுன் சென்று பணிந்தான்:

"அடிகளின் திருவடியிலே அன்புடைய—அன்று நள்ளிர விலே தனியனாக வந்து தங்களை வழிபட்டுச் சென்ற—சோழன் என்னோடு நட்புக்கொள்ள விரும்பிக் கையுறை விடுத்தவன்—ஏனோ மாறுபட்டான். அறத்திற்குப் புறம்பான அவுணரின் முப்புரங்களையும் எரித்த தாங்கள்—அன்று அச் சோழனுக்கு அறவழியிலே துணைபுரிந்த தாங்கள்—இன்று அவனுடைய மறத்தினுக்குந் துணை புரிவீர்களோ?"

ஆலவாய் நம்பரருளாலே வான்மொழி யொன்றெழுந்தது.

"அரசே! நின்படை சிறியதே யெனினும் அஞ்சாமற் சோழன் பெரும்படையோடு போர்செய்க! வெற்றி நினக்காகச் செய்வோம்!"

இராசேந்திரன் களிப்புடன் கண்ணுதலாரைப் பன்முறை வீழ்ந்து வணங்கினன். தன் அரண்மனையடைந்து, இரவு கழிவதை யெதிர்நோக்கி யுறங்கினன்.

போர்—பாண்டியன் படைஞருக்குத் தண்ணீர்ப்பந்தர்

நீண்ட இரவு கழிய வானம்வெளுக்கு முன்னமே பாண்டியன் விழித்தான். காலைக்கடன்களை முடித்துக் கங்கை முடியாரை வழிபட்டான். படைகளைத் திரட்டிக்கொண்டு பகைப்புலத்தை யடைந்தான். கலையும் அறிவும் மிகுந்த பாண்டி நாட்டரசனுடைய சிறுபடை, அலைமோதும் கடலை நோக்கிச் செல்லும் ஆறுபோலச் சோழனுடைய பெரும்படையை எதிர்த்துச் சென்றது.

இடிபோல வெடித்த குரலினர்—காற்றினைப்போன்ற கடிய செலவினர்—தீயெனக் கொந்தளிக்குஞ் சீற்றத்தினர்—வீரநகையினர்—மான அணியினர்—சீற்றத்தாலே மடித்த வாயினர்—ஆக இரு படைவீரரும் கைகலந்தனர். நேரிமலைய வனான சோழன் படைவீரர்க்குப் பொதிகை மலையனான பாண்டியனின் நால்வகைப் படைகளும் ஒன்று ஆயிரமாக—விடையவர் அருளினலே—தோன்றின.

அப் போர்க்களத்திலே தேரொலியுங் குதிரை கனைக்குமொலியும் களிறுகள் பிளிறுமொலியும் போர்முரசுகள் கறங்குமொலியும் வீரர் ஆர்க்குமொலியும் ஒன்றுபட்டுக் கடலொலியுடன் கலந்தன.

வில் வீரர்களுடன் வில் வீரர்—வாள் வீரருடன் வாள் வீரர்—வேலாளிகளுடன் வேலாளிகள்—மல்லருடன் மல்லர்—யானை வீரருடன் யானை வீரர்—குதிரை வீரருடன் குதிரை வீரர்—என ஒருவரோ டொருவர் எதிர்ந்து போர் புரிந்தனர்.

சோழன் வீரர் பாண்டியன் படைஞர் விடும் கணையைத் தடுப்பர். வில்லைத் துணிப்பர். மார்பிலே புதையக் கணை செலுத்துவர். பாண்டியன் படைவீரர் சோழனுடைய வீரர்மேற் சோனைமாரியென அம்பு பொழிவர். எதிரிகள் விடுங்கணைக்குத் தப்பிநின்று தீக்கணைகளை யெதிரிகள் மேல் விட்டுக் கூவுவர்.

"தறிந்ததாள்! தகர்ந்த சென்னி! தரையுருண்ட வரையெனச்
செறிந்ததோள் சரிந்த! தேர் சிதைந்த! பல் படைக்கலம்
முறிந்த! யானை கையிரு முழங்கிவீழ்ந்த! செம்புனல்
பறிந்த! பாறு பாரிடங்கள் பைத்தகூளி மொய்த்தவே!"

இவ்வாறு போர் நடந்தது. நண்பகல் ஆயிற்று.

அக் காலம் வேனிற்காலம். கதிரவன் அரனுருடைய நுதற்கண்ணேபோலத் தீயைச் சொரிந்து நின்றான். ஆறுகளிலுங் குளங்குட்டைகளிலும் நீர் வறண்டது. நிலமேயன்றி வானும் வெந்து நின்றது.

மண்ணைப் பிளந்து வரைகளைப் பிளந்து எண்ணிக்கையின்றி நின்ற மரங்களெலாம் இலையுதிர்ந்து பிளந்து நின்றன. கதிரவன் கைகள் வானையும் பிளந்து காண்பவர் கண்களையும் பிளந்து வீசின.

ஆகையால், கானல் நீரும் வியர்வை நீருமன்றித் தூய நீரெங்குமில்லை. வெய்ய நிலத்திலே தோய்ந்த காற்றும் குளிர்ந்த நிலவுங்கூட வெம்மையடைந்தன.

தீயவரை யடைந்தோர் தீயவராவ தியல்பேயன்றோ?

அத்தகைய நண்பகலிலே போர்க்களத்தின் நிலை எப்படியிருக்கும்? மதமொழிந்து சீற்றமுஞ் செருக்குமிழந்து களிறுகளெல்லாஞ் சோர்ந்த நடையவாயின. ஊழிக்காற்றெனத் தாவியோடும் புரவிகளெல்லாம் இளைத்துத் தென்றல்போன்ற நடையவாயின. பேய்த்தேரின் மேற் சூறைக்காற்றாகிய பாகன் தூண்ட வேனிலரசன் ஏறியமர்ந்து வெப்பமாகிய படைகள் எய்ததனால் இரு

திறத்துப் படைகளும் பின்னிடைந்து நீர்வேட்கை சுடச் சோர்வுற்றன. வெப்பந் தாங்காமல்—இரக்கமற்ற கொடிய செல்வரிடம் சென்றிரப்பவர்போல வெப்பத்தை அள்ளி வீசும் கள்ளி நீழலிலே சிலரொதுங்கினர். தம்மினும் வறியவரிடம் சென்றிரப்பார்போலச் சிலர் இலைதீய்ந்து பட்ட மரநிழலி லும், சிலர் கொல்களிற்றின் நிழலிலும் சிலர் குதிரை களின் நிழலிலும் சிலர் கரிய பரிசையின் நிழலிலும் சிலர் வேறிடங் காணுமல் வானுலகு சென்ற வீரரின் நிலைக்களமான வீரக்கல்லின் நிழலிலும் சென்று நின்றனர்.

அப்போழ்திலே, எவ்வுயிர்க்கும் ஈன்ற அன்னை போல்வார்—துலைபோல யாவர்க்குஞ் சமநிலையில் நிற்கும் கூடலிறைவர்—தென்னவன் படைக்கு நடுவே மறைகளாகிய நான்கு கால்களாற் பரப்பப்பெற்ற தண்ணீர்ப்பந்த ரொன்றுடன் எழுந்தருளினர். திருவெண்ணீறணிந்த திருநுதல்—காதிலே நறுமணமலர்—திருவடியிலே ஒற்றைக் கிண்கிணி—கச்சினுலே கட்டுண்ட தோலுடை—கண்டோர் மனங்கவரும் இனிய புன்னகை கொண்ட முகம்—அருளின் அடையாளம்—ஆகிக் காணப்பெற்ருர். அருமறைப் பொருள்போலச் சிறப்புடைய தவக்கோலத்துடன் எழுந்தருளிய அண்ணலார் தமது திருச்சடைக் கங்கையை நிரப்பிய ஒரு வற்ருத புண்ணியச் சிரகத்தையேந்தி ஒவ்வொருவருக்கும் ஒருவராகத் தோன்றி நீரளித்து வேட்கையை நீக்கினுர்.

பாண்டியன் படைவீரர் பரமனுர் திருக்கையால் நீர் பருகிப் புதுவலி பெற்றுத் திகழ்ந்தனர். நீர்வேட்கை யகன்று போர்வேட்கை புகப்பெற்றனர். தும்பையணிந்து சோழன் படையிற் புகுந்து தளராது தாக்கினர். சோர்வடைந்திருந்த சோழன்படை கடலுடைந்தாற்போலக் கலங்கியோடியது. எனவே, வாகைவேய்ந்து வளவனையும் அவன் மருகனுன அரசசிங்கனையும் சிறைப்படுத்தினர்.

செழியன் தன்னிடஞ் சிறைப்பட்ட சோழனையுங் குலக்கோடரியான தம்பியையும் அழைத்துக்கொண்டு ஆலவாயரனுர் திருமுன் விடுத்து, 'எந்தையின் எண்ணம் யாதோ?' என்று வணங்கி நின்ருன்.

வான் மொழி, 'நீ அறவனல்லையோ? நின் கருத்துக் கிசைந்ததைச் செய்க!' என்றது இறைவனருளால்! பொருநைநாடன் பொன்னிநாடனைச் சிறையினின்றும் விடுவித்துப் பல படைக்களிறுகளும் பரிகளும் பைம்பூண்களும் நல்கி விடைகொடுத்தான். தன் தம்பிக்கும் அறவுரை பகர்ந்து செல்வமுஞ் சிறிது கொடுத்துச் செலுத்தினன். பின்னர்ப் பாண்டிநாட்டின் அன்னையாய்ப் பல வளமும் பெருக ஆண்டான்.

"அருமறை யகத்து ணின்றுங் கருந்தவ ராகி வேணிப்
பொருபுனல் பூரித் தாங்கோர் புண்ணியச் சிரகந் தாங்கி
ஒருவருக் கொன்றே யாகி யிலக்கருக் கிலக்க மாகித்
தருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர் தண்ணீர்த் தாகம்."
(௩௨)

"சுந்தரப் புத்தேள் வைத்த துறுமலர் வாசத் தெண்ணீர்ப்
பந்தர்புக் கடைந்து நன்னீர் பருகியெய்ப் பகல வாற்றல்
வந்தபின் செழியன் றன்னோர் வளவன்மே லேறிச் சீறி
அந்தமி லனிகஞ் சிந்தித் தும்பைவேய்ந் தடுபோர் செய்தார்."
(௩௩)

"கடலுடைந் தென்னப் பொன்னிக் காவலன் றானை சாய
மடலுடை வாகை வேய்ந்து வளவனை மருக னோடும்
மிடலுடைத் தறுகட் சேனை வீரர்வெங் கையாற் பற்றி
அடலுடைக் கன்னி நாடர்க் கரசன்முன் கொண்டு போந்தார்."
(௩௪)

"கொடுவந்த வளவன் றன்னைக் கோப்பெருஞ் செழியர் கோமான்
வடுவந்த தம்பி யோடு மாடநீள் கூடன் மேய
கடுவந்த மிடற்றூர் முன்போய் விடுத்தெந்தை கருத்தியா தென்ன
நடுவந்த விலயான் கேட்ப நாயக னிகழ்த்து மன்றே." (௩௫)

"அறவனீ யல்லை யோவுன் னகத்தினுக் கிசைந்த செய்கென்
றிறைவன தருளால் வானின் றெழுமொழி கேட்டு வையைத்
துறைவனு மறத்தி னுற்றூற் சோழனைச் சிலமால் யானை
மறைவயப் பரிபூண் மற்றும் வழங்கினன் விடுத்தான் பின்னர்."
(௩௬)

———

௩௬. இரசவாதஞ் செய்தல்

திருப்பூவணம்—பொன்னனையாள்

கொல்களிற்றையுடைய—பல்வேல் கடற்படையையுடைய பாண்டியன் செந்தமிழ் நாட்டிலே திருப்பூவணம் என்றொரு நகரமுள்ளது. வைகை தன் அழகிய அலைக்கைகளாலே பல மலர்களையும் இட்டுப் பணிய முப்புரமெரித்த முதல்வர், அந் நகரிலே எழுந்தருளியிருக்கிறார். அங்குள்ள இயங்குதிணையும் நிலைத்திணையுமான யாவும் இலிங்கமே யென எண்ணிக் கோள்களும், வானவர் தலைவரும் வழிபட்டனர் அந்நகரத்தை யெனில் அதன் சிறப்பை யென்னென்பது?

கிளிகள் மிழற்றும் பொழிலையுடைய திருப்பூவண இறைவர் திருக்கோயிலிலே திருத்தொண்டுபுரியும் பெண்களின் தவப் பேறு போன்றவள்—மலர்மணக்கோதையாள்—தெய்வப்பெண் போன்றவள்—வானவரும் மகிழ்ந்து நோக்கி மயங்கும் அழகுடையாள் — கடலமுது போன்றவள்—பொன்னனையா ளெனும் பொற்கொடியாளொருத்தி யிருந்தாள். அவள் யாழின் நரம்பிலே யெழும் ஏழிசைப் பாடலினும், கூத்துநூல் நவிலும் நடனத்தினும் பெண்மையினும் பிறவற்றினும் வான அரம்பை யரைப் போன்றனள். எனினும், அறநெறி செல்லும் வரம்பி னால் அவர்கட்கு மேற்பட்டவளாயினள்.

அவள் தன் அன்புறு தோழிகளுடன் வைகறையிலே யெழுந்து தூய நீரிலே முழுகி, உயிர்போன்ற நெற்றிக் கண்ணரை வழிபடுவாள். பிறகு, திருப்பூவணர் திருக்கோயிலை வலம்வந்து பணிந்து நூற்றெட்டுக் கரணமுடைய சுத்த நிருத்தமாடுவாள். வழிபாடு முடிந்ததும் இல்லத்திற்கு வந்து சிவனடியவரை வரவேற்றுப் பணிந்து அறுசுவை யுணவு படைப்பாள். மிகுந்ததையுண்பாள். இதுவே அவள் ஒழுகலாறு.

அரனார் திருவுரு அமைப்பதில் ஆர்வம்

இவள் அன்பை இவ்வுலகறியத் தெளிவிக்க விரும்பினார் இறைவர். அதற்காக அவளுள்ளத்திலே பொன்மலை வல்லியார் காதலரின் திருவுருவத்தைச் சமைக்கவேண்டு மென்ற காதலை யெழுப்பினார். அந்தக் காதலே வடிவாயினாள் அக் காரிகை. மழுமானேந்திய வள்ளலின் திருவுருவைக் கருவிலே சமைத்தாள். அதனளவுக்குப் பொன் சேர்க்கத் தொடங்கினாள். எனினும், சிறிதுபொருளுஞ் சேர்க்க வியல வில்லை. அவள் ஈட்டும் பொருளெலாம் இறைவனாரடியார்க்கு உண்டியளிப்பதிலேயே செலவழிந்து போகின்றது, சிறிதும் மிகவில்லை. எனவே, 'அடிகளின் வடிவு காண்பதெப்படி?' என்று, மீனவனுக்குப் பொற்கிழியளித்த விரிசடை யண்ணலாரை உன்னியுன்னி யுருகினாள். அவள் நினைவை அறிந்தனர் அருள் வள்ளலார்.

சித்தர் வருகை—இரசவாதம்

தூய நீறணிந்த மெய்யும், கட்டங்கந் தொட்ட கையும், யோக பட்டிகை கட்டிய இடையும், திருநீற்றுப் பையும், கோவணமிசை யுடையும், பவளச் செஞ்சடையுமாகச்—சித்தராகச்—சிவனா ரெழுந்தருளினார்.

பொன்னனையாள் மாளிகையிலே உணவுக்கு வரும் அடியார்களி லொருவராய் வந்து நுழைந்தார். எனினும், வேறு சிந்தையுடன் திருவமுதருந்தாமல், தனியிடத்திலே—மாளிகையின் புறக்கடையிலே—எழுந்தருளியிருந்தார்.

உணவுக்கு வந்தவரெல்லோரும உண்டகன்றனர். அடிச்சியர்கள் அவர்களோடு உண்டு செல்லாமல் ஓரிடத்திலே யெழுந்தருளியிருந்த சித்தரை வணங்கி, 'அமுது செய்ய எழுந்தருள்க!' என வேண்டினர். அவர், 'உங்கள் இறைவியை யிங்கழைமின்!' என்றனர்.

அவர்கள் தங்கள் தலைவியை அணுகி, 'அம்மையே! முக்கட்பெருமானின் அடியவரெலாம் உண்டு சென்றனர்.

ஓரடியார்—சித்தராகப்—புன்முறுவலுடன்—அரிய தோற்றத்துடன் எழுந்தருளியுள்ளார்,'' என்றனர்.

அணிகலன் பூத்த பூங்கொம்பெனப் பொன்னனையாள் அண்ணலார் திருமுன் சென்று வணங்கி, 'நல்வரவாகுக!' என வரவேற்றுத் திருவடியை நீர்கொண்டு விளக்கி மலரிட்டு வணங்கினாள். சித்தருடைய திருமேனி யழகைக் கண்டு வியந்தாள். 'எத்தவஞ் செய்தேன் இங்கெழுந்தருளுதற்கு!' என்று பலபடப் புகழ்ந்து கைகுவித்து நின்றாள். அத்தர் அன்புடன் நோக்கினார். அவருடைய அருணோக்கிலே யீடுபட்டு நின்றாள் அந்தப் பொன்னனையாள்.

"ஐயரே! உள்ளெழுந்தருள்க! தங்கள் திருவுளத்தினுக்கிசையச் செய்ய வேண்டிய பணியெலாஞ் செய்வேன்."

அவள் அன்பு நோக்கத்தை அங்கயல் நோக்கியார் மணாளன் நோக்கிப் புன்முறுவலுடன், 'மாவடுவைப்போன்ற விழியாய்! நீ சாலவும் பேரழகினை! எனினும், உன் கொடியிடை போலச் சிறிது வாட்டமும் அடைந்துளாய்! அதற்கென்ன நேர்ந்தது!' என வினவினார்.

பொன்னனையாள் வணக்கத்துடன், 'எளியேற்கு வேறொரு மெலிவும் இல்லை. எங்கள் இறைவர்—இதழியணிந்த திருமுடியார்—திருவுருச் சமைப்பதற்குக் கருவுருமட்டுஞ் செய்தேன். அதனை முடிப்பதற்குப் பொருளில்லை. வரும் பொருளெல்லாம் அடியார்க்கு உணவூட்டுவதிலேயே ஆய்விடுகிறது,' என்றாள்.

அருந்தத்தக்க அமுதனையாளின் அன்புச் சுவைகனிந்த மொழிகளைச் செவிமடுத்தார் சித்தர்.

"முருந்தனைய முறுவலாய்! செல்வமும் மெய்யும் இளமையும் நீர்க்குமிழியளவேனும் நிலையற்றன என்றறிந்தனை. உடன்வருவது அறமேயெனும் உண்மையுணர்ந்தாய்! அறத்தினுட் சிவபுண்ணியமே சிறந்தது—அதினுஞ் சிறந்தது சிவார்ச்சனை—அதினுஞ் சிறந்தது சிவனடியார் வழிபாடு—என அறிந்து செய்கின்றாய்! இம்மை மறுமைப் பயனடைந்தாய்!

உன் பெயர்க்கேற்றவாறு முடிவற்ற முதல்வனுர் திருவுருவைப் பொன்னுற் காணப்பெறுவாயாக! அதற்கு நின் மனையிடையிலே யுள்ள பித்தளை ஈயம் முதலாகப் பல கலன்களையுங் கொண்டு வருவாயாக !''

பொன்னனுள் பூரித்தாள்! ஈயம், செம்பு, இரும்பு, வெள்ளி முதலியவற்றையுங் கலப்புப் பொருள்களாகிய பித்தளை, வெண்கலம் (தாரம்) முதலானவற்றையுங் கொண்டுபோய்ச் சித்தர்முன் வைத்தாள்.

வைக்கப்பெற்ற வேறு வேருன உலோகங்களின்மீதுஞ் சிறிது திருநீற்றைத் தூவிக் கடைக்கணுற் பார்த்தருளினுர். அவளை நோக்கி, 'இதனை இன்றிரவிலே நெருப்பிலிட்டு எடுப்பின் பொன்னுகும்; அதனை அரனுர் திருவுருக் காக்குக!' என இயம்பினுர்.

அவள் அண்ணலாரை வணங்கி, 'அடிகள் இன்றிரவு தங்கி யிப்பணியை முடித்து, வைகறையிலே—பொழுது புலரு முன்—செல்லலாமே!' என வேண்டினுள். அங்கயற்கண் அம்மையாரைப் பிரியாத சோமசுந்தரர் அதற்கிசையாமல், 'யாம் மதுரைச் சித்தர்' என்றியம்பியருளி மறைந்தனர்.

பொன்னனையாள் வியந்து திடுக்கிட்டாள். 'வந்தவர் மதுரைச் சித்தரோ!—வெள்ளிமன்றிலே திருக்கூத்தாடும் விரைமலர்ச் சேவடியாரோ!' எனச் சிந்தித்துத் தெளிந்தாள். அவர் மறைந்ததனுலே சோர்வும், மனக்கவலையை மாற்றி யருளினுரேயென மகிழ்ச்சியுங் கொண்டு சித்தர் கூறியவாறு அவ்வுலோகங்களைத் தீயிலிட்டார்கள்.

அழலிலே பெய்தவுடன், 'மயக்கமாகிய மலவலி கெட்டுச் சிவனுர் திருவடி நீழலடைந்தவர் பெற்ற காட்சிபோல' நீக்கமுடியாத களங்கம் விலகிப் பொன்னுயின அவை அவற்றைக்கொண்டு கண்டனள் அரனுர் திருவுருவம்! அத் திருவுருவத்தின் அழகை யென்னென்றியம்ப வியலும்? அதன் அழகிலே ஈடுபட்ட பொன்னனையாள் 'அச்சோ! அழகிய பிரான்!' என அள்ளி முத்தமிட்டாள்.

"மழவிடை யணையான் மேனி வனப்பினை நோக்கி, 'அச்சோ!
அழகிய பிரானோ?' என்ன அள்ளிமுத் தங்கொண் டன்பிற்
பழகிய பரனை ஆறைப் பரிவினாற் பதிட்டை செய்து
விழவுதேர் நடாத்திச் சின்னாள் கழிந்தபின் வீடு பெற்றாள்."

அவள் பிரானுருடைய கவுளிலேயிட்ட கைநகக்குறியும், அவள் அழைத்த காரணக்குறியும் கொண்ட அத் திருவுருவிலே யாவர்க்கும் வீடுபேறு நல்கி வருகிறார் பரனார்.

"அருந்து நல்லமு தனையவ ளன்புதித் திக்கத்
திருந்து தேனென விரங்குசொற் செவிமடுத் தையர்
முருந்து மூரலாய் செல்வமெய் யிளமைநீர் மொக்குள்
இருந்த வெல்லையு கிலையில வென்பது துணிந்தாய்." (உ0)

"அதிக நல்லற விற்பதென் றறிந்தனை யறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்." (உக)

"மங்கை பாகரை மடந்தையு மிங்குநீர் வதிந்து
கங்குல் வாயமு தருந்தியிக் காரிய முடித்துப்
பொங்கு காரிருள் புலருமுன் போமெனப் புகன்றாள்
அங்க யற்கணா டனைப்பிரி யாரதற் கிசையார்." (உஉ)

"சிறந்த மாடநீண் மதுரையிற் சித்தர்யா மென்று
மறைந்து போயினார் மறைந்தபின் சித்தராய் வந்தார்
அறைந்த வார்கழ லலம்பிட வெள்ளிமன் றுடி
நிறைந்த பேரொளி யாயுறை கிருத்தரென் றறிந்தாள்." (உங)

———

ருஎ. சோழனை மடுவில் வீட்டியது

சுந்தரேச பாதசேகரன்

இராசபுரந்தரன் என்னும் பாண்டியன் பரனுர் திருவடிப் பேறு பெற்றுன். அவனுக்குப்பின் இராசேசன், இராசகம்பீரன், பாண்டிவங்கிச தீபன், புரந்தரசித்து, பாண்டிவங்கிச பதாகன், சுந்தரேச பாதசேகரன் என்போர் பரம்பரையாக அரசு புரிந்தனர். சுந்தரேச பாதசேகரன் கூடலடிகளின் திருவடியிலே சேர்ந்த சிந்தையன். கொலை வேலாலே பகைக்குறும்பைக் களைந்த வீரன். உலகமாகிய நற்பயிரை வளர்க்கும் ஒப்பிலாத் தலைவன்.

அவன் தன் படையைப் பத்துத் தேர்கள் — நூறு களிறுகள்—நூற்றுப்பத்துப் புரவிகள்—ஆயிரங் காலாட்க ளாகக் குறைத்தமைத்துக்கொண்டான். எஞ்சிய பொருள் களைக் கூடற்சிவனுரடித் தொண்டுக்கே யேற்பித்தான். திருக்கண்டிகை, முடிமுதலாங் கலன்களும், வானளாவுங் கோபுரங்களும் மாடங்களும் ஒளிவிடும்படி பன்மணிகளா லிழைத்தான். இவைபோன்ற திருப்பணிகளிலேயே ஈடு பட்டான்.

ஆயிரம் பரிக்கோர் சேவகன்

பாண்டியர்க்குப் பரம்பரைப் பகைவர் வளவர். இவன் காலத்திலே ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்னும் புனைபெய ருடைய ஒரு சோழனிருந்தான். அவன் இவனுடைய படைச் சிறுமையையறிந்து படையுடன் புறப்பட்டான். அவன் படை கடலெனப் பரவிச் சீறி வருவதை மீனவன் அறிந்து விரைந்து கூடலடிகளின் அடிகளே சரணென் றடைந்தான்.

'பொன்னனைய சடைமுடிப் புண்ணியரே! இந் நாட்டை அடிகளின் திருவடியாற்றலாலே அடியேன் ஆள்கிறேன் என்பதைச் சோழனறியான்போலும்! தன் ஆற்றலே

பெரிதென எண்ணித் தருக்கிப் பெரும்படையுடன் வஞ்சிசூடி வருகின்றனன்.'

நம்பர் நாவிளம்பாத மாற்றத்தாலே (வான் மொழியால்) நவில்கிருர் :

"பூவிற் சிறந்த வாகை நீயே புனைய நாம் பொருகிறோம்."

பொருநைத்துறைவன் முகம் தாமரைமலரெனக் களிப்பினாலே மலர்ந்தது. உள்ளத்திலே உமைபங்கர் திருவடிமலரைத் தழுவியவாறு வெளிவந்தான். ஒரு குதிரைமீதேறிப் படைஞர் சூழக் கொல்லிமலையான் படையை எதிர்த்துச் சென்றான்.

போர்—ஈறிலாப் பரிக்கோர் வீரர் !

சோழனுடைய கடலெனப் பரவிய படையின்முன் ஆறுபோலச் சென்ற செழியன் படை ஒன்று பத்தாகவும் நூறாகவும் வருவதுபோலக் — கடல்போலவே — வளவன் படைகட்குக் காணப்பெற்றது.

கூடற் பெருமானும் வேடப் பெருவீரராய் ஒரு பரிமீதூர்ந்து பாண்டியன் படையுடன் கலந்தார். மேருவை வளைத்துப் பாம்புநாண் பிணைத்து மணமிகுந் திருத்துழாய்க் கணையை இணைத்து முப்புரத்தையும் எரியெழச் சினத்த அண்ணலார் வேட்டுவவீரராக வரும் பேறு பெற்ற பாண்டியன் செய்த தவத்தின் சிறப்பென்னே!

இருளிலே திங்கள்போலக் காதிலே தந்தக் குழையும், இருளிலே விண்மீன்போல ஒளிவிடும் முத்துவடமும், இருளிலே வானவில்போல வெட்சிக்கண்ணியும், மயில் பீலியும், இருளைப்போக்கும் தந்தக் காப்பும் ஒளிவீசின. வானவர் பெயரைப் பண்டிருந்து காத்தற் கடையாளமான மிடற்றின் கருநிறம் உடலெங்கும் நிறைந்து கலந்தாற்போலக் கறுத்த மெய்யராய், வளவனுக்குக் கூற்றெனுமாறு கொல்வேலேந்தி யூழித்தீபோலக் காவிரி நாடன் காண நின்றார்.

வளவன் இவரைக் கண்டு வெகுண்டு, 'நீ யார்? என்னை யறிவையோ ?' என்ருன்.

'அறிவேன்! நீ ஆயிரம் பரிக்கோர் வீரன்! யானோ எண்ணிலாப் பரிக்கோர் வீரன்!'

அம் மொழி பேரிடிபோலச் சோழ னிரு செவிகளையுந் துளைத்தது. வேட்டுவவீரர் தம் வேலை, மின்னை நீட்டிச் செல்லும் முகிலென நீட்டித் தாவிச் சுழற்றி நெருங்கினுர். சென்னி அவர் வருங் கடுமை நோக்கி நடுங்கினுன். 'நாம் இனி இவ் வேலாலிறப்பதற் கையமில்லை!' என மயங்கிப் பின்வாங்கி ஓடினுன். வந்த வேடவீரர் அவ்வளவிலே மறைந்தார்.

செழியனுஞ்—சென்னியும்—மடுவில் வீழ்தல்

செழியன் அது கண்டான். நடுங்கியோடும் வளவனைத் துரத்தியவாறு பின் தொடர்ந்தான். ஓடுஞ் சோழன் ஒருமுறை திரும்பி நோக்கினுன். வேடுவரைக் காணுமல் மீனவனைக் கண்டான். அச்சம் விட்டுத் திரும்பினுன். செழியனே தன்னைச் சோழன் திருப்பிக்கொண்டதைக் கண்டு புறங்கொடுத்துத் தளர்ந்தோடினுன்! அவனைச் சோழன் முடுக்கினுன்.

பாண்டியன் தன் மதுரையை நோக்கி ஓடினுன்; காற்றினுலே முடுக்கப்பெற்ற கனல்போல ஓடும் மீனவன் மயங்கிய களிறே போல மடுவொன்றிலே வீழ்ந்தான்; வளவனும் வீழ்ந்தான். மதுரையின் மேலைத்திசையிலுள்ள கிடங்கில் வீழ்ந்த இருவரில் மீனவன் சோமசுந்தரரருளாலே நீந்தி வெளியேறினுன். சோழனே மடுவிலேயே மடிந்தான்.

வெளியேறிய சுந்தரேச பாதசேகரன் சோழனுடைய படைவீரர்களையும் பரிகளையுங் களிறுகளையுந் தேர்களையுங் கவர்ந்தான். மற்றும் அணிமணிப் பணிகளையும் துணி முதலானவற்றையுங் கொணர்ந்து கூடலிறைவர்க் கணி செய்தான்.

---

௩௫. உலவாக்கோட்டை அருளியது

அடியார்க்குநல்லான்

திருவெண்ணீறணிந்த மெய்யர்க்கு—தூய விடைக் கொடியார்க்கு—மறைமுடியென விளங்குங் கூடலிலே புகழ் பெற்ற உழவர் மரபிலே அடியார்க்குநல்லான் என வொருவ னிருந்தான். அவன் பெயரளவிலே நில்லாமல் அறத்திற்கும் புகழுக்குங்கூட நல்லானுனன்.

அவன் மனேவியும் அறத்திற் கருள் போன்றவள். கற்பிற்சிறந்து மனேயறம்புரியும் மாண்பினள். அவள் பெயரும் தருமசீலே யெனப் பண்புக்கேற்றவாறமைந்தது வியப்பே! எல்லாரும் அவளே நன்கு மதித்தனர். தன் கணவனுக்குப் பேரின்ப வீட்டிற்குத் துணேயாயினள் அவள்.

அடியார்க்கு நல்லான் தன் உழவுத் தொழிலிலே வரும் பொருளின் ஆறி லொருகடனே அரசனுக்களித்துவிட்டு மற்றவற்றை மனேயாளிடம் வழங்குவான். அவள் அவற்றை உணவாக்கியேந்தக் கறைமிடற்றண்ணலா ரடியவர்க்குக் கருத்துடன் படைப்பான்.

கூட்டங் கூட்டமாக அடியவர் வருவர். அறுவகைச் சுவை தழுவிய நால்வகை யுண்டியைப் போதும் போது மென்று விருப்புடன் உண்டு செல்வர். அடியார்க்குணவு நல்க நல்க மணற்கேணி தோண்டுந்தொறுஞ் சுரக்குமாறு போலச் செல்வம் பெருகியது. சிலவாண்டுகள் இவ்வாறே சென்றன.

வறுமையிற் செம்மை—சிவனுரிடம் வேண்டுகோள்!

எடுக்குந்தொறும் பெருகும் இத்தகைய செல்வங் குன்றினும் மனங்குன்ருனென்பதை மாநிலத்தார்க் கறிவிக்க மதுரேசர் மனங்கொண்டார். வளமிக்கவான கழனிகளெல்லாம் விளேவு குன்றின. அது கண்டும் உழவர் பெருந்தகை தன் பணி குன்ருமல் நடாத்த மனங்கொண்டு கடன்கொண்டு செய்துவந்தான். சில நாட்களிலே கடனுங்

கிட்டாமற்போயது. அவன் கொண்ட கொள்கை நிறை வேற வழியின்றித் திகைத்தான். கொடுக்கும் வள்ளலே விளைவையுங் கடன் கோடலையும் மாற்றித் தடுப்பாரெனில் அந்நிலையைத் தடுப்பார் வேறெவர்? கலங்கிய அடியார்க்கு நல்லான் தன்னுடம்பை யுணவின்றி வாட்டத் தொடங்கினன். 'பணிசெய்யா மெய்யாற் பயனென்?' எனப் பற்றினன் பட்டினியை. அடியார்க் குணவில்லையே யென அகம் புழுங்கினன். அவர்க் கூட்டியல்லது சிறிதும் உண்ணேனென ஒட்டினன். அவன் வாழ்க்கைத்துணைவியும் உடன் ஒட்டினள். இருவருஞ் சோர்வுற்றனர்.

'இறக்கும் மெய்யினாலே இனியும் பெறும்பே றுண்டோ? இந்நிலையை மேருவில்லார்க்கு விளம்பி உயிர் விடுவோம்,' என அறக்குன்றனையான் துணிந்து மனைவியொடும் கூடலிறைவர் திருமுன்சென்று வணங்கி யெழுந்தான்.

"வானோர் வாழ நஞ்சுண்ட வள்ளலே! அடிகளின் அடியார் வழிபாட்டுக்குத் தடையாக அடியேன் நன்செய் புன்செய்களும் விளைவின்றிக் கெட்டன. வேறு கடனுங் காணேன். கடன் கொடுக்கவல்லாரைக் காட்டுவீராக! இன்றேல், அறியாமை சூழ்ந்த இந்த மெய்ச்சுமையை மாற்றுவேன்!"

மறைமொழிந்த வள்ளலார் இரங்கி வான்மொழி வாயிலாக, "வேளாளர் தலைவனே! அஞ்சாதே! உன்மனையிலே இன்று செந்நெற் கோட்டையொன்று சேர்த்துளேம். அஃது எடுக்குந்தோறுங் குறையாதிருக்கும் எப்போதும். ஒவ்வொருநாளும் நீ அதற்குப் பூசனை யியற்றி வேண்டியவற்றை யெடுத்துக்கொள்க! அடியார்க் களித்து, மற்றோர்க்கும் வழங்குக! பிற்றை நாளிலே வீடுபேறு நல்குவோம்," என்று மொழிந்தருளினர்.

வேளாளன் கேட்டு வியப்பும் இன்பமும் அடைந்தான். மறையின் பயனை—வள்ளற்பெருந் தகையைப்—பன்முறை பணிந்து மனையை யடைந்தான். அங்கே முன்னாளிலே செய்து சேர்த்த தவப்பேறென எந்தையாரளித்த நெற்

கோட்டையைக் கண்டான். மனையாளுடன் அதனை நாடோறும் வழிபட்டான். அக் கோட்டை உணவுக்கும் மற்றைய பொருள்களின் விலைக்கும் வேண்டிய நெல்லை அளித்து வந்தது.

அவன் அதைப் பெற்றுத் தன் மனைவியுடன் சிவனடியார்க்கும் அறவழி நிற்போர்க்கும் தென்னாடருக்குந் தெய்வங்கட்கும் உறவினர்க்கும் விருந்தினர்க்கும் நட்டோர்க்கும் வான்முகிலென வழங்கி, நோயின்றி, வடதிசை யளகைத் தலைவனென வாழ்ந்தான். இறுதியிலே மனைவியொடும் உறவினரொடும் மலையரசன் மகளாரைப் பிரியாத சிவனுருவையடைந்து சிவநகர் சேர்ந்தான்.

"பொடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனித வேற்றுக்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கிணை யான கூடற்
படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழ வோரு ணல்லான்
அடியார்க்கு நல்லா னறத்திற்கும் புகழ்க்கு நல்லான்." (உ)

"பல்லே ருழவின் றொழில்பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லே ருழவன் கடன்கொண்டு மிகுந்த வெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வ மியற்றி யேந்த
அல்லேறு கண்ட னடியாரை யருத்து நீரான்." (ச)

"தொகைமாண்ட தொண்டர் சுவையாறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறு படுமுண்டி மறுத்த ருந்த
நகைமாண்ட வன்பின் றலையாயவ னல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணற்கேணியிற் பல்கு நாளின்." (கு)

"விடநல்கு சூலப் படையாய் கடன்வேறு காணேன்
கடனல்க வல்லார் தமைக்காட்டுதி காட்டி லாயேல்
மடனல்கு மிந்த வுடம்பின்சுமை யாற்று வேனென்
றுடனல்கு கற்புக் குரியாளொடும் வேண்டு மெல்லை." (கஉ)

"வானாறு சூடி தருகோட்டையை வைக றோறும்
பூநாறு சாந்தம் புகையொண்சுடர் கொண்ட ருச்சித்
தானாத செவ்வி யடிசிற்கு மதற்கு வேண்டும்
ஏனை கருவி விலைக் கும்மது நல்க வாங்கா." (கக)

---

௬௬. மாமனாக வந்து வழக்குரைத்தல்

தங்கை மகனைத் தன் மகனாகக் கொள்ளுதல்—தவம்

நான்மாடக்கூடல் நகரிலே வணிகரிலே சிறந்தவன் தனபதி. அவன் செல்வத்திலே திளைப்பவன். அவன் மனைவி சுசீலை. கற்பிலே சிறந்தவள். இருவரும் இனிதே இல்லறம் நடத்தினர். அவர்கள் வாழ்க்கையிலே அருமருந் தன்ன மகவிலாக் குறை வாட்டியது. அதைப் போக்கத் தனபதி தன் தங்கையின் சிறுவனை மகனாகக்கொண்டான். சுசீலை பேரன்புடன் வளர்த்தாள்.

தனபதி தன் காதலியிடம் உயிரையே வைத்திருந் தான். அதனுடன் தன் தங்கையிடம் அடிக்கடி பூசல் விளைவித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் இது முற்றியது; தங்கை மீறிவிட்டாள் :

''பெருமிதம் உனக்கேன் ? நீ பிள்ளைப் பேறற்ற பாவி! என் அருமை மகனாலன்றோ இம்மை மறுமைப் பயன்களை அடைவாய் !''

தனபதி நாணுற்றான். 'இப் பிறவியிலில்லையேனும் மறு பிறவியிலேனும் மகவு பெறுவேன்' என நினைந்து தவம்புரியத் தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்றான். அவன் தன் செல்வமெல்லாவற்றையும் அவன் தங்கை மகனுக்கே ஆக்கிச் சென்றான்.

தவத்திற்குச் சென்றவன் வரவு தாழ்த்தான். அதனை யுணர்ந்த தாயத்தார்கள் அவன் செல்வமெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டனர்.

தாயத்தார் வன்மை—கூடலிறைவரே புகல் !

விளைபுலன்களும் அடிமைகளும் அணிகலன்களும் வளமிக்க செல்வமும் வலிய தாயத்தார் கைக்கொண்டத னாலே வணிகன் தங்கை சிறகிழந்த பறவைபோலத்

தியங்கினுள். சார்பிலார்க்குச் சார்பாகுங் கூடலிறை வரைத் தன் மகனேடு புகலடைந்தாள். வானளாவிய இந்திரவிமானத்தி லெழுந்தருளியிருக்கும் சுந்தரரின் திருவடிகளிலே விழுந்து வணங்கினுள் ; கண்ணீர்விட்டழுது கலங்கினுள்:

''தம்பிரானுரே ! தாங்களே தந்தையுந்தாயும் எங்களுக்கு! என் தமையன் மகவிலாமையினுல் எவருமறிய என் மகனைத் தன் மகனுக்கினுன். தன் காணி வீடு செல்வமெல்லாம் அவனுக்கே அளித்துத் தவத்திற்குச் சென்ருன். தாயத்தார்கள் வல்வழக்காக அவற்றைத் தாங்களே கவர்ந்து கொண்டனர்! நான் ஒருத்தி தனியே உள்ளேன். இவன் ஒருவனே என் மகன். இவனே கருத்திலாச் சிறுவன். வேறு ஆதரவே யில்லை. அறவோர் காணும் அரும் பொருளே! தாங்கள் எங்கும் இருக்கிறீர்களே ! இதனை அறியீர்களோ?''

புவியிலே மறுமுறையும் விழுந்து பொருமினுள். சோர்வினுலே துவண்டு கிடந்த அவள் 'சிறுதுயில்' அடைந்தாள். மாறுகொண்ட வழக்கைத் தீர்க்கவல்லவர் ஐம்புலன்களும் ஒன்றுபட்ட அவள் கனவிலே மறையவராக எழுந்தருளினுர்.

''விடிந்தபிறகு தாயத்தோரை அரசனுணையாலே தடுத்து மன்றத்திற்குக் கொண்டு செல்க! யாம் அனைவரும் ஒப்புமாறு வந்து வழக்குத் தீர்த்துத் தருவோம். செல்க!''

வணிகமாது விழித்தெழுந்தாள் ; வியப்படைந்தாள். ''அறிவிலி யேதேதோ எண்ணிக் கெட்டேன். 'யாருமில்லார்க்குத் தெய்வந்துணை' யென்ப தறிந்தேன்,'' என்று பரனுரடியைப் பன்முறை பணிந்து மகனெடு மனையடைந்தாள். இனிதே துயின்ருள்.

வழக்கு

விடிந்தது. வணிகமங்கை எழுந்து வெள்ளிமன்றடைந்து வணங்கினுள். தாயத்தா ரிருப்படத்தைச் சார்ந்தாள்.

" அட்டில்வாய் நெருப்பிடேல்! ஓரடியிடேல்! அறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன் பலரும் கேட்க
இட்டனன் அரசனாணை! அறத்தவி சேறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட் டெங்கள் உரிப்பொருள் தந்து போமின்!"

"அடுப்பில் நெருப்பிடாதீர்கள்! ஓரடியும் எடுத்து வையாதீர்கள்! அறவழியிலன்றி வல்வழக்கால் வென்று செல்ல ஒவ்வேன். எல்லோருக்கும் அரசனாணை யிட்டேன். அறமன்றுக்கு வந்து பெரியோர் கூறுந் தீர்ப்பின்படி எங்கள் உரிமையைத் தந்து செல்லுங்கள்"

என்று கூறி மறித்தாள். கொடியவரான தாயத்தோர் அவளை வைது அடித்துத் தள்ளிவிட்டனர். மைந்தனுடன் அறநிலையத்திற்கோடி முறையோ என்றழுதாள். அவள் நிலையறிந்த ஆன்றோர்கள் ஏவலரை விடுத்தனர். அவர்கள் அவளோடு சென்று தாயத்தாரை மறித்துக் கூட்டி வந்தனர். அந்நிலையிலே அம்பலவாணர் தனபதிபோல உருமாறி யெழுந்தருளினர்.

மாமனாக வந்தார் மன்றுடியார்—வழக்குரைத்தார்

காதிலணிந்த மிகு விலைபெற்ற குழை விட்டுவிட் டொளிவீசிப் பிடருக்கணி செய்தது! தோளணி தோளிலே அமைந்து அழகு செய்தது! மாணிக்கமாலை மார்பிற் றவழ்ந்தது! நீலமணியமைத்த விரலாழி தாமரைமலரிலே அளி மொய்ப்பதுபோல ஒளி வீசியது.

கொடிய ஏறுபோலக் கைவீசிப் பெருமித நடையொடு வந்தார் வள்ளலார். அவர் முகம் தாயத்தாரை நோக்கும் போதெலாம் வாடிய தாமரைபோலும் மாறிடும்; மைந்தனை நோக்கும்போதெலாம் அன்பினாலே மலரும். அவையை அணுகினர்.

அணுகும்போதே,

'இங்கே அரசனில்லையோ? பெரியோர்களில்லையோ? வெற்றிக் கழலணிந்த வேந்தன் செங்கோல் கொடுங்கோ

லாயிற்ரே? குற்றமற்ற நூல்களை நுவன்ற தெய்வமு மில்லையோ? நல்லறமும் ஒளித்ததோ?'

என்று கழறியவாறே அறத்தவிசை அடைந்தார். தாயத்தார்கள் இந்தத் தனபதியை நோக்கினர்! வியந்தனர்! அவர்களுள்ளங் கலங்கியது! வெல்வோமென்ற எண்ணம் விட்டனர். 'வழக்கமில்லாத வழக்கால் வென்ருேமே!' என்று அக் கொடுவினையை நினைந்து வெட்கத்தினுலே விழுங்கப்பெற்றனர்.

மாமனாக வந்த பெருமானார் மருகனையுந் தங்கையை யுந் தழுவிக்கொண்டு தம் மிடற்றிலுள்ள சாமவேதம் பாடுவார்போலத் துக்கங்காட்டி 'அந்தோ! வறியரானீர் களே!' என்றழுதார்.

வணிகமாதும் சிறுவனும், வணிகராக வந்தவர் தாளிலே விழுந்து வணங்கிக் கண்ணீர் விட்டனர். அவர்களைத் தங் கைகளாலே எடுத்துத் தழுவி அவர்களைத் தாமுந் தங் கண்ணீர் வெள்ளத்திலே ஆழ்த்திச் சிறுவனைப் பார்த்தார்.

''மார்பிலிருந்த ஐம்படை எங்கே? சிற்றடிகளிலே சிறு சிலம்புகள் எங்கே? தோளணி எங்கே? முகத்திலே சுட்டி எங்கே? ஒளிவிடுங் குழைகள் எங்கே? அந்தோ! வெற்றுடலாக விட்டார்களே! இந்நிலையிலேயோ உன்னைக் காண்பது? குழந்தையின் பணிகள் எத்துணை விலை பெறு மென்று கவர்ந்துகொண்டார்கள்?''

அனைவரும் வருந்தும்படி வாய்விட்டடழுதார்! தங்கை யையும் மருகனையுங் கண்ணீரை மாற்றித் தேற்றினுர். 'வருந்தா தீர்கள்! நானிருக்கும்போது வேருென்றும் நினையாதீர்கள்! இந்த வஞ்சகரின் வழக்குச் சோர்ந்துவிடும்! பாருங்கள்!' என்று முதுகை அன்புடன் தடவித் தெளிவித்தார். பிறகு,

" நட்பிடை வஞ்சஞ் செய்து நம்பினேர்க் கூன்மா ருட்டத்
துட்படக் கவர்ந்து மேற்ருேர்க் கிம்மியும் உதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியுஞ் சிலர்போ லீட்டப்
பட்டதோ? அறத்தா றீட்டும் நம்பொருள் படுமோ? என்று"

அழகிய மாடங்கள் நிறைந்த மதுரையின் தலைவரை நோக்கிச் செங்கைகளைத் தலைமீது குவித்து வைத்தார் !

"மாணிக்கம் விற்ற எங்கள் குல வணிகரே ! எங்கள் வழக்கை இந்த அறத்தவிசிலே யிருக்குந் தூயவர் வாயி லாகத் தீர்த்தருள்க !" என்று கூவியழுதார் !

அவ்வாறு கூவியழுத மாயவணிகர் வஞ்சகரான தாயத் தாரை வெகுண்டு நோக்கினர். அறத்தவிசாரையும் நோக்கிக், "காவலனுடைய செங்கோலிலே நுண்ணிய நூலாலே கட்டப்பட்ட அறத்தட்டிலே உங்கள் நாவெனுந் துலை நாவையிட்டுச் சுற்றத் தாரென வந்துள்ள இப் பகைவர் வழக்கையும் எம் வழக்கையும் ஆராய்ந்து கூறுங்கள்," என்று விளக்கமாகக் கூறினர்.

சான்றோர் நடுக்கமும் தாயத்தார் தெளிவும் ஒடுக்கமும்

நரைத்த முதிய புலிபோன்ற மாயவணிகர் சொல்லைக் கேட்டுச் சான்றோர் நடுங்கினர். இருவர் வழக்கையுங் கேட்டனர். இரண்டையும் ஒப்பிட்டனர். 'தாயத்தார் வழக்கு இழிவழக்கு' என்றனர். கேட்ட தாயத்தார்கள் அஞ்சி வேறு வகையிலே தம் வழக்கைத் தொடங்கினர்.

'இவர் தனபதி யல்லர் !' என்றனர் தாயத்தார்.

கண்ணுதலார் கைகொட்டி நகைத்தார். தாம் தனபதியே யென நிலைநிறுத்தத் தாயத்தாரின் குடிப்பேர் பட்டம் காணியென யாவுங் கசடின்றிக் கூறினர். தனபதியின் தந்தை, தாய், மாமன், மாமி, பங்காளிகள், பங்காளிகளின் பெற்றோர்கள், மைந்தர்கள், உடன்பிறந்தோர்கள், மனைவி யர், உறவினர், அவர்களின் பண்புகள், செயல்கள் முதலிய அடையாளங்கள் ஆகியவற்றையும் வழுவாது கூறினர் !

அவ்விளக்கத்தைக் கேட்ட சான்றோர், 'இவர் தனபதி வணிகரே !' என்று தீர்ப்பளித்தனர். எனவே, தாயத்தார் வழக்குத் தோல்வியுற்றது. 'பாண்டியனறிந்தால் நம்மைத் தண்டிப்பான்' என்று நன்கறிந்த அவர்கள், 'இல்வரை

சென்று வருகிறேன்' என்றும், 'குளத்திற்குச் சென்று கூடிய விரைவில் வருவேன்' என்றும், ஒவ்வொருவகையாகக் கேட்டுக்கொண்டு. கொடியகாற்று உந்துவதாலே செல்கின்ற முகிற் கூட்டம்போல—மெலிந்து சிதைந்து சென்றனர்.

அவர்கள் சென்றவுடன் அறத்தவிசினோர் 'தனபதியின் செல்வமெல்லாம் வளர்ப்புச் சிறுவனுக்கே!' என, 'மனையெழுதி' வாங்கி வணிகமங்கையிடம் அளித்தனர். அவ்வளவிலே கூடலிறைவர் யாருங் காண மறைந்து தந்திருக்கோயிலை அடைந்தனர்.

அங்குள்ளோ ரெல்லோரும் தாம் காண மறைந்தவர் அரனாரே யென்றறிந்தனர். வணிகச்சிறுவன் வியப்படைந்தான். வேந்தன் அறிந்து வரிசைகள் பல அளித்தான். வெள்ளிமன்றைப் பொன்மன்றாகப் புதுக்கினர் அங்குள்ளோர்!

சிவபாதசேகரன் தன் மகன் வரகுணபாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டுப் புண்ணிய சிவனார்தம் பொன்மலர்த்தாள் நிழலையடைந்தான்.

"ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேருங்
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணே னைய
அருத்திசா லறவோர் தேறு மருட்பெருங் கடலே யெங்கும்
இருத்திநீ யறியாய் கொல்லோ வென்றுபார் படிய வீழ்ந்தாள்."

(௧௦)

"ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற்காணேன்
மொய்ம்படை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்று."

(௨௫)

௫௦ வரகுணனுக்குச் சிவலோகங் காட்டல்

வரகுணன் பழியடைதல்

ஞாயிறு, திங்கள், உயிர், மண், நீர், அனல், வளி, வான் என்னும் எட்டுருவான இறைவரை மனமொழி மெய்யொன்றி வழிபடும் வரம்பெற்ற குணத்தினன்—வேளைவென்ற அழகினன்—இந்திரனைப்போன்ற சிறப்பினன்—ஞாயிறுபோன்ற மெய்யொளியினன்—வரகுணபாண்டியன். அவன் தன் குடிகளுக்கு மறை முதலிய கலைகளையும் தவருது நிறுவுதலால் நான்முகனைப் போன்ருன். திருமகளின் பிரிவான எண்மரும் இன்பமூட்ட ஆட்சி செய்வதால் ஆழியுஞ் சங்குமேந்தும் அண்ணலைப்போன்ருன். மாறுபடுத்தும் ஐம்பொறிகளையும் முக்கரணங்களையும் வென்று உண்மை நெறியிலே சென்று முழுதுணர்ந்து எல்லாவுயிர்களினுள்ளத்தும் நிறைந்திருத்தலால் சிவனுர் போன்ருன்.

அவன் ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருன். எரிபோல விழிக்கும் புலிகளையும் நீண்ட துதிக்கைகளையுடைய களிறுகளையும் பன்றிகளையும் வேட்டையாடிக் கொன்ருன். இரவி மறைந்தபின் நகருக்குத்திரும்பினுன். பரிமீதூர்ந்து விரைந்து வரும்போது, வழியிலொரு மறையவன் மயங்கிச் சோர்ந்து வியர்வைவடியக் கிடந்தவன்மீது பரி கால் வைத்து மிதித்து விட்டது. அந்தணன் அந்தகனுலக மடைந்து விட்டான். அதனையறியாத வரகுணன் அரண்மனை வந்து களைப்பாறியிருந்தான்.

அப்போது சில அந்தணர்கள் இறந்தவனைக் கொணர்ந்து அரண்மனை வாயிலிலிட்டு நடந்ததை நவின்றனர். மாறன் உளங்கலங்கி வருந்தி அளவில்லாத பொருளளித்து மாண்டவனை யெரித்துக், கடன் முடிக்கக் கட்டளையிட்டான். எனினும், அவனைக் கொன்ற பழிதொடர்ந்தது.

கழுவாய்—திருவிடைமருதூர்க்குச் சேல்.

அப் பழியகல மறையவர் கூறியவாறு ஐவகையுண்டியை ஆற்றங்கரையிலே அந்தணர்க்களித்தான்; அரசமரஞ் சுற்றி

ஞன்; அறுகம்புல்லைப் பசுவுக்கிட்டான்; அகமருடணம் என்ற மறையையோதி யெரியோம்பினான்; பசுவின் கொம்பு தோய்ந்த நீரையும் ஆனைந்தையும் (பஞ்சகௌவியம்) பருகினான்; பல வகை யறங்களைச் செய்தான் எனினுஞ் சிறிதேனும் விலக வில்லை. நெய்யைச் சொரிந்த தீயெனப் பெருகியது.

அந்தப் பிரமச்சாயை ஏங்கும்: பெருமூச்சுவிடும்; கை தட்டும்; மலையென வளரும்; சிறுகும்; நெருங்கிக் கூச்சலிடும்; முன்னும் பின்னும் இரு பக்கங்களிலும் தொடரும்; நகைக்கும்; பெரிய வாயை மெல்லும்! விலகும்; அணுகும்; 'பழிக்குப்பழி கொடு' என்னும்; வரகுணன் மாசுபடிந்த தெய்வமணிபோல்—பாம்பின் வாய்ப்பட்ட ஒளிபொருந்திய திங்கள்போல்—ஒளி குன்றினான்! யானையுண்ட விளங்கனிபோல உள்ளீடற்ற கருத்துடையவனானான்.

மறைநூலுணர்ந்தோர் பழிவளரும் நிலையை நோக்கினர். 'அரசே! இப் பழி கூடலிறைவரை நாளும் ஆயிரத்தெட்டு முறையாகப் பத்துநாள் வரை விரதத்துடன் வலம் வரின் நீங்கும் நெறி யேற்படும்.' என்றனர். அரசன் அவ்வாறே செய்யத் திருக்கோயிலைச் சேர்ந்தான்.

"வானவர் தலைவன் பழியை மாற்றினீர்! மறையவனுற்ற மாப்பெரும் பழியை ஒழித்தீர்! எளியேனைப் பற்றியலைக்கும் பழியையுந் தீரீரோ? ஆறணிந்த சடையண்ணலே!"

பன்முறை வலம் வந்து பணிந்து முறைப்படி வாழ்த்தி வேண்டினான். தண்ணிய பிறைமுடியார் விண்மொழியாக அருள் செய்தார்:

"அரசே! அஞ்சேல்! ஓரடியிலே பரிவேள்வியின் பலன் கிடைக்கத்தக்க நின் வலம் வருகைக்கு மகிழ்ந்தோம். பொன்னையும் முத்தையும் வாரியிறைக்கும் பொன்னி நாட்டுக்குத் தலைவன் உன்னொடு போர் செய்ய உறுவான். நீயும் எதிர்ப்பாய். அப் போரிலே அவன் தோற்றோடுவான். நீயுந் தொடர்ந்து துரத்துவாய். அப்பொழுது யாம் எம்மை

வழிபடும் திருவிடைமருதூரை அடைவாயாக! அங்கே நின்பழியை மாற்றுவோம்.''

வரகுணன் கேட்டு மகிழ்ந்தான். பன்முறை வணங்கினான்; அரண்மனை யடைந்தான். சில நாட்கள் சென்றன.

போர்—பழி நீக்கம்

அண்ணலார் அருளியவாறு காவிரிநாட்டுக் காவலன் புலிக்கொடிப்படை புவியெங்கும் பரவிவர வந்து, கன்னி நாட்டை வளைத்தான். கயலணிந்த கொடிக்காவலன் கண்டு கனன்றெழுந்தான். இருதிறப் படைகளும் எதிர்த்துப் போர் செய்தன. போரிலே சோழன் படை சிதறியோடியது. சோழனும் நாணத்துடன் தோற்றோடினான். அவனைத் தொடர்ந்து மீனக்கொடியோன் விரைந்து சென்றான்.

சென்ற பாண்டியன் மணங்கமழும் முல்லையுந் தாமரையும் நெய்தலும் செறிந்த குளிர்ந்த துறையையுடைய காவிரியை யடைந்தான். பூசத்துறையெனும் அத் துறையிலே நீராடித் திருவிடைமருதிலே கோயில்கொண்ட பெருமானாரை வணங்கக் கீழ்த்திசைவாயில் வழியாகச் சென்றான். அவ்வழியிலேயே அவனைப்பற்றிய பாசத்தளையும் பழியும் புறம் நின்றன.

''சுருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து குமுறத் தெய்வ
மருதிற் சிறந்த பெருந்தேனைக்கண் வாயங் காந்து
பருகிப் படிந்து தழல்வாய் வெண்ணெய்ப் பாவை யொப்ப
உருகிச் செயலற் றுரையற்றுணர் வாகி நின்றான்.''

மறையாகிய வண்டு சூழ்ந்திருந்து முரலத் தெய்வத் தன்மை பொருந்திய மருதிலே குடிகொண்ட தேனைக் கண்ணாகிய வாயைத்திறந்து பருகிப் பருகிப் படிந்து, அழல் வாயிலே வெண்ணெய்ப்பாவை யுருகுவதைப்போல வுருகிச் செயலற்று மொழியற்று, உணர்ச்சி யுருவமாக நின்றான்.

''எங்கும் நிறைந்த பேரின்பக்கூத்தரே! நான்மாடக் கூடலில் எழுந்தருளிய மேலான பொருளே! முக்கண்

முதல்வரே! பார்வதி மணாளரே! பழம்பொருளே! உலகுக்குத் தலைவரே! புண்ணியரே! மருதவாணரே! பாம்பணிந்த சடையரே!'' என்று வாழ்த்தி வணங்கினான்.

"மற்பெருந்தோளனே! கீழைவாயிலிலே பிரமச் சாயை நிற்கிறது. அவ்வழியே செல்லேல்! மேலைவாயில் வழியே நம் மதுரைக்குச் செல்க!''

என்று சொல்லைக் கடந்த தூயவொளியார் இயம்பி யருளினார்.

வரகுணன் மருதைப் பன்முறை வலம்வந்தான். நீங்க மனமின்றி வாயில்களிலெல்லாம் அடிக்கடி வீழ்ந்து வணங்கினான். சிலநாள் அங்கேயே தங்கி மேலைக் கோபுரத்தைத் தன் பெயராலே கட்டினான். அரிதிலே நீங்கி வழியிலுள்ள திருக்கோயில்களிலே சிவபரம் பொருளை வழிபட்டுக்கொண்டே மதுரை மூதூர் வந்து சேர்ந்தான்.

தன்பழியை விலக்கிய தண்ணிதழி யண்ணலாரை நாடொறும் வழிபட்டு வாழ்த்திவந்தான் வரகுணன். மேலும் அவன் சிவனார் புகழை அறிஞர்களைக்கொண்டு கேட்டு மகிழ்ந்து வந்தான். மறைகளும் ஆகமமும் புராணங்களும் மிருதிகளுங் கேட்டான். அவற்றிலே 'உலகிற் சிறந்தது உருத்திரவுலகம்', என்று கூறியிருப்பதைக் கேட்டு அச் சிவலோகத்தைக் காணவேண்டுமெனக் காதல் கொண்டான்.

சிவலோகங் கண்டான்

சிவனாரிரவு வந்தது. வரகுணன் அங்கயற்கண் ணம்மை பங்கரை அவ்விரவிலே வணங்கச் சென்றான். திருக்கோயிலை யடைந்து திருமுன் சென்று வணங்கி, 'எந்தையே! சிவபுரத்திலே எழுபிறப்பையுங் கடந்து தங்க ளடி நீழலை யெய்தினோர் சூழ அடிகள் எழுந்தருளியிருப்ப

தைக் காணுங் காதலுடையேன்,' என்று வேண்டிக் கொண்டான்.

தென்னவன் வேண்டுகோளைச் செவியேற்றார் சிசெங் கண் ஏற்றார். உருத்திரகணங்கள் உணர்ந்தன உமை பங்கர் திருவுளத்தை. அந் நொடியிலே கோடிக்கணக்கான திங்கள்கள் நிலவுபரப்பி ஓரிடத்திலே தோன்றியதைப்போல, வானிலிருந்திறங்கியது சிவலோகம்!

ஆண்டவர் நந்தியை யழைத்து, 'எம் அன்பன் வரகுணன் நம்முலகைக் காண விரும்பினான். காட்டுக!' என ஏவினார். பிரம்பேந்திய திருக்கையரான நந்தியெம் பெருமான் தொழுது வெளிவந்து வரகுணனை, 'வழுதி! வருதி!' என அழைத்தார். அவன் அவரைத் தொழுது பின் சென்றான்.

"நான்முகனும் திருமாலும் நான்மறைகளும் அளப் பரிய தனியொளி ஞாயிறான பரமனார் எழுந்தருளி யிருக்குஞ் சிவபுரம் இதுவே! பார்த்திடுக!"

அக் காட்சியை அழகுற எடுத்தியம்ப வொண் ணுமோ? கருப்புர மணங் கமழ்ந்துலவும் இளங்காற்று லலைப்புண்டு, அரும்பவிழ்ந்து, ஆயிரம் யோசனைப் பரப்பு மணத்தைப் பரப்பிடும் ஆயிரந் தூய இதழ்களையுடைய தாமரைகள் மலர்ந்த ஓடைகளைக்கொண்ட வான்யாறு!— அமுதவாவி!—பொற்றாமரைப் பொய்கை! — ஆம்பல் வாயினரான அரமங்கையராங் குயிலினம் பயிலும் பைம் பொழில்கள்!—ஒளிவிடும் அமரர் வாழ் மாளிகைகள்!— இவற்றைப் பார்க்குங் காலத்தே எண்ணற்ற இள நங்கையர் இனிய வாய்திறந்து பொழியும் ஏழிசையுடன் கலந்த பாடலும் கதிர்விடும் மலர்மரங்களிலே வண்டுகளிசைப்பதைப் போன்றிசைக்கும் நாரத தும்புருக்களின் — இரும்பை மெழுகாக்கும்—இனிய பாடலும் எங்கும் பரவி யின்பத்தை யூட்டக் கண்டனன் வரகுணன்.

அவற்றை அரிதின் நீங்கி, அலை யெறியும் பாற்கடல் போன்ற இனிய நீரையுடைய அகழியும் பொன்மயமான ஞாயில்களையுடைய மதிலும் பொற்கோபுரமுங் கடந்து, நறுமண மலர்கள் தூவிய திருவீதிகளையும் நவமணிகளாலே இழைக்கப்பெற்ற மாளிகைகளையுங் கண்டான். அங்கங்கே ஐம்புலன்களுக்கும் விருந்தாக நால்வகை யுண்டியும் யாழிசையும் நறுமணக் கலவையும் பைம்பூணும் ஆடலும் நிகழ்ந்தன கண்டான். நீண்ட படர்ந்த சடையினரான உருத்திரரும் உருத்திரமகளிரும் அமர்ந்திருக்கும் மாடங்களைக் கண்டான். துன்பமற்ற இன்பச் செல்வம்! கவலையற்ற வாழ்க்கை!

நந்தியெம்பெருமான் மேலும் விளக்கிச் சொல்கிறார்: "இது தாமரைக் கண்ணன் உலகு! இது தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன் உலகு! இஃது இறைவனார் உருக் கொண்ட உருத்திர ருலகு! இவை எட்டுத் திக்குக் காவலர் உறையு மிடங்கள்!"

"இவர்கள் வைகறையிலே நீராடித் திருநீறணிந்து நம் இறைவருடைய திருக்கோயிலை விளக்கித் திருமலர்க் காத்தொண்டு புரிந்து, மலர் கொய்து தொடுத்து, அண்ணலார் திருப்புகழ் கேட்டு இவ்வுலகடைந்து வாழும் அடிமை நெறியினர்! (தாத மார்க்கத்தினர்)"

"இவர்கள் தூயராய், ஐந்து சுத்தி செய்து, அகத்தினும் புறத்தினும் ஒத்த அன்பராய், ஆகம நெறியின்படி, முகமன் பதினாறினாலும், மனமொழி மெய்களாலும், மலரிட்டு வழிபட்டு நம் பெருமானார் உறையும் இடம் பெற்ற மகவு நெறியினர்! (புத்திர மார்க்கத்தினர்!)"

இவர்கள் உயிர்வளியினாலே மூலக்கனலை மூட்டிப், பிரமரந்திரம்வரை சென்று, பிங்கலை யிடைவழியிலே யுகுகின்ற மதியிலே விளைந்த தேனைப் பருகி நம் விடையவர் வடிவை நெற்றி நடுவிலே கண்டிருக்கும் யோக நெறியினர்! (சக மார்க்கத்தினர்!)"

"இவர்கள் சிவபிரானுர் பொருட்டு வேள்விகளை முடித்த மறையவர்கள்! இவர்கள் தண்ணீர்ப் பந்தர் முதலான பேரறங்களைப் பயனேக்காதியற்றியவர்கள்! மறை வழியினும் நூல் வழியினும் அணிந்த திருநீறு விளங்கும் மெய்யினரான இவர்கள் பரமனுர் ஐந்தெழுத்தையும் நவிலும் நாவினராய், அப் பெருமானுர் திருப்புகழைக் கேட்குஞ் செவியினராய் வினைவலியைக் கெடுத்தவர்கள்! இவர்கள் மறைகளிலுள்ள ஆயிரம் உருத்திர மந்திரத்தையும் இயம்பினவர்கள்! திருக்கண்டிகை திருநீறு விளங்கும் மேனியர், குறி குணங் குலன் குறிக்காமல் அடியாரை யெல்லாம் சிவனுராகவே அன்புடன் வழிபட்டுப் பிறப்பறுத்த பெரியார்கள்! இவர்கள் சிவஞான தானம் புரிந்தும் சிவ தருப்பணஞ் செய்தும் சிவக் கோயில்கள் கட்டியும் பிறவியை ஒழித்த சான்ருேர்கள்! இவர்கள் சிவனுரை வழிபடுவோர்க்கு வேண்டுவ விரும்பி யளித்தவர்கள்! இவர்கள் நம்பரடியார்க்கு நல்லுண வளித்தவர்கள்! இவர்கள் தொண்டர் பணியே தவம் எனக் கொண்ட கொள்கையர்!"

"இவர்கள் சோமசுந்தரக் கடவுளுக்குத் திருக்கோயி லும் வழிபாட்டுப் பொருள்களும் அமைத்துப் பிற பணிகளும் புரிந்து திருநீற்று வழியே உலகைக் காத்த உன் மரபினர்!"

இவ்வாறு பிரம்பினுலே சுட்டிக் காட்டிக் காட்டித் தெளிவித்து வர, வரகுணன் வீழ்ந்து வீழ்ந்து வணங்கிக் குவித்த கையுடன் சேவித்து வந்தான். யாவரையும் சேவித்தபின் கண்ணுதலரர் திருமுன் வந்து சேர்ந்தான்.

சிவனுர் திருமுன்—

அத் திருமுன்னே மறைகளும் ஆகமங்களும் உரு வெடுத்து இருபுறமும் வாழ்த்தி நின்றன. நாரதனுந் தும்புருவும் யாழிசைத்துப் பாடினர். வண்டுகள் முரலும் பூங்கொம்புபோல அரம்பையர் நடித்தனர். வெளியே வானவர்கள் காத்திருந்தனர்.

யானைமுகவரும் வேலேந்திய கந்தரும் வீரபத்திரரும் பணிகேட்டு நின்றனர். ஆடையை யடக்கி வாய் புதைத்துத் திருமாலும் நான்முகனும் தம் குறை சாற்றி நின்றனர். அவ்வாறே எட்டுத் திக்குத் தலைவரும் தம் குறை நவின்றனர். எழுவையுந் தண்டையும் ஏந்தி வாய் மென்று பூதத் தலைவரும் கோடி நமன்களும் அஞ்சி நடுங் கும்படி விதிர்க்கும் முத்தலைச் சூலமேந்திய சிவகணத் தலைவரும் வாயிற் கடைதொறும் காத்து நின்றனர்.

சித்தர், வானவர், தானவர், சாரணர், கின்னரர், மாதவர், இயக்கர், பாரிடர், காருடர், நாகர், யோகியர் முதலான கணத்தவ ரெலாம் பரவி நின்றனர்.

முனிவர்கள், 'இனி வரும் பிறப்பறுத் தருள்க!' என வேண்டிக் கனிந்த அருளூறும் அமுதைப் பெரிய கண்க ளாற் பருகி மெய்சிலிர்க்கச் 'சங்கர! சிவ சிவ!' எனக் கை குவித்து வாழ்த்தி நின்றனர்.

இத்தகைய சிறப்புடன் உமையம்மையார் புன்முறுவ லுடன் அருகிலிருக்கச் சிங்கஞ் சுமந்த திரு அணையின் மீது வீற்றிருந்த விரிசடையரைக் கண்டு வணங்கினன் வரகுணன். அவனடைந்த பேரின்ப நிலையைப் பேசுவ தெப்படி?

"உரைக ளுந்தடு மாறமெய் யுரோமமுஞ் சிலிர்ப்பக்
கரையி றந்தவின் னருட்பெருங் கடலிலன் பென்னுந்
திரையி றந்தவா நீர்த்திட மிதந்துபோய்ச் செப்பின்
வரையி றந்தவா னந்தவா ரமுதைவாய் மடுத்தான்."

புலன்களுங் கரணங்களுந் தானும் அன்பு வடிவாய் நின்று வணங்கும் வரகுணனுக் கெதிரிலிருந்த சிவலோகம் முன்புபோல் மதுரையாக மாறியது. சோமசுந்தரக் கடவு ளும் அங்கயற்கண்ணம்மையுமாக வீற்றிருந்த திருக்கோலம் விளங்கியது.

அரசர்க் கரசனான பாண்டியன் விண்ணிழி கோயி லிலே வீற்றிருக்கும் இறைவரை வணங்கி யின்புற்ற வுள்ளத்

துடன் அன்பிலே தோய்ந்து இன்பக் கண்ணீர் பெருக நாக்குழற வாழ்த்தினன்.

"நாயனேயேன் நடுங்கும் பழியை யகற்றித் தலையளி செய்த தாயனையாரே! வணக்கம்! சேயாகிய அடியேன் காணச் சிவலோகங் காண்பித்தருளிய கண்ணுதலே! வணக்கம்! மயங்கிப் புரியும் வினைவழியே சென்று கொடிய நரகிலே குளிக்காமல் அன்பருளிய அண்ணலே! வணக்கம்! ஏழாகி நான்கு வகையாய் உண்டாகும் பிறப்பையெலாம் போக்கியருளிய புண்ணியரே வணக்கம்! எளியேனைப் பழியினின்றும் எடுத்துத் திங்கள் மரபைக் களங்கமின்றிக் காத்த கங்கைச் சடையரே! வணக்கம்! அன்புடைய அடியார்க்குச் சிவபுரமுண் டென்பதை யிப்போது எங்களுக் கறிவித்த இறைவரே! வணக்கம்."

அன்பின் மிகுதியாலே வேறு பல வழிபாடுமியற்றி வாழ்ந்து வந்தான் பாண்டியன்.

முனிவர்களின் ஐயத்தெளிவு

புராணம் புகன்றுவரும் மலய முனிவரை மற்றைய முனிவர்கள் வணங்கி, 'வானவர் தலைவன், வெள்ளையானை, அந்தணன் ஆகியோருடைய பழியெலாந் தீர்ந்தன மதுரை யிலே! வரகுணனைப் பற்றிய பழியைமட்டும் இடைமருதிலே நீக்கியதேன்? தெளிவுபடுத்தியருள்க!' என வேண்டினர்.

"சோமசுந்தரர் புண்ணிய வடிவினர் ஆகையால், அவரெழுந்தருளிய திருத்தலமாகிய மதுரையிலே வாழும் அடியவர் அஞ்சிப் பாவஞ் செய்யா திருத்தற் பொருட்டுத் திருவிடைமருதூரிலே இப் பழியைத் தீர்த்தார்"

என இயம்பினர் அகத்திய முனிவர். முனிவரர் கேட்டுத் தெளிந்து மகிழ்ந்தனர்.

வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய அன்றுமுதல் தென்மதுரை 'பூவுலகிற் சிவலோகம்' எனப் புகழப் பெற்றது.

௪௧. விறகு விற்றல்

ஏமநாதன் இசைச்சிறப்பு—பாணபத்திரன் அச்சம்

வரகுணன் தன் பேரவையிலே வீற்றிருந்தபோது ஏமநாதன் என்னும் வடநாட்டு யாழ்ப்பாணனொருவன் வந்து வணங்கித் தன் யாழிசையினாலே விளைந்த தேனைப் பேரவையின் செவிவழியப் பெய்தான். பாண்டியன் அவனிசைச் சிறப்புக்கு வியந்து பல்வகை மணிப் பூணும் ஆடையும் அளித்து, உணவுப் பொருள்களுடன் ஒரு மனையிலே இருக்க வகை செய்தான்.

ஏமநாதன் அரசன் செய்த வரிசையாலே செருக்குற்றுத் தனக்கு நிகராவார் இங்கில்லையென வாய்ப்பறை யறைந்து கொண்டிருந்தான். அரசன் கேட்டுத் தன் அவைப் புலவனான பாணபத்திரனை வரவழைத்து, 'அவனொடும் பாட வல்லையோ?' என வினவினான்.

பாணன் வணங்கி நின்று, 'தென்னர் தலைவரே! தங்கள் திருவுளத்துணையுங் கூடல் முதல்வரருளும் ஊட்டும் ஊக்கத்தாலே முயன்று பாடி, அவன் விருதுகளை வாங்கிச் செருக்கை யடக்குவேன்,' என்றான்.

"அங்ஙனமாயின் நன்று. நாளைக்கே பாடுக!"

வரகுணனை மறுமுறையும் வணங்கித் தன் மாளிகை புக்கான் பத்திரன். அப்போது ஏமநாதனிடங் கற்கும் இசைமாணவர்கள் தம் ஆசிரியன் சிறப்புத் தோன்றக் கடைத்தெரு, சந்தி, மன்று, வீடுகளெங்குஞ் சென்று வழுவின்றிப் பாடித் திரிந்தனர். அதனை உணர்ந்த பத்திரன் கலங்கினான்.

"நன்று! ஏமநாதன் மாணவர்கள் பாடும் அழகு இது! கெட்டேன்! இனி, அவன் பாடுந் திறன் எங்ஙனமோ? அவனை நாளை யாழிலே வெல்லலாகுமோ?"

கறைமிடற்றுங் கண்ணுதலை—மதுரைப் பெருமானாரை—வணங்கி, 'அடிகளே! அடியனேற்குத் தங்கள் அருள் வேண்டும்!' என வேண்டிக்கொண்டு பொய்யற்ற வுள்ளத் தானான பத்திரன் வீட்டிற்குச் சென்று கவலையுட னிருந்தான்.

பத்திரன் மாணவர்

கூடலிறைவர் பாணனுடைய கவலையைப் போக்கத் திருவுளங்கொண்டார். ஒரு முதிய விறகாளாய் வெளி வந்தார்.

அழுக்கு மூழ்கிய கிழிந்த ஆடை—ஒளிவிடுஞ் சடையிலே அமுதத்தை வார்க்கும் பிறைத் திங்களை வாங்கிச் செருகியதுபோல இடையிலே செருகப்பெற்ற கொடுவாள்—தேய்ந்த இழுக்குடைய செருப்பு—தோளிலே கிடந்தலைக்கின்ற பழைய பததரையுடைய யாழ்—ஒண் குழையணிந்த காதிலே கொத்தாகிய களவின்காய்—இத் தோற்றத்துடன் தழைந்த நீண்ட சிகை சரிந்திடச் சும்மாடு தாங்கி எழுந்தருளினார்.

அப் பெருமானார் விறகு சுமந்து சுமந்து தேய்ந்து வழுக்கையான திருமுடியிலே—முடியிலிருக்குங் கங்கையும் இடப்பக்கமிருக்கும் மங்கையுங் காணாமல்—வெட்டிய விறகுச் சுமையைத் தாங்கி, என்பு தோன்றியிளைத்த மெய்யராய் வருகிறார். அவரைக் காண்போருக் கெல்லாம் அன்பும் இரக்கமுங்கொண் டுள்ளம் உருகியது. முன்னியற்றிய தவத்தினாலே பார்மகள் தன் முடிமிசை அவருடைய திருவடிகளைத் தாங்கும் பேறுபெற்றாள் போலும்! என்னே அடியார்க்கிரங்கும் அண்ணலார் திருவிளையாடல்!

திருமுகத்திலே வியர்வை துளித்தது! வாய்குவிந்து சோர்வுக்குரிய ஒலியைச் செய்தது! சுமையைக் கல்லாலான சுமைதாங்கி மேல் வைப்பார்! மடுநீரைப் பருகுவார்! சுமையைத் திருமுடிமீது வைப்பார்! சிறு தொலைவு சென்றதும் தலை வெம்மை கொண்டவர்போல இருகைகளாலும் ஏந்தி யேந்தி வைப்பார். மதுரைத் திருவீதிக்குள் நுழைந்தார்!

விறகு விலை கூறினார். வந்து கேட்போருக்கு அருவிலை பகர்ந்தார்! விற்கவா வந்தார்! நான்மாடக்கூடலின் திருவீதி

களையுஞ் சந்திகளையும் மூலை முடுக்குகளையும் விடாமல் எங்குஞ் சுற்றினர். இவ்வாறு மறையையும் பிரமன்பால் சூழ்ச்சியையும் பலவிடங்களையும் கடந்து, ஏமநாதன் இருக்கையை அடைந்தார்.

இரவு

அப்பொழுது, காதலர் வரவை எதிர்கொண்டழைப்பவர் போல ஆம்பல் மலர்ந்தது! இரவை யுமிழ்ந்து வெண்டிங்கள் நகைத்தெழுந்தது! உயிர்க்காதலரின் பிரிவையெண்ணி வருந்து வார்போலத் தாமரை கண்ணீர் (கள்+நீர்) விட்டுக் குவிந்தது! கதிரவன் மேலைக்கடலை நீந்திவிட்டான்! பறவைகள் குஞ்சுகளையும் பெடைகளையும் சிறகாலணைத்து, வாயடைத் துப் பெரிய பொழிலிலுள்ள கூடுகளை யடைந்தன! தாமரைமலர்ப் பள்ளியிலே வண்டுகள் தம் பெடைகளுண்ட எச்சில் தேனை நக்கித் துயின்றன. கிளைகளிலே விளையாடிக் கொண்டிருந்த குரங்குகள் பொதும்பரிலே புகுந்து தூங்கின! முல்லைப் பண்ணைப் பாடியவாறு இடைச்சிறுவர்கள் ஓட்டிவரத் தங் கன்றுகளை நினைந்து பசுக்கூட்டங்கள் மனைதொறும் புகுந்தன. தொடக்கக் கல்வி—தமிழ்நெடுங்கணக்கு—பயிலுஞ் சிறு மாணவர்களின் ஒலியடங்கியது. இடையிலே உடுத்திருந்த கடலாகிய கரிய புடவையை உடம்பெலாம் போர்த்து நிலமகள் துயில்வதுபோலக் கரிய இருள் மெல்ல மெல்லக் கவிந்தது!

திங்களாகிய ஒளிபொருந்திய நெற்றியையும் அதிலே நிலவின் களங்கமாகிய பொட்டையும், சிவந்த முகிலாகிய ஆடையையும் இருளாகிய கூந்தலையும் விண்மீன்களாகிய ஆரத்தையும் உடையவராய் இமவான் மகளார் தம் கணவ னுரைத் தேடிவந்ததைப்போல மாலை வந்தது!

விறகாளும் இசைவல்லானும்

ஏமநாதன் இருக்கையை அடைந்த இறைவனார் தாம் சுமந்து வந்த விறகுச் சுமையைக் குத்திட்டாற்போல ஒரு புறம் ஊன்றி யிறக்கினர். திண்ணைமீதமர்ந்து இளைப்பாறி னர். இனிய இசை தொடுத்துச் சிறிது பாடினர். ஏம

நாதன் அவ்வின்னிசை கேட்ட அளவிலே வெளிப் போந்தான். 'நீ யார் ?' என்று வினவினன்.

உயர்ந்த வானவரும் மற்றெல்லோருங் குற்றேவல் புரிய அவர்களை அடிமைகளாய்க்கொண்ட அண்ணலார், 'விபஞ்சி வல்ல பாணபத்திரன் அடிமை,' என்றியம்பினர்!

மேலும் விளம்புகிருர் :

"கனிந்த இசை வல்லவனை அவன் கீழ்க் கற்பவர் பலர். அவன் இசையிலே மயங்கிக் கற்கவேண்டுமென்னும் அவாவுடன் நானும் அவன் மாணவனுனேன்! அவன் என்னைப் பார்த்து, 'நீ தசை வற்றிய முதியவனுகிவிட்டாய். இனிமேல் இசை கற்கத் தகுதியற்றவனுகினை!' என்று விலக்கிவிட்டான்! வேறென் செய்வது? விறகு வெட்டி விற்றேனும் இவ்வயிற்றைக் காப்போம் என்று வந்துவிட்டேன்!"

இறைவர் பாடிய 'நைவளம்' என்னும் பண்ணை நன்கறிந்த ஏமநாதன் அதைக்கேட்டு வியந்து, 'ஏ விறகு வெட்டியே! அப்பண்ணை யின்ெறருமுறை பாடுவாயா?' என்று வினவினன்.

இசையமுது

அண்ணலார் பாடத் தொடங்கினர் :

நீண்ட சுரைக்கொடியிலிருந் தெடுக்கப்பெற்ற நீர் வற்றிய குண்டான சுரைக்காய்ப் பத்தரையுடையதும் நீண்ட தண்டையுடையதும்,

ஒன்பது மாத்திரைகளாலும் எட்டுத்தானங்களாலும் பத்துக் கிரியைகளாலும் அமைத்துப் பதின்மூன்றெழுத்தால் ஐந்து தொழிலையும் இயற்றிய—ஐந்து நிறத்தையுடைய, குணமெலாம் அமைந்து குற்றமெலாம் நீங்கிய நல்ல யாழை இடப்புறந் தாங்கினர். நரம்பை எறிந்து அமுக்கிப் பண்ணையெழுப்பிப்பார்த்து, மாடகத்தைத் திரித்து, இருளிலிருந்து தேனெழுகின்றுபோலத் திவவிற் பரவ வீக்கிச் சுருதி கூட்டினர். சுரங்களெழுந் தானங்கள்தோறும் விரல் சென்று போக்குவரவு

செய்ய, குரல்—துத்தம்—கைக்கிளை—உழை—இளி—விளரி—தாரம் என்னும் ஏழிசைகட்கு முதலாயுள்ள சுத்த சுரங்களிற் பல்வேறு வகைப்பட்ட இனிய இசைகளின் ஒன்றுயெழும் சஞ்சாரிப் பண்ணும் அசையும் (ஒரு மாத்திரையளவுபடத் தாக்கி யெழுந் தாளம்) வீதிப் போக்கும் (நகர முதலிய நாலெழுத்துக்கள் நேராய்ச் செல்லுதல்) வண்ணமுந் (பெரு வண்ணம் இடைவண்ணம் வனப்புவண்ணம் என்பன) திறமும் (பாலை யாழ்த்திறம்) ஆகிய இவற்றுல், எவர்க்கும் விருப்பந் தரும் நரம்பின் ஓசையும் குரலோசையும் தம்முள் வேறின்றி யொலிக்கப் பாடினுர்.

அவர் பாடும்போது,

வயிறு குழிய வாங்கல், அழுமுகங் காட்டல், வளைந்த புருவம் நெற்றியிலேறல், தலை நடுக்குறல், கண்களாடுதல், பாடுகின்ற அரிய மிடறு வீங்குதல், பைபோல வாயை அகலத் திறத்தல், பல்லைக் காட்டுதல் ஆகிய உடலிலுண்டாகும் எண் வகைத் தொழிற் குற்றங்களும்,

வெடித்த குரலாகிய நிறமில்லாத வெள்ளோசையும், பேய் கத்தினுற்போற் பாடலும், நிறமுந் தானமுங் குறை படும் கட்டையிசையும், ஒரு தானத்தே பாட மற்றொருதானத்தே நழுவுதலும் ஆகிய இவை போன்ற நீக்கப்பட்ட குரலின் குற்றங்களும்,

ஒரு பண்ணைப் பாட வேறொரு பண்ணிலே விலகிநின் றொலித்தலும், அளவு கடந்து ஓரோசையான தன்மை நீங்கிப் பல வோசையாய் வருதலும், காகங் கத்தினுற்போற் கத்துதலும், பாடுந்திறத்தை யொதுக்கிப் பாடலும் இவை முதலான பாடுந் தொழிற் குற்றங்களும் இல்லை.

அவர் எழுதிய ஓவியம்போல் அமர்ந்திருந்தார். இடை யருது விழும் இழுமென்னும் அருவி யொலியும் முழவின் ஓசையும் கஞ்சக் கருவியின் இசையும் வலம்புரிச்சங்கின் ஒலியும் மலர்களைக் குடையும் வண்டின் முரலலும்போன்ற, இனிய ஓசையும், மூங்கிலிலைமேலிருந்தசைந்து வீழ்தலும்,

சிரல் என்னும் மீன்குத்திப் பறவை மேலே அசைந்து நிற்றலும் போன்ற பாடற்பணியும் அவர் பாட்டிலே காணப்பெற்றன.

அவர் படுத்தல் நலிதல் எடுத்தலாகிய ஓசைகளில் (மேலே கூறிய இசைக்குணனும் பாடற்பண்பும்) பொருந்த அடக்கித், திருத்தமாகிய துள்ளல் தூங்கல் மெலிதல் என்னும் இசைகளைச் சிறக்கச் செய்து, அமுதம்போன்ற செய்யுளோசையும் வேறுபடாமல் யாவருக்கும் விருந்தாகச் செவியிலே பெய்து பாடினர்.

"விரைசார் மலரோ னறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்னே !
அரசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே !"

"பாடல் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே !
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா அமர்ந்தா னென்னே !"

"நீல வண்ணன் தேரு விமலன்
ஆல வாயில் அமர்ந்தா னென்னே !
ஆல வாயான் அலரின் வாசம்
போலென் உளமும் புகுந்தா னென்னே !"

பாணபத்திரனைக் காப்பதற்குப் பருந்தும் அதன் நிழலும் போல இசையின்பின் யாழ்நரம்பின் ஓசை செல்ல இறைவர் இசைத்த இசைத்தேன் வானவர் செவிவாய்க்காலின் வழியே ஓடி மயிர்த்துளை வழியுமாறு நிறைவித்து அமுதயாக்கையை இசையாக்கையாக மாற்றியது.

மரங்கள் அசைந்தில ! கடலும் அலையாது நின்றது! மலையிலிருந்து வீழும் அருவிகளும் ஆறுகளும் புரண்டு துள்ளவில்லை ! அருள் வள்ளலார் இசைத்த—விளைவித்த—இசையமுதைப் பருகி ஓவியக் கலைஞன் எழுதிவைத்த ஓவியம் போன்றிருந்தன !

விஞ்சையரிற் சிலர் நம் பெருமானுர் இசையிலே மயங்கி யாழைக் கைவழுக்கிவிட்டனர்! சிலர் தம் விரல் தடவுகின்ற யாழ் நரம்பின் இசையும் குரலிசையும் வேருகி வியர்த்தனர்! சிலர் நாணமும் மகிழ்ச்சியும் தள்ளுவதால் நாவானது நடுங்கித் தங்கள் காதலிகளின்மேல் வீழ்ந்தனர்!

"போதுளான் பரமன் பாதப் போதுளா னுனன்! வேலை
மீதுளான் பரமா னந்த வேலைமீ துள்ளா னுனன்!
தாதுளாங் கமலக் கண்போற் சதமகன் உடல மெல்லாம்
காதுளா னல்லே னென்ருன்! கண்ணுளான் கானங் கேட்டு!"

தாமரை மலரவனை நான்முகன் பரமன் திருவடி மலரவனுனன்! கடலிலே துயிலுங் கண்ணன் பரமானந்தக் கடலிலே துயின்ருன்! இந்திரன், 'எனக்குக் கிடைத்த ஆயிரங்கண்கள்போல உடலெங்குங் காதுகள் பெற்றிலேனே!' என்று வருந்திஞன்.

முனிவர்களுந் தவம்புரிவோரும் முத்தரும் சித்தரும் —பாணபத்திரன் அடைந்த இடுக்கணைத் தவிர்க்கச் சோம சுந்தரர் பாடியருளிய—இசைகனிந்த அருட் கடலிலும் அன்பு வெள்ளத்திலும் தம் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட இன்பமடைந்தனர்! மண்ணவராகிய மக்களிலே ஊடியிருந்த காதலரெல்லாங் கூடி வேற்றுமையில்லாத இன்பக் கடலிலே முழுகினர்! பிரிந்திருந்த காதலர்கள் தனிமையால் —காதல் நோயால்—மயங்கி வாடினர்! படமெடுத்த பாம்பும் பல்பொறி மயிலும், களிறும் சிங்கமும், மானும் புலியும், மயங்கித் தத்தம் நிலையையறியாமல் அங்கங்கே சோர்ந்து நின்றன!—பரமனுர் இசைவலையிலே பட்டன! வலிய நிலங்கிழிய விழுதுவிட்டு வானளாவிய கிளைகளெல்லாம் பட்டு நின்ற ஓரறிவு மரங்களெல்லாஞ் செவியறிவு பெற்று, மெல்லிய தளிர்விட்டு, மலர்ந்து, கண்ணீர் (கள்+நீர்) வடிய நன்றறிந்த மக்கள்போல நகை முகமுடையவாயின!

இவ்வாறு, உலகிலே வானவரும் மண்ணவரும் பறவைகளும் விலங்குகளும் மற்றவையும் கரணங்களெல்லாம் அசைவற்றடங்க, இறைவர் பாடிய ஏழிசை மயமே ஆயின!

உணர்வுடையோருள்ளம் ஊழிக்காலத்திலே முதல்வர் தாளிலே அடங்கி ஒடுங்கிய தன்மையாயின!

கண்ணுதலாருடைய சாமவேத மிசைக்குங் குரலிலிருந்தெழுந்த முல்லைப் பண் நிறைந்த தெய்வ இசை எல்லாவுயிரும் புவியும் விண்ணும் எட்டுத் திக்கும் தன்னுள் அடங்க விழுங்கித் தன்னிலையே யாக்கியது! ஏமநாதனை, அவனுடைய உள்ளத்தையும் உயிரையும் மெய்யையும் உருக்கியது! அவனுடைய உள்ளத்தோடொன்றிய ஐம்பொறிகளும் செவிகளாயின! ஐம்புலன்களும் ஓசையாயின! அவன் தன்னை மறந்தான்! நான்மறை நவிலும் நாவினாலே—பத்திரனுக்காளாக வந்து—பாடிய இறைவர் விறகுச் சுமையுடன் மறைந்தார்!

ஏமநாதன்—

"யான் அறிந்த சாரீரி யன்று இது! இவ்வுலகிலே இதனை யறிந்தோமென்று கூறினவரும் இதுவரையில்லை! இது தெய்வ இசை! இதனை இவனுக்குணர்த்தினர் இறைவரே! மானுடரல்லர்! என்னே வியப்பு! விலக்கிவிடப்பட்ட இந்த முதியவன் இசையிதுவானால், அந்தக் குற்றமற்ற பத்திரன் பாடல் எத்தகையதோ!

ஏமநாதன் அச்சமுற்றெழுந்தான். தன் பாடல் மாணவரோடும் இருளிலேயே வழிக்கொண்டான். அவனுடைய பலகலைப் பேழைகளும் மணிக்கலன்களும் மற்றையவும் அடக்கிய பேழைகளும் யாழும் யாழ்க்கோலும் அங்கங்கேயே கிடந்தன! மானமும் அச்சமும் முன்னிருந்திழுத்தலாலே வடதிசையை நாடி நடந்தான்! பல்லக்கொரு வழியும், விறலியர் ஒரு வழியும், குடையொரு வழியும், மாணவரொரு வழியும், ஏவலரொரு வழியும் ஆக அகன்றான்.

பத்திரன் கனவிலே—

கொல்லேறுமீதூருங் கோமகனார் அன்றிரவிலே பாணபத்திரன் கனவிலே எழுந்தருளினார். "பத்திரனே! இன்று

ஏமநாதனிடம் விறகாளாய்ச் சென்று 'யாம் பத்திரன் அடிமை!' என வுரைத்துப் பாடி வென்று நின் வேண்டு கோளைப் பத்திரஞ் செய்தோம்!'' என்றூர்.

உள்ளத்திலே உன்னற்கரிய இம்மொழியைக் கேட்ட பத்திரன் அஞ்சினுன்! 'இது செய்யவோ மறைகளுங் காணுத வள்ளலாரை அடியேன் இரந்தேன்? கெட்டேன்!' என்று விழித்தெழுந்தான். கரையற்ற களிப்பினுலே— உள்ளத்திலே மலர்ந்த அன்பினுலே—இழுக்கப்பெற்றுக் கதிரவன் வருமுன்னே ஓடிப்போய், விண்ணிழி கோயிலிலே பண்ணலர்ந்த நான்மறைப்பொருளைப் பணிந்தான்.

''கடிய காட்டிலே புகவோ—கட்டிய விறகைத் திரு முடியிற் சுமக்கவோ—தாமரைத்தாள்கள் நோவ நடந்து மதுரைத் தெருவிலே உலாவவோ—அடியனேற்காக 'நான் பத்திரன் அடிமை' என அடாத மொழி கூறவோ— கள்ளவுளக் கயவனேன் அடிகளைக் குறையிரந்தேன்? அந்தோ! குற்றம் விளைந்ததே! திருமால் முதலான வானவர் மனமும் மறைமுடி பலவுங் கடந்த அடிகளின் மலரடிகள் தீவினையேன் பொருட்டாக இந்த நிலத்திலே நீண்ட தொலைவு தோய்ந்திடும் எளியவாயினவோ? தங்கள் பெருமையை என்னென்பேன்? தங்கள் உருவம் நாத முடிவையுங் கடந்த உண்மையறிவானந்த போதம் என்பர். அத்தகைய உருவம் இன்று ஒரு மண்மகன் வடிவாய் வெயிலில் வெதும்பி, வெட்டிய விறகைச் சுமந்து, பேதையேன் அன்பின் அளவாயதே! என்னென்பேன்? அலைவீசுங் கடலிலே துயிலுந் திருமாலும், அவனுந்தியில் வந்த நான்முகனும் அறியாதது—அணுவுக் கணுவாய் எல்லையின்றிப் பரந்து வானமும் பிற அண்டங்களும் கடந்த பேருருவாய் உள்ளது—தங்கள் வடிவம்! அத்தகைய தங்கள் முடி, வெட்டிய விறகையுஞ் சுமந்ததோ? என் னென்பேன்?''

என்று வாழ்த்தி வணங்கி அங்கயற்கண் அம்மையார் தலைவரைத் துதித்து வலங்கொண்டு வெளிப்போந்து வரகுணபாண்டியன் திருமுன் சென்று வணங்கி நின்றான்.

வரகுணன் மகிழ்ச்சி—பத்திரனுக்குச் சிறப்பு

பத்திரனுக் கிருக்கையளித்த பாண்டியன் ஏமநாதனை யழைத்து வருகவென ஏவலரை விடுத்தான். அவர்கள் அவனை இருக்கையிலே காணமல் அருகிலுள்ளோரை வினவினர். அவர்கள், "அவன் நேற்றிங்கிருந்தான். ஒரு முதியவன் விறகெடுத்துக்கொண்டு பத்திரன் அடிமையெனக் கூறி வந்தான். வந்தவன் சிறிது பாடினன். பிறகு நிகழ்ந்ததை அறியோம். நள்ளிரவிலே அந்த வடதிசையிசைவாணன் ஓடிவிட்டான்," என்றனர், இதனை ஏவலர் அரசனிடம் இயம்பினர்.

தென்னவன் திகைப்பும் வியப்பும் அடைந்து பத்திரனை நோக்கி, "அவன் எங்ஙனம் போயிருப்பான்? நீ இங்கிருந்து போனபிறகு செய்ததென்ன?" என வினவினன்.

பத்திரன் பாண்டியனை வணங்கி, "நேற்றைப்பொழுது தங்கள் திருவடி நீழலிலிருந்து தமியேன் சென்றதும் விரிசடைப் பெருமானர் மென்மலரடியைப் பணிந்து என் குறையைக் கூறி வேண்டி மனையகம் புகுந்தேன்! பிறகு இனிய மொழியையுடைய அங்கயற்கண்ணம்மை பங்கனர் அடியேன் கனவில் எழுந்தருளினர். 'உன் பொருட்டாக நாம் ஓடி விறகெடுத்து நகரெங்குஞ் சுற்றினேம். உன் பகைவன் வாயிலில் அமர்ந்து சாதாரி பாடி வென்று, அவனைத் துரத்தினேம்,' என்றுரைத்தருளினர். விழித்துக் கொண்டேன். நிகழ்ந்தது இதுதான்," என்றான்.

ஏவலாளர் தெரிந்து வந்ததும் பத்திரன் கனவு நிகழ்ச்சியும் ஒத்திருந்ததால், வேம்பலர் மாலையான், 'இஃது கூடலிறைவர் திருவிளையாட்'டெனத் தெளிந்தான். இகழ்ந்த நமனையுதைத்த திருவடிக்கண் இடையீடில்லாத நட்புடைய பத்திரன் பேரன்பையும் வானவரைக் காக்க நஞ்சுண்ட அண்ணலார் பேரருளையும் நினைந்து நினைந்து நெகிழ்ந்தான். விண்ணிழி கோயிலையடைந்து அண்ணலார் திருவடி பணிந்தான். பாணபத்திரனைப் பெருங்களிற்றின்

மீது அமர்த்தி நகர்வலம் புரிவித்தான். அவன் மனம் மகிழ வரிசைகள் மிதப்பச் செய்தான்.

பாணனை நோக்கி,

"வானவரும் முனிவரும் வானவரிற் சிறந்தவருந் தமக்குப் பணிபுரிய இருப்பவர் தம் இரு மலரடிகளும் நோவவந்து உமக்குப் பணிபுரிந்து குறையை முடித்துத் தந்தாரானால் மற்றெல்லோரும் உமக்குப் பணியாளரே! ஆதலால் நீர் எம் தலைவர். நான் உம் அடிமை. இவையே நமக்குள் உள்ள வழக்கு. வேறெதுவும் இல்லை. எனினும் உம்மை வேண்டிக்கொள்வது ஒன்று உண்டு. இன்று முதல் நம் இறைவரைப் பாடுவதே உம் கடமையாகும் என்பதுதான் அது!"

என்று வேண்டிக்கொண்டு விடை கொடுத்தான்.

பாணன் தனக்குப் பாண்டியன் அளித்த செல்வமும் அணிகலனும் ஆடையும் பிறவும் நாவலர்க்கும் மாணவர்க்குங் கிடைக்கப் பங்கிட்டான். பாணர் குழுவுடன் மனையிலே மகிழ்ந்திருந்தான்.

"தேவ ருந்தவ முனிவரும் தேவரில் சிறந்தோர்
யாவ ருந்தமக் காட்செய இருப்பவர் இருதாள்
நோவ வந்துமக் காட்செய்து நுங்குறை முடிப்பார்
ஆவ ரேலுமக்கு அனைவரும் ஏவலர் அன்றோ." (சுஅ)

"அரசன் நல்கிய வெறுக்கைபூண் ஆடைகள் பிறவும்
பரசு நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து
வரிசை யாலிசைக் கிளையொடு மனையில்வந் தெய்திக்
கரைசெ யாமகிழ் சிறந்திசைக் காவலன் இருந்தான்." (எ0)

௬உ. திருமுகங் கொடுத்தல்

பாணனுக்குப் பரமனார் திருடிக் கொடுத்தார்

வரகுண பாண்டியன் வேண்டிக்கொண்டவாறு பாண பத்திரன், 'இனி எமக்கு இதுவே அறிவுடைமை' என்று ஏற்றுப் பாண்டியன் அவையிலே யிசைப்பதை விட்டுப் பரமனார் திருமுன்னே யாழேந்திப் பாடும் பணியை மேற் கொண்டான். எப்போதும் இப் பணியை மேற் கொண்டா னாகையால், அவன் வறுமையடைய மங்கை பங்கர் பொறுப்பரோ? எல்லாம் வல்ல சித்தராகிய அவர் பாண்டியன் பொன்னறையிலுள்ள செல்வத்திலே சிறு பகுதியை—இடத்தோளிலே—அவனுக்காக யாழ் சுமந்த தோளிலே—சுமந்துவந்து அவன் காண வைப்பார் ஒவ்வொருநாளும்!

சில நாள்கள் சில பொற்காசுகள்—சில நாள்கள் சில மாணிக்கப் பூண்கள்—சில நாள்கள் பொன்னுடைகள்—சில நாள்கள் கவரியின் பொற் காம்புகள்—சில நாள்கள் ஒளிவிடும் அரியணையின்மீதிடும் பொற்றகடுகள்—சில நாள்கள் மாணிக்கக் குவியல்கள் கொடுத்தார் அவனுடைய இனிய யாழிசை பருகும் பரிசாக!

கைக்குக் கிடைத்த பொருளைக் கொண்டுவந்தருள் கின்ற கள்வரும் அவனுமன்றி வேறெவரும் அறியா வண்ணம் அப்பொருள்களை நெருப்பிலிட்டுருக்கியுஞ் சிதைத்தும் அவனைச் சார்ந்தவருக்கும் இரந்தோர்க்கும் அவன் கையை நோக்கி வாழ்வோருக்கும் மாருமற் கொடுத்துக் கவலை தவிர்த்துத் தானும் உண்டான்.

திருமுகஞ் சேரமானுக்குக் கொடுத்தார்

இவ்வாறு பல நாள்கள் கொடுத்த கள்வர் இறுதியிலே சில நாள்கள் கொடாது விட்டார். பத்திரன் சென்று சென்று திருமுன் நின்று நின்று பாடிப்பாடி வணங்கி வாளா வீட்டிற்கு வருவான். வறுமையினாலே வாடி வேறு

வகை யறியாமற் சுற்றத்துடன் கலங்கிச் சோர்ந்து துயின்ருன். கனவினிலே எல்லாம் வல்ல சித்தர் எழுந்தருளினுர்.

"வேப்பந்தாரானுடைய பொன்னறையிலிருந்து யானை யுண்டவிளங்கனிபோலாகும்படி யிதுவரையிலே திருடிவந்து கொடுத்தோம். எம்மிடம் அன்புடைய அவன், பொருள் போயிருப்பதை யறிந்தால் ஐயமுற்று வேறு நினைத்து விடுவான். 'மயக்கமின்றிக் கற்பைக் காக்கும் பெண்களைப் போல—துறவு காக்க முயலும் யோகியர் போல—முரசு முழங்கும் புறக்காப்பும் கயற்குறியும் இருக்கவும் பொருளைக் கவர்ந்தது வியப்பு! இக்கள்வன் உயிர்தொறும் ஒளித்து நின்ற ஒருவனே! அறியேன்!' என்பான். மற்றும் பொருள் களவு போனதை அவன் அறிந்தாற் பொன்னறைக் காவலர்க்குத் தண்டமும் இடுவான். ஆகையால், உன்னைப்போலவே எம்மை அன்புடைய உள்ளத்திலே வைத்த சேரமானுக்கு முடங்கலொன்று யாம் இப்போது தருகின்றேம், சென்று பொருள் பெற்றுக் கொள்க!"

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறை
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்;
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க!
பண்பால் யாழ்வல பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன், தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்;
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

இத்தகைய சிறப்புடைய செய்யுளை மறைக்குப் பொருள் விரித்த திருவாயினுலே மொழிந்தெழுதியளித்துப் பெருமானுர் மறைந்தனர். பாணபத்திரன் உறக்கத்தி னின்றெழுந்து பாடியாடிக் களிப்புக் கடலிலே முழுகினுன்.

கையிலிருக்கும் திருமுகத்தைக் கண்களிலொற்றியவனாய் மணிப்பட்டாடையிலே ஏந்திப் பொதிந்தான். இறைவரை வணங்கி மனையை விட்டுப் போந்து வானிழிகோயிலிலே வள்ளலாரை வலம் வந்து வணங்கி விரைந்து மேற்புலம் நோக்கிச் சென்றான். காட்டையும் மலையையுங் கடந்து கொதிக்கும் வெய்மையான பரல்களையுடைய பாலையையும் அரிதிலே நீங்கிப் பலாமரத் தொகுதிகளையுடைய வளம் நிறைந்த மலைநாட்டையடைந்தான்.

மலைக்காவலனும் இசைக்காவலனும்

அலைகடலை யாடையாக வுடுத்த அந்த மலைநாட்டு மங்கைக்கு வானளாவிய குன்றுகள் முலைகளாகவும் திருவஞ்சைக்களம் முகத்திலே தீட்டிய பொட்டாகவும் விளங்கின. திருவஞ்சைக்களம் அறமகளுக்கும் திருமகளுக்கும் மறமகளுக்கும் வடமொழி தென்மொழியாகிய கலைமகளுக்கும் ஆக்கந்தரும் உறைவிடமாகியது.

பாணபத்திரன் அந்நகரின் அருகிலே தண்ணீர்ப் பந்தல் ஒன்றையடைந்து களைப்பை யாற்றிக்கொண்டிருந்தான்.

அன்றைய இரவிலே அறநெறியிலே செல்லுஞ் சேரர் பெருமான் கனவிலே கண்ணுதலார் எழுந்தருளினார்.

"நாம் தென்னவனுடைய மதுரையிலே யிருக்குஞ் சித்தர். உன்னை நாடியே வந்தோம். நம் அடியவன் பாணபத்திரன் உன்னிடம் பொருள்பெற, நம் திருமுகங் கொண்டு வந்துளான். அவனுக்கு வளநிதி கொடுத்து விரைவிலே விடுதல்வேண்டும்.''

சித்தர் மறைந்தார். சேரமான் உறக்கம் நீங்கி விழித்தார். அமைச்சர் முதலானோரிடம் அக்கனவை விளம்பிப் பாணபத்திர னிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க ஏவலரை விடுத்தார். அவர்கள் நகரெங்கும்—மாடமும் மேடையும் மன்றமும்—சென்று தேடித் திகைத்தனர்; இறுதியிலே தண்ணீர்ப் பந்தரொன்றிலே கண்டு மகிழ்ந்து ஓடிக் காவலருக்குக் கூறினர்.

சேரமன்னர் படையொடுஞ் சென்று பாணன் தங்கிய பந்தரைக் கண்டார். கைகுவித்துத் தலைமீது வைத்த வராய்ச் சென்று பாணனை வணங்கினர்; கூத்தாடினர்! பாடினர்! திருவடியிலே தம் முடியைச் சேர்த்தார். குளிர்ந்த தேனையருந்திய வண்டுபோல மகிழ்ந்தார். திருமுகத்தை வாங்கி மலர்க்கண்களிலே ஒற்றிக்கொண்டார். கண்ணீர் வார மெய்பொடிக்க முடியின்மேற் சுமந்தார். மறுமுறையுந் தண்டு போல் வீழ்ந்தார். மெய்சிலிர்க்கக் கூத்தாடினர். உடல் பருத்தார். படித்தார். களிப்புக்குக் கரைகாணதவரானர்.

அந்தத் திருமுகத்தைப் பொற்பீடத்திலே வைத்து மதகளிற்றின்மீதேற்றிப் பாணபத்திரனை முன்னிருத்தித் தாம் பின்னேயிருந்து, ஒளிவிடும் இணைக்கவரி கொண்டு வீசினர். பலவகை இசைக்கருவிகள் முழங்கத் திருநகரை வலம்வந்தார். அரண்மனையை அணுகினர். அப்போது செம்பஞ்சூட்டிய மெல்லடிமங்கையர் பலர் பலவகை மங்கலப் பொருளுடன் எதிர் கொண்டனர்.

சேரர்பெருமான் களிற்றிலிருந்திறங்கிப், பத்திரனையும் இறக்கி, நறுநீராற் குளிப்பாட்டி, ஐவகை நிறந்தீட்டி அணியோவியங்கள் அமைத்த கூடத்திலே, அம்பொன் னணையிலே அமர்த்தி, மலரிட்டு வழிபட்டு, அறுசுவை யுண்டியை அழகிய பொற்கலங்களிலிட் டருத்தினர். அழகிய நறுமணக் கலவை திமிர்ந்து மாலையணிவித்து முகவாசமளித் தார்.

பிறகு, பொன்னறையைத் திறந்து, பாணபத்திரனை அழைத்துச், 'சிவபெருமானர் திருவடி யன்பரே! இந்தச் செல்வமெல்லாவற்றையும் நீரே யெடுத்துக்கொள்ளும்!' என்றார். பாணன் பணிந்து, 'நம் பெருமானு ரருளுக்குரியீர் நீர். ஆகையால், நீரளித்ததே போதும்,' என்றான். அரசர் அதுகேட்டுத் தாம் எண்ணியவாறு வழங்க வழங்கப் பாணன் மறுத்துவிட்டுத் தனக்கு வேண்டிய அளவிலே கரி, பரி, பொன், பட்டாடை, பொற்சிவிகை, பொருள் முதலிய வற்றை யெடுத்துக்கொண்டான்; வணங்கிப் புறப்பட்டான்.

அரசர் ஏழடியோடு நில்லாமல், நீண்டதொலைவு பின் வந்து வழிவிடுத்து மீண்டார். இசைக்கிழவன் வடதிசைக் கிழவன்போல மதுரையை அடைந்தான். அடைந்ததும் கூடலிறைவரை வணங்கி மனையை அடைந்து, கொண்டு வந்த பொருள்களை மதுரை மக்களெல்லோரும் அறிய மறையவர், புலவர், பாணர் முதலானோர்க்கு நல்கி வாழ்ந் திருந்தான்.

"மன்னன் தானென் னியவாற்றல்
வழங்க வழங்க மறுத்துமறுத்து
இன்னல் தீரும் இசைக்கிழவன்
இலங்கும் பொலன்பூண் இருநிதியப்
பொன்னம் சிவிகை கரிபரிமான்
பொற்பட் டாடை பலபிறவும்
தன்ன என்னும் அளவாற்றல்
தானே கொள்ளத் தார்வேந்தன்." (உஅ)

"பின்னேழ் அடியோ சேண்சென்று
பெருமை சான்ற வரிசையினால்
தன்னேர் இசையான் தனைவிடுத்து
மீண்டான் ஆகத் தமிழ்மதுரை
மின்னேர் சடையார் இசைத்தொண்டன்
தானும் மீண்டு வெயில்விரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன்
போல மதுரை நகர்புக்கான்." (உகூ)

"வந்து மதுரைப் பெருமானை
வணங்கிக் கொணர்ந்த நிதியெல்லாம்
இந்து மருமான் நகர்உள்ளார்
யாரும் அறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும்
புலவோர் தமக்கும் முறைநல்கிச்
சந்த யாழின் இசைப்பாணர்
தருமம் அனையான் வைகினான்." (௩0)

———

சரு. பலகை யிட்டது

பாணன் இசைத்தொண்டு

நான்மாடக் கூடலிறைவ ரருளாலே பொருள்பெற்ற பாணன் முக்காலமும் முக்கட்பெருமானார் திருமுன் பாடுவதோடு, அன்பு மிகவினால் அரையிரவும் விடையின் பின்புறம் நின்று, ஏழிசைப் பாடலிசைத்துவரத் தொடங்கினான்; வணங்கும் அடியவரும் வானவருந் தொழ, மதிக் கொழுந்தலைய, வார்புனலலைய, நடமிடும் நம்பனார், முத்துப் பல்லக்கிலே திருப்பள்ளியறைக் கெழுந்தருளும்போது பணிந்து பாடுவான்.

ஓரிரவிலே, பாணன் எவ்வகை யிடையூற்றுக்கும் அஞ்சாமல் தன் ஒழுங்கிலே நிற்பானென்பதை உலகினர்க் கறிவிக்க உம்பர்பிரான் திருவுளங் கொண்டார்போலும்! கருமுகிற் கூட்டம் எத்திக்கினும் ஆரவாரித்தெழுந்தது. அணியணியாக மின்னல்! திசை மயங்கும்படி யிருண்டு விண்மீன்களை மறைத்துப் பரவிய இருண்ட முகில்கள்! நஞ்சுமிழும் அரவுகள் துடித்துச் சுருண்டு அளையிலே பதுங்கும் பேரிடிகள்! வருணன் முன்னொருமுறை மதுரையை முடிக்கவிடுத்த ஏழு முகில்கள் வளைந்த காட்சி! வானம் கரியகடலை யெடுத்துக் கவிழ்ப்பது போல—இருளில் இருப்புக்கோல் நிரைத்தாற்போல வெள்ளை நீர்த்தாரை நிறங் கருகித்தோன்ற—மழை பெய்தது! 'உள்ளுணரா ருள்ளம்போல்' கீழும் மேலும் பக்கமும் முன்னும் பின்னும் விளங்காமல் இருண்டிருந்தது அவ்விரவு!

பெயல்மிக்க மாரியிலே நனைந்துவரும் பாணன், அம் மாரியைப் பூமாரியாக நினைந்து திருக்கோயிலிற் புகுந்தான். காமாரியைக் கண்டு பணிந்தான். அவருடைய அருண்மாரியிலே நனைந்து தேமாரிபோலத் தெளிந்த இசையைப் பொழிந்தான். விடையின்பின்னே நின்றான். வீணையை இடத்தோளிலே கிடத்தினான். நரம்பைத் தழுவிக் குரலோசையை ஒப்பிட்டான். பொன்போன்ற கொன்றை யணிந்த கோமகனார் செவிவழியே சென்று

அருட்பெயர் தழைக்கத் தமிழிசைப்பாணிச் சுவையமுத மடையைத் திறந்து விட்டான்!

நரம்பு நனைந்து இசைமழுங்கியது! உடல் நனைந்து நடுங்கியது! இசையை யெழுப்பும் விரல்கள் விறைத்தன! அம்மட்டோ, வலி வாங்கியும் நின்றன! மெய் சிலிர்த்தது! சேறுமிகுந்து மெல்லிய அடிகள் புதைந்தன! எனினுங் கலங்காமல் அன்பு இசையாய் அரும்புவதைப்போல ஊனையும் என்பையும் உருக்கும் அமுதஇசை பொழிந்தான் பாணன்.

"மாதர் நகையாய்! மதுரேசர்
உண்பலிக்கெம் மனைவாய் வந்து
காதல் முகத்தரும்பிக் காட்டியென்
சிந்தை கவர்ந்தார் போலும்
காதல் முகத்தரும்பக் கையறவு
திரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித்
தாவி பிழைத்தேன் போலும்!"

"ஒண்ணுதலாய்! வெண்டலைகொண்
டுண்பலிக்கு நம்மனையி னூடே கூடற்
கண்ணுதலா ருள்ளாளக் கானமிசைத்
தென்னுள்ளங் கவர்ந்தார் போலும்
கண்ணுத லார்பாடும்அபி நயங்கண்
டாகங்க லப்பேன் பாதி
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித்
தாவி பெற்றேன் போலும்!"

"ஐயரியுண் கண்ணாய்! திருவால
வாயுடையான் ஐயங் கொள்வான்
மையனகை செய்தென் வனமுலையின்
மேற்செங்கை வைத்தார் போலும்!
மையனகை செய்தென் வனமுலைமேற்
கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி
விழித்தாவி தரித்தேன் போலும்!"

பலகையிட்டார்

ஆகா, ஊகூ என்னும் இருவர் இசைக்கு மகிழ்ந்து பரிசிலாகக் கொடுக்கப் பெற்ற—சங்கக் குழையணிந்த—இரு திருக்காதுகளினும் பெய்யப்பெற்ற இசைத் தொண்டுக்கு மகிழ்ந்த கூடற்பெருமானுர், 'இதன்மேல் நின்று பாடுக! இப்பலகை உனக்கே!' என வான்மொழியாகக் கூறியருளி ஒளிவிடும் மாணிக்கப் பலகையொன்றைப் பாணனுக் களித்தருளினுர்.

அண்ணலார் அருளுக்கஞ்சிய பாணன் அப் பொற் பலகையில் நின்று, இனிமைமிகும் இன்னிசையைப் பொழிந்தான். பிறகு, நான்மறைகள் சூடும் கழலணிந்த திருவடியை அகததிற்கொண்டு, பலகையையுங் கையிற் கொண்டு தன்மனையை நாடிச்சென்ருன். செல்லும் போதே மழைநின்று முகிற்கூட்டம் விலகியது. வானம் தெளிந்து, அகத்தியரால் பருகப்பெற்ற கடல்நீர் வற்றிப் பொன்னும் மணியும் முத்தும் புலப்படக் கிடந்ததைப்போல விண்மீன்கள் விளங்கின. யாழ்வல்லோன் மனையிற் படுத்துறங்கினுன்.

இவனே மதுரை நாயகன்!

இருட் கூட்டத்தை விலக்கிக் கதிரவன் விழித்தெழுந்தான். ஆயிரங் கைகளையும் பரப்பிக் கடலைநீந்தி வெளி வந்தான். அந்த வைகறையிலே அன்றிரவில் பாணனுக்குப் பரமனுர் பலகையிட்ட பரிசுத்திறத்தை வரகுணன் கேட்டான். இசைக்கரசனுன பாணனை வரவழைத்து, அப்பொற் பலகைமீதிலேயே அமர்த்தி, 'இவனே மதுரை நாயகன்!' என நினைத்துக் கதிர்விடும் மணிக்கலன்களை நல்கி முறையாக நடத்திவந்தான்.

பாண்டியன் வரிசைபெற்ற பத்திரன் முன்போலவே நாற்போதும் முறைப்படி வழிபட்டு வந்தான். வரகுணனும் கூடலிறைவரை வணங்கிச் சில பகல் கழித்துச் சிவனுருருப் பெற்றுச் சிவபுரமடைந்தான்.

சச. இசைவாது வெல்லுதல்

ஈழநாட்டு விறலி—பாண்டியன் வேண்டுகோள்

வரகுணனுக்குப் பின் அவன் மகன் இராசராசன் முடி சூட்டிக் கொண்டான். அவனுக்குக் காமக்கிழத்தி ஒருத்தி அவனுயிர்போன்றவளாய் விளங்கினள். அவளுக்கும் பாண பத்திரன் கற்புடைய காதலிக்கும் இசையினாலே பகைமூண்டது. பாண்டியன் காமக்கிழத்தி பொருதவளாய்ப் பாண்டியனிடம் கோள்மூட்டிப் பத்திரன் மனைவியை மட்டந்தட்ட வழிதேடினாள். 'கொண்டவன் வலியனானாற் குப்பையேறிச் சண்டையிடலாம்' அன்றோ? அரசன் அவள் விருப்பப்படியே, பத்திரன் மனைவியை இசையில் வெல்ல ஈழநாட்டிலிருந்து விறலி யொருத்தியை வரவழைத்தான்.

அவள் யாழை முதுகிலே தழுவவிட்டுப் பாடும் மாண வியர் பலர் சூழ வந்து பணிந்தாள் பாண்டியனை. அவன் ஆணைப்படி கின்னரமாது போல ஏழிசையு மிசைத்துக் காட்டினாள். மேல்வரும் பழியை நோக்காத வேந்தன் இசை வல்லாளை நோக்கி, "விறலியே! பத்திரன் மனைவியை எமக்கெதிரிலே உன்னுடன் பாடவேண்டி அழைத்திடு. அவள் மறுப்பினும் யாம் அவள் சார்பாக விலக்கினும் விடாமல் அவளுள்ளம் நாணமுற வஞ்சினம் இட்டுச், 'செல்லாமல் நில்' என வளைந்துகொள்," எனக் கூறினான். மேலும், அவளுக்கு வேண்டியன நல்கி யிருக்கையும் அளித்தான்.

முதல் இசைப்போட்டி—'அரச னெவ்வழி அவ்வழி...'

பின்னர்ப் பத்திரன் மனைவியை அழைத்து, மனத் தொன்றும் புறத்தொன்றுமாக மன்னவன் கூறுவான்:

"பாடினியே! இசை வல்லாளொருத்தி, 'இங்கு என்னொடு இசைபாட வல்லாருளரோ?' எனத் தருக்கிப் பேசுகிறாள். நீ அவளொடும் பாடி வெல்வையோ?"

"என் கற்புறுதியும் கூடற்பெருமானுர் திருவருள் துணையும்கொண்டு வெல்வேன்; கோழைத் தன்மையால் வருந்தி வாடமாட்டேன்!" என்ருள் பாடினி.

அரசன் நன்றெனக்கூறி அவளையும் விடுத்தான்.

மறுநாட் காலை மன்னவன் அவை கூடியது. இரு பாடினிகளும் வந்தனர். ஈழத்துவிறலி பத்திரன் மனைவியை இகழ்ந்து பேசி, "யாழ்க் கோலுக்குக் குற்றங்க ளெத்துணை? குணங்கள் எத்துணை? தெய்வம் எது? உயிர், மெய், உயிர் மெய் எழுத்துகள் இசைக்குப் பெற்ற மாத்திரை எவ்வளவு?—இவற்றை முதலிற் பேசுவோம். பிறகு யாழ் வாசிப்போம். இல்லையேல் உனக்குப் பெரிய இழிவுதான்!" என்ருள்.

"நறுமண நெய் தடவிய பூங்குழலாய்! நீ கடல்கடந்து வந்ததாலேயே சிறந்த கல்வியும் வாதிடுவதில் ஊக்கமும் பலரும் விரும்பும் பெண்மையும் உடையை யென்றறியலாம். அவற்றை இங்கே—அரசவையில்—அரசரறியச்—செப்பவும் வேண்டுமோ? நின்னெடு வாது செய்வது இசை யொன்றினுக்கே! வாய்திறந்து வையும் வாதுக் கன்று! உன்போல் மானம் விற்றுண்ணுங் காரிகையரே மற்றவற்றிற் கேற்றவர்!"

அரசன் விலக்குவான்போலத் தலையிட்டு, 'வீண்பேச்சு வேண்டா. நீங்களிருவரும் பாடுங்கள். வென்றவர்க்குத் தோற்ருேர் அடிமையாவதே ஈடு!' என்ருன்.

ஈழ நாட்டரிவை முதலிற் பாடத்தொடங்கினுள். யாழை யிடப்பக்கத்திலே அணைத்துக் குரல்வழி விரல் சென்று யாழ் நரம்பைத் தடவ—இறுமாப்புடன் புன்னகை தழுவ—ஏழிசையை அரசன் செவிகளில் அவன் காமக் கிழத்தியின் மழலை மொழியெனச் சொரிந்தாள்.

பாணபத்திரன் மனைவியும் யாழையெடுத்து மாடகத்தை முறுக்கி, நரம்பை ஒழுங்குசெய்து பாடினுள். இசையிற் சிறந்த கந்தருவரும் செவிமடுக்கும்படி—நாணு

றும்படி—மெல்விரலின் நடைவழி நாவிலே விளைந்த அமுதைப் பேரவையிலிருந்த பலரும் செவிமடுத்து மகிழ்ந்தனர்; அரசன் உளக்கருத்தை யறியாத அவையோர் பத்திரன் மனைவியின் பாடலை மெச்சிப் புகழ்ந்தனர்.

ஆனால், அரசனோ இலங்கையினின்றும் போந்த—அழகினாலே தன் மனத்தைக் கவர்ந்த—பாடினியின் பாடலைப் புகழ்ந்தான்! உடனே, அவையோர் அரசனுளங் கோடியவழியே கோடி யோடிப் புதிய பாடினியையே புகழ்ந்தனர்.

''முன்னவன் அருளைப்பெற்று மும்மையுந் துறந்தோ ரேனும்
மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்கா றன்றே''

பொன்தளிர்போன்ற—மணமற்ற—அழகிய மேனியாளின் மையலாகிய புதுக்கள்ளைப் பருகி, நன்மை தீமையறியாத கன்னித் தமிழ்நாடன் அவையோரை நோக்கி, 'இன்றொரு நாளிலேமட்டுந் தேர வியலுமோ? நாளைக்குங் காண்போம்!' என இயம்பிப் பாடினிகளைச் செல்ல விடுத்தான்.

பாணன் மனைவி கலக்கம்—''அஞ்சேல்''?

புதியவள் தோழியர் புடைசூழத் தருக்குடன் மனை புகுந்தாள். 'பாண்டியன் புகழ்ந்தது புகழ்ந்ததே! இனியேது தோல்வி?' என எண்ணமிட்டுக் களித்து மஞ்சத்திலே மயங்கிக் கிடந்தாள்!

பத்திரன் காதலியோ படபடத்த வுள்ளத்துடன்—வாடிய மெய்யும் கூடிய கண்ணீருமாய்—அங்கயற்கண்ணம்மை பங்கரை யடைந்து, கைகுவித்து வணங்கிக் கதறினாள்.

''தென்னவர் மரபிலே பிறந்து நடுநிலை தவறுமல் உலகைக் காத்த மன்னவனோ வாரவழி நின்றான்! அவையிலுள்ளோரும் அவ்வழி நின்றனர். எனில், இனி யெவர் தாம் நடுநிலை நின்று போவார்? தங்கள் அருளொன்றே தக்கது செய்து தமியளைக் காக்கும்!''

வானொலி வழங்கியது :

''அஞ்சேல்! நாளை நீயே வெல்லுமாறு செய்வோம் !''

மகிழ்வுடன் மங்கை தன்மனை புகுந்தாள்.

மறுநாள் நடந்த போட்டியிலே வழுதியும் அவையோரும் முதல்நாள் நவின்றவாறே நவின்றனர். பாணன் மனைவி பதைபதைத்து, ''பாண்டியர் மரபு சிறக்கவந்த மன்னரே! உலகை அரசியல் வழாது காக்கும் ஆண்டகையே! நீர் வார வழக்கிலே அடிவைத்தீர்! அவையும் அவ்வழி நின்று விட்டது! இனி நடுநிலை தவருதார் அரவணிந்த அண்ணலாரொருவரே! ஆகவே, அவர் திருமுன் சென்று பாடுகிறோம். அப்போது, இருவர் இசையினையுங் கேட்டோர் எவராயினும் நன்றே துணிந்து, 'வென்றவளிவள்!' எனக் கூறின் ஏற்றுக் கொள்வோம்,'' என்று கூறினாள்.

மன்னவனும் மறுமாற்ற மின்றி ஒப்புக்கொண்டான். அவை கலைந்தது, அரிவையருஞ் சென்றனர்.

கூடலிறைவர் திருமுன்

பிற்றைநாட் காலையிலே பிறைமுடித்த பெருமானார் திருமுன்னே பேரவை கூடியது. நன்மை தீமை யுணர்ந்த நால்வகைக் கேள்வியரும் (கீதம், இதயம், சுருதி, தாளம்), பாண்டியனும், அமைச்சரும், பிறரும் அப்பேரவையிலே அமர்ந்தனர். வெள்ளிமன்றவாணர் மண்டபத்திலே அமர்ந்த அந்த அவையினர்முன் போட்டி யரிவையர் இருவரும் அழைக்கப்பட்டனர். ஈழநாட்டாள். 'இன்று பாடினி எனக்கு அடிமையாவது திண்ணம்,' என்று செருக்கொடு விரைந்து வந்தாள். கற்புங் கலையும் கண்ணுதலார் கழலடியன்பும் உடையவளாய்ப் பத்திரன் மனைவியும் மெல்ல வந்தாள்.

அந்தப் பேரவையிலே அசையும் ஆரமும் தோளணி முதலிய கலன்களும் ஒளிவிட அறிஞர்தமுவி லொருவராய் நாவலர் உருத் தாங்கி நம்பரும் வந்தமர்ந்தார்.

அப்போது கலத்தின் வந்த காரிகையாள் முந்தி வந்து யாழிசைத்து, 'ஏத்திசை' பாடினள். மூன்று நாளாகக் கேட்டுச் சலித்த—அரசனுக்காகப் புகழ்ந்த—அவளிசையிலே யாரும் ஈடுபடவில்லை.

பாணன் மனைவி யாழை ஏந்தி, இருக்கையி லமர்ந்து நரம்பைத் தூண்டி அவ்விசையின் வழியே தன் குரலிசையை யிசைத்து வெண்டாமரைவாணி பாடப் பாடினாள்.

"குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டி!
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகொண்டு
இடங்கள் தோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே?"

"தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே!
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
ஆனா யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே?"

"வரத னாகி யெவ்வுயிர்க்கும் மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே!
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார் போல்
விரத யோக நிலையடைந்தாய் என்பார்க் கென்னான் விளம்புவனே?"

மதுரைப் பிரானாரை யிவ்வாறு தான் கருதிய இசையினாலே கனிந்து பாடியதைக் கேட்டு மன்னவர் மட்டுமா, வானவருங் கனிந்தனர். அவள் நாவிளை யமுதத்திலே பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, குறும்போக்கு ஆகிய எட்டுக் கலைத்தொழிலுடன் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல். எள்ளல், பட்டடை என்னும் இசைக் கரணமும் பொருந்திய யாழிசை கலந்து கமழ்ந்தது. இடையிலே பிங்கலை இயக்கத்தைக் கடந்து மூலத்திலிருந்து இயக்கி, நடுவுறு தொழிலால் பிரமரந்திரம்வரை நடைபெறப் பாடும் உள்ளாள இசை—மிடறு வீங்காமல், விழியிமைக்காமல், எயிறு வெளிப்படாமல், புருவம் நிமிராமல், கவுள் துடியாமல் பாடபெற்ற இசை—யாவருடைய உள்ளத்தையும் களிப்பிலே மிதக்கச் செய்தது.

பாடினி வென்றாள்!

கன்னித் தமிழ் நாடுடைய காவலன் ,தனக்குரிய கைதவன் எனும் பெயரை யுறுதிப்படுத்தத் தான் இனிய இசை யறிவாளனாயினும் முன்போலவே முடிவுகூற நினைத்திருந் தான். எனினும், முன்னவர் திருமுன் இருப்பதனாலே— அவரருளாலே— உளக்கோட்டம் நிமிர்ந்து, 'பத்திரன் மனைவி வென்றாள் !' என்றான். யாவரும் மகிழ்ந்து உள்ளமுற அவ்வாறே கூறினர். பாண்டியன் ஈழவிறலியின் கழுத்திலே பாணன் மனைவியை அமர்த்தினான். அப்போது உமையிடப் பாகத்தை மறைத்துவந்த ஒப்பற்ற நாவலர், ''வியப்பிது! வியப்பிது!!'' என மொழிந்து, அவை காண மறைந்தனர்! எல்லோரும் வியந்தனர். செந்தமிழ்ப் பாண்டிநாட்டான் திகைத்து நடுங்கினான்.

செங்கண் விடையார் திருவிளையாடலென்று தெளிந்த அவையோர்கள் பெருமானார் அருளின் திறத்தையும் அடியவர் அன்பையும் புகழ்ந்து, தங்கள் கண்களிலே இன்ப நீர் வடியப் பேரின்பக் கடலிலே முழுகினர். அரசன் பத்திரன் மனைவியை இறக்குவித்து முதன்முதலாக அவளுக்கு முத்துமாலை, மணிக்கலன்கள் முதலான வரிசைகள் நல்கினான். மற்றவ ளுக்கும் வரிசை யளித்துச் சிறப்புடன் இருவரையும் போக்கினான். பிறகு, வானிழி கோயிலிலே வைகிய உமையொரு பங்கரான பெரும் புலவர்க்கும் உயர்ந்த மாணிக்கக் கலன்கள் நல்கி வணங்கினான்.

''மன்னவர் ஆற்றல் தெய்வத்தின் முன் நில்லாது, எந்தத் தெய்வ வலியும் முப்புரமெரித்த முக்கண்ணனார் வலிமுன் நில்லாது,'' எனப் பெரியோர் மொழிவதைப் பாண் மகளால் அறிந்தேனென வியந்தான். திருக்கோயில் வலம் வந்து பன்முறை பரமரைப் பணிந்து தன் கோயிலைச் சார்ந்தான்.

அவனுக்குச் சுகுண பாண்டியன் பிறந்தான்.

சடு. பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்தல்

குருவிருந்த துறையில்

வைகையின் தெற்கே குருவிருந்த துறையென வொரு நகரமுண்டு. அந்நகரம் வானவர் குரு இருந்து நோற்று மங்கை பங்கரை வழிபட்ட பெருமையது. 'குருநாதன்' என்னுந் திருப்பெயர் தாங்கிய இறைவரைத் திருமாலும் நான்முகனும் அங்கே வழிபட்டனர்.

அந்நகரிலே வேளாள மரபை விளக்கவந்த சுகலனுக்கும் சுகலைக்கும் பன்னிரு மக்கள் பிறந்தனர். அவர்களைப் பெற்றோர் அடக்கி நல்வழியில் நடத்தாமல் அன்பினாலே அவர்கள் மனம் போனவாறு நடக்கவிட்டனர். பெற்றோராலேயன்றோ பிள்ளைகள் கெடுகின்றனர்! சில நாட்களிலே சுகலனுஞ் சுகலையும் மக்களைவிட்டு மடிந்தனர்.

கொடிய நெறியிலே சென்ற அப்பிள்ளைகள் காட்டு வேடரோடு கூடித் திரிந்தனர். விலங்குகளை வேட்டையாடினர். அங்கோரிடத்திலே, வெயில் புகாத புதரொன்றிலே, ஐம்புலன் அடக்கிநோற்கும் வியாழனைக் கண்டனர். கைகொட்டி நகைத்துக் கல்லையும் பரலையும் வாரி அவன் மேல் எறிந்தனர். வினையை யெறிந்த வியாழன் தவத்துக் கிடையூறு செய்த அவர்களை மனம் நொந்து நோக்கினான்.

"யாவரும் தொழும் உழுதொழிலை மறந்து வேடர் தொழிலி லீடுபட்டீர்கள்! அறிவின்றி விலங்குகளைப்போல நடந்து கொண்டீர்கள். மண்ணை உழுந் தொழிலுடைய மக்களாகிய நீங்கள் அதே தொழிலுடைய விலங்காகப்—பன்றியாகப்—பிறப்பீர்களாக! தந்தை தாயை யிழந்து வருந்துவீர்களாக!"

கொடிய சாபமிட்டான் குரவன்! மறமே உருவான மக்கள் பன்னிருவரும் அஞ்சி, 'எப்போது தணியும் இச் சாபம்?" என்று வேண்டினர். இடுக்கணைத் தவிர்க்கும் இறைவரை வழிபடுங் குரவன் தான் கொண்ட சீற்றத்தை 'நீர் கிழிய எய்த வடுப்போல', மாற்றிக்கொண்டு கூறுகின்றான்:

"என்னையாளும் இறைவரான கூடல் முதல்வரே உங்களுக்குத் தாயாய் வந்து முலைப்பாலளித்துக் காப்பார். மேலும், அமைச்சராக்கி வீடுந் தருவார்!"

குருவிருந்ததுறையின் அருகிலுள்ள காட்டிலே பன்றிகளுக்கெல்லாம் அரசான பன்றியின் பெடை வயிற்றிலே பன்னிரு குட்டிகளாய்ப் பிறந்தனர் பன்னிருவரும்!

பாண்டியன் வேட்டையில்

ஒரு நாள் இராசராச பாண்டியன் படைவீரரும் வேடருஞ் சூழக் களிற்றின்மீதூர்ந்து மேற்றிசைக் காட்டிலே வேட்டையாடப் போந்தனன். காலிற் செருப் பணிந்த—காட்டிலே விலங்குறையும் இடமறியும் இயல்பினரான — ஒற்றர்கள் விலங்குகளின் அடிச்சுவடுபற்றிச் சென்று, புலால் வாய்ப் புலியும் பன்றியும் இரலையும் புல்வாயும் உறையுமிடமறிந்து வந்து உரைத்தனர். வேட்டையிற் பயின்ற மக்கள் முன்சென்று காடுகளைத் தறித்து வழி செய்தனர். வலைகளையிட்டு, நாய்களைப் புறத்தே காவல்வைத்து, படையேந்திய வீரரையும் பக்கங்களில் நிறுத்தினர். அரசனுங் களிற்றின் மேல் அமர்ந்து வில்லை யேந்தினன்.

இவ்வாறு முன்னெச்சரிக்கை செய்த பிறகு பறைகளையடித்துங் கொம்புகளை யூதியும் ஆரவார முண்டாக்கினர். சில இடங்களிற் பாவை விலங்குகளை (விலங்குப் பதுமைகள்) வைத்து அவற்றின் குரல்போல ஓசை யெழுப்பினர். ஆகவே விலங்குகளெல்லாம் வெருண்டும் மயங்கியும் வெளிப்பட்டன. வீரர்களும் அரசனும் வெங்கணைகளை வீசிக் காட்டைத் தூர்த்தனர்.

மான்கள் கால்முறிந்து வீழ்ந்தன! தலைதறிந்து சாய்ந்தன! வேழங்கள் இரத்தம் பெருக, வெண்ணிணம் வெளிப்படத் துதிக்கைமுறிந்து வீழ்ந்தன! புலிகளுங் கரடிகளும் வாய்பிளந்து மாய்ந்தன! தோண்டிவிடப் பட்ட புற்கிழங்குகளின் வாடைபற்றி யோடிவந்த பன்றிகள் வலைகளிலே வீழ்ந்தன! பார்வை விலங்குகளைக் கண்டு

நெருங்கிச் சில பன்றிகள் வலைகளிலே வீழ்ந்தன! வலைகளைத் தப்பியோடியவை வேட்டை நாய்களாற் பற்றுண்டன! வீரர்களின் வேல்களிலே பாய்ந்தன!

இவ்வாறு பலவகையாலும் பட்ட விலங்குகள் போக எஞ்சியவைகளிற் சில வலையைத் தள்ளிவிட்டு வீரர்மே லெதிர்ந்து மீள்கின்ற காட்சி மதிலைச் சூழ வந்தவரைத் தாக்குகின்ற பொறிகளின் நிலைமை உணர்த்தின!

சில வீரர்கள் விட்ட கணைகள் சொல்லினும் கடிது சென்று புலியைத் துளைத்துக் கரடியைத் துளைத்துக் களிற்றைத் துளைத்துச் சென்றனவாம்! சில விலங்குகள் அம்புகளுக்குத் தப்பி வலையைக் கிழித்துக்கொண்டு ஓடி வந்து நாய்களாலே பற்றப்பட்டு அலைப்புண்டன. அவை மேலை நாவிலிருந்து பற்றிய வினையை விட்டித் தப்புவாரைத் நையலார் காமம் தடுத்துத் துன்புறுத்துவதை விளக்கின.

பிறைத் திங்களைக் கௌவினாற் போன்ற மருப்புக்களை யுடைய களிறு தேன் சொரியும் அரும்பென நுழைந்த அம்புகள் சென்ற புழையிலே செந்நீர் வடிவது மலைமீது பற்றிய தீக்கொழுந்துபோலத் தெரிந்தது.

வீரரார்ப்பும் துடியின் ஒலியும் கொம்பின் குரலும் வாளி தாக்கிவிழும் விலங்கின் கதறலும் பிழைத்தோடும் மானின்மேற் பாய்ந்தோடும் நாயின் குரைப்பும் காடெங்கும் பரவி யொலித்து இடியின் குமுறலை நினைவூட்டின.

பாண்டியன் படைவீரருடன் மேலும் மேற்கே சென்றான்.

பன்றி யரசன் வீரப்போர்

ஓரேனம், ஏனமன்னன் இருக்கையை நோக்கி ஓடியது.

"எங்கள் அரசே! இங்குள்ள விலங்குகளை யெல்லாம் திங்கள்குல மன்னன் கொன்று வருகின்றான்!" என்று முறையிட்டது. பன்றியரசன் களிப்படைந்தான். போர் வந்ததென்று மனம்பூரித்தான். தன் உயிர்க் காதலியை நோக்கினான்.

"இன்று நான் பாண்டியனோடு போர்புரியப் போகிறேன். வென்று வாகைசூடி வருவேன். அன்றி வீரச்சாவு பெறுவேன். நீ உன் புதல்வரைப் பாதுகாத்துக் கொண்டு நன்றாக இருத்தல் வேண்டும்."

பன்றியரசி நகைத்தாள்:

"உயிர் போருக்குச் செல்ல உடல் இங்கிருப்பதோ? நன்று நன்று! இந்தப் பாவியோ மேலைநாளில் இக் குட்டிகளை யீன்ற தெய்வம்? நீ போரில் வென்று வந்தால் உடன் வருவேன். இன்றேல் யானும் முடிவேன். 'நிழலுக்குஞ் செயல் வேறுண்டோ? போவாம்! எழுக!"

பன்றியரசி பொருக்கென எழுந்தாள். தன்னைத் தழுவி யுடன்வருங் குட்டிகளை மெல்ல நீக்கிவிட்டுக் காற்றெனக் கடிது செல்லுங் காதலனொடு சென்றாள். குட்டிகள் பேதுற்று நின்றன! பலவகைப் பன்றிகளுங் கூட்டங் கூட்டமாய்ப் படை வீரர்போல அணிவகுத்து முன்சென்றன. பன்றிவீரன் மானமென்னும் அழகிய குதிரைமீது தாவிச் சென்றான்.

முன்னே செல்லும் தூசிப்படைப் பன்றி வீரரும் எதிரே வரும் பாண்டியன் படைவீரரும் எதிர்த்தனர். பாண்டியன் மறவர் சற்றே விலகி நின்று கணைமழை பெய்தனர். அம் மழையினாலே இரத்தவெள்ளம் ஓடியது! பன்றிகளின் யாக்கைகள் விழுந்தன! குடர்கள் சரிந்தன! என்புகள் ஒடிந்தன! வழும்பும் மூளையும் சொரிந்தன! பருந்துகளுங் காகங்களும் பறந்தன! உயிரும் மெய்யும் பிரிந்தன!

பன்றி வீரரும் விழுவரோ? எரியெனப் பதைத்தனர்! பாண்டியன் படைவீரர்மேற் பாய்ந்தனர்! சிலரைச் சிதைத்தனர்! சிலரைத் தள்ளிச் செம்புனல் வாயிற் பெருக உதைத்தனர்! சிலரைத் தம் மருப்புப்படை மார்பிற் பாயத் தாக்கித் தள்ளி வதைத்தனர்! சிலரைப் பிளந்தனர்! ஆகவே பாண்டியன் வீரர் தாள் சிதைந்தனர், தலைசிதைந்தனர், தோள் சிதைந்தனர், துடைசிதைந்தனர், வாள் சிதைந்தனர்

வரை செய்து நான்முகன் விதித்த நாளுஞ் சிதைந்தனர் சிலர்.

இந்நிலை கண்ட பாண்டியன் அமைச்சர்கள் சீற்றங் கொண்டு உலக்கையையும் ஆழியையும் கூற்றுவன்போல வீசி ஆர்த்தனர். அதனாற் பன்றிவீரர்கள் பலரும் பட்டனர்.

அப்போது தன் காதலனை நோக்கிப் பன்றியரசி பகர்கிருள்.

"நம்மால் ஏவப்பட்ட சேனையெல்லாம் இறந்தன" இனி நாம் செய்யலாவது உண்டோ? வீணே நாமும் அழிவானேன்! பிழைத்துப் போவதே செய்யத்தக்கது!"

இறப்பையஞ்சாத பன்றியரசன் இகழ்ந்து நகைத்தான்! "நுண்ணறிவுடன் நூலைப் பயின்ருலும் பெண்ணறிவு பேதைமையுடையதுதானே? மானமுடையார்க்கு நீ கூறுவது வழுவாகும்! இரண்டு சிங்கங்கள் உறையுந் துறையிலே வளைந்த மருப்பையுடைய ஒரு பன்றி வந்து நீர்பருகிச் செல்லும். ஆனுல், கரிய மெய்யுடைய பன்றி யொன்று தங்கியிருக்குந் துறையிலே வீரமுடைய இரண்டு சிங்கங்கள் வர அஞ்சும்! நான் அத்தகைய வீர மரபிலே பிறந்தேன்.

ஆதலால், வேப்பந்தாரானுடைய வீரத்தைக் கவர்ந்து திசையினும் வானத்தினும் புகழை வைப்பேன். அன்றேல், 'பொய்த்திடும் உடம்பேயன்றிப் புகழுடம் பழிவ துண்டோ?' ஆகவே, நீ அஞ்சாமல் நில்," என்ருன்.

கேழலரசன் சீற்றத்தோடு கிளர்ந்து சென்ருன்:

"பாண்டியனே! என் காட்டில் வாழும் விலங்கினங்களைக் கொன்றுவிட்டோமெனச் செருக்குற்றுச் செல்லாதே(" என்று ஆர்ப்பவன் போலத்தாவிச் சென்ருன். நிலத்தைப் பிளந்து துகளெழுப்பி நிமிர்ந்து சென்ருன். அவன் வரவை நோக்கிய பாண்டியன் வியந்தான். வில்லை வளைத்து வாளி மழையை வழங்கி வரவேற்ருன்.

செழியன் விட்ட அம்புகளைப் பன்றிவேந்தன் தடுத்துச் சிலவற்றைப் புல்லெனக் கறித்தான்: சிலவற்றைக்

கால்கொண்டு தேய்த்து முறித்தான். சிலவற்றை வாள் கொண்டு துணித்தான்.

தென்னவன் திகைத்தான். மானம் பொருமல் தான் ஏறிய களிற்றின் கையிலே உலக்கை யொன்றைக் கொடுத்துத் தாக்கும்படி தூண்டினன். ஏனவேந்தன் பொருமல் இடியென ஆர்த்தெழுந்தான். சீற்றம் உந்தக் களிற்றின் மிசை பாய்ந்து ஊசலென ஆடுந் துதிக்கையைத் துணித்துக் களிற்றை வீழ்த்தினன்.

பாண்டியன் பகைத்துக் தேரிற் பாய்ந்து வலம் பொருந்திய ஆழியைச் சுழற்றி விடுத்தான். பன்றியரசன் விலகி நின்று கடுங் காற்றெனப் பாய்ந்து தேரைப் புடைத்துத் தகர்த்தான். வேப்பந்தாரான் விரைந்து பாங்கே நின்ற பரிமீது தாவி நஞ்சூட்டிய வேலைத் திரித்துவிட்டான். அவன் அதை விடுமுன்னமே பன்றியரசன் குதிரையின்பின் சென்று அதைத் தாக்கிக் கொம்பினலே பிளந்து குருதி சோர வீழ்த்தினன்.

பொருநைத்துறைவன் பொருமற் படபடத்து மண் மேற் குதித்தான் கையிலிருந்த இருப்புலக்கையாற் கேழலரசனின் மண்டையிற் புடைத்தான். பன்றிமன்னன் புண்ணிற்படு செம்புனல் நிலமகளைப் போர்ப்ப ஒளிவிடும் விமானமீது விண்ணிலே சென்றான். காமனைப் போலக் கவின் பெற்று விளங்கி, வியப்புடன் வானவர் பெய்யும் பூமழையிலே நனைந்து, தெய்வ இசை பருகிக் காதிரண்டுங் களித்து, வீர வானத்திலே அமுதையுண்டு, வான மங்கையரை அணைந்தான்.

பன்றியரசியின் பண்பு

அருகே நின்ற பன்றியரசி, 'என் துணை மாய இருப்பது கற்போ? வென்றி பெறேனெனினும் வீரவானடைவேன்,' என்று நினைந்து பாண்டியனை யெதிர்த்தனள். விலங்கினமாயினும் பெண்பிறப்பை யெதிர்ப்பது வேந்தர்க்

குக் குறைவு என்று கூறி அவன் பணித்தலைவரிலே சருச்சரனென்பவன் அப் பன்றியரசியை எதிர்த்தான்.

இருவரும் நெடும்போது போராடினர். பன்றியரசி சினமிகுந்து பணியாளர் தலைவனைத் தரையிலே வீழ்த்தினாள். ஆற்றல் குறைந்து, செயலழிந்து சோரும் அவன் தன் கையிலே இருப்புலக்கை யொன்றை யொடுத்துப் பன்றியரசியின் தலையிலே தாக்கிவிட்டு மடிந்தான். பன்றியரசியும் விளிந்து வானவர் விருந்தாக விமானத்திலே சென்றாள். சருச்சரனும் வீரருலகடைந்தான். பாண்டியனும் மதுரை யடைந்தான். பன்றிகள் வீழ்ந்த இடம் பன்றிமலை யென நின்றது. அன்றுமுதல் அதற்கு அதுவே பெயர். அக்குன்றிலே அருந்தவரும் விஞ்சையருமாக எண்ணிலாதவர் வீடுபெறத் தவம்புரிகின்றனர்.

பன்றியரசன் முற்பிறப்பு

இவ்வாறு இயம்பிய பொதியமுனிவரை நோக்கி, 'அறிவிலாத பன்றி யுருவாகிய மலைமீது முனிவரெலாந் தவம்புரிய நேர்ந்தது ஏன்?' என்று மற்றைய முனிவர்கள் வினவினர்.

அவர்கள் ஐயமகல,

''வேளென அழகிய கந்தருவனொருவன் விச்சாதரன் என்பவன், புலத்தியரின் தவத்திற் கிடையூறுண்டாக யாழிசைத்துப் பாடினான். புலத்தியர் சினந்து பன்றியாகெனச் சபித்தார். 'எவ்வாறு உய்வே'னென வினவிய யாழ்வல்லோனை நோக்கி யிரங்கி, 'மன்னர் மன்னனான பாண்டியன் வேட்டையாட வந்து உன்னை மாய்ப்பான். அப்போது இவ்வுரு நீங்கும்; முன்னுருக் கிடைக்கும்' என்று பணித்தனர். கந்தருவன் அவ்வாறு பிறந்து பின் பழைய உருவைப் பெற்றான். அத்தகைய புண்ணிய விஞ்சையன் மெய்யாய்க் கிடந்ததாலே தூய நீர்மைபெற்றதெனத் துறவிகளெலாம் தங்கினர். கூடற்பிரானும் விரும்பி அங்கே உறைவதுண்டு!'' என்று குறுமுனிவர் கூறினர். மேலும் தொடர்ந்து சொல்கிறார்:

கூடலிறைவர் அன்னையா யருளுதல்

தந்தையையுந் தாயையும் பிரிந்த பன்றிக்குட்டிகள் திகைப்புற்றன. ஓடும், சுழலும், நிழலைத் தேடும்; தாய் முலைத் தீம்பால் விரும்பி வாடும்; தாகமும் பசியும் வருத்தச் சோரும்; வெயிலின் வெப்பந் தாங்காமல் வெதும்பும்.

இவ்வாறு, இவை வாடும்போது, பாண்டியராக வந்த பரமனார் அங்கயற்கண்ணம்மையாருடன் வானத்திலே விமானத்திலூர்ந்து உலாவிக்கொண்டிருந்தார். அந்நிலையிலே பன்றிக்குட்டிகளின் நோய்க்கிரங்கி அன்பூட்டித் துயரகற்ற வெண்ணினார். அக்குட்டிகளின் தாயாக உருவெடுத்துவந்து குட்டிகளின் முன் நின்றார்.

நெருங்கிநின்ற தங்கள் தாயின் எதிரிலே குட்டிகளும் ஓடிவந்து முட்டுகின்றன! மோந்து பார்க்கின்றன! முதுகிலே தாவி எட்டுகின்றன! கால் விசைத்தோடுகின்றன! நிலத்தை வெட்டுகின்றன! குதிக்கின்றன! ஓடுகின்றன! மீள்கின்றன!

அன்பிற்கும் அடைக்குந் தாழுண்டோ ?

திருமாலாகிய ஏனம் இன்னுங் காண்பரிய ஏனம் மெய் சிலிர்க்கக் குட்டிகளைத் தழுவி மோந்தது! பாலூட்டியது! பெருவிறலும் வெற்றியும் அறிவும் பெருந்தகைப் பண்புகளும் உண்டாக அருளியது! பின்னர், முகமொன்றுமே பன்றி முகமாகவும் மற்றைய உறுப்புகளும் மெய்யும் மக்களுருவாகவும் ஆகிய மக்கள் யாக்கையையும் நல்கியது! இவ்வாறு செய்த கங்கைநாயகர் — கடவுளர்நாயகர் — அங்கயற்கண் மங்கையார்நாயகர்—அருளுருவான பன்றியுருவை மறைத்தருளினார்.

"இம்மை யிப்பவத் தன்னையா யினிவரு பவமுஞ்
செம்மை செய்தசே தனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
எம்மை யெப்பவத் தாயினு மெனைப்பல வுயிர்க்கும்
அம்மை யப்பராய்க் காப்பவ ரவரலா லெவரே?"

சகூ. பன்றிக்குட்டிகளை அமைச்சர்களாக்குதல்

அங்கயற்கண்ணம்மையார் வினவும் அப்பர் விடையும்

முதல்வர் மறைந்தபிறகு, பன்னிருமக்களும் காலை ஞாயிறுகள்போலப் பல்கலை யறிஞராய் வீற்றிருந்தனர்.

அந்நாள்களி லொருநாள் வைகை வளம்படுக்கும் கூடற்பதியிறைவர் அருட்டிறம் உயிர்க்கெலாம் பொதுவாய் இனியதாய் இருக்கும் என்பதை யாவருக்கும் அறிவிக்க உமையம்மையார் திருவுளங்கொண்டு சிவபரஞ் சுடரை வினவுவராயினர்:

"கொடிய விலங்கினும் இழிந்த அறிவற்ற விலங்குகளாகிய இப்பன்றிக்குட்டிகட் கிரங்கித் தாயாய்ப் பாலளித்தீர்கள்! அத்தகைய அருளின் திறம் என்?"

இறைவர் இயம்புகிறார்:

"எல்லா மறைகளும் எல்லா ஆகமங்களும் நம்மை எல்லா வுயிர்க்கும் இன்னருளாளன் என்கின்றன. ஆகவே, நாம் அறிவற்ற வுயிர்க்கும் அறிவுடைய உயிர்க்கும் நடுநிலையிலே வேறுபாடின்றி யிருப்போம் என்றறிக! ஆகையால், தாயிழந்து வெம்பசித்தழல் வெதுப்பவும், அனலை அள்ளி வீசிக கதிரவன் வெகுண்டு காயவும் காட்டிலே கிடந்து தீயும் பன்றிக்குட்டிகளின் வாட்டத்திற்கிரங்கித் தாயாய்ப் பாலூட்டி உயிரளித்தோம். அதனாலே அளவில்லாத ஆற்றலும் வெற்றியும் நல்ல அருப்பெறற் கல்வியும் பெற்றனர். இனி, அவர்கள் மீனவனுக்கு அமைச்சர்களாய்ப் பல வகையினும் வளம்பெற வீற்றிருப்பார். பிறகு, நம் பெருங்கணத் தலைவராவர்!"

அன்றைய இரவிலே இராசராச பாண்டியன் கனவிலே,

"அரசனே! பன்றிக்குன்றினிற் பன்றிமுகத்துடன் பன்னிரு மக்கள் வென்றிவீரராக—அறிவிற் சிறந்தவராக

—வீற்றிருக்கின்றனர். அவரை நின் அவைக்கு அமைச்சர் களாக ஏற்றுக்கொள்க!''

என இறைவர் இயம்பி மறைந்தனர்.

அமைச்சுரிமை

கன்னிநாடன் களிப்புடன் விழித்தெழுந்தான். கதிரவன் கீழ்த்திசைக் கடலிலே தத்தி நீந்தெழுந்தான். அரசன் அமைச்சரை வரவழைத்துக் கனவைக்கூறி, ஏவலரை விடுத்துப் பன்றிமுகவீரரைக் கொண்டுவந்தான். வந்து வணங்கிய வீரரை நோக்கி எல்லையற்ற மகிழ்வடைந்தான். அமைச்சியற் கிழமை நல்கிப் பலவகைச் சிறப்புகளும் பண்புற நல்கினன். அதுமட்டுமோ? பழைய மந்திரத் தலைவர்களின் பெண்களை —மடப்பாவை போல்வாரை—மணம் புணர்த்தினன். அந்தப் புதிய அமைச்சரும் அரசனுக்குக் கவசமும் கண்ணுமாய் நடந்தனர்.

அவர்கள் பன்னிருவரும் பன்னிரண்டுடம்பும் ஒருயிருமாக ஒன்றினர். ஐவாயரவு விழுங்கும் இரைபோல மனவுறுதியுடன் வினைவாங்கினர். பாண்டியன் கற்ற கல்வியின் பயன்போல மகிழ்வடைய நின்றனர். நல்ல பசும்பாலிலே நறிய தேனைக் கலந்தாற்போன்று பலகலை வல்லவராய் நுண்ணறிவினராய் விளங்கினர். சோர்வில்லாத மொழிகளாலே பகைவரும் விருப்பி யேற்கக்கூறிப் பிறருடைய விளங்காத பேச்சினும் உண்மைப் பயனை யுணரும் வல்லவராயிருந்தனர்.*

மேலும் அவர்கள் தம் பழைமையையும் அரசனால் மதிக்கப் படுதலையும் நினைந்து பண்பல்லாதன செய்யாமல் அருகி லிருந்து குற்றேவல் புரியுஞ் சிறுவர்போல அடங்கி நடந்தனர்.

*''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்—வேட்ப மொழிவதாஞ் சொல்'', ''ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்—காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு'', ''வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்—மாட்சியின் மாசற்றார் கோள்''—திருக் குறள்.

அரசன் விரும்பியதைத் தாங்களும் விரும்பிப் போட்டியிடாமல் நஞ்சென வெறுத்தனர். அரசனை அழலென நினைந்து மிக அணுகாமலும் அகலாமலுந் தீக்காய்வார்போல நடந்து கொண்டனர்.*

அவர்களாட்சியிலே வையத்தோர் நன்னெறியிலே நின்றனராகையால், அவர்களை ஒறுத்துப் பொருள் பெறல் நேர்ந்திலது. பகைவர்களெல்லோரும் பணிகேட்டு நடந்தனராகையால், அவர்களை வென்று பொருள் பெறுதலும் இலதாயிற்று. குடிகள் கொடுக்கும் ஆறிலொன்றே அரசியலை நடத்தப் போதிய அளவினதாயிற்று.

வீரம் பொருந்திய வேலேந்திய மன்னன் மனக்கோள்கள் தம் மனத்திலே ஆடிநிழல்போல அமையக் குறிப்பினாலுணர்ந்து நடத்தினர்†எனினும், அரசன் நினைவு அறநெறியினதேற் செய்வர். அன்றெனில் உயிரைவிட நேர்ந்தாலும் மனத்தினும் அதனைச் செய்ய நினையார். ஆகவே, 'இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே—கெடுக்குந் தகைமை யவர்' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்கப் பாண்டியன் எவ்வகையினுங் கேடின்றிச் சிறப்படைந்தான்.

இவ்வாறு பன்னிருவரும் ஈகையும் தருமமும் புகழும் பாண்டியனுக்கு நாளும் பெருக நல்கி, எட்டுத் திசையினும் வெற்றியுண்டாக்கி வாழ்ந்தனர். இறுதியிலே அரவணிந்த அண்ணலாரின் சிவபுரஞ் சேர்ந்து சிவகணத் தலைவருடன் கலந்து வீற்றிருந்தனர். அரசன் இராசராச பாண்டியனும் சிவனார் திருவடி நீழலை அடைந்தான்.

---

*"பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்—கெழுதகைமை கேடு தரும்" "கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்—துளக்கற்ற காட்சி யவர்", "மன்னர் விழைப விழையாமை மன்னரான்—மன்னிய ஆக்கந் தரும்," "அகலா தணுகாது தீக்காய்வார் போல்க—இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்."

†"கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்—மாறாநீர் வையக் கணி."

௬எ. கரிக்குருவிக்கு அருளுரை வழங்கியது

கரிக்குருவியின் கலக்கம்

இராசராச பாண்டியனுக்குப் பின் சுகுணபாண்டியன் உலகத் தீமை நீக்கிக் காத்துவந்தான்.

வலிமைமிக்க ஒருவன் எத்துறையினும் நல்லறமே புரிந்து, சிறிது தீவினையும் புரிந்ததனாலே, கரிக்குருவி யாகப் பிறந்தான். அக் கரிக்குருவிக்குக் காகம் முதலான பறவைகள் கூற்றுவன் போலத் தோன்றி, அதனைப் பல வகையினுந் தாக்கின. அவற்றுக் கஞ்சிய அப் பறவை செந்நீரொழுகுந் தலையுடன் நகரைவிட்டு வெளிவந்து, பலருஞ் செல்லும் பெருநெறி யொன்றிலே—காட்டிலே—தழைத்துப் பூங் கொத்துகள் நிறைந்த மரமொன்றிலே நாணம் மிக வருந்திப் பெருமூச் செறிந்துகொண்டு அமர்ந்திருந்தது.

அறவோன் அறவுரை—கரிக்குருவியின் தெளிவு

அந்த மரத்தின் நிழலிலே பலர் குழுமியிருந்தனர். அப் போது ஒருவன்—திருநீறணிந்த மேனியன்—சிவமணி மாலை யன்—உள்ளும் புறமும் தூயவன்—கையிலே குடையுடன் வந்து தங்கினான். அவன் தூய தீர்த்தங்களிலே நீராடிவரும் ஒழுக் கத்தினன். அவன் கூறியதாவது:

"எல்லோர்க்கும் பேறுதரும் மூர்த்தியிற் சிறந்தவர் சோமசுந்தரரே!—சிறந்த தலம் மதுரையே!—சிறந்த தீர்த் தம் பொற்றாமரைத் தடமே!—இவ்வாறு பெரியோர்கள் இயம்புகிறார்கள். ஓரிடத்தில் இம் மூன்று சிறப்பும் பொருந்தி வேறெங்கும் இல்லை. மதுரையில் மட்டுமே உண்டு. பிற நகர்களிலே இம் மூன்றில் ஒன்றுமட்டுமே சிறந்திருக்கும். ஆகவே, அதற்கிணையான தலம் வேறெங்குமில்லை. மதுரைப் பிரானார் சேவித்து வழிபடுவார்க் கெளியர். கைத்தல நெல்லிக் கனியெனக் கருத்திலே நினைந்த வரங்களை யெல்லாம் இம்மையிலேயே உடனே நல்குவார். பிற தலங்களிலே மறுமையிலேயே இன்பம் அளிப்பர். ஆதலால், மதுரைப் பெருமானார் சிறந்தவர்."

மரக்கொம்பிலே வைகிய கரிக்குருவி மெய்யுணர்வு பெற்றது; பறவையாய்ப் பிறந்ததும் பிறவுந் தெளிவுற்றது; 'நாம் இப் பிறப் பொழிப்பதற்கு இச் சைவப் பெரியார் கூறிய இதனைக் கைக்கொள்வதே நலமாகும்,' எனத் துணிவு கொண்டது.

மதுரைக்குச் சென்றது—வழிபட்டது—இறைவர் அருள்

அழகிய அந்த மலர்வனத்தைவிட்டுக் கூடன்மாநகரைக் கூடியது. தெய்வப் பொற்றாமரைப் பொய்கையிலே முழுகியது. ஆம்பல் மலர்போலும் திருவாயையுடைய அங்கயற்கண் ணம்மையார் காதலரை வலங்கொண்டு, அன்புடன் அவர் மலரடியை உளத்திலே தொழுது மலரிட்டு வணங்கியது.

இவ்வாறு மூன்றுநாள்கள் கழிந்தன. எம்பிராட்டியார் பெருமானுரை வணங்கி, 'இக் கரிக்குருவி செய்யும் வழிபாட்டின் திறமென்னே! இதன் வரலாற்றை யறிய விரும்புகிறேன்,' என வேண்டினர். அண்ணலாரும் அதன் வரலாற்றை விளம்பியருளினுர். பிறகு அப் பறவையின்மேலிரக்கங்கொண்டு முற்காலத்திலே மறைச் சிறுவனுன மார்க்கண்டனுக்கு, அழியாப் பேறளித்துக் கூற்றுவனை மாய்த்தற்குக் காரணமான — உண்மையான — 'மிருத்திஞ்சயம்' என்னும் மறையை அருளினுர்.

ஒப்பற்ற பரம்பொருளுரைத்த மறையைச் செவியிலேற்ற வுடன் சிற்றறிவு நீங்கிப் பிறவித் துன்பமொழித்த கரிக்கருவி கண்ணுதலார் கழலை வழுத்தியது:

"எண்ணற்ற உயிர்கட்குந் தலைவரே! போற்றி! வான் பிறை முடித்த சடையரே! போற்றி! எளியேன் புண் ணியப் பயனே! போற்றி! அங்கயற்கண்ணம்மை பங்கரே! தங்கள் திருவருள் போற்றி! தெளிவின்றிச் செய்த தீவினை யாலே கெடுகின்ற என்னையும் ஆட்கொளல் வேண்டுமோ? எளியவர்கள் இருக்குமிடந் தேடித் தேடி அருள்புரிவது தங்கள் திருவருளின் சிறப்பாகும். முற்பிறப்பிலே செய்த நல்லறத்தாலே இப் பிறப்பிலே இம் மறையைத் தாங்க

ளியம்பும் பேறுபெற்றேன். இம் மறை மறுமையிலே நன்னெறிக்குக் காரணமாயிற்று. ஆதலால், மும்மையும் நற்பேறுடையனுனேன். எனினும், எளியேனுக் கொரு குறை! தீய பறவைகளெலாம் எனக்குக் கெடுதிசெய்து துன்புறுத்த, மானமிழந்து, கண்டவர் நகைக்குமாறு மிகவும் எளியேனுகி விட்டேன்!''

அண்ணலார் இரக்கத்துடன், 'இனி அப் பறவைகட்கெலாம் வலியையாகப் பெறுவாய்,' என்றருளினர்.

பறவை மகிழ்ந்து வணங்கி மறுமுறையும், 'தாங்கள் கூறியருளிய வலியான் என்பது என் மரபுக்கெலாம் பொருந்த வேண்டும். எப்போதும் அடிகள் அருளிய மறையை நாங்கள் ஓதியோதிக் கலியை வெல்லவும் வேண்டும். அருள் புரிக!' என வேண்டியது. இறைவர் அதன் வேண்டுகோளை யேற்று, மூவெழுத்தினுலே முடிந்த அம் மனுவைத் தெய்வம் இருடி சந்தம் மூவகை யோசையொடும் தெளிவித்தார்.

கூரிய அலகையுடைய கரிக்குருவி குருமொழியைப் பயின்று தன் மரபுந் தன்னைப்போலவே—மறை முதல்வர் வரத்தினுலே—பறவைக்கெல்லாம் வலியான் என்னும் பெயருடன் உலகிலே நிலைபெறச் செய்தது; இறுதியிலே கறைமிடற்றண்ணலார் கழலடியைச் சேர்ந்தது.

இந்தக் கரிக்குருவி தான் செய்த தவத்தினுலே பெற்ற நன்மையைத் தன்னைப்போலவே தன் சுற்றமும் எளிதிலே பெறச் செய்தது. ஆகையால், உலகிலே 'தக்கவன் ஒருவன் வாழத் தன் கிளை வாழ்வது,' என்னப் பெரியோர் கூறும் பழமொழியை அது விளககியது.

''ஈச னடிக்கன் பில்லார்போ லெளியா ரில்லை யாவர்க்கும்;
ஈச னடிக்கன் புடையார்போல் வலியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் பின்மையினு லெளிதாய்த் திரிந்த இக்கயவாய்
ஈச னடிக்கன் புடைமையினுல் வலிதா யிற்றே யெவ்வுயிர்க்கும்!''

சஅ. நாரைக்கு வீடுபேறளித்தது

நாரையும் மீனும்

நீர்வளமிக்க வைகை நாட்டிலே தென்சார்பிலே மாடங்கள் நிறைந்த நகரமொன்றிருந்தது. அங்கு யாழிசைக்கும் வண்டுக்குத் தேன்வார்க்கும் தாமரைப் பொய்கையொன் றிருந்தது. ஆழமான அப் பொய்கையிலே வாழும் மீன்க ளெல்லாவற்றையும் வாயிலிட்டுக்கொண்டு தங்கும் சிவந்த கால்களையுடைய நாரையொன்றிருந்தது, அப் பொய்கையின் துறையிலே.

ஒரு காலத்திலே, அந்த நாரையின் இருவினைக் கடலும் வற்றியதனாலே சிறிது காலம் அப் பொய்கை மழையின்றி நீர் வற்றியிருந்தது. அப்போது, நுரைபெய்தாற் போன்ற வலிய சிறகுகளையுடைய அந்த நாரை இரையைத் தேடி, அப் பொய்கையை விட்டுப் பறந்துபோய் ஒரு வனத்திலே குற்றமற்றவர்கள் வாழும் ஒரு சோலையிலே வீழ்ந்தது.

அச் சோலையிலே முத்தரான முனிவர் கூட்டத்துடன், தூய பேரின்பவாவியிலே படிந்து, தம் உள்ள மாசினைக் கழுவிய - சிவமாகிய சத்தியத்தவன் என்னும் முனிவர் தங்கி யிருந்தார். அங்குக் கூப்பிடும் எல்லை பரப்புடையதாய்ச் சதுரமாய் அமைத்துச் சுற்றிலும் படித்துறையுடன் - சந்தியா மடத்துடன் - ஒரு பொய்கை இருந்தது. அப் பொய்கை யைச் சூழ மணங்கமழுங் சண்பகமும் பாதிரியும் வேங்கை யும் தேன்சொரியும் வஞ்சியும் இஞ்சியும் குராவும் மராவும் கிஞ்சுகமும் மருதும் இவைபோன்ற பல மரங்களும் நெருங்கி யிருந்தன. அப் பொய்கையின் பெயர் 'அதோ தீர்த்தம்' என்பர். இரை விரும்பி வந்த நாரை அதன் கரையிலே தங்கியது.

அப் பொய்கையிலே முனிவர்கள் தோய்ந்து தோய்ந்து எழும்போதெல்லாம் தோளிலே படியுஞ் சடைமுடிக்கற்றை யிலே மீன்கள் தத்தித் தத்திப் பாய்ந்து புரள்வதை அந்த நாரை பார்த்தது.

"இங்கே இந்தத் தூய முனிவர்களின் திருமேனியைத் தீண்டத்தக்க நல்வினைகளை யிம்மீன்கள் எத்துணை செய்தனவோ? அத்தகைய மீன்களை நாம் இரை கொள்ளத் தகாது."

உணவின்றி அந்த நாரை அங்கே தங்கியது.

ஒப்பற்ற தவத்தினரான அம் முனிவர்களெல்லோரும் பொய்கையிலே நீராடிய பின்னர் வழிபாடு முதலியவற்றை முடித்துக்கொண்டு சந்தியா மடத்திலே அமர்ந்தனர். ஒளி விடும் பணிமுடிபணிந் துலகாண்ட பொன்னியல்சடையவரின் கூடற் புராண நூலை ஓதினர். அப் புராணத்திலே அண்ணலார் செய்தருளிய திருவிளையாட்டும் அவர் சிறப்பும் மதுரைச் சிறப்டம் பொற்றாமரைப் பொய்கைச் சிறப்பும், அடைந்தார்க் கெளியராந்தன்மையர் அப் பெருமானுரென்பதும் எடுத்துக் கூறினர். நாரையும் அச் சிறப்பைக் கேட்டது. நல்லூழ் பெற்றதனுலே அறியாமை நீங்கி, வினைத்தொடர்பைப் போக்கி, உறுதியான மெய்யுணர்வு பெற்றுச் சிவபரஞ்சுடரின் திருவடி மலரிலே ஆராத காதல் கொண்டது. ஆகவே, அக் காதல் அதனைக் கூடற்பெரு நகரிலே கொண்டு சேர்த்தது.

கூடலைக் கூடிய நாரை பொற்றாமரை வாவியிலே படிந்து, தெய்வக் களிறு சுமக்கும் விண்ணிழி விமானத்திலெழுந்தருளிய இறைவரை வணங்கி வலம் வந்தது. அண்ணலாரருளைப் பெறத் திருமுன்னே வைகியது. அதன் உள்ளத்திலே அருள் வடிவான கூடலிறைவர் ஒளியுருவம் சுடர்விடப் பதித்து வழிபட்டது.

பதினைந்து நாள்கள் கழிந்தன இந்நிலையிலே!

பதினுறும் நாள் பொற்றாமரை வாவியிலே படியவந்த நாரை பசியினுல் வெந்து, ஒளிவிடும் வேலைப்போலத் துள்ளுகின்ற மீன்களைக் கண்டு பற்றியுண்டு பசிதணிய எண்ணியது. ஆனுல், அண்ணலா ரருளினுலே உடனே தெளிந்து, 'ஐயோ! இந்தத் தூய நீர்ப்பொய்கையிலே வாழும் மீனைத் தின்ன ஆவலுண்டாகியதே! என் பிறவி யெங்ஙனமொழியுமோ!' என்று பெருந்துயரடைந்தது.

சோமசுந்தரர் திருவடியை நினைவிலே பதித்து நெகிழ்ந்த அன்பொடு மறுபடியும் அங்கே வசித்திருந்தது.

கூடலிறைவர் இரக்கங்கொண்டார்.

அந்த நாரையின் உள்ளத்திலே வழிபடும் உருவுடன் எதிரிலே தோன்றி, 'எமக்கினியாய்! நீ வேண்டுவது என்' என்று வினவியருளினர்.

நாரை வணங்கி வேண்டுகின்றது:

"அடிகளே! அடியேனுடைய இப் பிறவியை நீக்கித் தங்கள் அடியார் வாழுஞ் சிவபுரமீதிலே வாழ்ந்து உய்ய அருளவேண்டும். மற்றொன்றும் வேண்டும்: வள்ளலே! என் மரபிலுள்ளவையும் பிற பறவைகளும் இந்தத் தூய பொய்கையிலே வாழும் மீன்களைத் தின்றால் நீக்க முடியாத பழியை அடையும். ஆகையால் இனி எப்போதும் இப் பொய் கையிலே மீனில்லாமல் இருக்கவும் அருளவேண்டும்."

வெள்ளிமன்றுடைய விமலர் நன்றெென அருளினர். நாரை ஐவகைத் தெய்வ இயங்களும் ஒலிக்க விமானத்திலே நான்கு தோள்களுடனும் முக்கண்களும் பொருந்திய சிவ வடிவுடன் பூமழை வெள்ளத்திலே சென்று சிவபுரத்திலே சிவகணங்களுடன் சேர்ந்து வாழ்ந்தது.

அன்று முதல் இன்றுவரைபிற் பொற்றாமரைப் பொய் கையிலே மீன்களேயன்றிப் பிற நீர்வாழுயிர்களும் இலவாயின.

தன் மரபே யன்றிப் பிற பறவைகளும் தன்போல் நற் கதியடைய விரும்பியது இந்த நாரை! இதன் அன்பை வியப் பதா? இறைவர் அருளை வியப்பதா? அடியார்க்கெளியரான அந்திவண்ணரின் அன்பருக்கு யாவும் எளிதே.

சுகுண பாண்டியன் மறக்குறும்பாகிய தளையைவெட்டி, அறப்பெரும் பயிரை வளர்த்து, அதனாற்கிடைத்த பயனைச் சிறக்கவுண்டு, செருக்கி வாழ்ந்து, துறக்கம் பெற்றான்.

III. திருவாலவாய்க் காண்டம்

சகூ. திருஆலவாயானது

காப்பு

"பாயுடையார் விடுத்தபழி யழல்வழுதி
யுடல்குளிப்பப் பதிக மோதும்
சேயுடையா ரணைந்திளைக்குஞ் செவியுடையா
ரளவிறந்த திசைக ளெட்டும்
தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார்
விடவரவஞ் சுற்று மால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதிம் மனித யாக்கை."

ஊழிமுடிவு

சுகுண பாண்டியனுக்குப்பின் சித்திரவிரதன், சித்திர பூடணன், சித்திர துவசன், சித்திர வருமன், சித்திர சேனன், சித்திரவிக்கிரமன், இராசமார்த்தாண்டன், இராச சூடாமணி, இராச சார்த்தூலன், துவிசராசகுலோத்தமன், ஆயோதனப்பிரவீணன், இராசகுஞ்சரன், இராசபயங்கரன், உக்கிரசேனன், சத்துருஞ்சயன், வீமரதன், வீமபராக்கிர மன், பிரதாப மார்த்தாணடன், விக்கிரம கஞ்சுகன், சமர கோலாகலன், அதுல விக்கிரமன், அதுல கீர்த்தியெனப் பாண்டியர் இருபத்திருவர் அரசாண்டனர். அதுலகீர்த்தி யின் மைந்தன் கீர்த்திபூடணன் அரசுபுரியும் நாளிலே பெரிய ஊழி முடிவு ஒன்று நேர்ந்தது. கருங்கடலேழுங் கரைகடந்து பொங்கின! வானமும் எட்டுக்களிறுகளும் எட்டுப் பொருப்புகளும் சக்கரவாளப் பொருப்பும் நிலகுலையும் படி பெருவெள்ளங் கோத்தது.

அப்பெரு வெள்ளத்திலே அழிவிலாத எப்பெரிய வுலகமும் அழிந்தது. ஏழு தீவுகளும் அழிந்தன. அவற்

திலே தங்கிய அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் அழிந்தன. நீண்ட கொடுமுடி மலைகளும் நிலைகெட்டழிந்தன. ஆனால், அங்கயற்கண்ணம்மையார் திருக்கோயில், விண்ணிழிவிமானம், பொற்றாமரைப் பொய்கை, இடபக் குன்று, யானை மலை, பாம்பு மலை, பசு மலை, வராக மலை ஆகிய இவை அழிவின்றி நின்றன!

உலகத்தோற்றம்—திரு ஆலவாய்

வெள்ளநீர் வற்றியது. முதற்பரம்பொருளான முக்கண்ணர் முன்போலவே உலகைப் படைத்து, வானவரையும், மண்ணவரையும் பறவை விலங்குகளையும் படைத்தார். முச்சுடர்களான ஞாயிறு திங்கள் அங்கிகளின் மரபிலே முன்போலவே தமிழ் மன்னரையும் (சேர சோழ பாண்டியரையும்) படைத்தார். அப்போது திங்கள்மரபென்னும் பாற்கடலிலே பதினாறு கலைகளொடும் முளைக்க முழுத் திங்கள் போல வங்கிச சேகரன் என்னும் வழுதி தோன்றினான்.

வீரக் கழலணிந்த அம்மன்னன் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைச் சூழ அழகிய சிறு நகரொன்றை அமைத்துத் தன் ஆட்சியை நடத்தி வந்தான். அவன் ஆட்சி மக்கள் நெறிதவறாமல் நடைபெற்றது. குடிகளை வறுமை, பிணி முதலிய துன்பங்கள் தொடரவில்லை. பல்வளமுஞ் சுரந்து பரவின. எனவே, குடிவளம் பெருகியது.

குடிகள் பெருகியதற்கேற்ப இடம் பெருகவில்லை. இருக்குமிடஞ் சுருக்கமாகையால், மக்களுறும் இடரைக் கண்டு வழுதி கலங்கினான். மதிமுடித்த வள்ளலின் திருமுன் சென்று வணங்கினான்.

"இறைவரே! தங்களருள் வலிமையினாலே இந்நிலப் பொறையைச் சுமக்கின்றேன். இப்போது நேர்ந்திட்ட குறையைப் போக்குதல் வேண்டும். இவ்வளவு குடிகளும் இருக்கத் தக்கதாக இந்நகரைப் பரப்ப இடமறிகிலேன். அருள் கூர்ந்து காட்டியருள்க!"

நுண்ணிய பொருளினும் நுண்ணியவரான பெருமானுர் வானிழி கோயிலினின்றும் வெளிவந்து, பாண்டியன் அன்பிற்கெளியராய்ச்—சித்தராய்—நல்லருட் பெருங்கடலாய் எழுந்தருளினர்.

பாம்பினல் அரைஞாண்—பாம்பினல் முப்புரிநூல், சன்னவீரம் என்னும் மாலை—பாம்பினலே குழையுங் குண்டலமும்—பாம்பினலே கிண்கிணி நாண் - பாம்பினலே தொடி—என்று பாம்பணி யணிந்து வந்தார் பரமனர். மண்டபத்தின் அருகிலே நின்ருர். திருக்கைக் காப்பான பாம்பினை நோக்கினர். 'நீ இவனுக்கு இப்பெரு நகரின் எல்லையைக் காட்டுக!' என்ருர். அஃது அடிகளை வணங்கி வேண்டுகிறது:

''தலைவரே! இப்பெருநகர் அடியேன் பெயரால் வழங்கப் பெறுதல் வேண்டும்.''

அதன் வேண்டுகோளை அண்ணலார் ஏற்ருர்.

பாம்பு விரைந்துசென்றது. கீழ்த்திசையிலே தன் தலையை வைத்து வாலை வலம்பட வட்டமாக வளைத்து வாய்ப்பக்கங் கொணர்ந்தது. அஃதாவது தன் உடலை வளைத்து எல்லை காட்டியது. திரும்பவும் சிவனர் திருக்கைக் காப்பாக அமர்ந்தது. சித்தரும் தம் திருக்கோயிலைச் சேர்ந்தருளினர்.

பாண்டியன் பாம்பு காட்டிய எல்லைப்படியே சக்கரவாளகிரியென மதிலெடுத்தான்.

''தென்றிசைப்பரங் குன்றமும், வடதிசை யிடபக்
குன்றமுங் குடக் கேடக நகரமுங் குணபால்
பொன்றலங்கிழித் தெழுபொழில் பூவண நகரும்
என்று நாற்பெரு வாயில்கட் கெல்லையா வகுத்தான்.''

அப்பெரு மதிலுக்கு ஆலவாய் மதிலெனப் பெயர் வழங்கியது. நகரமும் ஆலவாய் எனப் பெயர் பெற்றது. அந்நகரைப் பாண்டியன் முன்போலவே ஒழுங்கு செய்

தான். கொடிகளையுடைய நீண்ட மதில், மண்டபம், கோபுரம், தெருக்கள், பூம்பொழில்கள் இவைபோன்ற வற்றையும் புதியனவாகக் கண்டான். அண்ணலார்க்குப் புதிய முடிகள், ஒளிவிடும் மணியாற் செய்யப்பெற்ற கலன்கள் ஆகியவை வேறு வேருக அமைத்தான்.

பலவகையினரான குடிகளின் பரப்பெல்லாவற்றையும் நிறைத்த பிறகு, அம் மாநகரானது வானவர் நகரமான அமராவதியினுஞ் சிறக்க வளம்பல விளங்கச் செய்தான். ஆகவே, அவனை அவன் மரபிலே முன்னர்ப் புகழ்பெற்றிருந்த குலசேகரனெனக் கொண்டாடினர் யாவரும்.

"கொடிக ணிண்மதின் மண்டபங் கோபுரம் வீதி
கடிகொள் பூம்பொழி லின்னவும் புதியவாக் கண்டு
நெடிய கோளகை கிரீடம்வா ணிமுன்மணி யாற்செய்
தடிகள் சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான்." (உஎ)

"பல்வ கைப்பெருங் குடிகளின் பரப்பெலா நிரப்பிச்
செல்வ வானவன் புரந்தரன் புரத்தினுஞ் சிறப்ப
மல்லன் மாநகர் பெருவளந் துளும்பிட வளர்த்தான்
தொல்லை நாட்குல சேகரன் போல்வரு தோன்றல்." (உஅ)

௫௦. சுந்தரப் பேரம்பெய்தல்

விக்கிரம சோழன் படையெழுச்சி—பாண்டியன் கலக்கம்

அழகிய கயலெழுதிய கொடியினனுன வங்கியசேகரன் குடைநீழலிலே புவிமடந்தையுந் திருமடந்தையுங் கலை மடந்தையும் மங்கலம் பெற்று வாழ்ந்தனர். அந்நாளிலே யானைப்படையுடன் பகைவரை வென்று, அவர்கள் தன் அடியிலே தாழ வாகைசூடிய விக்கிரம சோழன் பாண் டியனெடு பொருதற்கு நினைந்து, கடல் போன்ற பெரும் படையுடன் வந்தான். அவனுக்கு யானைப்படை குதிரைப்படை காலாட்படைகளுடன் வடபுல மன்னர் பலர் துணையாயினர்.

சோழன் படைவீரர் பாண்டிநாட்டு ஆனிரைகளைக் கவர்ந்தும், மலர் நிறைந்த பொய்கைகளையும் ஏரிகளையும் உடைத்தும், அந்நாட்டிலிருந்து வரும் பல பொருள்களை யும் வழிபறித்துக் கொள்ளையிட்டும் போருக்கடியிட்டனர். பாண்டியன் அறிந்தான்; திகைத்தான். "இனி என் செய்வோம்? சோழன் படையோ அளவற்றது? அதனை யெதிர்த்துப் போர் செய்தல் என்னுல் இயலுமோ? இக் குறையைப் பிறையும் ஆறும் பெருகுஞ் சடைப்பிரானுரிடம்—சுந்தரரிடம்—சென்று வணங்கிக் கூறி வரம் பெறுவேன்," என்று திருக்கோயிலை யடைந்தான்; பணிந்து கைகுவித்து நின்ருன்.

"அடிகளே! அருட்கடலே! அடியேனெடு விக்கிரமன் போர்செய்யப் புறப்பட்டான். அவனுக்குத் துணையாக வடபுல மன்னருங் கூடிப் பாசறையிட்டுள்ளனர். எளியேனுக்கு ஒத்த படைகள் இல்லையே! பகைப் படைமிகுதியினுற் காத்துக் கொள்ள அரணுமுண்டோ? இனிச்செய்வதுதான் என்ன?"

சிவனுரருள்

முன்னவர் வானிடை நின்று வான்மொழியால் மொழி கிருர்:

"நீ முதலில் அஞ்சாது சென்று அவனோடு போரிடுக! நாமும் உன்பின்னே அடைந்து துணையாகிப் போர் செய்து நீ வாகைசூடச் செய்வோம்!"

தென்னவன் சிந்தை களித்தது. கண்களிலே இன்பக் கண்ணீர் துளித்தது. இரு கைகளையுங் குவித்துச் சிவனாரடியைப் பன்முறை சேவித்தான். திருக்கோயிலைவிட்டு வெளிவந்தான். அந்நிலையிலே ஒற்றனொருவன் ஓடிவந்து, "இடபக் குன்றுக் கருகே நேரியன் படை வந்து விட்டது!" என இயம்பினான்.

போர் நடந்தது

தென்னவன் சீறித் தேர்மேலேறினான். போர் முரசு முழங்கியது. தேர்வலவன் தேரைச் செலுத்தினான். நால்வகைப் படைகளுஞ் சூழச் சோழனை எதிர்நோக்கிச் சென்றான். திருவாலவாயின் மதிற்புறத்திலே கடலென வளைந்து நிற்குஞ் சோழன் படையைக் கண்டான். இரு படைகளும் அணி வகுத்துக் கைகலந்தன.

தேர்வீரரும் பரிவீரருங் களிற்றுவீரருங் காலாளுமெனும் நால்வகைப் படைஞரும், ஒருவருக்கொருவர் சமநிலையிலே யெதிர்ந்தனர். வில்லொடு வில்லும் வாளொடு வாளும் வேலொடு வேலும் பொருதன. வீரருடன் வீரர் போர் செய்வது சிங்கத்துடன் சிங்கம் பொருவது போலிருந்தது.

இந்த நிலையிலே, உலகைத் தன் வலிய தோளிலே தாங்கும் மீனவன் வலிமைமிக்க பரிகள் பூட்டிய தேர் நிரைகளோடு வந்த சோழனுடன்—கதிரவனுடன் திங்கள் போர் புரிதல்போல—எதிர்த்தான். துள்ளுங் குதிரைகளின் ஒலியும், மதமொழுகுங் களிறுகளின் ஒலியும் தேர்களின் ஒலியும், போர்வீரர் ஆரவாரிக்கும் ஒலியும், அவர்களணிந்த வீரக் கழலொலியும், போர்முரசுகளின் ஒலியுங் கலந்து ஒல்லென்னும் பேரொலியை யெழுப்பின!

துடிக்குங் கொடிய பாம்புகளென வீசுந் துதிக்கை களுடனும், முகிலொடு முகில் தாக்குவது போல மாறு

பட்டுப் பிளிறும் வாயுடன் இடியென இருப்புலக்கைகளை யெடுத்து வீசிக் குருதி பொங்கக் கொடிய களிறுகள் வீழ்ந்தன.

போர்வீரர்கள் ஒருவர்க் கொருவர் எய்துகொண்ட வாளிகளைத் தடுப்பர். எதிரிகளின் மார்பிலே தாம் எய்த வாளி படும்போது நகைப்பர். எய்யப்பட்டோரும் அவர் களுடைய ஆண்மையை மெச்சுவர். தம்மேல் வரும் வேலை வாள் கொண்டு துண்டித்து வீழ்த்துவர்.

இவ்வாறு சிறிது நேரம் இருபடைகளும் பின்னிடாமற் போர்செய்தன. எனினும், வடவர் படைத்துணையுடன் வந்த சோழன்படை கடலெனப் பரந்து சூருவளியாலே உந்தப்பட்ட நெருப்பென மோதியதால் எதிர்நிற்க முடியாம லுடைந்தது பாண்டியன் படை. அவன் படையிலுள்ள வீரர்கள் வில்லும் வாளும் வேலும் அம்பும் இழந்து, தேரும் பரியுங் களிறு மிழந்து பின்னிட்டனர். வைகைவள நாடன் தோற்றுனென்று முடிவு செய்து பொன்னிவள நாடன் வெற்றிச் சங்கெடுத்து முழக்கினுன்.

அக்காலை, முன்னரும் தம் அருளெனக் குளிர்ந்த தண்ணீர்ப் பந்தர் வைத்தும் வீரராகவந்தும் பகையை மாய்த்த வேடர்—அவ்வாறே பெருமை மிக்க வேடர்—மன்னராய்— ஆற்றலிழந்து கவலையில் மூழ்கிய செழியனுக்குப் படைத் தலைவராக வந்தார்.

சுந்தரப் பேரம்பு

மேரு வில்லியாகிய அவர் தம் வில்லை வளைத்துச் சுந்தரேசன் எனத் தம்பெயர் பொறித்த கூரிய கணைகளைத்தூண்டி, வெற்றிகொண்டோமெனச் செருக்குற்றுச் சங்க முழக்கி நின்ற சென்னியின் படைமீது தூவினர். அவ் வாளிகள் எல்லாம் ஒவ்வொன்றும் நூறு நூறு வீரர்களை மாய்த்தன. கண்ட சோழன் திகைத்துச் சீறிவந்து வீரருயிரை யுண்ட அக்கணைகளி லொன்றைக் கொணர்வித்துப் பார்த்தான். 'சுந்தரேசன்'

என வரைந்திருப்பதை நோக்கினான். 'இது, பாண்டியனுக்குத் திருவாலவாயார் செய்த துணையின் செயல்,' என வுணர்ந்து, படைகளுடன் பின்னிட்டான்.

போர்த்துணையாக வந்த வட நாட்டினர் - துருக்கர் ஒட்டியர் முதலானோர்—யாவரும் அவனைத்தடுத்து நிறுத்தி வைது, "நீ போர்க்குத் தோற்றோடுகின்றனை! இது நின் செயலானால் வீரம் யாவருக் குண்டாம்? உன் பெருமைக்குத் தகுமா? ஓடாமல் எதிர்த்துநில்," என்று திரும்பவும் அழைத்துக் கொண்டு வழுதியின் படைமேற் பாய்ந்தனர். இடியென ஆர்ப்பரித்து வில்லை வளைத்துத் தனித்தனியே நின்று 'சொல்லினுங் கடிய வாளிகளை' விடுத்துப் பாண்டியன் படைஞரை மாய்த்தனர்.

அதனை முக்கட் பெருமானார் கண்டார்: தாம் முற் காலத்திலே தாங்கிய பொன்மலை போன்ற பெரிய வில்லை வளைத்தார். ஓரம்பை விடுத்துப் பகைவர் விட்ட பல்லாயிரம் பகழிகளையும் விலக்கினார். பிறகு ஓரம்புக்கு நூருட்களாக மாய்த்தார். அவர் தொடுக்கும் அம்புகள் பத்து, நூறு, ஆயிரம் என வில்லிலிருந்து வெளிவந்தன. நால்வகைப் படைகளையும் அம்பு ஒன்றுக்கு நூறு கணக்குத் தவருமல் அழித்தன.

போர்க்களக் காட்சி

அண்ணல் அம்பினால்,

தோளுந் தாளும் வீழ்ந்தன. தலைகள் மண்ணிலே சாய்ந்தன. இறந்தோர் மெய்யிலிருந்து தும்பை மாலைகள் விலகின. மதக் களிறுகள் மாண்டன. விரைபரிகள் விழுந்தன. தேர்க் கொடிஞ்சிகள் சிதைந்தன. மற்றைய படைகள் ஓட்டம் பிடித்தன.

சில தலைகள் மெய்யிலிருந்து முன்னே செல்லும் உயிரைப் பின்பற்றிக் கதிர் மண்டல வாயிலாகச் செல்ல முயற்சிப்பதைப்போலத் துள்ளின. அம்பும் வாளும் பட்டு

வெட்டுண்ட சில தலைகள் கூவிக்கொண்டு வீழும்போது ஆடின! அத் தலைகளின் குறையுடலிலிருக்குங் கைகள் தாள மிடுவன போலத் தட்டின. தன் தலையைத் தரையிலே விழ வெட்டினவனைக் குறையுடற் கையிலிருக்கும் வேல் குத்தித் தள்ளியது. சில தலைகள் வீழும்போது வாய் மென்று பற்களைக் கடித்துக் கறுவின. குறையுடல்கள் மார்பைத் தட்டின. ஒருவழியாக விழ்ந்த இருதலைகள் ஒன்றை யொன்று நோக்கி நகைத்துப் ‘பிரிவின்றி வந்து விட்டாயே!’ என நட்பு முறையிலே பேசிக் களித்தாடின!

வான வழியே செல்லும் பருந்து காகம் கழுகு முதலானவை போர்க்களத்திலே வீழ்ந்தவர்களின் மேற் சிறகடித்துச் சூழ்வன, களைப்பைப் போக்கப் பக்கத்திலே நின்று ஆலவட்டம் வீசுவனபோற் காணப் பெற்றன. சில பிணங்களின் ஒரு பக்கத்திலே கத்தியும் ஒரு பக்கத்திலே பருந்து காகங்களும் ஒரு பக்கத்திலே கழுகுகளும் இழுப்பது ஐம்பொறிகளுஞ் செய்யுங் குறும்புச் செயலைப் போன்று காணப்பட்டது.

வால் துடுப்பாகவும், இரு செவிகளும் முறமாகவும், தந்தங்களிலிருந்து சிந்திய முத்துகள் அரிசியாகவும், கால்கள் உரலாகவும், தந்தங்கள் உலக்கையாகவும், கவுள் சமைக்குங் கலமாகவும், குருதி தீயாகவும், மத்தகங்கள் அடுப்பாகவும் களிற்றுப் படுகளம் போமங்கையின் மடைப் பள்ளியாகவும் ஆகியது!

சோழனைச் சார்ந்து துணையாக வந்த அயற்புல அரசர்கள் நச்சு மரத்தினை யடுத்த சந்தன மரங்களும் நெருப்பினுலே எரிந்ததைப் போலச் சுந்தரப் பேரம்பினுலே மாய்ந்தனர்.

நம்பருடைய வெங்கணைகளினுலே இவ்வாறு தன் படைகள் அழிந்தது கண்டு மயங்கி, எஞ்சிய படையும் பகைவர் இகழ்ச்சியும் அழிந்த வீரமும் சூழச் சோழன் சோர்வுற்றுப் ன்வாங்கிப் போனுன்.

வந்த வீரர் மறைந்தார்

இந்திரவில்லும் மேகமும் போன்று போர்க்களத்திலே தோன்றிப் போர் செய்த சுந்தரர் பாண்டியன் மலர்ந்த முகத்தை நோக்கி, இருவிலே தோன்றும் மதியென அருள் நகை புரிந்து மறைந்தார்.

தென்னவன் வெற்றிச் சங்கைத் தன்வாயிலே வைத்து முழக்கிக் களிற்றிமீதமர்ந்து மங்கல இயங்கள் முழங்கத் தன் நகரை அடைந்தான். தன் படைக்குச் சார்பாக வில்வீரராக வந்து வெற்றி யருளிய சுந்தரருக்கு நிலையாக வழிபாட்டுப் பொருள்கள் அளித்து, மணிக்கலன்களும் பொன்னுடைகளும் அளித்தான். மற்றும் ஒளிவிடும் மாணிக்கத்தாலே வில்லும் சுந்தரப் பேரம்புஞ் செய்து சாத்தினான். உலகெங்கும் ஒரு குடை நிழலிலே வாழ அரசு புரிந்தான்.

"சிலைவிற்சே வகஞ்செய்து வாகை வாங்கித்
திருவளித்த சேவகற்குச் சிறந்த பூசை
நிலைவித்தாய் மணிப்பொலம்பூண் நிறுவிச் சாத்தி
நிழல்விரிக்கும் வெயில்மணியால் நெடிய மேரு
மலைவிற்றுன் என்னவரிச் சிலையும் நாமம்
வரைந்தகடுங் கூர்ங்கணையும் வனைந்து சாத்தி
அலைவித்தாழ் கடல்உலகுக் ககலச் செங்கோல்
அறம்பெருக்கும் வங்கியசே கரனும் அண்ணல்." (சச)

---

௩௧. சங்கப் பலகை கொடுத்தல்

நாற்பத் தெட்டுப் புலவர்

ஒருகாலத்திலே நான்முகன் மறைவழியிலே நின்று பத்துக் குதிரை வேள்விகள் காசியிலே செய்தான். முற்றிய மறுநாள் நன்னீரில் ஆடுவதற்குத் தன் காதலியரான கலைமகள் சாவித்திரி காயத்திரி என்னும் மூவருடனுங் கங்கையை நாடிச் சென்றான்.

செல்லும் வழியிலே விஞ்சை மாதொருத்தி பாடிய இசை வெள்ளத்திலே கலைமகள் முழுகி மெய்மறந்து நின்று விட்டாள். நான்முகனும் மற்றைய மாதரிருவரும் கங்கை யாற்றை யடைந்து நீராடி வெளியேறினர். பாமகள் அப்போதுதான் வந்தாள். ''என்னை விட்டு நீங்கள் மட்டும் நீராடினீர்களே!'' என்று வெகுண்டாள்.

நான்முகன் ''காலந் தாழ்த்த குற்றம் நின்னுடையது. ஆகவும், எம்மேல் வெகுண்டது பிழை. இப் பிழையை 'எண்ணறு மாக்கள் தோற்றம்' உற்றொழித்தல் வேண்டும்,'' எனச் சபித்தான். நாமகள் நடுங்கினாள்.

''பிறவித்துன்பம் — மானிடப் பிறவித்துன்பம் — உன் உயிர்த்துணைவி யடைவதோ?'' என வேண்டினாள் வீணை வாணி.

திசைமுகன் சிந்தித்தான்.

''நின் மெய் யெழுத்துகள் ஐம்பத் தொன்றில் ஆகாரம் முதல் ஹாகாரம் இறுதியாகவுள்ள நாற்பத் தெட்டெழுத்து களும் நாற்பத்தெட்டுப் புலவராகப் பல வேறுவகை வருணத் திலே தோன்றட்டும். அந்த எழுத்துகளுக்கெல்லாம் முதன்மையாகி இயக்கும் அகர வெழுத்தின் தலைவரான முக்கட் பெருமானார்—திருவாலவாய்ச் செல்வர்—தாமும் ஒரு புலவராகி அப் புலவர்களுள்ளிருந்து அறிவு கொளுத்திப் புலமை காப்பார்.''

அவன் ஆணைப்படி நாற்பத்தெட்டெழுத்துகளும் வேறு வேறு மக்களாய்ப் பிறந்து, பல கலைகளின் வகை யுணர்ந்து ஆரியமும் பிற மொழிகளுங் கற்றுத் தென் மொழியினும் புலமை பெற்றனர். அவர்கள் பொன்னும் மணியுங் கலந்த கலன்களே யன்றிச் சிவமணிக் கண்டியும் பூண்டவர். குளிர்ந்த நிலவொளி திகழுந் திருவெண்ணீறணிந்தவர். சிவனாடியிலே செஞ்சொல் மாலையே யன்றி மலர்மாலையும் அணிந்து வழிபடும் மாண்பினர்.

புகழ் பெற்ற இப் புலவர்கள் எப்புலன்களினுஞ் சென்று புலமை வென்றி கொண்டு பொருநை வளங்கொழிக்கும் பாண்டி நாடடைந்தனர்.

சங்கப் புலவர்—வேன்றி

பலகலைப் பனுவல்களின் பயனான சோமசுந்தரர் ஒரு கல்விச் செல்வராய்—காளைப் பருவத்தினராய்—மொழிநிலை கடந்த தம் திருவடி புவியிலே தோய அப் புலவர்கட் கெதிரே தோன்றினார். "நீங்கள் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்று வினவி யருளினார்.

"நாங்கள் புலவர்கள். அடைந்தோர் பழியை நீக்கும் பொருநை நாட்டை நாடி வந்தோம்."

"நீவிர் இனிய தமிழ் வளரும் ஆலவாயிலிலே எங்கள் இறைவரை—அருள் முதல்வரை—வணங்கல் வேண்டும். வருக!"

"தாங்களே அளவில்லாத வினைகளைத் தீர்க்கும் ஆலவாய் அண்ணல் எங்களுக்கு!"

அப் புலவர்கள் சூழக் கூடலிறைவர் திருமுன் சென்று அவர்கள் அண்ணலை வழிபடச் செய்து மறைந்தார் வந்த வள்ளல்.

புலவர்கள் விம்மித மடைந்தனர். பிறைமுடியை மறைத்து வந்த பெருமானார் அருளிது எனத் தெளிந்தனர் வேறு வேறு செய்யுளால் விண்ணிழி விமானத்தி லெழுந்

தருளிய அருளுருவை வாழ்த்தி வணங்கினர். மீண்டு பாண்டியனைக் கண்டனர்.

பாண்டியன் அவர்கள் புலமையை ஆய்ந்துணர்ந்து, அவ்வக்குரிய கிழமையை யுணர்ந்து, நல்லொழுக்கத்தை யுணர்ந்து, 'இவர்கள் சான்றோரே' எனத் தெளிந்தான். களிப்புடன், பிறை முடித்த பெம்மானார் திருக்கோயிலின் வடமேற்குப் பக்கத்திலே சங்கமண்டப மொன்று சமைத்துத், தகுதி நல்கி யிருந்தான்.

வந்தவர்க்கு நல்கிய வரிசைகண்டு மனம் புழுங்கிய முன்னைப்புலவர்கள் வந்து வாது செய்து பன்முறை தோற்றுப் பண்டைய மதிப்பு மிழந்து வருந்திப் போயினர்.

சங்கப் பலகை

இவர்களைப் போலவே அயல் நாட்டுப் புலவர்களுஞ் செருக்குடன் வந்து வந்து வாதிக்கத் தொடங்கினர். அவர்களோடு வாதித்து வென்றி கொண்ட நாற்பத்தெண் மரும் உமையொரு பாகரை யடைந்து வணங்கி, "எவரும் எம்முடன் வந்து வந்து வாதஞ் செய்து தொந்தரை கொடுக்கின்றனர். அவர் புலமையை அளக்க எமக்கொரு சங்கப் பலகை தந்தருள்க!" என வேண்டினர்.

அன்று பாடிய பாணனுக்குத் தாமாகவே வலிய பலகை யிட்ட வள்ளலார், இப் புலவர்கள் வேண்டுகோளை வீணுக்கு வரோ? தாமும் ஒரு புலவராக வடிவங்கொண்டு பலகையுடன் அவர்களெதிரே யெழுந்தருளினார்.

"ஒரு முழச் சதுர அளவுள்ள இப் பலகை அறிவினுந் தூயது; மறையினும் வலியது! உங்களைப் போன்றவர்க் கெல்லாம் முழம் முழம் வளர்ந்து இருக்கை யளிக்கும். மேலும் இது நுமக்குத் தக்க அளவு கோலுமாம்."

நாமகளுருவாய் வந்த நாவலர்களுக்கு வெள்ளைத் தாமரையணையைப் பலகையாக்கித் தருவதே போலக் கூட லிறைவர் கொடுத்தருளினர். புலவர்கள் வணங்கிப் பெற்றுக்

கோயிலை வலம் வந்து கழகத்தை யடைந்தனர். அப் பலகைக்கு மணமிக்க நறுமலர் மாலைகளை யிட்டனர். குளிர்ந்த பனிநீர் தோய்ந்த சந்தனம் பூசினர். வெண் மலரிட்டு வெள்ளாடை புனைந்தனர். நறும் புகை காட்டித் தீபங்காட்டி வழிபாடு செய்தனர். பிறகு நக்கீரன், கபிலன், பரணன் என இம்முறையாலே தனித்தனியாக எல்லாப் புலவரும் அப் பலகையிலமர்ந்தனர்.

அப் பலகையின் சிறப்பை அறைவ தெப்படி? ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு முழமாக வளர்ந்து, 'தன்னுரை செய்வோர்க் கெல்லாம் சுருங்கி நின்றகலங்காட்டித் தோன்றும் நூல் போன்றது.'

தெய்வப் பலகை பெற்ற சான்றோர்கள் நூலின் பொருளை விளக்க, 'ஏதுவும் எடுத்துக் காட்டும் எழுவகை மதமும் கூறும் போது' அவற்றைத் தெளிந்த கிள்ளைகளும் பூவைகளும் பொழிலிலே அமர்ந்து, வாது செய்வோர்கள் வந்தால் அவர்களோடு வாதித்து வென்றிகொள்ளும் எனில், அக் கழகத்தின் சிறப்பைச் செப்புவ தெப்படி?

புலவர் மயக்கம்—தலைமைப் புலவர்

நாற்பத்தெட்டுப் புலவரும் தங்கள் புலமையினாலே மேன்மை பெறத் தூய பாடல்களைச் செய்துகொண்டிருந்தனர். அவையெல்லாம் பலவகையினும்—சொல்லினும் பொருளி னும்—ஒத்துத் தலைமை பெற்றிருந்தன. ஆகையால், அவற் றிலே சிறந்த செய்யுட்களை யறிய ஒருவராலும் இயலவில்லை. அது மட்டுமோ, ஒருவர் செய்யுளை மற்றவர் தம் செய்யு ளென்றே கூறும்படி மயங்கி விட்டனர்.

ஆகவே, மயக்கத்தையும் தெளிவையும் நல்குஞ் சிறப் புடைய கள்வரான—சொல்லின் பொருளான—மதுரைப் பிரானார் அப் புலவர்களின் முன் நாவலர் திருவுருக்கொண்டு நண்ணினர். வந்தவரை அந்தப் புலவர்கள் வணங்கி வரவேற்றனர். "உங்களுக்கு மயக்கைத் தரும் யாப்பைக் கொணர்க!" என்றனர் இறைவர்.

அவர்கள், 'எந்தையே! இவை!' எனக் கொணர்ந்து முன் வைத்தனர். தூய சொல்லையும் பொருளின் தொடர்பையும் உருவாகக் கொண்ட இறைவர் அவரவர் பாடலை ஆராய்ந்து இவையிவை நும்பாடலென் றெடுத்தளித்தனர்.

புலவர் மனங்களித்துத், "தாங்கள் எங்களில் ஒருவராய் எழுந்தருள்க!" என வேண்டினர்; அன்பு பெருகத் தம் 'சங்கப் பலகை'யினு மிருத்தினர். பொற்பலகையாகிய அது பொன் மாலையாகவும் புலவர்கள் சூழ்மணியாகவும் இறைவர் நடுநாயக மணியாகவும் விளங்கினர். ஆகப் புலவர் நாற்பத் தொன்பதின்ம ராயினர். அவர்கள் மேலும் மேலுந் தமிழ் விளங்கப் பல நூல்கள் இயற்றி வாழ்ந்தனர்.

வங்கிய சேகரன் வங்கிய சூடாமணி யெனுந் தன் மகனுக்கு முடிபுனைவித்துப் புவியளித்துப் பற்றறவாழ்ந்து பரனூரடி சேர்ந்தான்.

௫உ. தருமிக்குப் பொற்கிழியளித்தல்

சண்பக சுந்தரர்—சண்பக மாறன்

அரசர்க் கரசனுன வங்கிய சூடாமணி தன் மரபிலே ஓரரசாகிய சுந்தரர்க்கு—அன்னங் கண்டறியாத முடிக்குச் சூட்டப் பலவகை மலர் தரும் மலர்ப் பொழில் வைக்கும் பணியிலே யீடுபட்டான். மாதவி, பாதிரி, தாதகி, வில்வம், மந்தாரம், மல்லிகை, முல்லை, இலஞ்சி, கோங்கம், கொன்றை, கரந்தை, கரவீரம், நந்தி, செருந்தி, குருந்தம், புன்னுகம், தாமரை, நீலம் முதலான மூவகை மலரையும் எட்டுத் திக்கும் மணத்தையள்ளி வீச—வண்டுகள் தேனுண்டு முரன்றிட—மலரச் செய்தான். மேலும் சண்பகப் பூங்காவொன்றையுந் தனியே வைத்தான்.

அந்தச் சண்பகப் பூங்கா அழகிய பொன்னணி புனைந்த மடந்தையர் போலக் கவின் பெற்று, மொய்த்திடும் அரும்புகள் விண்டு பிற பூங்காவின் மணத்தை யெலாம் அடக்கிய நறுமணத்துடன் மலர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தான். வண்டு மூசாத மலர்களைக் கொய்து நல்ல மலர்களாகத் தெரிந்தெடுத்து இண்டை, தொடை, தொங்கல், தாமம், கண்ணி யென வகைவகையான மாலைகளைத் தொடுத்துக் கண்ணுதலார் திருமேனியை அழகு செய்தான்.

பெருமானுர் பேரழகு சண்பக மலர்களாலே நன்கு விளங்கிக் கண்கொளாத காட்சியாயிருந்தது. அக் கோலத்தை வணங்கிய பாண்டியன் வியந்து, 'சண்பக சுந்தரரே இவர் !' எனப் புகழ்ந்தான். அன்றுமுதல் ஆலவாய்ச் சுந்தரர் சண்பகசுந்தர ராணுர். மாறனுஞ் சண்பக சுந்தரர்க்குத் தாமம் புனைந்து புனைந்து சண்பகமாற னுறுன்.

இளவேனில் வந்தது

சண்பக மாறன் சண்பக சுந்தரர்க்கு இத்தகைய பணி செய்து வரும் நாளிலே மாரனை முடிசூட்ட வந்தது இள வேனில்! அந்த இளவேனிலிலே மக்களுடைய வெப்பத்தை நீக்கும் இளந் தென்றலும் தன் வெப்பந்தீர்க்க வேறு

தென்றலை விழைந்தது! பொழிலும் பொழிலை விரும்பியது! தூய நீர்ப் பொய்கையும் பொய்கையை வேண்டியது! குளிர்ந்த திங்களும் வேறொரு திங்களைத் தேடியது! என்னென்பது அவ்வெப்பத்தை!

தேமாமரங்க ளெல்லாம் வானத்தருக்களின் மேற் சீறி யெழுந்தாற் போலச் செந்தளிரைப் பரப்பி வானத்தைத் தடவி நின்றன. மணியிழைத்துச் செய்த பொற் குழை யணிந்த மகளிர் போலச் செருந்திகள் மலர்ந்தன. வளமிகுந்த முள்முருக்கெல்லாஞ் செஞ்ஞாயிறு போலவும், காஞ்சி யெல்லாம் இந்திரன் போலவும், மரவ மெல்லாந் திங்களைப் போலவும், காயா வெல்லாம் சக்கரக் கையன் போலவும் மலர்ந்தன. வைகையாகிய மங்கை மேகலை யணிந்தாற் போல மணல்மேடுகளிலும் கரையைச் சூழ்ந்தும் ஞாழல்கள் மலர்ந்து மகரந்தத்தைச் சிந்தின. கன்னிப் புன்னைகளெல்லாம் மரகதத்தைத் தழைத்து வெண்முத்தை அரும்பிப் பொன்னை மலர்த்திக் கடற்கரை முழுதும் பவளக் காடு செய்தன.

மரங்களெல்லாம் ஊடினார்போல வெம்பி இலைகளை யுதிர்த்தும், உயிரனைய காதலரைக் கூடினார் போலக் குழை கொண்டு தழைத்தும் வாடினவர் போலக் கண்ணீர் (கள் நீர்) வடிய மெய் பசந்தும், காமம் மிகுந்தவரைத் தூற்றும் அலர் போலப் பூத்தும், எங்குஞ் செறிந்தன. விருப்பம் மிகுந்த காதலர்கள் மெலிந்தபோது மெலிந்து, உள்ளங் குழைந்து களிக்கும்போது தாமுங் குழைந்து களிக்குங் கற்புடைய மகளிர்போலக் கோடை தீப்ப மரங்கள் வாடும் போது வாடியுந் தழைத்தபோது தழைத்தும் நின்றன அம் மரங்களைத் தழுவிய கொடிகள்.

தொலைவிலிருந்து வருந் தென்றற்காற்றுத் தள்ளவும், தெளிந்த தேன் சிதறவும், வண்டுகள் முரலவும் பூங்கொடிகள் ஆடுவது, ஆடலாசிரியன் ஆட்டவும் நகை முகத்திலே வியர்வை சிந்தப் பாடிக்கொண்டு ஆடும் பாவையர் நிலையை நினைப்பூட்டின.

செவ்வந்தியும் வகுளமும் மலர்ந்து, வாடி யுதிர்ந்து கிடந்தன. அம் மலர்களில் ஒட்டிய தேனை வண்டுகள் நக்கிக் கொண்டிருந்த காட்சி, 'மனக்குறை வில்லாத நல்லோர் நம் செல்வங் குன்றினும் அடைந்தோர்க் கில்லை யென்னுமல் உயிரை மாற்றியாயினுங் கொடுப்பர்' என்னும் அறநெறியை நினைவூட்டியது.

குயில்களெல்லாம் மணங்கமழுங் குளிர்ந்த தேமாந் தளிர்களைக் கோதிக் கூவிக்கூவித் தம் காதற் பெடைகளை யுருக்கின. மாற்றான் கைக் கொள்ளத் தன் ஆட்சியை ஒப்பித்து ஒடுங்கிய முன்னைய அரசன்போல மயில்கள் ஒடுங்கின.

பூங்காவில் நுழைந்து, பொய்கையிலே தாவித் தாமரையைத் துழாவி, நறுமணமுள்ள இருவாட்சி முல்லை மல்லிகைப் பந்தல்களைத் தடவி மலர்களினுள்ள தேனைக் கொள்ளை கொண்டு குளிர்ச்சி யடைந்து—அங்கங்கே கிடைக்குங் கலைகளை ஆராயும் புலவன்போல—இளந்தென்றல் உலாவியது.

தாமரை காளாஞ்சி யேந்தவும், குயில் முழவத்தை முழக்கவும், மாவிலும், மருதிலும் அமர்ந்த கிளிகள் மங்கல வாழ்த்துக் கூறவும், வண்டுகள் இசை பாடவும், தாழைகள் முள்வாளெடுப்பவும், வேனிலரசன் அந்தக் குளிர்ந்த பூங்காவிலே அரசு வீற்றிருப்பான்.

இத்தகைய வேனிற்காலத்திலே நான்மாடக் கூடலுள்ள வலிமை மிக்க தடந்தோள் மைந்தர்கள் வானத்தவரும் விரும்பும் நலந்தரும் மங்கையருடன் வான நாட்டவரின் பொன்மயமான செல்வந்தரும்—மரங்களைப் போற் காட்சியளிக்கும் பூம்பொழிலிலே இன்பந்துய்க்கச் சென்றனர்.

பூம் பொழிலில்

ஆடவர்களிற் சிலர் பெரிய அடிகளையுடைய மதக்களிற்றின்மேற் சிங்கமெனச் சென்றனர். சிலர் தாவும் பரி

களின்மேற் களிறெனச் சென்றனர். சிலர் ஞாயிறு போலத் தேர்மீதமர்ந்து சென்றனர். சிலர் மாலைகளிலே வண்டுகள் முரல மலையென நடந்து சென்றனர்.

மடந்தையரிற் சிலர் கரிய பிடிகளின்மேற் பிடியெனச் சென்றனர். சிலர் முத்துப் பல்லக்குகளின்மேற் கலை மகளெனச் சென்றனர். சிலர் கருப்புவில்லை யுடைய காமன் காதலிபோற் பரிமீது சென்றனர். சிலர் தங்கள் காதலர் கைகளைப்பற்றி நடந்து சென்றனர். இருதிறத்தாரும் பொழிலை யடைந்தனர்.

பிடியினும் பரியினு மூர்ந்து வந்த பூங்கோதையர் தம் கணவர் தோளைத் தழுவி யிழிந்தனர். பூங்கோதையர் பூங்கொடி மகரந்தப்பொடிகளைச் சிந்துவது போலக் கலவைச் சந்தனம் உதிர வனமங்கையர்போற் சென்றனர். அவர்கள் நடையோவியம் போலப் போய்ப் பூத்த மாதவிப்பந்தரின் கீழும் புன்னைமர நிழலிலும் தேமாவின் அடியிலும்செருந்தியின் கீழும் தாழையின் நிழலிலுஞ் சேர்ந்தனர்.

அப் பூம்பொழில் அலையெறியும் பொய்கையில் மட்டு மின்றித் துடியிடை மகளிரின் முகமான தாமரையாலும் இதழாகிய குமுதத்தாலுங் கண்களாகிய குவளையாலும் விளங்கிக் கோடுகளிலும் நீர்ப்பூக்கள் மலர்ந்தன போலக் காணப் பெற்றது. (கோடுகள்: பூங்கொம்புகள் போன்ற மகளிர்.) கொடிமாடங்களை யடைந்தனர். எல்லோரும் வந்த தளர்ச்சி நீங்கிய பின்னர் மலர் கொய்யப் புகுந்தனர்.

மை தீட்டிய பெரிய கண்களையுடைய பெண்கள் கொம்பிலுள்ள மலர்களை வளைத்துக் கொய்வர்; குமிழ் போன்ற நாசியில் மோந்து பார்ப்பர்; குழையினுஞ் செவி யினுங், கூந்தலினும், அணிவர்; மகிழ்வர்; நீங்காத காதல் மிகத் தங்கொழுநர் மார்பிலே காமன் கணையென எறிவர்; அவர்கள் குழலில் அணிந்த மலர்களிலே வண்டுகள் தேனை யுண்டு முரல்வது ஏழிசை பாடிக் கள்ளுண்ணும் பாணர் செயல் போன்றது.

இவ்வுலகிலேயே வீடளிக்குந் தெய்வம் மகளிரே யென் பார் மொழி வீணன்று; மெய்யேயாகும். வளையலணிந்த அவர்கள் கை வளைப்பதனாலே வளைந்து, செயலற்று, அவர்கள் அடியிலே மலரைத் தூவி, மலர்முகத்திலே கண்ணீர் (கள்—நீர்) வார மரக் கொம்புகளும் பணிந்தன வெனில், உலகி னரியலைக் கூறுவதென்?

ஒரு மங்கை தன் கைக் கெட்டாமல் நிமிர்ந்த மலர்க் கொம்பை வளைக்குந் தோறுங் கைக் கெட்டாமையால் வாடிக் கொடிபோல நின்றாள். அதனை மலர்க்கணை யேந்திய வேளனைய ஒருவன் கண்டு, "ஏன் சோர்கின்றாய்? தோள்மீ தேறிப் பறி!" என அவளைச் சுமந்து நின்றான். மற்றொரு மங்கை அவ்வாறே எட்டாமலர்க் கொம்புக்குக் கொட்டாவி விடுதலை அவள் உயிர்க்காதலன், கண்டான். விரைந்து வந்து "இதுவும் ஊடிய மகளிரோ? கொய்து கொள்," என அக் கொம்பை வளைத்து நின்றான். அம் மங்கை (ஊடிய மகளிரெனப் பன்மையாற் கூறியதனாலே) கண்களிலிருந்து முத்தெனக் கண்ணீர் வார நின்றாள்.

ஒருவன் தன் காதலியின் காதிலுள்ள குழையுடன் தான் கொய்த செருந்திப்பூவையும் அணிந்து நோக்கி, "இக்குழை அழகிது" என்றான். அவளோ, "அங்ஙனமேல் அதை என் தங்கைக்கு இடுக!" என்று கூறி அக் குழையையும் செருந்திப் பூவையும் வீசியெறிந்து விம்மினாள்.

ஒருவன் தன் காதலிக்கு நாண்மலர் கொய்தளித்தான். அவன் மெய்யிலே அம் மலர்களின் மகரந்தப் பொடிகள் சந்தனமுங் கத்தூரியும்போற் சிந்திக் கிடந்தன. அதனைக் கண்ட காதலி, "இஃது எப் பெண்ணை அணைந்ததனாலுண் டான சாந்து?" என்று வினவினாள். அவன், "என் உள் ளத்திலே உன்னையுஞ் சுமந்து கொய்த சண்பகத்தாது," என்றான். அவளோ உன்னையும் என்றதனாலே மற்றொருத் தியையுஞ் சுமந்ததாகக் கருதி நெய் சொரிந்த நெருப்பைப் போலச் சினந்து நின்றாள்.

ஒருவன் தன் காதலியின் ஊடலைத் தணிக்க அவள் காலில் விழுந்து வணங்கினான். அவன் முடிமணியிலே தன்னிழல் தோன்றக்கண்ட அப் பேதையாள், "நீர் சிவனார் போல முடியிலே ஒருத்தியை வைத்துக்கொண்டு என்னைப் பணிவது ஏன்?" என்று முன்னைய ஊடலின் மேலும் மற்றோர் ஊடல் கொண்டாள்.

பூங்காவிலுள்ள மலர்களை யெல்லாம் மங்கையர் கொய்து விட்டதனாலே, கொடுத்து வறுமையடைந்தோன் இல்லைப்போல அஃது வறிதாயது.

போய்கையில்

மை தீட்டிய கண்களையுடைய மடந்தையர் தம் காதலருடன் மலர்கொய் தணிந்த பிறகு மெய்யையுங் கண்களையும் வேறுபடுத்தித் தங்கணவரைத் திகைக்கச் செய்யும்படி பொய்கையிலே நீராடப் புகுந்தனர்.

அன்னமனைய பெண்கள் நீராடும் பொய்கை நீலமும் அல்லியுந் தாமரையுமே யன்றி அழகிய முல்லையும் சண்பகமும் கோங்கும் பூத்தன போன்று காணப்பட்டது. அவர்கள் நீராடக் குளத்திலே யிறங்குமுன் அங்குள்ள கயல் மீனும் பாம்பும் ஆமையும் நண்டும் அன்னமும் பெரிய வரால்களும் அஞ்சி யோடின. பகைவர் மேற்கொண்டு வரின் வலியிழந்தவர் எதிர் நிற்பரோ?

பண்ணனைய மொழியர்கள் நீராடுந்தோறும் குளிர்ந்த அலைகள் மோதும்போதெல்லாம் அவர்களுடைய கண்களுடன் குவளையும் இதழ்களுடன் குமுதமும் முகங்களுடன் தாமரையுந் தாக்குவது, அவை தம்முள் மாறுகொண்டு தாக்குவது போன்றிருந்தது.

இளமை ததும்புங் கண்களையுடைய மகளிர் தங்கள் கூந்தல் பாசிபோல் விரிந்தலைய நீராடும்போது அவர்களுடைய மார்பும் முகமும் அக் கூந்தலுடன் கலந்து காணுங் காட்சி அருகிலே சூழும் அரும்புகளுடன் தாமரை மலர்கள்

ஆழமான அலைகளையுடைய நீரிலே (பாசியிடையே) அலைவது போற் காணப் பெற்றது.

தூயநீரிலே குடைந்து வெளியேறுந் தன் காதலியைக் கண்ட காதலன், அவள் வாயும் வேலனைய கண்களும் முறையே விளர்த்துச் சிவந்துங் காணப்படுதலால் அடையாளந் தெரியாமல், "என் இனிய உயிரனையாள் எங்குளாள்?" என்று வினவினன். அதனாற் சீற்றமடைந்த அவன் காதலி கண்ணீர் பெருக நின்றாள்.

தன் காதலனுடன் ஊடிய ஒரு நங்கை, அவ்வூடல் நீட்டிப்பதைப் பொருமல் காதல் நோய் வருத்துவதால் - அவன் காணும்படி நீரிலழுந்துவாள் போலக் காட்டி, அயலிலிருந்த அன்னத்தைப் பார்த்துக் "கைகொடு" என வேண்டினள்.

கரும்பனைய மொழியாளொரு காரிகையின் முகம் தாமரை மலர்களினிடையே காணப் பெற்றது. அவள் காதலன், முகத்திற்கும் மலர்களுக்கும் வேறுபாடு காண முடியாமல் ஐயுற்று வாடினன். அவன் நிலைக் கிரங்கிய காதலி முல்லைபோல் முறுவலிக்க அந்த முறுவலாலே அடையாளந் தெரிந்து மகிழ்ந்தான்.

நறுமணமிக்க சுண்ணக் கலவையும் நானமுங் கொண்டு ஒருவர்மே லொருவர் வீசி விளையாடினர்கள். இடையே நறுமணத்தை வண்டுகள் பாய்ந்துண்பது வழிச்செல்வோரின் பொருளைக் கள்வர் கவர்வதுபோலிருந்தது. பிடியுங் களிறும் போன்றவர்கள் சிலர் முதலில் ஒருவர் மேலொருவர் மணமிகு பனிநீரையுஞ் சுண்ணப் பொடியையும் வாரியிறைப்பர். பிறகு, ஒளிவிடுந் தொடியணிந்த கைகளாலே முன் வீசிய சாந்தழியத் தூய நீரை யிறைப்பர்.

களிறுபோன்ற காளை யொருவன் நீராடுந் தன் காதலியை, "அங்கே ஆழம், செல்லாதே, நில்," எனக் கூறியவாறு நெருங்கித் தன் கைகளால் வாரித் தன் மார்பிலே அணைத்துச் சென்றான்.

இவ்வாறு தாங்கள் பூசிய சந்தனத்தையுங் கத்தூரியையும் அணிந்த மாலைகளையும் பொய்கைக்குக் கொடுத்துத் தம் மெய்யினில், அப் பொய்கையின் தாமரை மலரின் மணங் கமழப் பெண்டிரும் ஆடவரும் வெளியேறினர்.

புதுத்தேன் நுகர்தல்

பொன்னாலும் வெள்ளியாலும் பளிங்கினாலுஞ் செய்யப்பட்ட கிண்ணங்களிலே வேலைக்காரிகள் புதுத்தேனைக் கூரிய வாளை நட்டாற்போல வாக்கினர். நங்கையர்கள் தம் விரலாலே ஒருதுளி யெடுத்துச் சிதறிவிட்டுக் கொவ்வை வாயிலே வைத்தருந்தினர்.

மென்மலர்களிலுள்ள துளித்துளியான தேனை நக்கித் திரியும் வண்டுகள் பெரிய மிடாக்களிலுள்ள தேனைச் சுற்றி ஒட்டினும் ஓடாமல் மொய்க்கும். வறியோமென்று பலரிடத்திலும் இரந்திரந்து வறுமை நீங்காத வறியோர் புதையலைக் கண்டால் விடுவரோ?

தேனுண்டு மயங்கிய ஒருத்தி தன் கைக் கிண்ணத்திலுள்ள தேனிற் றோன்றுந் தன் முகத்தையுங் கண்களையும் கண்டு, "கடலிலே தாமரை மலர் மலர்ந்துள்ளது. அதிலுள்ள தேனை ஆர அமர்ந்து பருகாத பேதைத் தும்பி துளித்துளியாகச் சிதறுவது என்ன பேதைமை?" என்றாள்!

ஒரு பெண் தான் உண்டு மிகுந்த தேனிலே தோன்றும் திங்களைப் பார்த்து, "என்னைப் பிரிவிலே நெருப்பாய்ச் சுட்டனை! இப்போது அகப்பட்டுக் கொண்டாய். இனி உன்னை விடுவேனோ? இங்கேயே கிட!" என்று கூறி மற்றொரு கிண்ணத்தாலே மூடி வைத்துவிட்டாள்!

தேனுண்டு மயங்கிய மற்றொரு தெரிவை நிலைக்கண்ணாடியிலே தன்பின் ஒளித்த கணவன் உருவமும் தன்னுருவமுந் தோன்றுவதை நோக்கிச் சினந்து, "என் மாற்றாள் தோளைத்தழுவி யின்பத்திலே மூழ்கிக்கிடக்கின்றனையோ?" எனக் கண்ணீர்வாரச் சீற்றத்துடன் கண்ணாடியை உதைக்கத் தலைப்பட்டாள்!

புதிய புளித்த தயிர்கலந்த இனிய சுவைமிக்க சோற்றை வளம்மிக விருந்தினருடன் உண்டு, வேனிலுக்குரிய யாழைத் தங்குரலுடன் இசையச் செய்து பாடிக் காமம் உள்ளத்தை வருத்த 'வெண்ணெய்ப் பாவை' போலுருகிச் சோர்ந்தனர் பெண்கள்.

சண்பக மாறன் - கூந்தலுக்கு இயற்கைமணம் – பொற்கிழி

இத்தகைய இளவேனில் மகிழ்ச்சியிலே சண்பக பாண்டியனுங் கலந்து கொண்டான். அவன் ஒருநாள் சிறந்த கம்மியன் செய்த ஒளிவிடுஞ் சந்திரகாந்தக் குன் றிலே வெப்பந்தணியத் தன் காதலியுடன் வீற்றிருந்தான். மாந்தளிரின்று வளவிய கோங்கலர்ந்து, காந்தளுங் கமல மும் ஆம்பலும் சண்பகமும் கழுநீரும் மலர்ந்துள்ள கொடி போன்ற தன் உயிர்த்துணைவியுடன் தனியே யிருக்கின்ற அவன் நாசி புதியதொரு மணத்தை நுகரும்படி தென்றல் அசைந்தசைந்து வந்தது.

அத் தென்றல் சுமந்துவந்த ஒருவகை மணத்தைக் கூர்வேற் பாண்டியன் குறித்து யோந்தான். "இது தனிப்பட்ட தூயமணம்! தென்றற் பூங்காவிலே சேர்ந்த மணமாக இல்லை. தென்றலுக் கெனவும் ஒரு மணமில்லை. வேறு எவ்விடத்து மணமாக இருக்கலாம்?"

சிறிது சிந்தனையிலே தேங்கினன்.

திரும்பித் தன் அரசியை நோக்கினன். அவளுடைய *ஐம்பாலுக்குகந்த கூந்தலிற் குழைந்த மணமெனக் குறித் தறிந்தான். "இம் மணத்தை வண்டும் அறிந்திலது!" என வியப்பிலே மூழ்கினன். மேலும், "இம் மணம் அதற்கு இயற்கையோ? செயற்கையோ?" என்றும் ஐயமுற்றான்.

"நாம் ஐயுற்ற கருத்தை எவரேனும் அறிந்து பாடல் செய்தால் அவர்க்கு இந்த ஆயிரஞ் செம்பொன்!" என அரசன் ஈந்த பொற்கிழியைப் பணியாளர் கொண்டு சென்று மெய்ப்புலவர் கழகத்திலே அவரறியத் தூக்கினர்.

*ஐம்பால்: குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை.

புலவர்களெல்லோரும் மரக்கலப் பொருளைப் போல வேறு வேறு வகையான பொருளால் தனித்தனியே முயன்று அகனுள்ளத்திலே சூழ்ந்த பொருளைத் துழாவித் துழாவிச் சோர்ந்தனர். கவலை சூழ்ந்த கருத்தினராயினர்.

தருமி - 'கோங்குதேர் வாழ்க்கை'

அக்காலத்திலே ஆதிசைவர் மரபிலே தருமியென வொருவனிருந்தான். அவன் மாணவ நிலையினன்; மணம் புரியும் விருப்பினன்; தந்தை தாயரை யிழந்த தமியன். அவன் திருக்கோயிலை யடைந்து, இயல்பாகவே பற்றுக் களிலிருந்து விலகிய - நான்முகனுந் திருமாலும் நாடரிய- அருவம், உருவம், அருவுருவமாக எங்கும் பரந்த - சோம சுந்தரரை வணங்கித் தன் வறுமை வெருவ ஓட்ட வேண்டினன்.

''தந்தையிலேன், தாயுமிலேன்! தனிப்பட்டேன்! புதுமண விருப்பம் எளியேன் சிந்தையை யிழுக்கின்றது! இடுக்கணைத் துடைத்தாள இதுவே போது! பெரிய மறைகளையும் ஆகமங் களையும் நிறையப் பயின்றும் தங்களை வழிபட இல்லறநெறியி லில்லாததால் உரிமையற் றிருக்கின்றேன்! தாங்கள் எல்லா மறிவீர்கள். வையைநாட்டான் மனக்கருத்தை யுணர்ந்து செய்யு ளொன்றை யெளியேற்கருளவேண்டும்!''

பாண்டியன் குலதெய்வமான பரமனர், 'கொங்குதேர் வாழ்க்கை' யெனத் தொடங்குங் குற்றமற்ற தெய்வத் தமிழ்ப் பாவைத் தமிழ்ச்சொல் அழகுபெறக் கூறி யளித்தருளினர்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே.''

களிப்பிலே திளைத்த தருமி தொழுது வாங்கினன். உலக முதல்வரருளிய ஒப்பற்ற செய்யுளைத் தலைமீது சுமந்து

புதையலெடுத்தவன் போலப் பெருமிதத்துடன் நாவலர் கழகத்தை நண்ணினான்.
"நல்ல! நல்ல!!'-"ஆயிரம்பொன் கொள்க!" - "தொடாதே! நில்!"

கழகப் புலவர்கள் கையிலேந்திப் படித்தனர். சொல் லழகும் பொருளழகுஞ் சூழ்ந்து நோக்கினர். 'நல்ல! நல்ல!!' என நாவலரெல்லோரும் வியந்து பாராட்டினர். அதனை அந்தணனுடன் சென்று விளக்கிக் கூறினர், பாண்டியனிடம். அவன் தன் கருத்துடன் அஃது ஒத்திருத்தலாலே முடியசைத்து மகிழ்ச்சியாலே துள்ளினான்.

"இப்பொழுதே அந்தணன் இவர்களுடன் சென்று, ஆயிரம் பொன்னையும் பெறுக!" என்றான் மன்னன்.

மன்னன் ஆணைப்படியே புலவருடன் சென்று பொற் கிழியை அறுக்கப் புகுந்த தருமியை, 'நில்!' எனக் கீரன் தடுத்தான்.

செய்யுள் குற்றமுடைத்து—தருமியின் மனக்கலக்கம்

"இச் செய்யுள் குற்ற முடைத்து!" என்றான் கீரன்.

செய்யுளின் இயலறியாத தருமி நீண்ட பசியுடைய ஒருவன் உண்கலத்திலே கைவைத் துண்ணும்போது தடையுற்றாற் போல வாடினான். வறண்ட வுள்ளத்துடன் விலகிச்சென்று சோமசுந்தரர் திருவடியிலே அச் செய்யுளை வைத்து வணங் கினான்.

"கறைமிடற் றண்ணலே! அடிகள் ஏன் இத்தகைய பிழைபட்ட செய்யுளை நல்கினீர்கள்? நீண்ட நாளாக வறுமைத் தளையிலே சிக்குண்டு மயங்குகின்றேன். எனினும் வறுமையிலே பழகிவிட்டேன். இப்போது தாங்கள் பொருளளிக்காவிட்டாற் பிழைகூற மாட்டேன். எவர்க்கும் மேலானவரான - கறைமிடற் றண்ணலான - தங்கள் செய்யுளுக்குங் குற்றங் கூறினாரே சில் வாழ்நாட்சிற்றறிவுடைய புலவர் என ஏங்குகின்றேன்! தங்கள் மதிப்புக்கிது தாழ்வன்றோ? எந்தையே! இப் பழிப்புத் தங்களையே சாரும்! எனக்கில்லை."

சைவச் சிறுவனுடைய இரக்கத்தினைக் கருத்துட்கொண்ட எவருக்கும் பற்றும் வீடும் மறையும் பயனுமான - சுந்தர விடங்கர் ஒரு புலவராக வெளிவந்தார்.

சுந்தரப் புலவர் – குற்றங் குற்றமே

கண்டிகை, தோளணி, ஆழி, ஒளிவிடும்முடி, வயிரக்குழை முதலான அணிகள் மெய்யில் அணிசெய்தன. நெற்றியிலே முத்தமிழ் விரகர் என்பது போன்ற முப்பட்டை வெண்ணீறு விளங்கி அறியாமையைக் கிழித்துத் தள்ளியது. விரியொளி தவழும் மெய்ப்பையி லடங்கி யொளிவிடும் கடகமணிந்த திண்ணிய தோளரான கற்றுச்சொல்லிகள் அடைப்பை, காளாஞ்சி, பொன்னுடை முதலியன சுமந்து பின்வர, அப் புலவர் முத்தாலான குடையின் கீழ் வந்தனர்; இருபுறமும் கவரி வீசினர். சொல்வரம்பைக் கடந்த திருவடிகள் என்பதை விளக்க நான்மறைகள் நல்ல பாதுகையாய் அமைந்திருந்தன.

இத்தகைய தோற்றத்துடன் கூறியவற்றைக் கற்றுப் பாட வல்லவரும் மறைகளும் அங்கமும் கற்று அவற்றை மனுமுதலான கலைகளைப் போலச் சொல்லவல்லவரும் வீற்றிருக்கும் அவைக்களத்தை அடைந்தார்.

அவைக் கெதிரே அண்ணலார் நின்றார். "நம் கவிக்குக் குற்றங் கூறினர் யாவர்?" என்றார்.

வாய் மூடுமுன்னமே கீரன் அஞ்சாமல், "நானே" என்றான்.

"குற்றம் யாது?"

"சொற் குற்றம் இல்லை; பொருட் குற்றமே!"

"அது தான் என்ன?"

"புனைந்த மலர்களின் சார்பினாலன்றிக் குழலுக்கு மணம் இல்லையே!"

"பதுமினி வகைப் பெண்களுக்குமோ?"

"அவர்கள் கூந்தலுக்குந்தான்."

"தெய்வ மங்கையர் குழலுக்குமோ?"

"அவர்கள் கூந்தலும் மந்தாரமலரின் சேர்க்கையாலே தான் வீசுகிறது!"

"நீ நாடோறும் பரவி வழிபடும் பரம்பொருள் திருக்காளத்தியப்பர் பங்கிலமரும் ஞானப்பூங்கோதையார் கூந்தலுக்குமா இயற்கை மணமில்லை?"

"அன்னதும் அஃதே!"

நக்கீரனுடைய அஞ்சாமைக்கு வியந்த அண்ணல் நெற்றிக்கண்ணைச் சிறிதே காட்டினர். அவன் சிறிதும் அஞ்சவில்லை!

"அமரர் தலைவன் மெய்யேபோல உடலமெங்குங் கண் கொண்டு வந்தீராயினும் நீர் பாடிய பாட்டுக் குற்றங் குற்றமே!"

பிறைமதிக் கண்ணியார் நெற்றிவிழியி லெழுஞ் செந்தீப்போய்ப் பாய்ந்ததனாலே வெப்பம் பொருது பொற்றாமரைப் பொய்கையிலே நக்கீரன் விழுந்தயர்ந்தான். அவனைக் காய்ந்த நாவலர் தலைவர் கரந்தார்.

———

ருஃ. கீரனைக் கரையேற்றல்

புலவர் கலக்கம்—நக்கீரன் அறிவுபெறல்

நீண்ட செஞ்சடைப் பிரானார் நெற்றிக் கண்ணின் வெப்பந் தாங்காமற் பொய்கையிலே வீழ்ந்த கீரன் துன்பக் கடலிலே ஆழ்ந்து விம்மினான். அப் பொற்றாமரைப் பொய்கையை விட்டு வெளியேற இயலாமல் ஏங்கினான். அவன் நிலை கண்ட நாவலர் அயர்ந்து நடுங்கினர். அரச னிலா நாடும் ஒளிவிடும் நடுநாயக மணியிலாத கண்டிகை யும் நிறைந்த அறிவிலார் கல்வியும் போலச் சங்கம் ஆயிற்றே எனக் கவலையுற்றனர்.

'அழகிய சொல்லும் பொருளுமானவர்—ஆலவாய் அண்ணல்—மைதழைத்த மிடற்றினர்—ஆகிய பெருமானா ருடன் வாது செய்தல் மிகப் பெரிய பிழையன்றோ? இது நீங்குவது தான் எங்ஙனம்? கீரன் பிழைப்பது அரிது!...... வெள்ளி மலையைப் பெயர்த்த இராவணன் தன் கையிலே வீணை யெடுத்து இன்னிசை பாடியதற்குக் கனிந்து, அவன் செய்த பிழையைப் பொறுத்ததுமன்றித் திண்ணிய தேரையும் வாளையுங் கொடுத்தனர் அப் புண்ணிய வடிவினர். ஆகையால், யாவராலும் அகற்றற்கரிய இப் பிழையை அப் பெருமானாரே திருவுளந் திரும்பினால் நீக்கிவிடுவார். இவ்வாறு துணிந்த புலவர்கள் பரமனார் திருவடிகளிலே பணிந்து போற்றினர்.

''தூயவரே! அடைக்கலம்! அடைக்கலம்! மறை முடியில் நடிப்பவரே! அடைக்கலம்! அடைக்கலம்!! மறைப் பொருளே! அடைக்கலம்! அடைக்கலம்!! திரு வாலவாய்த் தனி முதலே! அடைக்கலம்! அடைக்கலம்!! பாய்கின்ற திருமாலாகிய விடையின்மேல் எழுந்தருள் பவரே! எவ்வுயிர்க்குந் தந்தையுந் தாயுமான தங்கள் அருள் எங்கட்குத் தாமரைக்குக் கதிரவன் போன்றது. நன்மை தீமையியற்றியவர்க்கு இன்பமுந் துன்பமும் நல்குவது. தலைவரே! கற்ற செருக்கினாலே அறிவழிந்த கீரன் தங்கள்

செய்யுளைப் பழுது கூறினதால் தங்கள் நெற்றிக் கண்ணாலே வெதுப்பப் பெற்றுப் பொற்றாமரை வாவியிலே வீழ்ந்தனன். கரிய மிடற்றுக் கண்ணுதலே! இப் பிழையை இனிப் பொறுத்துக் கரையேற்றி யருள்க!''

கபிலன் பரணன் முதலான புலவர்கள் கைகுவித்து வணங்கி வேண்டினர்.

பாற்கடலிலே வந்த நஞ்சைப் பருகிய அருள் வள்ளலார், இனிய மழலைச் சொற்களையுடைய இறைவியாருடன் எழுந்தருளி வந்து, நக்கீரன் கிடந்த பொற்றாமரை வாவியின் கரையிலே, புலவர் குழுவிலே நின்றார். அழற்கண்ணால் நோக்கினவர் அருட்கண்ணாலும் நோக்கினார். அவ்வளவிலே ஆழ்ந்த நீரிலே கிடந்த கீரன் பொறிபுலன் கரணங்க ளெல்லாம் நெருப்புக்கண்ணா ருடையனவேயாக அருட் கடலிலே ஆழ்ந்து, வினையுடம்பு நீக்கி அன்புடம்பு பெற்றான்.

அறிவின் மடவார்—உலகத்தை யீன்ற தூயவர்—ஞானப் பூங்கோதையர்—ஆகிய அம்மையாரின் குழலுக்குக் குற்றங் கூறிய கொடிய நாவின் தீமையைப் பொறுப்பவர் யார்! அவரே பொறுத்தருளினார். அத்தகைப் பேரருளாளரைப் பரவிக் காளத்தி யென்றுங் கைலை யென்றும் எடுத்து மாற்றி மாற்றி நேரிசை வெண்பாவால் அந்தாதித் தொடையாகச் சாத்தினான் கீரன். அந் நூலின் பெயர் 'கைலைபாதி காளத்திபாதி அந்தாதி' என்பது.

அன்புடன் பாடிய அந்த அந்தாதியை இருசெவிகளினும் ஏற்று மகிழ்ந்து, தாமே அவன் கையைப் பற்றிக் கரை யேற்றினார், திருவடியைக் கொடுத்து ஏழுபிறவிக் கடலின் கொடுங்கரை யேற்ற வல்ல இறைவர். கை தந்து கரை யேற்றிய அருட்கடலைப் பணிந்து, மைதீட்டிய அங்கயற் கண்ணம்மையாரைப் போற்றினான். பிறகு, தீமையும் நன்மையுஞ் செய்தோர்க்குத் துன்பத்தைக் காட்டி யின்பம் அருளுந் திறனைப் பொருளாக அமைத்துச் சிவபிரானாருளை நாடிச் செய்யுள் பாடினான் :

"அறவழி நில்லாத தக்கன் வேள்வி யழித்த வீரம் வாழ்க! அறவழி நின்ற சண்டேசுரருக்கருளிய அருள் வாழ்க! சீறி வந்த காலனைக் காய்ந்த கழலணிந்த திருவடி மலர் வாழ்க! அந்தணச் சிறுவனுக்கு வாழ்நாள் அழியாமல் அளித்த அருள் வாழ்க! சலந்தரன் மெய்யைப் பிளந்த ஆழிப்படை வாழ்க! திருமால் வழிபட அந்த ஆழியையளித்த அருள் வாழ்க! தாமரை மலரோனுடைய நடுத்தலை கிள்ளிய திறல் வாழ்க! சிலந்திக்கு முடியளித்து அரசளித்த செல்வம் வாழ்க! திரிபுரம் எரியச் செய்த திருநகை வாழ்க! அந்தத் திரிபுரங்களின் தலைவரான மூவர்க்கும் (தாரகாட்சன், கமலாட்சன், வித்துன் மாலி) அருளிய தலைமை வாழ்க! காமனுடலைப் பொடித்த நெற்றிக் கண் வாழ்க! இரதி வந்து வேண்டத் திரும்பவும் அந்தக் காமவேளுக் குயிரளித்த அருள் வாழ்க! நகைத்துக் கொல்லவந்த வெண்டலையைத் திருகி யெடுத்துத் திருமுடிமேல் வைத்தருளிய திறல் வாழ்க! திருக் கோயிலிலே அணையும் விளக்கைத் தூண்டிய எலிக்கு அரசாள மூவுலகத்தையும் அருளிய தங்கள் திருவடி வாழ்க! திருக்கயிலையை அகழ்ந் தெடுத்த இராவணன் தலைகளும் தோள்களும் நைந்து போக மிதித்த திறல் வாழ்க! அவனே மறையைப் பாடி வணங்க இரங்கி வாள் கொடுத்த வண்மை வாழ்க! செருக் குக் கொண்ட திருமாலும் நான்முகனுந் தேடும்படி அழல் வடிவான தாங்கள் வாழ்க! அவர்களே செருக் ககன்று வழிபட நேர் நின்ற திருவருள் வாழ்க! பெரிய துதிக்கை யையுடைய யானை, பன்றி, புலி, சிங்கம், மீன், குறள், ஆமை— இவை கொண்ட வலியை அடக்கின திறல் வாழ்க! குரங்கு, பாம்பு, எறும்பு, நாரை, கோழி, நண்டு, தேரை, கரிக்குருவி, கழுகு—இவற்றின் அன்புக் கிரங்கிய இரக்கம் வாழ்க! அடியேன் இழைத்த மிகப் பெருந்தீங்குக்குத் தமியேனை ஒறுத்த திருக்கோலம் வாழ்க! பொல்லாத கொடுவினையேன் தொடுத்த இழிந்த சொன்மாலைக் கிரங்கி யருளிய மலைமகள் மணாளரே! வாழ்க! ஆலவாயடிகளே! வாழ்க! அங்கயற்கண் அம்மையாரே! வாழ்க! வருந்திய எளியேனுக் கருள் புரிக! அருள் புரிக!"

இவ்வாறு கோபமும் பிரசாதமும் மாறி மாறி வரும் வண்ணம் சிவபரஞ் சுடரையும் அம்மையாரையும் போற்றிக் கோபப்பிரசாத மென்னும் நூலைப் பாடினன்: மற்றும் அண்ணலாரைப் பெருந்தேவபாணி, திருவெழுகூற்றிருக்கை யென்னும் நூல்களாற் போற்றிப் பன்முறை வணங்கி யெழுந்தான். பாவலர்களுந் தனித்தனி பாடிப் பணிந்தனர்.

இறைவர் மனமிரங்கி, 'நீ முன்போற் புலவர் குழுவிலே யிருக்கக் கடவாய்!' என அருளி, உமையொடும் மறைந்து தந் திருக்கோயிலை யடைந்தருளினர். கீரனும் புலவரும் பொற்கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுத்தனர். மற்றும் அரசனைக் கொண்டும் பலவரிசைகள் சிறப்புறக் கொடுக்கச் செய்தனர். பிறகு, முன்போற் குற்றமற்ற புலவராக விற்றிருந்தனர்.

தமிழர் தலைவனான சண்பகமாறன் திருவாலவாயிலே எழுந்தருளிய நெற்றிக் கண்ணரையும் அங்கயற்கண்ணி யாரையும் திருமலரடிகளிலே வணங்கி வாழ்த்தி உள்ளன்புடன் பல திருப்பணிகள் செய்து வாழ்ந்து வந்தான்.

ருச. கீரனுக்கு இலக்கணம் உரைத்தல்

கீரன் வழிபாடு—இறைவர் சிந்தனை

புலவர்களுடன் முன்போல நூலாராய்ச்சி செய்யப் புகுந்த கீரன் மனக் கோட்டம் விலகி மதுரைப் பெருமானார் மலரடிகளிலே பதிந்த மன முடையனானான். அவன் உள்ளம் அடிக்கடி பொற்றாமரையின் தூய்மையையும் சிறப்பையும் உன்னியுன்னி மகிழ்ந்தது.

"முறுக்கவிழ்ந்த கொன்றைச் சடையரின் திருக்கண்ணால் வெதுப்பப் பெற்ற காமன் நறுமண மலரோனை நான்முகனாலும் திருமாலாலுங் காக்க முடியாமல் வெந்து சாம் பலானான். அவருடைய நுதல்விழி நெருப்பு நம்மைச் சுட்டபோது வெப்பந்தவிர்த்துக் குளிர்ச்சியை நல்கியது இந்தப் பொற்றாமரைப் பொய்கை! இதன் சிறப்பை என்னென்பது? ஆகவே இதுவே எம்மை எம்மையினுங் காக்க வல்லது!"

இந்த நினைவினாலே நிரம்பிய அவன் ஒவ்வொரு நாளும் முக்காலத்தினும் மூழ்கி மூழ்கி, "அப்பனை ஆலவாயெம்மடிகளை யடியார் சேமவைப்பினை" யிறைஞ்சி நித்தம் வழிபடும் நியமம் பூண்டான்.

நக்கீரன் செய்யும் ஒழுங்கான வழிபாட்டிற்கிரங்கிய அண்ணல்—பாம்பணிந்த பரஞ்சுடர்—நான்மாடக் கூடல் நம்பர்—தம் திருவுளத்திலே இதனைச் சிந்தித்தார்:

"இவனுக்கு இன்னும் இலக்கணம் விளங்க வில்லை! நல்ல சொற்களும் வழூஉச் சொற்களும் வரம்பறிந்திலன். குற்றமற்ற கேள்வியை யுடைய புலவர்களைக் கொண்டு இவனுக்கு இலக்கணங் கற்பித்தல் வேண்டும்!"

அம்மையார் வேண்டுகோள்—அகத்தியன் வருகை

இறைவர் நினைவை யறிந்த இமய வல்லியார் மலர்க்கை குவித்து இயம்பினார்:

''அங்கணரே! உள்ளங்கை நெல்லிக் கனியென எவற்றையும் உணர்ந்த தூயவரே! தங்கள் நினைவுக்குத் தக்க விடை கூற வல்லார் யாவர்? எனினும் அடியாள் என்னினைவில் எழுந்ததைக் கூறுகிறேன்:

''பண்டைய காலத்தில் ஒருநாள் வெள்ளிமலையிலே தங்கள் திருமுன்னே இந்திரனும் நான்முகனும் திருமாலும் பிற வானவரும் சனகன் முதலான அருந்தவ முனிவரும் மற்றையோருங் கூடியிருந்தனர். அப்போது இப் புவி பொருமல் வடகிழெல்லை தாழ்ந்து தென்மேற்கெல்லை உயர்ந்தது. வானோர் கண்டு மயங்கித் தங்களை வணங்கி, 'அடிகளே! தங்களைப் போன்ற சால்புடைய ஒருவரைத் தென்மேற் கெல்லைக்குப் போக விட்டால் இந்த வையம் சமமாக நிற்கும்,' என்று வேண்டினர்.

''தாங்கள், 'எம்மை யொப்பவன் கடலுண்ட குறுமுனியே. அவன் வாழ்வுக்குரிய உலோபா முத்திரை இமவான் மகளை யொப்பாள்,' என்று கூறிக் குறுமுனிவனை அகத்தியனை அங்கு விடுத்தீர்கள். விடைகொண்டு செல்லும் அம்முனிவன், 'நான் செல்லும் நாடு தமிழ் நாடென்பர். அந்நாட்டு மக்களெல்லாம் இனிய தமிழையாராய்ந்து கேள்வியினுஞ் சிறந்தவர் என்பர். அவர்கள் ஏதாவது வினவினுல் விடையளித்தல் வேண்டும். ஆகையால், அடியேனுக்குத் தெளிவுண்டாக அந்தச் செந்தமிழின் இலக்கணத்தை அருளிச்செய்தல் வேண்டும்' என வேண்டினுன். தாங்கள் முதல்நூலைத் தெளிவித்தீர்கள். அவன் மறுபடியும் வணங்கி, 'அடியேன் திருவடியை என்று காண்பேன்,' என்றுன். தாங்கள், 'கடம்ப வனத்திலே எம்மை வணங்கி நின் மனம் விரும்பியவற்றைப் பெற்று மலையமலையிலே இடம் பெற வாழ்க!' என்று கூறி விடுத்தீர்கள். அவன் அங்கே சென்று வாழ்கின்றுன் தன் துணைவியுடன். இது தங்கள் திருவுளத்திற்குப் பொருந்தினுல், இக்கீரனுக்கு அகத்தியனைக் கொண்டு இலக்கண முணர்த்தினுல் நன்றுயிருக்கும்.''

சோமசுந்தரர் மகிழ்ந்து, "இதுவரையிலே அந்நிகழ்ச்சிகளை மறவா திருக்கின்றனையே! அதனையே செய்வோம்" என்று பாராட்டிக் குறுமுனிவரை நினைந்தருளினர்.

ஆளுடைய அண்ணலார் திருவுள முணர்ந்த அகத்தியர், தம் திருமுடிமேல் மலர்க்கைகளைக் குவித்துத் தம் மனைவி உலோபா முத்திரையுடன் தம் தவச்சிறப்பினால் அமைந்த விமானத்திலே வான வழியே வந்து, செம்பவள மலைபோன்ற சோம சுந்தரரையும் இந்திர நீலக் குன்றனைய இறைவியாரையும் வணங்கினர். அன்பு பெருகி உள்ளந் துளும்ப உண்மையின்பம் வளர அருகிலே யிருந்தார்.

கீரன் இலக்கணங் கற்றான்

வழக்கம்போல நக்கீரன் மணங்கமழும் பொற்றாமரை வாவியிலே முழுகி, இறைவரை உருகும் பேரன்புடன் வழிபட விரைந்து வந்தான். அந்நிலையிலே, ஆலவாயண்ணல் அகத்தியரை நோக்கி, "அரிய தவத்தினனே! இவனுக்கு இன்னும் இலக்கணம் வந்திலது; எம்மிடம் அறிந்தவாறு குற்றமறத் தெளிவித்திடுக!" என இயம்பியருளினர்.

பிணியும் மருந்துமாகிய அருளையுடைய பரம்பொருளார் ஆணையைத் தலையினும் உளத்தினும் ஏற்ற அகத்தியர் தம்மைப் பணிந்த கீரனுக்கு மனமயக்கந் தெளிய இலக்கணத்தை உணர்த்தினர்.

பொதுப்பாயிரம் சிறப்புப் பாயிரங்களையும் எழுவகைக் கொள்கைகளையும் நால்வகைப் பயனையும் பத்துக் குற்றங்களையும் பத்தழகுகளையும் முப்பத்திரண்டு உத்திகளையும் இறைவரருளிய முதல்நூலைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் உணர்த்தினர். சூத்திரங்களின் கருத்தையும் சொற்பொருளையும் காட்டுக்களையும் வினாவையும் விடையையுங் கொண்ட காண்டிகை யுரையானும் அகலவுரையானும் நூலின் உட்பொருளைக் குற்றமற விளக்கித் தெளிவித்தார்.

அகத்தியர் கூறும் உரைத்திறனைக் கண்ட நூலின் பொருளாகிய இறைவர்—முதலாசிரியர்—செருக்கும் இன்

பமும் அருளுந் தழைத்திடப் பொதியமலை முனிவரைத் திருக்கைகளாலே தழுவி வேண்டும் பேறுகளெல்லாம் நன்றுற நல்கிப் பொதியத்திற்கு விடுத்தார்.

உலோபா முத்திரையுடன் அகத்தியர் விடைகொண்டு போன பிறகு, அம்மையார் அப்பரை நோக்கித், "தாங்களே கீரனுக்கு உணர்த்தாமல் அகத்தியனைக் கொண்டு அறிவித்த நோக்க மென்கொல்?" என வினவியருளினர்.

அந்திவண்ணர், "தன்னை நாடொறும் வழிபடுவோர், மிகவும் பொருளளிப்பவர், அழுக்காறிலோர், சொன்ன சொல் கடவாதவர், குற்றமற்ற வுள்ளத்தினர் ஆகியோர்க்கே நூலியம்புதல் வேண்டும். கீரன் அழுக்காறு கொண்டவன். ஆதலால், யாமுணர்த்தாது அகத்தியனை விட்டுணர்த்தினேம்," என்றிசைத்தருளினர். அம்மையார் ஐய மகன்ருர்.

அறிவினு லறியாமையை யுணர்ந்தான்

அகத்தியரிடம் இலக்கணங் கற்ற கீரன் தான் முன் செய்த செய்யுட்களை ஆராய்ந்தான். வழுக்களையும் வழா நிலைகளையும் உற்று நோக்கி ஒழுங்கு செய்தான். முற்றுமுணர்ந்த முதல்வனுர் செய்யுளிலே பொருள் வழுக் கூறிய புன்மையை யோர்ந்து வருந்தினன்.

"மறையின் முடிவுந் தொடாத மலர்த்தாள்கள் நிலத்திற் பதிய வந்த எங்கும் நிறைந்த பரம்பொருள்பால் பிழைபுரிந்தேன். 'சிற்றுணர்வோர் மிகவுஞ் செருக்குடையவர்'—'குறை குடங் கூத்தாடும்'—என்று சான்ரோர் கூறிய பழமொழி என்பால் உண்மையாயிற்று! நிலம், நீர், தீ, வளி, வான், உயிர், ஞாயிறு, திங்கள் என எட்டுருவமான சிவபரம் பொருளின் திருவடிகளில் அடியேன் பிழையுற்ற தீங்கினுலே, எளியேனை அப் பெருமானுர் நுதல் விழி சுட்டதன்றி, அறிவிலேன் உள்ளமுஞ் சுடுகின்றதே!"

பன்முறை இவ்வாறு பகர்ந்து பகர்ந்து பரிவுற்ருன்.

"குழந்தையைப் பெற்ற அன்னை கைப்பான மருந்தை வாயிலே புகட்டித் தீய பிணியைத் தவிர்த்திடும் பரிசு போல் என்னை ஒறுத்தறிவு புகட்டினார். இந்த நன்றிக்குக் கைம்மாறு முண்டோ ?"

என உன்னி யுன்னி எல்லையிலாக் களிப்பிலே முழுகினான். அகத்தியர் தனக்கறிவித்த இலக்கண நூலைப் பிற புலவர்க்கும் விளங்கக் கற்பித்துக்கொண்டு பரமனார் பேரன்பிலே பற்றுவைத்து வாழ்ந்தான்.

மாத வன்தனக் காலவாய் மன்னவன் அருளால்
போத கஞ்செய்த நாலினைப் புலவர் ஏனோர்க்கும்
ஆத ரஞ்செயக் கொளுத்தியிட் டிருந்தனன் அமலன்
பாத பங்கயம் மூழ்கிய பத்திமைக் கீரன்.'' (௬0)

———

ருரு. சங்கத்தார் கலகந் தீர்த்தல்

கலகம்

எல்லையற்ற கேள்வியிற் சிறந்த நாற்பத்தெண்மரும் வேறுவேறு நூல் செய்தனர். அந்த நூல்களிலே தாம் செய்ததே சிறந்ததெனப் புகழ்ந்து கூறி மாறுபட்டனர். இறுதியிலே தம் நூல்களிற் சிறந்ததைத் தெரிந்துரைக்க வல்லார் முதலாசிரியரான முக்கட் பெருமானுரே யெனத் துணிந்து அவர் திருமுன் வந்து குழுமினர்.

எல்லோரும் முறைப்படி வணங்கி நின்று, "அடிகளே யாங்கள் தொடுத்த இந்த நூல்களிலே சிறந்ததையுஞ் சிறப்பிலதையும் ஆராய்ந்து வேறுபாட்டை விளக்கிக் காட்டிக் குற்றமகற்றி ஐயந் தீர்த்தருள்க!" எனப் பணிந்தனர்.

சோமசுந்தரர் முன்னமொரு காலத்திலே அரியும் அயனுந் தேட வளர்ந்த ஒளி மிகுந்த அழற் பிழம்பிலிருந்து வெளிவந்த உருவம் போல, 'அறிவானந்த உண்மை' யாய் உலகுக்கெல்லாம் ஆதரவாய் முளைத்த மூலவிலிங்கத்திலிருந்து, காண்பதற்கினிய புலவராக வெளிவந்தார்.

வணிகன் மகனிடம் போமின்

"இப் பெரு நகரிலே தனபதி யென வொரு வணிகன் உள்ளான். அவன் மனைவி குணசாலி யெனும் நற்பெயரினுள். இருவரும் இயற்றிய தவச்சிறப்பினுல் வெள்ளை யறிவினரைத் தழுவிய அறியாமையை அகற்றும் ஞாயிறுபோல வானவனுன ஒருமகன் தோன்றியுள்ளான். அவன் அழகிலே வேளுக்கிணை யானவன் எனினும் ஊமையன். அவனிடஞ் சென்று நீங்கள் இயற்றிய நூல்களை யெல்லாம் உரைத்தீர்களானுல், அவன் உள்ளம் ஒப்பினுல் அதுவே யாவரும் மதிக்குஞ் சிறந்த நூலாகும்," என்ருர் இறைவர்.

"அடிகளே! அந்த வாணிகன் ஊமன் என்ருல் எங்ஙனங் கேட்பான்? எங்ஙனம் இந்நூல்களிற் கிடக்கும்

நன்மை தீமைகளையும் நன்கு தேர்ந்து அவற்றின் நிலை குன்ருமல் உரைப்பான் ?''

''வலிமையிற் சிறந்த தோள்களையுடைய வணிகன் மகன் தன் உளத்திற் கிசைந்த சொல்லழகும் பொருளாழமும் உடைய செய்யுட்களைக் கேட்டால் முடியசைத்துக் கல் போன்ற தோள் புளகித்து உள்ளங் களிகொள்வான். உங்கள் கலகமெல்லாம் ஒழியும் !''

இறைவர் தம் திருக்கோயிலில் மறைந்தார்.

மூவர் தமிழ்க்கு முடிதுளக்கினன்

பாவலரெல்லோருஞ் சென்று வணிகக் குலக் கொழுந்தை அன்புடன் அழைத்து வந்து தம் பேரவையிலே யிருத்தினர். வெண்மலரும் வெண்சாந்தும் அணிவித்து வணங்கினர். அவன் எதிரில் அமர்ந்து தம் தமிழைச் சாற்றினர்.

வணிகத் தோன்றல் சிலர் நூலிலுள்ள சொற்களைக் கேட்டு மகிழ்ந்தான். சிலர் நூற் பொருளை மட்டும் வியந்தான். சிலர் நூற் சொற்களை யிகழ்ந்தான். சிலர் நூற் பொருளை யிகழ்ந்தான். சிலர் நூலிலுள்ள சொல்லையும் பொருளையுஞ் சில விடங்களிலே மெச்சினன். அவ்வாறே சிலர் நூல்களின் சொல்லையும் பொருளையும் இகழ்ந்தான்.

இவ்வாறு கலைஞரின் தமிழை யெல்லாந் தெளிவித்த சிறு வணிகனனவன், அறிவுமிக்க நக்கீரன், முத்தமிழ்வல்ல கபிலன், பாவலரிற் சிறந்த பரணன் ஆகிய மூவர் தமிழையுஞ் செவிமடுக்குந் தொறும் முடிதுளக்கினன்! பொருளெலாம் நுழைந்தான் ! சொற்களிலெல்லாம் அவற்றின் நுண்ணிய மிக்க சுவையைப் பருகித் தன் மெய்யும் புலனுந் தழைத்தான் ! முடிதுளக்கினன் ! குழைந்தான் ! இன்பக்கண்ணீர் வடித்தான்! *தன்னைப் பெற்றவன் செய்த தவப் பேற்றை விளைத்த வணிகச் சிறுவன் களிப்பிலே முழுகினன் !

*''மகன் தந்தைக் காற்றும் உதவி யிவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்''—வள்ளுவர்.

"பல்கா சொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாம்நிறுத் தளப்பானென இயல்வா ணிகக் குமரன்
சொல்லா ழமும் பொருளா ழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களும் நட்டா ரிகல் விட்டார்."

பல காசுகளையும் கடல்படு பவளங்களையும் ஒளிவிடும் முத்துகளையும் பிற மணிகளையும் நிறுத்தளப்பான் போலவே அந்த வணிகச் சிறுவன் சொல்லாழத்தையும் பொருளாழத்தையுந் தராசின் நாவைப்போல ஆராய்ந்து கூறியதால் உண்மையுணர்ந்த புலவர்கள் தமக்குள் உண்டான கலகம் நீங்கி நட்புக் கொண்டனர்.

அந்த மூவர் தமிழும் உலகிலே பெருகி நூல்களிற் சிறப்புற்றன. ஆராய்ச்சி மிக்க தெய்வப் புலவர்களும தங்கள் கலகமான குற்றத்தினின்றும் வீடுபெற்றுக் குற்றமற்ற நூலாராய்ச்சி செய்து, சிறப்புறு கழகத்தாராய் வாழ்ந்தனர்.

"உலகினுள் பெருகி அந்த ஒண்தமிழ் மூன்றும் பாடல்
திலகமாய்ச் சிறந்த வாய்ந்த தெய்வநா வலரும் தங்கள்
கலகமா நவையில் தீர்ந்து காசறு பனுவல் ஆய்ந்து
புலமிகு கோட்டி செய்து பொலிந்தனர் இருந்தார்
போலும்." (கச)

ருசு. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தல்

கல்விச் செருக்கு

இந்திரன் பழியை விலக்கி அரசையும் நற்பேற்றையும் அளித்தருளிய சோமசுந்தரர் திருவடிக் கன்பும் சண்பக மாலையுந் தொடுத்தணிந்து வணங்கிவந்த சண்பகமாறன், தன் திருத்தொண்டினுக் கேற்ப, மேலுலகங்களிற் சிறந்த சிவபுரத்திலே நிறைந்த செல்வம் பெற்றான். அவனுக்குப் பின் பிரதாபசூரியன், வங்கிசத்துவசன், இரிபுமருத்தனன், சோழவங்கிசாந்தகன், சேரவங்கிசாந்தகன், பாண்டிவங்கி சேசன், வங்கிசசிரோமணி, பாண்டீச்சுரன், குலத்துவசன், வங்கிசபூடணன், சோமசூடாமணி, குலசூடாமணி, இராச சூடாமணி, பூப சூடாமணி, குலேசபாண்டியன் எனும் பதினைவர் வழி வழியாக ஆண்டனர் பாண்டி நாட்டை.

குலேச பாண்டியன் அரசரிற் சிறந்தவன். இலக்கண இலக்கியக் கரைகண்டவன். எத்தகைய பெருநூலையும் இனிதறிந்தவன். ஆகையால், இவனுக்கு முத்தமிழ்ச் சங்கம் இடங்கொடுத்து உடனிருக்குஞ் சிறப்பை யளித்தது.

இவன் கல்விச் சிறப்பை முற்றுமறிந்த கபிலனிடம் உழுவல் நட்புப் பூண்ட இடைக்காட்டுப் புலவன் அரசனைக் கண்டு 'தமிழ் மொழிவோம்' என வந்தான். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' அன்றோ! குலேச பாண்டியன் வர வேற்றுத் தக்கவாறு இருக்கையும் முகமனும் அளித்தான். இடைக்காடன் தன் பனுவலைப் பகர்ந்தான். வழுவற்ற சொற்சுவையையும் பொருட்சுவையையும் பகுத்துணர வல்லவ னான மாறன் பொறாமையினாலுஞ் செருக்கினாலும் முடியசைக் காமலும் அகமகிழ்ச்சியை முகமலர்ச்சியா லறிவியாமலும் ஒன்றும் உரையாமலும் தூண்போலிருந்தான். கற்றோரிடம் நட்புக் கொள்ளும் இடைக்காடன் மானம் புறத்தே தள்ளச் சோமசுந்தரர் திருக்கோயிலை யடைந்தான்; திருமுன் பணிந் தெழுந்தான்.

“தமிழறியும் பெருமானே! அடைந்தோர்க்கு நன்னிதியே! திருவாலவாய் முதல்வரே!! ஒளிமிகும் வேப்பந்தாரான் பொருள்வளம் போலவே கல்வி வளமும் உடையவனென்றுேடி வந்தேன். செய்யுளியற்றிச் செப்பினேன். சிறிதுந் தலை யசைப்பின்றி யிகழ்ந்தான்.

“பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்
ககமகிழ்ந்தோர் பயனும் நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே
அடுங்கான விலங்கே புள்ளே
பொரிவாய பராரைமர நிரையேவான்
தொடுகுடுமிப் பொருப்பே வெம்பும்
எரிவாய கொடுஞ்சுரமே யெனவிவற்ருேர்
அஃறிணையொத் திருந்தான் எந்தாய்!”

அன்புடன் இன்மொழி யமைத்துப் புனைந்து கூறிய வர்க்கு மனமகிழ்ச்சியுடன் ஒரு பொருளையும் அளிக்காதவனுய்ப் பெரிய கடல், நீண்ட உப்பங்கழி, காட்டுவிலங்கு, பறவை, பட்டைகளையுடைய பெரிய மரத்தோப்பு, வானளாவிய உச்சியையுடைய மலை, வெப்பமிகும் கொடிய பாலைவனம் என்னும் அஃறிணைப் பொருள்களில் ஒன்ருயிருந்தான்.

“அவன் என்னையோ இகழ்ந்தான்? தங்கள் இடப் பாகம் பிரியாத சொல்வடிவான அம்மையாரையும் பொருளான தங்களையுமே இகழ்ந்தான். எனவே, அந்த இழிவு எளியேனுக் கில்லை!” எனக் கூறித் தணியாத சீற்ற மிழுத்துச் செல்ல வெளியேறினன்.

இடைக்காடன் பின் போனர்

இடைக்காடன் கூறிய சொற்கள் திருச் செவியினில் உறுத்தியதால், வெளியேறிய இடைக்காடனுக்கும் அவன் நண்பனுன கபிலனுக்கும் உளமகிழ அறிவுப் பிழம்பான தம் இலிங்க வடிவத்தை மறைத்து உமையம்மையாரும் தாமுமாக வெளிவந்து தம் திருக்கோயிலின் வடக்கேயும் வைகையாற்றின் தெற்கேயுமாக இடையிலே திருக்கோயி

லொன்று கண்டு இனிதமர்ந் திருந்தார். சங்கப் புலவர்களும் உடன் சென்று அவர் பக்கலிலே யிருந்தனர்.

பொலிவிழந்த நகர்!-அறிவு பெற்ற அரசன்-வடதிரு ஆலவாய்

வைகறையிலே திருப்பள்ளி யெழுச்சிக் காலத்திலே சென்ற அடியார்கள் திருக்கோயிலிலே இலிங்கவுருவைக் காணுமல் திகைத்தனர். என்னவோ வென ஏங்கி ஐய முற்றனர். இதனை மன்னனுக் குரைப்போமென விரைந்து வரும்போது, உயிர்க் காதலனைப் பிரிந்து வாழும் பெண்களைப் போலவும், திருமகள் நீங்கிய தாமரை யெனவும் கவலையுடன் அழகிழந்து நகரிருப்பதைக் கண்டனர். அரசனையுங் கண் டனர். உள்ளம் நடுங்கி நாக்குழற, ''அரசே! நாங்கள் ஒன்றுகூற அஞ்சுகிறேம்! தங்கள் தலைவரை—ஆலவா யண்ணலைத்—திருப்பள்ளி யுணர்தலறிந்து தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கச் சென்றேம். அங்கே அடிகளின் வடிவைக் காணேம். நகரமும் அழகிழந் துள்ளது!'' என்றனர்.

அம் மொழி அழல் வேலெனப் பாண்டியன் செவியில் நுழைந்தவுடன், அரியணையிலிருந் தடியற்ற முதுமரமென மண்மேல் உடல் பதற வீழ்ந்தான். உணர்ச்சியும் உயிரும் ஒடுங்கி மண்ணிலே பாவை கிடந்தாற் போலப் பேச்சு மூச்சற்றுச் சிறிதுபோது கிடந்தான். பிறகு, சிறிது தெளிந்து, எழுந்து கைகளை அஞ்சலியாகக் குவித்து, அழுது, இருவிழியினும் வழியும் வெள்ளத்திலே முழு கினன்.

''என்ன பிழை செய்தேன்? அண்ணலே! அண்ணலே! எங்குற்றீர்கள்? கொலைத் தொழிலையுடைய அவுணர் நகரத்தை நொடியிலே பொடியாக்க வளைத்த மேருமலையினையோ? பழைய சிவபுரத்தையோ? அருவிகள் மணிகளைக் கொழிக்கும் வெள்ளி மலையையோ? தம்மை மறந்து தங்களை நினைக்கும் அடியார் உள்ளத்தினையோ? வாழ்த்துகின்ற மறை முடியையோ? தாங்களடைந்த இடத்தையறிகிலேனே!''

இவ்வாறு பாண்டியன் ஏங்கும்போது சிலர் ஓடிவந்து "அரசே! வியப்பொன்று கண்டோம்! வைகையின் தென் கரையிலே—நான்முகன் படைத்த நாள் முதலாக—இது வரையிலே காணாத காட்சி! கேள்வியிற் சிறந்த புலவருடன் ஆலவாயண்ணலார் உமைபங்கராக வந்து உறைகின்றார்!" என்றனர்.

அம் மொழி யிழுத்தலாலே எழுந்து, அச்சத்துடன், பகைவர் முடியை யிடறுங் கழலணிந்த காலாலே நடந்து சென்று, வைகை தன் திரைக்கையாலே நறுமணமலரைத் தூவிப் பணியத் தென்கரையிலே முல்லையின முறுவல் உமையம்மையாருடன் வீற்றிருக்கும் மணியைக் கண்டான். விரைந்து சென்று பணிந்து அன்பு பொழியுங் கண்ணீர் வடிய இன்பக் கடலிலே முழுகிக் கிடந்து, எழுந்து மொழி குழறத் தடுமாற்றத்துடன் நின்று போற்றுகின்றான்:

"ஐயா! ஐயா!! மறை தொடர்ந்தறியாத திருவடி சிவப்ப நகரம் வாட, உலகீன்ற அம்மையாருடன் இங் கெழுந்தருளுங் காரண மென்ன? அடியேனுற் குறை யுண்டோ? அல்லது என் பணியாளரால், என் பகைவரால், கள்வரால், கான விலங்குகளால் தமிழ்நாட்டில் இடையூறு வந்ததோ? பழைய மறையவர் ஒழுக்கால் குன்றினரோ? இல்லறமுந் துறவறமும் பிழையுற்றனவோ?

"கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானே!
போற்றி பெருங் கருணை! போற்றி!
வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே!
போற்றி! அருள் விகிர்தா! போற்றி!
புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன்
தேருத புனிதா! போற்றி!
வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங்
கயற்கண்ணி மணாள! போற்றி!"

"பாதமல ரிணைபோற்றி! பன்னிரண்டு
கையானைப் பயந்தாய்! போற்றி!
வேதமுடி கடந்தபர ஞானத்தி
லானந்த விளைவே! போற்றி!

போதவடி வாய்நால்வர்க் கசைவிறந்து
நிறைந்தபரம் பொருளே! போற்றி!
மாதவள நீறணிந்த மன்ன! அங்
கயற்கண்ணி மணாள! போற்றி!''
''பொக்கமுடை யார்செய்யும் பூசைதவங்
கண்டுநகும் புராண! போற்றி!
தக்கன்மகம் பொடியாகத் திருப்புருவம்
நெரித்தகொடுந் தழலே! போற்றி!
செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத்
திகிரியருள் செல்வா! போற்றி!
மைக்குவளை யனையமணி கண்டா! அங்
கயற்கண்ணி மணாள! போற்றி!''

பாண்டியன் இவ்வாறு பணிந்து ஏத்தினன். அழகிய பொன்மயமான கூடலிறைவர் கேட்டு, வானொலியாலே, ''வைகை நாடனே! உன் '*சோத்தம்' நாம் கேட்டு மகிழ்ந்தோம். இனியதாக ஏற்றுக் கொண்டோம். ஒன்று கூறுகிறோம்,'' எனக் கூறியருள்கிறார்.

''சிறப்புடைய தலங்களிலே திருவாலவாய் உயர்ந்தது. இங்குத் தாமே தோன்றிய இலிங்கங்கள் கணக்கிலாதவை. தானவரும் இயக்கரும் சித்தரும் அரக்கரும் வானவரும் முனிவரும் மக்களுமாக அழகுற முறைப்படியமைத்த இலிங்கங்களும் எண்ணிற் கடங்காதவை உள. அவற்றில் அறுபத்து நான்கு மேம்பட்டவை. அவற்றினும் எட்டுத்திக்குப் பாலகரும் வழிபட்ட எட்டுக் குறிகள் சிறந்தவை. அவற்றுள் எம் தோழன் அளகைத் தலைவன் வழிபட்ட இலிங்கம் இது. நாம் கூறிய தெய்வத்தானம் பலவும் ஒருழியிலே இறந்தன. நம் தோழன் வழிபட்ட இக்குறியிலே நாம் இப்போது வந்து தங்கினோம். ஆகையால், இஃது உத்தர ஆலவாய் என இன்றுமுதற் சிறப்புறும். நாம் எப்போதும் இந்தக் கடம்பவனத்தை நீங்கமாட்டோம். நீ ஏதுங் குற்றமுடையவனல்லை! எனினும், இடைக்காடன்

*சோத்தம்—இழிந்தார் செய்யும் அஞ்சலி.

செய்யுளை யிகழ்ந்தனை. ஆகையால், யாம் அவனிடங் கொண்ட அருளினால் இங்கு வந்தோம்.''

இவ் வான்மொழியைக் கேட்ட பாண்டியன், "வானவர் தலைவரே! சிறியோர் செய்த குற்றத்தைப் பெரியோர் பொறுப்பது பெருமை யன்றோ?'' எனப் பன்முறை வணங்கி ஏத்தினான்.

அண்ணல் அருள் சுரந்தார்—அரசன் நூல் கேட்டான்

ஆலவாய் அவிர்சடையார் அருள்கூர்ந்து பாண்டியனை அரண்மனைக் கேகக் கூறித் தாம் அங்கயற்கண்ணம்மையாருடன் புலவர் சூழத் தம் திருக்கோயிலுக்கு—விண்ணிழிவிமானத்திற்குத்—திரும்பி யெழுந்தருளினார். பாண்டியன் பிறைமுடிப் பெம்மானுடன் பின்சென்று வணங்கி விடைபெற்றுத் தன் அரண்மனைக்குச் செல்லும்போது இடைக்காடனுடன் பிற புலவர் பெருமக்களையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

அரண்மனை புக்கதும் முறைப்படி வாழை கமுகுகளை நிறுத்தி வெள்ளை விதானமிட்ட மன்றத்திலே கவரி விளக்கு, புதியமாலை, நிறைகுடம் முதலியன நிறைத்துப் பொன்னணையிலே இடைக்காடனை மங்கல அணிபுனைந்து இருத்திச் சுற்றிலும் புலவரை வீற்றிருக்கச் செய்தான். பிறகு, தான் சிங்கஞ் சுமந்த பொன்னணையிலே வெள்ளை மலர் மாலையும் வெள்ளாடையும் வெண்மையான முத்து மாலையும் அணிந்து வீற்றிருந்து, மங்கல முரசு முழங்கவும் மறையவர்கள் வாழ்த்தெடுக்கவும் மங்கையர் பல்லாண்டு கூறவும் இடைக்காடன் செய்த பனுவலைக் கேட்டான்.

அறிவிற் சிறந்த இடைக்காடனுக்கும் அரிய பெருமைமிக்க புலவருக்கும் முறைப்படி மாலை, ஆடை, நிறை செல்வம், களிறு, குதிரை, விளைநிலம், அடிமைப் பெண்கள் ஆகிய சிறப்புகள் கொடுத்துத் தானும் ஏழடி பின் சென்று வழிவிட்டான்.

"புண்ணியப் புலவர்களே! யான் இப்போது இடைக்காடர்க்குப் பண்ணிய பிழைகளைப் பொறுத்தருள்க!" என வணக்கமுடன் வேண்டிக் கொண்டான். புலவர்களும் "அரசே! தாங்கள் கூறிய சொற்களாகிய குளிர்ந்த அமுதினாலே எங்கள் சீற்றத் தீ தணிந்தது. தங்களுக்கு நம் ஆலவாயண்ணலருளாலே சொலற்கரிய புகழும் பேறும் உண்டாகுக!" என ஆக்கங் கூறிச் சென்றனர். பாண்டியனும் மகிழ்வுடன் திரும்பினன்.

எட்டு வடிவமாயுள்ள — இந்திரன் பழியைத் தீர்த்தருளிய — அமுதம் நிறைந்த பிறைமதியைத் தரித்த — சோமசுந்தரரருளாலே குலேச பாண்டியனுக்கு அரிமருத்தனன் என்பான் பிறந்தான். அவன் வயது வந்த பிறகு, ஆட்சியை யளித்துக் குலேசன் சிவனுரடி சேர்ந்தான்.

"பரிசிலைப் புலவருக் கருள்குலே சன்பல பகல்கழீஇத்
திரிமருப் பிரலைவெம் மழுவெடுத் தவன்மதிச் சென்னிமேல்
வரிசிலைப் படைபொறித் தவனெனப் பெறுவர மைந்தனும்
அரிமருத் தனனிடத் தவனிவைத் தரனடி எய்தினன்." (௩அ)

———

௫எ. வலை வீசுதல்

வலைச்சி யாகுக

எல்லையற்ற பேரழகர்—நான்மாடக் கூடல் நம்பர்—நீலகண்டர்—உலகையீன்ற அங்கயற் கண்ணம்மையுடன் தனியிடத்திலமர்ந்து மறைவான மறைப்பொருளை யுணர்த்திக் கொண்டிருந்தார். இறைவர் இனிய அருளுடன் கூறும் நான்மறைப் பொருளை யெல்லாம் எக் காரணத்தாலோ எம்பிராட்டியார் அச்சமடைந்தவர் போல—ஊக்கக் குறைவுடன்—ஆவலின்றிக்—கேட்டனர்.

உணர்ந்தாரதனை உம்பர் தலைவர். "அரும்பலர்ந்த குரவுமலர்க் கூந்தலாய்! பிற அறியாமை பொருந்திய பேதையர் போலவே நீயும் இப்பொருளை மனமொன்றாது பராமுகமாய்க் கேட்டனை! இக் குற்றத்தால், நோன்பும், அறமுமில்லாமல் மீன் பிடித்து வாழும் வலையருக்கு மகளாகுக!" எனப் பணித்தனர். அங்கயற் கண்ணம்மையார் அஞ்சி, "வள்ளலே! தங்களைப் பிரிந்து வாழ வல்லேனோ?" எனப் பணிந்தார்.

பொங்கு கங்கை யணிந்த சடையவர் அம்மையார் வருத்தத்தை நோக்கி யிரங்கி, "நெய்தல் நில வாழ்வினரான வலைஞர் மகளாய் நீ வளர்ந்து வந்தால் யாம் வந்து மணமுடித்து வருவோம்," என்று திருவாய் மலர்ந்து செலவிடுத்தார்.

சிற்றத்தின் விளைவு

இதனை நால்வாயும் ஐங்கையு முடைய கடவுளுணர்ந்தார். தந்தையார் திருமுன் வந்தார். "இதனாலன்றோ இந்தக் கெடுதி மூண்டது?" என்று தம் துதிக்கையாலே கவளம் போல வாரி அங்கிருந்த நூற் றொகுதியை யெல்லாம் கடலிலே யெறிந்தார். குன்றம் பிளக்க எறிந்த கூர்வேலரும் தந்தையார் கையிலிருந்த புகழ் பெறு சிவஞானபோத நூலைச் சட்டெனப் பறித்துக் கடிதிலே கடலிலெறிந்தார்.

நான்மாடக் கூடல் நம்பர் நந்தியை நோக்கி, "நாமிருக்குஞ் செவ்வியை அறிந்தும் இவர்களை உள்ளே விடுத்து வாயிலிலிருந்தாய்! எனவே, உனக்குந் தீங்கு விளைந்தது. அத் தீங்கொழிய இப்பொழுது ஒரு சுரு மீனுகிக் கடலில் உழல்க!" எனப் பணித்தார். வேழ முகத்தவர்க்கு விதிக்குஞ் சாபம் தமக்கே யாகுமென அவரை விடுத்து முருகப்பெருமானுரை, "வணிகர் வீட்டிலே ஊமையாகுக!" என்று கட்டளையிட்டார்.

இவ்வாறு முதல்வர் பணித்த அளவிலே அம்மையார் வலைஞர் மகளாயதையும், நந்தியெம்பெருமான் சுறவாகிக் கடலிற் புக்கதையும் அருள் வள்ளலார் மீன் பிடித்துப் பெருமாட்டியாரைத் திருமணம் புரிந்து சென்று மறைப் பொருளுரைத்ததையும் முறைமையாக மொழிவோம்:

வலைஞர் சேரி

வைகை வளங் கொழிக்கும் நாட்டிலே - கீழைக்கடலோரத்திலே ஆழமான—நீரும் நெய்தன் மலரும் நிறைந்த—பெரிய உப்பங்கழி சூழ்ந்ததும் தாழை மதிலை யுடையதும் ஆகிய ஒரு பாக்கம் இருந்தது. அப் பாக்கத்தின் அழகை எவ்வாறு கூறுவது? வளைந்த முட்களையுடைய இலைகளாலே மறைந்து நெருங்கியிருக்கும் மலர்களுடன் தாழைகள் அசைதல் வளைந்த உடலுடன் கையிலேயுள்ள கேடகத்திலே அடங்கி வாளை விதிர்த்துப் போர்புரியும் வீரர்களைப் போன்று காணப் படும். புலால் கமழும் மீனை உலர்த்தும் ஒலியும், பறவைகளையோட்டும் ஓசையும், விலைகூறும் அரவமும், மீன்களை வாங்கும் கம்பலையும், வலை வீசும் இசையும், வலையையிழுக்கும் ஓசையுமாகக் கடலொலியை அடக்கிப் பல வொலிகள் எழும். வலைப் பெண்கள் வைத்து விளையாடும் பாவைகளுக்குத் தாழைமலர் சோறூட்டும். அலை யெறியுங்கடல் முத்துகளைப் பூட்டும். ஞாழல் தன் மணங்கமழும் மலரைச் சூட்டும்.

மேலும் நிறைந்த தெளிந்த கடல் நீரிலே ஆடிச் செல்வோர்க்குத் தாழை பொதிசோறளிக்கும். புன்னை முத்தை

யும் பசியபொன்னையும் பவளத்தையுந் திரட்டிக் கொடுக்கும். நுளைப்பெண்கள் குமுத மலரனைய வாயைத்திறந்து கூவி விற்கும் கயல்மீன்களுக்குப் போட்டியாக அவர்களுடைய கண்களாகிய கயல்மீன்கள் தோற்றமளிக்கும். விரிந்த வெண்மையான அலைகளையுடைய கரிய கழிகளிலே மலர்ந்த குமுதத்திலும் பனங்கள் அருந்திய வாயாகிய குமுதத்தினும் வண்டுகள் மொய்க்கும்.

இந்த நுளைச் சேரியிலே ஒருவன் முன் செய்த தவத்தினாலே, தூய வானவரினுந் தூயனாக இருந்தும் ஏதோ சிறிது தீவினை வசத்தினாலே நுளையர் மரபிலே பிறந்திருந்தான். அவன் கரிய மெய்யினரான வலையர் படகிலே சென்று கொணரும் கடல்மீன்களுக்குத் திறை கொண்டு நிறைத்த வாயிலையுடையவன்; அவர்களுக் கரசன்; ஏறு தவழுங் கொடியரான இறைவரிடத்திலே பதிந்த அன்புடைய பண்பினான்.

அம்மையார் மகவானார்

அன்னான் தனக்குக் குழந்தை இல்லாமையாலே இம்மை மறுமை பயன்களில்லையேயென மிகவும் வருந்தியிருந்தான். ஒருநாள் வலைஞருடன் கடல்மீன் படுக்கக் கடலை நோக்கிச் சென்றான். அதன் கரையிலே பசிய இலைதழைத்த நறிய புன்னை நிழலிலே உலகீன்ற அம்மையார் சிறு குழவியாகிக் குமுதச் செவ்வாய் திறந் தழுதவண்ணங் கிடந்தார்.

இமய மலையரசன் செய்த தவத்தாற் பதுமை யென்னும் ஓடையிலும், மீனக் கொடிப் பாண்டியன் தவத்தாலே வேள்வியிலும் மகவாக வந்த அன்னையார் வலைஞன் செய்த தவத்தாலே புன்னை நிழலிலே கிடந்தார். கொடிய தொழிலையுடைய வலைஞர்கோன் கண்டான் அவரை. மகிழ்ச்சி மிகக் "கரிய நீரிலே உறையுந் திருமாதோ? நீரிலே மறைந்துறையும் அரமடந்தையோ? வனத்திலே வசிக்கும் வனமங்கையோ? கண்களிமைக்க மண்மகளாகி யீங்கிருந்த இவள் யார்? மகவில்லாமல் வருந்தும் எளியேனுக் கிரங்கிக் கூடல்வள்ளலார்

அருளிய மகவாகும்!'' எனக் கூறி வலத்தோள் துடிக்க எடுத்துத் தழுவித் தன் மனையாள் கையிலளித்தான்.

அவள் பிறவிக் குருடன் கண்பெற்றாற்போலவும், மிகவும் வறியவன் மிகுசெல்வம் பெற்றாற்போலவும், அம் மகவை வாங்கினாள். வலைஞர்கள் கடலென முழங்கிக் களித்தனர். வலைச்சியர் கைகொட்டிக் குரவையாடினர். செயற்கருந் தவம்புரிந்த அந்த வலையர் அரசி, தான் பெருமலே கிடைத்த குழந்தையைத் தழுவி மனங்குளிர முத்தமிட்டு மணிவிளக்கென வளர்த்தாள்.

மீன் விற்றுக் கிடைத்த புதிய பொன்னாற் செய்த பல வகைப் பூண்களும் முத்தும் பாசிமணியும் காசுகளை யிடையிட்டுச் செய்த கோவையும் சங்கும் தங்கள் குலத்துக்கிசைய அணிந்து அளவற்ற பேரழகினுக்கழகு செய்தாள் அன்னை. அம்மையார் வலைச் சிறுமியர்களுடன் சென்று கடற்கரையிலே வண்டலிழைத்தும் முத்துக் கொழித்தும் தாழை ஞாழல் முதலான நெய்தல் மலர்களைக் கொய்தும், முகிலனைய கூந்தல் புறத்தே புரளக் கடலிலாடியும் மகிழ்ந்தார்.

தளர்ந்த கொடியனைய சிற்றிடையும் அண்ணலார் குறிப்பிட்ட நாளும் சிறிது சிறிதாகக் குறையவும் உயிர்க் கொழுநரான சிவபரம் பொருளிடம் வைத்த ஆர்வம் மேன் மேலும் பெருகவும் உயிரெலாம் வளர்க்கும் நம் அன்னையார் வளர்ந்து வந்தார்.

நந்திமீன்

திருவாலவாய்ச் செல்வ ரருளியவாறே இளம்பிறைச் சடைமுடியும் நான்கு கைகளுமுடைய நந்தியார் சுறவுமீன் கோலங்கொண்டு வெள்ளிய நீர்த்திரை தவழுங் கடலிலே சேர்ந்தலைந்தார். குன்றெறிந்த வேலவருங் களிற்று முகத்தவரும் முன்னரெறிந்த நூற்றொகுதியை யெலாம் எடுத்துத் தம் தலையிலடக்கிக் கன்றினாலே விளவெறிந்தவனுங்

காணற்கரிய திருவடிகளை உளத்தடக்கிக் கடலை மத்தெனக் கடைந்துழக்கினர் அந்த மீன்வடிவ நந்தியார்.

அம்மீன் தோணியை நெருங்கி மோதும்; படகினைப் பாய்ந்து வீழ்த்தும்; சோங்கினை அதனிடமுள்ள சிரக் கொடு கவிழ முட்டும்; சீறிவரும் பிற சுறவுகளை முடுக்கி வெட்டும்; பிறமீன்களைக் கோட்டிலே கோத்து வீசும். அந்த மீன் அலை நெடுங்கடலைக் கலக்கலாலும் வருந்தும் புலவர்க்கு (வானவர்க்கு) அமுதளித்தலாலும் மந்தர மலையை நிகர்த்தது மோதும் அலை சென்று நுளைச் சேரிக் குடிசைகளைத் தள்ளும்படி துள்ளும்; கடலிலே அலையும் கலமெனத் திரியும்.

விடுதலை

சேர்ப்பன் அந்த மீன் புரியும் இடையூற்றைக் கண்டு வலைஞருடன் பெருவலை யேந்திப் படகூர்ந்து சென்று அச் சுறவைச் சூழ்ந்தான். அது தன்மேல் வீசிய வலையைக் கிழித்துக்கொண்டு சென்று படகைத் தாக்கியது. படகிலுள்ளோர் தோணியிலே தாவினர். தோணியையும் அது தாக்கியது. எனவே, அவர்கள் தோணியிலிருந்த சோங்கினை யடைந்தனர். அவர்கள் முற்புறத்தில் வலை யெறிந்தாற் பின்புறத்திலே முளைக்கும். பின்புறத்தில் வீசினல் முற்புறமெழும். இவ்வாறு ஒருபுறம் வலையைக் கண்டால் எதிர்ப்புறத்திலே தோன்றி அலக்கழித்தது.

அஃது எறிகிற வலையிலே அகப்படும். மன மகிழ்ச்சியுடன் அவ்வலையை இழுப்பவன் கலங்க வலையினின்றும் வழுவிடும். பொருளாசை பிடித்த பொதுமகளிர் நினைவு போலவும் நினைவுக்கெட்டாப் பரம்பொருள் போலவும் அம்மீன் நெகிழ்வதை அறிந்த சேர்ப்பன் சிந்தை கலங்கினன். ஏவலருடன் மீன் பிடித்தற்குரிய சூழ்ச்சிகளையெல்லாஞ் செய்தும் கிடைக்கவில்லையே யெனக் கருத்தழிந்தான்.

''இக்கடலிலே மந்தரமெனக் கலக்கித்திரியுஞ் சுறவை எவன் பிடிக்கின்றனனே அவனுக் கென்மகள் மங்கல மணத்திற் குரியாள்,'' என அவன் உறுதி செய்தான்

வலைஞர் குலத்தில் வளரும் அன்னையை மணக்க அப்பர் வலைஞராகவே வெளிவந்தார்.

கரிய இருளை அள்ளினாற் போன்ற கச்சு—கச்சுடன் சேர்த்துக் கட்டிய சுரிகை—தோளிலே துகில்—குடுமியிலே தேன் துளிக்கும் நெய்தல் மலர்க் கண்ணி—இக் கோலத்துடன் அந்த வலைஞர் வந்தார். அவர்தம் கணத்துள்ளான் ஒருவன் ஒரு கடல்வாணன் போல எடுத்திட்ட கோலத்துடன் ஒரு வலையைத்தோளிலிட்டு, முதுகிலே மீன் குட்டி தவழத்தாங்கித் தம் பின்னே வரப் பாக்கத்தையடைந்தார். உப்பங்கழியிலுள்ள கண்டற் காட்டையுந் தாழைப் புதர்களையும் நெய்தல் மலர்ந்த கிடங்கையுங் கடந்து வலைச்சேரியை அடைந்தார்.

அவரையும் அவர்பின் வரும் துணையாளையும் கண்ட சேர்ப்பன் வியந்து, "நீ யார்?" என்று வினவினன்.

நான்மறைகளும் அறியாத நம்பர், "மதுரையிலே வலைஞருக் கெல்லாந் தந்தை யெனச் சிறந்த ஒரு தனிவலையுழவன் மகன் யான். படைத்துக் காத்தழிக்கவும் வல்லேன். அல்லது சிறந்த மீன்களெல்லாம் அகப்பட வலையெறிந்து பிடிக்கவும் வல்லேன்," என்றார்.

சேர்ப்பன் ஐயத்துடன், "இவன் வலைஞன் கோலங் கொண்டு நடிக்கின்றானோ? முன்னும் பின்னும் முரணாகப் பேசுகின்றனனே! தேர்வு செய்தறிவோம்," என்று நினைத்தான்.

வள்ளலை நோக்கி, "அங்ஙனமேல் மிக நன்று! இந்தத் துறையிலே வலிய மீனொன்று நெருப்பென மறைந்து சீற்றங் கொண்டு உலவுகின்றது. அதனைப் பிடித்தனையேல் என்மகளை மணம் புரிந்து கொடுப்பேன்," என்று கூறினான்.

சிங்கவேறு போலச் சென்றார் நம் சிவவலைஞர். உடன் வருந் துணைவலைஞர் தோண்மீ திருந்த வலையை வாங்கிக் கொண்டு கடலிலே படகு செல்வதைப் போல நீந்திச் சென்றார்.

சங்கை எறியும் அலைகளையுடைய கடலிலே நீரைக் கிழித்துச்சென்று, செவ்வையாக நோக்கி உடல் திருகி நின்றெறிந்தார் வலையை. கட்டப்பட்ட மணிகள் ஒலிக்க விரிந்து விரைந்துசென்று பரவி விழுந்தது வலை. படத்தை விரித்துப் பெருமூச்சுவிட்டுப் பற்றிய பாம்பின் வாயிலே பட்ட மீனைப்போலச் சுறவுமீன் வலையிற்பட்டது.

குற்றமற்ற அடியார் வலையிற்படும் வலைஞர் தாம் வீசிய வலையிலே அகப்பட்ட மீனை யெடுத்துக் கொணர்ந்து கரையிலே விட்டார். வலைஞர் கூட்டம் கள்ளிலே மொய்க்கும் வண்டுகளென வந்து மொய்த்தது.

"நுளையரும் தலைவனும் ஆகிய ஆற்றல் மிக்கோர் பலர் கூடிப் பலநாள் முயன்று வீசிய வலையிலே அகப்படாத மீன் இந்த இளைஞன் தானொருவனே சென்று ஒரே முறை வீசிய வீச்சிலே அகப்பட்டதே! இந்த இளைஞன் நம் குலதெய்வமாவான்!" என்றனர்.

தாழை நிறைந்த கானலையுடைய சேர்ப்பன் களிப்புக் கொண்டான். பம்பை யொலிக்கவும், நுளைச்சியர் குரவை யாடவும் சிவ வலையருக்குத் தான் கண்டெடுத்து வளர்த்த காரிகையாரைத் திருமணம் புரிவித்தான்.

அப்போது, திருமணக் கோலங்கொண்ட மருகரும் அங்கயற்கண் நங்கையாரும் விண்ணிலே விடைமேற் காட்சி கொடுத்தனர். கரையிலே கிடந்த மீனும் நந்தியாய் முந்திநின்றது. அருட்கடலார் திருநோக்கினாலே, பண்டைவினைக்கீடான இந்த மெய்க்குரிய சிற்றறிவைவிட்டு நல்லறிவு பெற்றான் சேர்ப்பன். அவன் அம்மையப்பர்களின் அணிமலரடியிலே விழுந்து வணங்கி, "இரக்கமற்ற இக்கொடிய பிறவியெடுத்துழலும் அறிவிலேனைக் காக்க என்போலவே வந்த தங்கள் புண்ணிய வடிவம் வாழ்க! செவ்விய குமுதவாய் அணங்கை மணந்து தமியேன் பற்றைநீக்கிப் பற்றுத்தர வெள்ளிய விடைமேல் நின்ற கோலம் வாழ்க!" என்று வாழ்த்தினான்.

"அன்ப! நீ மகவின்றிப் பலநாள் வருந்தினை. உமையை மகவாகத் தந்தோம்; முறைப்படி வந்தும் மணந்தோம். நீ அளகையான்போலப் பலநாள் நல்லின்ப வாழ்வுபெற்று வாழ்ந்து முடிவிலே நம்முலகத்தை யடைவாயாக!"

தண்ணிய கொன்றையார் தமக்குப் பெண்ணளித்த பரதவனுக்கு நல்லருள் சுரந்தார். விண்ணிலே வழிக்கொண்டு நந்தியுங் கணங்களும் உடன்வர உத்தரகோச மங்கை சென்றருளினர்.

மறை நவிலுதல்

உத்தரகோச மங்கையிலே பங்கிருக்கும் பரைக்கு, மறைப்பயனை யெல்லாந் திரட்டிக் கடலிற்றோன்றிய அமுதெனப் புகட்டினர் அரவமணிந்த புண்ணியர். அக்காலத்திலே அன்புடைய அடியார் அறுபதினயிரவர்க்குக் கொடுவினை களைந்து நீங்காத பேரின்பவீட்டை நல்கியருளினர். பிறகு, அம்மையும் அப்பரும் மதுரை ஆலவாய் சார்ந்திருந்தனர்.

"அவ்வேலை அன்புடையார் அறுபதினயிரவருக்கும்
அளித்துப் பாச
வெவ்வேலை கடப்பித்து வீடாத பரானந்த
வீடு நல்கி
மைவேலை அனையவிழி அங்கயற்கண் நங்கையொடும்
மதுரை சார்ந்தான்
இவ்வேலை நிலம்புரக்க முடிகவித்துப் பாண்டியனென்
றிருந்த மூர்த்தி." (கச)

---

௩௮. வாதவூரடிகளுக்கு மெய்யறி வருளல்

அமைச்சர்

வறுமையையும் பண்பையும் ஆராய்ந்து வழங்குவார் போல வயல், குளம்போன்ற நீர்நிலைகளை நிறைத்து, அறத்தைப் பெருக்கிப், 'பெரிய கடல் உப்புநீருடையது; ஒருவர்க்கும் உதவாதது' என்று கடலுக்கு நீர்வழங்காத வைகையின் கரையிலுள்ளது திருவாதவூர். உடம்பரு உயிர்போல அந்த நகரெங்கும் விழவருது; மனையெங்கும் விருந்தருது; அங்கே மகிழ்வினையுடைய மகவருது; பள்ளியெங்கும் மறையருது; அரங்கெங்கும் முழவோசையருது; சோலையெங்கும் முகிலருது; வயலெங்கும் உழவருது!

அத்தகைய நகரிலே அமாத்தியர் மரபிலே அரிய மறையின் வழிவந்த சிவாகம நெறித்துறை விளங்கச் செவ்விய இளஞாயிறுபோலச் சிவனருளாலொருவர் தோன்றினார். அவரை வாதவூரரென வழங்கினர். அவர் தம் மறைச் சார்பான நூன்முறைப்படி சடங்கெல்லாம் நிறையப் பெற்று, இளம்பிறையென மறைகளையும், கலைகளையும் பதினாருண்டிலே கற்றுத் தெளிந்தார்.

இவருடைய சிறப்பை யறிந்தவர் சென்றுகூற அறிந்த அரிமர்த்தன பாண்டியன், இவரை வரவழைத்துச் சிறப்பு நல்கி அமைச்சுத் தொழிலளித்து மேம்படுத்தினான். அரசியற் கலையும் படைக்கலையும் விளக்கமுற அறிந்தவராகையினாலே அரசனுக்குக் கண்போன்று விளங்கிய அமைச்சரிலே முதலமைச்சராயினார்.

பகைவரை வலியடக்கித் திறைப் பொருள் கொள்வதென்பதென்? ஒருவருஞ் செலற்கரிய தீவிற் செங்கோல் செலுத்துவோரும் தத்தமக்குக் கிடைத்தற்கரிய பொருளையிங்கிருந்து வரவழைத்து நட்புக்கொள்ளும்படி பாண்டியனாட்சி பண்புபெற்றது. வாதவூரர் அரிமருத்தனனுக்குக் கண்ணுங் கவசமுமாகிப் பணிபுரிந்து, உலகெலாம் உறவாகித் தம் குடையிலே குளிர்தூங்க அரசியற்றி வந்தார்.

உண்மையுணர்விலே நோக்கம்

இவ்வாறு வாழும் நாளிலே உண்மைப் பொருளைப் பற்றிய உணர்வும், பொய்ம்மைப் பொருளைப்பற்றிய உணர்வும் உள்ளத்திலே தோன்ற வாதவூரர் இம்மை மறுமையின்பங்களை வெறுத்துப் பரகதியிலே பற்றுக்கொண்டார்.

அவர் நினைத்தார் :—

''புத்தரும் அருகரும்போன்ற புறச்சமயத்தார் நெறிகளும் மறை தழுவிய அகச்சமயத்தார் நெறிகளும் மனமாசு கழுவிச் சிவனாருளைத் தெளிவியாமையால் ஆணவ மலங் கழியாமல் வீடும் பெறவியலாது. அன்பு வழிபாட்டினால் அண்ணலாரருள் பெறும் அடியவர்க்கன்றி வீடு பெறுதல் இயலாதென மறை மொழியும். அப் பொதுநூலிலுள்ள மெய்ப்பொருளின் தெளிவையெல்லாம் சத்திநிபாதமுடையோர்க்குத் தெளிவுறத் தெரிவிப்பவை ஆகமங்களேயென அறிஞர் செப்புவர். மறைமுடிவினும் ஆகமமுடிவிடினும் விளையும் பரம்பொருள் ஒற்றுமை வேற்றுமையாகிய கட்டையவிழ்த்து, அறியாமைப் பிணியைப் போக்கித் தலைமைபெற்ற தன்னையும் என்னையும் தெளிவிக்கும். அத்தகைய அறிஞனாகிய ஆசிரியர் பெருமான் வருவது எப்போதோ? பொய்ம்மையில்லாத பேரன்பினுக்கிரங்கி யெளிவரும் அருட்குரவன் பேரருளின்றி யிந்தக் கொடிய தளையைக் குற்றமற்ற கேள்வியால் மட்டும் நீக்கிக்கொள்வது பெரிய நீர்ப்பரப்புடைய கடலைத் தெப்பத்தாலன்றிக் கையினால் நீந்துவதுபோலாம்!''

வாதவூர் அந்தணர்க்குப் பேரின்ப வீட்டிலே எல்லையற்ற காதல் உண்டாயிற்று. மறையுணர்ந்தோரும், ஆகமமுணர்ந்தோரும் வரும்போதெல்லாம் அவர்களைக் கண்டு கண்டு அளவளாவி வரத்தொடங்கினார். அளவற்ற அறிஞரிடத்திலே அளந்தளந்தறிந்த பொருள்களெல்லாம் நீர்வேட்கையுற்றவனுக்கு உப்பு நீரான கடல்நீர் கிடைத்தாற்போலாயின! எனவே, அமைதி பெறமுடியவில்லை. இவ்வாறிருப்பினும் அரசனுக்கு உயிருங் கண்ணுமாகவிருந்து அரசியலை நடத்தி வந்தார்.

"கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோல் உம்பரைக் காப்பான்
பள்ளக் காரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவலன் இடைப்புறத் தொழிலும்
உட்கொண்டார்."

[அவர் உள்ளம் ஆசிரியரைத் தேடியலைந்தது. எனினும் அவர் உடம்பு அரசன் பணியிலே ஈடுபட்டிருந்தது. அஃது ஒரு பெண் கள்ளக் காதலனிடத்திலே அன்புவைத்தொழுகுவது போலிருந்தது.]

பரி வாங்கி வருக

ஒருநாள் வாதவூரர் பாண்டியன் அவையிலே யிருக்கும் போது குதிரைப்பந்தி காப்பவர் அரசனிடம் வந்து வணங்கி, "வெற்றிவேல் அரசே! நம் குதிரை வெள்ளத்திலே இறந்தவை போக மற்றவையெல்லாம் நிறைந்த பிணி யுடையனவும் முதுமையடைந்தனவுமாக உள்ளன. சிறந்த பரிகள் இல்லை," என்று தெரிவித்துக்கொண்டனர்.

வேப்பந்தாரான் வாதவூரடிகளை நோக்கித், "தாங்கள் நம் பொருளறையைத் திறந்து மிகுதியாகவே பொருளெடுத்துச் சென்று கடற்றுறையிலே யிறங்கும் பரிகளிலே தெரிந்தெடுத்து வாங்கி வருக!" எனப் பணித்தான்.

உள்ள வேறுபாட்டுடன் மந்திரத்தொழில் நடத்தும் அடிகள் சென்று பொருளறையைத் திறந்து கிடைத்தற்கரிய குதிரைகளை வாங்குதற்கேற்ற பொருளை முகந்துகொண்டு தாழிட்டு வெளிவந்தார். பாண்டியனிடஞ் சென்று விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

வாதவூரடிகளின் வேண்டுகோள்

பொற்குவியலை யெல்லாம் ஒட்டகங்களிலேற்றி முன் போக்கிவிட்டுத் தாம் சோமசுந்தரர் திருக்கோயில் சென்றார். பொற்றாமரைப் பொய்கையிலே நீராடி, அதன் கரையிலெழுந்தருளிய சித்திக்களிற்றை வணங்கினார். பிறகு அங்கயற்கண்ணம்மையாரையும் வணங்கிச் சோம

சுந்தரர் திருமுன் சென்றார் வலம்வந்து நிலமிசை விழுந்து வணங்கி யெழுந்து கைகுவித்து, "அடிகளே! ஒரு வேண்டுகோள். இப் பொருளெலாம் ஐம்பொறிகளையும் வென்ற தங்கட்கும் தங்கள் அடியவர்கட்கும் ஆக்குக!" என வேண்டி நின்றார்.

அவருக்குப் பெருமானருள்போல, இறைவழிபாடு செய்யும் ஆதிசைவன் ஒருவன் எதிர்வந்து திருநீறளித்தான். அடிகளின் உள்ளம் மகிழ்ச்சிக்கடலிலே முழுகி, இருகையினும் அதை ஏற்றணிந்தார். திரும்பவும் வணங்கி விடைபெற்று வெளிவந்தார்.

ஆசிரியரைக் கண்டார்

இனிய மங்கல முரசுகள் ஒலித்தன. காலாட்படை புறம் போந்தது. வாதவூரரின் இருமருங்கினும் இணைக் கவரிகள் அசைந்தன. பவளக்கால்களையுடைய பொன்னொலியன்ற குளிர்ந்த குடை நிழல்செய்தது. பொற்சிவிகைமீது வாதவூரர் போயினர்.

இவர் வருமுன் மாறியாடிய வள்ளலார் வாதவூரரின் இருவினை ஒப்பும் இருண்ட மல பக்குவமும் ஒத்திருத்தலால் அடிமைகொண்டு பணி கொண்டருள நினைத்தார். எனவே, மறையுந் தொடர்தற்கரிய தம் அருளால் ஒரு மறைக்குலக் குரவராகித் தம் திருவடியை நீங்காத அடியார் பலருடன் திருப்பெருந்துறையிலே கொத்தான மலர் நிறைந்த குருந்தின் அடியிலே எழுந்தருளியிருந்தார்.

கடலனைய படைகளுடன் காடுஞ்சுரமும் பல கடந்து, எழு பிறவிக்கடலைக் கடக்க வரும் வாதவூரர் அருள் வெள்ளப் பெருங்கடலான இறைவர் எழுந்தருளிய பெருந் துறையை அணுகினர். பெருந்துறை நெருங்க நெருங்க இவரை யறியாமலே மகிழ்ச்சி வெள்ளம் பெருகியது. கைம்மலர் உச்சியிலே குவிந்தன. இன்பக் கண்ணீர் பெருகியது. வினையை விடுதலை செய்யும் உள்ளத்திலே அருள் விளைந்திட நடந்தார்.

"பித்திது எனப்பிறர் நகைக்கவரு நாலாஞ்
சத்திபதி யத்தமது சத்தறிவு தன்னைப்
பொத்திய மலத்தினும் வெரீஇச்சுமை பொறுத்தோன்
ஒத்திழி பிணிப்புறும் ஒருத்தனையும் ஒத்தார்."

[கண்டோர் இவர் பித்தரென நினைக்கத்தக்க தீவிரதர சத்திநிபாதம் பதிதலாலே தமது மெய்யறிவை மூடிய மலத்திற்கு அஞ்சிச் சுமை தாங்கியைப் போலவும் கொடிய நோயாலே பற்றப்பட்ட ஒருவனைப் போலவும் சென்றார்.]

அவர் உள்ளம் நெருப்பினில் வெண்ணெயென உருகியது. "என் உள்ளம் என்னை உருக்குவதனாலே எனை மறைத்த மலத்தின் ஆற்றலைக் காய்ந்து நீக்கும் ஆசிரியராகி எனையாளும் அருட்கடல் இருக்கும் இடம் இது போலும்," என எண்ணிப் பெருந்துறையினுள் சென்றார். கழுமுட் படை யேந்திய கண்ணுதலார் திருக்கோயிலை யடைந்து குளிர்ந்த பொய் கையிலே படிந்து திருமுன் சென்று புவியில் விழுந்து பரம்பொருளை வணங்கி யெழுந்தார். பிறகு வலம் வரும்பொழுது பழமறை பகர்ந்தறியாத பழம் பொருளை ஒழுக்கமுடைய முனிவரர் தெளியும்படி பேசா தமர்ந்து தெளிவித்த பரமருகு எழுந்தருளிய குருந்த மரத்தைக் கண்டார்.

ஒரு மருங்கிலே மறையும் ஒரு மருங்கிலே உண்மை நெறியான சைவ நூலும் ஒரு மருங்கிலே புராணங்களிலே கூறப்படும் இசை நூலும் ஒரு மருங்கிலே பலவகைக் கிளைச் சமய நூல்களும் மாணவர்களால் வாய்விட்டோதப் பெற்ற மறையிலே கூறப்பெற்ற அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும், வீட்டுக்குக் காரணமான சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதத்தையும் முற்றுமுணர்ந்த பெரிய மாணவர் கூட்டம் வினா விடையாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

சரியை வல்ல உண்மையடியாரும் சிவனார்க்கினிய கிரியை தேர்ந்த மைந்தரும் விளங்கும் யோகமுணர்ந்த

சாதகரும் ஆசிரியத் தன்மையுடைய ஞானமுணர்ந்த செல்வரும் அளவிலார் சூழ்ந்திருந்தனர். மற்றும் நோன்பை விட்டவராய் ஆடலும் பாடலுமுடையவராய் உலகம் பழித்த செய்கையராய் அழுகையும் நகையுமுடையராய்ப் பற்றறுத்த உளக்கண்ணுலே சிவனுருவைக் கண்டவராய்த் தம் புறக்கண்களாலுலகை நோக்காதவராய்த் திரியும் ஞானவீரர் பலர் அமர்ந்திருந்தனர். மேலும் பொய்யடையாத உள்ளமாகிய வானிலே குற்றமற்று விளங்கும் வணக்கிற்கியலாத பேரொளிக்குத் தோற்றமும் முடிவும் இல்லாமையால் பகலும் இரவும் அறியாதவராய் நாளும் புரியும் விரதம் முதலான நோன்பின்றி யுறையும் ஞானிகள் பலர் நயந்துறைந்தனர். அவர்களுக்கு உடை கோவணம்; உண்டி கைப்பிச்சை; உறவினர் சிவனடியார்; கலன்கள் சிவமணிமாலை; உறங்குமிடம் வெறுந்தரை; எனினும் பகலிரவு காணுமல் உறங்குவர். அவர் வாழ்க்கை இதுவே.

இவ்வகைச் சிறப்புடைய அடியார் கூட்டத்தினிடையே ஆலமரமனைய குருந்த மரத்தடியிலே—யோக இருக்கையிலே—சிவஞான போதமெழுதிய நூலைத் திருக்கையிலேந்தி யெழுந்தருளியிருக்கும் அருளுருவை வாதவூரர் கண்டார்.

''மன்றினில் ஆடிய இன்பத் திருக்கூத்துக் கோலமும், வட ஆலின் நீழலிலே அன்று நால்வருக்கும் அசைவின்றி யிருந்துணர்த்திய வடிவமும் இப்போது நாயினேனுக்குத் தம்மை யெளிதாகக் காட்டிய இவ்வுருவமே.''

இவ்வாறு சிவனருளுணர்த்த வாதவூரர் உணர்ந்தார் உடனே திருமுன் வீழ்ந்து பணிந்தார். எழுந்து முடிமேற் கைகுவித்து, மெய்யுருக உருகினுர். இனியராக எளிதிலே வந்து தம் அன்பு வலைப்பட்ட அண்ணலாரின் அருள்வலையிலே அகப்பட்டார், துன்பந்தருங் கொடிய பிறவி வலையை அறுத்திட வந்த வாதவூரர்.

அருள் பெற்றுர்—அன்புருவானுர்—மாணிக்கவாசகர்!

ஆசிரியரிடம் ஞானுபதேசம் பெறற்குரிய காலமும் கனுக்காட்சியும் சகுனமுமின்றியே பெற்று மாணவரான உயர்ந்த

மாணவர்களாக அங்குள்ளோர் பக்குவ முணர்ந்த ஆசிரியர் இவரே என்று கூறினர். பரம்பொருள் கட்டவிழ்ந்த செங்கழுநீர் மாலையணிந்து திருவடியிலே வீரக்கழலைக் கட்டிப் பெருமைமிக்க வாதவூரரின் ஒழுக்கத்தையும் அன்பையுங் கண்டு, உடல் உயிர் பொருள் மூன்றையும் அவர் நீரோடு கொடுக்கப் பெற்று, மனக்கண்ணால் நோக்கி அவருடைய மலத்தைக் கழுவித் திருவடி மலரையும் முடியிலே அணிந்து, அழகிய மலரனைய திருக்கையையும் அவர் முடிமேல் வைத்து, நுண் பொருளாகிய ஐந்தெழுத்தினாலே அவரைச் சூழ்ந்த மலப் பெருக்கத்தை நீக்கினர். பிறகு உண்மையின்பம் விளையும் நிலத்திலே அவரைச் சேர்த்தார். போக்கும் வரவும் வெளி யில்லாத முழுவடிவாக ஆக்கினர், பார்வை மிருகம்போல் வந்த பரம ஆசிரியர்.

ஆகவே தம் அருள் நோக்கத்தாலே இரும்புண்ட நீர்போலக் கவரும் ஆசிரியரையும், அவர் அருளிய மொழி யையும் தம்மைச் சூழ்ந்த பாசத்தையும் தம்மையும் வாதவூரர் மறந்தார்; உண்மை யறிவின் வடிவினராய்ப் பிறவெல்லாம் அறியாதவரானர். தேனும் பாலும் இனிய கருப்பங்கட்டியும் அமுதும்போல இனித்து ஊனையும் உள்ளத்தையும் உருக்க, உள்ளொளியை யறிந்து, இன்பவாறு நிறைந்து புறத்தும் ததும்புவதுபோல, அழிவிலாத மெய்யறிவுக் கலைமகள் அவர் நாவிலே வந்தமர்ந்தாள்.

கூப்பிய கையும் அசையும் முடியும் அமுது தளும்புங் கண்ணிரும் சிலிர்த்த மெய்யும் நாத்தழுதழுத்த அன்பு மொழியும் தம்மை மறந்த—அனலிற்பட்ட நெய்யென உருகிய மெய்யும் உடையராய்ப் பணிந்து ஏத்தத்தொடங்கினர்.

"பழுதி லாதசொல் மணியினைப் பத்திசெய் தன்பு
முழு து மாகிய வடத்தினல் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்."

[குற்றமற்ற சொல்லாகிய மாணிக்கத்தைப் பேரன்பு வடத்திலே முறைப்படுத்தித் தொடுத்த மாலையைச் சாத்தும் அடியாராகிய வாதவூரரை மகிழ்ச்சியுடன் நோக்கிய பரமனூர் குற்றமற்ற பேர் 'மாணிக்கவாசகன்' என்றமைத் தருளினூர்.]

பாட்டிற் ககமகிழ்ந்த பரமகுருவின் திருவடிமலரிலே கண்ணீராட்டிச் சொல்மலரை யணிந்து தற்போதமாம் இனிய அமுதை ஊட்டித் தற்பர ஞானமாகிய வேள்விக் கனலை மூட்டிச் சிவனூர் வழிபாட்டின்மேல் ஊக்கங் கொண்டார். ஆசையைத் தருங் கொடிய பிறவித் தொடர்பற்று; ஆசிரியரும் மாணவரும் ஓதும் இனிய ஓசையையுடைய ஆகம உபநிடதப் பொருளை யெல்லாம் கேட்டுப் பற்றெலாம் அங்கேயே மாணிக்க வாசகர் வைத்தார்.

பிரிவிலழுங்கல்

இவருடைய அன்புவலையிலே பிணிப்புண்ட சிவனூர் மேலும் மேலும் இவர் மணிமொழியைத் திருச் செவியிலேற்கத் திருவுளங் கொண்டார். மேலும் கையிலிருக்கும் பொருளை யெல்லாம் பேரன்பளித்துக் கவர்ந்து பணிகொண்டு பாண்டியனுக்கும் இவருடைய பண்பைத் தெளிவித்து வீட்டு நெறியிலே விடவும் புத்தரை வாதில் வெல்லவும் திருவுளங் கொண்டார். எனவே, ''சிறிது வேலையுள்ளது. இங்கே யிருப்பாயாக!'' எனக் கூறி அடியருடன் மறைந்தருளினூர்.

கனவிலே கண்ட காட்சி போல அருட்கோலங் காட்டி மறைந்ததால் வாதவூரர் கலங்கினூர். ''இன்று நம் தலைவர் நாய்க்குத் தவிசிட்டதைப் போல நினைவுக் கெட்டாத அழகிய உருவைக் காட்டி ஆட்கொண்டு மறைந்தது நனவோ? கனவோ?'' என்று ஐயுற்றூர். சிறிது தெளிந்து, ''எந்தையே கூட்டமாகிய அடியருடன் கூட்டாமல் என்னையும் என் வினையையும் இங்கே யிருத்திச் சென்றீரோ? தங்களைப் பிரிந்த—வஞ்ச வினைக்கிருப்பிடமான இவ்வுடலைத் தீயிலே வீழ்த்துகிலேன்! மலையிலிருந்து உருண்டு மாய்க்கிலேன்!

நஞ்சு தீட்டிய வாளாலும் பிளக்கிலேன்! அவ்வுடல் தங்கள் உடைமையாகி விட்டதாலே அவ்வாறு செய்ய முடியாமல் திகைக்கின்றேன்! உயிருந் தானே பிரிய வில்லையே! தங்களைப் பிரியவும் பொறுக்கிலேன்! என் செய்வேன்!'' என்று கூறிக்கூறி யேங்கினர்; இரங்கினர்; படிமிசை விழுந்து புரண்டார்!

''மிடியிலேயுழலும் பிறவிக் குருடன் கையிலே கிடைத்த மிகுவிலைபெற்ற மணியைப் போல்—மழலைமாறுத சிறுவன் கையிலே கிடைத்த உயர்ந்த பொற்கிண்ணம்போல்— யாவர்க்கும் அறிவதற்கரிய தாங்கள் சிறுமையேனை எளிதிலே யிரங்கி ஆட்கொண்ட அருமை யறியேன். அத்தகைய என்னைத் துன்பக் கடலிலே ஆழவிட்டுத் தாங்கள் தங்களைப் பிரியாத அடியாருடன் நீங்கிவிட்டீர்கள்! இதற்குத் தமியேனிடமே குற்றமுள்ளது! தங்களிடம் ஏது? மண் முதலான முப்பத்தாறினும் உள்ளஞ் சுழன்று தடுமாறிப் புண்ணுனேன். எனைக் காணுமல் உழன்றேன். ஞானக் கண்ணுலே அவற்றைப் பிரித்து, அவற்றை யான் யானென எண்ணுமல் உள்ளவாறறியத் தந்தருளினீர்கள்! எங்கே சென்றீர்களோ? வானம் முதலான ஐந்தும் அவற்றிற்குக் காரணமாக வகுக்கப் பட்ட ஓசை முதலான தன்மாத்திரைகளைந்தும் இவற்றை விடாமல் இயங்கும் மனம் முதலான காரணம் நான்கும் வழியடைத்து நிற்கத் தேனும் பாலுஞ் சருக்கரையும் கனியும் சீனியும் கற்கண்டும் ஆகிய இவற்றினும் மேம்பட்டுறும் தெளிந்த அமுதத்தை அடியேன் அருந்த அருளினீர்கள்! எங்குச் சென்றீர்களோ? குற்றமாக இருந்து மறைக்கும் மலத்தின் வலிமையும் நானும் வேருகாமல் ஆசையின் வேறுபாடான மலமாகிய என்னைப் பொருளாக நினைத்துப் பேச்சற்ற இன்ப வுருவத்திலே தங்களுடன் என்னை உடன் வைத்த இறைவரே! எங்குற்றீர்களோ?''

வாய்விட்டரற்றினர்! அழுதார்! அப்பொழுதீன்ற கன்றைப் பிரிந்த பசுவெனக் கரைந்தார்! கோபுரவாயிலுக்குச் சென்று பாண்டியன் பணியாளரைப் பார்த்துக்

"கடல் வழியாக வரும் பரிக்கூட்டங்கள் ஆடித்திங்களிலே வருமென மன்னவர்க்குக் கூறுங்கள்! செல்லுங்கள்!" எனப் போக்கி விட்டார்.

பரிக்கு வந்த பொருளை அருளுக்குச் செலவிட்டார்

பணியாளர் சென்று பாண்டியனிடம் நிகழ்ந்ததைப் பகர்ந்தனர். பாண்டியன் ஆடியிலே குதிரைகள் வருவதை நோக்கியவாறு வேறொன்றும் விளம்பாமல் இருந்தான். வாதவூர் வள்ளலோ தாம் குதிரைக்கெனக் கொணர்ந்த பொருளையெல்லாம் குருந்தடியிலே கோலங் கொண்டெழுந்தருளி ஆட்கொண்ட குளிர்மதிச் சடையன் திருக்கோயிலின் சிறந்த வழிபாட்டிற்குந் திருவிழாவிற்குங் கோயிற் பணிக்கும் அடியார்க்குமாக அள்ளிச் செலவிட்டு விட்டார். அங்கேயே அமைதியுடன் அண்ணலாரருளை வேண்டியிருந்தார்.

ஆடித் திங்கள் வந்தது. பாண்டியன் ஓலையும், "குறித்த நாள் வந்ததே! குதிரைகளேன் வரவில்லை?" எனும் வினவைக் கொண்டு வந்தது.

பாண்டியனுக் கேன்கூற?—பரிவருமெனப் பகர்க!—கனவு

வாதவூரர் பாண்டியன் ஓலையை வாங்கிப் படித்தார். உள்ளமாகிய கழனியிலே சிவமுதல் ஓங்குமாறு, உலகப் பற்றுகிய பாசத்தை வேரறக் களைந்து, அருளாகிய நீரைப் பாய்ச்சித் தோற்றமும் முடிவுமிலாத பேரின்ப விளைவைத் தந்த அருட்குரவரின் திருக்கோயிலை யடைந்தார்.

"எம் இறைவரே! வானவர் தலைவரே! விடையெழுதிய கொடியினரே! தென்னவரே! திருப்பெருந்துறை மாணிக்கமே! வழுதியின் பொருளை யெல்லாம் அடிகளின் திருக்கோயிற் பணிக்கும் தங்களடியார் பணிக்குமாக்கி விட்டேன். அந் நெறி தங்களருளே. இனி, அடியேன் பாண்டியனுக்குப் பரிசெலுத்தும் பண் பெங்ஙனம்?"

அத் திருக்கோயிலிலேயே வணங்கியவாறு இருந்தார். வானிடை வள்ளலார் திருவாக் கெழுந்தது :

"மன்னவனுக்குக் குதிரை வருமென ஓலை விடுக!"

அகங் களித்துள்ள அவ்வாறே எழுதி விடுத்தார்.

கேட்டிருந்த செங்கதிரவன் தன் வெங்கதிரைச் சுருக்கி மேலைத் திக்கிலே மறைந்தான். அவன் வெப்பத்தினாலே சோர்ந்திருந்த வையத்தைத் தண்ணெனத் தளிர்ப்பிக்க வெண் கதிரவன் வெளிவந்தான்.

வாதவூரடிகள் கனவிலே வெள்ளியம்பலக் கிழவர் குருந் தடிக் கோலத்துடன் எழுந்தருளிக், "கொற்ற வேந்தன் உள்ளங் கவருமாறு வெற்றிப் பரிகளுடன் வருவோம்; நீ முன் னர்ச் செல்க!" என இயம்பியருளினர். துயிலுணர்ந்தார் மாணிக்க வாசகர்.

"வானவர்க் கனவினுங் காண்டற்கரிய அருளுருவம் நமக் குக் கனவின் மட்டு மன்று, நனவினுங் காண்பதற் கெளிதாய பேரருளென்னே!" என வியந்து துயிலாது வைகறையை யெதிர் நோக்கி யிருந்தார்.

இன்பக் கூத்துச்சுடர் மனவிருளைத் தின்றெழுவதைப் போன்று வையத் திருளைத் தின்று கதிரவன் கீழ்த் திசையிலே யெழுந்தான்.

இனியும் பிறவிக்கடலிலே அழுந்தாதவரான மாணிக்க வாசகர் எழுந்து ஆளுடைய பெருந்துறையாரின் இருதாளையும் பணிந்தார். கூடலை யடைந்து, வண்டு முரலும் வேப்பந்தா ரான் பேரவையை அடைந்தார். அரசனை முறைப்படி வணங்கி நின்றார். பாண்டியன், "எவ்வளவு பொருள் கொண்டு சென்றீர்? எவ்வளவு குதிரைகள் கொணர்ந்தீர்?" என வினவினான்.

"கொண்டு சென்ற பொன்னின் அளவும் புரவிகளின் தொகையும் ஒன்றே! அவை வந்த பின்னர் நோக்குங்கள். இப்போது தாங்கள் 'பரி யரசர்' என்று புகழ் பெறுவீர்கள்." வழுதி யுளம் மகிழ்ந்தது. வரிசை பல நல்கி வாதவூரரைச் செல்ல விடுத்தான்.

வாதவூரர் பொற்றாமரை வாவியிலே நீராடிச் சித்திக் களிற்றை வணங்கித், 'தானே முளைத்த சிவக் கொழுந்தை—முன்னங் கயற்கட்கொடி மருங்கில் விளைந்த தேனை'—வாரிப்பருகினார். மனமொழி மெய்யெலாம் அன்பாகத் தோன்றினார்.

''மன்னரே! எனை யாட்கொண்ட மாணிக்கமே! வெள்ளிமன்றாடும் அன்னையொப்பாரே! அடியேன் வேண்டிக் கொண்டவாறு அரச னளித்த பொருளை யெலாம் முன்னே கொண்டு பணி கொண்டீர். இனி, அரசன் சினவாமல் மகிழப் புரவி வரும் வண்ணம் புரிந்தருள்வீர்!''

கை கூப்பி வேண்டி நின்றார்.

வான் மொழி, ''மெய்யன்புடையாய்! அஞ்சாதே! கதிரவன் குதிரைகளே போன்ற கணக்கிலாப் புரவிகளைக் கொணர்வோம்,'' என்றது. மகிழ்வுடன் வணங்கி மணி மொழியார் தம் மனையிற் புகுந்தார்.

உறவினர் கலக்கமும் துறவியார் தேற்றமும்

மனையிலே நுழைந்தவுடன் வாதவூரரை அவர் சுற்றத்தாரும் நண்பரும் அன்புடைய பணியாளரும் பிறருஞ் சூழ்ந்துகொண்டு இடித்துரைக்கத் தொடங்கினர்:

''அந்தணர்க்கும் அமைச்சுத் தொழில் பூண்டு அரசன் பணிபுரிவதற்கும் பொருத்தமில்லை. ஐயா! அவ்வாறு பணிபுரியப் புகுந்தால் பெருவலி படைத்த மன்னர்க் கேற்றனவே இயற்ற வேண்டுமென அரசியல் நூல் வல்லோர் நுவல்வர். அரசியலை நன்கறிந்த தங்கட்குத் தெரியாதென்று கூறவில்லை! தெரிந்திருந்தும் இவ்வாறு செய்வதுதான் சிறிதும் நன்றாயில்லை. மணமருத வேப்பந்தாரணிந்த பாண்டியனுக்கு விரும்பத்தக்க புரவிகள் வருமென்று இப்போது கூறிவிட்டீர்கள்! நாளைக் கென் சொல்வீரோ? தங்களைச் சார்ந்திருக்கும் உறவினர் நண்பர் அடைந்தோர் பெரியோர் முதலான குழுவைக் காக்க

வேண்டுமென்னுங் குறிப்பு தங்கட் கில்லையோ? தங்கள் செயல் தங்களுக்கே அழகாயிருந்தாற் சரி!''

பற்றற்ற பெரியார் பகர்கிறார்:

''யாம் சுற்றத்தையும் பற்றையும் விட்டோம்! துன்பமும் இன்பமும் நீங்கினோம்! வெற்றுடலின் மதிப்பை மடித்தோம்! செல்வத்தை வெறுத்தோம்! சீற்றத்தையுந் தருக்கையும் முனிந்தோம்! நல்வினை தீவினைக்ளைத் தீர்ந்தோம்! என்று முதலெனில் எம்பெருமானார் எம்மை ஆட்கொண்ட அன்று முதலாகவென் றறிக! இனி எமக்குத் தந்தையுந் தாயும் ஆசிரியனும் சங்கரரே! பற்றின்மையே மனைவி! மைந்தர் பல வுயிர்களுமே! உறவினர் குற்றமற்ற உமைபங்கர் அடியாரே! முடிவற்ற ஏழு பிறப்பும் எமக் கினிப் பகையானவை. இவ்வாறு எம்மை யிறைவர் ஆட்கொண்ட வன்றே அறிந்தோம்! மற்றும் ஊரெங்குஞ் சமைத்த சோறு நம்மதேயாகும். கடல்சூழ்ந்த உலகெங்கும் தரையே படுக்கையாகும். அணியும் ஆடை கோவணமேயாகும். சிறப்புமிக்க கலவைச் சாந்து திருநீறேயாகும். அழகிய அணி சிவமணியேயாகும். இவ்வாறு நீரணிந்த சடையார் ஆட்கொண்ட அன்றே ஆயின. இனி இறப்பு வரினும் வரட்டும்; உயிரிருப்பினும் இருக்கட்டும்; அரசன் ஒறுப்பினும் ஒறுக்கட்டும்; உவகை ஊட்டினும் ஊட்டட்டும்; வானிலே சிறப்புக் கிட்டினுங் கிட்டட்டும்; நரகத்திலே வலிய விடினும் விடட்டும்; ஒருபோதும் நம்பரை நாம் மறவோம். பழவினை வந்து விளைந்தால் எவர் மாற்றுவார்?''

அறிவூட்ட வந்தவர்கள் வாயடைத்துப் போயினர்.

---

௩௯. நரி பரியாக்குதல்

வாதவூரரை வருத்தினன் மன்னன்

மற்றைநாள் வைகறையிலே உறவினராகிய பற்றையெலாம் விலக்கித் தூய்மை பெற்றிருந்த வாதவூரரை மன்னவன் வரவழைத்தான். "இன்னும் வெற்றிப் புரவிகள் ஏன் வந்தில?" என வினவினன். "மற்றும் மூன்று நாள் பொறுங்கள்," என்று கேட்டுக்கொண்டார் மணிமொழியார். "மேலும், பணியாளரை வரவழைத்துப் பரிகளுக்கு வேறு குதிரைப் பந்திகள் அகலமாக வகுத்தல் வேண்டும். தண்ணீரூட்டக் குளங்கள் தோண்டவேண்டும். நகரெங்கும் அணிசெயல் வேண்டும்," என்று மன்னனிடம் வேண்டிக் கொண்டார். மூன்று நாட்களிலே குதிரைப் பந்திகளுங் குளங்களும் அமைந்தன. நகரும் அணிபெற்றது.

மூன்று நாட்களும் முடிந்தன. "இன்னுங் கண்டிலோமே பரிகளை!" என மன்னன் சினங்கொண்டான். வாதவூரரை விளித்துச் சீறினன். "என்று வரும்!" என இடித்து வினவித் தண்டம்புரியுந் தறுகணாளரைக் கூவினன். "இவனைக் கொண்டுபோய் ஒறுத்துப் பொன்னை வாங்குமின்," எனப் புகைந்தான்.

பாண்டியன் சீற்றத்தை நோக்கி அஞ்சிய ஒறுப்பாளர், சூழ்ந்த பாசமென வளைந்து வாதவூரரை அழைத்துச் சென்று, "இனிப் பொன்னுக்கு வழியென்ன?" என்று அதிர்ந்து சீறினர். குற்றமற்ற தூயவரான வாதவூரர் தலைமீது கல்லை யேற்றினர்.

நம் வாதவூர் வள்ளல் சிறிதும் வருந்தாமல், இமய வில்லியாரான இறைவர் திருவடிகளைச் சிந்தையிலே சேர்த்துக் கண்டிருந்தார். இறைவரோ தம் அடியார் சுமையைத் தாமே யேற்றனர். அடைந்த அடியார் சுமையை அவரலாமல் எவரேற்பார்?

கல்லின் பொறை தோன்றாமற் கண்ணுதலின் திருவடி நீழலிலே நின்ற பெரியாரை நோக்கிய ஒறுப்பாளர், 'இதுவு

மொரு மாயமே!' என உன்னிக் கொடுஞ் சீற்றத்துடன் மறை முடியை யறிந்தவரின் கைகால்களில் கிட்டி கட்டினர். அக் கொடுமையையும் அஞ்சாமல் சிவனார் திருவடியை அகத்தி லெண்ணி யேற்றனர்.

கயவர்கள் இன்னுங் கடிதொறுப்பதைக் காண்பது முடியாமற் கதிரவன் ஒளிகுன்றி மயங்கி மேலைத்திசையிலே மறைந்தான்.

இரவு வந்தது—சிறையிலே சேர்ந்தார்

சுந்தரவிடங்கப்பெருமானார் தம் அடியார் துயரை அகற்ற நேரே வந்தாற்போலச் செவ்வானம் எழுந்தது. மாலைப்பிறை அவருடைய மார்பிலே அசையும் பன்றிக் கொம்பென விளங் கியது வான உடுக்களெல்லாம் மலரவன் வெண்டலை மாலை யென வயங்கின. சுழித்துவரும் பிறவித் துன்பக்கடலிலே ஆழ்ந்து கழியுங் காலமெல்லாம் காக்கும் முக்கண்ணரின் திருவடியை வழிபடும் அடியவரென நினையாமல் அருஞ் சிறையிலே வைக்கும் பாண்டியனுடைய பழிபோலக் காரிருள் பரந்தது.

இரவு வந்தவுடன் காரிருள் புகுந்த சிறைக்கூடத்திலே இரும்பினாலே தளைத்துத் தவத்தைச் சிறையிட்டாற்போலச் செந்தீப்போன்ற சினக்கண்ணரான ஒறுப்பாளர் சிறைப் படுத்தினர். கொடிய சிறை வெள்ளத்திலே ஆழ்ந்த அடிகள் பூமேலிருந்தவனுங் கடலிற் கிடந்தவனுந் தேடிய நடன மலரடியைப் புணையாகக்கொண்டு துன்பவேலையைக் கடந் தனர். கங்குற் கடலுங் கடந்தது.

வைகறையிலே எல்லையற்ற பேரழகரை அங்கயற் கண்ணியாருடன் திருப்பள்ளி யுணர்த்த அடியார் சூழ்ந்தனர். அவர்கள் வாழ்த்தும் ஒலியும், மங்கல சங்கின் ஒலியும், நான்மறையோதும் ஒலியும் வாதவூரடிகளின் செவிகள் ஆரவந்து நிறைந்தன. அவ்வொலியைப் பருகிப் பருகிக் களை தீர்ந்தார் நம் அடிகள்.

கதிரவன் எழுந்தான்

பேரின்ப அறிவொளியான இறைவர் அடியவர்க்காக நாத முரசொலிக்க நரிப்பரி வீரர்சூழ் மறைப்பரிமீது தெருவிலே வருதலைக் காணுங் காதல் கொண்டவனைப்போலக் கதிரவன் கீழைத்திசையிலே கிளர்ந்தான். அங்கயற்கண்ணம்மையாருடன் முறுக்கவிழ்ந்த நறுமண மலர்ப்பள்ளியிலே துயிலுணர்ந்திருந்த சோமசுந்தரர் வீற்றிருக்கும் விண்ணிழி விமானத்தை நோக்கித் தாமரைக் கைகுவித்து மலர்க் கண்ணீர் வார வாதவூரர் பாடினார்.

"எந்தாய் ! அனைத்துலகும் ஈன்றாய் ! எத்தேவர்க்குந்
தந்தாய் ! செழுங்குவளைத் தாராய் ! பெருந்துறையில்
வந்தாய் ! மதுரைத் திருவால வாயுறையும்
சிந்தா மணியே ! சிறியேற் கிரங்காயோ ?"

"மூவா முதலாய் முதுமறையாய் அம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கொடியாய் ! அடியேற் கிரங்காயோ ?"

"முன்னும் முதுபொருட்கும் முன்னும் முதுபொருளாய்ப்
பின்னும் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய்த்
தென்னா ! மதுரைத் திருவால வாயுறையும்
என்னா யகனே !எளியேற் கிரங்காயோ ?"

"மண்ணும், நீரும், தீயும், காற்றும், வானும், இருசுடருமாகி இவற்றிற்கு வேறுமாகினீர்! பண்ணாகி யிசையாகிப் பாட்டுமாகி யெங்குங் கண்ணுமாகினீர்! எனினும், என் துன்பங் கண்டிலீரே! என்னென்பேன் ! பொங்கிவருஞ் சீற்ற மிக்க சிங்கம்போல அச்சுறுத்திவரும் கூற்றுவன் உலகத்தும் செய்யாத கொடுந் துன்பத்திலே அகப்பட்டு நான் மயங்குவதை யறிந்தும் வந்து அஞ்சாதே யென்றிலீர் ! எங்குந் திருச் செவியுடைய தங்கட்கா என் முறை கேளாதுபோம்?

"அருட்கயிறு பூட்டி, இணைமலர்த்தாளை யெளியேன் முடியிலே சூட்டி, அடியாருள் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டு அருமை செய்த தாங்கள் வெய்யவர் ஆட்டி

அலக்கழித்துத் தமியேனை வருத்தல் கண்டும் கைவிட்டிருந் தால் ஏற்றுக்கொள்வார் வேறியார்? ஊரிலுள்ளோர் தங்களை நகைப்பதை யறியீர்! தங்களடிமையான நான் அயர்வதை யறிந்தும் வந்திலீர்! மன்னன் பணியாளர் இழைக்குந் துன்பத்தின் நோயைப் பாரீர்! தங்கள் அருளும் இதுவோ?''

நரிப்பரியும் பரிவீரர்களும்

இவ்வாறு வருந்தும் அடிகளின் முறையீடு சென்று தாயின் செவியிலே குழவியின் அழுகை நுழைந்தாற்போலச் சோமசுந்தரர் திருச்செவியிலே நுழைந்தது. குன்றவில்லராகிய கூடலிறைவர் அன்றே அடியார்க்கருள் புரிய அகத்துட் கொண்டார்.

நந்தி முதலாய சிவகணத் தலைவரை அழைத்தார். அவர்கள் வந்து பணிந்து நின்றனர். ''இன்று ஆவணி மூலநாள் அன்றோ? பாண்டியனுக்குப் பரிகளைக்கொண்டு செல்லல்வேண்டும். காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரி களாக்கி நீவிரெலாம் பரிவீரராகுமின்! யாமும் பரிவீரராக வருவோம்,'' என்று பகர்ந்தருளினர்.

முதல்வர் அருளியவாறே கணத்தலைவரெலாம் பரிவீர ராயினர்! நரியெலாந் திரண்டு பரியாயின! அவ் வீரர்கள் செம்பட்டைத் தூக்கிக் கட்டினர்; சுரிகையைச் செருகினர் இடையிலே; தோலாலான செருப்பைக் காலிலணிந்தனர்; இருப்புக்கவசம் அணிந்தனர். அச்சமுண்டாக நோக்கும் பார்வையுடன், நெற்றியிலே முப்பட்டையான திருநீற்றுடன், இடிபோன்ற நகைப்புடன், அனன்று எழுஞ் சினத்துடன் காணப்பட்டார். மேலும், வட்டமாகிய பரிசையும் கூரிய வாளும் ஏந்தியிருந்தனர். சிலர் நீண்ட உலக்கையும், சிலர் வில்லும் அம்பும் ஏந்தியிருந்தனர்.

சிலர் சிவப்புத்துணிப் போர்வையர்; சிலர் பச்சைத் துணியாலே கட்டப்பட்ட தோளர்; சிலர், காராடைப் போர்வையர்; சிலர் பசும்பொன்னிறமான ஆடையாலே ஆகிய குப்பாயத்தினர் (சட்டையர்).

பிச்சமுடைய குடைகளும், கவரிவால்கொண்டு தைத்த குடைகளும், சுற்றிலுஞ் சல்லிதொங்குங் குடைகளும், முத்துக்குடைகளுமாக எங்கும் விளங்கின.

மறைப் பரிவீரர்

சோமசுந்தரரும் மறைப்பரிமீது எழுந்தருளினர். அப் பரி அறம், பொருள், இன்பம், வீடெனும் நான்கு தாள்களையுடையது; ஞானகாண்டம் கருமகாண்ட மென்னும் இரு செவிகளையுடையது; பரம் அபரம் எனும் உணர்வாகிய கண்களை யுடையது; விதியாகிய முகமுடையது; விலக்காகிய வாலையுடையது; ஆகமமே புறவணியாகக் கொண்டது; மந்திரங்களே சதங்கைகளாக அணிந்தது; ஞாயிறு திங்கள்களே அங்கவடிகளாக அமைந்தன; பிரணவமே கடிவாளமாகப் பிறங்கியது; உபநிடதமே கலனையாக உற்றது. அப் பரியின் அழகை எங்ஙனம் எவர்தாம் உரைப்பர்? அதன்மேல் அடியவரின் பாசவிலங்கைப் பறிக்கும் பரம்பொருள் அமர்ந்தார். மந்திரத்தலைமை பூண்ட வாதவூரர்பொருட்டும் பாண்டியனுடைய பிறவித்துயரறுக்கவும் குதிரை வீரராக அவர் கொண்ட கோலம் என்னே!

வார்கழலைத் திருவடியிலணிந்தார். மறையாகிய உறையிலிருந்து எடுத்த ஞானவாள் அகவிருளையேயன்றிப் புறவிருளையும் போக்கி யொளிர இடையில் அணிந்தார். சாய்ந்த கொண்டை—திருமுடிச்சாத்து—வைர உருத்திராக்கக்கண்டி — தொடிகள் — குழைகள் — முப்பட்டைத் திருநீறணிந்த நெற்றி—வெண்மையான தூய ஆடை—காப்பு — அழகுசெய்தன. "பிறப்பில் விருப்பமுடையோர் வராதீர்கள்! வெறுப்புடையோ ரெல்லோரும் விரைந்து வாருங்கள்! அடியரை வருத்தும் நோய்களைக் களைவார் நம் இறைவர். இவர் ஒருவரே பிறவி யறுக்கும் பெருமானுர்," என்பனபோலச் சிலம்பொலித்தது.

"கங்கையைச் சடையிலே மறைத்தீர்! அவளைப் போலவே எங்களையும் மறைத் தருள்க!" என வேண்டிக் காவேரி துங்கபத்திரை முதலான ஆறுகள் சூழ்ந்து

வருவன போலக் கவரியுந் துகிற்கொடிகளும் புரண்டன. வெண்கொற்றக் குடை நிழன்றது. பதினெண் புராணங்களும், "நாம் கூறும் இறைவர் இவரே! மறை கூறும் பரம்பொருள் இவரே!" என வாய்விட்டுக் கூறுவன போலப் பதினெட்டுவகை இயங்களும் ஒலித்தன.

நடந்தன புரவிகள்

இந்த மாயப் பரிகள் மேற்றிசை நோக்கி நடந்தன. இறைவரின் மறைப் புரவி நடுவே நடந்தது. எழுந்த புழுதி வானை மறைத்துக் கதிரவனை மயக்கியது. அவை தம் நடையினாலே மேட்டைப் பள்ளமாக்கின; பள்ளத்தை மேடாக்கின; தம் வாய்நீரைக் கொப்பளித்து வெள்ள மாக்கின; எழுந்த புழுதியால் அவ் வெள்ளத்தை வற்ற வைத்தன! அவற்றால் எழுந்த புழுதி வானிற் பரவி வான் கங்கையை வையை ஆக்கியது! கதிரவன் பச்சைப் புரவி களைச் செம்பரிக ளாக்கியது! திக்குக் களிறுகளின் முகத் திலே சிந்தூர மிட்டாற் போலாக்கியது! அம்மட்டோ? நண்பகலை மாலையாகவும் ஆக்கியது! நிலம் திசையும் வானும் மறைந்த புழுதியில் மறைந்தது! எனவே, குதிரைகள் செல்வதைக் குதிரைகளின் கழுத்திலிருந்த சதங்கைகளின் ஒலியாலும் விரும்புங் குதிரைகளின் குரலொலி யினாலுமே அறிந்தனர் மக்கள்; கண்ணாற் காண இயல வில்லை.

கண்ட மக்கள், 'அலையெறியும் முத்துகள் இவை; விலாழி (வாயிலிருந்துவரும் நுரைநீர்) அல்ல' என்றும் 'குதிரைகள் கனைப் பொலியன்று; கடலோசை' என்றும் மயங்கி வருகின்ற புரவிகளைக் கடலெனவே—முன் இந்தி ரன் வரவிட்டதைப் போன்று இன்றும் விட்ட கட லெனவே—கருதினர்.

ஒருவாறு குதிரைகளென் றறிந்தனர். "இக் குதிரைகள் இவ்வுலகிலுள்ளவை யல்ல. இந்திரன் பரியாக இருக் கலாம்! இல்லை! இல்லை! அஃது ஒன்றுதானே? கதிரவ னுடைய புரவிகளாக இருக்கலாமோ? அவ்வாறாயின்

அவை பச்சைப் புரவிகள்! இவை பலவகை நிறமுடன் உள்ளன! இவை எங்கிருந்து வந்தவை?'' எனத் திகைத்தனர்.

அவர்கள், ''இக்குதிரைகள் மறையின் (நூலின்) முறைப்படி வரும் வன்னி (குதிரை) யாகும். பொன்னி நாடன் மனத்தையும் பனந்தார்ச் சேரன் உளத்தையும் சுடும். மந்திரியாரை வாட்டும் வழுதியின் அகத்தையும் இனிச் சுடும்,'' என்றனர். ''மேலும், முற்காலத்தில் ஓர் அமைச்சனுக்காகப் பாண்டியன் முன்னாலே அளவற்ற பரிகளுடன் ஒரு வீரன் வந்ததைப்போல இவ் வழுதியின் செருக்கை யடக்க இன்றும் இவ் வீரன் பரிகளுடன் வந்தான் போலும்!'' என்று பேசிக் கொண்டனர்.

தாவிவரும் பரிகள் ஐம்பொறிகளைப் போன்றன. பரிவீரர்கள் உளம் போன்றனர். நடுவில்வரும் மறைப் பரி அவ்வுளந் தோறும் இடைவிடாது நின்று செலுத்தும் உயிரைப் போன்றது.

மதுரை மாநகர் காதமிருக்கும் எல்லையிற் பரிகள் வந்தன.

வந்துவிட்டன பரிகள்!—மறுமுறையுந் தோல்லை!

உணர்ந்தவர்கள் ஓடினர்; நகரை யடைந்து வானளாவும் மணிமாடத்திலே சிறையிலே துன்புறுகின்ற வள்ளலாரிடம் மகிழ்வொடு, ''அரசு நெறி மாறாத அமைச்சர் தலைவரே! பலநிறக் கடல்கள் வருவனபோலக் குதிரைகளெல்லாம் வருகின்றன! இப்போது மதில்வாயிலிலே நுழைந்திருக்கும்! அரசருக்குக் கூறுங்கள்!'' என இசைத்தனர்.

அந்தணர் பெருமான் சென்று முகிலைத் தளையிட்ட பாண்டியர் பெருமானிடஞ் செப்பினர். அரசன் மனம் அலையெறியுங் கடலென மகிழ்ந்தது; உடல் பருத்தது. அமைச்சர்க்கு மணியாரமும் உயர்ந்த ஆடைகளும் அளித்து மகிழ்வித்தான். அவையை யடைந்து அரியணை

யிலே அமர்ந்தான். காந்தளனைய விரலினர் கவரிகொண்டு வீசினர். அமைச்சரும் பிறரும் சூழ அமர்ந்தனர்.

பரிகளை எதிர்நோக்கிச் சிறுபோது அமர்ந்திருந்தான். சிவனார் திருவிளையாட்டாலே பரிகள் வரவு தாழ்த்தது. வழுதி மனம் நாணினான். விழிகளிலே கனல் சிந்த அருகிலுள்ள பணியாளரை நோக்கினான். அவன் குறிப்பறிந்த பணியாளர் மந்திரத் தலைவரைக் கொண்டு சென்று நினைவிற் கெட்டாத வகையிலே ஒறுத்தனர்.

வாதவூரர் மனம் வருந்தி மங்கைபங்கரைத் தொழுதார்:

"பூவார் முளரிப் புத்தேள் அறியா நெறிதந்தாய் !
பாவார் தென்சொற் பனுவல் மாலைப் பணிகொண்டாய் !
தேவா ! தேவர்க் கரசே ! சிறியேன் உறுதுன்பம்
ஆவா என்னாய் ! அஞ்சேல் என்னாய் ! அறனேயோ ?"

"நெஞ்சே உரையே செயலே யெல்லாம் நினவென்றாய் !
வஞ்சே போலும் ! அஃதேல் இன்று வாராயோ ?
பஞ்சே ரடியாள் பாகா ! கூடற் பரமேட்டீ !
அஞ்சேல் என்னாய் ! இதுவோ அருளுக் கழகையா !"

"காவி நேருங் கண்டா ! நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாக் கொண்டேன் பணிகொண்டாய் !
ஆவி யோடிவ் வுடலும் நினதே யன்றோ ? இன்
றேவி வாளா திருந்தால் யார் ? என் உடையானே !"

குதிரைகளின் சதங்கையொலி—உண்மையிலே குதிரைகள் !

கலங்கும் அன்பரின் செவியிலே—வருடுங் கன்றின் செவியில் அதன் தாய்ப்பசுவின் கனைகுரல் ஒலிபோல—சின்னமுங் காளமும் காகளமும் எழுப்பும் ஒலி விழுந்தது. புரவிகளின் காலடிச் செந்தூள் திசையெலாம் விழுங்கியதையுங் கண்டார்.

பாண்டியனும் அறிந்தான். வாதவூரரை அழைப்பித்தான். அளவிலா அன்புகாட்டி, "எம் குற்றமற்ற

அலுவல்களை நும்மைப்போற் செய்யத்தக்கோர் யார்?'' என முகமனுரைத்து, அளவளாவி யிருந்தான்.

அப்போது பரவிய இருட் குழுவை யோட்டிப் பல் கதிர் பரப்பித் தோன்றுஞ் செங்கதிர்களையும் வானவரையும் போலச் சிறந்த தோற்றமுடைய பாகருடன் மாயப் பரிகளெல்லாம் வந்தன.

வழுதியின் மகிழ்ச்சியை என்னென்பது! தன் முன்னோருங் காணாத காட்சியுடன் புரவியை நோக்கினான். இந்திரன்போல் இமையா நாட்டம் ஆயிரம் பெற்றாலும் கண்டமையோம் எனக் களித்தான். அருகிலிருந்த வாதவூரரை நோக்கி, "இந்த வயப்பரி வீரரிலே சிறந்தவர் யார்?'' என வினவினான். எல்லாம் அறியும் பேறு பெற்ற அமைச்சரோ, 'யான் அறியேன்!'' என்றார்.

குதிரை யேற்றம்

அண்டங்களுக் கெல்லாம் ஆதரவாகத் தாங்கும் இன்பப் பேரொளியார், தமக்கு மறைப் பரியை ஆதரவாகக்கொண்டு, எக்காலத்தும் அசையாத தாமரைச் சீறடியசைய, அழகிய கையிலே குதிரையின் கடிவாளக் கயிற்றைப் பற்றிக்கொண்டு, அரசனுக் கெதிரே வந்து, "அரசே! எங்கள் பரியேற்றம் பார்த்திடுக!'' என்றார்.

குதிரைகளைச் செலுத்தும் ஐங்கதிகளையும் பதினெட்டுச் சாரிகளையும் அவற்றின் வேறுபாடு நன்கு விளங்க, அரசனும் அவையோருமே யன்றி எட்டுத் திக்கிலுள்ளவரும் வானவரும் வியக்கும்படி தம் மறைப் பரியைச் செலுத்திக் காட்டினர், செல்லாமலே எவ்வுலகத்தையுஞ் செலுத்த வல்ல சிவபரம் பொருள். மற்றவர்களுந் தத்தம் பரிகளை நடத்திக் காட்டினர். குதிரை வீரர்களை நோக்கி, "உங்களில் எவர் தலைவர்?'' என வினவினான் பாண்டியன். இறைவரைக் காட்டி இவரே யெனச் செப்பினர் மற்றையோர்.

சுட்டிக் காட்டற்கரிய பேரொளியார் மறைப் புரவியுடன் மன்னன் முன் வந்தார். அவருடைய அருணோக்கம் பெற்றவுடன் பாண்டியன் தன்னை மறந்து மயங்கி யெழுந்து தலைமிசைக் குவித்த கையுடன் நின்றான். உடனே, அவராணையாலே மறைப்புண்ட உலகறிவு தோன்றி, "இன்று ஒரு குதிரை வீரனைக் கண்டு கைகுவித் தெழுந்து நின்ற நிலை எப்படி வந்தது?" என வெண்ணித் தன் இருக்கையிலே திரும்பவும் அமர வெள்கி நின்றான்.

அவன் முகத்தை மறைப் பரிவீரர் நோக்கினார்.

"பொன்மலையனைய தோள் வீரரே! தங்கள் பொருளை யெல்லாம் தங்கள் சொல் மறாத அமைச்சர் கொண்டுவந்து நமக்கும் நம்மை விட்டு விலகாத தமருக்கும் நிறைய வழங்கினார். ஆகவே, வானவர்க்கே யல்லாமல் மனிதர்கட்குக் கிட்டாத—அறிஞரிடும் விலை மதிப்பைக் கடந்த—நூல்களிற் கூறிய இலக்கண முள்ளனவாக—உங்கட்கு வந்தன பரிகள்!

"மற்றொரு வழக்கம்—குதிரை வணிகமுறை—கேளுங்கள்: இப் பரிகளை இன்று எம்மிடம் நீங்கள் கயிறு மாறித் தங்கள் பரிகளாகக் கொள்வதால், நாளைக்கு இவை எப்படியிருப்பினும் நீங்கள் எம்மிடம் கூறிக்கொள்ள முறைமையில்லை. இதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும்!"

வழுதி அவ் வழக்கை மகிழ்வுடன் ஏற்றான்.

"எம் புகழ்பெற்ற அமைச்சர்களிலே சிறந்தவரான வாதவூரர் இணையற்ற திறமுடையராய்த் தங்களிடம் நட்புக் கொண்டதனாலே மேம்பாடுடையவராக ஆயினர்."

கயிறு மாறிக் கொடுக்குங் கண்ணுதற் பரிவீரர் பாண்டியனுக்குப் பரியிலக்கணமும் பகரத் தொடங்கினார்:

பரியிலக்கணம்

"காயும்வேல் மன்ன! ஓரீக் கடும்பரி அமையம் வந்தால்
ஞாயிலுந் தாண்டிச் செல்லும் நாட்டமும் நுழையாச் சால
வாயிலும் நுழையுங் கண்ட வெளியெலாம் வழியாச் செல்லும்
தீயவெம் பசிவந் துற்றால் தின்னாத எனினுந் தின்னும்."

[ஓரிக்கடும்பரி மன்ன! (ஓர் இக் கடும்பரி) இந்த விரைந்து செல்லும் குதிரை, எனவும், 'ஓரியாகிய கடும்பரி' (ஓரி—நரி) எனவும் இருபொருள் கொள்க! ஞாயில்—மதிலுறுப்பு. சால வாயில்—சாளர வழி]

"குற்றமற்ற இலக்கணமுடைய புரவி யொன்று ஒருவனிடம் வந்தால், விரைவிலே திருமகள் வருவாள்; வளமிகுஞ் செல்வம் வளரும்; புகழ் ஓங்கும்.

பாடலம் என்னும் வகையைச் சேர்ந்தவை நெய்ப்பசையுடைய மாந்தளிர் நிறமுடைய நாவின; உயர்ந்த குளம்பின; ஒழுங்காக ஒத்த பற்களுடையன; மார்புங் கழுத்தும் பாம்பின் படம் போன்றன.

கோடகம் எனும் வகையைச் சார்ந்தவை பரந்த நெற்றி—குடுமிபோல ஒரே நிறமுடைய பிடரிமயிர்—குற்றமற்ற முக்கோணமான அழகிய முகம்—உடையவை.

இவுளி என்பவை போர்முகத்திலே வாளினுல் வெட்டினும் எதிர்க்கும் வீரமுடையவை; குரங்கு, வேங்கை, யானை முகில், நரி, சிங்கம், சரபம், முயல் ஆகிய இவற்றின் கதியுடையவை.

வன்னி யெனப்படுபவை உயரமும் நீளமும் உடையன. சங்கு, வெள்ளைச் சருக்கரை நிறமுடைய தூய விலாழியுடையன; பிங்கல நிறமும் முகில் நிறமுமுடையன.

குதிரை யெனப்படுபவை உறுதியான கழுத்திலே சிறந்த தெய்வமணி யெனப்படும் வலஞ்சுழியுடையவை; *எண்மங்கலமும் பஞ்சகல்யாணமுமுடையவை.

பரி யென்பவை குங்குமம் கருப்பூரம் அகிற்குழம்பு கத்தூரி யென மணங்கமழும்; சங்கும் முகிலும் சரபமும் சிங்கமும் போலக் கனைக்கும்.

கந்துகம் என்பவை நான்கு கால்களும் கடைந்தெடுத்தாலொத்தவை; சுழலும்போது கொள்ளி வட்டம் போன்று காண்பவை ; தன்மீதிருப்பவன் காலில் அடங்குந் தன்மையவை.

---

* எண்மங்கலம் பஞ்சகல்யாணம் என்பவை பின்வரும்.

மதிலையும் மலைக்கோட்டைகளையும் ஆற்றையும் தாண்டும் வலிமையுடையனவாய் இங்குக் கூறிய இலக்கணமுங் கதியும் நிறைந்த புரவிகள் இங்கு வந்துள்ளன. இவற்றின் வயது எட்டு. பகைவரை வாட்டும் இப் பரிகள் தங்களாற் செலுத்தத் தக்கவை.''

சிவபரம்பொருள் இங்ஙனம் இயம்பித் திரும்பித் தம் வீரர் முகத்தை நோக்கினர். உடனே வீரர்கள் அசுவ நூலுக்கெலாம் எல்லை காட்டுவதுபோலக் காண்பவர் அறிவும் பிற்படப் புரவிகளை முடுக்கினர். வேப்பந்தாரான் வியப்படைந்தான். உழுவலன்புடையராய் உடனிருக்கும் அமைச்சர் முதலானோரைப் பார்த்துத் தலையசைத்துப் புன்னகை பூத்தான். அவன் உள்ளத்திலே உவகை பொங்கியது.

சிவ வீரரும் புரவியை நடத்தினர். ஒரு நொடிப்பொழுது தான் முடுக்கினர்! இருவகைச் சாரி (வலசாரி இடசாரி) யையும் கொண்டு வட்டமாய் வரும்போது கொள்ளி வட்டம் போல் மறுகிலே இப் புரவி ஒன்றே நிலைநிற்பதைப் போன்ற தோற்றங் காட்டினர். இவ்வாறு சுற்றிவரும் புரவி, முற்காலத்திலே வங்கியசேகர பாண்டியன் வேண்டத் தம் திருக்கையிலே காப்பாக இருந்த பாம்பைப் பரமனர் விட்டு நகரெல்லை காட்டியது போன்றிருந்தது.

மற்றும், பல நிறமுடைய புரவிகள் மறுகிலே பின்னிய பாம்புபோல வட்டமாய்ப் பின்னிச் செல்லுங் காட்சி தனக்குவமையில்லாத மதுரையாகிய மங்கையின் கையிலே சூழ்ந்த பலநிற மணிவளையல்கள் போன்றன.

பிறைநுதற் பெண்கள் இடித்த பொன்னிறமான சுண்ணப் பொடி சிந்திக்கிடக்கும் மறுகிலே நடக்குந் திண்ணிய குதிரைப் பந்தியிலே எழுந்த துகள் பொன்னகரிலே பரிகள் உந்திச் செல்லும்போ தெழுந்த பொற்றூள்போல இருந்தது.

இவ்வாறு வானவரும் மன்னவரும் மதுரை மக்களும் எல்லோரும் மகிழப் புரவியைச் செலுத்தி வழுதியின் முன்

தம் வீரருடன் கூடலம்பதி யிறைவர் வந்து நின்றார். பிறகு பரிகளின் வரலாற்றைப் பகர்ந்தார்:

"இப் பரி காம்போசம், இம் மா மந்தரம், இப் புரவி காந்தாரம், இக் கற்கி வான்மீகம், இக் கந்துகம் சிந்து, இந்தக் கனவட்டம் பாஞ்சாலம், இக் குதிரை துளுவம், இந்தத் துரகதம் இமயம், இந்த மண்டிலம் கலிங்கம், இப் பாடலம் ஆரியம், இந்த அச்சுவம் கூர்ச்சரம், இத் துரங்கம் கேகயம், இந்தக் கொய்யுளை யவனம், இக் கொக்கு மக்கம், இப் போருக்குரிய இவுளி வனாயுசம், இந்தப் பாய்மா பல்லவம், இக் கோரம் சவ்வீரம், இவ் வன்னி மராட்டம், இக் கோடகம் வாசந்திகம், இந்த அயம் காஸ்மீரம், இந்த உயர்ந்த கோணம் மாளவம், இக் குந்தம் கந்தரம், இந்த வெற்றி அரி சவுராட்டம், இந்தத் துரகம் தீவாந்தரத்தது, இக் குரகதம் குருநாடு, இவ்வாறு பரவிய பல வேறு நாட்டினுமிருந்து வந்தவை இங்குள்ள பரிகள்.

"இவற்றை யெல்லாம் அமைச்சர் கொடுத்த பொருளின் காதலாலே இவர்களெல்லோருங் கொணர்ந்தனர்.

"இப் பரிகளிலே வெண்மை, செம்மை, பொன்மை, கருமை என வேறுபட்ட நிறமுடையனவும் கலந்த நிறத்தனவும் வேறு வேறான மரபினவும் ஐவகை நிறத்தனவும் ஆகிய இவற்றின் சிற்பிலக்கணத்தைச் செப்புகின்றோம்," எனப் பரிமேலழகராய் வந்த பரமனார் மறுமுறையும் பகர்கின்றார்:

"வெள்ளி, முத்து, பால், திங்கள், சங்கு, வெண்பனி ஆகிய இவற்றைப்போல்வன வெண்புரவிகள். மாதுளமலர், செம்பஞ்சுக் குழம்பு ஆகிய இவற்றைப் போன்ற நிறமுடையவை செம்பரிகள். கருமுகில், குயில், வண்டுகள், இவற்றைப் போன்றவை கருங்குதிரைகள். நெருப்புநிறம் கோரோசனை நிறமுமுடையவை பொற்பரிகள். இந் நான்குங் கலந்த நிறம் மிச்சிர நிறம். முகம், மார்பு, உச்சி, வால், நான்கு கால்கள் எனும் எட்டுறுப்பும் வெண்மை நிறமுடையவை

அட்டமங்கலம். தலையும் வாலும் மார்பும் நீங்கலாக (உச்சியும் நான்கு கால்களும்) வெண்ணிறமுடையவை பஞ்சகல்யாணி.

அழகிய கழுத்திலே வலஞ்சுழி யிருந்தால் அதனை அறிஞர் தெய்வமணி யென்பர். முகம், தலை, நாசி, மார்பு ஆகிய நான்கினும் இவ்விரண்டு சுழியும் நெற்றியின் நடுவிலும் பிற்பக்கமும் ஒவ்வொரு சுழியும் இருப்பது நல்லிலக்கணம். இச் சுழியில்லாதது இலக்கண வழுவுடையது.

மார்பிலே விடாமல் ஐந்து சுழிகளையுடையது சிரிவற்சம். நெற்றியிலே இரு சுழிகளேனும் முச்சுழிகளேனும் இருந்தாலும் நல்லது; அன்றி நான்கு சுழிகள் வலம்புரியாயிருப்பினும் நல்லது. மற்றும், முன்னங் கால்களின் மூலத்திலே இரு சுழிகளிருப்பினும் நன்றே. நடுக் கழுத்திலே இரட்டைச் சுழிகளையுடையது தன் தலைவனுக்கு வறுமையையும் அளவற்ற இடுக்கண்களையும் இறப்பையுமே தரும். அவை கணைக்கால்களி லிருந்தால் அச்சமும் இடுக்கணும் சிறையிலே தளைபூணலும் அளிக்கும். மேலுதடு, முன்காலடி, கவுள், முழந்தாள் இந் நான்கினுஞ் சுழிகளிருந்தால் தலைவனை வதைக்கும். இத்தகைய சுழிக்குதிரை குதிரைப் பந்தியிலிருக்கினும் குற்றம்.

பரிகளுக்கு வயது முப்பத்திரண்டு; பருவம் பத்து. ஒரு பருவத்திற்கு மூன்றுண்டுகளும் இரண்டு திங்கள்களும் பன்னிரண்டு நாட்களும் ஆகும்.

மற்றொருவகை இலக்கணம் :

எத்தகைய நிற வேற்றுமையிருப்பினும் வெண்மை கலந்திருந்தால் அப் பரி நல்லது. கருங்குதிரைக்கு வயிறேனும் மார்பேனும் சிவப்பாயிருந்தால் வெற்றியுடையது. அவ்விடங்களிலே வெண்மையிருந்தால் அக் குதிரையின் பெயர் வாருணம். அதுவும் வெற்றியைத் தரும். பிடரி வெளுப்பாயிருந்தால் மகவைத் தரும். மார்பு வெண்மை மகிழ்ச்சி தரும். அழகிய கழுத்திலே வெண்மை பொருளளிக்கும்.

முகத்தில் வெண்மை வெற்றி தரும். பின்பக்க வெண்மை நலனளிக்கும். இடப்பக்க வெண்மை மகவையும் வளர் செல்வத்தையும் நல்கும். வலப்புற வெண்மை பொருளையும் பல வகைத் தானியங்களையும் கொடுக்கும். முதுகு, வால், முகம் மூன்றும் வெண்மை வெற்றி தரும். நாபியிலிருந்து முன்புறமெல்லாம் கதிரவனெனச் சிவந்து, பின்புறம் முழுதும் திங்களென வெளுத்த புரவி பகலிலே வெற்றி தரும். முன்புறம் வெளுத்துப் பின்புறஞ் சிவந்த பரி, இரவிலே வெற்றி தரும். இவ் விருவகைப் புரவியும் இங்கு வந்துள்ளன.

புரவிகள் அடிவைத்தால் ஒத்தபந்துபோலவும், நின்றால் மலைபோலவும், கனைத்தால் அஞ்சாத சிங்கம்போலவும், விரைந்த செலவிலே காற்றுப்போலவும், மிதிக்கும் அழகிலே நாட்டியமாது போலவும், நடந்தாற் சிங்கமும் களிறும் போலவும் பெருமை பெற்றும், நற்குலப் பெண்டிர்போலக் கவிழ்ந்த முகமும் கரிய நெய்தல் மலரனைய கண்களும் கொண்டும், முகிலனைய நிறமும் கருநெய்தலென மணமும் நிறைந்தும், மலராலும் அகிலாலும் சந்தனத்தாலும் ஒளிவிடும் மணிப்பூண்களாலும் அணிசெய்தாற் குறையாத மகிழ்வுடன் இருப்பது உயர்ந்த பரியெனப் பரிநூலெல்லை கண்டோர் பகர்வர்.

உயர்தரப் பரிக்கு உயரம் நூறு விரல்—நடுத்தரப் பரிக்கு உயரம் எண்பத்து நான்கு விரல்—கடைத்தரப் பரிக்கு உயரம் அறுபத்தொரு விரல்—என்பர்.

எல்லையற்ற புகழுடைய மன்னரே! வீரர்கள் இப் பரியை வழிபட்டு வணங்கிக் கயிறு மாறுவார்கள்."

கயிறு மாறல்

பாண்டியன் மாணிக்கமாலையையும் சதங்கையையும் சிலம்பையும் அணிவித்து, மலர்மாலையும் சந்தனமும் இட்டு நறும்புகையும் விளக்குங் காட்டிப் பேரன்புடன் எதிர் நின்றான். முத்தொழிலால் மூவராகியும் அம் மூவர்க்கும் அறியவியலாத

முக்கண்முதல்வர் திருவாலவாய்ச் சிவனாரை நோக்கிக் கைகுவித்துக் கும்பிட்டுக் கயிறு மாறிப் பாண்டியனிடம் வாழி யென்று பரியைக் கொடுத்தருளினார்.

மறைப்பரி யொன்று தவிர மற்றைய மாயப் பரிகளை யெல்லாம் அளித்தார். அவற்றைப் பெற்றுக் கதிரவனைப் போல் விளங்குஞ் செழியன் காற்றையுங் கடலையுங் கொண்டு போவதுபோல அவற்றைக் கொண்டுபோய் அரண்மனையிலே பந்தியிலே சேர்ப்பித்தான்.

பிறகு குதிரை வணிகரான பரனார்க்கு வெண்மையான ஆடைகளைப் பரிசாக அளித்தான். பாணர்க்கு விறகாளாய்ச் சென்று தொண்டு புரிந்தவரா நாணமுறுவார்! வாதவூர ரன்பிலே ஈடுபட்டுப் பரியினின்றும் இழிந்து பெற்று, முடியிலே இரண்டாவது கங்கைபோல முடித்தார்.

பரமனாருடன் வந்த கணத்தலைவரான வீர ரெல்லாம் சீற்றத்துடன், “இந்த ஆடையை இறைவர் பரியிலிருந்திறங்கிச் சென்று வாங்காவிட்டால் என்ன! அடிகளுடைய கையோட் டையும் திசையாகிய ஆடையையும் பாம்பணியையும் அந்தப் புல்லிய பாண்டியன் கவர்ந்துகொள்வானோ?” எனத் தம்முள் கூறிக்கொண்டனர்.

பாண்டியன்மற்றைய வீரர்கட்கும் வெவ்வேறு நிறமுடைய ஆடைகளை அளித்தான். அவற்றை யெல்லாம் பெற்றுக் கொண்ட பின்னர், அன்பிற் சிறந்து அருள் வடிவாய் வந்த அண்ணலார் தம் கணவீரருடன் ஒருங்கே மறைந்தருளினார். தென்னவனும் வாதவூரர்க்குச் சிறந்த சிறப்புகளை நல்கி விடைகொடுத்துப் போக்கி நண்பகலிலே தன் அரண்மனையை அடைந்தான். மற்றையவரும் தம்மனை புகுந்தனர்.

௬௦. பரியை நரியாக்கி வைகையை யழைத்தல்

வாதவூரடிகளின் மனக்கவலை

நெருங்கிய பல்வகை மங்கலவொலியும் படைகளும் நிமிர்ந்துவர, நுண்ணிடை மடவார் எதிர்கொண்டு மங்கலப் பொருள்களை யேந்த, மன்னவன் நல்கிய வரிசையுடன் வாதவூரர் தம் மாளிகை யடைந்தார். உறவினரும் அவை யினரும் நண்பரும் வந்து உரிமையாலே கேட்டதற்கெல்லாம் தக்க விடையளித்து முகமன் கூறி விடுத்தபின்னர்த் தனி யிடத்திலே வைகினர் மணிவாசக வள்ளல்.

"கரந்தையை முடியிலே யணிந்த கண்ணுதலார் நாம் அன்று வேண்டிக் கொண்டவாறே நாங்கொண்டு சென்ற பொருளை யெல்லாம் பணிக்கேற்றார்; நம்மையும் பணி கொண்டார்; துன்பத்தைத் துடைத்தார்; மேலும், உயர்ந்த புரவிகளையும் உவந்தளித்தருளினர். எனினும், இன்னும் உலகை வெல்லத் தம் அருளை யூட்டும் பேரின்பங் கிடைக்கு மாறு எம்மைத் தவத்துறையிலே செலுத்துதல் வேண்டுமே!"

இத்தகைய ஆவல் தலைக்கொண்டதனாலே இம்மை மறுமை விழைவொன்று மில்லாமலே அறிவினுக்கறவாகப் பொருந்திய அழகிய நிறைந்த பேரின்ப வொளியின் மன்றி லாடிய சிவந்த மலரடியை மனத்திலே புதைத்திருந்தார்.

செங்கதிர் மறைவு—வெண்கதிரின் தோற்றம்

அப்போது, 'நாளைக்குக் கூடலிறைவர் அன்பரை யாள மண் சுமந்தருள்வதைக் காண வேண்டும்,' என்ற ஆவலுடன் நரிகளாகிய பரிகள் உண்டாக்கிய புழுதி தோய்ந்த மெய்யைக் கழுவிக்கொண்டு திரும்ப எண்ணிக் கதிரவன் மேலைக்கடலிலே முழுகினன்.

கீழைத்திசையிலே வெண்மதிக் கடவுள் தோன்றினன்.

அக்காட்சி இறைவரருளிய திருவிளையாடலிலே பரிகளா லெழுந்த செந்தூளாலே மாசுபடிந்த அண்டத்தைத் தனது ஒளிவிடும் நிலவாகிய ஆடையினாலே துடைப்பதற்கு வெண்டிங்கள் வந்ததுபோன்றிருந்தது.

மேலும், சிவந்த விண்மீன்களை யெழுத்தாக எழுதிய வான மாகிய இதழிலே யிருட்டாகிய மையைத் தடவித் தூய ஒளிமிகும் நிலவாகிய வெள்ளாடையாலே துடைப்பதற்கு வெண்மதி வந்ததுபோலவு மிருந்தது.

பரிகள் நரிகளாகிப் படுத்திய பாடு

மணங்கமழும் வேப்பந்தாரான் குதிரைப் பந்தியிலே புகுந்த மாயப்பரிகள் இருள் வந்தவுடனே பிள்ளைமதி முடிப் பெருமானார் அருளினாலே தம் உண்மையுருவை—நரியுருவை—அடைந்து தம்முள் உரையாடிக் கொண்டன.

"சங்கொலியும், பிணப்பறை யொலியும், அவிழ்ந்த கூந்த லுடன் அரிவையர் அழுமொலியும், அவர்கள் மார்பிலடித்துக் கொள்ளும் ஒலியும் இனிய அமுதுபோல நாம் பருகுவ தெப்போது! பரிக்கூட்டமாகி மக்களைச் சுமந்தோம்! கயிற்றாலும் சங்கிலியாலும் பிணிப்புண்டோம்! குதிரைச் சவுக்கடி பட்டு வருந்தினோம்! இரவு வந்ததும் நம் உருவும் வந்தது. பகலிலே வருந்தினும் இரவிலே நம் ஊழின் வலிமை யாலே நம்நிலை பெற்றோம். காட்டிலிலே வாழும்போது இந்தக் கலக்கந்தரும் நிலையைக் கண்டறியோம். எவ்வாறோ நம்மைக் கட்டிய வலிய சங்கிலிகளின் வடுக்களும் மறைந்து விட்டனவே! விடியுமுன் வெளிப்படலே நம்வேலை. வயிறு நிறைய நாம் தின்பதற்கு ஊன்வடிந்தொழுகும் குருட்டு நத்தைகளில்லையே! சங்குகளில்லையே! அலைகளிலே புகுந்து மறையும் நீண்ட கவைத்த கால்களையுடைய திருட்டு நண்டுக ளில்லையே! கடலையுங் கொள்ளும் பயறும் புல்லுமோ நம் உணவு? இது கொடுமை! இனி நம்மைக் காவல் காக்கும் மன்னவன் பணி யாளரும் நகரமக்களுங் கண்டால் அடித்துக்கொல்வார்களே!

விடியுமுன் சங்கிலிப்பிணிப்பை அறுத்தெறிந்து ஓடிப்போதல் வேண்டும்!''

நரிக்கூட்டங்களின் நாவிலே கொழுவிய ஊனை நினைத்து —நண்டையும் நத்தையையும் சங்கையும் நினைத்து —நீரூறியது. அவை சங்கிலித்தளையை அறுத்துக் கொண்டு, கட்டிய கயிற்றுடன் முளையைப் பிடுங்கிக்கொண்டு ஊளையிட்டுக்கொண்டு ஓட வழிபார்த்தன!

தாம் நின்ற குதிரைப் பந்தியிலே தம்முடன் பிணிக்கப் பட்டிருந்த குதிரைக் குழுவைத் தம் பற்களாலே தாவிக் கடித்து ஊனைப் பிடுங்கித்தின்றன! குருதியைக் குடித்தன!

நரிகளின் ஊளை யொலியைக் கேட்ட குதிரைப்பந்திக் காவலர், உறக்கத்தை விட்டுத் திடுக்கிட்டெழுந்தனர். நேற்றுத் தாங்கள் ஆளிபோலக் கண்ட பரிகளெல்லாம் நரிகளாகிப் பழைய பரிகளின் குடரைப் பிடுங்கித் தின்பதைக் கண்டனர். அவர்களைக் கண்ட சில நரிகள் முள்வேலியைத் தாண்டி யோடின! சில நரிகள் சாளர வழியே பாய்ந்தோடின! சில நரிகள் நுழைவாயில் வழியாகக் கூடியோடின! சில மறை வழியே மறைந்தோடின!

முடமான நரிகளும் முதுமையாலே வலியிழந்த நரிகளும் குருட்டு நரிகளும் ஒடுங்கி நோயினாலே வருந்தும் நரிகளும் ஓடும்வகை தெரியாமற் பந்தியிலேயே ஏங்கிக் கிடந்தன.

சில நரிகள் தங்களை நெருங்கி வெருட்டுவோரைக் கீழே விழும்படி கடித்துவிட்டுத் தப்பியோடின. சில நரிகள் தடுப்பவரின் கால்களின் கீழே நுழைந்தோடின! சில ஊளையிட்டுக் கொண்டு கிடக்குங் குட்டிகளை அணைத்தவாறு மதிலைத் தாவி யோடின!

இவ்வாறு அரண்மனைக் குதிரைப்பந்தியை விட்டு வெளியேறிய நரிகள் பொய்கைகள், மலர்ப்பொழில்கள், அறச்சாலைகள், தெருக்கள், திருக்கோயில்கள், சந்திகள்

முதலாக நகரெங்கும் நிறைந்தன. மன்று, ஓவியக்கூடம், மாடம், செய்குன்று, தெற்றி, முற்றம், மரச்சோலை யென எங்கும் பரவி ஊளையிட்டுத் திரிந்தன. களிறுகள் பிளிறு மொலியும், பலவகை இயங்களின் ஒலியும், பரிகளினொலியும் இனிய தமிழொலியும், பாணர் பாட்டினொலியுமாக நிரம்பிய அழகிய மதுரை நகரிலே நரியினொலி மிகுந்தெழுந்ததாலே நகரம் விழித்துக்கொண்டது.

நாய்கள் விழித்தன; மயில்கள் விழித்தன; கோழிகள் விழித்தன; வண்டுகள் விழித்தன; அன்னங்கள் விழித்தன; பறவைக் கூட்டங்கள் விழித்தன; யானைகள் விழித்தன; காக்கைகள் விழித்தன; இவ்வாறு இருதிணையுயிர்களும் விழித்துக் கொண்டு நடுங்கிக் கிடந்தன!

நரிகள் சமையலறைகளிலே புகுந்து பானைகளையும் சட்டிகளையும் பசியுடன் உருட்டிப் பலவகைப் பண்ணியங்களையும் சோற்றையுந் தின்று குட்டிகளுக்குங் கொடுத்து ஊளையிட்டன. புறு, பூவை, பைங்கிளி, அழகிய சேவல் முதலானவற்றை யெல்லாம வாரித் தின்றன. சில நரிகள் உறங்கிய குழந்தைகளை யெடுத்துச் சென்றன. எனினும், அவற்றை மழலைகமழும் ஆம்பல வாயை நக்கியவாறு விளையாடினவே யன்றிக் கெடுதி யொன்றுஞ் செய்தில.

வாயிலிலே படரும் பசுங்கொடிகளை வேரொடு பறித்துத் தள்ளின. பலவகை இளங்காய்களைக் கடித்தன; கரும்பை முறித்து வாயிலிட்டு மென்று ஊளையிட்டுக்கொண் டோடின. ஆயிரக் கணக்கான—பொருக்குடைய திருகலான கொம்புகளை யுடைய ஆட்டுக்கடாக்கள், ஆயிரக்கணக்கான—இரும்பைப் போன்ற கரிய பன்றிகள், ஆயிரக் கணக்கான—சிவந்த கொண்டைகளையுடைய கோழிகள், ஆயிரக்கணக்கான—சிறு பறவைக் குஞ்சுகள் இவற்றின் உயிர்கள் நீங்கின.

நாய்கள் பின்தொடர்ந்து குறைத்தால் அவற்றைத் திரும்பிக் கடித்துக் கொல்லும், வலிய பெருந்தோளரான

வீரர்கள் துன்புறுத்தினுல் அவர்களைச் செந்நீர் வடியக் கடிக்கும்.

பன்றிகள் வாய்விட்டுக் கதறும் ஒலியும், சேவல்கள் கூவும் ஒலியும், கடாக்களின் குமுறலும், நாய் குரைப்பும், மக்கள் ஆரவாரமும் ஒன்றுபட்டுச் சில விடங்களில் நரிகளின் ஊளை போற் கேட்டன.

இரவின் எல்லையைக் கண்டு நகரம் கண்விழித்தாற் போல, வைகறையிலே மதிற் கதவுகள் திறக்கப்பெற்றன. அப்போது எங்குமிருந்த நரிகளெல்லாம் விரைந்து ஓடி வந்து இருளின் துண்டங்கள் போலக் காட்டிற் புகுந்து மறைந்தன.

விடிந்தது

''ஈறி லாச்சிவ பரஞ்சுடர் இரவிவந் தெறிப்பத்
தேறு வாரிடைத் தோன்றிய சிறுதெய்வம் போல
மாறி லாதபல் செங்கதிர் மலர்ந்துவா ளெறிப்ப
வீடு போயொளி மழுங்கின மீன்கண மெல்லாம்.''

அழிவற்ற சிவபரஞ்சுடரின் அருளொளி பெற்றவுடனே தெளிவுற்றவர்களின் கண்முன்னிருந்து மறையும் சிறு தெய்வங் களைப்போல, மாருத கதிரவனின் செவ்விய கதிர்கள் பரந்து ஒளி வீசினவுடன் விண்மீன்களெல்லாம் வீறு கெட்டு ஒளி மழுங்கின.

வானவர்களுக்கு அரியவராகிய மறைப்பொருளார், வருந்தும் அடியவர்க்காக எளியவராய் வந்து மண்சுமந்த அருளின் வருத்தங்கண்டு, அவருடைய அருட்கழலை வருட ஆயிரங்கைகளுடன் வெய்ய கதிரவன் கீழைக்கடலிலே தோன்றினுன். அப்போது, தாவும் பரியைச் செலுத்தியதாலே கவலை தீர்ந்து சிவமுணர்ந்த வாதவூரரின் உள்ளம் போலச் செந்தாமரைகள் மலர்ந்தன. ஒப்பற்ற பரம்பொருளை யுணர்ந்து, மொழி கடந்திருந்த பெரியார்களின் பேச்சடங்கிய வாய்போலக் குமுதங்கள் கூம்பின.

வழுதியின் மனக்கோதிப்பு—என் செய்வது

குதிரைப்பந்திக் காவலர்கள் இரவு நிகழ்ச்சியை யெவ்வாறு கூறுவதெனக் கலக்கத்துடன் விரைந்து பாண்டியன் அரசியன் மண்டபத்தை யடைந்து வந்தித்து மெய் நடுக்கத்துடன் நின்றனர்.

"காற்றினுங் கடிது செல்லும் நிலையவாய்க் கண்களுக்கும் இனிமை பயக்கத்தக்கவாய் நேற்று வந்த குதிரைகள் யாவும் பழைய பரிகளுக்குங் காலனாகியவைகளைப் போல நரிகளாக நகரமுழுவதும் நிறைந்து தீமையை விளைவித்துச் சென்று காட்டிலே புகுந்தன."

மனத்துக் கெட்டாத இந்தச் சொல்லாகிய கொடிய காற்று, காதாகிய துருத்தி வழியே சென்று, சீற்றமாகிய கொடிய நெருப்பை மூட்டி எரித்த தீப்பொறிகள் சிதறக் கண்சிவந்து, மன்னன் சீறியதைக் கண்டு மந்திரிகளும் அஞ்சி யொதுங்கினர். அமுதம் பருகியவன் நஞ்சமுண்டாற்போல, முந்திய நாளிலே போர்ப் பரிகளின் களிப்பிலே மூழ்கியவன் அவையே, இருளிலே கொடிய குறுநரிகளாகச் சென்றன வென்றறிந்த பாண்டியன் பெருந்துயரிலழுந்தினான்.

அண்மையிலே அமர்ந்திருந்த மந்திரிகளை நோக்கி, "வாதவூரனை கரிய இருட்டுள்ளம் படைத்த திருடன் நம்முடைய பொருளை யெல்லாங் கொண்டு சென்று, காட்டிலே இரத்தமுங் குடரும் நிணமுந் தின்று திரிகின்ற நரிகளை யெல்லாம் பரிகளாக்கி வரவிட்டான். இவன் மாயத்தைப் பார்த்தீர்களா? இவனை யென்செய்வது?" என வினவினான்.

அமைச்சர்கள், 'நம் போன்றவர்கட் கெல்லாம் கொடிய இழுக்கையுண்டாக்கும் பாவம் பழியிரண்டையும் விளைவித்து, அரசன் செய்த நன்றியையுங் கொன்றவனுக்காக நாம் உரைக்கக் கூடியது முண்டோ?' என நினைத்து வாளா விருந்தனர்.

வாதவூரரை வருத்துதல்

அப்போது, உளமினிக்கும் பரிகளைக் கொடுத்து, மன்னவன் பணியை நன்ருக முடித்து மனக்கவலையை விடுத்தோமென்ற மனக்களிப்புமிகக், கொடிய கடலிலே முன்னர் நஞ்சைப் பருகிய இறைவரை யெண்ணி, அறிவு வடிவாகிய உண்மை யின்பக்கடலிலே முழுகிய வாதவூரர் நிகழ்ந்ததை யறியாமல் அரசவையை அணுகினர்.

வந்தவரை வழுதி கடுகடுத்து நோக்கினன்: "அளவற்ற பொருள்களைக் கொண்டுபோய் அழகிய வெற்றிப் பரிகளைக் கொண்டுவந்தா யல்லையோ? அரசன் அலுவலை முடித்துப் புகழை நிலைநிறுத்தத் தக்கோர் உன்னைப்போல் உலகிலெங்கு மில்லை!" என வெகுண்டான்.

வாதவூரர் திடுக்கிட்டு, "அப் புரவிகட்குக் குற்றமுண்டோ?" என வினவினர்.

வழுதி விகழ்ச்சியாக நகைத்தான்:

"குற்றமே யில்லை! நள்ளிருளிலே நரியாகிப் பக்கத்தில் நின்ற புரவிகளைத் தாக்கி இரத்தமொழுக, ஊன் சிதறக், குடலைப் பிடுங்கித் தின்று, எதிர் வந்தவருக் கெல்லாம் தீங்கிழைத்து, நகரைக் கலக்கிக் காட்டுக் கோடின! கண்களைப் போலவும் கவசம் போலவுமிருந்து, அலுவல் புரிந்து வந்தது, காலம் நோக்கி எம் அளவற்ற செல்வத்தைக் கொள்ளை கொள்ளவோ? நன்று! உன் மந்திரத் தலைமை மிக நன்று! புண்ணிய அந்தணர் மரபிலே பிறந்தோ மென்று பெருமை கொண்டனையோ? நீ செய்த இப் பிழையைப் பிறர் செய் திருந்தால் தண்டனைக் குட்படுவார்கள்?"

மன்னன் தண்டலாளரை நோக்கி, "இவனைக் கொண்டு போய்த் தடுத்தும் இழுத்தும் வற்புறுத்தியும் நம் பொருள்களை யெலாம் வாங்குங்கள்," எனக் கொதித்துக் கூறினன்.

உடனே காலனையும் எதிர்க்குங் கடுவலியுடைய தண்ட லாளர் காரிருள் ஒளியை யிழுத்துச் செல்வது போலப்

பற்றிக்கொண்டு வெளிவந்தனர். இரக்கமற்ற அக்கொடியோர்கள் அறவோராகிய அடிகளைக் கதிரவன் தன் கதிர்களாலே கனலை யெழுப்புங் கடும்பகலிலே, வானத்தின் உச்சியிலே செல்லுங் கதிரவனை நோக்கி நேர் நிறுத்திக் கைகளிலும் நெற்றியிலும் கல்லேற்றி வருத்தினர். வாதவூரர் பொருராய்க் கலங்கி முச்சுடரையுங் கண்களாகவுடைய சுடருருவினரை அழைத்துப் பரவினர் :

"நாதவோ! நாத முடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ! பாதகனும் என்னைப் பணிகொண்ட
வேதவோ! வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ! போத நெறிகடந்த பூரணவோ!"

"ஐயவோ! என்னுடைய அன்பவோ! அன்பர்க்கு
மெய்யவோ! மெய்யில் வினையேன் தலைவைத்த
கையவோ! செய்யகமற் காலவோ! காலனைக்காய்
செய்யவோ? வேதப் பரியேறுஞ் சேவகவோ!"

"அத்தவோ! கல்லாக் கடையேனை ஆட்கொண்ட
பித்தவோ! பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ! சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ! மோன மயமான மூர்த்தியவோ!"

புகழ்பெற்ற வாதவூரரின் வருத்தக்குரல் சோமசுந்தரர் செவியிலே சென்றேறியது. விடையேறு விரும்பிய விமலர் வாதவூரர் செயல் மன்றிலேறவும், ஆறுமுடித்த முடியிலே மண்ணேறவும், முதியவள் தான் ஏறிய தேரோடும் வானேறவும் நினைத்தருளினர்.

வையைப் பெருக்கு—மக்கள் கலக்கம்

ஆகவே, அண்ணலார் தம் முடிக் கங்கையின் வடிவமான—சங்காகிய வளையல்களையும் அறலாகிய மலர்க் கூந்தலையும் உடைய—அலைவெறியும் வைகையை நோக்கி, "ஊழி முடிவிலே கடல் பொங்குவதைப்போல,—இங்குள்ளோர் வியக்கப்—பெருகி வருக!" என்றருளினர்.

அண்ணலாரின் திருவாய்மொழி கேட்டவுடன் முற்காலத்திலே காஞ்சியில் காமாட்சியம்மையாரின் தவத்தை ஆராயக் கம்பை பெருகியதுபோலக் கடுவிரைவுடன் பெருகியோடியது வைகை.

வரிசை வரிசையாகக் குளிர்ந்த கமுகின் குலைகள் விழக் கரைபெயர்ந்தோடிப் பல கோட்டங்களை யழித்து, முந்திச் சென்றது வைகை! முத்துகளையுங் கரும்புகளையும் வாழைத் தோட்டங்களையும் முற்றிய நெல்வயல்களையும் அரித்துப் பல மரங்களையும் பெயர்த்துக் கொண்டு வந்தது வைகை!

பல்லாயிரக் கணக்கான செந்தாமரைகளைப்பரப்பி வருவதால் ஆயிரங் கண்ணனை இந்திரனை நிகர்த்தது வையை. செங்கழுநீரையும் நறுமண முல்லையையும் ஆயிரக் கணக்கான கரும்புகளையுங் கொண்டு வருவதால் ஆயிரம் வில்லேந்திக் கொடும்போர் புரியும் காம வேளையும் போன்றது வையை.

மற்றும் மலர்மாலைகளையும் மணிமாலைகளையும் அழியுங் கரைகளிலே சிதறியும் (ஓடியும் இடையிலே) அழகிய காஞ்சியையும் விளங்குஞ் சங்குகளையும் வெளியே எறிந்தும் அளவிடமுடியாத அழகிய முகமாகிய தாமரை தன்னிடமுள்ள கண்ணீருடன் (கள் நீருடன்) கவிழ்ந்தும் வருவதால் ஆறுத முனிவுடன் ஊடிவரும் பெண்களைப் போலவு மிருந்தது.

மலைகளிலுள்ள தேனையும் முல்லை நிலத்திலுள்ள நெய் பால் தயிர்களையும் மருதத்திலுள்ள கருப்பஞ் சாற்றையும் உவர்நீரையுங் கொண்டு இரைந்துவரும் தூய நீரையுடைய வைகை, இந்த அழகிய நகரில் உள்ள அலையெறியும் எழு கடலும் தம்மிடஞ் செல்லப் புறம் போந்தன போலும் இருந்தது.

கல்லென ஆரவாரித்து வரும் வையைப் புனல், காவலையுடைய மதிலின் புறத்திலே பரவி, வீடுகளையுஞ் சிறு குடிசைகளையும் எற்றிச் சுமந்து மரக்கலங்களையும் படகுகளையுஞ் சுமந்து செல்வதுபோல மதிலையுங் கடந்து நகருட் புகுந்தது.

கடைவீதிகளையும் பிற தெருக்களையும் மன்றுகளையும் யானைசெல்லுந் தெருக்களையுஞ் சூழ்ந்து முதிருஞ் சீற்றத்துடன் வருவதைக் கண்டு நகர மக்கள் நடுங்கினர். அரும் பெறன் மழலைக் குழவிகளை யெடுப்பாரும், மதலைகளைக் காணு தலைவாரும், எங்கே செல்வதென இடந் தேடுவாரும், ஒன்றுந் தோன்றுமல் திகைப்பாரும் பொன்னையும் பொருளையும் வாரிக் கொண்டு காப்பாற்றுவாரும், பொருள்களிற் சில மறந்து செல்வாரும், மாடங்களின் மேலும் மாளிகையின் மேலும் ஏறி நிற்பாரும் ஆகி மக்களுற்ற அல்லலை வகுப்ப தெப்படி?

சிலர் இந் நகர் இத்தகைய துயரில் மூழ்கக் காரண மென்னென் றேங்குவார். சிலர், "நேற்றும் பரிகளெலாம் நரிகளாகி நகர மெங்குந் தொல்லை கொடுத்தன," என்பார்கள். சிலர் "ஒரு காலமும் இவ்வாறு இங்ஙனம் பெருகிய தில்லை" யென்பார்கள். சிலர், "கடலரசன் முன் போலச் சீறி வருகின்றனனே", என்று தியங்குவார்கள். சிலர் "நம் மன்னன் செங்கோல் தவறினனே." என்று ஐயுறுவார். சிலர் "அங்கயற் கண்ணம்மை மணாளரின் திருவிளையாடல் போலு," மெனச் சிந்திப்பார். சிலர் "இதைத் தணிப்பார் யார்," என ஏங்குவார். அது கேட்ட சிலர் "ஆல முண்ட அண்ணலன்றி வேறெவருந் தணிக்கமாட்டார்," என்று விடை கொடுப்பார்.

இவ்வாறு மக்களெல்லாரும் மறுகும்போது, வான கங்கை ஆயிரமுகத்தால் வருவதுபோலப் பெருகும் வெள்ளம் தணியாததைக் கண்டு, அன்புருவான சிவனடியாரைத் துன்புறுத்துங் கொடியோர் தம் வீட்டுப் பொருள்களை வெள்ளத்தினின்றுங் காக்க ஓடினர். தண்டலாளர் விட்டுச் சென்றவுடன் வாதவூர் வள்ளலார் கூடலிறைவர் திருமுன் சென்றார். தம் 'அழுதிசை பாடுந் தொண்டில் அகப்படுந்' திருவடியை வணங்கியவாறு அறிவாக ஊற்றெடுக்கும் இன்பப் பெருங் கடலிலே முழுகி, எழுதின ஓவியமென இருந்தார்.

———

கூக. மண் சுமத்தல்

கரை யடைத்தனர்

கரிய கடலின் அலைகளினிடையே கிடந்து சுழலுங் கலம் போல, நகரம் அவ் வெள்ளத்தினிடையே அகப்பட்டு மறுகி வாடுவதைக் கண்ட வழுதி, தன் அமைச்சரைக் கூவி, "நீங்கள் கரைசுமந்து ஒதுக்கி வருங் குளிர்ந்த நீரின் வேகத்தை அடக்குங்கள்," என்று பணித்தான். அவர்கள் நன்றெனத் தொழுது சென்றனர்.

வேறு வேருகவுள்ள பல குடிகளையுங் குறிப்பிட்டெழுதி, அளவு காட்டிக் கோடு கிழித்துவிட்டு, நகரெங்கும், "அவரவர் பங்கையடைமின்," என்று பறையறைவித்தனர். உடனே, மண் வெட்டியாளரும், கூடைக்காரரும், மரஞ் சுமந்து வருவாரும், புசுந்தாழைகளையும் வைக்கோலையும் எடுத்து வருவாரும் ஆக வேறு வேறு பல கூட்டத்தினரும், ஆற்றங் கரையிலே மொய்த்தனர்.

அவர்கள் மரங்களைக் குத்திட்டாற்போல நிறுத்தி வைக்கோற் புரிகளை யுருட்டித் தழைகளை நிரப்பினர். பிறகு மண்ணை வெட்டியெடுத்துக் கடிதே சென்று கொட்டித் தடை செய்து மகிழ்ந்து ஆரவாரித்தனர்: குரவையாடினர்; அவர்களிற் சிலர் தாம் கட்டிய அணை உடைத்துச் செல்வது கண்டு கலங்கி வைகையை நோக்கி, "அன்னையே! அளவற்ற சீற்றம் என்?" என் வணங்குவார்கள். பிறகு மண்வாரிக் கொட்டியவுடன் அடை பட்டதைக் கண்டு மகிழ்ச்சியுடன் பரவி ஆரவாரிப்பார்கள்.

வந்தியின் கூலியாள்:

இவ்வாருக நகர மாந்தரின் கூலியாளரெல்லாரும் வந்து தமக்களந்த அளவினை அடைக்கமுயன்று வேலை செய்யும் போது, அந் நகரின் தென்கீழ்த் திசையிலுள்ள ஆயிரம் பிறைகண்ட—நரைமூதாட்டி யொருத்தி தனக்காள் கிடைக்

காமல் வருந்தினாள். அவள் வந்தி. செவி யுணவான மறைப்பொருளை யுணர்ந்து, செந்தீயிலே அவியுணவை யூட்டும் சிவனரன்பரைப்போல ஆற்றவும் நோயற்ற தவப் பேறுடையாள் 'தாயிலார்க்கன்னை யொப்பாள்.' சுவையே தரும் பிட்டு விற்றுண்ணுந் தொழிலினள் ; ஆதரவற்றவள். அவள் ஒவ்வொரு நாளும் தான் அவித்த பிட்டை, நான்கு கைகளாய் முளைத்த முக்கட் கரும்பினை'—மூரல் அரும்புஞ் செவ்விய கதிர் முகத் தேனை—ஆலவாய் எம் ஐயரை— உள்ளத்தால் நோக்கி, அன்புடன் படைத்து விற்பது வழக்கம்.

வளைந்த மெய்யை யுடைய பெருந்தவத்தளான அந்த முதியவள், தனக் களந்த பங்கை அடைக்கக் கூலியாள் கிடையாமல் மிகவுந் தளர்ந்து, "இனி என் செய்வேன்? என்னை அரசன் தண்டிப்பானே," என மனக் கலக்கங் கொண்டாள். கூடல் இறைவரைக் கருத்திலே குறித்தாள்.

"பிட்டு விற்று வாழும் பேதை நான். இதுவரையிலே எள்ளளவேனுந் துன்பமின்றி யிருந்தேன். கதிரவன் எங்கே முளைத்தானென்றும் நினையாமல் தங்கள் அருளால் வாழ்ந் தேன். இன்று மன்னன் ஆணையாலே இடையூறு வந்தது. எந்தையே! துணையும் மக்களும் உறவும் நட்பும் ஆதரவாளரும் இல்லாமல் துன்பத்தி லாழ்ந்து வாடும் எளியேனுக்கு இணையற்ற இந்தத் துன்பம் வருதல் அறமோ? அமரர்க்கும் அரியரான அமரரே! அன்பர்க் கெளிய அண்ணலே! அரசனாணைப்படி அலுவலாளர் சீறி வருமுன் கூலிக்கு வேலை செய்வாரைக் காணேன்! என் செய்வேன்?

கண்ணீர் வடியக் கலங்கி நின்றாள்.

அந்த வந்திக்காக—அவளூட்டும் பிட்டைத் தின் பதற்காக—உலகறியப் பிட்டைத் தின்று அவள் கவலை யைக் களைவதற்காக — பாலனைய மொழியம்மையாரின் பங்கை மறைத்து அருள் வடிவங் கொண்டார். குண்டோ தரனுக்கு நீரையூட்டி வைகையாக ஓடுங் கங்கையின் பிரிவைப் பொறுதவராய், அன்புடன் அவளைக் காண

வேண்டி, அங்கயற்கண்ணம்மையாரை ஏமாற்றி வடிவத்தை மாற்றிப் புறப்படுவாரைப்போல வெளிவந்தார்.

அழுக்கேறிய பழந்துணியொன்று இடையிலே விளங்கியது; சிறந்த தொண்டர்கள் கொடுத்த இண்டை போலச் சும்மாடு தலைமேலிருந்தது; அதன்மேற் கூடை கவிழ்ந்திருந்தது; எழுவைக் கடந்து திசையைக் கடந்து உவமையைக் கடந்த திருத்தோள்களின்மேல் மழுவைக் கடைந்து விளங்கிய மண்வெட்டி யொளிர்ந்தது.

இந்தத் தோற்றத்துடன் புறப்பட்டார்.

உறுதியான காதலுடன் அறவோர்கள் வேள்வியிலே அளிக்கும் அமுதும் தம் இடப்பங்கிலுறையும் இறைவியார் அருத்தும் இனிய அமுதும் உண்டாலும அடங்காத பசியுடையவர் போல்—தாய் முலைப்பாலைப் பருகத் தடை செய்ய வியலாத வேட்கையுடன் வரும் குழவியைப்போல்—வெளி வந்தார்.

வாழ்த்துகின்ற மறையின் முடியிலே விளங்கும் பரம் பொருளாளரின் திருவடிமலர் நிலத்திலே பதிய, ',என்னைக் கூலி கொடுத்து வேலை கொள்வார் உண்டோ?'' என மறைமொழிபோலப் பகர்ந்துகொண்டே கண்ணீரிலே முழுகிக் கலங்கும் முதியவள் வசிக்குந் திருவீதியை அடைந்தார்.

பெற்ருேரும் பிறருமின்றி வருகின்ற தனிக் கூலி மைந்தர் குரலைக் கேட்டு வந்தியாள் தன் மனக்கலக்கததை விட்டு—வறுமையாளர் விழுநிதியம் பெற்றபோது அடையும் மகிழ்ச்சி பெருகப் புறத்தே வந்தாள்.

தாயைப்போல அருள் சுரக்குமாறு தன்னை நோக்கி வருங் காளையை யழைத்து, ''எனக்களந்த கரையைக் கட்டித் தருகிருயா?'' என வினவினுள்.

''அடைக்கின்றேன் அன்னையே! எனக்குக் கூலியென்ன?''

''பிட்டு கொடுப்பேன்.''

"நன்று! நான் பெரும்பசியால் வாடினேன். இனிய சுவையையுடைய அந்தப் பிட்டிலே உதிர்ந்தவற்றை முதலிலே கொடு. அதைத் தின்று களைதீர்ந்து நின் கரையைக் கட்டிடுவேன்."

கரை கட்டவந்த கரையற்றவர், இவ்வாறு கூறியவுடன் அதற்கிசைந்த முதியாள் தெளிவாக அவித்த பிட்டின் பொதியை நீக்கி அள்ளியெடுத்துக் கொடுத்து "அருந்து" என்றாள். இடையிலே புள்ளித் தோலாடையை மறைத்து வந்தவர், மேலாடையை விரித்துவாங்கி, "மிக நன்று!" என்று முதியவள் அன்பையும் உடன் கூட்டி யுண்டார்.

"தாய்முலைப்பாலைவிட மிகவும் இனிய சுவையாயிருக்கிறதே! இது, வழுதியாகி உலகையாண்ட கூடலிறைவர்க்கே யாகும்," என்று கூறிக்கூறி வாயிலிட்டுத் தலையை அசைத்தவாறு கொடிய நஞ்சினையே அமுதாக உண்டவர் அமுது செய்தார்.

"தந்தையுந் தாயுமில்லாமல் தனித்துக் கூலியாளாக வந்த எனக்கு ஒப்பற்ற அன்னையாக அருள் சுரந்து நீங்காத இளைப்பை நீக்கினையே! இனி இதோ வேலைத்தலையிலே சென்று உன் மனம் மகிழ வேலை செய்வேன்!"

கரையை நோக்கி விரைந்துசென்றார். அங்கே, "நான் வந்தி யாள்," என்று ஏட்டிலே எழுதி, அறிவாலும் உரையாலும் நூற்பொருளாலும் அளக்கமுடியாத பிறைமுடியார் கரையடைக்கத் தொடங்கினர்.

மண்ணை வெட்டுவார்; முடிமேல் வைப்பார்; மிகுதியென்று கொட்டுவார்; குறைத்தெடுத்துக் கொண்டுபோவார்; சும்மாடு விழுந்துவிடும்; சுமையைக் கீழேவைத்துச் சும்மாட்டைத் தலையிலே படியக்கட்டுவார்; பிறகு, சுமந்து சென்று கரையிலே சொரிவார்.

இவ்வாறு ஒருமுறை யிருமுறை மண்சுமந்து களைத்தார். கைம்மலர் கன்றியது; ஒளிமுடிமேலே வடு அழுந்தியது; மலரடியிலும் செந்நீர் சுரந்து சிவந்துகாட்டியது; இந்நிலையிலே ஒரு நல்ல நிழல்மிகு மரத்தருகே சென்றார்.

துயின்றெழுந்தார்—ஆடினார்—பிட்டுக்கு ஓடினார்

மலைமகளும் நீர்மகளும் அறியாமல் தம் திருமேனி முழுவதும் நிலமகள் தீண்டிமகிழப் பிறைமுடியைக் கூடையாகிய அணையின்மேல்வைத்து மேருவனைய இறைவர், தம் வடிவையுணர்ந்து துயின்றார். அந்த மரமே நெடிய ஆலமரமாக—அலையைவீசிவரும் நீர்ப்பெருக்கை யடைக்குங் கூலிகளே சனகாதி முனிவராக—உண்மையறிவின் மோன மயமான தூய உருவைத் தெளிவிப்பவர்போலத் துயின்று தெளிந்தார்.

தெளிந்தவுடன் எழுந்து ஆடினார்; சாமமறையென இனிக்கும் அமுத இசையைப் பாடினார்; நகைத்தார்; தொழில்புரிவோர் பராக்குப் பார்க்க நீர்க்கரை மணலைக் குவித்தார்; தூளெழக் குதித்தார்; ஓடினார்; திரும்பினார்; உன்மத்தர்போல இருந்தார். பிறகு, வேலையினாலே மிகவும் வருந்திக் களைத்தவர்போல மெய்யிலே வேர்வைவடிய, பெருமூச்சுவிட்டு, வாயூதி, மிகவும் பசித்தவர்போலத் தளர்ந்து தம் அடியவளிடம் பிட்டின்மேல் விருப்பமுடன் திரும்பவும் அவளிடஞ் சென்றார்.

கவலை வெள்ளத்தைக் கடந்து மகிழ்ச்சி வெள்ளத்திலே ஆழ்ந்த கூனிய முதியவளின் முன் சென்று, "கோலளவிலே இடப்பட்ட கரைகளெல்லாம் அடைபடுகின்றன, இன்னும் பசி தணியவில்லை. விரைவிற் பிட்டிடு," என்றார்.

அவள் அப்போது வெந்த பிட்டினை யளித்தாள். இறைவர் அதனை வாங்கிக் கையும் நாவுஞ் சுடச்சுட வாயில் விட்டு, இருபக்கத்திலுந் தள்ளித்தள்ளிப் பதமாகத் தின்றுகொண்டே சென்று முன்போலக் கரையடைக்க முனைந்தார்.

பிட்டை வாய்நிறைய இட்டுத் தின்பார்; பேராற்றலுடையவர்போல் மண்வெட்டுவார்; எடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேற்றுப்பங்கிலே கொட்டுவார்; உடைப்பு அடைபடுவதைக்கண்டு தோள்தட்டுவார்; களிப்புடன் அருகிலிருந்தவர்களைத் தழுவிக்கொள்வார்; எடுத்த மண்

ஞுடனுங் கூடையுடனும் இடறி விழுபவர்போல ஆற்றிலே விழ்வார் ; நீந்தி விரைந்துசென்று கூடையை யெடுத்துக் கொண்டு கரையேறுவார் ; தட்டித்தட்டிக் கூடையின் ஈரத்தைப்போக்கிச் சும்மாட்டின் கட்டவிழ்த்துத் திரும்பவுங் கட்டுவார் ; மண்ணைத் தோண்டுவார் ; மண்ணைச் சுமந்து சென்று கூடையுடன் மண்ணை உடைப்பில் தட்டு வார் ; எடுப்பவர்போலத் தாவி நீரிலே வீழ்ந்து, வெள்ளத் திலே ஓடவிட்டு, ஒருமரத்தைப்பற்றி மிதப்பார் ; கரையி லேறத் தவிப்பார் ; சுழியிலே முழுகுவார் ; தொலைவிலே சென்று தோன்றுவார் ; திரும்புவார் ; மண்வெட்டியைக் கழற்றுவார் ; கோப்பார்; கோலிடையிலே யாப்பையிட்டுத் தட்டுவார் ; பெருமூச்சுவிட்டுத் தள்ளாடி நின்று இளைப் பார் ; முடிச்சிலிருந்த பிட்டைத் தின்பார்; வேலை கெடும்படி பிறர்க்கும் அள்ளிக்கொடுப்பார் ; வேலைவாங்குவோர் கண்டு பிரம்பை வீசினுற் கைதட்டி நகைப்பார்.

வானிலும் நிலத்தினும் மனைவிமக்கள் பொருள்முத லாந் தொடர்பைவிட்டுத் தற்போதமுமின்றி, உண்மை யுணர்ந்த யோகரின் அறிவாலன்றி யறியமுடியாத பேரொளி, இவ்வாறு மண்ணவரின் புறக்கண்ணிலும் புலப்படும்படி விளை யாடினுர். உலகை அருளினுலே படைத்துக் காத்து நீக்கிப் பெருவிளையாடல் புரியும் பிறைமுடிப் பெருமானுர், இங்ஙனம் விளையாடிக்கொண்டிருக்கப் பிரம்பேந்திய கையுடன் வேலைவாங் குவோர் அடைகரையைப் பார்க்க வந்தனர்.

நீண்ட அலைகள் ஒதுங்கிச் செல்லுமாறு மலையென உயர மாக இட்டுக்கட்டிய கரைகளையெல்லாம் சரிபார்த்துச் செல் கின்றவர், வந்தியின் பேரால்விட்ட பங்கு அடைபடாமல் இருக்கக்கண்டு சினங்கொண்டனர். உடனே, "வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யார்?" என்று வினவிச் சென்று கடம வேளைப்போல் நின்றவரைக் கண்டார்கள்.

வேலை வாங்குவோர் மயக்கம்

"ஏடா! மற்றைப் பங்குகளெல்லாம் அடைபட்டன. நீயேன் இந்தப் பங்கையடைக்காமல் இருக்கின்றனை?"

அண்ணலார் வேறொன்றும் விளம்பாமல், தம்மை யறிந்தவர்போலச் சிறப்புடன் இறுமாப்புத் தோன்ற விருந்தார். மேலும், ஆற்றுவெள்ளம் மேலிட்டுப் பக்கத்திலிருந்த — அடைபட்ட — பங்கையும் இடித்துச் சென்றது. கோலாளர்கள் இறைவருடைய கட்டழகைக்கண்டு அடிக்க மனங்கொள்ளாமல் மயங்கி நின்றனர்.

"இவனென்ன பித்தனோ? பேய் பிடித்தவனோ? வந்தியை வருத்தவந்த எத்தனோ? இந்திரசாலம் வல்ல சித்தனோ? இசைவல்ல வித்தியாதரனோ? பாடலுக் கேற்ப ஆடும் விஞ்சையனோ? கிடைத்தற்கரிய செல்வத்திலிருந்து வாடியவனோ? புகழ்பெற வாழ்ந்து கெட்டவருள் யார் மகன் இவன்? காமனும் விரும்புங் கட்டழகுடைய இவன் கூலிக்காளாக வந்த காரண மென்ன? பெற்றோரற்ற பிள்ளையோ? இவனை நோக்கினால் வேலை செய்து பழகியவனாகத் தெரியவில்லையே! அதுதான் அவன் உடம்பிலிருந்து தெரிகிறதே! கூலியைக்கொண்டான்! கணக்கிலும் தன்னைக் குறிக்கக் கூறினான்! வேலையுஞ் செய்யான்! கூறுவதையுங் கேளான்! நாம் கூறுவது கல்லிலறைந்த முளைபோலாகும் படி புறக்கணித்து நிற்கிறான். இதனை நாம் பாண்டியனிடம் பகர்தல் வேண்டும்."

பிரம்படிபட்டார்!

வேந்தனிடம் ஓடி வணங்கி விளம்பினர்:

"அரசே! இந்த நகரமக்கள் தங்களுக்களந்துவிட்ட பங்குகளை ஒழுங்காக மலையினும் உறுதியாகக் கட்டிவிட்டனர். பிட்டு விற்கும் வளைந்த முதுகையுடைய அந்த வந்தியின் பங்குமட்டும் அடைபடவில்லை! அழகினாலே காமனையும் வென்ற காளையொருவன் அவள் ஆளென வந்து பதிவு செய்துகொண்டான். அரசிளங் குமரன்போலக் களிப்பான்! பாடுவான்! ஆடுவான்! காலத்தை வீணே போக்குவான்! வேலையைப்பற்றி உள்ளத்திலும் உன்ன மாட்டான்! ஆடவர் திலகம்போன்ற அவனை நோக்கி

னல் அடிக்கவும் அஞ்சுகிறோம்! தங்களிடம் கூற ஓடி வந்தோம்.''

பாண்டியன் உடனே அமைச்சருடன் புறம்போந்தான். கரையையடைந்து அடைபட்ட பங்கையெல்லாங் கண்டு மகிழ்ந்தான். வந்தியின் பங்கு அடைப்பவரின்றி அடுத்த கரையையும் இடித்துச் செல்வதைக்கண்டு கடுகடுத்தான். "இதை அடைப்பவன் எங்கே?'' எனக் கொதித்தான்.

அவன் சீற்றத்தைக்கண்ட மாறுகோலாளர். அஞ்சி ஓடிப் பரம்பொருளின் பெருங்கையைப் பற்றியிழுத்துக் கொண்டு, உள்ளும் புறமுங் கீழும் மேலுமாக உயிர் தொறும் ஒளித்துநின்ற கள்வரை, "இவன்தான் வந்தியின் ஆள்!'' எனக் காட்டினர்.

பாண்டியன் அவரைக் கண்டவுடன் சினந்து பொங்கிப் பிரம்பை வாங்கி உலகமும் அளவற்ற உயிர்களும் மெய்யாகக்கொண்ட பெருமானார் முதுகிலே வீசியடித்தான். எங்கும் நிறைந்த பேரொளியார் கூடையோடு மண்ணை உடைப்பிலே போட்டுவிட்டு மறைந்தருளினார்.

பாண்டியன் அடித்த அடி, அவன் முதுகிலே பட்டது. அவன் காதலியர் முதுகிலேயும் அரசிளங்குமரர் முதுகிலே யும் அமைச்சர் மேலும் கழலணிந்த வீரர்கள் மேலும் களிறுகளின் மேலும் பரிகள் மேலும் பட்டது.

ஞாயிறு முதலான ஒன்பது கோள்கள், பலநிறம் படைத்த நாண்மீன்கள், பெருநிலம். நீர், காற்று, தீ, வான், முகில், மறை, ஆறு சமயமானவர், வானவர், முனிவர், தவத்தினர், எழுவகைப் பிறப்புயிர்கள், ஊனிலுள்ள கருக்கள், உயிரற்ற ஓவியங்களும் அந்த அடியைப்பெற்றன. திருமால் திடுக்கிட்டு விழித்தான்; நான்முகனும் என்ன வென வியந்தான்; இந்திரன் நடுங்கினான்; வானவரும் பிறரும் அஞ்சினர்; யாழேந்திய இயக்கர், சித்தர், சாரணர் முதலானோர் தம் முதுகிற்பட்ட புண் யாதென்று ஒருவர்க்

கொருவர் காட்டிக்கொண்டனர்; ஒருவரும் விளங்காமல் மயங்கினர். எவ்வாறு விளங்கும்?

நரை மூதாட்டியை அழைமின்!

ஒப்பற்ற முதல்வர், எல்லாவுயிர்களுந் தாமேயென்பதையும் அன்பிற்கெளிய ரென்பதையுங் காட்ட அடிபட்டுக் கூடைமண்ணைக் கொட்டி அளவிலே விரைந்துவரும் வெள்ளம் சுருங்கக் கரையினை உயர்த்தி வேலையை முடித்து மறைந்தவாறு கண்டு, கோலாளர் நரைமூதாட்டியின் இல்லத்திற் கோடினர். அவளைக் கண்டு வற்புறுத்தி மன்னனிடம் அழைத்தனர்.

நரைமூதாட்டி அஞ்சினாள். "அரசனால் ஏதாவது கெடுதி நேரிடுமோ? முன்பு சென்ற ஆள் என்ன செய்தானோ? எப்படி முடியுமோ?" எனக் கலங்கினாள். சுருங்கிய தசையும் என்பென வெளுத்த கூந்தலுமுடைய அவள் கூடலிறைவரை நினைந்து வருந்தினாள்.

அப்போது, அவள் கொடுத்த பிட்டை அன்பு தேனாகக் கலந்தமுது செய்தவர்தம் அருளினாலே நந்திகணத்தவர் வானிலிருந்து கதிர்வீசும் தூய விமானத்துடன் நிலமிசையிறங்கினர். "அன்னையே! வருக!" என அழைத்து விரைவிலேற்றிக்கொண்டு வானவர் பெய்த கற்பகமலரும் பண்ணிறைந்த இசையொலியும் மறையொலியும் வானமுரசைந்தும் வானிலே நிமிர அழைத்துச் சென்று சிவபுரத்திலே சேர்த்தனர்.

மன்னன் மயக்கம்—வான்மொழி—வாதவூரர் துறவு

வெள்ளி மன்றவர் கூடைமண் கொட்டி மறைந்ததும், அந்தக் கரை உடனே நீண்ட குன்றுபோ லுயர்ந்ததும், தன் மீது பிரம்படி பட்டதும் அமைச்சர்களும் பிறரும், "என்மேலடி பட்டது! என்மேலடிபட்டது! இதோ பாருங்கள்! அதோ பாருங்கள்!" என உணர்த்திய செயலும் அரசன் கண்டு மனத்திலே ஐயங்கொண்டான்.

அந்நிலையிலே மண்ணை உடைப்பிற் கொட்டிக் கரந்த கள்வர், வானிலே மறைந்து படைவீரரும் அமைச்சரும் கேட்குமாறு—மீனவன் களிப்படைய—வான்மொழி வழங்கினர் :

"தீநெறி செல்லாத செங்கோலனே ! உன் பொருள்கள் அறநெறியிலே வந்தவை. ஆகையாலே, தூயவான அவற்றை வாதவூரன் நமக்கும் நம்மைச் சார்ந்தவர்க்கும் அன்புடன் வழங்கினன். அதனை யுணராத நீ அவனைத் துன்புறுத்தினை. அதுகண்டு நாம் புலவுநாறும் வாயையுடைய நரித்திரளைப் பரித்திரளாக்கித் தந்தோம். அவை நள்ளிருளிலே அகன்றன. மேலும், தண்டலாளிகளிடம் விடுத்து நம் அடியவனை அல்லலூட்டினை. அதனைப் பொருமல் வைகையைப் பெருக்கினேம். வந்தியின் ஆளாய் வந்து, அவள் கைப் பிட்டுண்டு பிரம்படி பட்டு, மண்கொட்டி மறைந்தோம். அந்த அன்னையின் அல்லலை அகற்றிச் சிவபுரஞ் சேர்த்தோம் !

"இவ்வளவுஞ் செய்தது வாதவூரன் பொருட்டேயாம். இந்த மறையவன் தன்மையை நீ சிறிதும் அறிந்திலை. எம்மிடங் காதல்வைத்து, உனக்கும் இம்மை மறுமைப்பயன்களையுந் தேடித்தந்தனன். சான்ருேனாகிய அவன் அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கியவன். அவனை அவன் விரும்பிய நெறியிலே நிறுத்தி, அரசியல் வழி நின்று, அரசர்க்களந்த வாழ்நாள் குறையாமல், நிறைசெல்வக் கடலிலே திளைத்து வாழ்க !"

இருசெவியினும் இனித்த இம்மொழிகளாலே வழுதி அச்சமும் உவகையும் வியப்பும் அடைந்தான். "வாதவூரர் எங்குற்ரு," ரெனத் தேடி ஓடினன். பாம்பணிந்த பரமனுர் வாழுந் திருக்கோயிலிலே தம் இச்சைவழியிலே இருப்பவரைக் கண்டான். கண்டவுடன் திருவடிகளிலே விழுந்து வணங்கினன்.

"தொல்லையைத் தரும் உலகையாண்டு சுடுதுயரைத் தரும் நரகத்திலே விழும் திறம்படைத்த என்னறிவுக்

கேற்றவண்ணமே செய்தேன். நீங்கள் என் அளவற்ற தவப்பயனுக வந்து, இருமைக்கும் ஆதரவாளராய், அல்லலைத் தரும் வெம்பிறவிப் பிணிக்கும் அரிய மருந்தாயினீர்கள். அங்ஙனமிருந்தும், தங்களையறியாமல் ஒறுத்துத் தீமை செய்தேன். அருள்கூர்ந்து, இப் பிழையைப் பொறுத்து, முன்போலத் தங்கள் அரசியல் காவலை மேற்கொண்டு குற்றங்கடிந்து ஆள்க!"

அவன் வேண்டுகோளைக் கேட்ட வாதவூரர் புன்முறுவல் செய்தார் :

"அரசே! தாங்கள் அலைகடல் சூழ்ந்த உலகிலே இந்திரன் போலமர்ந்து அரசுபுரிவீர்களாக! உங்கள் இறைவர் அருளியவாறு நயந்து செய்வீர்களாக! தங்களைச் சார்ந்து வாழ்வோர் தூயவரே. தங்களைச் சார்ந்ததாலே உலகியலையும் மறைநெறியையும் நன்கு தெளிந்தேன். அதனுலே, உள்ளத் தூய்மையுற்றேன்; பொய்ம்மை யறிந்து நீங்கிச் சிவனுர்பால் அன்பு விளையப்பெற்றேன். அந்த அன்பினுலே மாயையின் செயலான பற்றை விளைவிக்கும் உலகியல் விளைவிலே பெற்ற துன்பம் வெந்தது. அருள்வடிவாகிவந்த இறைவர் மெய்யுணர்வை அருளினுர். அந்த இன்பத்துடன் தம் திருவடியைச் சூட்டித் தம்முருவாக்கினுர். உண்மை யறிவின்பமான அந்த ஒப்பற்ற பரசிவமே தம்மிச்சையாலே உலகையெல்லாம் படைத்துக் காத்தழிப்பவரான வானவரை யருளிய வானவர். அப் பெருமானுரே பிறவித்துன்பத்திற்கு அஞ்சி வந்தவர்க்கு மாருத பேரின்ப வீடளிப்பார். அவரே மந்தரம், கயிலை, மேரு, காசி முதலான உயர்ந்த இடங்களிலே அமர்ந்து, யாவருக்கும் இம்மை மறுமை யின்பங்களைத் தருவார். மேலும், எம்போன்றவர்களின் மனம் புறத்தே போகாமல் திருத்தி அறவடிவாகியிருப்பார். ஒப்பரும் மிக்கவருமின்றி, ஒருவராகவே எங்கும் நிறைந்த அந்தப் பேரொளியே இந்தத் திருவாலவாயிலே எழுந்தருளிய இறைவர். அவரே உள்ளங்கை நெல்லிக்கனிபோல முற்காலத்திலே கண்ணுவர் முதலானேர்க்கும் உண்மைப்பொருள் விளங்காத மறையை

வளர்த்தார். அவரே தம் அருளான—ஞானப்பொன்னாகிய—'தில்லை நகருக்குச் செல்க' எனப் பணித்தார். 'நாங்களும் அதற்கிசையவேண்டும்!''

வாதவூரர் மன்னனிடம் விடைபெற்றுக் கூடலிறைவரைப் பலமுறை வாழ்த்தி விடைபெற்று வணங்கிச் சென்றார்.

பாண்டியன் பரவல்

தம் பற்றையொழித்த பரமனார் திருவடியிலே பற்றுக் கொண்டுசெல்லும் வாதவூரரைப் பின்தொடர்ந்து, ''நின்மின்! நின்மின்!'' என அவர் கூறவும் விடாமல் கூப்பிடு தொலைவு சென்று, மறுமுறையும் அவர் திருவடி பணிந்து விடைபெற்றுத் திரும்பினான் செழியன். திரும்பியவன் நேரே கூடலிறைவர் திருமுன் சென்று, தான் பிரம்பை நீட்டியவுடன் முதுகைக் காட்டிய அருள்வெள்ளம் மகிழுமாறு வணங்கி உள்ளம் நிறைந்த நன்றி வாய்கொள்ளாமல் வெளிவரப் போற்றி வாழ்த்துகின்றான் :

''உடையவரே! அடையாளமாம்படி அன்று அருச்சுனன் அடித்த விற்றழும்பும், ஒரு தொண்டன்—சாக்கியன்—எடுத்தெறிந்த கல்லும்போலக் கடையேன் சினந்தடித்த கைப்பிரம்படியையும் தங்கள் அருமைத் திருமேனி பொறுத்ததோ? மணங்கமழும் மலரவன் திருமால் முதலான வானவரும் உலகேழுமுள்ள பல்வகையுயிருந் தாங்களேயோ? தங்கள் திருமுடியிலே பொருந்த மண் சுமந்தீர்களே! தங்கள் முதுகிலடித்த அடியின்வடு அடியேன் முதுகினும் பட்டதே! அடியேனுந் தங்கள் திருமேனியானேனோ? வினைக்கும் பொய்க்கும் அரிய கலமாகி உலகாண்டு, புலைநரகத்திலே சேர்க்கும் கொடுந்துயரை நீக்குவதற்குக் கையிலே காட்டும் இனிய சுவையுடைய மருந்தைப் போலத் தங்கள் திருவடியிலே என்னைச் செலுத்தும் அடியவர் இவரென்று அறியாமல் வாதவூரரை வருத்தினேனே! மாயையின் விளைவாலே மயங்கிப் பெருந்துறவியாரை ஒறுத்த நான் கொடியநரகிலே விழ்ந்தழியாமல் இன்று

அவருடைய உண்மைத் தொண்டை வெளிப்படுத்தித் தமி யேனுக்குத் தாயாகினீர்! தங்கள் அருளுக்குத் தமியேன் கைம்மாறுமுண்டோ?

"தங்களை யுணர்ந்த பெரியார்கள் மறைமுறைப்படி வேள்வி செய்தூட்டும் இனிய அமுதினும் வந்தியம்மையார் இட்ட பிட்டு மிகவுஞ் சுவையாயிருந்ததோ? எவ்வுயிர்க்குந் தலைவரான தாங்கள் பவளமனைய செவ்வாய் திறந்து அமுது செய்தீர்களே! தாயற்ற தங்களுக்கிந்த அம்மையார் அன்னை யானாளே! அக்காலத்திலே சிறுத்தொண்டரிடும் பிள்ளைக்கறி யமுதும் மென்று சுவையறிந்து கண்ணப்பர் இட்ட ஊனமுதும்போல் நரைமூதாட்டியார் இட்ட பிட்டையும் விரும்பி யுண்டு அடியார்க் கெளிய ராயினீர்!

"நரிகளை யெல்லாம் பரிகளாக்கி நடத்தினீர்கள் திசையை யன்றி ஆடையணியாத தாங்கள் அடியேன் கொடுத்ததுகிலைத் திருமுடிமேல் அணிந்தீர்கள்! இவ்வாறு மறைக்கரிய தாங்கள் எளியேன் வினையை வீட்ட வந்தீர்க ளென்றறியாமற் பரிக்காதலாலே இறுமாந்திருந் தேனே? விண்ணிலே பறவையாகவும் மண்ணிலே விலங்காயுஞ் சுழன்று புண்பட்ட மனமுடைய அந்த வானவர்கள் அன்று மண் சுமக்கும் ஆட்களாய் வந்திலரே! வந்திருந்தால் நம் அண்ண லாருடைய திருவடியையும் திருமுடியையுங் காண்பார்களே!" என்று பலவகையானும் புகழ்ந்து வாழ்த்தினான். பிறகு, "இப் பெருமானார் என்றும் அடியார்க்கெளியர்; இம்மை மறுமையை அருள்பவர். இவரைப் பணிவது நன்று," எனத் தேர்ந்தான். அன்றுமுதல் பல திருப்பணிகளும் முறையான வழிபாடும் பிறவும் நன்றாக வளம்பெற நடத்தினான். இவ்வாறு வெள்ளிமன்றுடையார் திருவடியன்பும் உயிர்த் தொகை யன்பும் பெருக வாழ்ந்து வந்தான்.

மகப்பேறு—சிவப்பேறு

இப்படி வாழும் நாளிலே, முற்காலத்தில் வாதவூரர் மூலமாகப் பெருந்துறைப் பெருமானார்க்கும் அடியார்க்கும்

அறநெறியிட்டிய தன்பொருள் சென்று உதவிய பயனே போல—முழுத்திங்களைக் கண்ட கடல்போல—எவ்வகைச் செல்வமும் நாடொறும் வளர இன்பமடைபவன், சகநாதன் எனும் மகவைப் பெற்று வாழ்ந்தான்.

பிறகு, அம் மகனுக்கு முடிதரித்து, அரசனாக்கினான். வாதவூரமைச்சரின் சார்பினாலே உண்மை நெறிவிளங்கி, இருவினை யொப்புப் பெற்று, அரனார் திருவருள் நோக்கினாலே மும்மலத் தொடரை யறுத்துச் சிவானந்தக் கடலிலே முழுகி முக்கட் பெருமானார் செந்தாமரைத் தாளின் நிழலை யடைந்தான்.

வாதவூரர்

வழுதியின்பால் விடைபெற்றுச் சென்ற வாதவூரடிகள் தம்முடைய குற்றமற்ற பாடல்களைக் கொள்வார் வாழும் பல திருநகரங்களையும் வணங்கித் தில்லை மூதூரை அடைந்தார். தெருத் தோறும் வீழ்ந்து வீழ்ந்து வணங்கியவாறு திருக் கோயிலை யடைந்தார். உண்மையான ஒளி விடும் அறிவுரு வான இன்பச் சுடராகிய சிவகங்கையிலே படிந்தார். பிறகு, தம் மெய்யிலே பாதிகொண்ட பராபரரைக் காணத் தனிப் பேரின்பக் கூத்தாடும் முதல்வரின் அருளாகிய பொன் மன்றைக் கண்டு காந்தத்தின் எதிரே இரும்பெனச் சென்றார்.

அன்று, குருந்தின் அடியிலே திருவடியை வைத்தாட் கொண்ட திருக்கோலமே அருளின்ப மன்றிலே எதிர் தோன்றி, வாவென்பார்போலப் புன்முறுவ லொளிரும் அழகிய திருமுகந் தோன்ற, நின்ற ஒப்பற்ற கூத்தரின் நிலையைக் கண்டு அஞ்சலி செய்தார்; நிலத்திலே விழுந்தார். பொருந்துதற்கரிய புலன்களையுங் கரணங்களையுங் கடந்து உண்மை அன்புருவமானார். தில்லைவனமாகிய தாமரை மலரில் விளைகின்ற சிவானந்தத்தேனை வண்டு போல் வாரி வாரிப் பருகினார். 'கண்டபத்து' எனுந் திருவாசகம் பாடியருளினார். அழலிலே வெண்ணெயென உருகி நின்றார். அப்போது வானளாவிய முடியுடைய பொன்மன்றுடையா

ரருளிய திருவாக்கின் வண்ணம் சென்று கீழ்த்திசையிலே தவத்தினர் உறையும் ஒரு வனத்தை விருப்புடன் அடைந்தார்.

அங்கே,

"குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு*
ஐந்தெழுத்தின் கொழுவாள் ஒச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப்
புலந்திருத்திப் புனிதஞ் செய்து,
நிறைசிவமாம் விதை விதைத்துப்
பசுபோதங் களைந்தருணல் நீர்கால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த
அமுதருந்தா தருந்தி நின்றார்!"

குறிகுணங் கடந்த, ஒப்பற்ற கூத்தனுருவான ஐந்தெழுத்தாகிய வாளை வீசிப் பொறிகள் கரணங்கள் எனும் காட்டை வெட்டியெறிந்து, உள நிலந் திருத்தினர். அந்த நிலத்திலே சிவமாம் விதையை விதைத்தார். ஆன்ம அறிவாகிய களையைக் களைந்தார். அருள் நன்னீரைப் பாய்ச்சினர்; ஆக, அந் நிலத்திலே விளைந்த அறிவுருவான பரமானந்த உணவைச் சிவபோதத்தாலே அருந்தி யிருந்தார்.

அப்போது மான்கூட்டமும் விறல்புலியும் வந்து ஒன்ருக நின்று உரிஞ்சும்! காட்டுப் பசுக்கள் கன்றெனநினைந்து உருகி மோந்து நக்கும்! இன்ப அருட்கண்ணீரைக் காட்டுப் பறவைக் கூட்டங்கள் பருகும்! பேரருட் கடல் இருக்குந் தோற்றம்போலப் பாலனைய திருவெண்ணீற்றடியார் அசைவின்றிச் சிவயோகம் பயின்றிருந்தார்.

அந்நாளிலே சில புத்தர்கள் இலங்கையினின்றும் போந்து, தில்லை மூவாயிரவருடன் சூள்கூறி ஏழுநாள்வரை வாதுகொண்டனர்.

அப் போரிலே ஏழுநாட்களுக்குள்ளே அந்தப் புத்தர்களை வெல்ல வேண்டுமென்று நினைத்திருந்த தில்லை யந்த

* "ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே!
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வா, முடியப் பார்." —உண்மை விளக்கம்.

ணர் கனவிலே தில்லைக்கூத்தர் எழுந்தருளி, "வாதவூரனைக் கொண்டு வாது செய்ம்மின்," என்றருளினர். அவர்கள் விழித்து, வனம் புகுந்து வாதவூரரை அழைத்தனர். மன்றி லாடும் முதல்வரருளின் வண்ணம் திற்பவர் மறுத்தனர். அந்தணர்கள் மனமயங்கி வருந்தினர்.

மறுமுறையும் மன்ருடியார், மறையவர் கனவில் "நாம் முன்பு பெருந்துறையிலே குருந்தடியிலே ஆட்கொண்டோம். இனிய இசையை வண்டுபோற் பாடியதால் 'மாணிக்கவாசக' என அழைத்தோம். அப் பெயரால் அழைத்தால் நம் ஆணை யென அறிவான்,' என்றருளினர்.

அந்தணர்கள் அது கேட்டு, உறக்கம் விட்டு எழுந்து சென்று, "மாணிக்கவாசக! வருக!" என அழைத்தனர். இறைவர் அருள் இதுவென நினைந்து மூவாயிரவருடன் சென்று மன்ருடியாரை வணங்கிப் பொன் மண்டபத்திலே புகுந்து அமர்ந்து புத்தருடன் வாதிட்டு வென்றார்.

இதனையறிந்த ஈழ மன்னன் தன் மகளான ஊமைப் பெண்ணொடும் தில்லைக்கு வந்தான். 'என் மகளின் ஊமை யைத் தீர்த்தவர் சமயத்திலே சேர்வேன். அவரே வென்றவ ராவார்," என அறிக்கை விட்டான். புத்தர்கள் தங்கள் இறைவரே மணிமந்திர மருந்துகள் என்று நினைத்து ஊமை யைப் போக்க முயன்றனர். முடியாமல் திகைத்தனர்.

வாதவூரர் திருமுன்னே தன் மகளை அரசன் கொண்டு விட்டுத் தாங்களே தீர்க்கவேண்டுமென்று வேண்டினன். மாணிக்கவாசகர், மன்றுளாடிய திருவடியை மனத்திலுன்னித் தம் அருட்கண்ணலே அந்தச் சிறுமியை நோக்கி இறைவனர் சிறப்பை வினவுரையாகப் பாடி வினவ, அப் பெண்மணி விடையாக வாய்திறந்து பேசி ஊமை தீர்ந்தாள். மன்னன் சிவனருளை வியந்து சைவனானன்.

வாதவூரர், பிறகு, பலநாள் வரையிலே குற்றமற்ற மணியான மொழியாலே வாசகமாலை சாத்தி வழிபட்டுப் பொன்மன்றுளாடும் இறைவர் திருவடிக் கீழ்ச் சென்று முடிவற்ற இன்ப வொளியுடன் கலந்து நின்றார்.

———

௬௨. பாண்டியன் சுரந்தீர்த்தல்

கூன்பாண்டியன் வெற்றி—மங்கையர்க்கரசியார்

அரிமர்த்தன பாண்டியனுக்குப்பின் சகநாதன், வீரவாகு, விக்ரமவாகு, பராக்கிரமவாகு, சுரபிமாறன், குங்குமவழுதி, கருப்புர பாண்டியன், காருணிய வழுதி, புருடோத்தம மாறன், சத்துருசாதன பாண்டியன், கூன்மாறன் என்பவர்கள் கன்னி நாட்டுக் காவலராயிருந்தனர்.

கூன்பாண்டியன் வலிமிக்கவன். அவன் போரிலே சேரனுஞ் சோழனும் தோல்வியுற்றனர். ஆகவே, தமிழ்நாடு மூன்றுங் கூன்மாறன் ஆட்சியிலே குலவியது. சேரன் தன் நாட்டுப் பெருங்களிறுகளையும் பொருட் குவைகளையும் மணிக்குவியல்களையும் வண்டணைய கருங்கூந்தல் வல்லிக் குழாத்தையுங் கொடுத்துக் கூடலரசன் தாளில் விழுந்து வணங்கித் தன் மலைநாட்டைப் பெற்றுத் திரும்பினான்.

சோழனும் அவ்வாறே தான் பெற்ற பிடியை—உலகமெங்கும் குற்றமற்ற புகழொளியால் விளக்குஞ் சைவ மணியை—கன்னிப் பருவமுடைய மங்கையர்க்கரசியாரை—வழுதிக்கு வன்னிசான்றாக மணம்புரிந்து நல்கி, வள நாட்டை வாங்கிக்கொண்டான்.

பிறகு, வளவன் தன்மகளுக்குச் செல்வமாக அளவற்ற செல்வமும், செம்பொன்னுடைகளும், பணிப்பெண்களும், பிறவும் பாண்டியன் மனம் மகிழச் சிறப்புடன் கொடுத்தான். இவையேயன்றிக் குற்றமற்ற பண்பினனுங் குலச்சிறையென்னுஞ் சிறப்புறு கல்வி கேள்வியுடைய செம்மலையும் அளித்தனன்.

பாண்டியன் தன் காதலியுடன் திருமால் இலக்குமியை மணந்து செல்வது போல மதுரைப் பெருநகர் வந்தடைந்தான். குலச்சிறை யென்பான் நற்பண்பினுங் கேள்வித் துறையினும் அறிவினும் மேம்பட்டிருப்பதை யறிந்த கூன் வழுதி அவனுக்கு அமைச்சுத் தொழில் நல்கி நானிலம் புரந்து வந்தான்.

சமண நெறி

பாண்டியன் தன் தீவினைவலியாலே கூனடைந்தது போலவே, சமணர் கற்பனையிலே சிக்கி, நான்மறையொழுக்கம் விட்டுச் சமணநெறியிலே தவழ்ந்தான். ஆகவே, அரசன் சென்ற வழியிலேயே பாண்டிநாடு முழுதும் பாயுடுக்கையும் மயிற்பீலியுமாகி 'அத்திநாத்தி' நாவினரான மக்கள் நிறைந்தனர். பாண்டிமாதேவியார் மங்கையர்க்கரசியாரும், அமைச்சரான குலச்சிறையும், நீரிற் குழைத்து விளங்கத் திருநீறிடாமல் சிவனாரடியிலே சிந்தை செலுத்தினர்.

காழிப் பிள்ளையாரைப் பற்றிக் கேள்வியுற்றனர்

இருவரும், ஒரு நாள், 'சமணக்களை களைந்து சைவப் பயிர் வளர்க்குந் திருவினர் கிடைப்பாரோ?' என்ற கவலையுடன் கூடலிறைவர் திருமலரடி வணங்கச் சென்றனர்.

"அறிவு மயக்கத்துடன் வேண்டிய சனகர் முதலான முனிவர்களுக்கு அக்காலத்திலே விளக்கங்காட்டிய நான்மறைப் பொருளே! இந்தக் கொடிய சமண் வலையிலே அகப்பட்டு மதிமயங்கிய வழுதியின் அறிவை மீட்டுத் தங்கள் திருவடியிலே பதிய வைத்தருளல் வேண்டும்,'' என்று வணங்கினர். அப்போது மறையவன் ஒருவன் சிவமணி மாலை யணிந்தோன் — மெய்யிலே திருநீறு விளங்குவோன் — புண்டரிக புரத்திலிருந்து வருவோன்—கூடலிறைவரை வணங்க வந்தான். அவனை அரசியாரும் அமைச்சருங் கண்டனர்.

"அந்தணரே! எங்கிருந்து வந்தீர்?" என வினவினர்.

"சோழனுடைய காவிரி நாட்டினின்றும் வருகிறேன்.''

"அங்குப் புதுமை யேதாவ துண்டோ?''

"உண்டு, உண்டு! சிவனார் திருவடியிலே பதிந்த சிந்தையர் ஒருவருளர்; அவர் பிறந்தருளிய நகர் சீர்காழி;

தந்தையார் சிவபாத இருதயர்; அவர் சமணரை வெல்ல வரம் வேண்டி அப் பிள்ளையைப் பெற்ருர்; சிவனுரருளாலே அமணிருள் சீக்க வந்த அக்குழந்தைப் பெருமானுர் தம் மூன்ருமாண்டிலே தோணிபுரப் பெருமானுராலும் அம்மையாராலும் திருமுலைப் பாலிற் சிவஞானங் குழைத்தளிக்கப் பெற்ற பேருளர். அப் பெற்றியாலே மறைகளையும் ஆகமங்களையும் ஓதாமலேயே உணர்ந்து ஞானம் பெற்றுத் திருஞான சம்பந்த ரெனுஞ் சிறப்பும் பெற்ருர். அவர் நாவிலே நாமகளும் இடம் பெற்ருள். ஆகவே, அழகிய மறைகளை யெல்லாஞ் செந்தமிழாகக் கூறுகிருர்.

"கரும்பிலே கோதை நீக்கிச் சாற்றினுலே அட்ட கட்டியைப் போல, வரம்பிலாத மறைகளை யெல்லாம் மாண்புறத் தெளிந்தாராய்ந்து, கொன்றை வேணியரிடந் தோறுஞ் சென்று, தமிழ் மாலையாகச் சிவமணம் விளைய அணிந்து வருகிருர் காழிப் பிள்ளையார். மேலும், உமைபங்கரருளாலே பொற்ருளம், முத்துச்சிவிகை, காளம், முத்துப் பந்தர் இவற்றை முறையாகப் பெற்றுளார். இவை மட்டுமோ, பாலையை நெய்தலாக்கினுர்; திருவீழிமிழலையிலே படிக்காசு பெற்ருர்; திருமறைக் காட்டுக் கதவினை அடைக்கப் பாடினுர். இவ்வாறே பரமனுர் திருநகரெங்கும் பாடி வணங்கி வருகிருர். உங்கள் நாட்டிற்கும் வருவார்!"

காழி மணியே! வருக!

இம் மொழி கேட்ட இருவரும் அன்றே அமணரை வென்று, தம் மரசன் மெய்யிலே அழகிய திருநீறணிந்து, அதனுலே சிவபுரமடைந்தவர் போல மகிழ்ச்சியிலே முழுகினர். உடனே தங்கள் பேரைக் குறிப்பிட்டு விண்ணப்ப மொன்று சண்பையர்கோனுக் கெழுதி அந்த அந்தணன் கையிலே விடுத்தனர் பிறகு மகிழ்வுடன் சிவனுர் திருவடியை வணங்கிச் சென்றனர்.

பண்பட்ட மறைச் செல்வனுன அவன் விரைந்து சென்று, காழிப் பெருமானுரிடம் சமணர் சூழ்ச்சியைக்

கடந்த பாண்டிமா தேவியாரும் அமைச்சரும் தந்த விண்ணப்பத்தைக் கொடுத்தான்.

அவ் விண்ணப்பத்தில், "சீகாழிப் பிள்ளையார் திருவடி பணிந்து குலச்சிறை விளம்புகிற விண்ணப்பம். தாங்கள் இங்கே எழுந்தருளி வந்து, சமணரை வென்று எங்களரசர்க்குத் திருநீறளித்துத் தென்னுட்டைத் திருநீற்று வழியிலே செலுத்தி எங்களைக் காத்தருள வேண்டும்"

என்றெழுதியிருந்தது.

உடனே கவுணியர் தலைவர், பாண்டி நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

உடனிருந்த திருநாவுக்கரசர், "இது தகாது. தாங்கள் சிறு குழந்தை. சமணர்களோ மிகப் பெரியவர்கள்; இரக்கம் இல்லாதவர்கள். பலநாட் பழகிய எனக்கே அவர்கள் செய்த வேதனை அளந்து கூறுதற் கியலாதது. செல்ல வேண்டா. தங்களுக்கும் இப்போது நாளுங் கோளும் வலியில்லாதவை," என்று தடுத்துக் கூறினர்.

புகலி வேந்தர், "அப்பரே! தாங்கள் எம்பெருமானுர் அருளிலார்போல இசைக்கின்றீர்கள். சமணர் செய்த வேதனையிலே தப்பிய தாங்களா இவ்வாறு இயம்புவது? மற்றும், நாளும் கோளும் விலங்கும் புள்ளும் அவுணரும் பேயும் பூதமும் பிறவும் அம்மையப்ப ராணையாலே நடப்பன. அவர் நம் உள்ளத்திலே திருக்கோயில் கொண்டிருப்பதனுலே தீங்கிழைக்குமோ? அஞ்ச வேண்டா!" என வெளிப்பட்டார்.

முரசுகள் முழங்கின. சங்கும் எக்காளமும் வாய் விட்டொலித்தன. சாமரைகள் வீசப்பட்டன. முத்துப் பந்தரின் கீழே முத்துச் சிவிகையிலே சமணுகிய இருளைப் போக்கும் கதிரவன்போலச் சிவநகரெங்குஞ் சென்று பாடியவாறு சோழநாடு நீங்கிக் கன்னிநாட்டை யடைந்தார். வெவ்விய பாலையும் முல்லைக் காடும் கடந்து, களிறுகள்

பிளிறும் மலைகளைத் தாண்டி அங்கயற்கண் ணம்மையார் பங்கர் வீற்றிருக்கும் கூடலின் புறத்தை யடைந்தார்.

புண்ணியத் திருநீறணிந்த தொண்டர் குழுவின் நடுவே முத்துப் பந்தரின் கீழே முத்துச்சிவிகையின்மீது காழிப் பிள்ளையார் எழுந்தருளுந் தோற்றம் இனிய பாற்கடலிலே தோன்றிய முழு வெண்மதியின் விளக்கம் போன்றிருந்தது.

செந்தமிழ்த் தேனூறும் செம்மலர்வாய்ப் பிள்ளையார் வருகின்றாரென்று அடியார் ஆரவாரிக்கும் ஓசையைக் கேட்டுச் சமணர்கள் எதிரே வந்து, "நீங்கள் உங்கள் கடவுளைக் கும்பிட வந்தால் இந்த வெற்றிச் சின்னமும் வீறும் ஏன்? யாரை வென்றீர்?" என்று கூறித் தடுத்தனர்.

மதயானை தாமரை நூலாலோ கட்டுப்படும்? சைவக் குழுவினர் அவர்களுடைய தடையைமீறி, மதுரை நகரினுட் புகுந்து, கூடலிறைவர் திருக்கோயிலை யடைந்தனர். காழிப் பிள்ளையார் வெள்ளானைச் சாபத்தைத் தீர்த்த அருளாளரை வணங்கி மும்முறை வலம் வந்தார். பிறகு அங்கயற்கண் ணம்மையாரையுந் தொழுது பேரின்ப வெள்ளத்திலே முழுகி நின்றார்.

"கூற்றுவனை முனிந்த கோவே! சமணரை வென்றி கொள்ளுமாறு வாது செய்யும் வன்மை பெறத் திருவுளஞ் செய்க!" என்று பண்ணிசைப் பதிகம் பாடினார். அண்ணலா ருளைப் பெற்று வெளிவந்தார். அப்போது வாகீச முனிவரெனும் அடியாரொருவர் வேண்டிக் கொள்ள அவர் திருமடத்திற்கு எழுந்தருளினார். அங்கே அடியவருடன் பிள்ளையார் அமுதுசெய்து தங்கியிருந்தார்.

அன்றைய இரவிலே அமணர் செய்யவும் நினைக்கவும் ஒண்ணாத தீய செயலையுந் தன் மரபின் வந்த மங்கையர்க் கரசியாரின் வருத்தத்தையுங் காணப் பொருமற் கதிரவன் மேலைக்கடலிலே குளித்தான். மாறுபட்ட அமணர் செய்கிற வஞ்சனைக் கிடமாக ஒத்து வந்ததுபோலக் கங்குல் பரந்தது.

அமணர் கோழுவுந் தீ

வைதீக மடங்கல் வந்திருப்பதை யறிந்த சமணர் எண்ணாயிரவரும் ஒன்றுகூடி முத்தமிழ்வீரகர் மேல் 'பழித்தழல்' இழைத்தனர். அழற்கடவுள் அவர்கள் வேண்டுகோளுக் கிசைந்திலன். எனவே, தீயைக் கையிலெடுத்துச் சென்று எவருமறியாமல் அம் மடத்திலே செருகினர். உடனே தீபரவியது. அடியவர் கண்டு அஞ்சி ஆளுடைய பிள்ளையாரிடம் விண்ணப்பித்தனர். திருஞான சம்பந்தர் அங்கிருந்தவாறே கூடல் அண்ணலாரை — எண்ணுருவாய இறைவரை — "சமணர் பொய்யுரை மேற்கொண்டு பழைமையை விட்ட வேந்தனைக் சமணர் விட்ட தீ பற்ற அருள் புரிக," என்று பதிகம் பாடினார்.

அந்த நொடியிலே அந் நெருப்பு வெப்புநோயாகி வேப்பந்தாரானைப் பற்றியது. அவன் அணிந்த பல்வகை அணிகலன்களும் வெந்தன. பனிநீருங் கலவைச்சந்தன மும் பொடிந்தன. படுக்கையுஞ் சருகாகியது. பாண்டியன் பதைத்தான். அவனுக்குற்ற நோயைக் கண்ட மங்கையர்க் கரசியாருங் குலச்சிறையுந் திடுக்கிட்டு நல்ல மருத்துவரை யழைப்பித்துக் குற்றமற்ற பல மருந்துகளைக் கொடுத்தனர். அம் மருந்துகளாலும் மந்திரத்தாலும் அடங்காமல் மேலும் மேலும் மிகுவதைக் கண்டு சோர்வுந் திகிலுங் கொண்டனர்.

வேறு வழியின்மையாற் சமணரை அழைத்து விடுத்தனர். அவர்களனைவரும் தம் தவத்திறனாலும் மருந்தின் வலிமை யாலும் தணியாமற் பெருகுவதைக் கண்டு தளர்வுற்றனர். இரவும் விடிந்தது.

கதிரவன் தன் மரபோனுக்குக் காதல் மருமகன் கொண்ட நோயைக் கேள்வியுற்றுக் கரிய இருளாகிய போர்வையைத் தன் கைகளா லெடுத்துப் பார்க்க வந்தவன் போலக் கீழைக் கடலிலே தோன்றினன்.

கூன்பாண்டியன்—சவுந்தர பாண்டியனானன்

தூய சைவப்பயிரை வளர்க்கும் வேலியாகவுள்ள அரசியும் அமைச்சரும் அரசனை நோக்கிக், "காலனுடைய

பாசத்தையுஞ் சுடுகின்றன. இக் கொடியநோய் காழிப்பாலரு வாயராலன்றித் தீராது,'' என்றனர்.

"சைவர் நீறிட்டுப் பார்ப்பது தகுமோ?''

''அரசே! எவ்வகையாலாவது தாங்கள் நோய்தீர்ந்து பிழைத்தல் வேண்டுமே! இதனைவிட வேறு நலமுண்டோ?''

''நன்று! அழைமின்.''

குலச்சிறையார் களிகூர்ந்தார். நகரெங்கும் மங்கல அணி செய்வித்தார். பிள்ளையார் எழுந்தருளியிருக்குந் திருமடத்திற்கு விரைந்து சென்றார். அன்று, கேள்வியினாலே பருகிய அமுதை இன்று விழிகளாரப் பருகினார். கண்பெற்ற பேறு பெற்றேனெனக் களித்தார்; ஓடி வணங்கினார்.

''தீய சமணர் சூழ்ச்சியை வென்றவரே! எழுந்திரும்!'' என்றனர், இளங்கோலப் பெருமான். குலச்சிறையார் எழுந்து கைகுவித்து நின்றார். பாண்டிமாதேவியாரும் வந்து வணங்கி ஒருபுறம் நின்றனர்.

இருவரையும் நோக்கி, ''நன்றா யிருக்கின்றீர்களோ?'' என வினவினர் பிள்ளையார்.

''தங்களருள் பெற்ற எங்களுக்கு எப்போதும் குறை வில்லை!'' என்று கூறி, மீண்டும், ''சமணர்கள் ஒழியவும் பாண்டிநாடு சைவத்தா லுய்யவும் இன்று தங்களருளாலே அரசருக்கு வெப்புநோய் வந்துளது. அதனைத் தாங்கள் தீர்த்தருளவேண்டும்!'' என வேண்டி நின்றனர்.

''அப்படியே ஆகுக!'' என அருளி, முத்துச் சிவிகையின் மேல் திங்கள் தன் மரபினனான பாண்டியன் வெப்புநோய் தீர்க்கச் செல்வதுபோல அமர்ந்து, அவர்களுடன் அரண் மனையை நெருங்கினார் பிள்ளையார். வாயிலெங்குந் தூபமும் மங்கலவிளக்கும், நிறைகுடமும் கொடிகளும் நறுமணப் புகையும் நிறைய, சைவ எக்காள ஒலி மன்னவன் செவியிலே நிறைய, அரண்மனையினுட் புகுந்தார்.

அரசன் மருங்கிலே இடப்பட்டிருந்த அணையின்மேல் அமர்ந்தார். பாண்டியனை நோக்கினார். அவர் பார்வையிலே கவர்ச்சியுற்ற காவலன் பொய்கையிலே யிருக்குந் தாமரை போல முகமலர்ந்து, "கொடியேன் பிணியைத் தீர்த்தருட் கொள்க!" என்று வேண்டினான்.

சமணர் கேட்டுத் தயக்கமுற்றுக் "கலைவல்ல பாண்டிய! இவர் வலப்புற நோயையும் நாங்கள் இடப்புற நோயையுந் தீர்க்கும்படி கட்டளையிடுக!" என்றனர். பாண்டியன் அதற்கிசைந்தான்.

உடனே, சமணர் அசோகனை நினைந்து கைப்பீலியாலே தடவினர். கையிலுள்ள கரகநீர் தெளித்தனர். தணிவதற்கு மாருக நெய்சொரி கனலென நிமிர்ந்தது நோய்.

சமணர் செருக்கழிந்து மானம் வருத்தத் தலைகுனிந்திருந்தனர்.

காழி வேந்தர் புண்ணியத் திருநீற்றைப் பையிலிருந்தெடுத்து, வெப்புநோயைத் தணிக்க விரும்பினார். அதனைச் சமணர் மாயநீறென்று தடுத்தனர். பிள்ளையார் புன்முறுவலுடன், "கூடலிறைவர் மடைப்பள்ளியிலிருந்து நீறு கொணர்க!" என்றனர். நொடியிலே பணியாளர் கொண்டு வந்தனர்.

அதனைப் பிள்ளையார் வாங்கி, "மருந்தும் மந்திரம் முதலானவைகளும் மறை மொழிவதும் இன்ப வீட்டைக் கொடுப்பதும் இன்பமும் பொருளும் விளங்கிய திருவாலவாயான் திருநீறே!" எனப் பொருளமைந்த திருப்பதிகம் பாடி வழுதியின் மெய்யிலிட்டனர்; தடவினர்; உடனே, துறவிகளின் வெகுளிபோலத் தணிந்தது வெப்பம். அம்மட்டோ, நறுமணங் கலந்த குளிர்ந்த நீரைச் சந்தனத்துடன் கலந்து தடவியதைப் போன்ற குளிர்ச்சியையடைந்தது.

"பொழிந்த தண்மதுத் தார்புனை பூழியர் கோனுக்
கிழிந்த செய்கையர் கைதொட எரியிடு சுரத்தாற்
கழிந்த துன்பமுங் கவுணியர் கைதொடச் சுரந்தீர்ந்
தொழிந்த இன்பமும் இருவினை யொத்தபோ லொத்த."

பாண்டியன்மேற் சமணர் கைபட்டவுடன் வெப்பநோய் மிகுந்து உண்டான துன்பமும், காழிப்பிள்ளையார் கைப்பட்டவுடன் வெப்புநோய் தணிந்து உண்டான இன்பமும் இருவினையொத்தவை போன்றன.

வழுதிக்குச் சமணரின் மயக்கந் தீர்ந்தது. "ஐயரே! இவ் வெப்பம் ஆற்ற வியலாதது! ஆற்ற வியலாதது! அடியேன் பிழைக்கவேண்டுமானால், அதனையும் நீக்குதல் வேண்டும்!" என்று வேண்டினான்.

இடப்பக்க வெப்புநோயையும் முன்போலவே வெண்ணீறு தொட்டுத் தடவுமுன் முன்னுள்ள கூனுடன் வெப்புநோயும் ஒழிந்தது. பாண்டியன் அழுக்ககன்ற மாணிக்கமெனப் பொலிவுற்றான். அதனாலே அவன் சவுந்தரபாண்டியன் எனப் பெற்றான். காழிப்பிள்ளையாரின் திருநோக்காலும் பரிசத்தாலும் தெளிந்த மொழியாலும், அவருடைய திருவடியை வணங்கிப் பெற்ற ஐந்தெழுத்தினாலும் சமணநெறியை யிகழ்ந்து நீக்கிச் சைவநெறி யடைந்து தூயனானான்.

———

சுசு. சமணரைக் கழுவேற்றியது

சமணரை வெல்ல அருள்!

கூன்பாண்டியன் சவுந்தரபாண்டியனான பிறகு; பாண்டிமா தேவியாரும் குலச்சிறையும் காழிவள்ளலை வணங்கி, "அடிகளே! பாண்டி நாடெங்கும் சமணம் பரவியுள்ளது. இதனையும் போக்கியருளல் வேண்டும்," என வேண்டினர்.

பிள்ளையார், "கூடலிறைவர் திருவுள்ள மறிவோம்," என்று திருக்கோயிலடைந்து, மற்றைய இருவருடன் பொற்றாமரை வாவியிலே படிந்து, அங்கயற்கண்ணம்மை பங்கரைத் தொழுது வேண்டிக்கொண்டார்.

களிறுரித்த கண்ணுதலார் வான்மொழியாக, "நீங்கள் விரும்பியவாறு வெற்றிபெற அருள்வோம். சென்று வாது புரிக!" என அருளினர்.

மறுநாட் காலையில், அரசியாரும் அமைச்சரும் பிள்ளையார் மடத்திற்குச் சென்று, "சமணரை வெல்லச் சூழ்ச்சி யாது?" என வணங்கி வினவினர். பிள்ளையார் அவர்களுடன் பாண்டியனை யடைந்து தக்கவாறு, கூறி அவன் விருப்பமும் பெற்று மகிழ்ந்தனர்.

சமணரிடையிலே—

சமணர்கள் பாண்டியனுடன் வெப்புநோய் தீர்க்க வியலாமல் நாணத்துடன் இல்லமடைந்தபோது மனைவி மக்கள் சூழ்ந்து பழித்தனர்.

"பாண்டியன் அடைந்த தீயபிணியைத் தீர்க்க இயலாமல் ஒரு மழலைவாய்ச் சிறுவனுக்குத் தோற்றீர்களே! உங்களாலே அருகரை வழிபடும் எம் போலியர்க்கெலாம் பழிதேடினீர்! பாண்டியனுஞ் சாம்பற்பூசுஞ் சமயமடைந்து சிவனே இறைவனெனக் கொண்டு உங்கள் நோன்பு

நெறியை முற்றும் விட்டானே! உங்களுக்கினி நிலையு முண்டோ?''

இவ்வுரை பொருத சமணர்கள் பிள்ளையாருடன் வாது செய்ய எழுந்தனர். அவர்களை அவர்கள் மனைவியர் தடுத்தனர்.

''உங்களுக்குத் தக்க காலம் இதுவன்று. சென்றால் அரிய துன்பம் மிக அல்லலுறுவோம். செல்லாதீர்கள்! நாங்கள் இரவு கண்ட கனவு கொடிது. அதனைக் கேளுங்கள்,'' என்று கூறுவார்கள்: —

''நம்முடைய பாழியிலும் பள்ளியிலும் ஓயாமல் எங்கே நோக்கினும் சடையும் தருப்பையும் சாம்பல்மேனியும் சூலப் படையும் நெருப்பென விழிக்கும் புலவு வீசும் வாயையுடைய பெரிய புலியின் தோலும் உடையவர்களாகச் சிலர் வந்து வந்து உலாவுவதைப் பார்த்தோம். கன்னித்துறவியரான அன்னங்களும் மணம் புரிந்தபின் துறவியரான ஆரியாங்கனைகளும் விதவைகளானபின் துறவியரான அக்குரைசகளும் இருக்கும் தவப்பள்ளிகளைப் பன்றிகள் சிதைக்கக் கண்டோம். மொட்டைத் தலையும் உறியிலே குண்டிகையும் கோவணங் கட்டிய கோலும சிவன்பெயர் செப்பும் நாவும் உடைய சைவத்துறவிகள் எங்கும் உலாவுவதைப் பார்த்தோம்.

''மிகுந்த சீற்றமுடைய யானைக்கன்றொன்று போந்து சூழ்ந்துகொண்டு நம் அடிகளின் குழுவைத் துரத்தி மலர்ந்த கிளைகள் அலைய வண்டுகள் இரங்கியோடப் பிண்டியைப் பாய்ந்து வேருடன் பறிப்பதைப் பார்த்தோம். மூவிலை வேலிலும் கூரிய முனைக்கழுவிலும் நீங்கள் ஏறக்கண்டு மனம் நடுங்கி மார்பு சிவக்கத் தளிர்கைகளாலே அடித்துக்கொண்டு மணங்கமழுங் கூந்தல்சோர நாங்கள் அழக் கண்டோம்.

''மேலும், உங்கள் இந்திரசாலமும் மோகனம், ஆகருடணம், வசியம், அதிர்ச்சியம், அஞ்சனம், தம்பனம், வாதம் ஆகிய கலைகளும் இப்போது துணைபுரிய வில்லையே! அவை கள்ளராற் கொள்ளை போயினவோ? நெருப்பிலே வெந்

தனவோ? வெள்ளத்தாற் கொண்டுபோகப் பட்டனவோ? அல்லது சேமிக்கப்பட்டுள்ளனவோ?

"முன்னர் வேள்வியிலே களிற்றையும் பாம்பையும் பசுவையும் விடுத்த நம் முன்னோர் பட்டதும் அறிவீர்கள். நீங்களும் பாண்டியன் வெப்புநோயை விலக்கிலீர். அவ்வாறே இனியுஞ் செய்யும் அலுவல் முடியுமோ என்னவோ? சிந்தனை செய்யுங்கள். ஆகவே, இன்று நீங்கள் செல்லாதீர்கள்."

இம்மொழி கேளாமற் செல்லத் தொடங்கிய அவர்களின் கையைப் பற்றி இழுத்துந் தடுத்தனர். சமணர்கள் பெண்டிர் சொல்லைக் கேட்பது பிழையென மறைந்து மறைந்து செல்லத் தொடங்கினர்.

சமண ஆசிரியர்களின் வாழ்க்கைத் துணைவியர், "எங்கள் சொல்லைக் கேளாமற் செல்லும் உங்களுக்குத் துன்பமே உண்டாகும்," என்று சினந்து கூறினர்.

எதற்கும் அஞ்சாமல் வினைவழியே சமணர் சென்றனர்.

அப்போது செம்போத்து முதலிய பறவைகள் குறுக்கே பறந்தன. பாம்பும் நரியும் பூனையும் எதிரே வந்தன. விதவைகள் எதிர்ப்பட்டனர். பசுக்கள் கதறின. பச்சை ஓணான் தலையிலே விழுந்தது. கால்கள் இடறின. இடக் கண்களும் இடக்கைகளுந் துடித்தன.

இந்தத் தீய நிமித்தங்களையும் பாராமல் நகருக்கு வெளியே அச்சத்துடன் ஓரிடத்திலே கூடினர். நீண்ட போது சிந்தித்து, "நாம் அரசனைக்கண்டு, அவன் ஆணை பெற்றுப் பகைவனை வாதினால் வெல்வோம்," என்று முடிவுசெய்தனர்.

பின்னர், யாவரும் அரசவை நாடிச்செல்கையில் எதிரே திருவாலவாய்ச் சிவனாரைக் காலைவழிபாடு செய்து விட்டுத் தம் திருமடத்திற்குச் செல்லும் கவுணியர்குலப் பிள்ளையாரைக் கண்டனர். அவரை மறித்துச் சூழ்ந்து கொண்டனர்.

வாதங்கள்

சமணர் பின்வரப் பிள்ளையார் அரசவை யடைந்தார். அரசன் அவரை வரவேற்று, அரியணையிலே இளங்கதிரவ னென்ன எழுந்தருளச் செய்தான். அவருக்குக் கிடைத்த வரவேற்பைக்கண்டு மனம் புழுங்கினர் சமணர்கள்.

"இன்னும் குதலைமாருத சிறுவனே! 'காக்கையேறப் பனம்பழம் விழுந்தாற்போல' உன் நல்லூழினாலே—'மயக்கந் தரும் மந்திரத்தினாலே—'மன்னனுடைய வெப்புநோயைத் தீர்த்தோ,' மென்று செருக்கடையாதே! நத்தையும் நீர் வண்டும் போன்றவை செல்லும் வழி எழுத்தாய் அமையினும் அமைவதுபோல, உன் கையிலிருந்து சிந்திய சாம்பலும் சிறு சொல்லும் மருந்தும் மந்திரமுமாகிப் பாண்டியன் வெப்பு நோயைத் தணித்தனபோலும்! எனவே, இதனைக்கொண்டே வெற்றியையுந் தோல்வியையும் விளம்பிடமுடியாது. உங்கள் மந்திரத்தை ஓரேட்டில் எழுது. எங்கள் மந்திரத் தையும் ஓரேட்டில் எழுதுகின்றோம். இரண்டையும் நெருப்பி லிடுவோம். வெந்தது தோற்றதாகவும் வேகாதது வென்ற தாகவுங் கொள்வோம்.

"இது சிவனுறையும் நகர். ஆகையால், இந்நகரின் புறம்பே சென்று ஓரிடத்திலே வேம்பணிந்த மீனவன்முன் இந்த அனல்வாதம் புரிவோம்."

அரசனும் ஆளுடைய பிள்ளையாரும் ஒப்பினர்.

சமணர்களே முன்புசென்று மணமுரசு உறங்காத மதுரை நகரின் வெளியே கீழ்த்திசையிலே நெருப்புக் குழி யொன்றைத் தோண்டி மரக்கட்டைகளையிட்டு மூட்டினார்கள். நெருப்புக் கொழுந்து நிமிர்ந்தது.

அவ்வளவிலே பாண்டியனுங் கவுணியர்கோவும் மங்கை யர்க்கரசியாருங் குலச்சிறையாரும் அளவற்ற சிவனாடியாரும் வந்து சேர்ந்தனர். சிவனாருளும் வந்தது.

வாதந் தொடங்கப் பெற்றது.

எண்ணாயிரஞ் சமணரும் தத்தமில் முயன்று வேறு வேறு மந்திரங்களை நீரிலே நனைத்து, ஒருங்கே சென்று வானிமிர்ந்த தீயின் நாவிலே சேர்த்தனர். அந்த நொடியிலேயே காய்ந்த கருப்பங்கோது போலக் கரிந்து சாம்பராயின எல்லா ஏடுகளும். சமணர் முகங்கரித்தனர். கண்டோர் கைகொட்டி நகைத்தனர்.

சீர்காழிச் செம்மலார் தாம்பாடிய தேவாரத் திரு நூலிலே கயிறிட்டுப் பார்த்தார். 'போகமார்த்த பூண் முலையாள்' எனும் திருநள்ளாற்றுப் பதிகங் கிடைத்தது. அந்த ஏட்டை யெடுத்துத் தீயிலே சேர்த்தார். அது பன்னெடுநாள் நீரிலே கிடந்ததைப்போலப் பசுமை பெற்றிருந்தது. அரசனும் அரசியும் அமைச்சனும் பிறரும் பிள்ளையாரை வாழ்த்தி ஆரவாரித்துக் களித்தனர். அன்றுமுதல் அந்தப் பொதுஇடம் ஞானசம்பந்தர் பெயராலே 'சம்பந்த நத்தம்' என வழங்கப் பெற்றது. இப்போது 'சாம்ப நத்தம்' என வழங்குகின்றதாம்.

திருஞானசம்பந்தர் அந்த ஏட்டை முறையுடன் எடுத்து வைத்துக்கொண்டு வழுதியை நோக்கினர். சமணர்கள் அவையோர் இகழ்ச்சியைப் பொருது சீற்றத்துடன் செப்புகின்றார்கள் :

'சிறுவனே! நாங்கள் எழுதியிட்ட எண்ணாயிரம் பச்சையேடுகளும் வெந்துபோயின. நீ இட்ட ஏடொன்று மட்டும் வாடாமல் நீரிலிட்டாற் போன்றிருந்தது. இது நீ செய்த மயக்கந்தரும் நெருப்புக் கட்டு விஞ்சையாகும். அதுதான் நெருப்பைத் தடுத்திருக்கும். இனி, உங்கள் ஏட்டையும் எங்கள் ஏட்டையும் நறுமணங் கமழப் பெருக்கெடுத்தோடும் வையை வெள்ளத்திலே இடுவோம். வெள்ளத்தை யெதிர்ந்துசென்ற ஓலை வென்றதாகவும், கடலை நோக்கி வெள்ளத்தினால் இழுக்கப்பெற்றுச் செல்லும் ஓலை தோற்றதாகவும் கொள்வோம். வென்றவர்க்குத் தோற்றவர் அடிமையாவதென்று ஒப்பந்தம் செய்து கொள்வோம்.''

சம்பந்தர், "தோற்றாற் கழுவிலிடச் சம்மதிப்பீர்களா ?" என்றார். சமணர்கள் ஊழ்வலியால் நன்றென ஒப்பினர்.

அம் மொழி கேட்ட சம்பந்தர், "வேண்டாம், நீங்கள் சைவ நெறியைக் கைக்கொள்ளுங்கள்," என்றார். அவர்கள் மறுத்து, "வாதத்திலே முன்பு வென்றோம். இப்போது தோற்றுவிடுவோமென்று அஞ்சுகிறாயோ? அன்பு மொழியாலே யிணக்கங்கொள்ள எண்ணுகின்றனே. ஒப்போம்," என வுரைத்தனர்.

பின்னர்ச் சமணர்கள் பெருமிதத்துடன் வரும் வையை வெள்ளத்தின் வேகத்தைத் தம் மந்திரத்தாலே தடுத்துத் தம் மந்திர ஏடுகளை யிட்டனர். வேணுபுரச் செல்வரும் எல்லாரும் அறிய, 'வாழ்க அந்தணர்' எனும் பதிகமெழுதிய ஏட்டை "மறையே உண்மை யுரையானால்—அம்மறை கூறும் உண்மைப் பொருள் உமைபங்கரானால்—வெள்ளத்திற் கெதிரே செல்க!" எனக் கூறி விடுத்தார்.

நாடுபுகழுங் கவுணியர் தலைவர் விட்ட ஏடு மதுரைப் பெருமானார் அருளாகிய கயிறு பிணித்திழுப்ப ஆற்றுநீரில் எதிரேறியது. கேட்டை விளைக்கும் ஐம்பொறி வழியே செல்லும் மனம்போலச் சமணரேடு எண்ணாயிரமும் வெள்ளத்தின் வழியே ஒழுகின. அப்போது திருத்தொண்டர்கள் இன்பக் கண்ணீர் வெள்ளத்தினும் சமணர்கள் நடுங்கி வியர்வை வெள்ளத்தினும் மூழ்கினர்.

பாண்டியனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையும் பதினாறுயிரவரான அடியாரும் ஆளுடைய பிள்ளையார் திருவடிகளை வணங்கி வாழ்த்தினர்.

மானமுடைய சமணர்கள் பலர் தாமே கழுவிலேறினர். சிவமே பரமென நம்பிச் சைவம் புகுந்தார் சிலர்.

கொற்ற வழுதி பிள்ளையாரை நோக்கித், "தாங்களிட்ட ஏடு நேரே சென்றதே! எங்குற்றது?" என வினவினான்.

காழியார், "கூடலிறைவர் அருளாலே அவற்றை இப்போதே வருவிப்போம்," என்று கூறி ஆற்றின் கரை

வழியே மேற்றிசை நோக்கிச் சென்ருர். மற்றவரும் பின் சென்றனர். அவர்கள் காண அந்த ஏடு காதத்தொலைவு சென்றது. பிறகு, மறைந்தது. எல்லோரும் அங்கே வியப்புடன் ஒருங்கு கூடினர்.

திருவேடகம்

அங்கே சிறுவர் சிலர் மாடு மேய்த்துக்கொண்டு நின்றனர். அவர்களை "இங்கு ஏதேனும் வியப்புண்டோ," என வினவினர் காழியார். அந்த இடைச்சிருர்கள், "நாங்களொன்றுமறியோம்," என்றனர்.

கவுணியர் இங்குள்ள சிறப்பினை எவ்வாருவது கண்டு பிடித்தல் வேண்டும் என வுன்னி வாதத்திலே வென்றியை வாங்கித் தந்தருளிய இறைவரை வணங்கி, 'வன்னியு மத்தமும்' எனத் தொடங்கிப் பாடி வேண்டினர். அப்பொழுது பாட்டுக்கிரங்கிய பரமனர் அங்கொரு பெரிய வில்வ மரத்தடியிலே தாமே முளைத்த இலிங்கவடிவாய்க் காட்சி நல்கினர். ஆளுடைய பிள்ளையார அந்த இலிங்கத்தைத் தொழுது நின்ருர். பாண்டியனும் படைகளுடன் வந்து கண்டான்.

அந்த இலிங்கத்திலிருந்து பரமனர் ஆயிரம் பிறை கண்ட அந்தண முதியவராய்த் தோன்றிப் பிள்ளையாரை நோக்கி, "நீ யென் மைந்தனுகும் இளையவனைப் போலிருக்கின்ருய்!" என இன்மொழி கூறித் திருநீறு சாத்தி மன மகிழ் சிறப்ப நின்ருர்.

பிள்ளையார் அவரை யிறைவரேயெனத் தெளிந்து மனமகிழ்வுடன் வணங்கி, "ஐயரே! யான் நீரிலிட்ட ஏடு இங்கே வந்தது, அதனை எடுத்தீர்களென்று நினைக்கின்றேன். அஃது தங்கள் செல்வர்க்கேற்றதன்று, தருக!" என வேண்டினர்.

முதியவர் ஏட்டை நல்கி, "இன்னும் பல நாட்கள் நாமிருக்கும் இடந்தொறுஞ் சென்று, நம்மைப் பாடிப்,

பரசமய வெற்றிகொண்டு, தூய வீடு பெறுவாயாக!'' என்றருளி மறைந்தனர்.

ஏட்டைப்பெற்ற பிள்ளையார் பாண்டியனிடம் அதனைக் காட்டினர்.

பாண்டியன், “பாம்பணிந்த தூய அருட்கடலிலே தோன்றும் ஞான அமுதைப் பருகினீர். தங்கள் ஆற்றலை அறியாத அறிவிலியாகிய நான் அளந்து பார்த்தேன். இப் பிழையைப் பொறுத்தருள வேண்டும்,'' என வணங்கினன்.

பிறகு, அங்கெழுந்தருளிய மேருவில்லியார்க்கு வானளாவிய பொற்கோபுரமுடைய கோயிலும் மண்டபமும் மதிலும் திருவீதியும் ஆகிய யாவற்றையும் அமைத்தான். அன்று முதல் அந்த இடம் திருவேடகம் என வழங்கப் பெற்றது. அந்தத் திருவேடகப் பெருமானுரைத் தான் சமணரொடு கூடிய பாவமெல்லாங் கழியும் வண்ணம் பாண்டியன் ஓராண்டு வரை அங்கேயே தங்கி வழிபட்டான். அதற்கு முந்தின யுகங்கள் மூன்றினும் முறையே திருமாலுங் கருடனும் பாம்பரசனும் வணங்கி வழிபட்டதாகப் புராணம் புகலும்.

அங்கிருந்து காழிவள்ளலுடன் பாண்டியன் தன் நகரை யடைந்து திருநீற்றுச் செல்வத்தை எங்கணும் பரப்பினன். திருஞானசம்பந்தர் சின்னாள் கழித்து வட நாட்டு நகரங்களை வணங்க விரும்பிக் கூடலிறைவரையும் அங்கயற்கண்ணியாரையும் வணங்கி விடை பெற்றுச் சென்ருர்.

அரசனும் மற்றைய இருவரும் அவரைப் பிரிய இயலாமல், அவரிடம் அன்புடன் பழகிய அன்று முதல் விளைந்த இன்பமெலாந் துன்பமாகத் தோன்றிப் பின்சென்றனர். ஆளுடைய பிள்ளையார் அவர்களைப் பார்த்து, “நம்மிடத்தில் உள்ள அன்பு குறையாமல், திருநீற்றைக் காத்துச் சிவனுர் புகழைப் பரப்பி வாழுங்கள்! மறுக்காமல் நில்லுங்கள்!'' என உரைத்தனர்.

அவருடைய ஆணையை மறுக்க அஞ்சிய தென்னவன், அவர் திருவடிகளை வணங்கி இருவருடனுந் திரும்பினான். காழியார் சோழநாடு தொழச் சென்றார்.

ஞானசம்பந்தக் களிறு ஞானமதநீர் சொரிந்து வந்து, கடம்பவனத்திலுள்ள சமணத் தருக்களை யொடித்துத் திருவெண்ணீறாகிய பெருமை மிக்க பூழியை உலகெங்குந் தூற்றியது.

திருக்கோயிலிலுள்ள மடைப்பள்ளிச் சாம்பரைக் கொண்டு சம்பந்தர் பாண்டியன் நோயை நீக்கியதாலே கற்பம், அனுகற்பம், உபகற்பம், அகற்பம் என்னும் யாவற்றினும் திருக்கோயில் 'அட்டில்வாய்ப் பூதி' சிறப்புப் பெற்றது.

"ஞானமாம் மதநீர் சோர ஞானசம் பந்த ரென்னும்
மானமா யானை வந்து கடம்பமா வனத்தில் துன்னும்
ஊனமாம் சமணர் என்னும் தருக்களை ஒடித்து வெண்ணீறு
ஆனமாப் பூழி அள்ளித் தூற்றிய தவனி எங்கும்." (அக)

———

ருச. வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்தல்

அம்மான் மகளும் அத்தை மகனும்

கடலைச் சார்ந்த ஒரு பட்டினத்திலே மாணிக்க அணிகளை யணிந்த வணிக னொருவன் இருந்தான். அவன் பலவகைச் செல்வத்தினுஞ் சிறந்தவன். அவன் நீண்ட நாள் மகவின்றிப் பல அறங்களும் புரிந்து பொற்கொடியனைய மகளொருத்தியைப் பெற்றான்.

அவனுக்கு மதுரைப் பதியிலே தங்கை மகனொருவனிருந்தான். மணமாகியிருந்த அவனுக்கே தான் பெற்ற குலக்கொழுந்தை "இரண்டாம் மனைவியாகக் கொடுப்பேன்," என்று உறவினரறிய உரைத்திருந்தான்.

சில நாட்கழித்து, ஊழ்வினையினாலே இறந்தான். அவனுடைய உயிர் போன்ற காதலியும் உடனிறந்தனள். இருவர்க்கும் உறவினர் செயத்தகும் இறுதிக் கடன்களை முடித்து விட்டு, மதுரை மருமகனுக்கு ஓலை விடுத்தனர்.

ஓலையைக் கண்டு பிடித்த உடனே உணர்வின்றி விழுந்தான்; மதுரை வணிகன் தெளிந்து தரையிற் புரண்டழுதான்; பெருமூச்சு விட்டான்; விழிநீர்ப் பெருக்கிலே ஆழ்ந்தான்; அம்மவோ! என அரற்றினான்; உறவினரும் நண்பரும் வந்து தேற்றத் தேறித் தன் அம்மான் நகர்க்குச் செல்லத் துணிந்தான்.

சில உறவினர் உடன்வர மதுரையை நீங்கி மாமன் நகரடைந்தான். அங்குள்ள உறவின ரெல்லாரும் வந்து வந்து வினவித் தேறுதல் கூறினர்.

சில நாட்கள் கழிந்தன. வணிகன் தன் மாமன் மகளை மதுரைக் கழைத்துச் சென்று, உறவினர் முன் மணக்க முடிவு செய்து, தன் மாமன் சேர்த்துவைத்திருந்த அளவற்ற செல்வத்தைத் திரட்டிக் கொண்டு, தன் காதல் மாமன் மகளுடன் புறப்பட்டான். வழிவிட வந்தவர்களுடன்

அளவளாவித் திரும்பச் செல்வு கொடுத்துத் தன்னுடன் வந்த உறவினரை முன் போக்கினான். பிறகு தன் பணியாட்கள் உடன் வரத் தானும் அந்தப் பெண்ணுமாக நாளொன்றுக்கு ஒன்றரைக் காவதமாகக் கடந்து வந்தான்.

வழியிலே

கதிரவன் மேலைக் கடலிலே மறையும் வேளை, திருப்புறம் பயம் என்னும் நகரடைந்தனன். அன்றிரவு அங்கே தங்க முடிவுசெய்தான். எல்லோருமாக இறைவர் திருக்கோயிலின் முன்புள்ள கிணற்றிலே நீராடி, ஒரு வன்னி மரத்தின்கீழே உணவு சமைத்து உண்டனர். பிறகு, திருக்கோயில் வாயிலிலே ஒரு படியின்மீது தலைவைத்துத் துயின்றனர்.

அன்றிரவு ஊழ்வினையின் வலிமையாலே ஒரு கொடிய நச்சரவு தீண்டியதால் வணிகன் உடனே உயிர் துறந்தான். அதுகண்டவுடன் பணியாட்கள் கதறியழ, வேலைக்காரிகள் மார்பிலடித்துக்கொண்டு வாய்விட்டரற்றினர். அவனுடன் வந்த மாமன் மகளோ திகைத்துத் துடித்தாள் எனினும், இன்னும் மணமுடியாமையால் மெய்தீண்டாமற் பூங்கொடி போல ஒதுங்கி நின்றாள்.

சிறிது சிறிதாகத் தன் திக்கற்ற நிலையை யுணர்ந்தவுடன் அம்பாலடிபட்ட மயில்போல வீழ்ந்து மயங்கினாள். கூரிய கண்கள் உள்ளே செருகின! மூச்சுக் குறைந்தது! நெருப்பிலே பட்ட பூமாலையென மெய் சோர்ந்தது! கைகளும் அடிகளுந் துவண்டன! இடியினாலே தாக்கப்பட்டவள்போல அந்த அன்னப்பேடு வீழ்ந்துகிடந்தாள்.

வணிகனுக்காக மறுகியழும் பணிப்பெண்கள் மானனைய அவள் நிலை கண்டனர். "ஐயோ! அன்பனுடன் அவளாவியும் அகன்றதோ?" என்ற ஐயத்துடன் கைகளால் வாரியெடுத்து மடிமீது கிடத்தி, ஆடையால் விசிறிக் களைப்பைப் போக்கினர். அதனால் உடலைவிட்டுச் சென்ற உயிர் மெல்ல மெல்ல வந்தடைவதைப்போல இருகால்களும் அசைந்தன. கண்களும் நீலம் விரிவதைப்போல

விரிந்தன. குற்றமற்ற நாணம் முதலான நான்கும் நாற்புறமும் வேலிபோல வளைந்தன.

அப் பெண்ணணங்கு தன் கைகளை நெறிப்பாள். கூந்தல் சோர நிலைத்திருப்பாள். கண்ணிலே நீர்முத்தெனச் சொரிவாள். உள்ளமிடிவாள். மெதுவாக வாய்விட்டழுவாள். சுற்றிலும் பார்த்து நாணமுறுவாள். சிறுதெய்வந் தொட்டாற் போலத் தேம்பி விம்மியழுவாள். குறையாத செல்வத்திலே பிறந்தநாளாக வளர்ந்து ஒருநாளும் வருத்த மென்பதையே அறியாதவள் தன் காதலன்மேற் கொண்ட காதல் நிறைந்து வரம்புகடந்து பொங்குவதுபோல—ஒரு பெண்தெய்வம் வாய்விட்டழுதாலென—அழுதாள்.

"என் தலைவரே! என் இருகண்மணியே! என் தந்தையாரின் உயிரனைய காதல்மருகரே! முருகனைப் போன்றவரே! வணிகர் குலமணியே! முல்லைத்தாரரே! நச்சரவினுல் மாண்டீரோ? தங்கள் நிழலான என்னைவிடுத்துத் தாங்கள் ஏவ்வாறு ஒளிக்கமுடியும்? தென்னுட்டிற்குச் சென்றீரோ? அம்மானைப் பார்த்துப் பணிந்தீரோ? என் தந்தை தங்களைத் தோளிறுகத் தழுவினுரோ? நானும் வந்திருந்தால் என் பெற்ருேரைக் காண்பேனே! என்னையும் உம் பணியாளரையுங் கைவிட்டுச்சென்று என்ன கண்டீர்? அன்புக்குரிய மருகன் பாம்பால் இறந்ததும், நான் இங்குப் பறிபோன உள்ளத்துடன் வருந்துவதும் என் பெற்ருேர் செய்த தவம் பலித்தவாறு தெரிகிறது! நல்லூழினுலே அவர்கள் இந்தக் கலக்கங் காணு முன் இறந்தனர்! அருமையினும் அருமையன்ருே இந்த நிலை? அவர்களைப்போலப் பயன்பெற்ளுர் யார்? காதலரே! தங்கள் அன்புக்குரிய மாதுலர் எனைப் பெற்றபோது தங்களுக்குக் கொடுப்பதென உரிமையாக்கினுர். பிறகு, தம் மனைவியுடன் இறந்தார். அடியாளும் அம்முறையாலே என் கணவராகிய தாங்கள் போக வெற்றுடல்போல இருக்கின்றேன். இனி நானும் இறப்பேன்!"

தன் காதல்மிக்க துணையையிழந்த அன்றில்போல அந்தச் சிறுபெண் வாய்விட்டழுதாள். திருப்புறம்பயம் எங்கும் உறக்கம் நீங்கி நடுங்கி வருந்தியது.

காழிவள்ளலார்—வணிகனுயிர் பெற்ருன்—திருமணம்

அப்போது சிவநகர்தோறும் வணங்கிவரும் திருஞான சம்பந்தர் அந்நகர்க்கு வந்திருந்தார். அவரிருந்த மடம் அருகிலேயே இருந்தது. அவர் இஃது என்ன கூக்குரலென ஆள்விட்டு வினவியறிந்து விரைந்துவந்தார். அன்புடன், "அம்மையே! நீ யார்? உனக்குற்றதென்?" என வினவினுர். அப்பேதைப்பெண் விளக்கமாக விளம்பினுள்.

அன்னையும் அப்பனும்போன்ற காழிவள்ளலார் தனித்து வருந்தும் அச்சிறுமியின் ஆவியைக் காக்கவிரும்பி, அவ் வணிகன் பக்கம்வந்து அவனுடம்பெல்லாம் அமுதமாகும்படி அஞ்செழுத்தை யோதி அருட்கண்ணுல் நோக்கினுர். கொடிய நஞ்சு விலகியது! வணிகன் உறங்கினுன் போல எழுந்தான்.

எல்லோரும் அவனுயிர் பெற்றதற்கு மகிழ்ந்து, உயிருதவிய ஞானவேந்தைப் பன்முறை வணங்கி வாழ்த்தினர். கன்னியன்னம்போன்ற அவள் ஒருமருங்கே "இன்பத்தீந் தேன் பொழிந்து கஞ்சம் பூத்ததோர் கொம்பின்" நின்ருள். அவள் தன் தலைவனை யிழந்தபோதும் உயிர் பெற்றபோதும் மாமன் மகளாயிருந்துந் தீண்டாமலிருந்த செம்மையையும் அன்பையுங் கண்டு வியந்த ஆளுடைய பிள்ளையார் வணிகனைப் பார்த்து விளம்புவார் :

"வணிகனே! உன் மரபுக் கொருமணியான நின் மாமன் பெற்ற திருவையனையாள் இன்பம் வந்தபோதுந் துன்பமுற்ற போதுங்கூடத் தொடாமல் விலகி நிற்கின்றது வியப்புக்குரியதாகும். இத்தகைய நல்லொழுக்கமுள்ள பூங்கொடியை இங்கேயே திருமணம் முடித்துச் செல்வது நன்று!"

வணிகன் வள்ளலார் திருவாய் மொழியைத் தலைமேற் கொண்டு, "எங்கள் குலவணிகரும் இல்லாமற் சான்ருயினுருமில்லாமல் மணமுடிப்பதெங்ஙனம்?" என்ருன்.

"கன்னியைப் பெற்றபோதே உனக்கென்று உன் மாமன் கூறியதை உன் உறவினர் அறிவார்களே! மேலும்,

இத் திருமணத்திற்குச் சான்ருக இந்த வன்னியுங் கிணறும் இலிங்கமும் உள்ளன. எனவே, எம் உரைகடவாமல் இங்கே மணம் முடித்துச் செல்க!"

குற்றமற்ற வணிகன் பிள்ளையாரை வணங்கித் "தாங்களே ஆசிரியர், பெற்ருேர், நண்பர், தெய்வம், உறவு யாவும்," என்று கூறி அவராணைப்படி முறையாக வேள்வி அமைத்து மணம் புரிந்துகொண்டு, அவரை வணங்கி விடை பெற்றுப் போனுன்.

பணிபுரியும் ஆட்களுடன் மதுரைப் பெருநகரடைந்து தன் அன்புக்குரிய மாமன்மகளை மணம்புரிந்த வரலாற்றைக்கேட்டு மகிழும் உறவினர்சூழ இன்புற்றிருந்தான். அவன் தன் செல்வமும் தன் மாமன் செல்வமும் பெற்று அளகையாளிபோல வணிக வளம்பெருக்கித் தன் காதல் மனைவியர் இருவரும் பெற்ற நல்ல மழலைச் சிறுவரின் மகிழ்ச்சியிலே திளைத்திருந்தான்.

சான்று உண்டா?

மூத்தவள் சிறுவர் மிகவும் போக்கிரிகள். இளையவளுக்கோர் அருமருந்தன்ன சிறுவனிருந்தான். இவ்விரு திற மக்களும் ஒன்றுகூடிச் செல்வத் திருவீதியிலே சென்று விளையாடுவார்கள்.

இவ்வாருெழுகும் நாட்களில் ஒருநாள் மூத்தவள் மைந்தர், இளையாள் சிறுவனை அடித்துவிட்டனர். இளையவள் மூத்தாள் மக்களை வைதாள். மூத்தவள் இதையறிந்து சீறினுள்.

"நீ எந்தவூரோ? எந்த இனமோ? யார் மகளோ? யாவர்காணத் தீமுன் திருமணம் புரிந்தாய்? என் கணவன் மேல் ஆசைப்பட்டு வந்தவள்தானே? காமக்கிழத்தியான உனக்கேன் வாயும் வீரப்பும்? என் கணவன் உன்னைத் தீமுன் வேட்டதற்குச் சான்றுண்டேற் சாற்று!"

இளையவள் இம் மொழியாற் சுடப்பெற்று வருந்தினுள். நாணம்மிக நின்ருள்.

"பாம்பினாற் கடியுண்ட அன்று உயிரளித்த காழி வள்ளலார் அருளால், வன்னியுங் கிணறும் புறம்பய இறைவரும் சான்றாக நம் கணவர் என்னை வேட்டார். அந்த மூன்று சான்றுகளுமுள்ளன !"

மூத்தவள் நகைத்தாள் :

"நன்று நன்று! உன் காதல் மணத்திற்குத் தக்க சான்றுகளே சாற்றினாய்! இங்கும் அந்தச் சான்றுகள் வருமேல் அவையும் மெய்யே!"

இளையவள் பெருந்துன்ப மெய்தினாள். நாணத்தாலே தலைகவிழப் பெருமூச்சு விட்டு வீட்டிற்குப்போய்க் கைவிரல் நெறித்தாள். கையால் வயிற்றைப் பிசைந்தாள். நிலமிசை விழ்ந்தாள். கண்ணீர் விடுத்தாள். கொவ்வை போன்ற இதழ் துடிக்கப் பொருமினாள். அவள் உள்ளமும் மெய்யுங் கூசின.

"ஆ! ஆ தெய்வமே! சிறியாளென்செய்வேன்? பெற்றோரை யிழந்தபோதே ஆதரவின்றி யிங்குவந்தேன். இங்கு எவர் சான்றாவார்கள்? ஆதரவிழந்த வணிகச் சிறுவனுக்கு அன்று மாமனாகிவந்து வழக்கை வென்று உரிமையளித்த தலைவரே! மாற்றான் நகைப்பிலிருந்து காவாயோ?"

அன்றைய இரவு உணவின்றித் தூக்கமுமின்றி வருந்திக்கிடந்தாள். வைகறையிலெழுந்து பொற்றாமரைப் பொய்கைக்குச் சென்று நீராடி, விண்ணிழி விமானக் கோயிலையடைந்து 'நிரம்பிய அழகர்' திருமுன் சென்று படிமிசை விழ்ந்து தன் குறைகூறி வேண்டினாள்.

"அன்று என்னை என் கணவர் திருமணம் புரிந்த இடத்திலே அதற்குச் சான்றாக நின்ற வன்னிமரமும் கிணறும் தாங்களும் இன்றுவந்து, மாற்றாள் பழிப்பைத் துடைத்துக் காவாயேல் இறப்பேன்!"

இதோ சான்று

துன்புற்று மயங்கி நிற்கும் அவள் நிலைக்கிரங்கிய கூடலிறைவர் அருளினால் யாவருங் காணுமாறு, முன்னர் அவள் கூறிய சான்று மூன்றும் திருக்கோயிலின் வட மேற்கு மூலையிலே விரைந்து வந்தடைந்தன.

இளையவள் உள்ளங்களித்து மூத்தாளையழைத்துவந்து கூடலிறைவர் திருமுன் வணங்கி, "இது வன்னி! இஃது இலிங்கம்! இது கிணறு! இவையே என் மணத்திற்குச் சான்றாயிருந்தன!" என்றாள்.

இளையாள் கற்பையும் அவள் இறைவரிடம் வைத்த அன்பையும் அங்கணர் அவளுக்குச் செய்த அருளையும் வியந்து நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். வணிகனின் முதல்மனைவி மட்டுந் துயரமடைந்தாள். வணிகரெல்லாரும் மூத்தவளைப் பழித்தனர். கணவனும், "பொய்ம்மொழி கூறிக் குற்றமற்ற குணத்தவளைப் பழித்தனை. ஆகையால் நீ யென் காதலியாகாய்," என்று நீக்கிவிட்டான்.

அப்போது, இளையவள் கணவனடியில் வீழ்ந்து, "என் கற்பை நிலைநிறுத்தினவள் இன்றைக்கு இவளே. இவளே அன்னையற்ற எனக்கு அன்னை. இவளும் யானும் உடலுயி ரென ஒன்றுபட்டு வாழ்வோம்," என்று மூத்தவளைத் தழு விக்கொண்டாள். இருவரும் நட்பாயினர்.

அவர்கள் இல்லற வாழ்வு

உடம்பினால் இரண்டாயினும் உயிரிரண்டின்றி, மனத் திலே பொறாமையின்றி, இருமனைவியரும் வாழ்ந்தனர். மக்களும் அவ்வாறு ஒன்றுபட்டனர். ஐவாய் நாகம் விழுங்கிய இரைபோல அவர்கள் அன்பு கலந்திருந்தது.

வணிகன் இளையாள் கற்பின் சிறப்பாலே ஆயுளும் செல்வப்பெருக்கும் புகழும் ஒழுக்கமும் பெருமையுஞ் செல்வாக்கும் தவநெறியும் மாறாத நல்லறமும் நிறைந்து வாழ்ந்தனன். அவள் தாமரைச் செல்விபோன் றினிதிருந் தாள்.

“இறைவர் திருவிளையாடலை யென்னென்பது? என் குருபரர் கூறியவாறே நான் உங்களுக்குச் சொன்னேன்,” என்று குறுமுனிவர் மற்றைய முனிவர்க்குரைத்துத் தமக் கருளிய குருபரரையும் அவர் அருளிய திருவாசகத்தையும் உள்ளத்திலிருத்தித் திருவாலவாயைத் தலைமேற் பன்னி ரண்டுவிரல்கள் அமைத்து, கைகுவித்து வணங்கி அங்கயற் கண்ணம்மையாரையும் அவர் பங்கரையும் நினைத்தார்.

“பரவசம் அடைந்து வழிகவர்ந் துன்னும்
பழிப்புல வேடர்போய் ஒளிப்ப
இருள்வெளி கடந்து திருவருள் வழிச்சென்
றெண்ணிலாச் சராசரம் அனைத்தும்
புரையற நிறைந்து காட்சிகண் காண்பான்
புதைபடத் தனித்தபூ ரணமாய்
உரையுணர் விறந்த உண்மையா னந்த
உணர்வினை உணர்வற உணர்ந்தான்.”

———

அருச்சனை

முனிவர்களின் வினு—மதுரைக்கு வருதல்

அறிவாகிய இன்பக் கடலைப் பருகும் முகிலனைய அகத்தியரையும் உலோபா முத்திரையையும் வசிட்டர் முதலான முனிவர்கள் மலருஞ் சந்தனமுங் கத்தூரியும் சுடரும் புகையும் முதலானவற்ருல் வழிபட்டு மற்றுமொரு வினு வினவினர்.

"மேருமலையை அழகிய வில்லாக வளைத்த கூடலிறைவர் திருவிளையாடலைக் கேட்டுச் செவிபெற்ற பேற்றை யடைந்தோம். கேட்டவாறே விழிமகிழ மணமலரிட்டுக் கைகூப்பி வணங்க நாங்கள் விரும்புகிருேம்."

அகத்தியர் கூறுகிருர்:

"முனிவர்களே! நீங்கள் விரும்பியது நன்று; என் நினைவும் அதுவே. நான்கு மறைகளும் அறியாத பரம்பொருளை ஆராய்ச்சியாலும் அளவிறந்த கலைகளாலும் கண்டாலும் உள்ளத்திலே காணுதவர்கள் வீட்டின்பங் காண முடியாது. காதிற்பதியக் கேட்டவாறு, திருவாலவாய் ஐம்முகப் பேரொளியைச் சென்று வழிபட்டு, உளமுருகக் கண்டு நினையாவகையிலே நினைத்து, கொடுவினையின் கிழங்கைக் கல்லுவோம் வாருங்கள்!"

நல்ல நாளிலே முனிவர் அகத்தியர்முன் சங்கற்பஞ் செய்து, வாயால் ஆசிபெற்று, உளங்களித்து, அவர் ஆணைப்படி சென்று, கங்கையிலே நீராடிக் காசியிலே வீற்றிருக்குங் கண்ணுதலைக் கையாலே தொழுதனர். பிறகு, ஐம்பொறிகளையுங் கூடலிறைவர் திருவடிக்கே செலுத்திச் சிவனுர் ஐந்தெழுத்தையும் நாவினுலே நவின்று, தங்கள் தூய தவ வலிமையாலே பெற்ற விமானத்திலே வான்வழியே சென்றனர் அகத்தியரும் முனிவரும். சிவந்த சடையும் திருநீற்றுருவமும் தவத்தினுல் இளைத்த மெய்யும் உள்ளும் புறமுந் தூய்மையும் சிவமணிமாலையுந் தோலுடையும்

உடையராய் அவர்கள் எல்லோரும் தவத்துக்குப் பேரணிகல மாக விளங்கினர்.

வான்வழியே செல்லும்போது வழியிலுள்ள சிவ நகரங் களையுந் தூய நதிகளையும் அகத்தியர் விளக்கிக்காட்ட முனிவரர் வணங்கிச் செல்கின்றனர்.

இது, சீற்றங்கொண்ட இராவணனை வெல்வதற்கு இராமன் வழிபட்டருள்பெற்ற விருபாக்கம் அல்லது ஏமகூடம்! தன்மீது ஏறினவர்களுக்கு அவர்கள் நினைத்ததை நினைத்த வாறே மறுபிறப்பிலளிக்கும் திருப்பருப்பதம் இது! ஆவின் காதிலே இலிங்கவடிவான இறைவருக்குச் சிவனிரவிலே தேரவிழா நடக்கும் கோகர்ணம் இது! கார்த்திகைத் திங்களிலே கார்த்திகை நாளிலே நீர்க்கரையிலே சிவபிரானர் தேருர் விழாக் கொண்டாடும் திருவஞ்சைக்களம் இது! வில்லேந்திய வேடனர் மென்றவூனைப் பதம்பார்த்த பரமனர் வாழுந் திருக்காளத்திமலை யிது! இடத்தாளை வானிலே நீட்டிக் காளி தோற்கப் பரமனர் நடித்த திருவாலங்காடு இது! ஒற்றைமாமர நீழலிலே காமாட்சியம்மையார் நோற்கும் பிலமுடைய காஞ்சி இது. திருமால் காவற்ருெழிலை மேற் கொள்ளச் சிவனரை வழிபட்ட திருமாற்பேறு இது! சிவ பிரானர் மறையவர்களை மறையை முறைப்படி ஓதவருளிய திருவோத்தூர் இது! திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடச் சிவனர் அனல் வடிவாய் நின்ற திருவண்ணமலை யிது! இருவர் கழுகின் வடிவமாக நோற்கும் திருக்கழுக்குன்றம் இது! வஞ்சகனை அந்தகனென்னும் அவுணனைச் சிவனர் அட்ட திருக்கோவலூர் வீரட்டம் இது! முப்புரத்தையும் எரித்துச் சுதன்மன், சுசீலன், சுபுத்தி யெனும் மூவரன்பிலே யிடுபட்ட பரமனர் வீற்றிருக்கும் திருவதிகை வீரட்டம் இது! உண்மை யறிவின்பப் பொருள் அசைவற்ருடும் என்று முள பொன்மன்றுடைய சிதம்பரம் இது! தன்னிடம் பிறந் தோர்க்கு முத்தி நல்கும் திருவாரூர் இது! நான்மறைகளும் வழிபட்ட திருமறைக்காடு இது! நான்முகன் திருமால் முதலான தேவர்கள் ஊழிவெள்ளத்திலே இறவா வண்ணம்

அவர்களைப் பரமனுர் ஒரு தோணியிலேற்றுவிக்கும் தோணிபுரம் (சீர்காழி) இது! இதற்குப் பன்னிரண்டு திருப்பெயர்களுண்டு. சடாயு சம்பாதி என்போர் வழிபட்டதற்கு வரமளித்து நோயைத் தீர்த்த வைத்தீசுவரன் கோயில் இது!

இவ்வாறே அகத்தியர் காட்ட மேலுங் கண்டவை:—

உமையம்மையார் மயிலாக வழிபட்ட மாயூரம், முனிவர்கள் வழிபட்டதெனப் பெறும் திரிகோடிகா, அறக்கடவுள் வழிபட்ட திருவாவடுதுறை (தருமபுரம் என்பதுமுண்டு), வெள்ளையானை வழிபட்டுப் பானுகோபனுல் முறிந்த கோட்டைப் பெற்ற திருவெண்காடு, தாடகை மானங்காக்கக் குனிந்து கலயநாயனர் அன்பினுலே நிமிர்ந்த பெருமானுர் எழுந்தருளிய திருப்பனந்தாள், யானைமுகனைக் கொன்று யானைமுகக் கடவுள் வழிபட்ட திருச்செங்காட்டங்குடி, தாரகனைக் கொன்று செவ்வேள் வழிபட்டதும் சண்டேசுரர் வழிபட்டதுமான திருச்சேய்ஞலூர், மார்க்கண்டனுக்காகக் காலனை வீழ்த்திய திருக்கடவூர் விரட்டானம், யானைதந்த போர்வை போர்த்த இறைவனுர் கோயிலான திருவழுவூர் விரட்டானம், நான்முகன் தலையோடு பெற்ற திருக்கண்டியூர் விரட்டானம், காமனைக் காய்ந்த திருக்குறுக்கை விரட்டானம, தக்கனுக்கு ஆட்டுக் கடாத் தலைதந்த திருப்பறியலூர் விரட்டம், சலந்தரனைச் சக்கரத்தாலே மாய்த்த திருவிற்குடி விரட்டம், ஒரு வணிகப் பெண்ணுக்காக வன்னியுங் கிணறும் இலிங்கமும் திருமணச் சான்று நின்ற திருப்புறம்பயம், சிவபிரானுர் தம்மைத் தாமே வழிபட்ட திருவிடைமருதூர், கங்கை மாமகந்தோறும் வரும் கும்பகோணம், தந்தைக்கு முருகன் உபதேசித்த சுவாமிமலை, திருமால் கண்ணிடந்திட்டு வழிபட்டுச் சக்கரம் பெற்ற திருவீழிமிழலை, நந்தி சிவவடிவம் பெற நோற்ற திருவையாறு, சிலந்தியும் யானையும் மலைமகளும் திருமாலும் வழிபட்ட திருவானைக்கா, திரிசிரன் பெயர்கொண்ட திரிசிரபுரம், படிந்தோர் பாவமகற்றுங் காவிரியாறு, சோழநாடு, தமிழறி வைகை ஆகியவற்றைக் கண்டனர்.

பாண்டி நாட்டிலே,

பன்மரச் சோலைகளைப் புதர்போலவும், பெரிய ஆறுகளைக் கால்வாய் போலவும், மணம் விரியும் பொய்கைகளைச் சிறிய நீருறுங்குழிகள் போலவும், கழனிகளைப் பாத்திகள் போலவும், தென்னைகளைச் சிறு புற்கள் போலவும், வாழைத் தோட்டங்களை மஞ்சட்பாத்தி போலவும் கண்டனர்.

பலவகை நிறமுள்ள மாடநிரைகள், உப்பரிகைப் பந்திகள், செய்குன்றுகள் ஆகிய இவையெல்லாம் அன்னமும் குருகும் செம்போத்தும் கோழியும் கிளியும் மயிலும் வேறு வேறாக ஒழுங்காக இருப்பதைப்போலவும் பூங்கொடிகள் அவற்றின் சிறகு விரிப்பதுபோலவும் கண்டனர்.

அம் முனிவர்கள் திருக்கொடுங்குன்று, திருப்பத்தூர், திருவாடானை, திருப்புனவாயில், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், இராமேச்சுரம், திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருப்பரங்குன்றம், திருவேடகம், திருவாப்பனூர் என்னுந் திருநகர்களைக் கண்டு வைகையை வணங்கி இறங்கி நீராடினர். திருமாலின் நெடிய உருவென உயர்ந்த திருக்கோபுரத்தை வணங்கி உட்புகுந்தனர்.

வழிபாடு

மறுகுதோறும் பணிந்தனர். திருக்கோயிலையடைந்து பொற்றாமரைப் பொய்கையிலே படிந்து செய்யுங் கடன்களை முடித்தனர். ஐந்தெழுத்தை ஓதினர். சித்தியானையை வணங்கினர். பிறகு, மூவுலகையும் நான்மறையையும் பெற்ற அங்கயற்கண்ணம்மையார் திருவடிகளை அன்புற வணங்கி அருள்பெற்றனர். செவ்வொளி பரப்பும் மணிகளழுத்திய பொன் விமானத்திலே யெழுந்தருளிய சிவந்த திருவடிகளைச் சடைமுடியுறப் பணிந்தனர்.

அம் முனிவர் அன்று இருவேளையும் உண்டியின்றி யிருந்து, மறுநாட் காலையிலேயே கதிரவன் வருமுன் நீராடிக் கடன் முடித்து, ஐம்பொறி யடக்கி, உள்ளத்திலே அன்பு

பரவப் பரம்பொருளை மின்திரண்டாலனைய விமானத்தின்மீது இருக்கக் கண்டனர்.

மணங்கமழும் நறுநீர், தேன், கருப்பஞ்சாறு, கனி, ஆனைந்து, அமுதமைந்து, சந்தனம், நறுமணப் பனிநீர், மான்மதம், மென்மலர், ஆடை, அணிமணிப்பூண், இனிய உணவு ஆகியவற்றைக் கொணர்ந்தனர்.

சதவுருத்திரங்கூறி நறுநீர் முதலியவற்றால் ஆட்டி, மான்மதத்தைப் பூசி, மென்மலரையும் ஆடையையுஞ் சாத்தி, அணிமணிப்பணி பூட்டினர். மறைமுறைப்படி சமைத்த பாலமுதருத்தினர். ஐவகை வாசங்கலந்த பாகும் வெள்ளிலையும் அளித்தனர். சுடரும் நறும்புகையும் போன்றவற்றை மகிழ நல்கினர். சைவமுறைப்படி செந்தீயிலே நெய்த் துடுப்பார நெய்விட்டு வழிபாட்டை முடித்தனர்.

பிறகு, நான்மறை கூறியவாறு சிவமனு நூற்றுப்பத்தைக் கூறி மூவிலை வில்வத்தைக்கொண்டு சாத்தினர். நறுமண நீரையும் மந்திர மலரையுங் கொண்டு முக்கட்பெருமானார் கையிலேயிட்டு வழிபாட்டின் பயனை நல்கினர். உள்ளத்திலே அன்புபெருகக் கண்கள் நிறைய நீரூற்றுப் பெருகப் பரம் பொருளை அஞ்சலித்து ஏத்தினர் :

"பழியொடு பாசமாறு கெடவாச வன்செய்
பணிகொண்ட அண்ட சரணம்!
வழிபடு தொண்டர்கொண்ட நிலைகண்டு
வெள்ளி மணிமன்று ளாடி சரணம்!
செழியன் விளிந்திடாத படிமாறி
யாடல் தெளிவித்த சோதி சரணம்!
எழுகடல் கூவி மாமியுடன் மாமனுடை
இசைவித்த ஆதி சரணம்!"
"வெங்கரி யாவிசோர நரசிங்க வாளி
விடுவேட ரேறு சரணம்!
புங்கவர் தேறஆதி மறையுட் கிடந்த
பொருளோது போத சரணம்!

வங்கம தேறிவேலை மகரம் பிடித்த
வலையாள் மணாள சரணம்!
கங்கண நாகம் வீசி நகரெல்லைகண்ட
கறைகொண்ட கண்ட சரணம்!"

"மைந்தனி லாழிமேரு மகவான் அகந்தை
மடிவித்த நித்த சரணம்!
சுந்தர நாமவாளி பணிகொண்டு கிள்ளி
தொகைவென்ற வீர சரணம்!
வெந்திறன் மாறன் முன்கல் உருவானை
கன்னல் மிசைவித்த சித்த சரணம்!
முந்திய கல்வின் மாதர் பெறவட்ட
சித்தி முயல்வித்த யோகி சரணம்!"

"திருமணி மைந்தன் மைந்தன் முடிசூட்ட
விற்ற திருமல்கு செல்வ சரணம்!
மருமகன் என்றுமாமன் உருவாய் வழக்கு
வலிபேசு மைந்த சரணம்!
குருமொழி தந்துநாரை குருவிக்கு வீடு
குடிதந்த எந்தை சரணம்!
வருபழி அஞ்சிவேட மகனுக் கிரங்கு
மதுராபு ரேச சரணம்!"

"விருத்தகு மாரபால அருண்மேனி கொண்டு
விளையாடும் அண்ணல் சரணம்!
குரத்தியை நச்சு பாவி உயிருண்டு சோரி
குடைவாகை வேல சரணம்!
கருத்திசை பாண னின் இசைபாடி மாறு
களைவேத கீத சரணம்!
நரித்திரள் மாவை மீள நகரங் கலங்க
நரிசெய்த நம்ப சரணம்!"

"முற்பகல் ஆறிரண்டு சிறுபன்றி உண்ண
முலைதந்த அன்னை சரணம்!
பொற்புறு மாய ஆவை அடலேறு கொண்டு
பொருதட்ட சிட்ட சரணம்!

பற்பல ஞாலம் எங்கும் அடையப் பிரம்பு
படுமட்ட மூர்த்தி சரணம் !
கற்பி னெருத்தி மன்றல் அறிவிக்க மூன்று
கரிதந்த வள்ளல் சரணம் !''

"அளவைகளாலும் வேத முதனூல்க ளாலும்
அயன்மாய னாலு மளவாக்
களவை உனக்குநாம குணசின்ன சாதி
கதிசெய்தி யில்லை; அவையும்
உளவென யாமறிந்து துதிசெய்ய வேகொல்
உலகஞ்செ யன்பி னெளிதாய்
விளையருள் மேனி கொண்டிவ் வறுபத்துநாலு
விளையாடல் செய்த படியே.''

இவ்வாறு வாழ்த்திய வசிட்டர் முதலாம் முனிவர்களையும் அகத்தியரையும் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டருளிய கடம்பவனக் கண்ணுதலார் நோக்கி, "வெகுளியை வென்று மனந் தெளிந்தவர்களே ! நீங்கள் செய்த வழிபாடும் வாழ்த்தும் எல்லாத் தெய்வத் தானத்தினும் எல்லா உயிர்களிலும் நிறைந்து நமக்கின்ப மூட்டின,'' என்றார்.

பிறகு பேரருள் சுரந்து, குறுமுனிவரை அருகழைத்து, "நிறைதவம் புரிந்தோனும் தவவுறுதியை நன்கு பெற்றோனும் நீயே. உனக்கினி அரிய வரம் தர எஃதுளது?'' என்று இன்மொழி கூறி இலிங்கத்திலேயே மறைந்தருளினார்

அந் நகரிலே அகத்தியரும் வசிட்டர் முதலானோரும் தத்தம் பெயராலே இலிங்கமமைத்து வழிபட்டனர். பின்னர், அங்கயற்கண்ணம்மையாரையும் அப்பரையும் முப்போதும் சென்று வணங்கி, இன்பம் பொதித்த மனத்தினராய் அந்தத் தலத்திலேயே தவம்புரிந்து வாழ்ந்தனர்.

திருவிளையாடல் வசனம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

———

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பக்க எண்]

அரிய உரைநடை நூல்கள்

கந்தபுராண வசனம்

[ஆசிரியர்: சு. அ. இராமசாமிப் புலவர்]

செய்யுள் நடையில் சிறந்த பேரிலக்கியமாக இலங்கும் 'அடல்கெட முனிந்த செவ்வேற் கந்தவேளின்' திருவிளையாடல்களனைத்தையும் தன்னகத்தே கொண்ட விழுமிய நூலாம் கந்தபுராணத்தின் உரைநடை நூலாகும் இது. எல்லா நலங்களும் நிரம்பியதும், கற்றோரைத் திருமுருகன் திருவருளுக் குரியராக்கும் செம்மைவாய்ந்ததுமாகிய இந்நூல், இனிய எளிய உரைநடையில் அமைந்தது. இன்றியமையாத இடங்களில் புராணத் திருப்பாட்டுகளும் இணைக்கப்பெற்றது. உணர்ச்சியூட்டும் ஆற்றல்வாய்ந்த இனிய தூய செந்தமிழ் நடையுடன்கூடிய இவ்வுரைநடை கற்றோர்க்குப் பெரும் பயன் விளைக்கவல்லது. வண்ண உட்படமும், அழகிய மூவண்ணமேலட்டையுங்கொண்ட கலிக்காக்கட்டு.

பெரியபுராண வசனம்

[ஆசிரியர்: புலவர் 'அரசு']

சேக்கிழார் அடிகள் திருவாய் மலர்ந்தருளிய பன்னிரண்டாந் திருமுறையாம் 'திருத்தொண்டர் புராண' த்தின் செழும்பிழிவாகிய செவ்விய எளிய தெளிந்த உரைநடை நூலாகும். தனியடியார்கள் அறுபத்துமூவர், தொகையடியார்கள் ஒன்பதின்மர் ஆகிய எழுபத்திருவர் திருவரலாறுகளும் இதன்கண் அடங்கியுள. ஆற்றொழுக்கமைந்த இனிய எளிய தமிழ்நடையில் அமைந்துள்ள இந்நூல் கற்பார்க்கு நல்விருந்தாகும். புராணத் திருப்பாட்டுகள் பலவும் இணைக்கப்பெற்றுள்ளன. அழகிய கலிக்காக் கட்டு.

R